UNIVERSAL
LIBRARY
OU_208236
UNIVERSAL
LIBRARY

சமணமுனிவர்கள் இயற்றிய

நாலடியார் மூலமும்

தெளிபொருள்விளக்க வுரையும்.

உரையாசிரியர்கள் :

வை. மு. சடகோபராமாநுஜாசாரியர் ஸ்வாமி

சே. கிருஷ்ணமாசாரியர் ஸ்வாமி

நான்காம் பதிப்பு

வை. மு. கோபாலக்ருஷ்ணமாசார்யரால்

சில திருத்தங்கள் செய்து

• சென்னை B. N. K. அச்சுக்கூடத்தும்

பதிப்பிக்கப்பட்டன.

1946

காபிரைட் ரிஜிஸ்டர்ட்.] [விலை ரூபா 2-8-0.

பிழைத்திருத்தம

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
சக	11	துறி	துற
எ எ	25	பாவவாகி	பாவமாகி
கசடி		13-ம் வரியை நீக்கிவிடவும்	
,,	16	யுடை	யுடை
,,	39	அறிவுடை	அறிவுடைய
கசசு	29	போற்து	போற்று
கசள	2	மருச	மரும்
,,	28	தொடங்ரு	தொடங்கி
கசஅ	28	ரெனங்	ரெனக்
கசசு	5	கெண்மை	கேண்ம்மை
,,	38	இருக்	இக்
கநம	2	இட	இடை
,,	15	ஆங்	ஆம்
கஙக	6	நெல்த்தால்	த்தால்நெல்
கஙஉ	2	கணைவனு	புடைய
,,	3	புடைய	கணைவனு

S. PARTHASARATHY IYANGAR)
Educational Publishers,
Q. H. No. Ms. 43—1000—9—46.)

ஸ்ரீ

விஷய சூசிகை

க. அறத்துப்பால்

க. துறவறவியல்

			பக்கம்
க.	செல்வநிலையாமை	....	கo
உ.	இளமைநிலையாமை	....	உக
ங.	யாக்கைநிலையாமை	....	உசு
ச.	அறன்வலியுறுத்தல்	....	ஙடு
ஞ.	தூய்தன்மை	....	சஉ
ரு.	துறவு	....	ஞo
எ.	சினமின்மை	....	ஞசு

உ. இல்லறவியல்

அ.	பொறையுடைமை	....	சுஅ
கூ.	பிறர்மனைநயவாமை	....	எஞ
கo.	ஈகை	....	அங
கக.	பழவினை	....	கூக
கஉ.	மெய்ம்மை	....	சூகூ
கங.	தீவினையச்சம்	....	கoஅ

உ. பொருட்பால்

க. அரசியல்

கச.	கல்வி	....	ககசு
கஞ.	குடிப்பிறப்பு	....	கஉச
கசு.	மேன்மக்கள்	....	கஙo
கள.	பெரியாரைப்பிழையாமை	....	கஙஅ
கஅ.	நல்லினஞ்சேர்தல்	....	கசஞ
ககூ.	பெருமை	....	கஞஉ
உo.	தாளாண்மை	....	கஞஅ

உ. நட்பியல்

உக.	சுற்றந்தழால்	....	ககசு
உஉ.	நட்பாராய்தல்	....	களஞ
உங	நட்பிற்பிழைபொறுத்தல்	....	கஅங
உச.	கூடாநட்பு	....	ககூக

ங. இன்பவியல்

உருி.	அறிவுடைமை	....	ககூள
உசூ.	அறிவின்மை	....	உ0ச
உள.	நன்றியில் செல்வம்	....	உகசூ

ச. துன்பவியல்

உஅ.	சயாமை	....	உஉரு
உகூ.	இன்மை	....	உஙச
ஙO.	மானம்	....	உசஉ
ஙக.	இரவச்சம்	....	உசகூ

ரு. பொதுவியல்

ஙஉ.	அவையறிதல்	....	உருிஅ

கூ. பகையியல்

ஙங.	புல்லறிவாண்மை	....	உசூள
ஙச.	பேதைமை	....	உளச
ஙரு.	கீழ்மை	....	உஅக
ஙசூ.	கயமை	....	உஅள

எ. பன்னெறியியல்

ஙள.	பன்னெறி	....	உகூரு

ங. காமத்துப்பால்

க. இன்பதுன்பவியல்

ஙஅ.	பொதுமகளிர்	....	ங 0ங

உ. இன்பவியல்

ஙகூ.	கற்புடைமகளிர்	....	ஙகக
ச0.	காமநுதலியல்	....	ஙகசூ

இவ்வாறு பாகுபாடுகொள்ளாமல் சிலர் இறுதியதிகாரத்தைமாத்திரம் காமத்துப்பாலாகக் கூறுவர். இறுதியதிகாரத்தில்மாத்திரம் அகப்பொருட்களவித்துறைகள் பயில்வதும், அதற்கு முன்னுள்ள இரண்டு அதிகாரங்களில் அவை முழுவதிலும் பயிலாமையும் அவர்கட்கு ஆதாரம்; திருக்குறளில் கற்புடைமகளிரென்று பொருள்படும் வாழ்க்கைத்துணைநலமென்னும் அதிகாரம் அறத்துப்பாலிலும், பொதுமகளிரென்று பொருள்படும் வரைவின்மகளிரென்னும் அதிகாரம் பொருட்பாலிலும் சேர்க்கப்பட்டுள்ளன.

பொருட்பாலில் வரும் இன்பவியல் என்பதற்கும், காமத்துப்பாலில் வரும் இன்பவியல் என்பதற்கும் வேறுபாடு மாணாக்கர் அறியத்தக்கது. பொருட்பாலில் வருவதை 'தலையின்பவியல்' என்றும், காமத்துப்பாலில் வருவதை 'கடையின்பவியல்' என்றும் வழங்குவர்.

அதிகார அடைவு.*

" அறவிய லிருவகைத் தாமவை தம்முள்
துறவே ழில்லற மிருமூன் றென்ப ;
பொருளியல் வகையேழ் புலப்படக் கிளப்பின்
அரசிய லேழதிகார மாகும்
நட்பியல் நான்கதிகார மின்ப
மூன்றே துன்பவிய லதிகார
நான்கே யொன்றே பொதுவியல் பகையியல்
கூறதிகார நான்கே பன்னெறி
கூறதிகார மொன்றெனக் கிளப்பர் ;
கடையின்ப வகைதான் கருதி னிருவகை
யின்பதுன்ப வதிகார மொன்றே யேனை
யின்ப வதிகார மிரண்டே ".

"செல்வநிலையாமை இளமைநிலையாமை யாக்கைநிலையாமை என்னும் அதிகாரவடைவுக்கு மூலவு உளதாம்; அஃது யாதெனின்,—முன்பு யாக்கை நிலையாமையை உணர்த்தி அதன் பின்பு இளமைநிலையாமையை உணர்த்திப் பின்பு அந்த இளமைப்பருவத்திலே முயன்று உண்டான செல்வத்தின் நிலையாமையை உணர்த்தவேண்டாவோ? என்னின்,—யாக்கைக்குப் புருஷாயுசு நூறுவயதென்றும், இளமைப்பருவம் முப்பத்திரண்டு வயதென்றும் ஒரு நியம முண்டு; இந்தச்செல்வம் இத்தனைநாள் நிற்குமென்று ஒருறுதியில்லாமையால் இப்படி ஒருறுதியில்லாத செல்வம் வந்து எய்தியபொழுதே மறுமைக்கு உறுதியான அறங்களைச்செய்ய வேண்டுமென்றற்கு முன்பு செல்வநிலையாமையை வைத்து, அதன்பின்பு அப்படி நிலையாத செல்வத்தை அனுபவித்தற்கு இளமைப்பருவத்தை நிலையாகக்கருதியிராமல் முப்பத்திரண்டுவயதுக்குள்ளே துறந்து தவஞ் செய்யவேண்டுமென்றற்கு இளமைநிலையாமையினை அதிகாரவடைவு செய்து, பின்பு யாக்கைக்குக் கற்பித்த வயது நூறென்று கொண்டு அதனை நிலையென்று கருதாமல் அறத்தினை நாடோறும் வழுவாமற் செய்யவேண்டுமென்றற்குப் பின்பு யாக்கைநிலையாமையைச் சொன்னு ரென்பதாம்.

" ஆதலால், அறத்துப்பாலில் நிலையாமையின் விரைவுகூறற்பொருட்டு மூன்றுறச் செல்வநிலையாமையினை வைத்து, அதற்குப்பின்பு இளமை நிலையாமையினைவைத்து, அதற்குப்பின்பு யாக்கைநிலையாமையினை வைத்து, அதன்பின்பு இந்தப் பெறுதற்கரிய யாக்கையினைப் பெற்ற பொழுதே அறஞ்செய்தற் பொருட்டாக அறன்வலியுறுத்தலை வைத்து,

---

* இது, பழைய ஏட்டுப்பிரதியிற் கண்டபடியே அச்சிடப்படுகின்றது.

அதன்பின்பாக அறத்தினை மறந்து விஷயங்களிலே மயங்காமல் அந்த விஷயங்களின் தூய்மையில்லாமையை அறிவித்தற்பொருட்டுத் தூய்தன்மையினை வைத்து, அதன்பின்பாக அப்படித் தூய்தன்மையில் நின்று மயங்காமல் மறுமைக்கு உறுதியாக மனைவாழ்க்கையினைத்துறந்து தவஞ் செய்தற்பொருட்டாகத் துறவென்னும் அதிகாரத்தை வைத்து, அதன் பின்பு அந்தத் துறவுக்கு மறுதலையாகிய சினம் ஏழாமல் உயிர்களின்மீது அன்புவைத்தற்பொருட்டாகச் சினமின்மையை வைத்து, அதன்பின்பாக இப்படிஒத்த தவத்துக்கு மறுதலையாகிய பழியைப் பொறுத்தலும் அறியாமையால் ஒருவர் தமக்கு ஒரு தீங்கு செய்தால்அதனைப் பொறுத்தலும் வேண்டுமென்பதுகொண்டு பொறையுடைமையை வைத்து, அதன்பின்பாக இல்லறத்தை நடத்துவதற்குப் பிறர்மனைநயவாமை பெரும்பான்மையாதலினாலும் இந்திரியங்கள்செய்யும் மிகைகளை மீட்டுத் தம்வசத்திலே ஒருப்படுத்திக்கொள்ளுதல் முன்சொன்ன பொறையுடைமையினும் அரிதாதலினாலும் அதன்பின் இந்தப் பிறர்மனைநயவாமையை வைத்து, இந்தத் தீயகுணமில்லாதவனுக்கல்லது கொடுத்தல் கூடாதாதலின் பிறர் மனைநயவாமையின் பின் ஈகை யென்னும் அதிகாரத்தைச் சேர்த்து, முற் பிறப்பில் ஒருவர்க்கு ஒன்றைக் கொடாதவன் துன்பமுற்றுப்பசிப்பிணி நலிய இரந்துதிரிவனென்னும் இதனை அறிவித்தற்கு ஈகைக்குப்பின் பாகப் பழவினையை வைத்து, இந்தப் பழவினையைத் தீர உணரும் இவன் உலகத்தில் நடந்தபோதும் ஒழுக்கத்தினைத் தப்பானென்பதுகொண்டு அவ்வொழுக்கத்தின் உண்மையை மெய்ம்மையென்று பழவினையின் பின்பே வைத்து, உலகத்தில் நடந்தபோதும் தானதருமங்களைச் செய்யாமல் தீமையிலேபுரிந்தொழுகுமவர்க்கு அறிவித்தற்பொருட்டாக இப்பிறப் பில் மிகவுந் துன்புறுவர் முற்பிறப்பில் தீங்குசெய்தவ ரென்னுமது தோன்ற அதன்பின்பு தீவினையச்சத்தினைவைத்து, இப்படி அறத்துப் பால் பதின்மூன்று அதிகாரமாகச் சேர்த்து,

"இனிப் பொருட்பால்அதிகாரவடைவு செய்தற்குக் கல்வியை முதலாக எடுத்துக்கொண்டார். அரசர்க்கும் மற்றும் ஒழிந்தோர்க்கும் கல்வியுண்டாஞல் அவர்களால் உலகத்திற் பிராணிகள் பேஷமப்படுமாதலானும் தருமம் பரிபாலிக்கப்பட்டுவரு மாதலானும் பொருட்பகுதிக்குக் கல்வி இன்றியமையாததாதலின் கல்வியை முதலில் வைத்து, அந்தக் கல்விக்குப் பின்பு அந்தக் கல்விக்குத்தக ஒழுகுதல் குடிப்பிறந்தார்க்கு மிகவும் வேண்டுமாதலின் குடிப்பிறப்பைச் சேர்த்து, அதன்பின்பு எல்லாக்குணங் களிலும் வைத்து மேம்பாட்டுத்தன்மை குடிப்பிறந்தார்க்குப் பெரும் பான்மையாதலின் அந்தக் குடிப்பிறப்புக்குப்பின்பு மேன்மக்களை வைத்து, இப்படிக்கொத்த மேன்மக்களைப் பிழைத்தவர்களுக்கு மறுமைக்கு உறுதியுமில்லை, இப்பிறப்பிலும் யாவராலும் இகழப்பட்டு அந்தப் பிராணவபிமானமென்கிறதும் இல்லையாய்விடுமாதலின் மேன் மக்களைப் பிழைக்கலாகாதென்பது கொண்டு அதன்பின்பு பெரியாரைப் பிழையாமையை வைத்து, இப்படிக்கொத்த மூறைமையினை யுடையாரைச் சேர்ந்து மதிப்புண்டாகவேண்டுமென்பது தோன்ற அதன்பின்பு நல்லினஞ்சேர்தலை வைத்து, ஒருவர் தீயராகிலும் நல் லினஞ் சேரவே அவர் பெருமையடைவ ரென்பது தோன்ற அதன்

பின்பு பெருமையென்னும் அதிகாரத்தை வைத்து, அந்தப் பெருமையும் முயற்சியுடையார்க்கல்லதில்லை யென்பது தோன்றப் பெருமைக்குப் பின்பு தாளாண்மையை வைத்து, 'இப்படிமுயன்று செல்வத்தினையுண்டாக்கினார்க்கல்லது சுற்றமுண்டாகாதென்பது தோன்றத் தாளாண்மைக்குப் பின்பு சுற்றத்தழாலை வைத்து, சுற்றத்தழுவியிருப்பாரொருவர் தமக்குச் சுற்றமாகத் தக்காரை ஆராய்ந்துகொள்ளவேண்டுமென்பது கொண்டு அதன் பின்பு நட்பாராய்தலை வைத்து, அப்படி ஆராய்ந்து உறவு கொண்டபின்பு அவர் செய்த பிழைகளைப் பொறுக்கவேண்டுமாதலின் அதன்பின்பு நட்பிற்பிழைபொறுத்தலை வைத்து, அதன்பின்பு கூடாநட்பாகிய முறைகேடுடையவர் தமது காரியங்களைக் குறைவறப் பலிப்பித்துக்கொள்ளுமளவும் வேற்றுமை சிறிதும் புலப்படாமல் கலப்புண்டாக அவர் மனங்கொளக் கலந்து ஒழுகிப் பின்பு கால் தாழ்த்துவிடுவராதலின் அவர் குணத்தினைப் பின்பு தாம் கண்டு அவருடனே கரிசங்கொள்ளாமல் இது சிலர்க்கு இயல்பென்றிருத்தல் நட்பிற் பிழைபொறுக்கும் பெரியோர்க்கே உளதாகுமென்பது கொண்டு அதன் பின்பே கூடாநட்பை வைத்து, இப்படி ஒத்தாரையும் நல்லவராக்கித் தமது சுபாவமுங் குன்றுமலிருத்தல் அறிவுடையோர்க்கல்லது கூடாதென்பது கொண்டு அறிவுடைமையினை அதன்பின்பு வைத்து அறியாமையால் வருங் குற்றம் விரித்துரைத்தாலல்லது முன்சொன்ன அறிவுடைமை சாயாமல் நில்லாதென்பது கொண்டு அவ்வறிவுடைமையைப் பேணவேண்டி அதன் பின்பு அறிவின்மையை வைத்து இந்த அறிவுடைமையில்லாதார்க்கு உளதாகிய செல்வம் பிறர்க்குப் பயன்படாதென்பது தோன்ற அதன்பின்பே நன்றியில் செல்வத்தை வைத்து, இந்தச் செல்வம் பிறர்க்குப் பயன்படாமையால் அதனுல்வருங் குற்றம் தோன்ற அதன்பின்பு ஈயாமையை வைத்து, ஒருவர்க்கு ஒன்றைக் கொடாமல் மறுமைக்கு உறுதியான அறங்களையும் செய்யாமல் தன் உடம்பினைச் செறித்திருக்குமவனே மிடியனென்று காட்டுதற்கு ஈயாமையின் பின்பே இன்மையை வைத்து, வறுமையுற்றவனுக்கே மானிக்கத்தக்க செய்கை உண்டாகுமாதலால், அப்படி வறுமையிலே துன்பமுறுபவன் மானபங்கம் வந்தகாலத்து வறுமையாலும் கிடந்து நலங்காமல் தன் பிராணனைவிட்டாவது மானத்தினைப் பரிகரித்தல் பெரும்பான்மையாதலால் அதன் பின்பே மானமென்னும் அதிகாரத்தை வைத்து, அப்படி மானத்தினைப் பரிகரியாமல் வறுமையினுல் பிறர்பக்கல் சென்று இரந்து உயிர்வாழ்வமென்று துணிவராயின் இவ்வுலகத்தில் இடுபவரும் இல்லையாய்க் கண்ணோட்டமின்றி இகழ்பவரே பெருகுவராதலின் இரப்பினை அஞ்சவேண்டும் மானமுடையாரொருவராதலால் இரவச்சத்தை அதன்பின்பே வைத்து, எல்லாக் கல்வியையுமுடைய பல சபையிலும் இருந்து உலகத்திலுள்ளாருடைய இயல்புகளையும் அறியுமவர் இரப்புக்குத் துணிந்து செல்லாரென்பது தோன்ற அதன்பின்பு அவையறிதலை வைத்து, சபையிலுள்ளாரியல்புகளை அறியாமல் அவைக்குள்ளே ஒன்றனைச் சொல்லி இகழப்படுமவர் புல்லறிவாளராதலால் அவையறிவார்க்கு இவை குற்றமாதலின் அவையறியுமவர் இந்தக் குற்றந் தவிரவேண்டுமென்றற்கு அவையறிதலின்பின்பு புல்லறிவாண்மையை வைத்து, இந்தப் புல்லறிவு சில அறிந்தும் அறியாமலு

முள்ள தன்மையாகுமாதலாலும் பேதைமை நேராக அறியாமலே யிருக்கு மாதலாலும் புல்லறிவாண்மைக்குப் பின்பு பேதைமையை வைத்து, அறி விலனென்னுமாத்திரமல்லது பிறர் செல்வங்கண்டு பொறுமையும் அவ ரைப் புறங்கூறுதலும் அவர் மனங்கொள்ளும்படி அவருடனே கூடி உறவுபோலத் திரிந்து அவர்க்குத் தாழ்வுசெய்தலுமாகிய கீழ்மைக்குணம் பேதைமையினும் மிகவும் நிந்திக்கப்படுமாதலின் அதன்பின்பு கீழ்மை யென்னும் அதிகாரத்தை வைத்து, இந்தக்கீழ்மைபோலன்றியே தனக்கு ஒருவர் பல நன்றிகளையுஞ் செய்து தானும் அவராலே பரிகாரப்பட்டிருந் தாலும் அவர் நெஞ்சறியாமல் தனக்குச் சிறிது குறையுண்டாகில் அவ் வளவுமாத்திரத்தைக்கொண்டு அவர்களுக்குக் கொலையினைச் செய்தும் தன்னை நெருங்கிவந்தார் சிலர்க்குப் பயன்பட்டும் ஆசாரஞ்செய்து சிறிது பொருள்பெறின் தன்னைப் பெரியாளொருவனாக மதித்தும் யாவர் சிலரை யும் கண்ணோட்டமற அவரெதிர் நின்று குடிப்பழுதான வசனங்களைச் சொல்லியும் இத்தகைய குணங்களை யுடையனாதல் காரணமாக முன் சொன்ன கீழ்மையினும் மிகவுந் தூஷிக்கப்படுமாதலின் அதன்பின்பு கயமையினை வைத்து, பின்பு அதிகாரத்தில் ஏறின பாட்டுக்களை யெடுத் துப் பன்னெறியென்று ஓர் அதிகாரத்தை வைத்து, இப்படிபொருட்பால் இருபத்து நான்கு அதிகாரங்களையும் அடைவுசெய்து,

காமத்துப்பால்லில் முதற்கண்ணே இழிவான குணங்களையுடைய பொதுமகளிரை வைத்து, இந்தப் பொதுமகளிர் குணங்களொன்றுமிலரா கவே நல்ல குணமுடையார் எல்லாராலும் மதிக்கப்படுவராதலால் அதன் பின்பு கற்புடை மகளிரை வைத்து, அதன்பின்பு காமநுதலியலை வைத்து காமத்துப்பால் மூன்று அதிகாரங்களையும் அடைவுசெய்து,

"இப்படி நாற்பது அதிகாரங்களும் அடைவுசெய்யப்பட்டன.

"இந்த அறம் பொருள் இன்பம் என்னும் மூன்றையும் இந்நூலிற் கூறியபடி.....கற்று ஆய்ந்து ஒழுகினவர்க்கு வீடுபேறும் சித்திக்கு மென அறிக." *

---

* "அறம் பொரு ளின்பம் வீடடைதல் நூற்பயனே" என்பது **நன்னூல்**.

ஸ்ரீ

நாலடியார்

வரலாறு

முன்னொருகாலத்திற் சமணமுனிவர் எண்ணாயிரவர் கொடிய பஞ்சத்தால் தத்தம் நாடு விட்டுப் பாண்டிநாடடைந்து அவ்வரசனால் ஆதரிக்கப்பெற்று அவனதவையில் அமர்ந்திருந்தனர். பன்னாள் கழித்துப் பஞ்சம்நீங்கித் தங்நாடு செழிந்த தறிந்து அவர்கள் தத்தம்பிறப்பிடஞ்செல்ல விருப்பமுற்றாராய்ப் பாண்டியனை விடைவேண்ட, அவனும் பன்னூற்பயிற்சியுள்ள அந்நல்லிசைப்புலவர் இருப்பது தன் அவைக்கு ஓர் அலங்காரமாமெனக் கருதி அவரைப் பிரிந்திருக்க மனமில்லாதனகினும்விடையளியாது தாமதித்துவந்தனன். இங்ஙனமிருக்க, அம்முனிவரனைவரும், சங்கேதமாய், அறம்முதற் பொருள் நான்கும் நன்கு புலப்படுமாறு தனித்தனி ஒவ்வொரு வெண்பாவைப் பாடிச் சிற்றேட்டிலெழுதித் தத்தமது பீடத்தின் கீழ் வைத்து, ஓரிரவில் யாரும் அறியாவண்ணம் அந்நாட்டைவிட்டு அகன்றனர். பொழுதுபுலர்ந்ததும் அம்மன்னன் அப்புலவரைக் காணுமலும் சென்றவிடந் தெரியாமலும் வருந்தி, ஏவலாளரைக் கூவி, அவர்களிருந்த ஆசனங்களை அப்புறப்படுத்துகையில், ஒவ்வொருபீடத்தின்கீழும் ஒவ்வொருவெண்பாப் பாட்டுச் சீட்டிலெழுதிவைக்கப்பட்டிருந்தது. அவற்றை எடுத்துப்பார்த்து அப்புலவரைப்பிரிந்த ஆற்றுமையால், அரசன், அவற்றை வையைப் பேராற்றில் வாரியெறிய ஏவினன். அவ்வாறு எடுத்தெறியப்பட்ட அவற்றுள் நானூறு பாடல், நீர்வழிச்சென்று நெடுங்கடல் சேராது எதிரேறிச் சென்றன. இம்மகிமை கண்டு, அரசன், மிகவும் ஆச்சரியமுற்று அவற்றை யெடுத்து ஒரு நூலாக்கி, நாலடியார் என ஓர் நற்பெயரிட்டு வழங்கினன். இதனை,

> "மன்னன் வழுதியர்கோன் வையைப் பேராற்றின்
> எண்ணி யிருநான்கோ டாயிரவர்—உன்னி
> எழுதியிடு மேட்டி லெதிரே நடந்த
> பழுதிலா நாலடியைப் பார்"

என்னும் வெண்பாவினால் அறியலாம்.

பிற்காலத்திற் பதுமனார் என்னும் புலவரொருவர், இந்நூலுக்குப் பால் இயல் அதிகாரம் என்னும் பாகுபாடுசெய்தனரென்பர். இதனை,

"வளங்கெழு திருவொடு வையக முழுது
முளங்குளி ரின்பத் தின்ப முவப்ப
வண்பெருஞ் சிறப்பின் மாதவம் புரிந்தா அங்
கெண்பெரும் குன்றத் திருந்தவ முனிவ
ரறம்பொரு ளின்பம் வீடெனு மிவற்றின்
திறப்பிற பறிபுந் திறந்தரு நாடிப்
பண்புற வெடுத்துப் பாங்குறப் பகர்ந்த
வெண்பா வியலெண் ணூறிய மலர்ப்புட்
பாதெதிர் கொண்டு பணி போற்ற
வீதெதிர் வந்து விரையணி பெற்ற
மேனூற் றலைகளின் விரிமுறை நிலையிய அ
நானூ றவற்றி னாயந்தெரிந் தேந்திய
மதுமலர்த் தண்டார்ப் பதுமன் றெரிந்த
வையையில் பொருண்மை யாதிக ரத்தா
லெய்ய நல்ந்த வெண்ணெய்க் கவற்று
ளரனியல் பதிஞ்மூன் றராசக் குரிய
பொருளிய லிருபத் தெருநூ றென்ப
படன்ற வலகையா லூன்றின மெழுந்தனன்
சான்றோ ரேந்தும் நருமத் தலைவனே"

எனப் பழைய ஏட்டுப்பிரதி யொன்றிற் கிடைத்த ஆசிரியப் பாவால் அறியலாம்.

இப்படிமனர் இந்நூலுக்கு, (திருக்குறளுக்குப் பரிமேலழகர் உரை போல) மிகச் சிறந்ததோருரையும் இயற்றினரென்பர். இந்நூலில் ஆங்காங்குச் சிலபாடல்கள் அவ்வவ் வதிகாரத்தோடு நன்கு பொருந்தாமல் வருந்திப் பொருத்தத் தக்கனையாயிருத்தற்குக் காரணம், இயற்றும்பொழுதே உரிகாரப்படுப்பட னியற்றப்பட்ட தொரு தலைவரையுமே, பின்பு அவ்வரையறை செய்யப்படுந்தவர் ஒவ்வோ ரதிகாரத்திற்குப் பொருத்தும் பாடலென்னும் நியமங்கொண்டமைபு மென்க.

"வெள்ளாண் மரபுக்கு வேதமெனச் சான்றோ
ரெல்லாரும் கூடி யெடுத்துரைத்த—சொல்லாய்ந்த
நாலடி நானூறு நன்கினிதா வெண்மனத்தே
சிலமூட னீங்க தெளிந்து"

எனப் பின்னோர் இந்நூலின் பெருமையை இனிது எடுத்து ஓதியிருத்தலும் காண்க.

நாலடியார்

குறள்வெண்பாக்களினாலாகிய நூலுக்கு 'குறள்' எனப் பெயராஅற் போல, நாலடிவெண்பாக்களினாலாகிய இந்நூலுக்கு 'நாலடி' எனப் பெயராயிற்று. 'திருக்கோவையார்,' 'திருவுந்தியார்,' 'திருக்களிற்றுப்படியார்,' 'சிவஞானசித்தியார்' என்ற நூற்பெயர்களிற்போல, சிறப்புப்பற்றிய 'ஆர்' விகுதி கூட்டப்பட்டு, நாலடியார் என்று வழங்கலாயிற்று. நாலடி என்ப தற்கு - நான்காகிய அடிகளை யுடையதென்று பொருள்; பண்புத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகைக் காரணப்பெயர். நீதிநூல்களுள் இந்நூல் திருக்குறளோடொப்ப மதிக்கப்பட்டு, "ஆலும் வேலும் பல்லுக்கு உறுதி, நாலு மிரண்டும் சொல்லுக்கு உறுதி" [ஆல் - ஆலம்விழுது. வேல் - கருவேலங்கொம்பு. நால் - நாலடியார். இரண்டு - குறள்.] "பழுதகழிப், சொல்லருமை நாலிரண்டில்" என்றபடி 'திருக்குறள்' 'நாலடியார்' என்று கூட்டி வழங்கப்படுதலால், நாலடி எனப்படுவது-நான்கு அடிகளையுடைய விருத்தம் முதலிய வேறுபாடல்களின்மேற்சென்றதன்றி, நாலுவகைப்பாக்களுள் நேரும் முதன்மையையும் அந்நான்சாதியாதலுற் சிறப்பையு முடைமைபற்றி 'முதற்பா' எனப்படுவதான வெண்பாவின் மேலேயே நின்று, அவ்வெண் பாவினுள் நான்கு அடிகளையுடையனவாய் நூல்களுட் பயின்றுவருகிற சோடசவிருத்தவெண்பாக்களையே உணர்த்தி, அவற்றாலாகிய நூலுக் குக் காரணப்பெயராயிற்று. இந்நூற்பெயர், நாலடிநான்மறை என்றும் சிலபிரதிகளிற் காணப்படுகின்றது.

'நாலடியார்' என்றும், 'நாலடிநான்மறை' என்றுஞ் சொல்லப்பட்டுச் சிறப்புப்பொருந்தி வழங்குகின்ற இந்நீதிநூல், "நாலடி நான்மணி நானூற்ப வைந்திணைமுப், பால் கடுகங் கோவை பழமொழி மாமூலம், இன்னிலைய காஞ்சியோடி ஏலாதி யென்பவே, கைந்நிலையொ டாங் கீழ்க் கணக்கு" எனக் கூறப்பட்டுள்ள சங்கமருவிய **பதினெண்கீழ்க் கணக்கு**க்களுள் முதலாவது. இற்றைக் கூறிய **பதினெண்கீழ்க்கணக் கு** வன :— க. நாலடியார், உ. நான்மணிக்கடிகை, [நால் நூற்பது =] ங. இனியவைநாற்பது, ச. இன்னாநாற்பது, ஞ. கார்நாற்பது, ட. களவழி நாற்பது, [ஐந்திணை =] எ. ஐந்திணை யைம்பது, அ. ஐந்திணை யெழுபது, கூ. திணைமொழி யைம்பது, கஅ. திணைமாலை நூற்றைம்பது, கக. முப் பால் [= திருக்குறள்], கஉ. திரிகடுகம், கங. கோவை [ஆசாரக்கோவை], கச. பழமொழி, கஜ. மாமூலம் [= சிறுபஞ்சமூலம்], கஞ. காஞ்சி [= முது மொழிக்காஞ்சி], கட. ஏலாதி, கஎ. கைந்நிலை என்பன. 'நாறுற்பது' என்பதிலுள்ள 'நால்' என்பதை 'ஐந்திணை' என்பதனோடுங் கூட்டுக; கூட்டவே, 'நால்ஐந்திணை' என்பது - ஐந்திணைப்பொருளுணர்த்தும் 'ஐந்திணையைம்பது' முதலிய நான்கு நூல்களின்மேல் நிற்கும். 'கைந்நிலை'-நூசிரியர்களினியர் உரையில் மேற்கோள்காட்டிய நூல்களுள் ஒன்று.

பதினெண்கீழ்க்கணக்குள் ஒன்றெனவே, இந்நூலை **முடசிங்கந்தார்** காலத்துக்கு பிருக்கலாமென்கின்றனர், ஒருசாரார்; ஒன்பதாம் நூற் றாண்டிலிருந்த பெருமுத்தரையரைப்பற்றி இந்நூல் கூறுவதால், பெரு முத்தரையர் காலத்திற்குப் பிந்தியதாமென்பர், மற்றொருசாரார். இந்

நூலுக்குப் பால் இயல் முதலியனவகுத்த பதுமனார் சங்கக்காலத்தவரான புலவர்பலருடைய செய்யுட்களோடு பிற்காலத்துக்கவிஞரின் செய்யுட் சில வற்றையும் தொகுத்தன ரென்பர், மற்றொருசாரார். இனி, 'பெருமுத்தரையர்' என்ற தொடர், பாண்டியனையோகுறிக்கு மென்பாரும், "நாலடிநான் மணி" என்ற செய்யுளிற்கூறிய மற்றைநூல்களெல்லாம் ஒவ்வோராசிரியர்செய்த நூலேயே குறிக்கலால், பலபுலவர்செய்து பின்னர்த்தொகுத்த நூலாகிய **இந்நூல் 'நாலடி' எனபது, குறிப்பதன்று** என்பாருமுளர். உண்மை எவ்வாறிருப்பினும், பழைய உரையாசிரியர்களால், இந்நூல் சங்கநூல்போலவே மேற்கோளாகக் காட்டப்படுகின்றதென்பது யாவரு மறிந்த விஷயம்.

இந்நூல், ஒருவரால் பாடப்பட்ட தன்று; பலபுலவர்களாற் செய்யப் பட்ட செய்யுள்களால் அமைந்ததாம். ஆகலால், இந்நூலிலுள்ள 'கூறியதுகூறல்'லும் 'மாறுகொளக்கூறல்'லும் குற்றமாகா.

இனி, சங்கத்தார் காலத்து நூல்கள், கீழ்க்கணக்கு மேற்கணக்கு என இருவகையாக வழங்கப்பட்டன. அவற்றில், **மேற்கணக்காவது**- வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா, மருட்பா என்னும் ஐந்து வகைப்பாக்களாலும் ஐம்பதுமுதல் ஐந்நூறு இறுதியாக வருவது : **கீழ்க் கணக்காவது**-அறம், பொருள் இன்பங்களைப்பற்றிய வெண்பாக்களிலுல் அந்தொகைபடவருவது: (இறையனா, "மேல் கீழ்க் கணக்கென இருவகைக் கணக்கே," "மேற்கணக்கெனவும் கீழ்க் கணக்கெனவும், பாற்படு வகை யாற் பகுத்தனர் கொளலே," "அகவலும் கலிப்பாவும் பரிபாடலும், பதிற் றைந்தாதி பதிற்றைப்பா நீறு, பிறுத்துடன் தொகுப்பது மேற்கணக் கெனவர், வெள்ளைத் தொகையு மவ்வகைவேண்டின், எள்ளரு கீழ்க்கணக் கெனவும் கொளலே," "ஐப்பது முதலா ஐந்நூ றீறு, ஐவகைப் பாவும் பொருள்நெரி மரபின், தொகுக்கப்படுவது மேற்கணக்காகும்," "அடி நிமிர்வில்லாச் செய்யுட்டொகுதி, அறம் பொருளின்ப மதிகியவ்வகைத், திறம்பட வருவது கீழ்க்கணக்காகும்" என்ற **பன்னிருபாட்டியற்** சூத்திரங்களால் அறிக.) கீழ்க்கணக்கு வெண்பாவினாலும் விரிவருகலியும் ஐம்பதினுங் குறைந்து நாற்பதாகவும் ஐந்நூற்றினும் மிக்கு ஆயிரத்து முந் நூற்று முப்பதாகவும் வருதலியும் '**உரையிற்கோடல்**' என்னும் உத்தி யாலும் பிறவாற்றாலும் அமைத்துக் கொள்க. மிக்க அடிகளையுடைய பல வகைப்பாக்களால் வருவதுபற்றி மேற்கணக்கென்றும், குறைந்த அடி களையுடைய ஒருவகைப்பாவால் வருவதுபற்றிக் கீழ்க்கணக்கென்றும் காரணக்குறி யமைந்தன வென உணர்க. இங்ஙன்கொள்ளுதற்கு, "அடி நிமிர்வில்லாச் செய்யுட்டொகுதி" என்றதும் ஆதாரம்.

இனி, இந்நூல் வேறொருநூலின்வழியே தோன்றியதென்றுகொள்ள இடமில்லாமையாலும், சமணசமயத்து விழுமியினிங்கி விளங்கிய அறிவை யுடைய முனிவராற் செய்யப்பட்ட தாதலாலும், முதனூல் வழிநூல் சார்பு நூல் என்ற நூல்வகை மூன்றில் இது **முதனூலின்பாற் படு** மென்க.

சமணசமயத்துப் பெருங்காப்பியமான சீவகசிந்தாமணியின் உரை யில் ஆசிரியர் நச்சினார்க்கினியர் 'பிறரும் இச்சமயத்தார் "சிறுகா பெருகா

முறை பிறழ்ந்து வரல்" (நாலடியார், பழமொழி, கo) என்றதனையும் உணர்க' என உரைத்ததால், இந்நூல் சமணசமயத்தார்செய்ததென நன்குபுலனாகின்றது. இக்கொள்கைக்கு மற்றும் பல ஆதாரங்களும் உண்டு.

இந்நூல், நச்சினார்க்கினியர் பரிமேலழகர் அடியார்க்குநல்லார் முதலிய பிறருக்கு உரையாசிரியர்களால் எடுத்து ஆளப்படும் பிரமாண நூல் களுள் ஒன்று.

இனி, "இந்நூல் செய்யுள் காலத்திற்கு இலக்கண நூல்கள் அகத்தியமும் தொல்காப்பியமும் மாத்திரமும், தொல்காப்பியச் சிறப்புப்பாயிரத்தில் "முந்துநூல் கண்டு முறைப்பட வெண்ணி" என்றபடி தொல்காப்பியம் அகத்தியத்தின் வழிநூலாதலாலும், பிறர்கூறிய நூல்கள் நிரம்பிய இலக்கணத்தை அன்மையானும், தொகுத்துச் செய்யப்பட்டு வழுக்கு நூலாகிய தொல்காப்பியம் இடைச்சங்கம் முதலாக இன்றளவும் உளதாதலானும், தொல்காப்பியத்திற் கூறிய இலக்கணமே இருந்து இலக்கண மென்று உணர்க; அந்நூலிற் செய்யுளியலில் ஆசிரியம், பா தானென்று அவற்றை அறுவகைப்படுத்தும் கூறுக வென்றும் கூறி, பின்பு, அம்மை முதலிய எட்டும் [அம்மை, அழகு, தொன்மை, தோல், விருத்தி, இயைபு, புலன், இழைபு என்பன] தொடர்நிலைச்செய்யுட்கு இலக்கண மென்று கூறியிருத்தல் இடர்ப்படும், "வஞ்சியியல் தானே வருக்கமும் கலியும், சின்மென்பொழியிசை தூங்கிய பதுமமோடு, அம்மைதானே அடிநிமிர்வின்றே' என்ற சூத்திரத்தால் 'பிறவாய மெல்லியவாய சொல்லோடும் இடைவிட்டிவற்ற பாவுவமவிகற்பத்தோடும், அடிநிமிர்வில்லது அம்மை யார்' என்று கூறினமையானும், இந்நூல் ஆசிரியமாகிய அம்மையா மென்று உணர்க. இன்னும், அச்சூத்திர வுரையில், "அடிநிமிர்வது' என்றது, இந்நூலடியின் வருது என்றவாறு. 'நவிய பாவுவமோடு' என்றது, ஆசிரியப்பொருளின்ப மென்னும் சூத்திரத்தால் இலக்கணஞ் சொல்லுப: வேறு இடைநிலை அவையன்றியும் நவிய செல்வது என்றவாறு. அஃதாவது-பதினெண்கீழ்க்கணக்கு எனவுணர்க. அதனுள் இன்னடி யாதலும் ஓசைவெளிப்பட வந்தவாறும், அவை இலவாய மெல்லிய சொற்க ளான் வந்தவாறும், அதனிற் பொருளின்பமென அவற்றிற்கு இலக்கணங் கூறிய பாட்டிற் பயின்றவருமாறும், காண்தற்பாது கவிழ்தற்பாது முதலாயின வந்தவாறும் கண்டுகொள்க' என்றதனால் அறிந்துகொள்க.

---

* தலைச்சங்கத்தார்க்கு அகத்தியம் மாத்திரமும், இடைச்சங்கத்தார்க்கு அகத்தியம் தொல்காப்பியம் மாபுராணம் பூதபுராணம் இசைநுணுக்கம் முதலியனவும், கடைச்சங்கத்தார்க்கு அகத்தியம் தொல்காப்பியம் என்னும் இவை மூன்றிலும் இலக்கணமென்பதை, இறையனாரகப்பொரு ளின் நக்கீரருரையாலும், தொல்காப்பிய நச்சினார்க்கினியத்தாலும், பிற வாற்றாலும் அறிக. தொல்காப்பியப் பொருளதிகாரவுரையில் 'அகத்திய முந் தொல்காப்பியமுமே தொகைகளுக்கு நூலாதலின்' என்றது, எட்டுத் தொகைகளோடு சமகாலத்தனவாகிய பதினெண்கீழ்க் கணக்குக்களுக்கும் ஒக்கும்.

நாலடியார்

கடவுள் வாழ்த்து

வானிடு வில்லின் வரவறியா வாய்மையாற்
கானிலங் தோயாக் கடவுளை—யாங்கஞ்
சென்னி யுறவணங்கிச் சேர்துமெம் மூள்ளத்து
முன்னி யவைமுடிக வென்று.

இஃது - **கடவுள்வாழ்த்து**; அஃதாவது - எடுத்துக்கொண்ட காரியம் இடையூறின்றி இனிது முடிதற்பொருட்டுக் கலி தான் வழிபடுகடவுளையாவது எடுத்துக்கொண்ட பெருட்கு ஏற்புடைய கடவுளையாவது வாழ்த்துதல். அவற்றுள், இவ்வாழ்த்து-தமக்கு வழிபடுகடவுளாகிய அருகதேவனைப்பற்றிய தென அறிக.

(இதன்பொருள்.) வான்-மேகத்தில், இடு-உண்டாகின்ற, வில்லின்-(இந்திர) தனுசைப் போன்ற, வரவு-(உடம்பின்) வருகையை, வாய்மையால்-தத்துவஞானத்தினால், அறியா-அறிந்து,—'எம் உள்ளத்து—எமது மனத்தில், முன்னியவை-செய்ய நினைத்தவை, முடிக-(இடையூறில்லாமல் இனிமையாய்) நிறைவேறுக,' என்று-என்று எண்ணி,—கால் நிலம் தோயா கடவுளை-(தனது) பாதங்கள் பூமியிற் படியப்பெறுத (அருக) தேவனை,—யாம்-நாம்,—நிலம் சென்னி உற-தரையிலே தலைபொருந்தும்படி, வணங்கி—நமஸ்கரித்து, சேர்தும்-சரணமடைவோம், (என்றவாறு.)

'உள்ளத்தில் நினைத்தவை' என்பதில், பிறப்பறுத்தலும் அடங்கும். அறியா, என்று, கடவுளை, யாம், வணங்கிசசேர்தும் எனமுடிபுகாண்க.

வானத்தில் தோன்றுகிற இந்திரவில் இப்பொழுதென்றும் இன்னபடியென்றுந் தெரியாமல் உண்டாகி உடனே ஒரு அழிந்துபோவதுபோல, உடம்பும் உண்டாகி நிலையில்லாமல் அழிந்துபோவதனால் அது அழிவதற்கு முன்னமே நினைத்தகாரியங்கள் கைகூடும்படி நாம் கடவுளை சேர்வோமென்று கருத்து. 'வானிலிடுகின்ற வில்லினது தோற்றமும் அழிவும் போன்ற பிறப்பாகிய இயல்பையறிந்து' என்ற பழையவுரையைத் தழுவி இங்ஙனம் உரைக்கப்பட்டது. இனி, சீவகசிந்தாமணியில் "மற்றவன் தேவனுகி வானிடு சிலையிற்றோன்றி" என்றவிடத்து, நூல்கள், இந்திரவில் இன்னவாறு தோன்றுமென்று அதுதோன்றும் முறைமை கூறுவாகலின், அங்ஙனந் தோன்றுகின்ற தேவர்க்கு அஃது உவமையாயிற்று; இக்கருத்தானன்றே, "வானிடுவில்லின் வரவறியா" என்றார் பிறரும்' என்று ஆசிரியர் நச்சினார்க்கினியர் உரைத்துள்ளதனால், 'அறியா' என்பதை ஈறு கெட்ட எதிர்மறைப் பெயரெச்சமாகக்கொண்டு கடவுளுக்கு அடைமொழியாக்கி, ஆகாயத்தில் தோன்றுகிற இந்திரவிற்போல இன்னவாறு தோன்றுமென்று முன்புவருகையறியப்படாத கடவுளை யென்று உரைத்தல் நச்சினார்க்கினியர் கருத்தெனத் தெரிகின்றது; "திருவி லிட்டுத் திகழ்தரு மேனியன்" எனச் சிலப்பதிகாரத்திலும், மணிமேகலையிலும் இந்திரவில் தெய்வவடிவத்துக்கு ஒளியில் உவமை கூறப்பட்டவாறு காண்க.

'வில்லின், இன் - ஐக்கணருபு, ஒப்பு. முக்கணரைக்கு 'அறியா' என் பது - உடன்பாட்டு இறந்தகாலவினையெச்சம். வாய்மை - மெய்ம்மை : மெய்யறிவுக்கு ஆகுபெயர். வாய்மையால் அறியா என மொழிமாறி இயை யும். இனி, வாய்மையால் கால்நிலந்தோயா என இயைத்து, மெய்ம்மை யாகிய புண்ணியத்தாற் கால்கள் தரையிற்படியாதிருக்கப்பெற்ற என் பாரும் உளர். வாய்மையால் வணங்கிச் சேர்தும் என்று இயைத்து, திரி கரணசுத்தியாக வணங்கிச் சரணமடைவோ மென்றலும் அமையும். காலடிகள் நிலத்தில் தோயாமை எல்லாத்தேவர்க்கும் உண்டாயினும், மற் றைத் தேவர்கட்கெல்லாம் புண்ணியமுடிவில் தெய்வவுடம்பு நீங்கி வேறு உடம்பு வருதலால் அவர்க்கு அது முழுதும் நிலைபெறுமைபற்றி, அவ்வா றின்றி எக்காலத்துந் தெய்வத்தன்மை மாறாத அருகக்கடவுளுக்கு அது விசேடணமாக்கப்பட்டது. சாதாரணமாகத் தேவர்க்கு அத்தன்மை நீங்கு தலே "எல்லே மூவைவந்து நாள்க ளுளவென விமைக்குங் கண்ணும், நல்லெ ழில் மாலே வாடும் நுஞ்சுடை யிமிர்துண்டாரின், பல்பகல்துய்த்த. இன்பம் பழுதெனக் கவல்ப கண்டாய்" என்ற சீவகசிந்தாமணிகொண்டு உணர்க. இனி, 'கால்நிலந்தோயாக் கடவுள்' எனவே, **அருத்தாபத்தி**யால், பூவின் மேல் வந்தருளுங் கடவுளென்று கருத்துக்கொள்ளுதலும் ஒன்று ; அரு கக்கடவுள் தாமரைமலரை வாகனமாகக்கொண்டு அதனேயூர்ந்து செல்லு கின்றனனென்று நூல்கள் கூறும். கடவுள்-(எப்பற்றையும்) கடந்து நின்றவன் ; உள்-பெயர்விகுதி. சேர்தும், தும்-தன்மைப்பன்மை யெதிர் காலமுற்று விகுதி; பிறரையும் உளப்படுத்தியது. கால் நிலத்தில் தோயாத கடவுளே யாம் நிலத்தில் தலே பொருந்தும்படி வணங்குவோம் எனக் கடவு ளின் பெருமையும் தமது பணிவுந் தோன்றக் கூறியவாறும்; இது, **முரண் தொடை**யின்பாற் படும். முடிக - வேண்டுகோட்பொருளில் வந்த வியங் கோள்.

இச்செய்யுள், பால் முதலிய பாகுபாடு செய்யத்தொடங்கும்பொழுது பதுமனுர் செய்த தெனப்படும்; இதனுல், அவரது மதம் அருகத மென்பது விளங்கிற்று.

உரைப்பாயிரம்

இந்திரன் முதலிய தேவர்களுடைய சுவர்க்கம் முதலிய உலகங்களே யும், அளவிறந்த பேரின்பத்தையுடைய அழிவில்லாத முத்தியுலகத்தையும் அடையும்வழியறிந்து அடைவதற்குரிய மனிதர்கட்கு உறுதியைத் தருவ தென்று உயர்ந்தவர்களாற் குறிக்கப்பட்ட பொருள் நான்காம்; அவை - அறம் பொருள் இன்பம் வீடு என்பன: அவற்றை முறையே வடநூலார், தர்மம் அர்த்தம் காமம் மோக்ஷம் என்னுஞ் சதுர்விதபுருஷார்த்தம் என் பர். அவற்றுள், வீடு என்பது † மனத்துக்கும் வாக்குக்கும் எட்டாத நிலை

† இது, திருக்குறளுரையாசிரியராகிய பரிமேலழகரது கருத்து. இனி, தொல்காப்பியச் சிறப்புப்பாயிரவுரையில் நச்சினர்க்கினியர் 'வீடு கூறுமே வெனின்,—அகத்தியனரும் தொல்காப்பியனரும் வீடுபேற்றிற்கு நிமித்தங்

மையை யுடையதாதலின், அறத்தின் பகுதிகளுள் ஒன்றான துறவறமாகிய காரணத்தின்வகையாற் கூறப்படுமேயல்லாமல் இலக்கணவகையாற் கூறப்படாமையால், நூல்களாற்கூறப்படுதன அதற்கு ஒழிந்த ஏனான்குமேயாம்.

அறம் பொருள் இன்பம் என்னும் மூன்று புருஷார்த்தங்களும் நிரிவர்க்க மென்றும், வீடு அபவர்க்கமென்றும் வழங்கப்பெறும்.

இவற்றுள், அறம் - இம்மை மறுமை வீடு என்னும் மூன்றையுந் தருவதும், பொருள்- இம்மை மறுமை யிரண்டையுந் தருவதும், இன்பம்-இம்மை யொன்றையே தருவதும் ஆகிய சிறப்பின் தருதிறத்தால், அறம் முதலிலும், அதன்பின் பொருளும், அதன்பின் இன்பமும் ஓதப்பட்டனவென்றும், இவற்றுள் இரண்டாவதாகியபொருள்-மூவகையான அறத்திற்கும், மூன்றாவதான இன்பத்திற்கும் காரணமாதல்பற்றி, திருவள்ளுவர் அவரிரண்டினிடையில் வைக்கப்பட்ட தென்றும் அறிக. பொருள்-தருமகாமங்களைத் தருவதாதலை "வடுவிலா வையுக்கு மண்ணிய மூன்றில், நடுவண தெய்த விருதலையு மெய்தும், நடுவண தெய்தாதா னெய்தும் உலகப்பெய், தடுவது போலுந் துயர்" என்னும் இக் நூற் செய்யுளிலும், "அறனீனு மின்பமு மீனுந் திறனறிந்து, தீதின்றி வந்த பொருள்" என்ற திருக்குறளிலும், "அறம் பொருளின்ப மென்று - ஆராயிற்றி னிடையதுவே யெய்துவார், சீரா நிருதலையு மெய்துவர்" என்னும் பரிகாலன் வாக்கிலும் அறிக.

அவற்றுள், அறமாவது - இம்மை மறுமை வீடு என்னும் மூன்றையுந் தருவனவாய் மறுமுதலிய நூல்களில் விதிக்கப்பட்டவற்றைச செய்தலும், விலக்கப்பட்டவற்றைச் செய்யா தொழிதலுமாம்; அது - ஒழுக்கம். வழக்கு, தண்டம்என்று மூன்றாகவகுக்கப்படும்: இவற்றை முறையே வடநூலார், ஆசாரம். விவகாரம், பிராயசித்தம் என்பர். அவற்றுள், ஒழுக்கமாவது -. பிராமணர் முதலிய வருணத்தார் தம்தமக்கு விதிக்கப்பட்ட பிரமசரியம் முதலிய ஆசிரமத்தில் நின்றவர்களிற்சில சொல்லப்பட்டவற்றை யழுவாது ஒழுகுதல்.

கூறுதலன்றி வீட்டின் தன்மை தமிழாற்கூறினான் உணர்க; அஃது, "அன்றில் மருங்கி னாறறுதலாகிய, முப்பகுதிப் பொருட்முடிய வென்பர்" என்பதனால் உணர்க; இக்கருத்தானே, வள்ளுவனாரும் முப்பாலாகக் கூறி, மெய்யுணர்தலின் வீடுபேற்றிற்கு நிமித்தங் கூறினார்' என உரைத்ததனால், நச்சினார்க்கினியர் கருத்து இவ்விஷயத்தில் வேறுதல் விளங்கும். மற்றும், 'மேற்காட்டிய "அந்திலொடருங்கின்" என்ற தொல்காப்பியச் செய்யுளியற் சூத்திரத்தின் உரையில் 'உலகியற்பொருள் மூன்றினையுங் கூறுவான், அவற்றை 'மும்முதற் பொருள்' என்றான். அவையின்றி வீடுபெறுமாறு வேறு இன்மையின், வீடும் அதனுள்ளடக்கி கூறினான் என்பது. அல்லதூஉம், வீடு என்னும் பொருண்மை செய்யுட்கண் வாராமையின் அது கூறு னெனப; அங்ஙனங்கருதின், அறமுதற்பொருளுஞ் செய்யுட்கண் வாரா என மறுக்க' என்றதும், தொல்காப்பியர் பொருளதிகார வுரைத்தொடக்கத்தில் 'இக்கிலே யாமையானும் இவற்றினும் வீட்டிற்குக் காரணங் கூறினர்' என்றதும் காண்க.

வழக்காவது-ஒருபொருளைத் தனித்தனியே எனது எனது என்று இருப்பவர்கள் அதுகாரணமாகத் தமக்குள் மாறுபட்டு அப்பொருளின்மேற் சொல்வது ; அது - கடன்வாங்குதல், வைப்பு, உடையவனல்லாதவன் விற்றல், கூடிமேம்படுதல், கொடுத்ததை மீண்டும் கொடாமை, கூலி கொடாமை, கட்டுப்பாடுகடத்தல், விற்றும் வாங்கியும் உள்ளமொப்பாமை, ஒப்பிப்பணிசெய்யாமை, எல்லைவழக்கு, தண்டக்கொடுமை, சொற் கொடுமை, திருடி, வன்செய்கை, மாதரைக்கவர்தல், மாதராடவர் தருமம், தாயபாகம், சூது எனப் பதினெட்டு வகையது. தண்டமாவது - ஒழுக்க வழுக்குக்களினின்று தவறினவர்களை அந்தந்த நெறியில் நிறுத்துதற் பொருட்டுப் பக்ஷபாதமில்லாமல் ஆலோசித்து அந்தந்தக் குற்றத்திற்குத் தக்கபடி சிட்சித்தல்.

இம்மூன்றனுள், வழக்கும் தண்டமும் உலகத்தை நல்வழிப்படுத்துவதற்கே பயன்படுவன வல்லது, ஒழுக்கம்போல மனிதரது உயிர்க்கு உறுதி தருஞ் சிறப்பை யுடையனவல்ல வாதலாலும், அவைதாம் நூல்களினாலே யேயன்றி அறிவுறுதியாலும் தேசத்து இயற்கையாலும் அறியப்படுதலாலும் அவற்றை யொழித்து, (திருக்குறளிற்போல), இந் நூலிலும் சிறப்புடைய ஒழுக்கமே அறமென எடுத்துக்கொள்ளப்பட்டது. அதுதான் நால்வகை ஆச்சிரமத்தாய் வருணந்தோறும் வேறுபாடுடைமையால், சிறுபான்மையாகிய அச்சிறப்பியல்புகளையொழித்து, எல்லாருக்கும் ஒத்திருத்தலாற் பெரும்பான்மையாகிய பொதுவியல்புபற்றி, இல்லறம் துறவறம் என இருவகைநிலையாற் கூறப்படுகின்றது. அவற்றுள், இல்லறமாவது - இம்மை மறுமையாகிய இருமையின்பங்களையும் அனுபவித்தற்கு உரிய இல்வாழ்க்கைநிலைக்குச் சொல்லுகின்ற நெறியில் நின்று அதற்குத் துணையாகிய கற்புடை மனைவியோடுஞ் செய்யப்படுந் தருமம் ; துறவறமாவது - மேற்கூறிய இல்லறத்தில் வழுவாமல் நடந்து அறிவுடையராய்ப் பிறப்பையஞ்சி முத்திபெறுதற்பொருட்டு எல்லாப்பற்றுக்களையும் விட்டவர்க்கு உரியதாகிய தருமம்.

பால், இயல், அதிகாரம் என்றவற்றிற்கு,- பலபொருள்கள் உள்ளனவாயினும், இங்கே, ஒருபொருளையே குறித்துவரும் பல செய்யுட்களின் தொகுதியாகிய நூற்கூறுபாடென்று பொருள். இந் நூலில், சங்கேதத்தால், **பால்** என்றது - பெரும்பிரிவுக்கும், **இயல்** என்றது - அதற்கு உட்பட்ட சிறு பிரிவுக்கும், **அதிகாரம்** என்றது - அதன் உட்பிரிவுக்குமாகக் கொள்ளப்பட்டது.

இனி, ஒவ்வொரு பொருளை வற்புறுத்திக்கூறும் பப்பத்துப் பாட்டல்களை யுடைய நாற்பது அதிகாரங்களாகப் பகுக்கப்பட்டுள்ள இந் நூலில் முதற்பதின்மூன்று அதிகாரங்கள், **அறத்துப்பால்** ; பதினான்காம் அதிகாரம் முதல் முப்பத்தேழாம் அதிகாரம் வரையில் இருபத்துநான்கு அதிகாரங்கள், **பொருட்பால்** : இறுதி மூன்று அதிகாரங்கள், **காமத்துப்பால்:** "மூன்றறப்படக்கிய தன்மைத்தாயின், தோன்றுமொழிப்புலவ ரது பிண்ட மென்ப" என்னுந் தொல்காப்பியச் செய்யுளியற் சூத்திரத்தின் படி இந் நூல் பால் இயல் அதிகாரம் என்னும் மூன்று உறுப்புக்களையும் அடக்கியதொரு பிண்டமா மென்க. அவற்றுள்,—

முதலாவது

அறத்துப்பால்.

அஃதாவது - அறத்தை யுணர்த்தும் பகுதி என்பதாம். இஃ தணைத்தே தர்த்துகையாரதும் பாலை யுடன்றிதாக்கிதாகை. இவ்வதத்துப்பால் - துறவறவியல், இல்லறவியல் என இரண்டாய் உட்பிரிவை யுடையது.

அறத்தை யுணர்த்தி வரிய இருவகைகளிலையுள் இல்லறம் முதலிலும் துற வறம் இரண்டாம் நூலாதலால் அம்முறைபற்றித் திருக்குறளின் அறத்துப் பாலில் இல்லறவியல் முதலிலும் துறவறவியல் பின்னும் வைத்துக் கூறப் பட்டிருக்கிறது. இத் நூலில் அவ்வாறு மன்றி, துறவறம் நிற்கியமாகிய முத் தியை யடைதற்குக் காரணமாதலால் அதை நிறப்புப்பற்றி அது முன் னும், இல்லறம் துறவறத்திற்பால முத்தி யடைதற்குக் காரணமாகாத தனால் அச்சிறப்புப்பற்றி அது பின்னுமாக வைக்கப்பட்டது. இத் நூலின் முதல் ஏழு அதிகாரங்கள் - வாழ்க்கையின்படி முத்தியடை தற்கு இன்றியமையாத காரண துறவறத்திற்கு கூறும் இயலென்றும், அதன் பின் ஆறு அதிகாரங்கள் - அத்துறவறத்திற்கு மறுதலையாகிய இல்லறத் திற்குக் கூறும் இயலென்றும் அமைக்கப்பட்டன. "அறவிய லிருவகைத்தா யறனுமதற்றுள், அறனீவ தில்லறமற் றிருபாலுள் றெல்ல" என்ற பாயிய உரைச சூத்திரத்தை உணர்க. அவற்றுள்,—

முதலாவது

துறவறவியல்.

அஃதாவது - துறவறத்தைக் கூறும் இயல் என்றவாறு; இரண் டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்றொக்கதாகை. துறவறமென் பது முத்தியடைதற்குக் காரணமாதலால், அசிறப்புப்பற்றி, இருவகை யறங்களுள் அத்துறவறம் முதலிற் கூறப்பட்டது. அதனுள்,

முதல் அதிகாரம்—செல்வநிலையாமை.

அஃதாவது - செல்வத்தினது நிலைத்தலில்லாமை. இதனைச சொல் வது, செல்வங்கிடைத்தபோது விரைவில் அறஞ்செய்வதிற் கருத்து உண் டாதற்பொருட்டு. நிலையில்லாதபொருளை யுணர்ந்தா லன்றி நிலையுடைய பொருளில் மனஞ்செல்லா தாதலால், முத்தியடைவதில் விருப்பமுண்டா தற்பொருட்டு நிலையில்லாதபொருள்களை மூன்று அதிகாரங்களால்உணர்த் தத்தொடங்கி, அவற்றுள் இளமைக்குப்பிராயம் முப்பதென்றும், உடம் புக்குப் பிராயம் நூறென்றும் ஒரு காலகியமம் உள்ளதனால், அவற்றிற்கு முன், அந்தியமில்லாத செல்வத்தின் நிலையாமையை வைத்திட்டார். இங்ஙனம் அதிகாரங்களை யாதாயினும் ஒரு காரணம்பற்றி ஒழுங்குபட நிறுத்துதல், '**ஒத்துமுறைவைப்பு**' என்னும் உத்தியாம்.

அதிகாரம்-அதிகரித்தல்;அது இருவகைப்படும்:அவற்றுள்ஒன்று-அர சன் தான் இருந்தஇடத்தேஇருந்து தன்நிலம்முழுவதும்தன்கட்டளையில் நடக்கச் செய்தல்போல,ஒருசொல் நின்றவிடத்தே நின்று பலசெய்யுள்கள்

தன்பொருளாகச் சொல்லிடருப்படி செய்வது : மற்றொன்று-அதாற்குச் சென்று கட்டளை நிறைவேற்றுக்கு அதிகாரிகளிடம்போல, ஒரிடத்துள்ள தொல் பலசெய்யுட்களினாடுகி சென்று இயைத்து தன்பொருளாகப் பயப்பிப்பது. அவற்றுள், இரண்டாம் 'ஒரிடம்' என்றது, முதலிற்கூறிய வகை பற்றியது. இனி, அதிகாரம் என்பதற்கு முதற்றன்மையினைப் பொருள் கூறுவர், நச்சினார்க்கினியர்.

க. அறுசுவை யுண்டி யமர்ந்தில்லா ளூட்ட
மறுசிகை நீக்கி யுறுபசி யாற்றி—வறிஞராய்ச்
சென்றிரப்ப ரோரிடத்துக் கூழினிற் செல்வமோன்
றுண்டாக வைக்கற்பாற் றன்று.

(இதன்பொருள்.) அறுசுவை-அறுவகைச் சுவையுடைய, உண்டி-உணவை, அமர்ந்து-அன்போடு பொருந்தி, இல்லாள்-மனைவி, ஊட்ட-(எடுத்தெடுத்து) உண்பிக்க, மறுசிகை-மற்றொரு கவளத்தை, நீக்கி-தள்ளி, உண்டாரும்-புசித்த பெருஞ்செல்வ முடையோரும், வறிஞர் ஆய்-(அச செல்வமழிந்து) தரித்திரர்களாய், ஓரிடத்து-பிறமிரிடத்தில், சென்று-போய், கூழ்-கூழை, இரப்பர்-பிச்சையெடுப்பார்கள், எனின்-என்றால்,—செல்வம் ஒன்று-செல்வமென்கிற ஒருபொருள், உண்டு ஆக-நிலையாயுள்ளதாக, வைக்கற் பாற்று அன்று-(மனத்தில்) வைத்து வாணாள்முழுக்க தன்மையுடையதன்று, (என்றவாறு.)

நிலையாமையையறிந்து பொருளிற்பற்றுவிடவேண்டுமென்பது கருத்து.

அறுசுவை-திரித்திப்பு, புளிப்பு, கார்ப்பு, கைப்பு, உவர்ப்பு, துவர்ப்பு என்பன. உணவிடுபவரது அன்பு எஞ்ஞான்றுஞ்சுவையென்று பாராட்டிக் கூறப்படுதலால், 'அறுசுவையுண்டி' என்றதன்பின் 'அமர்ந்து' என்றமை ஏற்கும். அமர்தல்-விரும்பியிருத்தலாகலுமாம். இல்லாள்-இல்லறவாழ்க்கைக்கு உரியவள். செல்வர்கள் வீட்டிற் பரிசாரகர் பலர் இருக்கவும் மனைவியே உண்பித்தல், இன்பஞ்செய்தற்பொருட்டென்க. மறுசிகைநீக்கி உண்ணுதலாவது-ஒவ்வொருவகை யுணவிலும் முதலில்எடுத்துக்கொடுத்தகவளத்தை மாத்திரமேஉண்டு (வயிறு நிரம்பிவிடுதலால்) இரண்டாவது கவளத்தை அடியோடு வேண்டாமென்று விலக்குதல். இவ்வாறு உண்ணுதல், உணவுவகைகளின் சிருஷ்டியினை. ஊட்ட என்னுஞ் சொல்லின் ஆற்றலால், தாம் கையில்வாங்கி உண்ணுமல் மனையாள் தானே வாயிற்போகட உட்கொள்ளுதல் தோன்றுமாறு காண்க. சென்று என்றது, முன்னே கால்களால் நடவாமை தோன்றநின்றது. தாம்செல்வராயிருந்த இடத்திலேயே இரத்தல் பேரவமானத்தைத் தருதலால் வேறோரிடத்துச் சென்று இரப்பரென்க. இனி, 'ஓரிடத்து' என்பதற்கு-ஒரேயிடத்தில் [முன்பு தாம்செல்வராய் வாழ்ந்த இடத்திலேயே] என்று உரைப்பாரு முளர். கூழ்-மிகத் தாழ்ந்த உணவு; அதனை இரப்பரெனவே, மிகவுந் தாழ்ந்தவரிடத்தும் போய் இரப்பரென்பது பெறப்படும். எனின்-ஆதலால் என்றபடி. ஒன்று உண்டாக என எடுத்து, சிறிதும் நிலையுள்ளதாக எனினுமாம்.

உண்டி-உண்ணப்படுவது; இ-செயப்படுபொருள் விகுதி, ட்-எழுத்துப்பேறு. ஊட்டு-உண்என்பதன் பிறவினை. மறுசிகை-பண்புத்தொகை.

சிகை என்னும் முடிந்த குடுமியின்பெயர், பிசைந்த அன்னத்தினின்று எடுக்குங் கவளத்துக்கு உவமவாகுபெயர். உண்டாரும், உம்-உயர்வுசிறப்பு. வறிஞர், ஞ்-பெயரிடைநிலை; வறுமைஎன்ற பண்புப்பகுதி ஈறுபோய்இடை உகரம் இகரமாயிற்று. செல்வம்-(எவரிடத்தும் நிலைத்திராமல் நீங்கிச்) செல்லுந் தன்மையது எனப் பொருள்படும் காரணக்குறி; செல்-பகுதி, அம்-கருத்தாப்பொருள்விகுதி, வ்-எழுத்துப்பேறு. பாற்று-பான்மை என்பதன் அடியாகப் பிறந்த ஒன்றன்பாற் படர்க்கைப் பெயர். மேல் கசஅ-ஆவது செய்யுளில், 'உணரற்பாற்றன்று' என்பதிலும் இது. சிகை-**சீகா** என்னும் வடமொழி திரிந்தது.

"ஆமின் சுவையமை யாரமுடிசிலுண்டார்ந்தபின், தூமென்மொழி மடவா ரிரக்கப் பின்னுந் துற்றுவா, ரீமி னெமக்கொரு துற்றென் றிட றுவராதலிற், கோமின் தூழாய்மூடி யாதியஞ்சோதி குணங்களே" எனத் திருவாய்மொழியிலும், "முல்லைமுகை சொரிந்தாற்போன் றிணியபாலடிசில் மகளிரேந்த, நல்லகருணையால் ஈள்வாயும் பொற்கலத்து வயந்துண்டார்கள்; அல்லலடைய அடகிடுமி னேட்டகத்தென்று அயில்வார்க் கண்டும், செல்வம் நமரங்காள் நினையன்மின் செய்தவமே நினைமின்கண்டீர்" எனச் சிந்தாமணியிலும் கூறியிருத்தல் காண்க.

இச்செய்யுளில் முன்வாக்கியத்தின்பொருளைக்கொண்டு பின்வாக்கியத்தின் பொருள் சாதிக்கப்படுதலால், **செய்யுட்குறியணி**; வடநூலார் **காவ்யலிங்கம்** என்பர். இதில், செல்வத்தை ஊழ்வினையாற் பெற்றால் அப்பெற்ற பொழுதே அதனைச் செய்யப்படும் கடவுட்பூசையும் தானமும் முதலான தருமங்களைச் செய்துவைத்துக்கொள்ளவேண்டு மென்பது தொனிக்கும்.

இவ்வெண்பாவின் பின்னிரண்டடியில் **இனவெதுளக** காண்க. (க)

உ. துகடீர் பெருஞ்செல்வந் தோன்றியக்காற் றொட்டுப்
பகடு நடந்தகூழ் பல்லாரோ டுண்க
வகடுற யார்மாட்டு நில்லாது செல்வஞ்
சகடக்கால் போல வரும்.

(இ-ள்.) செல்வம்—,அகடு உற-நடுநிலைமை பொருந்த, யார்மாட்டும்-எவரிடத்தும், நில்லாது-நிலைபெறாமல், சகடம் கால் போல-வண்டியின் சக்கரம்போல, வரும்-(மேல்கீழாகவும் கீழ்மேலாகவும்) மாறிமாறி வரும்; (ஆதலால்),—துகள் தீர்-குற்றமற்ற, பெருஞ் செல்வம்-மிக்க திரவியம், தோன்றியக்கால்-(ஒருவனுக்கு) உண்டானால்,—தொட்டு-(அவ்வுண்டானநாள்) தொடங்கி,—பகடு நடந்த கூழ்-எருமைக்கடாக்கள் உழுது நடந்ததனால் உண்டாகிற உணவை, பல்லாரோடு-பலரோடுங் கூடி, உண்க-(அவன்) உண்ணக்கடவன்; (எ-று.)

செல்வத்திற்குக் குற்றம்-தருமவழியாலன்றி வேறுவழியால் வருதல். அதருமவழியால் வந்த செல்வம் புகழறங்கட்குக் காரணமாகா தாதலால், அதனை விலக்குதற்கு, 'துகடீர்செல்வம்' என்றார். பெருஞ்செல்வமென்ற தூ-செலவழிக்கச செலவழிக்கக் குறைவுபடாமல் மேல்மேல் வருவாயை யுடைய பொருளென்றபடி. 'பகடுநடந்தகூழ்' என்றது-பிறதொழில்க ளாற் பெரும்பொருள் பெற்றவர்க்கும் உழுபவர் உழுதலல்லாமல் உணவு கிடையாதாதலால்; அன்றியும், நன்முயற்சியாற்பெற்ற உணவென்பதற்கு ஒரு திருஷ்டாந்தங் காட்டினரென்றுமாம். கூழ்-இங்கே, உணவுப்பொது வாய்நின்றது. 'பல்லார்' என்றது, விருந்தினர் சுற்றத்தார் முதலியோரை உட்கொண்டு. பலவகைத் தானங்களுள்ளும் அந்தானத்துக்கு ஒத்ததும் மிக்கதும் வேறு இல்லாததனால், 'பல்லாரோடுண்க' என்றார். பெருஞ் செல்வம் பெற்றதற்குப் பயன் பிறர்க்குத் தானஞ்செய்தலும் தான் அனு பவித்தலுமே யென்பதாம். "அற்காலியல்பிற்றுச் செல்வமதுபெற்றா, லற்குப வாங்கே செயல்" என்றார் திருவள்ளுவனாரும். **செய்யுட்குறி யணியோடு உவமையணி.**

தீர் - தன்வினைபிறவினைகட்குப்பொதுவானமுதனிலை; இங்குத் தன் வினை. இக்காலங்கடந்த பெயரெச்சம், 'செல்வம்' என்னும் பெயர்கொண் டது. தீர்செல்வம்-வினைத்தொகை. தோன்றியக்கால்-கால் விகுதி பெற்ற எதிர்கால வினையெச்சம்; வலியுறுக்கதனால், இது பெயரெச்சத்தொடரன்று. தொட்டு, தொடு-முதனிலை. பகடு-ஆண்பெயர். நடந்த என்னும் பெயரெச் சம் காரணப்பொருளது. உண்க-வியங்கோள்; விதித்தற்பொருளது. யார் மாட்டும்—யார்-யாவா என்பதன் தொகுத்தல்: மாடு-எழாம்வேற்றுமைச் சொல்லுருபு; உம்-முற்று. நில்லாது - வினையெச்சம்: 'வரும்' என்னும் முற்றுவினை கொண்டது. சகடம் - வடசொல்.

இனி, "பகடிபம் பெருமையேறு பஃறி யாண்மேதி யைம்பேர்" "அக டென்பது நடுவே குகிற்" என்னும் நிகண்டுகொண்டு, பகடு நடந்த என்ப தற்கு - பெருமைபொருந்திய என்றும், அகடுற உண்க என்று இயைத்து - வயிறு நிரம்ப உண்க என்றும் உரைப்பாருமுளர்.

இச்செய்யுளில் 'செல்வம்' என இடையிலேநின்ற மொழி 'நில்லாது' என முதலிலும், 'வரும்' என இறுதியிலுஞ் சென்று கூடுதல், **தாப்பிசைப் பொருள்கோளாம்.** (உ)

கூ. யானை யெருத்தம் பொலியக் குடைநிழற்கீழ்ச்
சேனைத் தலைவராய்ச் சென்றீரு—மேனை
வினையுலப்ப வேறுகி வீழ்வர்தாங் கொண்ட
மனையாளே மாற்றூர் கொள.

(இ - ள்.) யானை எருத்தம் - யானையினது பிடரி, பொலிய - (தாம் வீற்றிருத்தலால்) விளங்கும்படி, (அதன்மேல்ஏறி), குடைநிழல் கீழ்-வெண் கொற்றக் குடையின் நிழலில், சேனை தலைவர் ஆய் - சேனைகளையுடைய

அரசராய், சென்றேறரும் - (வீதிகளில்) உலாச்சென்ற பெருஞ்செல்வ முடையவர்களும்,—ஏனை வினை - மற்றை வினை [தீவினை], உலப்ப - (அச் செல்வத்தை) அழிப்பதனால், கேடு ஆகி - (அந்நிலையினின்றும்) கேடு பட்டு [வறுமையடைந்து], தாம் கொண்ட மனையாளை மாற்றார் கொள - தாங்கள் மணஞ்செய்துகொண்ட மனைவியையும் பகைவர்கள் கவர்ந்து கொள்ளும்படி, வீழ்வர் - நிலைகுலைந்து இழிவுறுவர் ; (எ - று.)

இவ்வளவு செல்வத்தையும் வறியவராதல் கூறவே, மற்றையோர் வறியவராதல் கூறவேண்டாதாயிற்று. ஆற்றல் மிக்க அரசர்களிடத்துஞ் செல்வம் நிலைபெறுதென்றபடி. பெருந்துன்பமும் பேரவமானமுந் தருதல்பற்றி மனையாளை மாற்றார் கொள்ளுதலை எடுத்துக் கூறினர். "உய்ம்மின் கிறைகொணாக் தென் றுலகாண்டவ ரிம்மையே, தம்மின் சுவை மடவாரைப் பிறர்கொள்ளத் தாம்விட்டு, வெம்மை யெஞ்சிவெயிற் கானகம்போய்க் குமைதின்பர்கள், செம்மின் முடிச் சிரமாலை விரைந்தடி சேர்மினே" என்ற திருவாய்மொழியையும் காண்க. **தன்மைநவிற்சியணி;** வட நூலார் **ஸ்வபாவோக்தி** என்பர்.

எருத்து - கழுத்தின் மேற்புறம்; அம் - சாரியை. இவர்கள் எறுதலால் யானையின் கழுத்துக்கு அழகு உண்டாவதனை எனவே, இவர்களது அழகு கூரமலை பெறப்படும். நிழற்கீழ், கீழ் - எழுனருபு. "ஒரு ராயகமா யோட வுலகுட ணுண்டவர்" என்றவாறு எகசக்கராதிபத்திய மூடையராய் பாவனையும் வென்று விளங்குகிற சக்கரவர்த்திக ளென்பது தோன்ற, 'குடைநிழற்கீழ்ச் சேனைத் தலைவராய்ச் சென்றேறர்' என்றார். 'சேனைத்தலைவராய்' என்றது, ரத கஜ துரக பதாதி என்னுஞ் சதுரங்க சேனைகளும் தம்மைச் சூழ்ந்துவர என்றபடி. இவ்வாறு செல்வம் மிக்கிருத்தற்குக் காரணம் முற்பிறப்பிற் செய்த புண்ணியமே யாதலால், அதற்கு எதிராகிய பாவம், 'ஏனவினை' எனப்பட்டது. சேனை - 'ஸேநா' என்னும் வடமொழி, ஆயீறு ஐயாயிற்று. ஏனை - பிறிதென்னும் பொருள் தருவதோர் இடைச்சொல். தீவினையை அதன் பெயராற் கூறவும் அஞ்சி 'ஏனவினை' என்றனர்போலும். இனி, ஏனை என்பது - அசைநிலையாய், வினை உலப்ப - அந் நல் வினை கெட என்றுமாம் ; [சிலப் பதிகாரத்தில் "முதிர்வினை நுங்கட்கு முடிந்ததாகலின்." என்றதற்கு - 'நுங்கட்கு முற்பட்ட நல்வினை முடிந்ததாகலான்' என்று பொழிப்புரை கூறிய அடியார்க்குநல்லார் 'முதிர்தல் - முற்படுதல்; எனவே, நல்வினை முடிதலால் என்க : "ஏனவினை யுலப்ப" என்றார் பிறரும்' என விசேடவுரை கூறியதுகாண்க.] செல்வமாகிய உயர்ந்த நிலையினின்று இழிந்து வறுமையாகிய தாழ்ந்த நிலையை அடைதலால், 'வீழ்வர்' என்றார். மனையாளை என்றவிடத்து, மற்றைச் செல்வங்களையேயன்றி எனை இறந்தது

சூழ்வினை எச்சப் பொருளைத் தருகிற உயர்வு சிறப்புவினை விகாரத்தால் தொக்கது. மாற்றார் - மாறுணர்வர்; மாறு [=எதிர்] பகுதி. (க)

ச. நின்றன நின்றன நில்லா வெனவுணர்ந்
தொன்றின வொன்றின வல்லில செயிற்றொய்க
ளென்றன வென்றன வாழ்நாள் சிறுகுந்துடன்
வந்தது வந்தது கூற்று.

(இ - ள்.) வாழ்நாள் - (உயிர் உடம்போடுகூடி) வாழ்கின்ற ஆயுள் காலங்கள், சென்றன சென்றன - கழிந்தன கழிந்தன; கூற்று - யமன், சிறுந்து-தீகாபித்து, உடன்-விரைவில், வந்தது வந்தது—:(ஆதலால்),—நின்றன நின்றன - வந்துநின்ற செல்வம் முதலிய பொருள்களெல்லாம், நில்லா - நிலையில்லாதனவாம், என-என்று, உணர்ந்து - (உண்மையை) அறிந்து,—ஒன்றின ஒன்றின - (செய்தற்குரிய) கூடுமான தருமங்களோ யெல்லாம், செயின் - செய்யப் புகுந்தால், வல்லில செய்க-விரைவில் (ஒவ்வொரு வரும்) செய்யக்கடவர்; (எ - று.)

செய்யக்கூடிய நற்காரியங்களைச் சீக்கிரத்திலே செய்யவேண்டும்; பின் செய்வோ மென்றால், செல்வம் அழிந்துபோம், உடம்பும் நிலையன்று என்பதாம். **சொற்பொருட்பின்வருநிலையணி.**

"காலைச் செய்வோமென் றறத்தைக் கடைப்பிடித்துச், சாலச்செய் வாரேதலைப்படுவார்—மாலைக், கிடந்தா னெழுதலரிதான் மற்றென்கொ, லறஞ்காலைசெய்யாதவாறு" என்றார் அறநெறிசாரத்திலும்.

நின்றன - செல்வமும், இளமையும். நின்றன நின்றன, ஒன்றின ஒன்றின என்னும் அடுக்குக்கள் - மிகுதிபற்றியன. சென்றனசென்றன, வந்தது வந்தது என்னும் அடுக்குக்கள்-விரைவுபற்றியன. 'நின்றன நின்றன நில்லா' என்ற சொற்போக்கு, நிலைபெற்றன நிலைபெற்றன வெல்லாம் தம்மாற் கருதப்பட்ட பொருள்களெல்லாம் நிலைபெறும்பல் அழியு மென்ற கருத்தையும் விளக்கும். சென்றன, வந்தது என்றவற்றில்—தெரிவுபற்றி; நிகழ்காலமும் எதிர்காலமும் இறந்தகாலமாகச் சொல்லப்பட்டன; கால வழுவமைதி. வல்லில, உடன்-விரைவுப்பொருளைத் தரும் இடைச்சொற் கள். நாள் - பால்பகா அஃறிணைப்பெய ராதலால், இங்கு, சென்றன என்னும் பன்மைவினை கொண்டது. தேவர்களை இருதிணையாகவும் சொல் வது இலக்கணமாதலால், இங்கு 'கூற்று வந்தது' என அஃறிணையாக் கூறப்பட்டது. கூற்று-உடலையும் உயிரையும் வெவ்வேறு கூறுக்குங் கட வுள்; உடலினின்று உயிரைப்பிரிப்பவ னென்றபடி; 'வாழ்நாள் இடை யறாது செல்லுங் காலத்தினைப் பொருள்வகையாற் கூறுபடுத்துங் கட வுள்' என்பர் நச்சினார்க்கினியர். ஈற்றடி - **இனவெதுகை.** (ச)

ரு. என்ணெணு மொன்றுதங் கையுறப் பெற்றக்காற்
பின்னவை தென்று பிடித்திரா—முன்னே
கொடுத்தா ருயப்போவர் கோடறீக் கூற்றந்
தொடுத்தாறு செல்லுஞ் சுரம்.

(இ - ள்.) என் ஆனும் ஒன்று - யாதாயினும் ஒரு பொருள், தம் கை உற பெற்றக்கால்-தமதுகையிற் கிடைக்கப்பெற்றால், பின் ஆவது என்று-(பிறர்க்கு ஈதல்) பின்னே ஆகக்கடவது என்று, பிடித்து இரா - இறுகப் பிடித்துவைத்திராமல், முன்னே-அப்பொருள் கிடைத்தபொழுதே, கொடுத்தார்-தானஞ்செய்தவர்கள், —கோடு இல் - பக்கபாதமில்லாத, தீ கூற்றம்-கொடுமையையுடைய யமன், தொடுத்து-(தம்மைப் பாசத்தாற்)கட்டி, செல்லும் - கொண்டுபோகின்ற, ஆறு - வழியிலுள்ள, சுரம்-வெப்புநிலத்தினின்றும், உய போவர் - (அந்நல்வினை வந்து உதவுவதனால்) தப்பிச் செலவார்கள்; (எ - று.)

பலதீவினைகள் செய்து நரகத்திற் செல்லுந் தன்மையராயினும், யாதாயினும் ஒருபொழுதில் ஒருசிறிததருமஞ் செய்திருந்தால் அதன் பயனுக அந்நரகவழியிலுந் துன்பம் நீங்கி இன்பம் பெறுவ ரென்றபடி. யமன்வசப்பட்டு நரகத்துன்பம் நுகர்தலென்பதின்றி நல்வினைப்பயனுற் சுவர்க்கம்புக்கு இன்ப நுகர்வரென்ற கருத்தும் அமையும்.

'பின்னுவதென்றுபிடித்து' என்பதற்கு - பின்காலத்தில் [முதுமையில்] (தமக்கு அப்பொருள்) பயன்படுவது என்று எண்ணி லோபஞ்செய்து என்றும் உரைக்கலாம். கோடு-முதனிலைத் தொழிற்பெயர். கோடுதல் - கோணுதல்: நடுவுநிலைமைதவறுதல். கோடில் கூற்றம் என்றது - நல்வினை செய்தோர்க்குத் தீமையையும், தீவினைசெய்தோர்க்கு நன்மையையும் மறந்தருதலை யென்றற்கு; 'நடுவன்,' 'ஸமவர்த்தீ,' 'தருமன்' என்கிற அவனது பெயர்களாலும்அறிக. பாவஞ்செய்தவர்களைத் தண்டிப்பதில் எவ்வளவும் இரக்கமில்லாமைபற்றி, 'தீக்கூற்றம்' என்றார்.

என், ஆனும் என்பன - எவன், ஆயினும் என்பவற்றின் விகாரங்கள். பெற்றக்கால் - காலீற்று வினையெச்சம். இரா-ஈறுகெட்டஎதிர்மறைவினையெச்சம். சுரம் - ஜ்வரம் என்ற வடமொழியின் திரிபு; சுரம் என்றது-அசிபத்திரவனம் போல்வதை. உய = உய்ந்து: எச்சத்திரிபு. (இ)

கூ. இழைத்தநா ளெல்லை யிகவா பிழைத்தொரீஇக்
கூற்றங் குதித்துய்ந்தா ரீங்கில்லை—யாற்றப்
பெரும்பொருள் வைத்தீர் வழங்குமி னூனைத்
தழீஇந்தழீஇந் தண்ணம் படும்.

(இ - ள்.) இழைத்த நாள்-(ஊழ்வினையால்) விதிக்கப்பட்டுள்ள ஆயுள் நாள்கள், எல்லை இகவா - (தமது) அளவைக் கடவாதனவாம்; கூற்றம் - யமனிடத்தினின்றும், பிழைத்து - தப்பி, ஒரீஇ - நீங்கி, குதித்து - (அவனெண்ணத்தைக்) கடந்துபோய், உய்ந்தார் - உயிர்வாழ்ந்தவாகள், ஈங்கு இல்லை - இவ்வுலகத்தில் (எவரும்) இல்லை; (ஆதலால்), ஆற்ற பெரும்பொருள் வைத்தீர்-மிகவும் அதிகமான செல்வத்தைச் சேர்த்துவைத்திருப்பவர்களே! வழங்குமின் - (விரைவாகவே) தானஞ்செய்யுங்கள்; நாளை-நாளைக்கே, தண்ணம்-இறந்தவர்க்கு உரிய நெய்தற்பறை, தழீஇம் தழீஇம்-தழீம் தழீம் என்னும் ஓசைஉண்டாம்படி, படும்-அடிக்கப்படுதல்கூடும்; (எ - று.)

குறுகவுங்குறுகாது வளரவும்வளராது என்றற்கு, பொதுப்பட, 'எல்லையிகவா' என்றார். ஒரீஇ-ஒருவி; சொல்விகாரப்பட்டு அளபெடுத்தலால், சொல்லிசை யளபெடை. பெரும்பொருள்-பெருமையைத் தருவதாகிய பொருளெனினுமாம். 'பிழைத்து ஒரீஇ' என்பதை 'இகவா' என்பதனோடு கூட்டியுரைப்பாருமுளர். 'படும்' என்பதற்கு-ஒலிக்குமென்ற பொருளும் உண்டு. "சென்றநாளெல்லாஞ் சிறுவிரல்வைத் தெண்ணலாம், நின்றநாள் யார்க்கும் உணர்வரிது" ஆதலால், 'நாளே' என்றார். இங்கு 'நாளே' என்றது-எதிர்காலத்தையுணர்த்தவந்ததோர் குறிப்புச்சொல். தண்ணம்-தண்ணுமையென்கிற சாக்காட்டுப்பறை. தழீஇம் தழீஇம்-அநுகரண மென்னும் ஒலிக் குறிப்பு; இரட்டைக்கிளவி: இயற்கையளபெடை.

மரணம் சம்பவிக்குமென்பது, 'தழீஇத் தழீஇத் தண்ணம் படும்' என்வேறொருவகையாற் காட்டப்பட்டது: இது, **பிறிதினவிற்சியணி**; வடநூலார் **பர்யாயோக்தாலங்காரம்** என்பர்.

இச்செய்யுள்-**பலவிகற்பவின்னிசை வெண்பா.** (க)

எ. தோற்றஞ்சான் ஞாயிறு நாழியா வைகலுங்
கூற்ற மளந்துநுந் நாளுண்ணு—மாற்ற
வறஞ்செய் தருளுடையீ ராகுமின் யாரும்
பிறந்தும் பிறவாதா ரில்.

(இ-ள்) தோற்றம் சால் ஞாயிறு-உதித்தல் பொருந்திய சூரியனே, நாழி ஆ-அளவுகருவியாகக்கொண்டு, வைகலும்-நாள்தோறும், கூற்றம்-யமன், நும் நாள்-உங்கள் வாழ்நாள்களை, அளந்து-அளவிட்டு, உண்ணும்-உண்டுவருகின்றான்: (ஆதலால்),—ஆற்ற-மிகுதியாக, அறம் செய்து-தருமஞ்செய்து, அருள் உடையீர் ஆகுமின்-(உயிர்களிடத்துக்) கருணையுள்ளவராவீர்கள்; (அவ்வாறு ஆகாவிட்டால்), யாரும்-எப்படிப்பட்டவரும், பிறந்தும்-(இவ்வுலகத்தில் மனிதராய்ப்) பிறந்தும், பிறவாதாரில்-பிறவாதவர்போலவே (ஆவர்); (எ-று.)

சூரியனது உதய அஸ்தமநங்களினாலே நாள் உண்டாகிக் கழிவதனாலும், அது கழிய ஆயுள் குறைவதனாலும் இவ்வாறு கூறினார். மேல் உஉ-ஆஞ்செய்யுளையும், "நாளெனவொன்று போற் காட்டி யுயிரீரும், வாள துணர்வார்ப் பெறின்," வாள்களாகி நாள்கள் செல்ல" என மூன்றனுள் கூறியிருத்தலையுங் காண்க. "ஆயுஷ: கண்ட மாதாய-ரவி ரஸ்தங் கமிஷ்யதி" என்னும் வடநூன் மேற்கோளும் இங்குக் கவனிக்கத்தக்கது. பலவகைப்பிறவிகளுள்ளும் அரியதாகப்பெற்ற மக்கட் பிறப்புக்குப் பயன் அருள்கொண்டு அறஞ்செய்து உறுதிபெறுதலே யாதலால், 'ஆற்ற அறஞ்செய்து அருளுடையீராகுமின் யாரும், பிறந்தும் பிறவாதாரில்' என்றார். "அறனும் அருளுடையான் கண்ணதே யாகும்," "அருளிலார்க்கு அவ்வுலக மில்லை" என்பவாதலால், 'அருளுடையீராகுமின்' என அறத்திற்குக் காரணமான அருள் எடுத்துக் கூறப்பட்டது.

'யாரும் பிறந்தும் பிறவாதாரில்' என்றது-அருளுடையராய் அறஞ்செய்யாதவர் அடைதற்கு அரிய மானிட சன்மத்தை அடைந்திருந்தும்

அதன் பயன் பெருமையால் அதனை அடையாதவராகவே எண்ணப்படுவ ரென்றபடி. அவர்கள் பகுத்தறிவின்மையால் விலங்கோ டொப்ப ரென்ற கருத்தும் இதில் அமையும். 'தோற்றஞ்சால்' என்பதற்கு-"தோற் றஞ்சால் தொகுபொருள் "' என்னுங் கலத்தொகையிற்போல 'விளக்க மமைந்த' எனவுமாம். 'இறவாதாரில்' எனவும் பாடங்கொள்வர். 'ஞாயிறு காழியா' என்றும், 'உண்ணும்' என்றுங் கூறியதற்கு ஏற்ப, நாள்களாகிய தானியங்களை என்றதை-**ஏகதேசவுருவகவணி.** உண்ணும் - கழிப்பான் என்றபடி.

தோற்றம்-தோன்றுதல்: தொழிற்பெயர்; தோன்று-பகுதி, அம்-விகுதி, வலித்தல்-விகாரம். சால்-உரிசசொல். வைகலும், உம்மை-தொகுப்பொருளது.

பிறவாதாரில், இல்-ஐந்தனுருபு-ஒப்புப்பொருளது; இது - **ஒப்பில் போலி.** 'ஆவர்' என வினைமுற்று வருவிக்க. எழனுருபாகக்கொண்டு, பிறவா தாரில் (வைத்து எண்ணப்படுவர்) என்றுமாம். இனி, உண்ணும் என்பத னோடு கூட்டி, எவரும் பிறந்தும் பிறவாதவர்போலாம்படி [இறக்கும்படி] கூற்றம் நாள் உண்ணும் என்று உரைப்பாரு முளர். உண்ணும்-செய்யு மென்முற்று, நிகழ்கால முணர்த்திற்று. அறம்-செய்யத்தக்கது என நூல்களால் வரையறுக்கப்பட்டது என்று பொருள்படுங்காரணக்குறி; அறு-பகுதி, அம்-செயப்படுபொருள்விகுதி; [இதன் எதிர்மொழி-மறம்; அதருமம்: செய்யத்தகாதது என நூல்களால் மறுக்கப்பட்டது என அதற்குக் காரணப்பொருள் காண்க.] 'அறஞ்செய்து அருளுடையீ ராகுமின்' என்றதை, அருளுடையீராகி அறஞ்செய்மின் என விகுதி பிரித்துக கூட்டுதலும் ஒன்று. (எ)

அ. செல்வர்யா மென்றுதாஞ் செல்வழி யெண்ணுத
புல்லறி வாளர் பெருஞ்செல்வ—மெல்லிற்
கருங்கொண்மூ வாய்திறந்த மின்னுப்போற் றோன்றி
மருங்கறக் கெட்டு விடும்.

(இ-ள்.) செல்வர் யாம் என்று-(இப்பொழுது) செல்வமுடையோம் நாம் என்று எண்ணிக் களித்து [தம்மைத் தாமே மதித்து], தாம் செல் வழி-தாம் போகுமிடங்களில், எண்ணுத-(பிறரை) மதியாத, புல் அறி வாளர்-அற்பபுத்தியுடையவர்களது, பெருஞ்செல்வம்-மிக்கசெல்வமும்,— எல்லில்-இராத்திரியில், கருங் கொண்மூ-கருநிறமுடைய மேகம், வாய் திறந்த - வெளியிட்ட, மின்னுபோல் - மின்னல்போல, தோன்றி - (மிகச் சிறிது பொழுது) காணப்பட்டு நின்று, (உடனே), மருங்கு அற-இருந்த இடமுந் தெரியாமல், கெட்டுவிடும்-அழிந்துபோம்; (எ-று.)—**உவமையணி.**

இனி, 'தாம் செல்வழியெண்ணுத' என்பதற்கு - மற்றுமையில் தாம் செல்லுங் கதியை ஆலோசியாத என்று மாம். செல்வர்யாம்-தன்மை யிற் படர்க்கை வந்த இடவழுவமைதி. செல்+உழி=செல்வுழி: வகர மெய் - உடம்படுமெய்யல்லாத மெய்; 'மெய்யீற்றுடம்படு மெய்' என்பர் நச்சினார்க்கினியர். மேல் இக-ஆஞ்செய்யுளில் 'தெய்விடத்து' என்பதிலுள்ள

வகரமும் இது. கரிய இருளையுடைய இரவிலே ஒளி மிக்குவிளங்குத லால், 'எல்லில் தோன்றுகிற மின்' என்றார். கொண்மூ - நீரைக்கொள் வதென்னும் பொருளில் வந்த காரணப்பெயர் போலும். பார்வைக்கு வாயைத் திறந்து விடுவதுபோலக் காணப்படுதலால், 'வாய்திறந்த மின்' என்றது. மின் - செல்வத்துக்குத் தொழிலுவமை ; உ-சாரியை. கெட்டு விடும், விடு - துணிவுப் பொருளுணர்த்தும். (அ)

கூ. உண்ணு ணெளிநிரு ணேங்கு புகழ்செய்யான்
றுன்னருங் கேளிர் துயர்களையான்—கொன்னே
வழங்கான் பொருள்காத் திருப்பானேல் அஆ
விழந்தானென் றெண்ணப் படும்.

(இ - ள்.) (ஒருவன்), உண்ணுன் - (தானும்) அனுபவியான்; ஒளி நிருன் - மதிப்பையும் நிலைபெறச் செய்யான்; ஓங்கு புகழ் செய்யான் - மேம்பட்ட கீர்த்தியையும் சம்பாதியான்; துன் அருங் கேளிர் துயர் களை யான் - சேர்தற்கு அரிய உறவினரது துன்பத்தையும் போக்கான் ; கொன்னே வழங்கான் - கைம்மாறுகருதாமல் தானமுஞ் செய்யான் ; (இவ்வாறு இருந்து), பொருள் காத்துஇருப்பான் எல் - செல்வத்தைக் காவல்செய்து வைத்திருப்பானேனும், (அவன்), அ ஆ-ஐயோ ! இழந்தான் என்று எண்ணப்படும் - (அப்பொருளை) இழந்துவிட்டானென்றே (யாவ ராலும்) நினைக்கப்படுவான் ; (எ - று.)

பாடுபட்டுத் தேடிய செல்வத்தைத் தானும் அனுபவியாமல் நல்விஷ யத்திலும் உபயோகப்படுத்தாமற் போனால் அது இழக்கப்பட்டதற்குச் சமானமே என்பது கருத்து ; வைத்திருந்தும் பயனில்லை யென்றபடி.

பரிமேலழகர் "ஒதல் வேண்டு மொளிமாழ்குஞ் செய்வினை" என்ற திருக்குறளின் உரையில் 'ஒளி - தாம் உளகாலத்து எல்லாராலும் நன்கு மதிக்கப்படுதல்' என்றும், "ஒளி யொருவற்குள்ள வெறுக்கை" என்ற திருக்குறளின் உரையில் 'ஒளி-தான் உளையகாலத்து மிக்குத்தோன்றுத லுடைமை; "ஒளிநிரு ணேங்குபுகழ் செய்யான்" என்றார் பிறரும்' என் றும் உரைத்தவற்றை இங்கே உணர்க; 'ஒளியாவது-வெள்ளைமையின்மை' என்பர், தொல்காப்பியவுரையில் நச்சினார்க்கினியர். புகழ் - இம்மைப் பயனுய் இவ்வுலகத்தில் என்றும் அழியாமல் நிற்குங் கீர்த்தி; தாம் இறந் துழியும் தாம் நிகழ்த்தியவாறு உலகம் உயர்த்துக் கூற நிலைபெறுவது. "நிலவரை நீள்புக ழாற்றிற் புலவரைப், போற்றுதுபுத்தே ளுலகு" எனத் திருக்குறளிலும், "புலவர்பாடும் புகழுடையோர் விசும்பின், வலவனேவா வான ஊர்தி, யெய்துப வென்பதஞ் செய்வினை முடித்து" எனப் புற நானூற்றிலும் கூறியபடி, அது மறுமைக்குங் காரணமென்பது தோன்ற, 'ஓங்குபுகழ்' எனப்பட்டது.

நிருன், நில் என்பதன் பிறவினையாகிய நிறு - பகுதி. கேளிர் - (யோகக்ஷேமங்களைக்) கேட்பவர்; இர் - பலர்பால் விகுதி : 'மகளிர்' என் பதிற் போல. கொன்னே - பயனின்மைப்பொருள் தருவதோர் இடைச் சொல். இதனை, 'காத்திருப்பான்' என்பதனுடனுகூட்டி, வீணுகச் செல்வ த்தைப் பாதுகாத்து வைத்திருப்பானென்று பொருள் கொள்ளினும்

அமையும். அ ஆ - இரக்கக்குறிப்பிடைச் சொல். எண்ணப்படும்-செய்யுமென் முற்று, ஆண்பால். முன்னிரண்டடி - **இனவெதுகை.**

அ ஆ என்பது விட்டிசைத்ததனால், தனிக்குறில் முதலில் நேரசையாயிற்று; ஆகவே, தேமாச்சீராய்த் தளைக்கு இயையும். "விட்டிசைத்தல்லால் முதற்கண் தனிக்குறில் நேரசையென்று, ஒட்டப்படாது அதற்கு 'உண்ணுண்' உதாரணம்" என்ற யாப்பருங்கலக்காரிகையையும், 'இதனுள் 'அ ஆ' என்புழி அருளின்கண் குறிப்பாய் மொழிமுதற்கண் நின்ற குற்றெழுத்து விட்டிசைத்து நேரசையாயினவாறும், அல்லாதவழிக் குறில் நெடிலோடுங்கூடி நிரையசையாயின வாறுங் கண்டுகொள்க' என்ற அதன் உரையையும் உணர்க. (கூ)

கo. உடாஅது முண்ணுதுந் தம்முடம்பு செற்றுங்
கெடாஅத நல்லறமுஞ் செய்யார்—கொடாஅது
வைத்தீட்டி ஞரிழப்பர் வான்றோய் மலைநாட
வுய்த்தீட்டுந் தேனீக் கரி.

(இ - ள்.) வான் தோய் மலை நாட-ஆகாயத்தை யளாவியுயர்ந்த மலைகளையுடைய (பாண்டிய) நாட்டின் அரசனே!—உடாதும் - (நல்ல உடுப்புக்களை) உடுக்காமலும், உண்ணுதும் - (நல்ல உணவுகளை) உண்ணுமலும், தம் உடம்பு செற்றும்-தமது உடம்பை வருத்தியும், கெடாத நல் அறமும் செய்யார் - (எந்நாளும்) பயனழியாத நல்ல தருமங்களையுஞ் செய்யாமலும், கொடாது - (ஏழைகட்குக்) கொடாமலும், வைத்து - (செல்வத்தைக் காவல்செய்து) வைத்து, ஈட்டினர் - (மேன் மேலும்) சம்பாதித்தவர்கள், இழப்பர் - (அச்செல்வத்தை ஒரு காலத்தில்) இழந்தே விடுவார்கள்; (அவ்வாறு இழப்பதற்கு),—உய்த்து ஈட்டும் தேனீ - (பல பூக்களினின்று தேனைக்) கொண்டுபோய் வைத்து (மேன்மேலுஞ்) சேர்க்கிற தேனீக்கள், கரி - சாக்ஷியாம்; (எ - று.)

தேனீக்கள் பலநாளாகச் சிறிதுசிறிதாகச் சேர்த்துவைத்த தேனை ஒரு நாளிற் பிறனொருவன் கொண்டு போவதுபோல, ஒருவன் பலகாலமாகச் சேர்த்துவைத்த செல்வத்தை ஒருகாலத்தில் கள்ளர் முதலியோர் கொண்டுபோவ ரென்று கருத்து; **உவமையணி.** "ஈயார் தேட்டைத் தீயார்கொள்வர்" என்ற ஔவையார் அமுதமொழி, **இரட்டுறமொழிதலால்,** கொடாதலோபிகளது செல்வத்தைக் கொடியோர் கைப்பற்றுவர் என உபமேயமாகவும், ஈக்கள் தேடிவைத்த தேனைத் தீக்கோலையுடைய வேடர் கவர்வர் என உபமானமாகவும் ஒன்றே இருபொருள்பட்டு இப்பாட்டின் கருத்தை விளக்குதல் காண்க.

'மலைநாட' என்றதனால், தேனீயை எடுத்துக்கூறினர். வான்றோய் மலைநாட-**ஆடூஉமுன்னிலை.** ஆடூஉமுன்னிலையாவது-புருஷனை முன்னிலைப்படுத்திக்கூறுவது; [இவ்வாறு **மகடூஉமுன்னிலை**யும் உண்டு: அது-பெண்ணை முன்னிலைப்படுத்துவது.] இந்த நாலடியாரின் பாடல்கள் சமணமுனிவர்களாற்பாண்டியநாட்டிற்பாடப்பட்டனவாதலால், இவற்றில்வருகிற ஆடூஉமுன்னிலைகள் பாண்டியராசனைக் குறித்தனவென்னலாம். மருதநிலமா

கிய அந்நாட்டை அடுத்துள்ள குறிஞ்சிநிலத்தின் மாட்சியைக் கூறுவார், 'வான்தோய் மலைநாட' என்றார். "இருபுனலும் **வாய்ந்த மலையும்** வருபுனலும், வல்லரணும் நாட்டிற்கு உறுப்பு" என்ற திருக்குறளினாலும், 'இடையதன்றி ஒருபுடையதாதலும் தன்வளந்தருதலும் மாரிக்கண் உண்டநீர் கோடைக்கண் உமிழ்தலும் உடைமைபற்றி, வாய்ந்த மலையென்றார்' என்ற அதன் உரையாலும், மலை, நாட்டிற்கு அவயவமாதலும், நிலவளத்துக்கு இன்றியமையாத நீர்வளத்துக்குக் காரணமாதலும் காண்க.

செற்று, செறு-முதனிலை. வான் தோய் மலை - மேகம்படியப்பெற்ற மலையெனினுமாம். கெடாஅத என்பதனைப் பிறவினையாகக்கொண்டு, (தன்னை விரும்பிச்செய்தவர்களைத் தான்) கெடுக்காத நன்மையையுடைய அறமென்னவுமாம்.

அளபெடைகள் மூன்றும், செய்யுளிசை நிறைக்கவந்தவை. அளபெடைகள் அடுத்துவந்தது, **அளபுத்தொடையாம்.** (கo).

உ - ஆம் அதிகாரம்.—இளமைநிலையாமை.

அஃதாவது - இளமைப்பருவத்தினது நிலையில்லாமையை உணர்த்துவது. இங்கே, இளமை யென்றது - யௌவனம்; அது - பதினாறுபிராயத்துக்குமேல் முப்பத்திரண்டு பிராயத்துக்குள் சிற்றின்ப விஷயங்களில் மயங்குகின்ற காலப்பருவம். புல்லறிவுடையார் பெரும்பான்மையும் முறையேபற்றுச்செய்வது சிற்றின்பத்திற்கு ஏதுவாகிய செல்வத்தினிடத்தும், அதனை அனுபவித்தற்கு உரிய இளமையினிடத்தும், அப்பருவத்திற்கு இடமாகிய உடம்பினிடத்துமே யாதலால், அம்முறையே, இந்த இளமைநிலையாமை-செல்வநிலையாமையின்பின் வைக்கப்பட்டது. திருவள்ளுவனாரும் நிலையாமையென்னும் அதிகாரத்துள் இம்முறை தோன்றக் கூறியவாறும் காண்க. இளமை - பண்புப்பெயர்.

கக. நரைவரு மென்றெண்ணி நல்லறி வாளர்
குழவி யிடத்தே துறந்தார்—புரைதீரா
மன்னு விளமை மகிழ்ந்தாரே கோலூன்றி
யின்னுங் கெழுந்திருப் பார்.

(இ - ள்.) நரை வரும் என்று - முதுமைப்பருவம் வரு மென்று, எண்ணி-நினைத்து; குழவியிடத்தே-இளமைப்பருவத்திலேயே, துறந்தார்-(பற்றுக்களை) விட்டவர்கள், நல் அறிவாளர் - குற்றமற்றவிவேகமுடையவராவர்; புரை தீரா - (காமவெகுளிமயக்கங்களாகிய) குற்றங்கள் நீங்காத, மன்னு - நிலைபெறுத, இளமை - இளமைப்பருவத்தில், மகிழ்ந்தாரே-(சிற்றின்பத்தை அனுபவித்தலாற்) களித்த நல்லறிவில்லாதவர்களே, கோல் ஊன்றி-(நடத்தற்கு ஆதரவாகத்) தடியை ஊன்றிக்கொண்டு, இன்னுங்கு-துன்பத்துடன், எழுந்திருப்பார் - எழுவார்கள்; (எ - று.)

இளமையில் துறந்தவர்களே பின்பு பேரின்பமனுபவிப்பர்; சிற்றின்பத்தை விரும்பித் துறவாதவர்களே பலநாள் துன்பமனுபவிப்பர் என்பதாம். எண்ணி - துறத்தலாலுண்டாகும் பெரும் பயன்களையும், துறவாமையாலுண்டாகும் இடர்களையும் சீர்தூக்கியாலோசித்து என்னவுமாம். இளமைப்பருவத்தே துறத்தற்கு ஏதுவாயினமைபற்றி 'நல்லறிவு' என்றும், அங்ஙனம் அருமையாகப்பெற்ற நல்லறிவைத் தக்கவழியிற் பயன்படுத்துதல் பற்றி 'நல்லறிவாளர்' என்றும் கூறினர். தாமாகவேஎழுந்திருக்கமாட்டாமையேயன்றிக் கோலூன்றிக்கொண்டும் எழுந்திருக்க வருந்துவரென்பது, அவரது வலிமை யின்மையை கன்கு விளக்கும்.

நரை - மயிர்வெளுத்தல்; அதற்குக் காரணமான மூப்புக்கு இங்கு ஆகுபெயர். எகாரமிரண்டும் - பிரிநிலை. குழ - இளமைப்பொருள் தரும் உரிச்சொல்; இங்கு, இ - பகுதிப்பொருள்விகுதி; "உருளி மாமதி" என்ற சிந்தாமணியிற் போல. தீரா, மன்ஞ என்ற எதிர்மறைப் பெயரெச்சங்கள் - அடுக்கி 'இளமை' என்னும் பெயரோடு முடிந்தன; "மூவா முதலா வுலகம்" என்ற சிந்தாமணியிற் போல. இன்னுங்கு - ஒருசொல்; 'பட்டாங்கு' என்பது போல. எழுந்திருப்பார்-ஒருசொல்: இரு-துணைவினை: இனி, எழுந்து இருப்பார் எனப் பதம்பிரித்து, எழுந்து (நிற்கவும்மாட்டாது மீண்டும்) இருப்பர் என்றலும் ஒன்று.

முதலிரண்டடியில் **இனவெதுகை** காண்க; அடித்தசெய்யுளிலும்இது. (க)

கூ. நட்புநா ரற்றன நல்லாரு மஃகினர்
ற்புத் தளையு மவிழ்ந்தன—வுட்காணாய்
வாழ்தலி னூதிய மென்னுண்டாம் வந்தசே
யாழ்கலத் தன்ன கலுழ்.

(இ - ள்.) நட்பு - சினேகங்களாகிய, நார் - பாசங்கள், அற்றன - (உனது நண்பர்க்கு உன்னிடத்து) அற்றுப்போயின; நல்லாரும்-(இளமையில் உன்பக்கல் அன்புகொண்ட) மாதர்களும், அஃகினர் - (அன்பு) குறைந்தார்கள்; அன்பு தளையும் - அன்புகளாகிய கட்டுக்களும், அவிழ்ந்தன - (உன்சுற்றத்தார்க்கு உன்னிடத்தில்) தளர்ந்துபோயின; உள்காணாய் - மனத்தில் ஊன்றிஆலோசித்துப்பார்; வாழ்தலின் - (இளமையைப் பொருளென மதித்துமகிழ்ந்து) வாழ்ந்ததனால், ஊதியம் என் உண்டாம் - என்னபயன் உண்டாயிற்று?. ஆழ் கலத்து அன்ன- (கடலில்) மூழ்குகின்ற மரக்கலத்திலுள்ளவர்க்கு வந்தது போன்ற, கலுழ்-துன்பம், வந்தசே - (இப்பொழுது) வந்துவிட்டதே! (எ - று.)

இச்செய்யுள்-இளமைப்பருவத்திற் சிற்றின்பத்தையே விரும்பி அனுபவித்து வலிமைகுன்றி விரைவிலே முதுமையடைந்த ஒருவனை நோக்கி, அவ்விளமையை மகிழ்ந்ததனாலுண்டான தீமைகளை எடுத்துச்சொன்னதாகச் செய்யப்பட்ட தென்க. முன்னிரண்டடியில் • **உருவகவணி**யும், ஈற்றடியில் **உவமையணி**யுங் காண்க.

நண்பரும் உறவினரும் பலராதல்பற்றி, நட்பும் அற்புத்தளையும் பலவாயின. நட்பு, தளை என்பன - பால்பகாஅஃறிணைப்பெய ராதலால், 'அற்றன' 'அவிழ்ந்தன' என்னும்பன்மைவினையைக்கொண்டன. நட்பு-தொழிற்

பெயர். உம்மைகள் - எச்சப்பொருளன. ஏகாரம் - இரக்கம். அற்புத்தளை - பாசபந்த மெனப்படும். வாழ்தலின், இன் - ஐந்தனுருபு, ஏதுப் பொருளது. என் - எவன் என்ற வினாப்பெயரின் விகாரம்; இது, அஃறிணையிருபாற்கும் பொது. "நல்லா, ளுடன்படிற் ருனே பெருகும்" என்றபடி நல்லாள் என்று இலக்குமிக்குப் பெயராதலால், நல்லார் என்பது - பெரும்பாலும் மகளிரை உணர்த்தும். அற்புத்தளை = அன்பு + தளை; அல்வழியில் மென்றொடர் தன்னினவன்றொடராயிற்று. கலம் - அதிலுள்ளவர்களுக்கு இடவாகுபெயர். ஆழ்கலம் - வினைத்தொகை. கலுழ-கலுழ்ச்சி; முதனிலைத் தொழிற்பெயர்; கலக்கம், புலம்பல். ஆம் - அசை.

"காற்றத் திடைப்பட்ட கலவர் மனம்போல, ஆற்றத் துளங்காநிற்ப ளிவலவா" எனப் **பெரியதிருமொழி**யிலும், "பண்ணூர் களிறேபோற்பா யோங்குயர்நாவாய், கண்ணூர் கடன்மண்டிக் காற்றிற் கலிழுங்கால், மண்ணூர் மணிப்பூணெய் மக்களுநுந் துன்பம், நண்ணூ ரகத்தின் நான்கா மடியன்றே" எனச் **சிந்தாமணி**யிலும், பிற நூல்களிலும், கலம்கவிழ்ந்தமக்கள் படுந்துன்பமேமிக்கபெருந்துன்பத்துக்கு எடுத்துக்காட்டப்படுதல்காண்க. 'ஆழ்கலத்தன்னகலி' என்று பாடமோதுவாரும் உளர்: கலி-துன்பம். (உ)

கஉ. சொற்றளர்ந்து கோலூன்றிச் சோர்ந்த நடையினராய்ப்
பற்கழன்று பண்டம் பழிகாறு—மிற்செறிந்து
காம நெறிபடரும் கண்ணினர்க் கில்லையே
யேம நெறிபடரு மாறு.

(இ - ள்.) சொல் தளர்ந்து - சொற்கள் தளர்ச்சியடையப் பெற்று, கோல் ஊன்றி - தடியை ஊன்றிக்கொண்டு, சோர்ந்த நடையினர் ஆய் - தளர்ந்த நடையை யுடையவர்களாய், பல் கழன்று - பற்கள் விழுந்து போய், பண்டம் - இவ்வுடலாகிய பொருள், பழி காறும் - (கண்டவர் யாவராலும்) பழிக்கப்படுமளவும் [மூப்புமுதிரு மளவும்], இல் செறிந்து - இல்வாழ்க்கையிலேயே பொருந்தி, காமம் நெறி - ஆசையின்வழியிலே, படரும் - செல்லுகின்ற, கண்ணினர்க்கு - நோக்கத்தை யுடையவர் கட்கு,—ஏமம் நெறி - பேரின்பத்தைத் தருகின்ற முத்திமார்க்கத்தில், படரும் ஆறு - செல்லும் விதம், இல்லையே - உண்டாகாதே; (எ - று.)

வாழ்நாளுள்ள மட்டும் சிற்றின்பத்தையே அனுபவித்துக்கொண்டு துறவாதவர் நற்கதி பெறுவது அரிய தென்பது கருத்து. ஏமம்நெறி - தமது உயிர்க்கு அரணுகிய நல்நெறி; வினைகளைப் போக்கிக் கூற்றத்தினின்று தப்புவித்து முத்திபெறுவிக்குந் துறவொழுக்கம். இனி, நடை என்பதற்கு - மலசலங்களென்பது, ஒருசை; சோர்ந்த நடையினர் ஆய் - தம்மையும் அறியாமல் உடலிலிருந்து வெளிவருகிற மலசலங்களையுடையராய் என்க. மலசலங்கள் இயக்கமெனப்படுதலும் காண்க: "இயக்க மிரண்டு" என்பது, ஆசாரக்கோவை.

இல் - இல்லற்வாழ்க்கைக்கு ஆகுபெயர். பண்டமென்னுஞ் சொல், உடம்பின் இழிவு தோன்ற நின்றது. பழிகாறும் - பழிக்கப்படுமளவும்: செயப்பாட்டு வினைப்பொருளில்வந்த செய்வினை. காறு - எல்லைகுறிப்பதோர் இடைச்சொல். தளர்ந்து, கழன்று என்னுஞ் சினைவினைகள்-முதலின்மேல் நின்றன. ஏகாரம் - தேற்றத்தோடு இரக்கம். (உ)

கச. தாழாத் தளராத் தலைநடுங்காத் தண்டேன்றூ
வீழா விறக்கு மிவண்மாட்டுங்—காழிலா
மம்மர்கொண் மாந்தர்க் கணங்காருந் தன்கைக்கோ
லம்மனைக்கோ லாகிய ஞான்று.

(இ - ள்.) தாழா - (உடம்பு) கூனடைந்தும், தளரா - மெலிந்தும், தலைநடுங்கா - தலைநடுங்கியும், தண்டு ஊன்றூ - தடியை ஊன்றியும், வீழா - கீழே விழுந்தும், இறக்கும் - மரணவேதனைப்படுகின்ற, இவள்மாட்டும் - இவளிடத்தும், காழ் இலா மம்மர் கொள் - மனவுறுதியில்லாமற் காம மயக்கத்தைக் கொண்ட, மாந்தர்க்கு - மனிதர்கட்கு,—(இவள்),—தன் கை கோல் - (இப்பொழுது) தனது கையில் (ஊன்றுதற்குப் பிடிக்கப் பட்ட) கொம்பு, அம்மனை கோல் ஆகிய ஞான்று - தன்தாய்க்கு ஊன்று கோலாயிருந்தகாலத்தில் [தான் இளமைப்பருவ முடையளாயிருந்த பொழுது], அணங்கு ஆகும் - மோகினியென்னுந் தெய்வப்பெண்ணையிருந் திருப்பள் ; (எ - று.)

இச்செய்யுள் பெண்களின் இளமையைக் கண்டு விரும்புவோர்க்கு இறந்துபடும் நிலையிலிருக்கும் முதியளொருத்தியைச் சுட்டிக்காட்டி 'இவள், இளமைப்பருவத்திலே காமுகர்க்கு மேன்மேல்ஆசையை மூட்டத்தக்க கட்டழகுடையளா யிருந்தவள் : இப்பொழுது இவ்வாறுயினாள்' என்று இளமைநிலையாமையை உணர்த்துவதாகச் செய்யப்பட்டதென அறிக. இனி, '(இவள்), அம்மனைக்கோல் தன்கைக்கோலாகிய காலத்தில் [முதுமையடையும்பொழுது] தாழ்ந்து தளர்ந்து தலைநடுங்கித் தண்டேன்றி வீழ்ந்து இறப்பள் ; இவளிடத்தும் நெஞ்சுறுதியில்லாத பேதைமை கொண்ட மனிதர்க்கு ஆசை உண்டாகின்றது ; (இது என்ன உலகியற்கை !)' என்று இகழ்ந்ததாகப் பொருள் கூறுதலும் ஒன்று. 'தன்கைக்கோ லம்மனைக்கோலாகிய ஞான்று' என்றது - **பிறிதினவிற் சியணி**. முதலடி - **முற்றுமோனை**.

தண்டு - தண்டமென்னும் வடமொழியின் விகாரம். மாந்தர் - பன்மையிலேயே வரும் பெயர் : (வடமொழியாளர் நித்தியபகுவசனமென்ப : இது எப்பொழுதும் பன்மையிலேயே வரும் என்பதை "**ஆண்மையறித்த**" என்ற தொல்காப்பியச் சூத்திரத்து "மாந்தர் மக்களென்னும் பெயரும்,...அப்பதினைந்து மவற்றோரன்ன" என்று வருவதன் பொருளை யாராய்தலால் தெளியலாம் : இங்ஙனிருக்க, ஒருசாரார் 'மாந்தன்' என ஒருமையில் வருமென்று சாதிப்பாராயினர். 'மாந்தர்' என்ற சொல்லின் ஆற்றலால், மந்தபுத்தியுடையாரென்பது தோன்றும். 'அணங்கு- காமநெறியான் உயிர்கொள்ளுந் தெய்வமகள்' என்பர், பரிமேலழகர் ; இச்சொல்லுக்கு - தேவமாது என்றும், திருமகள் என்றும் பொருளுண்டு. 'அணங்கு ஆகும்' என்பதற்கு - இவள் திருத்தஞ்செய்தவளாவள் என்றலு மொன்று. விறக்கும் எனப் பிரித்து, வெருவும் என்று பொருளுரைப்பாரு முளர் ; "விறப்பே வெரூஉப் பொருட்டு மாகும்" என்பது தொல்காப்பிய வுரிச்சொல்லியற் சூத்திரமாதலால்.

தாழா, தளரா, நடுங்கா, ஊன்றூ, வீழா - உடன்பாட்டெச்சங்கள் ; உம்-இழிவு சிறப்பு. 'அம்மனைக் கோல்'-"சிலவிகாரமாமுயர்திணை." (ச)

கடு. எனக்குத்தா யாகியா ளென்னையீங் கிட்டுத்
தனக்குத்தாய் நாடியே சென்ரு—டனக்குத்தா
யாகி யவளு மதுவானுற் ரூய்த்தாய்க்கொண்
டேகு மளித்திவ் வுலகு.

(இ - ள்) எனக்கு தாய் ஆகியாள்-எனக்குத் தாயாயிருந்தவள், என்னை—, ஈங்கு இட்டு-இவ்விடத்தில் பெற்றுவைத்திட்டு, தனக்கு—, தாய் நாடியே-ஒரு தாயைத் தேடிக்கொண்டே, சென்ரூள் - இறந்து போனாள்; தனக்கு தாய் ஆகியவளும்-அவளுக்குத் தாயாயிருந்தவளும், அது ஆலை-அவ்வாறே போனாலாதலால்,—இ உலகு-இவ்வுலகத்துப் பிராணிவர்க்கமெல்லாம், தாய் தாய்கொண்டு-தாயைத் தேடிக்கொண்டே, ஏகும்-செல்லுகின்ற, அளித்து-எளிமையையுடையது; (எ-று.)

தனக்குத் தாய்நாடிச்சென்ரூளென்றது-இறந்து மற்ரொருத்தியின் வயிற்றிற் புகுந்திட்டா ளென்றபடி. உலகத்திற் பிறந்த மனிதர்கள் யாவரும் இளமைகழிந்து முதுமையடைந்து இறக்குந்தன்மையை யுடையவரென்று இளமைநிலையாமையைத் திருஷ்டாந்தங்கொண்டு விளக்கிய படி.

தாய்க்கொண்டு என்பதில், தாய்-தாவு என்பத னடியாப்பிறந்த இறந்தகாலவினையெச்சம். அளித்து - ஒன்றன்பாற்குறிப்புமுற்று; து - விகுதி.

இப்பாட்டு, யாக்கைநிலையாமைக்கு இனிது பொருந்துவதாயினும், அதிகாரச்செய்யுள்தொகை நிரப்புதற்கு இங்கு வைக்கப்பட்டது; இளமையிலும் மரணம் நேருமென்ற சம்பந்தம்பற்றியுமாம். (ம)

கசு. வெறியயர் வெங்களத்து வேன்மகன் பாணி
முறியார் நறுங்கண்ணி முன்னர்த் தயங்க
மறிகுள குண்டன்ன மன்னு மகிழ்ச்சி
யறிவுடை யாளர்க ணில்.

(இ-ள்) வெறி அயர்-ஆவேசங்கொண்டு ஆடுகின்ற, வெம்-கொடிய, களத்து-பலியிடுமிடத்திலே, வேல் மகன்-வேலையுடைய அவ்வாவேசமாடுபவனது, பாணி-கையிலுள்ள, முறி ஆர் நறுங் கண்ணி-தளிர்கள் இடையிடையே பொருந்திய வாசனைவீசுகின்ற பூமாலை, முன்னர்-(தனக்கு) எதிரில், தயங்க-விளங்க, மறி-(அங்கே பலியிடுதற்குக் கொண்டுவந்து நிறுத்தப்பட்ட) ஆடானது, குளகு உண்டு அன்ன-(அம்மாலையிலுள்ள தளிரை) இரையாக எண்ணி உண்டு அடைகின்ற மகிழ்ச்சிபோன்ற, மன்னுமகிழ்ச்சி-நிலையில்லாதமகிழ்ச்சி, அறிவுடையாளர்கண்-உண்மையறிவுடையவரிடத்தில், இல்-உண்டாகாது [அவர் இளமையிலே துறப்பர் என்றபடி]; (எ-று.)

மிகவிரைவில் அழியுந்தன்மையதான இளமைபைக் கண்டு மகிழ்வது, உடனே தன்னைவெட்டுதற்பொருட்டு வாள்பிடித்து நிற்கிற வேலனது கையிலுள்ள மாலையிற் பொருந்திய தளிரைத்தின்று பேதைமை

யுடைய ஆடு மகிழ்வதற்குச் சமான மென்றபடி; **உவமையணி.** சிறிது பொழுதில் துன்பமாய் முடியுமென்பதாம்.

குறிஞ்சிநிலமாக்கள் அந்நிலத்தெய்வமான முருகக்கடவுளுக்குப் பிரார்த்தனைசெலுத்தும் நிமித்தமாக மறியறித்துப் பலியிட்டாடுதல் மரபு. முருகக்கடவுளது வேலைத் தனக்கு அடையாளமாக ஏந்திக்கொண்டு நிற்றலால், 'வேல்மகன்' என்றார்; வேலனென்றும், வெறியாட்டாளனென்றும் பெயர்களுண்டு. முறியார்நறுங்கண்ணி—"புலராப் பச்சிலை யிடையிடுபு தொடுத்த, மலரா மாலை" என்றார் பிறரும். முன்னர்-இங்கே, இடமுன். குளகு-இலைமேயும் விலங்கின் உணவு; "இலைதழைகர்விலங்குணவே குளகென வியம்பலாகும்" என்பது நிகண்டு. உண்டன்ன-உண்டாலன்ன அல்லது உண்டதன்ன என்பதன் விகாரம். (சு)

களை. பனிபடு சோலைப் பயன்மர மெல்லாங்
கனியுதிர்ந்து வீழ்ந்தற் றிளமை—நனிபெரிதும்
வேற்கண்ணை யென்றிவளை வெஃகன்மின் மற்றிவளுங்
கோற்கண்ணை யாகுங் குனிந்து.

(இ-ள்.) இளமை-இளமைப்பருவமானது,—பனி படு சோலை-குளிர்ச்சி பொருந்திய சோலையிலுள்ள, பயன் மரம் எல்லாம்-பலன்படுகிற மரங்களெல்லாம், கனி உதிர்ந்து வீழ்ந்தற்று-பழங்களுதிர்ந்து விழப் பெற்றுற்போன்ற நிலையில்லாத தன்மையை யுடையது; (ஆதலால்), வேல் கண்ணினள் என்று-(இப்பொழுது) வேல்போற் கூர்மையான கண்களை யுடையளென்று எண்ணி, இவளை-இம்மங்கையை, நனி பெரிதும்-மிகவும் அதிகமாக, வெஃகன்மின்-விரும்பாதீர்கள்; இவளும்—, மற்று-பின்பு, குனிந்து-உடம்பு கூனடைந்து, கோல் கண்ணினள் ஆகும்-(வழிதெரிந்து நடப்பதற்கு) ஊன்று கோலையே கண்ணுகை உடையவளாவள்; (எ-று.)

யாவரும் விரும்பும்படி சோலையிற் பழங்களோடு கூடியிருந்த மரம் அப்பழங்களுதிர்ந்தபின்பு விரும்பத்தகாத தாதல்போல, யாவரும்விரும்பத்தக்க இளமை அழிந்த பின்பு உடம்பு விரும்பத்தகாததா மென்றபடி; **உவமையணி.**

இச்செய்யுள்-மகளிரது இளமையழகைக் கண்டு பேரன்புகொண்டு நிற்பவரை நோக்கிச் சொல்லியதென அறிக.

வீழ்ந்து=வீழ்ந்தால்: எச்சத்திரிபு: வீழ்ந்தது என்பதன் விகாரமுமாம். நனி பெரிதும்-ஒருபொருட்பன்மொழி. 'வேற்கண்ணள்'என, எல்லாவுறுப்புக்களுள்ளுஞ் சிறந்த கண்களின் அழகை எடுத்துக்கூறியது, மற்றை அவயவங்களின் அழகுக்கும் உபலக்ஷணம். வெஃகன்மின்-எதிர்மறை யேவற்பன்மை. 'கோற்கண்ணள் ஆகும்' என்றது, முதுமையிற் கண்கெட்டு ஊன்றுகோலையே ஆதாரமாகக்கொண்டு தட்டித்தட்டி வழிதெரிந்துநடப்பளென்றபடி. "கோற்க ணெறிகாட்டக் கொல்கூற்றுழையதா" என்றார் **வாயாபதியிலும்.** இவளும், உம்-உயர்வுசிறப்பு. மற்று-வினைமாற்றுமாம்.

மிக்கமுதுமையடைவளென்ற பொருளில் 'கோற்கண்ணளாகும்' என்றது, **பிறிதினவிற்சியணி.** (எ)

கஅ. பருவ மெனைத்துள பல்லின்பா லேனை
யிருசிகையு மூண்டீரோ வென்று—வரிசையா
லுண்ணுட்டங் கொள்ளப் படுதலால் யாக்கைக்கோ
ளெண்ணு ரறிவுடை யார்.

(இ - ள்.) 'பருவம்-பிராயம், எனைத்து உள-எவ்வளவு ஆகியுள்ளன? பல்லின் பால் - பல்லினுடைய குணங்கள், எனை - எத்தன்மையன? இருசிகைஉம் - இரண்டுவேளைக் கவளங்களையும், உண்டீரோ- புசித்துவருகின்றீர்களா?' என்று—, வரிசையால்-முறைமையாக, உள் நாட்டம் கொள்ளப் படுதலால்-மனத்தில் ஆராய்ந்து (பலரும்) விசாரிக்கக் கூடியதா யிருப்பதனால், அறிவு உடையார்-நல்லறிவுடைய பெரியோர், யாக்கை கோள்-உடம்பின்குணமாகிய இளமையை, எண்ணார்-(ஒருபொருளாக) மதியார்;(எ-று.)

பல்லின் குணங்கள் - மென்றுதின்னுதலும், பேசுதற்கு உதவுதலும். எனைத்து = எத்தனைத்து: மரூஉ. விளவடியாப் பிறந்த எவனென்கிற அஃறிணைக்குறிப்புமுற்று, இடைகுறைந்து முதல்நீண்டுஐகாரச்சாரியையைபெற்று 'எனை' என நின்றது: எனைய என்பதன் விகார மெனினுமாம். 'இருசிகையு மூண்டீரோ' என்பதற்கு - இரண்டு கவளமாகிலும் புசித்தீர்களோ? என்று உரைப்பாருமுளர்: உங்கள் ஜீர்ணசக்தி ஒருகவளவுணவையே கொள்ளுமோ? என்பது கருத்து. ஓ - விளி. நாட்டம் - தொழிற்பெயர்; நாடு - பகுதி, அம் - விகுதி, டகரவொற்று - விரித்தல்விகாரம். (அ)

கக. மற்றறிவா நல்வினை யாமிளைய மென்னுது
கைத்துண்டாம் போழ்தே கரவா தறஞ்செய்மின்
முற்றி யிருந்த களியொழியத் தீவளியா
னற்கா யுதிர்தலு முண்டு.

(இ - ள்.) 'நல் வினை-தருமகாரியத்தை, மற்று அறிவாம் - பின்னல் அறிந்துசெய்வோம்: யாம் இளையம் - (இப்பொழுது) யாம் இளம்பிராயமுடையோமன்றே,' என்னாது-என்று எண்ணாமல், கைத்து உண்டாம் போழ்தே-கையிற் பொருள்கிடைக்கும் பொழுதே, கரவாது-ஒளித்துவைக்காமல் [லோபஞ்செய்யாமல்], அறம் செய்மின் - (ஈதல் முதலிய) தருமங்களைச் செய்யுங்கள்; (எனென்றால்),—முற்றி இருந்த கனி ஒழிய - முதிர்ந்துள்ள பழங்கள் மாத்திரமே யல்லாமல், தீ வளியால்-கடுங்காற்றினால், நல் காய் - நல்ல காய்கள், உதிர்தலும் - உதிர்ந்திடுதலும், உண்டு - உள்ளது; (எ - று.)

இளமையை நம்பவேண்டா வென்றபடி. பருவம்முதிர்ந்த கிழவர்கள் மாத்திரமேயன்றி உடம்புவலிய இளையவர்களும் இரக்கமில்லாத யமனால் இறத்தலுமுண்டு என்னும் பொருள்தோன்ற நின்றமையின், பின்னிரண்டடி - **பிறிதுமொழிதல்** என்னும் அலங்காரம்; வடநூலார் **'அப்ரஸ்துதப்ரசம்ஸா'** என்பர்: இது - முன்னிரண்டடியின் பொருளைச் சாதித்தலால், **செய்யுட்குறியணி**க்கு அங்கமாம்.

மற்றறிவாம் நல்வினை யென்பதில்-வினைந்து அறிவாம் என்கிற வினையைஒழித்து, விரையாமல் அறிவாம் என்கிற வினையைத் தருதலால், மற்று

-வினைமாற்றுப் பொருளது. 'விரையாமல்அறிவாம்' என்றது,பின்னர் முதுமையில் ஆராய்ந்துசெய்வோமென்றவாரும். நல்வினையைஅறிதற்குப்பயன் அதனைச்செய்தலே யாதலால், 'அறிவாம்' என்பதற்கு - அறிந்துசெய்வோமென்று பொருளுரைக்கப்பட்டது. போழ்தே, ஏ - தேற்றத்தோடு விரைவு. இளமைநிலையாமையோடு செல்வ நிலையாமையையும் வற்புறுத்துதற்கு, 'கைத்துண்டாம்போழ்தே' எனப்பட்டது. இளையம் - தன்மைப் பன்மைக் குறிப்பு முற்று; கைத்து-கையிடத்ததான பொருள்; ஒன்றன் பாற்குறிப்பு வினையாலணையும்பெயர்.

இச்செய்யுள் - **ஒருவிகற்ப இன்னிசைவெண்பா; இனவெதுகை** கொண்டது. (கூ)

உ0. ஆட்பார்த் துழலு மருளில்கூற் றுண்மையாற்
றோட்கோப்புக் காலத்தாற் கொண்டுய்ம்மின் — பீட்பிதுக்கிப்
பிள்ளையைத் தாயலறக் கோடலான் மற்றதன்
கள்ளங் கடைப்பிடித்த னன்று.

(இ - ள்) ஆள் பார்த்து - (ஆயுள்முடிந்த) ஆள்களைத் தவறுது பார்த்துக்கொண்டு, உழலும் - (உலகமெங்கும் தடையில்லாமல்) திரிகின்ற, அருள் இல் கூற்று-கருணையில்லாத யமன், உண்மையால்- இருத்தலினால், தோள்கோப்பு-நல்வினையாகிய கட்டுச்சோற்றுமூட்டையை, காலத்தான்-(தேடிக்கொள்ளுதற்கு உரிய) காலத்திலேயே [இளமையில்தானே], கொண்டு - தேடிக்கைக்கொண்டு, உய்ம்மின்-ஈடேறுங்கள்; பீள் பிதுக்கி-முதிராத கருப்பத்தைவெளிப்படுத்தி, பிள்ளையை - குழந்தையை, தாய் அலற-பெற்றவள் அழும்படி, கோடலால்-கொண்டுபோவதனால், அதன் - அந்த யமனது,கள்ளம்-வஞ்சனையை, கடைப்பிடித்தல்-மறவாமல் உறுதியாக அறிந்து தேர்தல், நன்று-(மிகவும்) நல்லது; (எ - று)—மற்று-அசை.

தோட்கோப்பு-தோளிற் கோக்கப்படுவது என, வழிப்பிரயாணத்துக்குக் கொண்டுபோவதாகிய கட்டுச்சோற்று மூட்டைக்குத் தொழிலாருபெயராகிய காரணக்குறி; அது-இங்கே, மறுமைவழிக்கு இன்றியமையாததான நல்வினையை உவமவாகுபெயரால் உணர்த்திற்று. ஆகவே, இருமடியாகுபெயர். "இறுகிறுகத் தோட்கோப்புக் கொள்ளார்" என மேற் புல்லறிவாண்மை யென்னும் அதிகாரத்தில் வருவதுங் காண்க. "வேற்றுவரில்லா நுமரூர்க்கே செல்லினும் வெருண்டீர் போல, வாற்றுணைக்கொள்ளா தடிபுறத்து வைப்பீரே யல்லிர்போலும், கூற்றங்கொண்டோட்டத் தமியே கொடுநெறிக்கட் செல்லும் போழ்தி, னுற்றுணைக்கொள்ளீ ரழகலா தறிவொன்றுமிலிரேபோலும்" என்ற **சீவகசிந்தாமணி**ச்செய்யுள, இங்கு நோக்கத்தக்கது.

தோட்கோப்பு, பொதிசோறு, கட்டு சோறு, ஆற்றுணை என்பன-ஒரு பொருட்சொற்கள். தாயலறுதல், பருவம்நிரம்புதற்குமுன்னமேக்ருயிர்க்கின்றவேதனையினாலும் பிள்ளையையிழத்தலாலும் உண்டாகியபெருந்துன்பத்தால். 'ஆட்பார்த்து உழலும்' எனவே, அவனது வருகை சிறிதுந்தவறுதென்றபடி. 'பீட்பிதுக்கிப் பிள்ளையைத் தாயலறக் கோடலால்' என்றது, அவனது அருளில்லாமைக்கு ஒரு திருஷ்டாந்தங் காட்டியபடி.

'காலத்தான்' என்பதில், ஆனுருபு - கருவி கருத்தாப் பொருள்களா காமல், 'காலத்தில்' என இடப்பொருளாய் நிற்றலால், உருபுமயக்கம்; "காலத்தினுற் செய்த நன்றி" என்ற திருக்குறளிற் போல. கோடல் - தொழிற்பெயர்; கொள் - பகுதி, தல் - விகுதி. (கo)

ரூ - ஆம் அதிகாரம்—யாக்கைநிலையாமை

அஃதாவது - உடம்பினது நிலையில்லாமையை உணர்த்துவது. அதி கார முறைமை, முன்கூறியதனுல் விளக்கும். ஆதேயமாகிய இளமை யினது நிலையின்மையின்பின் ஆதாரமாகிய யாக்கையினது நிலையின் மையை நிறுத்தினரென்க. (ஆதேயம் - இடத்துங்கும்பொருள், ஆதாரம்- இடம்.) யாக்கை - (எலும்பு தசை தோல் முதலிய எழுவகைத் தாதுக்க ளால்) யாக்கப்பட்டது; யாத்தல் - கட்டுதல். தொழிலாகுபெயரென்றுல், கை - விகுதி; ஐ-செயப்படுபொருள் விகுதியென்றுல், கு - சாரியை.

உக. மலைமிசைத் தோன்று மதியம்போல் யானைத்
தலைமிசைக் கொண்ட குடையார்—நிலைமிசைத்
தஞ்சினு ரென்றெடுத்துத் தூற்றப்பட் டாரல்லா
லெஞ்சினு ரிவ்வுலகத் தில்.

(இ - ள்.) மலைமிசை - மலையின்மேல், தோன்றும்-காணப்படுகின்ற, மதியம் போல்-பூர்ணசந்திரன்போல, யானை தலைமிசை - பட்டத்துயானை யினது தலையின்மேல், கொண்ட - கொள்ளப்பட்ட, குடையார் - வெண் கொற்றக் குடையையுடையராய்ச் சென்ற அரசர்களும், நிலம்மிசை-இப் பூமியிலே, தஞ்சினுர் என்று-இறந்தாரகளென்று, எடுத்து-(பிறர் அறிய) எடுத்துச் சொல்லி, தூற்றப்பட்டார் அல்லால் - (பலராலும்) இகழப்பட் டார்களேயல்லாமல், எஞ்சினுர் - (அவ்விறத்தலினின்று) ஒழித்து நிலை யாக நின்றவர்கள், இ உலகத்து இல் - இந்த உலகத்தில் (எவரும்) இல்லை; (எ - று.)

தம் உடம்பில் நோய் முதலியன நேராதபடி தேகசௌக்கியம் சிறி தும் குறையாமற் பாதுகாத்துக்கொள்ளவல்ல அரசர்களும் இறப்ப ரென்று, மற்றையோரிறத்தலைக் கூறுமலே பெறவைத்தார். யாக்கை அழியும்இயல்பின தாதலால், அது உள்ளபொழுதே அறஞ்செய்யவேண்டு மென்றதாயிற்று. முதலிரண்டடி-**உவமையணி**. மலை-மதநீரருவி சொரி கிற வலிய பெரிய யானைக்கும், மதி - குளிர்ச்சிசெய்து வட்டமாக விளங்குகின்ற ஒற்றைவெண் கொற்றக்குடைக்கும் உவமை. மதியம், அம் - சாரியை. துஞ்சுதல் - தூங்குதல்; இறத்தலைத் துஞ்சுதலென் பது - **மங்கலவழக்கு** : மீளவும் எழுந்திராத பெருந்தூக்க மென்க.

எஞ்சுதல் - சேடித்தல். இல் - இல்லை; வேறு உண்டு என்பனபோல ஐம்பான் மூவிடத்துக்கும் பொதுவாகிய குறிப்புவினைமுற்றுப்பகாப்பதம்.

"கொலையானை மேலோர் குளிர்வெண் குடைக்கீழ்ப், பலயானைமன் னர்பலர்போற்ற வந்தான், மலையாகம் போழாக மற்றிவனே சாய்ந்தான், நிலையாமை சால நிலைபெற்ற தன்றே" என்றுர் **தூளாமணி**யிலும். (க)

உஉ. வாழ்நாட் கலகா வயங்கொளி மண்டிலம்
வீழ்நாள் படாஅ தெழுதலால்—வாழ்நா
ளுலவாமு னெப்புர வாற்றுமின் யாரு
நிலவார் நிலமிசை மேல்.

(இ - ள்.) வாழ்நாட்கு - ஆயுள்நாளுக்கு, அலகு ஆ(க) - (ஓர்) அள வாக, வயங்கு ஒளி மண்டிலம் - விளங்குகின்ற கிரணங்களையுடைய சூரிய மண்டலம், வீழ் நாள் படாது - உதித்தலில்லாத நாள் உண்டாகாதபடி, எழுதலால் - (நாள்தோறும்) உதயஞ்செய்து வருதலால்,—வாழ்நாள் - அவ்வாயுள்நாள், உலவாமுன் - கழிவதற்குமுன்னமே, ஒப்புரவு - உப காரத்தை, ஆற்றுமின் - (பிறர்க்குச) செய்யுங்கள்; யாரும் - எவரும், நிலம்மிசை - பூமியில், மேல் - (அவ்வாழ்நாளெல்லையைக்) கடந்து, நில வார் - வாழமாட்டார்; (எ - று.)

ஒருதயந் தொடங்கிப் பின்வருமுதயமளவிற் கழிந்த காலத்தை ஒரு நாள் என்றும், அப்படிப்பட்டநாள் மூப்பது கொண்டதை ஒருமாத மென் றும், மாதம் பன்னிரண்டு கொண்டதை வருடமென்றும் இவ்வாறுஎண்ணி நாள் கணக்கிடப்படுதலால், 'வாழ்நாட் கலகா வயங்கொளி மண்டி லம் வீழ்நாள் படாதெழுதலால்' என்றார். கீழ் "தோற்றஞ்சால் ஞாயிறு நாழியா" என்றதுங் காண்க. படாஅது-செய்யுளோசை நிறைக்கவந்த உயிரளபெடை. மிசைமேல் என்பதை **ஒருபொருட் பன்மொழி**யாகக் கொண்டும் உரைக்கலாம். ஒப்புரவு - உலகநடையை அறிந்து அதற்கு ஏற்பச் செய்யும் உதவி; ஒப்பு உரவு எனப் பிரிக்க: உலகத்தாரோடு ஒத் தூச்செய்யுஞ் சிறந்த தொழிலென்றபடி. இனி, 'ஒப்புரவு' - துறவறம் என்று கொண்டு, நிலமிசைமேல் யாரும் நிலவார் என்பதற்கு -(துறவறஞ் செய்யாதா ரொருவரும்) எல்லாவுலகங்கட்கும் மேலாகிய முத்தியுலகத் தில் விளங்குதலிலரென்று உரைப்பாருமுளர்; (திருக்குறளில் "நிலமிசை நீடுவாழ்வார்" என்பதற்கு-பரிமேலழகர் 'எல்லாவுலகிற்கும் மேலாயவீட் டுலகின்கண் அழிவின்றி வாழ்வார்' என்று உரைத்தமை காண்க: நில மிசைமேல் - மிசைநிலம் மேல் எனமாறுக.) ஆ - விகாரம். மண்டிலம் - வடசொல்லின் திரிபு. (உ)

உக. மன்றங் கறங்க மணப்பறை யாயின
வன்றவர்க் காங்கே பிணப்பறையாய்ப்—பின்றை
யொலித்தலு முண்டாமென் றுய்ந்துபோ மாறே
வலிக்குமா மாண்டார் மனம்.

(இ - ள்.) 'மன்றம் கறங்க - சபை முழுவதும் ஒலிக்கும்படி, (மூற் பகலில்), மணம் பறை ஆயின - கலியாணத்திற்கு அடிக்கும் வாத்திய மானவைதாமே, அன்று - அந்நாளிலேயே, அவர்க்கு - மணஞ்செய்து கொண்ட அவர்கட்கே, ஆங்கே - அவ்விடத்தில்தானே, (பிற்பகலில்), பிணம் பறை ஆய் - பிணத்துக்குக் கொட்டும் நெய்தற்பறையாகி, பின்றை - உடனே, ஒலித்தலும் - முழங்குதலும், உண்டு ஆம் - உள்ள தாகக்கூடும்,' என்று - என்று எண்ணி [யாக்கை நிலையாமையைக் கருதி], மாண்டார் மனம் - மாட்சிமைப்பட்ட அறிவுடையாரது நெஞ்சம், உய்ந்து

போம் ஆறே - நற்கதிபெற்றுப் போதற்குக் காரணமான (துறவறத்தின்) வழியிலேயே, வலிக்கும் - உறுதியாகத் துணிந்துநிற்கும்; (எ - று.)

"மணமகனே பிணமகனுய் மணப்பறையே பிணப்பறையாய், அணியிழையார் வாழ்த்தொலிபோ யழுகையொலியாய்க் கழியக், கணமதனிற் பிறந்திறுமிக் காயத்தின் பெரும்பயனே, உணர்வுடையார் பெறுவருணர் வொன்றுமிலார்க் கொன்றுமிலே" என்றது காண்க. 'வலிக்குமாம் மாண்டார் மனம்' என இவ்வாறு சான்றோர்மேல் வைத்துக் கூறியதனுல், உடம்பை நிலையுடையதென்று மதித்துக் களிப்பவர் புல்லறிவாளரென்பது போதரும். அம் - அசை. மன்று - இங்கு, கலியாண காரியத்தின் பொருட்டுக்கூடின சுற்றத்தார் நண்பர் முதலியோரது கூட்டம்; அம் - சாரியை. மாண்டார் - இறந்தகால வினையாலணையும் பெயர்; மாண் - பகுதி. (ரு)

உசை. சென்றே யெறிப வொருகால் சிறுவரை
நின்றே யெறிப பறையினே—நன்றேகாண்
முக்காலைக் கொட்டி னுண் மூடித்தீக் கொண்டெழுவர்
செத்தாரைச் சாவார் சுமந்து.

(இ - ள்.) சென்று - (இறந்தவிடத்திற்குப்) போய், பறையினே - பிணப்பறையை, ஒரு கால்-ஒருதரம், எறிப - (முதலிற்) கொட்டுவார்கள்; சிறுவரை நின்று - (பின்பு) சிறிதுநேரம் சும்மா விருந்து, எறிப - (இரண்டாம் முறை) கொட்டுவார்கள்; முக்காலை கொட்டினுள் - மூன்றுதரங் கொட்டும்பொழுதில்,—செத்தாரை - இறந்தவர்களை, சாவார் - இனி இறக்க நின்றவர்கள், மூடி - (போர்வையால்) மறைத்து, சுமந்து - எடுத்துக்கொண்டு, தீ கொண்டு - (அந்த உயிர்நீத்த உடலை எரிப்பதற்கு) நெருப்பையும் எடுத்துக்கொண்டு, எழுவர் - புறப்பட்டுப் போவாராகள்; நன்றே காண் - (இவ்வுலகவியற்கை) நன்றுயிருக்கின்றதே! (எ - று.)

'சாவார்' என அவர்களது நிலையில்லாமையையும் விளக்கியவாறு. எறிப - பலர்பால்முற்று; ப - விகுதி, எதிர்காலங் காட்டிற்று. உயிர் நீங்கிய உடம்பை 'செத்தார்' என உயர்திணையாகக் கூறியது, இழிப்புப்பற்றி வந்த **திணைவழுவமைதி:** "பதுமகன் கிடக்கை" என்ற இடத்துப்போல. நன்றே - இகழ்ச்சிக்குறிப்பு: நன்றே - இச்செயல் நன்றுக இருக்கின்றதா? தீது என்பாருமுளர். காண் - அசை. நன்றே காண் - நன்றுக ஆராய்ந்துபார் என்றுமாம்.

பின்னிரண்டடியில் **இனவெதுகை** காண்க. (சு)

உரு. கணங்கொண்டு சுற்றத்தார் கலலென் றலறப்
பிணங்கொண்டு காட்டுய்ப்பார்க் கண்டு—மணங்கொண்டீண்
டுண்டுண்டுண் டென்னு முணர்விலுற் சாற்றுமே
டொண்டொண்டொ ணென்னும் பறை.

(இ - ள்.) சுற்றத்தார் - உறவினர்கள், கணம் கொண்டு - கூட்டமாகக்கூடி, கல் என்று அலற - கல்லென்ற ஒலிஉண்டாக வாய்விட்டு அழாநிற்க, பிணம் - பிணத்தை, கொண்டு - எடுத்துக்கொண்டு, காடு - நன்

காட்டில், உய்ப்பார் - சேர்ப்பவர்களே, கண்டும் - (இவ்வுலகத்தில்) பிரதியக்ஷமாகப் பார்த்திருந்தும், (யாக்கையின் நிலையாமையைக் கருதாமல்), மணம் கொண்டு - கலியாணஞ்செய்துகொண்டு, ஈண்டு - இவ்வுலகத்தில், உண்டு உண்டு உண்டு என்னும் - (இன்பம்) உள்ளது உள்ளது உள்ளது என்று கருதி மயங்குகின்ற, உணர்விஞன் - சிற்றறிவுடையவனைக் குறித்து, டொண் டொண் டொண் என்னும் - டொண் டொண் டொண் என்று ஒலிக்கிற, பறை - பிணப்பறை, சாற்றும் - (அவ்வுடம்பின நிலையாமையைத்) தெரிவிக்கும் ; (எ - று.)

பறை சாற்று மென்றது - **தற்குறிப்பேற்றவணி** ; அப்பறையொலியால் யாக்கை நிலையின்மையை அறியலாம் என்றவாறு. கணம் - வடசொல். சுற்றத்தார் - உரிய சமயங்களில் வந்து சுற்றிநிற்பவர். கல்லென்று, டொண் டொண் டொண் - **ஒலிக்குறிப்பு**. உண்டு உண்டு உண்டு - துணிவுபற்றி மூன்றுமுறை அடுக்கிற்று; [நன்-பொது-சசு]. உய்ப்பார்க் கண்டும், உணர்விஞற் சாற்றும் - உயர்திணையில் ஐயருபுதொக்கவழி இயல்பின்வினைகாரமாயின. எகாரம் - பிரசித்தியைக் காட்டிற்று. ஈற்றடி "தொண்டொண் டொடென்னும் பறை" எனவும் வழங்கும். (கூ)

உசு. நார்த்தொடுத் தீர்க்கிலை னன்றுய்ந் தடக்கிலென்
பார்த்துழிப் பெய்யிலென் பல்லோர் பழிக்கிலென்
றேற்றபையு ளின்று தொழிலறச் செய்தூட்டுங்
கூத்தன் புறப்பட்டக் கால்.

(இ - ள்.) தோல் பையுள் நின்று - தோலிஞலமைந்த பைபோன்ற உடம்பில் நின்று, தொழில் அற செய்து ஊட்டும்பு தொழில்களே பிருதியாகச் செய்து (அவற்றின் பயனை) உண்பித்து வந்த, கூத்தன் - உயிராகிய கூத்தாடி, புறப்பட்டக்கால் - வெளிப்பட்டுச் சென்றுவிட்டால்,— (அந்த உயிர் நீங்கிய உடம்பை), நார் தொடுத்து ஈர்க்கில் என் - கயிற்றினால்கட்டி இழுத்துக்கொண்டு போஞலென்ன ? நன்று ஆய்ந்து அடக்கில் என்-நன்முகச் சுத்தஞ்செய்து அடக்கஞ்செய்தா லென்ன ? பார்த்த உழி பெய்யில் என் - கண்டவிடத்திற் போகட்டுவிட்டா லென்ன ? பல்லோர் பழிக்கில் என் - பலரும் கண்டு பழித்தாலென்ன ? (எ - று.)— வருகிற உயர்வுதாழ்வுகள் ஒன்றுமில்லை என்றபடி.

உயிர் உடம்பினுள் இருக்கும்பொழுது கண்டோர் வியக்கும்படி பலவகைத் தொழில்களைச் செய்வதனால், அதனை 'கூத்தன்' என்றார்; **உருவகம்**. இருவினைக்கு ஏற்பப் பல வேறு வடிவெடுத்து - இயங்குதல் உயிரினியல்பாதல் காண்க. உழி பார்த்து என மொழிமாற்றி இடம் பார்த்து எனப் பொருள்கொள்ளினும் அமையும். 'பார்த்துளிப்பெய்யில்' எனப் பாடமாகொண்டு, பூமியைத் தோண்டிப் புதைத்தா லென்ன ? ஏனப் பொருள்கொள்வாரு முளர் ; துளி = துள்ளி. "உறுப்புக்கள்தா முடன்கூடி யொன்றுயிருந்த பெரும்பை" எனக் **குண்டலகேசி**யிற் கூறுறுபோல, 'தோற்பை' எனப்பட்டது. உயிரை உயர்திணைச் சொல்லாற் குறித்தது, வடமொழி முறைமைபற்றி. பார்த்துழி - தொகுத்தல்விகாரம். ஈர்க்கில், அடக்கில், பெய்யில், பழிக்கில் - எதிர்கால வினையெச்சங்கள்.

இச்செய்யுளில் முதலிரண்டடிகளில் **ஆசிடையிட்ட எதுகை**யும், மூன்றாமடியில் **இனவெதுகை**யுங் காண்க. (சு)

உ-ம். படுமழை மொக்குளிற் பல்காலுந் தோன்றி
கெடுநீரார் யாக்கையென் றெண்ணித்—தடுமாற்றந்
தீர்ப்பேம்யா மென்றுணருந் திண்ணறி வாளரை
நேர்ப்பார்யார் நீணிலத்தின் மேல்.

(இ-ள்.) 'ஓர் யாக்கை இது - இந்த ஒருடம்பு, படு மழை - பெய்கின்ற மழைநீரில் உண்டாகின்ற, மொக்குளின்-குமிழிபோல, பல் காலும்-பலமுறையும், தோன்றி - உண்டாகி, கெடும் - (உடனே) அழிந்துபோம்', என்று எண்ணி-என்று நினைத்து,—தடுமாற்றம்-(பிறவியில்) தடுமாறுவதை, யாம் - நாம், தீர்ப்பேம் - போக்கிவிடக்கடவோம், என்று உணரும்-என்று அறிகின்ற, திண் அறிவாளரை-உறுதியான அறிவை யாளுதலுடைய பெரியோர்களை, நேர்ப்பார்-ஒப்பவர், நீள் நிலத்தின்மேல்-பெரிய பூமியில், யார்-யாவருளர்? [எவரு மில்லை]; (எ - று.)

அக் கலங்காத அறிவுடையவரே யாவரினும் மேற்பட்டவ ரென்றபடி. மொக்குள்-தோன்றி விரைவிலழிதற்கு உவமம். 'ஓர்' என்பது-யாக்கையின் இழிவைப் புலப்படுத்தும். அவரை யொப்பவரில்லை யெனவே, அவரினும் மேம்படுபவரில்லை யென்பது தானே அமையும். பிறந்து இறந்தழிவது உடலுக்கு இயல்பு என்று கருதவேண்டு மென்பார், 'தோன்றிக் கெடுநீரார் யாக்கையென்றெண்ணி' என்றார். கெடும் என்பதைப் பெயரெச்சமாகக் கொண்டு உரைத்தலும் ஒன்று. யார் என்ற வினாவினைக்குறிப்புமுற்று, இன்மை குறித்துநின்றது. தடுமாற்றந் தீர்ப்பேம்-துறவுமேற்கொண்டு அந் நெறியாற் பிறப்பற்று முத்திபெறக்கடவோம். தடுமாற்றம்-தொழிற்பெயர். மொக்குள்-முகுளம் என்னும் வடமொழியின்சிதைவு. முன்னிரண்டடி - **உவமையணி.** (எ)

உ-ம். யாக்கையை யாப்புடைத்தாப் பெற்றவர் தாம்பெற்ற
யாக்கையா லாய பயன்கொள்க—யாக்கை
மலையாடு மஞ்சுபோற் றோன்றிமற் றுங்கே
நிலையாது நீத்து விடும்.

(இ-ள்.) யாக்கையை-உடம்பை, யாப்பு உடைத்து ஆ-உறுதியுடையதாக, பெற்றவர் - (ஊழ்வினையாற்) பெற்றவர்கள், தாம் பெற்ற யாக்கையால்-தாம் அடைந்த உடம்பினால், ஆய-பெறுவதற்கு உரிய, பயன்-(முத்தியாகிய) பயனை, கொள்க - (அப்பொழுதே) தேடிக்கொள்ளக்கடவர்; (ஏனென்றால்),—யாக்கை-உடம்பு, மலை ஆடும் மஞ்சு போல்-மலையின்மேல் அசைந்துகொண்டிருக்கிற மேகம்போல, தோன்றி - முன்னே காணப்பட்டு, ஆங்கே-அக்கணப்பொழுதிலேயே, நிலையாது-நிலைபெறாமல், நீத்து விடும்(உயிர்)ஒழிந்துபோகப்பெறும்; (எ-று.) பின்னிரண்டடி-**உவமையணி.**

மலையாடு மஞ்சு - உடம்பிற்குத் **தொழிலால் உவமை.** யாப்பு - உறப்புக் குறையின்மை, நோயின்மை, நினைத்தகாரியத்தைச் செய்துமுடிக்கவல்ல வலிமை. அங்ஙன் உடலைப் படைத்தலினருமைபற்றி 'யாப்புடைத்தாப்

பெற்றவர்' என்றார். 'யாக்கையா லாய பயன் கொள்க' எனவே, கால தாமதஞ் செய்யலாகாது என்றதாம். ஆய, ய் - இறந்தகாலவிடைநிலை. மற்று-**வினைமாற்று**. ஆங்கே - அவ்வாறே [அம்மஞ்சின தோற்றம்போலவே] எனினுமாம். 'நீத்து **விடும்**' என்றதில், விடு - துணிவுணர்த்தும். (அ)

உகூ. புன்னுனிமே னீர்போ னிலையாமை யென்றெண்ணி
யின்னினியே செய்க வறவினை—யின்னினியே
நின்றூ னிருந்தான் கிடந்தான்றன் கேளலறச்
சென்றூ னெனப்படுத லால்.

(இ - ள்.) 'இன்னினியே-இப்பொழுதே இப்பொழுதே, நின்றூன் - (ஒருவன்) நின்றிருந்தான், இருந்தான் - உட்கார்ந்திருந்தான், கிடந்தான் - படுத்திருந்தான், தன் கேள் அலற-தனது சுற்றத்தார் கதறிப் புலம்பும்படி, சென்றூன் - இறந்துபோனான்,' எனப்படுதலால் - என்று (உலகத்தவராற்) சொல்லப்படுதலால், புல் நுனிமேல் நீர் போல் - புல்லினது நுனியில் நிற் கின்ற பனிநீர்த்துளிபோல, நிலையாமை - (உடம்பு) நிலையில்லாமையை யுடையது, என்று—, எண்ணி - நினைத்து, இன்னினியே - இப்பொழுதே இப்பொழுதே, அறம் வினை-தருமகாரியத்தை, செய்க - (ஒவ்வொருவரும்) செய்யக்கடவர்; (எ - று.)

•

எடுத்தசரீரம் கணப்பொழுதிலே அழியுமியல்பின தாதலால், அதற் கிடையே தருமத்தை விரைந்துசெய்க வென்பது கருத்து. முதலடி - **உவமையணி.**

'உடம்பு' என்பது, அதிகாரத்தால் வருவிக்கப்பட்டது. நிலையாமை யெனப் **பண்பியைப் பண்பாக உபசரித்தார்**. இன்னினி - சிறிதுங் காலஞ் செல்லாமை குறித்துநின்ற இனி இனி என்னும் இடைச்சொல்லடுக்கின் விகாரம். ஏகாரம்-தேற்றம். கேள் - கேண்மையென்னும் பண்பின் அடி; கேளிர்க்குப் பண்பாகுபெயர். (கூ)

உ0. கேளாதே வந்து கிளைகளா யிற்றூன்றி
வாளாதே போவரான் மாந்தர்கள்—வாளாதே
சேக்கை மரனெழியச் சேணீங்கு புட்போல
யாக்கை தமர்க்கொழிய நீத்து.

(இ - ள்.) மாந்தர்கள் - மனிதர்கள்,—கேளாதே வந்து- ('வரலாமா?' என்று) கேளாமலே வந்து, கிளைகள் ஆய்-உறவினராய், இல் தோன்றி - குடும்பத்திற் பிறந்து, (சிறிதுகாலமிருந்து),—சேக்கை- (தமது) கூடுகள், மரன் ஒழிய - மரங்களில் தங்கும்படி (அவற்றைவிட்டு), வாளாதே - சும்மா [சொல்லாமலே], சேண் நீங்கு-நெடுந்தூரம் ஆகாயத்தில் நீங்கிப் பறந்து போகின்ற, புள் போல-பறவைகள் போல, யாக்கை-உடம்பை, தமர்க்கு-உறவினர்க்கு, ஒழிய நீத்து - (தம்மினின்று) நீங்கும்படி வைத்துவிட்டு, வாளாதே-சொல்லாமலே, போவர்-இறந்துபோய்விடுவார்கள்; (எ - று.)
—உவமையணி

பறவைகள் தமது விருப்பத்தின்படி மரங்களில் வந்து சேர்வதும் விட்டுச்செல்வதும் போல, மனிதர் முற்பிறப்பிற் செய்த ஊழ்வினைவசத்தால் ஒரு குடியிற் பிறத்தலும் இறத்தலும் மடைவரென்றபடி. "சூடம்பை கணித்தொழியப் புட்பறந் தற்றே, உடம்போ டுயிரிடை நட்பு" என்னுந் திருக்குறளோடு இதனை ஒப்பிடுக. இஃ - உவமவாகுபெயர். சேக்கை - தங்குமிடம். மரன்-போலி. தமர் - தம்மவர். வாளாது - இடைச்சொல்; து - சாரியை: ஏ - இசைநிறை. (கo)

ச - ஆம் அதிகாரம்—அறன்வலியுறுத்தல்.

அஃதாவது - நிலைபெறுதலில்லாத செல்வம் இளமை யாக்கை என்னும் இவைபோ லாகாமல் நிலைபெற்றுச் செல்வம் முதலியவற்றால் அவசியஞ் செய்யவேண்டுவதாய், இம்மை மறுமை வீடு என்னும் மூன்றையுந் தருவதான தருமம் மற்றைப் பொருளின்பங்களினும் உறுதியுடையதாயிருக்குந் தன்மையை வற்புறுத்திக் கூறுவது. அதிகார முறைமையும், இதனாலே விளங்கும். "சிறப்புடை மரபிற் பொருளுமின்பமும், அறத்து வழிப்படூஉந் தோற்றம் போல" என்றார் **புறநானூற்றி**லும், அறன் - அறம்: மகரனகரம் மாறிவருஞ் சொல்: அறமாவது-மநுமுதலிய தருமநூல்களில் இது செய்யத்தக்கது என்று வரையறுக்கப்பட்டிருப்பது.

ஈக. அகத்தாரே வாழ்வாரென் றண்ணாந்து நோக்கிப்
புகத்தாம் பெறூஅர் புறங்கடை பற்றி
மிகத்தாம் வருந்தி யிருப்பரே மேலைத்
தவத்தாற் றவஞ்செய்யா தார்.

(இ - ள்.) மேலை தவத்தால் - முற்பிறப்பிற்செய்த தவத்தினால், தவம் செய்யாதார் - (பிற்பிறப்பில்) தவத்தைச் செய்யாதவர்கள்,—(மறுபிறப்பில் வறுமையடைந்து),—அகத்தாரே வாழ்வார் என்று - இவ்வீட்டிலுள்ளவர்களே செல்வமுடையவர்கள்' என்று எண்ணி, அண்ணாந்து நோக்கி - (அவ்வீட்டின் உபரிகை முதலிய சிறப்புக்களைத்) தலையெடுத்துப் பார்த்து, (அதனுள்ளே இரத்தற்குநுழையத் தொடங்கி), தாம் புகப்பெறூதவர்களாய், புறங்கடை பற்றி - வாயிற்புறத்தைப் பிடித்துக் கொண்டு, தாம் மிக வருந்தி இருப்பர் - தாம் மிகவும் வருத்தமுற்றிருப்பார்கள்; (ஏ - று.)—தாம் - அசை.

பிற்பிறப்பில் தவஞ்செய்வது முற்பிறப்பில் தவம் இல்லையாயின் கூடாதாதலால், 'மேலைத்தவத்தால் தவஞ்செய்யாதார்' என்றார்; "தவமுந் தவமுடையார்க்காகும் அவம்அதனை, அஃதிலார் மேற்கொள்வது" என்றார் திருக்குறளிலும்; அக்குறளினுரையிற் பரிமேலழகர் 'பரிசயத்தால் அறிவும் ஆற்றலும் உடையராய் மூடிவுபோக்கலின் தவமுடையார்க்கு ஆகுமென்றும், அஃதுஇல்லாதார்க்கு அவை யின்மையின் முடிவு போகாமையின் அவமா மென்றுங் கூறினர்' என உரைத்ததை இவ்விடத்திற்குங் கொள்க. இனி, மக்கட்பிறப்புக்கு ஏற்ற தவத்தோடு

கூடிச் செல்வத்துக்குத் தவம்பண்ணுதவரென்றுமாம். அகத்து ஆரே வாழ்வார் எனப் பிரித்து, இவ்வீட்டினுள் வாழ்பவர் யாவரோதாம்? [என்ன நல்வினை செய்தவரோ?] என உரைத்தலும் பொருந்தும். இவ்வாறு பல பிறப்புக்களெடுத்து அலையவேண்டாதபடி செல்வத்தினிடத்தும் உடம்பினிடத்துஞ் செய்யும் பற்றுக்களை ஒழித்து இளமையிலேயே துறந்து அறங்களில் வழுவாதொழுகிப் பேரின்பம் பெறவேண்டுமென்றவாறு. வாழ்வார்-(எம்மை) வாழ்விப்பவர் என்பாரும் உளர். அண்ணுந்து, அண்ணு - பகுதி. கடைப்புறம் - புறங்கடை எனப் பின்முன்னாக மாறி வந்தது, இலக்கணப்போலி. 'ஏ' இரண்டில், முன்னது - பிரிநிலை; பின்னது - இரக்கத்தோடு தேற்றம். மேலை, ஐ - சாரியை. அளபெடை, செய்யுளிசை நிறைக்கவந்தது. தவம் - தபஸ். இப்பாட்டு - **இருவகைப் இன்னிசைவெண்பா**; மேல் கூசு - ஆம்பாட்டும் அது. (க)

கூ உ. ஆவாஆ மாக்க நசைஇ யறமறந்து
போவாஆ மென்னுப் புலைநெஞ்சே—யோவாது
நின்றுஞற்றி வாழ்தி யெனினுநின் வாழ்நாள்கள்
சென்றன செய்வ துரை.

(இ - ள்.) புலை நெஞ்சே - அற்பத்தன்மையுடைய மனமே! (நீ;) ஆக்கம் நசைஇ - (அணுவளவும் நிலையில்லாத) செல்வத்தை விரும்பி, 'நாம் ஆவாம் - நாம் மேன்மேலும் செல்வமுடையவராவோம்: நாம் அறம் மறந்து போவாம் - நாம் (அச்செல்வஞ் செலவாவதற்குக் காரணமாகிற) தருமத்தை விடக்கடவோம்,' என்னு - என்று எண்ணி, ஓவாது நின்று - (சிறிதும்) ஓய்வில்லாமல் நின்று, உஞற்றி - (அசெல்வஞ் சம்பாதிக்கப் பலவாறு) முயன்று, வாழ்தி எனினும் - வாழுவாயாயினும், நின் வாழ்நாள்கள் - உனது ஆயுள்நாட்கள், சென்றன - கழிந்துவிட்டன: செய்வது உரை - (இனி நீ) செய்வதைச் சொல்; (எ - று.)

தான் உள்ள காலமெல்லாஞ் செல்வத்தையே விரும்பி ஓடியோடிச் சம்பாதித்துக் காத்துவைத்துச் சிறிதுந் தருமஞ்செய்யாமலே மரண நிலையடையும்பொழுது தன்மனத்தை நோக்கித் தானே 'இனி யாது செய்வாய்?' என்று இரக்கத்தோடு ஒருவன் சொன்னதாகச் செய்யப்பட்டது, இச்செய்யுள் என அறிக. 'ஆவா என்பது - அந்தோ எனப் பொருள்படும் இரக்கக் குறிப்பிடைச் சொல்' எனக்கொண்டு உரைப்பின், அதனையடுத்துள்ள 'நாம்' என்றது நின்றுவற்றும்; "ஆது நாமென்னுமவர்" என்ற நாலடியாரிலும், "ஆதும் மென்னுமவர்" என்ற திருக்குறளிலும், 'ஆதும்' என்பது - மேலாகக் கடவோமென்று பொருள்படுதல் காண்க.

ஆக்கம் - தொழிற்பெயர்: ஆகுதல்; இது - இங்கு, இம்மையில் மேன்மையடைதற்குக் காரணமான செல்வத்துக்கு, காரியவாகு பெயர். விரும்பமெனப் பொருள்படுகிற 'நசை' என்ற பெயர்ச்சொல், விரும்பியென வினையெச்சப்பொருள்படுதற் பொருட்டு, 'நசைஇ' என அளபெடுத்தது; இது - **சொல்லிசை யளபெடை**. நசைந்து என்ற வினையெச்சம் நசைஇ என விகாரப்பட்டு அளபெடுத்த தென்பர் ஒரு சாரார்.

'ஆக்கம் நசைஇ, நாம்—, ஆவாம் - உய்யக்கடவோம்: அறம் மறந்து - அறத்தை மறத்தலால், போவாம் - உய்யாது போவோம், என்ன - என்று இதுவரையில் எண்ணுதிருந்த, புலைநெஞ்சே—! இனி ஒழியாது ஒருவழிப் பட்டு நின்று தருமத்தைச் செய்து வாழப்புகுவையெனினும், நினது வாழ் நாள்கள் முன்னமே கழிந்திட்டன; இனி யாது செய்வாய்' என்று உரைப் பாருமுளர். புலை - பண்புப் பெயர். மறந்துபோவாம் என்பதில், போ- துணிவுப் பொருளைக் காட்டிற்று. (உ)

கூக. வினைப்பயன் வந்தக்கால் வெய்ய வுயிரா
மனைத்தி னழியுமாம் பேதை—நினைத்ததனைத்
தொல்லைய தென்றுணர் வாரே தடுமாற்றத்
தெல்லை யிகந்தொருவு வார்.

(இ - ள்.) பேதை - அறிவில்லாதவன்,—வினை பயன் வந்தக்கால் - (தான் முற்பிறப்பிற் செய்த) தீவினையின் பயனுகிய துன்பம் வந்து நேர்ந் தால், (ஊழ்வினைப்பயனென்று எண்ணியிராமல்), வெய்ய உயிரா - கடுமையாகப் பெருமூச்சுவிட்டு, மனத்தின் - மனத்திலே, அழியும் - வருந்துவான்; அதனை - அத்துனபத்தைப்பற்றி, நினைத்து-ஆலோசித்து, தொல்லையது என்று உணர்வாரே - முற்பிறப்பின் தீவினையால் வந்த தென்று தெரிந்துகொள்பவர்கள் தாமே, தடுமாற்றத்து எல்லை இகந்து ஒருவுவார் - சம்சார துக்கத்தின் எல்லையைவிட்டு நீங்குவார்கள்; (எ-று.)

பழவினையால் வந்ததென்று அறிந்தவர், இனி வரும் பிறப்பில் அவ் வாறு துன்பம் நேரிடாமல் இன்பமே சேரும்படி அதருமத்தைவிட்டுத் தருமத்தையே செய்து பேறுபெறுவராதலால், 'உணர்வாரே தடுமாற்றத் தெல்லை யிகந்தொருவுவார்' என்றார். வெய்ய - குறிப்பு வினையெச்சம்; வெம்மை-பகுதி: இது-இங்கு, வினையுரியாய் நின்றது. இனி, வெம்மை யுடையனவாக என, பலவின்பாற் குறிப்பு முற்றெச்சமாகவும் கொள்ள லாம். வெய்ய உயிர்த்தல் - சூடாக மூச்சுவிடுதல். எ - பிரிநிலையோடு தேற்றம். பேதை என்னும் பண்புப்பெயர், அறிவிலானுக்குப் பண்பாகு பெயர்; பேதைமையாவது - யாதும் அறியாமை. (கூ)

கூச. அரும்பெறல் யாக்கையைப் பெற்ற பயத்தாற்
பெரும்பயனு மாற்றவே கொள்க—கரும்பூர்ந்த
சாறுபோற் சாலவும் பின்னுதவி மற்றதன்
கோதுபோற் போகு முடம்பு.

(இ - ள்.) அரும் பெறல் யாக்கையை - அருமையாகிய பெறுதலை யுடைய மனித சரீரத்தை, பெற்ற - அடைந்த, பயத்தால் - பயனால், பெரும்பயனும் - பெரிய பயனை தருமத்தையும், ஆற்றவே - மிகுதி யாகவே, கொள்க - செய்துவைத்துக்கொள்ளக்கடவர்; உடம்பு - மனித சரீரம்,—கரும்பு ஊர்ந்த சாறுபோல் - கரும்பானது (தன்னைப் பக்குவ மாக ஆலையில் வைத்து ஆட்டினவர்கட்குத் தன்னிடத்திற்) பொருந்திய சாற்றை(க் கொடுப்பது)போல, சாலவும் - மிகவும், பின் - மறுமைக்கு வேண்டிய அறமாகிய பயனை, உதவி - (தன்னை நல்வழியில் உபயோகப்

படித்தியவர்கட்குக்) கொடுத்து, மற்று - பின்பு, அதன் கோதுபோல் - அக்கரும்பினது சக்கைபோல, போகும் - நீங்கிப்போம்; (எ - று.)

அரும்பெறல்யாக்கை என்பது - வடமொழிநடை; பெறலருயாக்கை யென்று மாற்றி உரைப்பினும் அமையும். எல்லாப் பிறவிகளுள்ளும், அறஞ்செய்து நற்கதி பெறுதற்குக் காரணமான மனிதஜன்மத்தைப் பெறுதல், முற்பிறப்பின் மிக்க நல்வினையாலன்றிக் கூடா தாதலால், 'அரும்பெறல் யாக்கை' என்றார்; "அரிதரிது மானிடமாத லரிது" என்றார் ஔவையாரும்.

"ஈனபல வலியிலுலே வேறுவே றியாக்கையாகி, நனிபல பிறவி தன்னுள் துன்புறூஉம் பல்லுயிர்க்கு, மனிதனினரியதாகுந் தோன்றுதல் தோன்றினுலும், இனியவை நுகரவெய்துஞ் செல்வமு மன்னதேயாம்," "உயர்குடி நனியுள் தோன்றல் ஊனமில் யாக்கையாதல், மயர்வறு கல்வி கேள்வித்தன்மையால் வல்லராதல், பெறிதுணரறிவேயாதல் பேறறங் கோடலென்றிங், கரிதிவைபெறுதலேடா பெற்றவர் மக்களென்பார்' என்னும் **வஜ்ரயாபதிச்** செய்யுள்களாலும், மனிதசன்மத்தின் பெற லருமை உணர்க. "மக்களுடம்பு பெறற்கரிது பெற்றபின், மக்களறிவு மறிவரிது—மக்க, ளறிவறிந்தாரென்பா ரறத்தின் வழுவார், செறிதலை னின்றுழுகுவார்" என்னும் **அறநெறிச்சாரத்**தையுங் காண்க. அவ்வுடம் பைக்கொண்டு மறுமைக்கு உறுதி செய்துகொள்ளாதவர் அச்சரீரத்தைப் பெற்ற பயனே இழப்பராதலால், 'யாக்கையைப்பெற்ற பயத்தாற் பெரும் பயனு மாற்றவே கொள்க', எனப்பட்டது. கரும்பு ஊர்ந்த - கரும்பை ஆட்டியதனலுண்டாகிய எனினுமாம்.

சாறு - ஸாரம் என்னும் வடமொழியின் திரிபு; ரஸம். கோது - அஸாரம். பின் - பின்னுக்கு [மறுமைக்கு] உதவும் பயனுக்கு ஆகு பெயர்; இடைச்சொல், பெயர்த்தன்மைப்பட்டது. பயன் என்று நிறுத் தாமல் 'பெரும்பயன்' என்றது, துறவறமென்று தோன்றுதற்கு. பின் வாக்கியம் - **உவமையணி**.

பின்னிரண்டடியில் **இனவெதுகை** காண்க. (ச)

கூடு. கரும்பாட்டிக் கட்டி சிறுகாலைக் கொண்டார்
திரும்பெழுந்து வேங்காற் றுயராண் டுழுவார்
வருந்தி யுடம்பின் பயன்கொண்டார் கூற்றம்
வருங்காற் பரிவ திலர்.

(இ - ள்.) கரும்பு - கரும்பை, சிறு காலை - (பதன் அழிதற்கு) முன் காலத்திலேயே, ஆட்டி - (ஆலையில் வைத்து) ஆட்டி, கட்டி - (அதன் இரசத்தினுலாகின்ற) வெல்லக்கட்டியை, கொண்டார் - கொண்டவர்,—திரும்பு - (அதன்) சக்கை, எழுந்து வேம் கால் - (நெருப்பிற்) பொருந்தி எரியும்பொழுது, ஆண்டு - அவ்விடத்தில் (அதனேக்கண்டு), துயர் உழ வார் - துன்பப்படமாட்டார்; (அதுபோலவே), வருந்தி - (விரதம் முத லியவற்றுல்) வருத்தமுற்று, உடம்பின் பயன் கொண்டார் - சரீரமெடுத் ததன் பயனுகிய தருமத்தைச் செய்துவைத்துக்கொண்டவர்கள்,-கூற்றம் வரும் கால் - யமன் (உயிரைக் கொண்டுபோதற்கு) வரும்பொழுது, பரி வது இலர்-(இவ்வுடம்பின் இழிவைப்பற்றி) வருந்துதலிலராவார்; (எ-று.)

உடம்பினுலாகிய அறப்பயனுவது-துறந்து தவஞ்செய்தல். சிறுகாலை என்பது - அற்பகாலமென்னும் பொருளுள்ளதாய், முற்காலத்தைக் குறித்தது; "சிற்றஞ் சிறுகாலை வந்துன்னைச் சேவித்து" எனப் பெரியார் பாசுரத்திலுங் காண்க. கரும்பை ஆட்டிச் சாற்றைக்கொண்ட பின்பு அதன் கோதுகளின் கூட்டத்தை எரித்தல் இயல்பு. கரும்பு-உடம்புக்கும், அதனை ஆட்டுதல் - விரதங்களால் உடம்பை வருத்துதற்கும், கருப்பஞ் சாற்றுக்கட்டி - உடம்பின் பயனுக்கும், சிறுகாலை - இளமைப்பருவத்துக் கும், கருப்பங்கட்டி கொண்டார் - யாக்கைப் பயன்கொண்டவர்க்கும், தருமம்பெழுந்துவேதல் - யமன் வரவினுல் உடம்பு அழிதற்கும், கருப்பங் கட்டிகொண்டார் துயருலவாமை - யாக்கைப் பயன்கொண்டவர் வருந் தாமைக்கும் உவமையெனக் காண்க. வேம்=வேகும்; செய்யுமெனைச்ச வீற்றுயிர்மெய் சென்றது.

உபமான உபமேயங்களைப் பிம்பப்பிரதிபிம்ப **பாவ**ந்தோன்றத் தனித்தனி வாக்கியமாக நிறுத்தி, அவற்றின் இடையில் உவமருபுகொடா மற் கூறியதனுல், இப்பாட்டு - **எடுத்துக்காட்டுவமையணி**; வடநூலார் **த்ருஷ்டாந்தாலங்கார** மென்பர். (ஙி)

ஙூஅ. இன்றுகொ லன்றுகொ லென்றுகொ லென்னுது
பின்றையே நின்றது கூற்றமென் றெண்ணி
யொருவுமின் றீயவை யொல்லும் வகையான்
மருவுமின் மாண்டார் நெறம்.

(இ - ள்.) (யமன்வருவது), இன்றுகொல் - இன்றைக்கேயோ? அன்று கொல் - அன்றைக்கோ? என்றுகொல் - என்றைக்கோ? என் னுது - என்று சந்தேகப்படாமல், கூற்றம் - யமன், பின்றையே நின்றது - (உயிரைக் கொண்டு போதற்பொருட்டுப்) பின்னேயே வந்து மறைந்து நிற்கின்றது, என்று எண்ணி - என்று நினைத்து, தீயவை - பாவச் செய் கைகளை, ஒருவுமின் - (செய்யாமல்) நீக்குங்கள்: மாண்டார் - மாட்சிமைப் பட்ட முனிவர் முதலியோர், (நூல்களிற் கூறிய), அறம் - தருமத்தை, ஒல்லும் வகையால் - (உங்களாற்) கூடியமட்டில், மருவுமின் - செய்யுங் கள்; (எ - று.)

இன்று, அன்று என்றது - இளமை முதுமைகளை. கொல் - ஐயம். பின்றை - இங்கே, பின்னிடத்தைக் குறித்தது. 'மாண்டாரறம்' என்ற தில், தொக்குநின்ற ஆறனுருபு - செய்யுட்கிழமைப் பொருளது; "பற்றற் றூன் பற்று" என்ற **திருக்குறளி**ற் போல. திருக்குறளில் 'அறன்வலி யுறுத்தல்' என்ற அதிகாரத்தில் "ஒல்லும் வகையா னறவினே யோவாதே, செல்லும்வா யெல்லாஞ்செயல்" என்றதும், அதனுரையிற் பரிமேலழகர் 'இயலுந்திறமாவது - இல்லறம் பொருளளவிற்கு ஏற்பவும், துறவறம் யாக்கைநிலைக்கு ஏற்பவும் செய்தல்' என்றதும், இங்கு அறியத்தக்கவை. தீயவை ஒருவுமின் - தீச்செயல்களினின்று நீங்குங்கள் எனினுமாம். (சு)

ஙூஎ. மக்களா லாய பெரும்பயனு மாயுங்கா
லெத்துணையு மாற்றப் பலவானுற்—றெய்க
வுடம்பிற்கே யொப்புரவு செய்தொழுகா தும்பர்க்
கிடந்துண்ணப் பண்ணப் படும்.

(இ - ள்.) ஆயும் கால் - ஆராயுங்காலத்து, மக்களால் ஆய - மனித சரீரத்தாலாகிய, பெரும் பயனும் - சிறந்த பயன்களும், எத் துணையும் - எவ்வளவினும், ஆற்ற பல ஆனல் - மிகவும் அநேகங்களாதலினால்,—தொக்க - (மூற்பிறப்பின் புண்ணியத்தினால் அருமையாகக்) கிடைத்த, உடம்பிற்கே - சரீரத்துக்கே, ஒப்புரவு - உபயோகமாகின்ற காரியங்களை, செய்து ஒழுகாது - செய்துகொண்டிராமல், (அவ்வுடம்பைக்கொண்டு), உம்பர் கிடந்து - மேலுலகத்திலிருந்து, உண்ணு-(போரின்பத்தை) அனுபவிக்கும்படி, பண்ணப்படும் - (நல்ல தருமங்களையே) செய்யவேண்டும்.

இனி, தொக்க - பொருந்திய என்றுமாம் ; பொருந்துதல் - எழுதாதுகளுங்கூடி ஒன்றுதல். மக்கள் - இங்கு, அவர்களுடம்புக்கு முதலாகுபெயர். உம்மைகள் இரண்டனுள், முன்னது - உயர்வுசிறப்பு ; பின்னது - முற்றுப்பொருளது. ஆனல் என்ற எதிர்காலவினையெச்சம், இங்குத் தேற்றப்பொருள் பட்டு நின்றது; இவ்வாறு வடநூலுள்ளுஞ் சிறுபான்மை உண்டு. ஏ - பிரிநிலே. உம்பர் என்றது, மூத்தியுலகத்தை. பண்ணப்படும் - ஒருவகையியங்கோள் ; செயப்பாட்டு வினேமுற்றாகவுங் கொள்ளலாம் : அப்பொழுது, 'அறம்'என வருவிக்க. உடம்புக்கு ஆன ஒப்புரவுகள் - உண்ண உடுக்கப் பூச முடிக்கச் செய்பவை.

முதலிரண்டடிகளில் **இனவெதுகை** காண்க. (எ)

கூ-அ. உறக்குந் துணையதோ ராலம்வித் தீண்டு
யிறப்ப நிழற்பயந் தாங்—கறப்பயனுந்
தான்சிறி தாயினுந் தக்கார்கைப் பட்டக்கால்
வான்சிறி தாப் போர்த்து விடும்.

(இ - ள்.) உறக்கும் துணையது - மிகச்சிறிய அளவுள்ளதாகிய, ஓர் ஆலம் வித்து - ஆலமரத்தின் ஒரு விதை, ஈண்டி - வளர்ந்து, இறப்பமிகவும், நிழல் - நிழலே, பயந்தாங்கு - தருதல்போல,—தான் சிறிது ஆயினும் - (தானஞ் செய்யப்பட்டபொருள்) தான் மிகச்சிறியதாயிருந்தாலும், தக்கார் கை பட்டக்கால் - தகுதியுடைய ஸத்பாத்திரங்களின் கையிற் சேர்ந்தால், வான் சிறிது ஆ-(மிகப்பெரிய)ஆகாயமும் சிறியதென்னும்படி, அறம் பயனும் - தருமத்தின் மேலான பயனே, போர்த்துவிடும் - பரப்பிவிடும். (எ - று.)

உவமையணி. "பார்த்தெதிர், வியந்தவர் வெருக்கொள விசும்பி னேங்கினை, னுயர்ந்தவர்க்குதவிய வுதவி யொப்பவே" எனக் **கம்பர்** கூறியிருத்தலுங் காண்க. "தெள்ளிய ஆலின் சிறுபழத்தொருவிதை, தெண்ணீர்க்கயத்துட் சிறுமீன் சினையினும், நுண்ணிதேயாயினு மண்ணல் யானை, அனேதோர் புரவி ஆட் பெரும் படையொடு, மன்னர்க் கிருக்க நிழலா கும்மே" என்னும் **நற்றிணைச்** செய்யுளும், இங்கே பார்க்கத் தக்கது. "இனேத்துணைத் தென்பதொன்றில்லே விருந்தின், துணைத் துணை வேள்விப் பயன்" என்ற **திருக்குறளின்** உரையிற் பரிமேலழகர் 'பொருளளவு "தான்சிறிதாயினுந் தக்கார்கைப் பட்டக்கால், வான் சிறிதாப்போர்த்துவிடும்" ஆகலின், இனேத்துணைத் தென்பதொன்றில்லே யென்றுங் கூறினர்' என்றதையும் நோக்குக. உறக்

குந்துணையது - கிள்ளியெடுக்கும் அளவுள்ளது; "உகிர்ப்புரைபுக்கோர் தம்மை யுகிர்களாலுறக்கு மூன்றி" என்ற **கம்பராமாயண**முங் காண்க. இனி, உறக்கும்என்பதை உறங்கும் என்பதன் வலித்தல் என்றுகொண்டு, உறங்குவதுபோலடங்கியிருப்பதாகிய என்று உரைத்தாரு முளர். தகுதி-ஞான ஒழுக்கங்களால் வரும் உயர்வு. அகற்சியில் தனக்கு ஒத்ததும் மிக்கதும் வேறு இல்லாத தாதலால், வானை எடுத்துக் கூறினர்.

ஆலம்வித்து, அம்-சாரியை. பயந்தாஅங்கு - செய்யுளிசை நிறைக்க வந்த அளபெடை. அறப்பயனும், உம்மை - அசைநிலை: உயர்வுசிறப்பு மாம். சிறிதாயினும், உம்மை-இழிவுசிறப்பு. போர்த்துவிடும் என்றதில், 'விடு' என்றது-துணிவுணர்த்தும். (அ)

கூ. வைகலும் வைகல் வரக்கண்டு மஃதுணரார்
வைகலும் வைகலை வைகுமென் றின்புறுவர்
வைகலும் வைகற்றம் வாழ்நாண்மேல் வைகுதல்
வைகலை வைத்துணரா தார்.

(இ - ள்.) வைகலும்-தினந்தோறும், வைகல்-பொழுது கழிதலை, தம் வாழ்நாள்மேல் வைகுதல் வைத்து-தமது ஆயுள்நாளிலே கழிதலாக வைத்து, வைகலை உணராதார்-நாள்கழிதலின் உண்மைநிலைமையை அறியாதவர்கள்,—வைகலும்-தினந்தோறும், வைகல்-நாள்கழிதல், வர-வந்துகொண்டேயிருக்க, கண்டும்-(அதனைப்) பிரதியட்சமாகப் பார்த்திருந்தும், அஃது உணரார்-அதன் உண்மையை அறிந்து (இரங்கி விரைந்து) அறஞ்செய்யாதவர்களாய், வைகலும்-தினந்தோறும், வைகலை-ஆயுள்கழிதலை, வைகும் என்று-(மேன்மேல்) இருக்கிறதென்று எண்ணி, இன்புறுவர்-மகிழ்ச்சியடைவர்; (எ - று.)

வந்த சொல்லும் பொருளும் பின்னும் பலமுறை வந்ததனால், இது-**சொற்பொருட்பின்வருநிலையணி**; வடநூலார் **உபயாவ்ருத்திதீபக** மென்பர்: "சொல்லுக சொல்லிற் பயனுடைய சொல்லற்க, சொல்லிற் பயனிலாச்சொல்" என்ற **திருக்குறளி**ன் உரையில், பரிமேலழகர் 'சொல்லின் என்பது-இருவழியும் மிகையாயினும், சொற்பொருட்பின்வருநிலை யென்னும் அணிநோக்கிவந்தது; "வைகலும் வைகல் வரக்கண்டும்" என்பது போல' என இப்பாட்டை எடுத்துக்காட்டினர்.

வைகல் என்றது-நாள்கழிதற்குக் காரணமான சூரியோதய அஸ்தமனங்களை. **சிந்தாமணி**யில் "வைகல் நாளும் வைகின்றே" என்றதற்கு, 'நாள்கள்தோறும் நாள் கழியாநின்றது' என நச்சினார்க்கினியர் உரைத்ததும் இங்கு உணரத்தக்கது.

முதலடியில் ஆய்தம் மெய்போல் ஒலித்தது: அலகிட்டுக்காண்க. (கூ)

சo. மான வருங்கல நீக்கி யிரவென்னு
மீன விளிவினுல் வாழ்வேன்ம—னீனத்தா
லூட்டியக் கண்ணு முறுதிசேர்ந் திவ்வுடம்பு
நீட்டித்து நிற்கு மெனின்.

(இ - ள்.) ஈனத்தால்-இழிவான தொழில்களினால், ஊட்டியக் கண்ணும்-உணவு முதலியவற்றைக் கொடுத்து வளர்த்தவிடத்தும், இவ்வுடம்பு-

இந்த உடம்பு, உறுதி சேர்ந்து-வலிமையை அடைந்து [வரவர வலிமை தளர்ந்து அழியாமல்], நீட்டித்து நிற்கும் எனின்-பலஊழிகாலம் நிலை பெற்று நிற்குமானால்,—மானம் அருங்கலம் நீக்கி-மானமாகிய பெறுதற் கரிய ஆபரணத்தைவிட்டு, இரவு என்னும்-பிச்சையெடுத்தலாகிய, ஈன இளிவினால்-மிக்க இழிவைத்தரும் தொழிலினால், வாழ்வேன் மன்-உயிர் வாழ்வேன்; (எ - று.)

நிலையில்லாத உடம்பைக் காத்தற்பொருட்டு இழிவான காரியங் களைச் செய்தல் வீண்; நிலையான உயிரைக் காத்தற்குவேண்டிய தருமங் களைச் செய்வதே நலம் என்று கருத்து. எவ்வளவு காப்பாற்றினாலும் உடம்பு நீட்டித்து நிற்பதில்லை யாதலால் அதற்காக மானத்தை விட்டு யாசித்துவாழ்தல் என்னும்பொருளைத் தருவதனால், '**மன்**' - **ஒழியிசைப் பொருளில்** வந்தது. மற்றை ஆபரணங்கள்போல உடம்புக்கே அழகு செய்யாமல் உயிர்க்கு நன்மை செய்தலால், மானத்தை 'அருங்கலம்' என்றார்; அன்றியும், மற்றை அணிகளை இழந்தால் மீண்டும் பெறுதல் கூடும்: மானத்தை இழந்தால் மீண்டும் பெறலாகாது என அறிக. 'மான வருங்கலம்' - **உருவகம்.**

ஈன இளிவு-ஒருபொருட்பன்மொழி. "இலமென்னும் வன்மையின் வன்பாட்டதில்," "இன்னுமைமேண்டி னிரவெழுக" என்ப ஆதலால், 'இரவென்னும் ஈன இளிவு' எனப்பட்டது. ஊட்டியக்கண் - கண் ணீற்று எதிர்கால வினையெச்சம்; ஊட்டு - உண் என்பதன் பிறவினை. (கo)

ரு - ஆம் அதிகாரம்—தூய்தன்மை

இதற்கு - **இரட்டுறமொழிதலால்,** தூய்து அன்மை எனப் பிரித்து - (மனிதசரீரத்தின்) சுத்தமுடையதல்லாத தன்மையைக் கூறுவ தென்றும்: தூய் தன்மை எனப் பிரித்து - (அவ்வுடம்பை விரும்பாத) சுத்தமான தன்மையென்றும் பொருள்கொள்க. முறையே எழுவாய்த்தொகாநிலைத் தொடரும், பண்புத் தொகைநிலைத்தொடருமாம். 'தூயதன்மை' என்று பாடமாயினும், தூயது அன்மை, தூய தன்மை என இருவகையாகப் பிரிந்து இவ்வாறே பொருள்படும். தூயதன்மை-குறிப்புப் பெயரெச்சத் தொடர். மனத்தை மயக்கி நல்ல அறத்தைச் செய்யவொட்டாமற் பெரும்பாலுங் கெடுப்பது மகளிருடம்பே யாதலால், அதனிடத்து விருப் பத்தை ஒழித்து அறத்தில் மனத்தைச் செலுத்துதற்பொருட்டு, அவர் களது உடம்பின் இழிவை எடுத்துக் கூறுதலால், இவ்வதிகாரம் அறன் வலியுறுத்தலின்பின் வைக்கப்பட்டது.

சக. மாக்கேழ் மடநல்லா யென்றரற்றுஞ் சான்றவர்.
நோக்கார்கொ னெய்யதோர் துச்சிலே—யாக்கைக்கோ
ரீச்சிற சுன்னதோர் தோலறினும் வேண்டுமே
காக்கை கடிவதோர் கோல்.

(இ - ள்,) 'மா-அழகையும், கேழ்-ஒளியையும், மடம்-இளமையையும், நல்லாய்-நற்குணத்தையுமுடைய மங்கையே!' என்று அரற்றும்-என்று (மகளிரைக்கண்டு கருமூற்று) வாய்விட்டு இரங்குகின்ற, சான்றவர்-பெரி யோர்,—யாக்கைக்கு - உடம்பில், ஓர் ஈ சிறகு அன்னது-ஈயினது ஒரு

பக்கத்துச் சிறகி னளவான, ஓர் தோல் - மிகவுஞ்சிறிய தோல், அறிஞும்-அறப்பட்டுப்போனலும், காக்கை கடிவது - (அப்புண்ணைக்குத்துதற்கு வருகின்ற) காக்கையை அடித்து ஓட்டுவதற்கு, ஓர் கோல் - ஒருகொம்பு, வேண்டுமே-வேண்டியிருக்குமே! (இவ்வாறு) கொய்யுதி-தாழ்ந்த தன்மையுள்ளதாகிய, ஓர்-ஒரு, துச்சில - உடம்பைப்பற்றி, நோக்கார்கொல் - ஆராய்ந்து பாரார்களோ? (எ - று.)

"ஒழுகிய நடையு நீரு முதல கையிகப்புறுறும், அழுக விவ்வண்ணல் யாக்கை யகம் புறமாயிற்றுயின், கழுகொடுகவருங்காக்கை கடிதடிகொண்கோத்தும், அழகுளகழலாமன்னெனாயிரச்சாதிமாதோ" என்றது இங்குக் காணத்தக்கது. இவ்வளவு அருவருப்புக்கு இடமான உடம்பை அழகியதாகக்கண்டுவிரும்புதல் பெரியோர்கொள்கையன்று என்பது கருத்து. சான்றவர் - நற்குண நல்லொழுக்கங்களால் நிறைந்தவர்; மகளிரை விரும்பிப் புகழ்கின்ற புல்லறிவாளரை இங்கே 'சான்றவர்' என்றது - பரிகாசத்துக்குச்சொன்ன **எதிர்மறையிலக்கணை;** வட நூலார் **'விபரீதலக்ஷணை'** என்பர்: இது, **பிறகுறிப்பில்** அடங்கும். அசுத்தியைக்கண்டிருப்பாரையின் இங்ஙனங் காமுற்று அரற்றுவர் என்றற்காக, 'நோக்கார்கொல்' என்றார். மாக்கேழ் பதற்கு - மாந்தளிர் நிறம் விளங்குகின்ற அல்லது திருமகளையொத்த என்றும், மடம் என்பதற்கு - மென்மை அல்லது இளமையையுடைய எனினுமாம்.

துச்சில்(துஞ்சு + இல்)-தங்குமிடம்; உயிர்தங்குமிடமாகியஉடம்பைக் குறித்தது. 'புக்கில்' என்றபாடத்துக்கும் பொருள் இதுவே. புக்கில்-சொந்தமல்லாத வீடு. யாக்கைக்கு, குவ்வுருபு-கொள்ளுதற் பொருளதாகாமல் இடப்பொருள தாதலால், **உருபுமயக்கம்.** ஈசசிறகு - மிக்கசிறுமைக்கு எடுத்துக்காட்டியதோர் அளவை. கொல்-வினுவோடு இரக்கம். உம்-இழிவுசிறப்பு, எகாரம் - இகழ்ச்சி.

ஒன்று + துச்சில் = ஓர் துச்சில்; ஓரீ; ஓர்தோல், ஓர்கோல் என்பனவும் இவ்வாறே. இதனால், 'ஒன்று இரண்டு என்னும் எண்கள் ஓர் ஈர் என நிற்பது வருமொழிமுதலில் உயிர்வருமிடத்தே' எனவும், 'முதல் நீளாது உகரம்பெற்று ஒரு இரு என நிற்பது மெய்வருமிடத்தே' எனவும், 'இவை மாறுபடவரின் வழுவாம்' எனவும் சிலர் கூறுவது தகுதியன்று. ஆனது பற்றியே, தொல்காப்பியத்தில் அக்காலத்துப்பெரும்பான்மை வழக்குப் பற்றி அங்ஙனங்கூறி யிருந்ததை நன்னூலார் **இறந்ததுவிலக்க**லால் ஒழித்து, இலக்கியங்கண்டு "முதலீரெண்முதல்நீளும்" என்றும், "ஒன்றன் புள்ளி ரகரமாக, இரண்டனெற்றுயிரேக உவ்வருமே" என்றும் பொதுப்படச் சூத்திரஞ் செய்தனரென்க. நன்னூலார்தாமே "ஆனவொன் ருதி **யோர்புடை** யொப்பினமே," "வேறவற்றெண்ணு **மோர்பொதுவினை** வேண்டும்" என மெய்ம்முதல் மொழிமுன் ஓர் என உபயோகித்திருத்தல் காண்க. "அச்சாணியன்ன **தோர்சொல்,**" "ஆயிரங்காக்கைக் **கோர்கல்**" என இவ்வாறுவந்துள்ளவை அளவிறந்தன. இந்நாலடியாரில், உயிர் முதலோடு மெய்ம்முதலோடு வாசியற ஓர் என நின்றது. "எவ்வுயிருங் காக்க **வொருவிச** ணுண்டோ வில்லையோ" என்ற **திருவள்ளுவர்**தனிப்பாடலிலும், "உம்மையெச்ச **மிருவிற்**றுனும்" என்ற **தொல்காப்பியத்**திலும், 'ஒருவாறு' என உலக வழக்குச்செய்யுள்வழக்கு இரண்டிலும் உயிர்முதல்முன் ஒரு

என வந்தது. நக்கீரர் நச்சினார்க்கினியர் பரிமேலழகர் முதலிய மூன்ஞ ருரைகளிலும், பஞ்சதந்திரம் முதலிய பின்ஞருரை நடைகளிலும் இப் படியே காணலாம். மூன்றுமடியில் **இனவெதுகை** காண்க.

இச்செய்யுள் - **ஒருவிகற்ப நேரிசைவெண்பா.** (க)

சஅ. தோற்போர்வை மேலுந் துளைபலவாய்ப் பொய்ம்மறைக்கு
மீப்போர்வை மாட்சித் துடம்பாஞன்—மீப்போர்வை
பொய்ம்மறையாக் காமம் புகலாது மற்றதனைப்
பைம்மறியாப் பார்க்கப் படும்.

(இ - ள்.) உடம்பு-இவ்வுடம்பு,—தோல் போர்வைமேலும்- தோலா கிய போர்வையின்மேலும், துளை பல ஆய்-பலதுளைகளையு முடையதாய், பொய் மறைக்கும் - (தன்னிடத்திலுள்ள) அசுத்தங்களைமறைக்கின்ற, மீ போர்வை - மேலேபோர்க்கும் ஆடைமுதலியவற்றால், மாட்சித்து - அழ கையுடையது : ஆஞல் - ஆதலால்,—மீ போர்வை-மேற்போர்வையினால், பொய் மறையா-(அதனிடத்துள்ள) அசுத்தியை மறைத்து, காமம் புக லாது-விரும்பிப் புகழ்ந்துசொல்லாமல், அதனை - அவ்வுடம்பை, பை மறி ஆ - பையைப்போல (உட்பக்கம் வெளிப்பக்கமாம்படி) மாற்றியதாக, பார்க்கப்படும் - ஆராய்ந்து பார்க்கவேண்டும்; (எ - று.)

மேலே அழகியதாயிருக்கின்ற பையை உட்புறந் திருப்பிப்பார்த் தால் அதிலுள்ள ஆபாசங்கள் விளங்குவதுபோல, நன்றாக ஆராய்ந்து பார்த்தால் உடம்பினுள்ளே பல அசுத்தங்களும் தெரியவரு மென்று கருத்து.

துளை பல - கண் செவி மூக்கு வாய் முதலிய அசுத்தங்கள் வெளிப் படுகிற வழித்துவாரங்கள். துளை என்பதற்கு - மயிர்த்துவாரங்களும், மேகவிரணங்களாலுண்டாம் புண் துவாரங்களும் என்று ஒருவர். மீப்போர்வை பொய்ம்மறையா என்றது - மேல் தோலின் அழகையும் ஆடையணிகளின் அழகையுமே கண்டு உடம்பினுள்ளே யுள்ள அசுத் தியை அடியோடே அறியாமல் விட்டு என்றபடி. இவ்வாறு அதனுண் மையை ஆராய்தறிந்தவர்கள் அதனிடத்து வெறுப்பையுடையவர்களாய்த் துறந்து முத்திபெற முயல்வரென்பதாம். காமம்புகலுதல்-புனைந்துரைத் தல்; "காமஞ்செப்பாது கண்டதுமொழிமோ" என்ற **இறையனர்பாகரத்** தைப் போல. காமம் புகலாது-காம மனுபவித்தலை விரும்பாமல் என்றரு முளர். இங்கே 'பைம்மறியாப்பார்க்கப்படும்' என்றதை, **மணிமேகலை**யில் வருகிற "மக்கள்யாக்கை யிதுவெனவுணர்ந்து, மிக்கோ யிதனைப் புற மறிப்பாராய்" என்பதனோடும், **இறையனாகப் பொருளுரை**யில் வருகிற 'பைம்மறியா நோக்கப்பருந்தார்க்குந் தகைமைத்து' என்பதனோடும் ஒப் பிடுக. 'தொளை' என்றும் பாடம்.

போர்வை-போர்க்கப்படுவது; ஐ-செயப்படுபொருள்விகுதி, வ்-எழு த்துப்பேறு. தன்வினைபிறவினைகட்குப் பொதுவாகிய 'மறையா' என்ற வினையெச்சம், இங்கே பிறவினைப்பொருளதாய் நின்றது. மற்று-அசை. அறிஞரால் உடம்பு பார்க்கப்படும் என்று செயப்பாட்டு வினைவந்துள்ளது. இனி, பார்க்க - பார்த்தல், படும் - தக்கது என உரைப்பினுமாம்.

முதலிரண்டடியில் **இனவெதுகை** காண்க. (உ).

சஉ. தக்கோலந் தின்று தலைநிறையப் பூச்சூடிப்
பொய்க்கோலஞ் செய்ய வொழியுமே—யெக்காலு
முண்டி வினையு ளுறைக்கு மெனப்பெரியோர்
கண்டுகை விட்ட மயல்.

(இ - ள்.) 'எக்காலும் - எப்பொழுதும், உண்டி - உணவாகிய, வினை யுள் - தொழிலிலுலேயே, உறைக்கும் - உறுதிபெறும்,' என - என்று, பெரியோர் - (அறிவாற்) பெரியவர்கள், கண்டு - உண்மையுணர்ந்து, கை விட்ட - வெறுத்துவிட்ட, மயல் - செத்தையாகிய உடம்பின் அசுத்தங் கள்,—தக்கோலம் தின்று - வாசனைப்பண்டங்களோ மென்று தின்று, தலை நிறைய - தலைமயிர் நிரம்ப, பூ சூடி - புஷ்பங்களைச் சூட்டிக்கொண்டு, பொய்கோலம் செய்ய - பொய்யான அலங்காரங்களைச் செய்துகொள்ள தனால், ஒழியுமே - நீங்குமோ? (எ - று.)

தக்கோலம் - வால்மிளகு: "தக்கோலம் தீம்பூத் தகைசா லிலவங் கங், கற்பூரஞ் சாதியோ டைந்து" என்கிற ஐந்து முகவாசப்பண்டங் களுள் ஒன்று; இது, மற்றை நான்கிற்கும் **உபலக்ஷணம்**. நிலையில்லாமை யாற் பொய்யாகிய உடம்பிற்குச் செய்யப்படுவதனாலும், உள்ளேபொருந் திய துர்க்கந்தத்தை ஒழித்திடாமையாலும், 'பொய்க்கோலம்' என்றார். 'சோற்றாலெடுத்த சுவர்' என்றாற்போல, 'எக்காலும் உண்டிவினையு ளுறைக்கும்' என்றார். மயல், துரால், செத்தை என்பன - ஒருபொருட் சொற்கள். மயல் என்றசொல் இப்பொருளதாதலை "வம்புண் கோதை யர் மாற்று மயலோ" எனச் **சிந்தாமணி**யிலுங் காண்க. உண்டி வினையு ளுறைக்கும் - உணவாகிய தொழிலில் (அசுத்தம்) மிகுதிப்படும் என்று ஒருத்தர்.

வினையுள் - 'உள்' என்னும் ஏழனுருபு இடப்பொருளதாகாமற் கார ணப் பொருளதாதலால், **உருபுமயக்கம்**. எ - எதிர்மறை. உம் - முற்று. கைவிட்ட, கை - **உபசர்க்கம்**.

"மெய்ப்படு சாந்தும் பூவு மிகுநனி கமழுமேனுங், கைப்படு சாந்தும் பூவுங் கொண்டலாற் கலக்க லாகா, ஐப்படு பித்து நெய்த்தோ ரசும்பு சோரழுகற் புன்ரூற், பொய்ப்பட வுரைத்ததுண்டோ பொன்னனீர் நம் முணுமால்" என்னுஞ் **சிந்தாமணி**யையும், "முருகு புத்தப்புதுமலர் பொற் புற முடிக்கிற் கமழுமே, கருகுகற்றைக் குழலொழுக்கிற் பழையசிக்குக் கமழுமே" என்ற மோகவதைப்பரணியையும் இங்கே நோக்குக.

இரண்டாமடியில், யகரமெய் - **ஆசெதுகை**. (கூ)

சச. தெண்ணீர்க் குவளை பொருகயல் வேலென்று
கண்ணில்புன் மாக்கள் கவற்ற விடுவெனே
வுண்ணீர் களைந்தக்கா லுங்குசூன் றிட்டன்ன
கண்ணீர்மை கண்டொழுகு வேன்.

(இ - ள்.) உள் நீர் களைந்தக்கால் - (கண்களின்) உள்ளே யிருக் கின்ற நீரை எடுத்துவிட்டால், நுங்கு சூன்றிட்டன்ன - நுங்கைத் தோண்டியெடுக்கப்பெற்ற பனங்காயின் ஓடுபோன்ற, கண் - கண்களின்,

நீர்மை - (இழிவான) தன்மையை, கண்டு ஒழுகுவேன் - பார்த்து வருகின்ற நான்,—(அக்கண்களை), 'தெள் நீர் குவளை-தெளிந்த நீரில் தோன்றிய நீலோற்பல மலர்போலும் : பொரு கயல் - போர்செய்து பிறழ்கின்ற இரட்டைக்கயல்மீன் போலும் : வேல் - வேலாயுதம்போலும்,' என்று-என்றுசொல்லிப் புகழ்ந்து, கண் இல் புல் மாக்கள் - நல்லறிவில்லாத அற்பமனிதர்கள், கவற்ற - (என்மனத்தைக்) கவலைப்படுத்துவதனால், விடுவெனே - (நான்கொண்ட துறவை) விடுவேனே ? (எ - று.)

கண்களுக்குக் குவளை - நிறத்திலும் மென்மையிலும் அழகிலும், கயல் - வடிவிலும், பிறழ்ச்சியிலும், வேல் - கூர்மையிலும் ஆடவரை வருத்துதலாலும், இம்மூன்றும் - வடிவத்திலும் உவமை கூறப்படும். அன்று மலர்ந்த வாடாமலர் என்பார், 'தெண்ணீர்க் குவளை' என்றார். பொரு என்னும் அடைமொழியை வேலோடும் கூட்டலாம். இழிவுதோன்ற, 'மாக்கள்' என்றார். மாக்களெனப்படுவார்-மனவுணர்ச்சியில்லாமல் ஐம்பொறியறிவுமாத்திரமேயுடைய விலங்குபோன்ற ஒருசார் மானிடங்கள். மக்களாவர் - ஐம்பொறியுணர்வோடு மனவறிவு மூடையவர்; விவேகிகளான மனிதர். "மாவும் மாக்களும் ஐயறிவினவே," "மக்கள்தாமே ஆறறிவுயிரே" என்னுந் **தொல்காப்பியச்** சூத்திரங்களைக் காண்க. மா என்பது விலங்கின் பெயராதலால், அதன் பன்மையான மாக்கள் என்பது - விலங்குபோன்ற அவிவேகிகளை உணர்த்துமென்க. கவற்ற விடுவெனே என்பதற்கு - கவலைப்படுத்தி மயக்கும்படி மனத்தைப் போனவழியில் விட்டுவைப்பேனே ? என்றும் பொருள் கூறலாம்.

கவற்று என்ற பிறவினைப் பகுதியில், கவல் - தன்வினைப்பகுதி, று-பிறவினைவிகுதி, ஒ-எதிர்மறை. சூன்றிட்டு, சூல் - பகுதி. சூலுதல் - குடைதல்.

இது - **ஒருவிகற்பஇன்னிசை வெண்பா.** அடுத்தசெய்யுளும் இது. (சு)

சுரு. முல்லை முகைமுறுவன் முத்தென் றிவைபிதற்றுங்
கல்லாப்புன் மாக்கள் கவற்ற விடுவெனே
வெல்லாருங் காணப் புறங்காட் டுதிர்ந்துக்க
பல்லென்பு கண்டொழுகு வேன்.

(இ - ள்.) எல்லாரும் காண - யாவரும் பார்க்கும்படி, புறங்காடு - ஊருக்குப்புறத்திலே யுள்ள நன்காட்டில், உதிர்ந்து உக்க - சிந்திக்கிடக்கின்ற, பல் என்பு - பற்களாகிய எலும்புகளின் தன்மையை, கண்டு ஒழுகுவேன் - பார்த்துவருகின்ற யான்,—'முறுவல் - அப்பற்கள், முல்லை முகை - முல்லையரும்புகள்போலும், முத்து - முத்துக்கள்போலும்', என்ற இவை - என்ற இத்தன்மையனவான புகழ்ச்சிகளை, பிதற்றும் - சொல்லிக்கொண்டு திரிகிற, கல்லா புல் மாக்கள் - (மெய்ந்நூல்களைப்) படியாத அற்பமனிதர்கள், கவற்ற - கவல்விக்க, விடுவெனே—? (எ - று.)

பல்லுக்கு முல்லையரும்பும் முத்தும் - வெண்ணிறத்தாலும், வடிவினாலும், அழகினாலும் உவமை கூறப்படும். "பல்லெனின்று மென்பெனுது பவளமுட்பொதிந்த கூர், முல்லையென்ப முறுவலென்ப முத்தமென்ப பித்தரே" என்பது, மோகவதைப் பரணி. உதிர்ந்து உக்க - **ஒருபொருட் பன்மொழி.** உக்க, உகு - பகுதி. என்றிவை - விகாரம். (சு)

சக. குடரும் கொழுவுங் குருதியு மென்பும்
தொடருந ரம்பொடு தோலு—மிடையிடையே
வைத்த தடியும் வழும்புமா மற்றிவற்று
ளெத்திறத்தா ளீர்ங்கோதை யாள்.

(இ - ள்.) குடரும்-குடலும், கொழுவும்-கொழுப்பும், குருதியும்-இரத்தமும், என்பும்-எலும்பும், தொடரும்-(ஒன்றோடொன்று)தொடர்ச்சியாயிருக்கின்ற, நரம்பொடு-நரம்பும், தோலும்—, இடை இடையே வைத்த-(இவற்றின்) நடுவிலே நடுவிலே வைத்த, தடியும்-தசையும், வழும்பும்-தினைமும், ஆம்-ஆகிய, இவற்றுள்-இவைகளுக்குள், ஈர் கோதையாள்-குளிர்ந்த மாலையையுடைய இப்பெண், எ திறத்தாள்-எந்தப் பகுதியையுடையவள்? (எ - று.)

எத்திறத்தாள்-என்ன மேம்பாடுடையள்? எனினுமாம்.

பெண்ணுசையடிக்கு அறங்கைவிட்ட ஒருவனுக்கு ஒரு மாதைச் சுட்டிக்காட்டி, 'குடல் முதலியவற்றை லாகியதே இவருடைய உடம்பு: ஆதலால், இவற்றுள் ஒன்றையினுஞ் சுத்தமுடைய பொருளுண்டோ? பாரும்' என்று, அறிவுறுத்தச் சொல்லியது. இச்செய்யுள்-அருவருப்புத் தோன்றக் கூறினமையால், **இழிப்புச்சுவையணி**க்கு உதாரணமாம்.

குடர்—குடல்: ஈற்றுப்போலி. இடையிடை - அடிக்கு, தொறுப் பொருளது. எ, மற்று-அசைகள். ஈர்ங்கோதை—ஈர்+கோதை.

"என்பினை நரம்பிற் பின்னி யுதிரந்தோய்த் திறைச்சி மெத்திப், புன்புறந் தோலைப்போர்த்து மயிர்புறம் பொலிய வேய்ந்திட், டொன்பது வாயிலாக்கி யூன்பயில் குரம்பை செய்தான், மன்பெருந் தச்ச னல்லன் மயங்கினர் மருளவென்றூன்" என்னுஞ் **சிந்தாமணி**ச்செய்யுள் இங்கு உணரத்தக்கது. "குடர் வழும்பு தொடர் நரம்பு குருதியென்புக் குழுவு மாம், கடல் வழங்கு மிர்தம் இந்த மகளிரென்ப கவிகளே" என்றதுங் காண்க. (சு)

சள. ஊறி யுவர்த்தக்க வொன்பது வாய்ப்புலனுங்
கோதிக் குழம்பலைக்குங் கும்பத்தைப்—பேதை
பெருந்தோளி பெய்வளா யென்னுமீப் போர்த்த
கருந்தோலாற் கண்விளக்கப் பட்டு.

(இ - ள்.) ஊறி-(மலங்கள்) சுரந்து, உவர் தக்க-வெறுக்கத்தக்க, ஒன்பது வாய் புலனும்-நவத்துவாரங்களாகிய உறுப்புக்களெல்லாம், குழம்பு-மலத்தை, கோதி அலைக்கும்-சிதறிச்சிதறி வெளிப்படுத்தப்பெற்ற, கும்பத்தை-(மாதரது) உடம்பாகிய பாண்டத்தை (நோக்கி),-பேதை-அறிவில்லாதவன்,—மீ போர்த்த கருந் தோலால்-அதன்மேற் போர்க்கப் பட்டுள்ள பெரிய தோலினுலே, கண் விளக்கப்பட்டு-கண்களுக்கு ஒளி பெறும்படி செய்யப்பட்டு, - 'பெருந்தோளி - பெரிய தோள்களையுடைய வளே! பெய்வளாய்-இடப்பட்ட வளையல்களை யுடையவளே!' என்னும்-என்று புகழ்ந்து சொல்வான்; (எ - று.)

பேதை இவ்வாறு ஆவனெனவே, அறிவுடையவன் அதனிழிவை அறிந்து துறந்து முத்திபெறுவ னென்றதாம். 'மீப்போர்த்த கருந் தோலாற் கண்விளக்கப்பட்டு' என்றது - மேற்போர்த்துள்ளதோலினழ கையே பார்த்து மோகித்து உள்ளின் அசுத்தத்தை நோக்காமல் என்ற படி. 'பெருந்தோள்' என்றார், மகளிர்தோள் பருத்திருத்தல் நல்லிலக் கண மாதலின்; "தோள் கண்ணென மூவழிப்பெருகி" என்றார் **கலித் தொகை**யிலும். பல உறுப்புக்களிருந்தும் தோலைக் குறித்தது, அத் தோளின்மேற் கிடந்துறங்குகின்பத்தை நோக்கியென்ப: "தாம் வீழ்வார் மென்றோட் டுயிலி னினிது கொல்" என்றார், நாயனாரும்.

ஒன்பதுவாய்ப் புலனும், உம்-முற்று. பேதை என்னும் எனை இயைக்க. பெய்வளாய்-வினைத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகையாகிய 'பெய்வளை' என்பதன் ஈறுதிரிந்த விளி.

இசசெய்யுளில் **இனவெதுகை** காண்க. (எ)

சூடு. பண்ட மறியார் படுசாந்துங் கோதையுங்
கண்டுபா ராட்டுவார் கண்டிலர்கொல்—மண்டிப்
பெடைச்சேவல் வன்கழுகு பேர்த்திட்டுக் குத்தன்
முடைச்சாகா டச்சிற் றுழி.

(இ - ள்.) பண்டம்-(உடம்பாகிய) பண்டத்தின் இழிவை, அறியார்-அறியாமல், படு சாந்தும்-பூசப்பட்ட சந்தனத்தையும், கோதையும்-மாலையையும், கண்டு-பார்த்து (மயங்கி), பாராட்டுவார்-(அவ்வுடம்பைக்) கொண்டாடுபவர்கள்,—முடை சாகாடு-முடைநாற்றத்தையுடைய (இவ்வுடம்பாகிய) பண்டி, அச்சு இற்ற உழி-(உயிராகிய) அச்சு முறிந்து இறந்த பொழுது, (அதனை), பெடை சேவல்-பேடையும் ஆணுமாகிய, வல் கழுகு-வலிய கழுகுகள், மண்டி-நெருங்கி, பேர்த்திட்டு-இடத்தைவிட்டு இழுத்து, குத்தல்-குத்திக் தின்னுதலை, கண்டிலர்கொல்-பார்த்திலரோ? (எ-று.)

கண்டுள்ளாராயின் அருவருப்புக்கொண்டு உடனே வெறுத்துத் துறப்பரே யென்றபடி. அச்சில்லாமல் வண்டி செல்லாததுபோல உயிரில்லாமல் உடம்பு இயங்காதாதலால், உடலை வண்டியென்றும், உயிரை அச்சென்றும் **உருவகப்**படுத்தினர். 'அச்சு' வன்ற சொல்லின் நயத்தால், அச்சாணியென்றும் உயிரென்றும் பொருள்படுதல் காண்க.

பெடை சேவல்-முறையே பறவைகளின் பெண்பெயரும் ஆண் பெயருமாம். முடை-ஒருவகைத் துர்க்கந்தம். சாகாடு-சகடமென்னும் வடமொழியின் சிதைவு; இது சகடு என்றும், சாடு என்றுஞ் சிதைந்து வழங்கும். அச்சு-சக்கரங்கோத்த மரம்; அஃதுமென்னும் வடசொல்லின் சிதைவு. இற்றுழி-விகாரம்.

'கொண்டுபாராட்டுவார்' என்ற பாடத்துக்கு-பூசுவன முடிப்பன முதலியவற்றால் உடம்பை அலங்கரித்து ஆதரிப்பவரென்க. 'கொத்தல்' என்றும் பாடம். (அ)

சகூ. கழிந்தா ரிடுதலை கண்டார்நெஞ் சுட்கக்
குழிந்தாழ்ந்த கண்ணவாய்த் தோன்றி—யொழிந்தாரைப்
போற்றி நெறிநின்மி னீற்றிதன் பண்பென்று
சாற்றுங்கொல் சாலச் சிரித்து.

(இ - ள்.) கழிந்தார்-இறந்தவர்களுடைய, இடு தலை-(இடுகாட்டிற்) சிந்திக்கிடக்கின்ற தலைகள்,—கண்டார் நெஞ்சு உட்க-(தம்மைக்) கண்டவர்கள் நெஞ்சம் அஞ்சும்படி, குழிந்து ஆழ்ந்த கண்ண ஆய்-மிகவும் ஆழ்ந்திருக்கின்ற கண்களையுடையவையாய், தோன்றி- காணப்பட்டு,—ஒழிந்தாரை - (இறவாதுநின்ற) மற்றவர்களைக்குறித்து, 'போற்றி - (நீவிர் இவ்வாறாதபடி உங்களை) பாதுகாத்துக்கொண்டு, நெறி - (துறிவுறமாகிய) நல்லவழியிலே, நின்மின் - நில்லுங்கள் : இதன்-இவ்வுடம்பினது, பண்பு - குணம், இற்று - இப்படிப்பட்டது', என்று—, சால - மிகவும், சிரித்து—, சாற்றும்கொல் - சொல்வனபோலும்: (எ - று.)

பற்கள் வெளித்தோன்றும்படி வாய்திறந்து கிடக்கின்ற இறந்தவரின் வெண்டலைகள் உடம்பைவிரும்புகிற அறிவிலாரை நோக்கிச் சிரித்துச சாற்றுமெனக் கூறுதலால், **தற்குறிப்பேற்றவணி**; 'கொல்' என்றது, அதன் உருபாய் நின்றது.

குழிந்து ஆழ்ந்த - ஒருபொருட்பன்மொழி. கண்ண- சினையடியாகப் பிறந்த பலவின்பாற் பெயர். ஒழிந்தார் - இறவாமல் நின்றவர்கள். இற்று- இகரச்சுட்டடியாப்பிறந்த ஒன்றன்பாற்குறிப்புமுற்று; று - விகுதி. (கூ)

ரு0. உயிர்போயார் வெண்டலை யுட்கச் சிரித்துச்
செயிர்தீர்க்குஞ் செம்மாப் பவரைச்—செயிர்தீர்ந்தார்
கண்டிற் றிதன்வண்ண மென்பதனுற் றம்மையோர்
பண்டத்துள் வைப்ப திலர்.

(இ - ள்.) உயிர் போயார் - உயிர்நீங்கினவர்களுடைய, வெள் தலை - (இடுகாட்டிற்கிடக்கின்ற) வெண்மையான தலைகள், உட்க - (கண்டவர்) அஞ்சும்படி, சிரித்து—, செம்மாப்பவரை - (இல்வாழ்க்கையின்பத்தால்) மிகக் களித்திருப்பவர்களை, செயிர் தீர்க்கும் - (அக்களிப்பாகிய) குற்றம் நீங்கச்செய்யும்; செயிர் தீர்ந்தார் - குற்றம் நீங்கினவர்கள், கண்டு - (அத் தலைகளைப்) பார்த்து, இதன் வண்ணம் இற்று என்பதனால்-இதன் குணம் இப்படிப்பட்டதென்று நினைப்பதனால், தம்மை - தங்கள் உடம்பை, ஓர் பண்டத்துள் வைப்பது இலர் - ஒருவகைப்பொருளில் வைத்து எண்ணுகின்ற தொழிலில்லாதவராவர் [ஒரு பொருளாக வைத்து மதியா ரென்ற படி]; (எ - று.)

உடம்பை வெறுத்துத் தவஞ்செய்து வீடுபெறுவ ரென்பதாம்.

இறுமாப்பவர், அல்லாப்பவர், சோகாப்பவர் என்பனபோல, 'செம்மாப்பவர்' என்பது - ஒருசொல். வெண்டலை-மேல்தோலழிந்து எலும்பு மாத்திரமாய் நிற்குந் தலை. (கo)

சு-ஆம் அதிகாரம்.—துறவு.

அதாவது - புறமாகிய செல்வத்தினிடத்து உண்டாகின்ற 'எனது' என்னும் புறப்பற்றையும், அகமாகிய உடம்பினிடத்து உண்டாகின்ற 'யான்' என்னும் அகப்பற்றையும் விடுதலைக்கூறுவது. தானல்லாத உடம்பையானென்று கருதி அதனிடத்துப் பற்றுசெய்தல் **'அஹங்காரம்'** என்றும், தன்னுடைய இயைபில்லாத பொருளை எனதென்றுகருதி அதனிடத்துப் பற்றுச்செய்தல் **'மமகாரம்'** என்றும் வடநூலிற் பெயர்பெறும்.

இந்நூலில் செல்வநிலையாமை, இளமைநிலையாமை, யாக்கைநிலையாமை, அறன்வலியுறுத்தல், தூய்தன்மை, துறவு என அதிகாரங்களை முறைப்பட நிறுத்தினமைக்குக் காரணம் - செல்வம் இளமை உடம்பு என்னும் இவற்றின் நிலையில்லாமையையும், இவற்றினாற் செய்யத்தக்க தருமத்தினது நிலையுடைமையையும், அறத்தைச்செய்ய வொட்டாமல் மனத்தை மயக்கிக்கெடுக்கின்றமகளிருடலின் அசுத்தமான தன்மையையும் அறிந்து நிலையில்லாத பொருள்களினிடத்திற் பற்றைவிட்டு நிலையுடைய அறத்தைப்பற்ற வேண்டுவதாக லென்க.

துறவு - துறத்தல் : தொழிற்பெயர்; துற - பகுதி, உ - விகுதி, வ் - உடம்படுமெய் : வு - விகுதி யென்றலும் உண்டு.

நிக. விளக்குப் புகவிருண் மாய்ந்தாங் கொருவன்
றவத்தின்முன் னில்லா தாம் பாவம்—விளக்குநெய்
தேய்விடத்துச் சென்றிருள் பாய்ந்தாங்கு நல்வினை
நீர்விடத்து நிற்குமாந் தீது.

(இ - ள்.) விளக்கு - தீபம், புக - (ஒளிடத்திற்) பிரவேசிக்க, இருள்- (அதற்கு முன்பு அங்கேயிருந்த) இருட்டு, மாய்ந்த ஆங்கு-அழிதல்போல, ஒருவன்-ஒருவன்செய்யும், தவத்தின்முன்- தவத்திற்கு முற்பட்டு, பாவம்-தீவினை, நில்லாது - அழியும்; விளக்கு நெய் - அத்தீபம் எரிவதற்குக் காரணமான நெய், தேய்விடத்து - குறைந்துபோமிடத்து, இருள்—, சென்று பாய்ந்த ஆங்கு - (அவ்விடத்திற்) போய்ப் பரவுதல்போல, நல்வினை - (அத்தவஞ் செய்தற்குக்கருவியான துறவாகிய) புண்ணியம், தீர்விடத்து - நீங்குமிடத்தில், தீது - பாவம், நிற்கும் - வந்துநிற்கும்; (எ - று.)

துறவினால் உண்டாகும் நன்மையும், அஃது இல்லாதபோது உண்டாகும் தீமையும் உபமானமுகத்தால் இச்செய்யுளில் விளக்கப்பட்டன.

தன்பகையாகிய அறம்வளர்தலின் தனக்குநிலையில்லாமல் தீவினை மெலிதலால், 'தவத்தின்முன் நில்லாதாம் பாவம்' என்றார்; "அல்லவை தேய அறம் பெருகும்" எனத் **திருவள்ளுவனார்** கூறியதும் இக்கருத்துப் பற்றியே. தவம், பாவம் - தபஸ், பாபம் என்னும் வடசொற்களின் திரிபுகள். **தவமாவது**-மனம் பொறிவழிபோகாது நிற்றற்பொருட்டு விரதங்களால் உணவுசுருக்குதல் முதலியன. பெரும்பான்மைபற்றி, தவம் துறவறத்தின்மேல் நின்றது; "தானந்தவ மிரண்டுந் தங்கா" என்ற **திருக்குறளிற்** போல.

விளக்கு - (பொருள்களை) விளங்கச் செய்வதாகிய தீப்பிழம்புக்கு முதனிலை திரிந்த தொழிலாகு பெயர்; வினைமுதற்பொருள் விகுதி புணர்ந்து கெட்ட பெயரென்றும் கொள்ளலாம். புக - காரணப்பொருளில் இறந்தகாலங்காட்டிய செயவெனெச்சம். ஆங்கு - உவமவுருபு. காரணமாகிய நெய்யின் தேய்தலைக் கூறி, காரியமாகிய விளக்கின் தேய்வைப் பெறவைத்தார். அதிகாரம் நோக்கி, நல்கினை 'துறவு' எனப் பட்டது. 'ஆம்' இரண்டும் - அசை. தேய்விடத்து - எதிர்காலவினையெச்சம்; தேய்வு இடத்து என்றும் பிரிக்கலாம்: தீர்விடத்து என்பதற்கும் இவ்வாறே. தீது - குறிப்பு வினையாலணையும் பெயர். மூன்று இல்லாதாம் என்றும் பதம் பிரிக்கலாம்.

துறவறத்திற்கு விளக்கும், பாவத்திற்கு இருளும் உவமை; **உவமையணி.**

இரண்டாமடியிலும், மூன்காமடியிலும், **இனவெதுகை.** (க)

நூ. நிலையாமை நோய்மூப்புச் சாக்காடென் றெண்ணித்
தலையாயார் தங்கருமஞ் செய்வார்—தலையில்லாச்
சித்தமுஞ் சோதிடமு மென்றுங் கிவைபிதற்றும்
பித்தரிற் பேதையா ரில்.

(இ - ள்.) தலை ஆயார் - மேலானவர்கள்,—நிலையாமை - (செல்வம்) நிலையில்லாமலிருத்தலையும், நோய் - (உடம்புக்கு) வியாதி வருதலையும், மூப்பு - கிழத்தனம் உண்டாதலையும், சாக்காடு என்று - மரணம் நேர்தலையும், எண்ணி - ஆராய்ந்து, தம் கருமம் செய்வார் - தாம் செய்யவேண்டுந் தொழிலாகிய துறத்தலையே செய்வார்கள்; (அதனைச் செய்யாமல்), தொலவு இல்லா - முடிவில்லாத, சத்தமும் - இலக்கண நூலும் சோதிடமும் - கணித நூலும், என்ற இவை - என்றுசொல்லப்பட்ட இவற்றை, பிதற்றும் - விடாமற் சொல்லிக்கொண்டு திரிகின்ற, பித்தரின் - பைத்தியம் பிடித்தவர்போல, பேதையார் - அறிவில்லாதவர், இல் - (எங்கும்) இல்லை; (எ - று.)

செல்வங்களும் அவற்றை அனுபவித்தற்கு உரிய உடம்பும் கெடுந் தன்மையனவாதலைக் கருதி ஞானநூல்களைக் கற்றுத் தேர்ந்து துறவு பூண்டு உய்யாமல், சத்தம் முதலிய நூல்களையே முக்கியமாகக்கொண்டு எப்பொழுதும் பயின்று வீண்காலங் கழிப்பது பேதைமை யென்பதாம்.

தொல்காப்பிய வுரையிலும், கலித்தொகையுரையிலும், நச்சினார்க்கினியர், சிலை. வியாகரணம் சந்தஸ் நிருக்தம் ஜ்யோதிஷம் கல்பம் என வேதத்திற்கு அங்கமாகவுள்ள ஆறுசாஸ்திரங்களையும் கூறிவருமிடத்து, சோதிடமென்பதற்கு பதிலாக 'நாராயணீயம் வாராகம் முதலிய கணிதமும்' என்று எழுதியிருத்தல்கொண்டு, சோதிட மென்பது கணித நூலாதல் துணியப்படும். "எண்ணெழுத்திகழேல்," "எண்ணுமெழுத்துங்கண் ணெனத்தகும்," "எண்ணென்பவேனை யெழுத்தென்ப இவ்விரண்டுங், கண்ணென்ப வாழுமுயிர்க்கு," "எண்ணுமெழுத்துங் கண்" எனப் பல விடத்தும் சிறப்பித்துக் கூறப்படுந் தன்மையன வாதலால், மற்றைய சாஸ்திரங்களை யெடுக்காமல் இவ்விரண்டையுமே எடுத்தார். "காணுதம் பாணினீயஞ்ச, ஸர்வசாஸ்த்ரோப காரகம்' எனவடநூலாரும் இவ்விரண்டு

அங்கங்களையுமே எடுத்துக்கூறுதலுங் காண்க. அறம் முதலிய பொருள் களைக் காணுதற்குக் கருவியாகிய இவற்றை அங்ஙனங் கருவியாகக் கருதாது பயனுகவே எண்ணிப் பாராட்டிப் பயில்பவர், 'பித்தற்றும் பித்தர்' என இகழப்பட்டனர். சத்தம் - சங்கீத சாஸ்திரமும், சோதிடம்-கிரகசஞ்சாரத்தால்வரும் பயனை யுணர்த்துஞ் சோதிடசாஸ்திரமு மென்று கொள்வாருமுளர். 'பித்தரிற் பேதையாரில்' என்றது, இவர் கற்றறிமூடராதலால். அதிகாரத்தால், 'தம்கருமம்' என்றது-துறவாம்; அன்றியும், அரிய மானிடப்பிறப்பு எடுத்ததன் பயன் முக்திபெறுதலே யாதலால், அதற்குக் காரணமான துறவறம் தம் கருமமேயாம்.

மூப்பு, சாக்காடு-தொழிற்பெயர்கள்; மூ, சா-பகுதிகள்; பு, காடு-விகுதிகள். 'என்று' என்னும் எண்ணிடைச்சொல்லை, 'நிலையாமை' முதலிய நான்கனுடனுங் கூட்டுக; நன்-இடையியலில் ஒன்பதாஞ் சூத்திரத்திலுள் இது தொகைபெருமல் வந்தது. தலையாயார்-உத்தமர். ஆயார், ய்-இறந்தகால விடை நிலை. தங்கருமஞ்செய்வார் தலையாயார் என மாற்றி, துறவுபூண்பவரே தலைமையானவரெனினுமாம். கருமம்-கர்மம்: வட சொல். அவை தாம் கற்றமுடிவதற்கு ஆயுள் போதாதபடி பரந்திருத் தலால், 'தொலைவில்லா' என்றார். இல்லா-ஈறுகெட்ட எதிர்மறைப் பெய ரெச்சம்; வினையெச்சமாகக்கொண்டு. ஒய்வில்லாமல் என்றுமாம். சத்தம், சோதிடம் என்பவை-சப்தம், ஜ்யோதிஷம் என்பவற்றின் சிதைவுகள். சத்தமென்னுஞ் சொல்லின்பெயர், ஆகுபெயராய், அத னிலக்கணத்தை யுணர்த்தும் வியாகரண சாஸ்திரத்தைக் குறித்தது. 'என்ற' என்னும் பெயரெச்சத்து அகரவீறு தொகுத்தல். ஆங்கு-அசை. இல்-இல்லையென்பதன் விகாரம்; இச்சொல் இருதிணையைம்பால் மூவி டங்கட்கும் பொதுவான குறிப்பு முற்றுப் பகாப்பதமாதலால், 'பேதை யார்' என்ற பலர்பால் எழுவாயைக் கொண்டது. (உ)

நாக. இல்ல மிளமை யெழில்வனப்பு மீக்கூற்றஞ்
செல்வம் வலியென் றிவையெல்லா—மெல்ல
நிலையாமை கண்டு நெடியார் துறப்பர்
தலையாயார் தாமுய்யக் கொண்டு.

(இ - ள்.) தலை ஆயார்-மேலானவர்கள்,—இல்லம்-இல்லறவாழ்க்கை யும், இளமை-யௌவனமும், எழில்-வளர்ச்சியும், வனப்பு-அழகும், மீக் கூற்றம்-மேம்பட்ட சொல்லும், செல்வம்-செல்வமும், வலி-வலிமையும், என்ற இவை எல்லாம்—, நிலையாமை-நிலையில்லாமல் அழிதலை, மெல்ல கண்டு - விரையாமல் ஆராய்ந்து அறிந்து, நெடியார்-காலதாமதஞ்செய் யாமல், தாம் உய்ய கொண்டு-தாங்கள் (பிறவித்துன்பம் நீங்கி) நற்கதி பெற்றுக் கடைத்தேறஎண்ணி, துறப்பர் - (இவற்றிற் பற்றை) விடு வார்கள்; (எ - று.)

ஒவ்வொரு சமயத்தில் இவற்றினிடத்து உண்டாகும் வெறுப்பினுல் இவை நிலையில்லனவென்று திடீரெனத் தோன்றும் அறிவு துறவுக்கு எதுவாகாதாதலால், 'மெல்லநிலையாமைகண்டு' என்றார். இல்லம்முதலி யன, மனத்தை மயக்கித் துறவறம்பூணவொட்டாமல் தடைசெய்வன.

இவற்றின் நிலையாமையை உணர்ந்தா லன்றி இவற்றிற் பற்றுவிடா தாத லால், நிலையாமைகண்டு துறப்பர் என்றார். திருக்குறளில், 'நிலையாமை' என்னும் அதிகாரத்தின் பின்பு 'துறவு' என்னும் அதிகாரத்தை வைத்த மையுங் காண்க. இவையெல்லாம் நிலையாமை, இவையெல்லாந் துறப்பர் என இருவகையாகவுங் கூட்டலாம். நிலையாமைகண்ட விடத்து இல்லம் முதலியவற்றை யொழித்து நிலையுள்ள உயர்கதியைப் பெற முயலாமல் வாளா இருக்க மனம் விரும்பா தாதலால், 'நெடியார் துறப்பர்' என்றார்.

'நிலையாயார்த்தாமுய்யக் கொண்டு' எனப் பாடமாயின், 'நெடியார்' என்பதை எழுவாயாக்கி, அறிவில்லிக்கவர் நிலையாய ஆசிரியரைத் துணை யாகுமாறுகொண்டு துறப்ப ரெனப் பொருள்கொள்ளலாம்.

இல்லம், அம் - சாரியை; இந்த மனையின் பெயர், மனைவாழ்க்கைக்கு இடவாகுபெயர். இல்லம்-குடிப்பிறப்புமாம். இளமையாவது-காமச் செவ்வி நிகழ்வதோர் பருவம். எழில்-எழுச்சி; தொழிற்பெயர்: எழு - பகுதி; இல்-விகுதி. 'எழிலாவது - வளர்ந்தமைந்த பருவத்தும் இது வளர்ந்து மாறிய தன்றி இன்னும் வளரு மென்பது போன்று காட்டுதல்' என்றார் நச்சி னார்க்கினியர். "'வனப்பு'என வருதலால், இங்கே, எழில் - அழகாகாது; இனி, எழில்வனப்பு - ஒருபொருட் பன்மொழியாக, மிக்கவனப்புமாம். மீக்கூற்றம் - சொற்செல்வு; செல்வாக்கு: அதிகாரத்தோடு கூடிய சொல் என்றபடி; இதற்கு - 'மேன்மையான சொல்லாகிய புகழ்' என்று உரைத் தால், "ஒன்ரு வுலகத் துயர்ந்த புகழல்லாற், பொன்ரு நிற்பதொன் றில்" எனப் பிரசித்தமாகவுள்ள புகழின்அழியாததன்மையோடு மாறு படுமென மறுக்க. கூறப்படுவது, கூற்று; அம் - சாரியை; விகுதியுமாம். வலி - தேகபலம், மனோபலம், சினேகபலம் முதலியன. என்றிவை - பெயரெச்சத்தின் அகரவீறு தொகுத்தல்: இனி, என்று எனப் பிரித்து, எண்ணிடைச்சொல்லெனினுமாம். நெடியார் - எதிர்மறை முற்றெச்சம்; நெடு - பகுதி: இ - சாரியை. (சு)

நிச. துன்பம் பலநா ளுழந்து மொருநாளே
யின்பமே காமுறுவ ரேழையா—ரின்ப
மிடைதெரிந் தின்னுமை நோக்கி மனையா
ரடைவொழிந்தா ரான்றமைந் தார்.

(இ - ள்.) ஏழையார் - அறிவில்லாதவர்கள்,—(இல்வாழ்க்கையில்), பல நாள் துன்பம் உழந்தும் - பல தினங்கள் துன்பங்களே அனுபவித் தும், ஒரு நாளே இன்பமே - (அங்குப்பெறப்படுகிற) ஒருநாளேச்சிற்றின் பத்தையே, காமுறுவர் - விரும்புவர்; ஆன்று அமைந்தார் - (அறிவால்) மிக்கு (அதற்கு ஏற்ப) அடங்கிநிற்பவரோ வென்றால்,—இன்பம் இடை தெரிந்து - அவ்வின்பம் மாறுபடுவதை அறிந்து, இன்னுமை நோக்கி - (அதனால் வரும்) துன்பத்தைக்கண்டு, மனை ஆறு - இல்வாழ்க்கைவழியை, அடைவு - சேர்தலை (விட்டு), துறந்தார்—;(எ - று.)

இல்வாழ்க்கையில் அளவிறந்த துன்பங்களே அநுபவித்திருக்கவும் அவற்றைக்கருதாமல் மறந்து ஒவ்வொரு சமயத்து உண்டாகும் அற்ப

சுகத்தையே பாராட்டி விரும்புதல் அறிவிலார்செயல்; அறிவுடையார் அவ்வின்பத்தின் சிறுமையையும், துன்பங்களின் பெருகுதியையும் நன்றாக உணர்ந்து துறந்திடுவர் என்க.

"நுண்ணுணர் வின்மை வறுமை யஃதுடைமை, பண்ணப்பணைத்த பெருஞ்செல்வம்" ஆதலால், அறிவிலார் 'ஏழையார்" எனப்பட்டனர். இன்பமே, எ-பிரிநிலையோடு இழிவுசிறப்பு. உழந்தும், உம்-இழிவுசிறப்பு. நாணே, ஐ-சாரியை. காமுறு-காமமுறு என்பதன் விகாரம்; 'ஐயுறு' என்பது போல. இடை-இடைதல்: முதனிலைத்தொழிற்பெயர்; இடையூறென்பாரு முளர். இன்னுமை-எதிர்மறைப் பண்புப்பெயர்; இனிமையென்னும் பண் புப்பெயர், ஈறுபோய் இடை இகரமுங் கெட்டு, எதிர்மறை ஆகாரமும் மைவிகுதியும் பெற்று, இன்னுமையென நின்ற தென்க. மனை - இடவாகு பெயர். ஆன்று என்னும் இறந்தகாலவினையெச்சத்தில், சால் என்பதன் மரூஉவாகிய ஆல் - பகுதி; இனி, அகன்று என்பது ஆன்று என மரூஉ வாயிற்றென்றலும் என்று. சோக்கி ஒழிந்தார் என இயையும்.

'ஆன்றவிந்தார்' என்றும் பாடமுண்டு; பொருள் அதுவே.

மேல் சூ0-ஆஞ் செய்யுளும் இதுபோன்ற கருத்துடைய்தேயாம்.(ச)

நே. கொன்னே கழிந்தன் றிளமையு மூன்னே
பிணியொடு மூப்பும் வருமாற்—றுணிவொன்றி
யென்னெடு சூழா தெழுநெஞ்சே போதியோ
நன்னெறி சேர நமக்கு.

(இ - ள்.) துணிவு ஒன்றி-துணிதலைப் பொருந்தி, என்னெடு சூழாது-என்னோடுகூடி (ச் செய்யக்கடவதை) ஆராயாமல், எழு-(புலன்களின்மேற்) செல்லுகின்ற, நெஞ்சே-மனமே! இளமையும்-யௌவனமும், கொன்னே-வீணாக [மறுமைக்கு வேண்டியதைச் செய்யாமலே], கழிந்தன்று-கழிந்து போயிற்று; இன்னே - இப்பொழுதே, பிணியொடு-வியாதியும், மூப்பும்-கிழத்தனமும், வரும்—; ஆல்-ஆதலால், (இனியாயினும்), நமக்கு—, நல் நெறி சேர - நல்லமுத்திநெறி கிடைக்க, போதி ஓ - (துறவுக்குச்) செல் வையோ? (எ - று.)—அவசியஞ் செல்லவேண்டு மென்று வேண்டியபடி.

மனத்தின்வழியாகவே ஆன்மா இன்பதுன்பங்களை அனுபவிப்பதா லல், தனது இளமையையெல்லாம் இல்வாழ்க்கையிற்கழித்த ஒருவன் பின்னர்த் தன்மனத்திற்குக் கூறியதாக இச்செய்யுள் செய்யப்பட்ட தென்று அறிக.

நமக்கு-உனக்கும், எனக்கும்; 'நீ' என்றது, மனம்: 'நான்' என்றது, ஆத்துமா. இனி, நமக்கு நல்லமுத்திநெறி யுண்டாம்படி (துறக்கும்) துணிவு கொண்டு என்னிடத்தில் ஆராயாமல் (எப்பொழுதும் புலன்களின்மேற்) செல்லுதலையே இயல்பாகக்கொண்ட மனமே! இளமையோ கழிந்து விட் டது; இன்னே பிணியொடு மூப்பும் வரும்; (இவ்வாறுனபின்பும் அவ் வாறே புலன்களின்மேற்) செல்வாயோ? என்னுங்கருத்து அமைய உரை கூறுவாருமுளர்.

இன்னே பிணியொடு மூப்பும் வரும் - பிணியோடு கூடிய மூப்பும் விரைவில் வந்துசேரும் என்றுமாம்; இளமைப்பருவத்தில் முதிராமல் அடங்கியிருந்த நோய் தனது வளர்ச்சிக்கு உரிய காலமாதலால் முதுமையில் முதிர்ந்து வெளிப்படு மென்றபடி. கொன் - பயனில்லாமையுணர்த்தும் இடைச்சொல். கழிந்தன்று - இறந்தகால இடைநிலையும், 'அன்' சாரியையும், 'று' விகுதியும், சந்திவிகாரங்களும் பெற்றுவந்த ஒன்றன் பால் வினைமுற்று. 'இன்னே' என்றது, விரைவையும் தேற்றத்தையுங் குறிக்கும்; இன் - இடைச்சொல்: இனியென்பதன் விகார மென்னலாம். இளமையும், மூப்பும்—உம்மைகள் - முறையே எதிரதும் இறந்ததுந்தழுவிய எச்சப்பொருளன. 'துணிவொன்றி' என்பதை, 'போதியோ' என்பதனோடுஞ் சேர்க்கலாம். போதி - முன்னிலை யொருமை எதிர்காலமுற்று: இ - விகுதி; "வியங்கோ ளிம்மாதெதிர்வும்" என்றதனால்; இதுவே எதிர்காலங்காட்டும்; த் - எழுத்துப்பேறு. (இ)

நே ஈ. மாண்ட குணத்தொடு மக்கட்பே றில்லெனினும்
பூண்டான் கழித்தற் கருமையாற்—பூண்ட
மிடி யென்னுங் காரணத்தின் மேன்முறைக் கண்ணே
கடி யென்றூர் கற்றறிந் தார்.

(இ - ள்.) கற்று அறிந்தார் - (நூல்களைக்) கற்று (அவற்றின் பொருளை) அறிந்தவர்கள்,—'மாண்ட-குணத்தொடு - மாட்சிமைப்பட்ட நற்குணங்களும், மக்கள் பேறு - பிள்ளைகளைப் பெறுதலும், இல் எனினும் - (தன்மனைவிக்கு) இல்லையாயினும், பூண்டான் - மணஞ்செய்து கொண்டகணவன், கழித்தற்கு அருமையால் - (அவளை) நீக்குதற்குக் கூடாமையாலும்,—பூண்ட - அடைகின்ற, மிடி என்னும் காரணத்தின்-துன்பமென்கிற காரணம்பற்றியும், மேல் முறைக்கண்ணே - மேலாகிய துறவொழுக்கத்திலே (நின்று), 'கடி - (விவாகத்தை) நீக்கு,' என்றூர் - என்று சொன்னார்கள்; (எ - று.)

நற்குணங்களும் புத்திரபாக்கியமும் இல்லாதிருந்தாலும் மனைவியை விடக்கூடாதாதலாலும், மணஞ்செய்தபின் இல்வாழ்க்கையிற் பலதுன்பங்களுண்டாமாதலாலும், இளமையிலே அவ்வில்வாழ்க்கையை விட்டுத் துறவறம் பூண்பாயென்று பெரியோர்கள் சொன்னார்கள் என்பதாம்; இளமையிலேயே துறத்தற்குக் காரணங் கூறியவாறு.

மாண்டகுணம் - கற்பு, நாண், மடம், அச்சம், பயிர்ப்புமுதலியன. மாண்ட - மாண் என்னும் பண்பினடியாப் பிறந்த இறந்தகாலப் பெயரெச்சம். மக்கட்பேறு - புத்திரபாக்கியம். 'மக்கள்' என்ற சொல்லின் ஆற்றலால், அறிவுள்ள பலபிள்ளைகளைப் பெறுதல் இல்வாழ்க்கைப் பயனுமென்பது விளங்கும். மேன்முறைக்கண்ணே - (மணஞ்செய்தற்கு முற்பொழுதிலே யென்றுமாம். உம் - இழிவுசிறப்பு; இது, மாண்டகுணத்தையும் மக்கட்பேற்றையு முடையளாயின் மனைவியை விடுதல் முற்றுங் கூடாதென்பதை விளக்கும்.

இனி, 'கற்று அறிந்தார், மேல் - முற்காலத்தில், முறைக்கண் - நூல்களில், கடி என்றூர் - (விவாகத்துக்குக் கடியவேண்டியதென்ற காரணத்தால்) கடி' என்று பெயரிட்டனர்: [ஆகவே, விவாகத்தைக் கடிந்து

துறக்கவேண்டும்]' என்றும் உரைகூறலாம்; இப்பொருளில், 'கடி' என்ற இடுகுறிப்பெயர்க்குக் கவி சாதுரியமாகக் கடிதற்கு உரியது என்று காரணப்பொருள் கற்பித்துக் கூறியது **திருத்தி** யென்னும் அலங்காரம்; இது, தமிழில் **பிரிநிலைநவிற்சியணி** யெனப்படும்.

இளமையிலேயே துறக்கவேண்டுமென்ற ஜைந நூற்கொள்கை, இப் பாட்டில் வெளியாம். (சு)

நே.எ. ஊக்கித்தாங் கொண்ட விரதங்க ளுள்ளுடையத்
தாக்கருந் துன்பங்க டாந்தலை வந்தக்கா
னீக்கி நிறுஉ முரவோரே நல்லொழுக்கங்
காக்குந் திருவத் தவர்.

(இ - ள்.) ஊக்கி-முயன்று, தாம் கொண்ட-தாம் ஏற்றுக்கொண்ட, விரதங்கள்—,உள் உடைய - முழுவதுங் கெடும்படி, தாக்கு அருந் துன் பங்கள் - பொறுத்தற்கு அரிய தீங்குகள், தலைவந்தக்கால் - வந்துசேர்ந் தால், நீக்கி - (அத்துன்பங்களைத்) தள்ளி, நிறுஉம் - (அவ்விரதங்களை) நிலைநிறுத்துகின்ற, உரவோரே - மனவலிமையுடையவரே,—நல் ஒழுக் கம் - நல்ல துறவொழுக்கத்தை, காக்கும் - (விடாமற்) காக்கின்ற, திரு வத்தவர் - மேன்மையையுடையவர்; (எ - று.)

மனத்தூய்மைக்குச் சாதனமான விரதங்களைத் தொடங்கி அனுஷ் டிக்கும்பொழுது பலவகை இடையூறுக ளுண்டாஞலும் அவ்விரதங்களை நடுவிலே விட்டிடாமல் முடித்துப் பயன்பெறுதல் துறந்தார்க்கு உரிய அறம் என்பதாம்.

விரதங்களாவன - வினைமாசுதீர்ந்து அந்தக்கரணந் தூய்தாய் ஞான முண்டாதற்பொருட்டு இன்னஅறஞ்செய்வேனெனவும், இன்னபாவம் ஒழிவேனெனவும் துறந்தவர் தம்ஆற்றலுக்கு ஏற்ப வரைந்துகொள்ளும் அருளுடைமை முதலியன. **துன்பங்களாவன** - தன்னைப்பற்றி வருவன வும், பிறவுயிர்களைப்பற்றிவருவனவும், தெய்வத்தைப்பற்றி வருவனவு மாம்; இவற்றை வடநூலார் முறையே **ஆத்யாத்மிகம், ஆதிபௌதிகம், ஆதிதைவிகம்** என்பர்: ஆத்யாத்மிகமென்பது - சரீரத்தைப்பற்றிவருந் தலைநோய் முதலியனவும்; மனத்தைப்பற்றிய காமக்குரோதம் முதலி யனவுமாம்; ஆதிபௌதிகமென்பது - மனிதர் விலங்கு பிசாசம் முதலிய வற்றால் நேர்வனவாம்; ஆதிதைவிகமென்பது-காற்று மழை இடி வெயில் முதலியவற்றால் நேர்வனவாம். நீக்குதல் - அத்துன்பங்களுக்கு மனத்திற் சிறிதும் இடங்கொடாமை. நிறுத்தல் - நிறைவேறும்படி செய்தல்.

விரதம் - வடசொல். ஊக்கி - ஊக்கங்கொண்டு; ஊக்கு என்னும் வினைப்பகுதியின்மேற் பிறந்த இறந்தகால விகாயெச்சம். உள், தலை - தமிழுபசர்க்கங்கள். உள் உடைய - இடையிலே கெட என்றும், தலை வந்தக்கால் - தம்மிடத்து வந்தால் என்றுங் கொள்ளலாம். தாக்கு - முதனிலைதிரிந்த தொழிற்பெயர்; தாங்கு என்பதன் வலித்தல். தாம்- அசை. நிறுவும் என்பது, விகாரப்பட்டு 'நிறுஉம்' என அளபெடுத்தது, சொல்லிசை யளபெடை. திருவத்தவர்—அத்து, அ சாரியைகள். எ-பிரி நிலையோடு தேற்றம்.

இது - **ஒருவகைப்ப இன்னிசை வெண்பா.** (எ)

நூ௨. தம்மை யிகழ்ந்தமை தாம்பொறுப்ப தன்றிமற்
றெம்மை யிகழ்ந்த வினைப்பயத்தா—னும்மை
யெரிவாய் நிரயத்து வீழ்வர்கொ லென்று
பரிவதூஉஞ் சான்றோர் கடன்.

(இ - ள்.) தம்மை-(ஒருதீங்குஞ் செய்யாத) தம்மை, இகழ்ந்தமை-(பிறர்) நிந்தித்ததை, தாம் பொறுப்பது அன்றி-தாங்கள் பொறுத்துக் கொள்வது மாத்திரமே யல்லாமல், 'எம்மை இகழ்ந்த வினை பயத்தான்-தம்மை நிந்தித்தருளாகிய தீவினையின் விளைவினால், உம்மை-மறுமையில், எரிவாய் நிரயத்து-தீ நிரம்பிய நரகத்தில், வீழ்வர்-(இவர்) விழுவரே!' என்று—, பரிவது உம்-இரங்குவதும், சான்றோர் கடன்-(துற வொழுக்கம்) மிக்கவர்க்குக் கடமையாம்; (எ - று.)

பிறர் தம்மையிகழ்ந்தால் அதனைப் பொறுத்தலோடு, யாதொரு தீங்குஞ் செய்யாத தம்மை நிந்தித்தது காரணமாக அவர்க்கு நரகம் சேரிடுமேயென்று இரங்குவதும் துறவிகளின் கடமை யென்பதாம்.

தாம்-மாறுசெய்யவல்ல தாங்கள் என்றபடி. எரிவாய் நிரயம்-தப்த கும்பம், கும்பீபாகம் என்பவை போல்வன. நிரயம்-தற்சமவடசொல். எரிவாய்-எரிகிற வாயையுடைய என்றும், அனலின் தன்மைவாய்ந்த என்றுங் கொள்ளலாம். மற்று-வினைமாற்று. எம்மை என்பது-இயற்கை பற்றிய தனித்தன்மைப் பன்மை: (ஒவ்வொருவரும் தம்மைப்பற்றித் தாம் நினைக்கும் பொழுது பன்மையாகவே நினைத்தல், பெரும்பாலும் இயல்பு; இதனை நினைத்துக் காண்க.) இனி, தம்மைப்போன்றவரையும் உளப் படுத்திய பன்மை யெனினுமாம். இகழ்ந்த வினை-பெயரெச்சம் காரணப் பொருளது. உம்மை-இம்மை யென்பதன் எதிர்மொழி. இகழ்ந்தமை-இறந்தகாலத் தொழிற்பெயர். பொறுப்பது என்பதில், எதிரது தழுவிய எசசவும்மை விகாரத்தால் தொக்கது. கொல்-அசை; வினவகையால் இரக்க மூணர்த்துவதெனினுமாம்: 'இடைச்சொற்கள் வேண்டிய பல பொருள்களையும் வினைத்தற்கு உரியன' என்பது, வடநூலார் கொள்கை; தமிழ்நூலார்க்கும் இது விலக்கன்று. 'பரிவதும்' என நிற்பினுஞ் செய்யு ளோசை குன்றுதாயினும், இனிய ஓசை தருதற்பொருட்டுக் குறில் நெடி லாகி 'பரிவதூஉம்' என அளபெடுத்தது, இன்னிசையளபெடை. இதில் உம்மை-இறந்தது தழுவிய எசசத்தோடு, உயர்வுசிறப்புப் பொருளது.

இச்செய்யுளால், சினமின்மையும் பொறையுடைமையும் பிறர் துன்பத்திற்கு இரங்கும் அருளுடைமையும் துறந்தவர்க்குச் சிறந்த விர தங்களென்று கூறியபடி. இது, "பிழைத்தோர்த்தாங்குங் காவல்" என்ற தொல்காப்பியப் பொருளதிகாரச் சூத்திரப்பகுதிக்கு மேற்கோளாம். (அ)

நூ௩. மெய்வாய்கண் மூக்குச் செவியெனப் பேர்பெற்ற
வைவாய வேட்கை யவாவினைக்—கைவாய்க்
கலங்காமற் காத்துய்க்கு மாற்ற லுடையான்
விலங்காது வீடு பெறும்.

(இ - ள்.) மெய்-உடம்பும், வாய்-வாயும், கண்-கண்ணும், மூக்கு-மூக்கும், செவி - காதும், என-என்று, பேர் பெற்ற - பெயர்கொண்ட, ஐவாய்-ஐந்துவழிகளை யுடையதாகிய, வேட்கை அவாவினை-வேட்கை யாலாகிய அவாவை, கலங்காமல் காத்து-(அதனால் தனதுமனம்) கலங் காதபடி தடுத்து, கைவாய்-துறவொழுக்கத்தில், உய்க்கும்-(மனத்தைச்) செலுத்துகின்ற, ஆற்றல் உடையான் - வலிமையையுடையவன்,—விலங் காது-தவறுமல், வீடு பெறும்-முத்தியைப் பெறுவான் ; (எ - று.)

தனது மனத்தை ஐம்பொறிகளிற் செல்லவொட்டாது தடுத்துத் துறவறவொழுக்கத்திற் செலுத்துகின்றவனுக்கு நிசசயமாக முத்தி சித்திக்கும் என்பதாம்.

"கண்டு கேட்டுண்டுயிர்த் துற்றறியுமைம்புலனும், ஒண்டொடியாள் கண்ணேயுள" என்ப வாதலால், ஐம்புலவின்பமும் மாதராரிடத்தே யுண்டென்று அவரை விரும்புதல் கூடாதென்று கருத்துக் காண்பாரு மூளர். மெய்-ஸ்பரிசேந்திரியம். பேர் - பெயரென்பதன் மரூஉ. ஐவாய் - ஐம்பொறிகளை வழியாகவுடைய; வாய - சூறிப்புப்பெயரெச்சம். கை - ஒழுக்கம்; வாய்-எழுனுருபு. வேட்கையாவது-பொருள்களின்மேல் தோன் றும் பற்றுள்ளம். அவாவாவது-அப்பொருள்களைப் பெறவேண்டு மென்று மேன்மேல் நிகழும் ஆசை ; வேட்கையின் விருத்தி. வேட்கையாலுண்டா கின்ற அவா என மூன்றனுருபுவிரிக்க; வேட்கையும் அவாவும் என அல் வழியாகக்கொள்ளுதலும் ஒன்று. அவாவினைக் காத்து-" கதவுகாத்துக் கற்றடங்கல்", " செல்லிடத்துக காப்பான் சினங்காப்பான் " என்பன போல, இங்குத் தடுத்தற்பொருளில் வந்தது. வீடு-(எல்லாப் பற்றுக்களை யும்) விட்டு அடையும் இடமெனக் காரணப்பெயர்; 'முக்தி' என்னும் வட சொல்லின் பொருள்கொண்டது. பெறும்-செய்யுமென் முற்று, இங்கே ஆண்பாலுக்கு வந்தது.

இச்செய்யுள், முதலடியில் **யகர ஆசெதுகை** பெற்றுவந்தது. (கூ)

கூ. துன்பமே மீதூரக் கண்டுந் துறவுள்ளார்
இன்பமே காமுறுவ ரேழையா—ரின்ப
மிசைதொறும் மற்றதனின்னுமை நோக்கிப்
பசைதல் பரியாதா மேல்.

(இ - ள்.) ஏழையார் - அறிவில்லாதவர்,—துன்பமே மீது ஊர கண் டும்-(இல்வாழ்க்கையில்) துன்பம் மாத்திரமே மேன்மேல் அடுக்கிவரப் பார்த்தும், துறவு உள்ளார் - துறத்தலை நினைத்தலுஞ்செய்யாராய், இன் பமே-(இல்வாழ்க்கையில் உண்டாகுஞ்) சிற்றின்பத்தையே, காமுறுவர் - (பெற) விரும்புவர் ; மேல்-(அறிவால்) மேம்பட்டவரோ வென்றால்,— இன்பம் இசைதொறும்-அவ்வின்பம் (தம்மிடத்துக்) கூடும்பொழுதெல் லாம், அதன் இன்னுமை நோக்கி-அவ்வின்பத்தாற் பின்வருந் துன்பத்தை நோக்கி, பசைதல் பரியாது-(அதனை) விரும்புதலைக் கொள்ளார்: (எ-று.)

இப்பாட்டின் இரண்டாம் அடியும்,கீழ்நிசை-ஆம் பாட்டின் இரண்டாம் அடியும்ஒன்றுபயிருக்குமாறு காண்க.இப்படி வெவ்வேறுசிரியர்க்கும் பொரு ளோடு சொல்லும் ஒற்றுமைப்படுவது, சிறுபான்மை இயல்பு: இதனை,

சமகாலத்தில் வேறுவேறு புலவராற் பாடப்பட்ட **சிலப்பதிகாரத்திலும், மணிமேகலை**யிலும் சிலவிடத்துக் காணலாம்.

இப்பாட்டின் கருத்து இவ்வதிகாரத்து நான்காம் பாட்டோடு ஒத்ததே.

இல்வாழ்க்கையாலுண்டாகுந் துன்பத்தின் அளவைக் காட்டினும் அதனாலுண்டாம் இன்பம் சிறியதாயிருக்க, அதனை அறியமாட்டாமையால் அவரை 'எழையார்' என்றார். மற்று, ஆம்-அசைகள். மற்று-வினைமாற்றுமாம். உள்ளார்-எதிர்மறைத் தெரிநிலை முற்றெச்சம். இசை தொறும் - தொறும் என்னும் இடைசசொல் பெயர்சசொல் தன்மைப் பட்டதனால், இசை என்னும் வினைத்தாகை அதனை விசேடித்தது; இசையுந்தோறும் என்பதன் விகாரமாகக் கொள்வாரு முளர். பரியாது என்பதில், பரி என்பது - வடமொழி வினையடி, விகாரம். மேல் - மேலோர்க்கு, பண்பாகு பெயர். 'மேல்' என்னும் எழுவாய் - பொருளால் உயர்திணைப்பன்மை யாயினுஞ் சொல்லால் பால்பகா அஃறிணை யாதலால், 'பரியாது' என்னும் அஃறிணை யொருமை வினைமுற்றைக் கொண்டது. (கo)

எ - ஆம் அதிகாரம்—சினமின்மை

அதாவது - கோபத்தைச் செய்தற்குக் காரணமாகிய குற்றம் ஒருவனிடத்து உண்டாகிய விடத்தும் அக்கோபத்தை உடைத்தாகாமையை உணர்த்துவது. இது, துறந்தவர்கட்கு உரிய விரதங்களுட் சிறந்ததொன் றுதலால், துறவின்பின் வைக்கப்பட்டது. "குணமென்னுங் குன்றேறி நின்றார் வெகுளி, கணமேயுங் காத்த லரிது" என்றபடி சாப அநுக்கிரக சக்தியுடைய நிறைமொழிமாந்தராகிய முற்றத்துறந்த முனிவர்களதுசினம் தடுக்கப்படாத பலதீமைகளுக்குக் காரணமாகிப் பலர்க்குஞ் சுருத்தத்தை உண்டாக்கிப் பழிபாவங்களைப் பயந்து அக்கோபித்தவரையுந் தவத்தைக் கெடுத்துத் தீக்கதியிற் செலுத்து மாதலின், அத்தகைய சினம் இல்லாமை துறந்தவர்க்கு முக்கியமான விரதமாயிற்று. திருவள்ளுவனாரும் வெகுளாமை யென்னும் அதிகாரத்தைத் துறவறவியலில் வைத்தவாறு காண்க.

கூக. மதித்திறப் பாரு மிறக்க மதியா
மிதித்திறப் பாரு மிறக்க—மிதித்தேறி
யியுந் தலைமே லிருத்தலா லஃதறிவார்
காயுங் கதமின்மை நன்று.

(இ - ள்.) மதித்து இறப்பாரும் - (தம்மைக்) கௌரவித்துச் செல்பவரும். இறக்க - செல்க; மதியா - கௌரவியாமல், மிதித்து இறப்பாரும் - (தம்மைக்) கீழ்ப்படுத்திச் செல்பவரும், இறக்க - செல்க; ஈயும்- (அற்ப பிராணியாகிய) ஈயும், மிதித்து ஏறி - (யாவரையும்) மிதித்து (அவர்மேல்) ஏறி, தலைமேல் இருத்தலால் - தலையின்மேல் இருத்தலினால், அஃது அறிவார் - அந்த இருப்பை அறிந்தவர், காயும் கதம்

இன்மை - (பிறரையுந் தம்மையுஞ்) சுடும்படியான கோபத்தை உடைத் தாகாமை; நன்று - நல்லது; (எ - று.)

அறிவுடையவர் பெரியவரை மதிப்பர்; அறிவில்லாதவரோ அவ மதிப்பர்; அதற்கு ஈயே திருஷ்டாந்தம்; அவற்றிலுண்டாகும் புகழ் புண்ணியங்களையும் பழிபாவங்களையும் அடைபவர் அவரே யன்றிப் பிற ரல்லர்: ஆதலால், அவமதித்தவரைக் கோபித்தல் அவசியமன்று என்பது கருத்து.

மிதித்தல் என்றது - இங்கே, வைதல் அடித்தல் முதலியவற்றைக் குறிப்பால் உணர்த்திற்று. இறத்தல் - செல்லுதல். ஈயும், உம்மை - இழிவு சிறப்பு. அஃது அறிவார் காயுங் கதுமின்மை நன்று - ஈயின்தன் மையை விவேகமில்லாமையாலானதென்று அதன்மேற் கோபங் கொள் ளாமை போலத் தம்மையிகழும் அறிவிலார்மேலுங் கோபங்கொள் ளாமை தகுதியென்க. மிதித்து இறப்பாரும், உம் - உயர்வுசிறப்போடு எதிரது தழுவிய எச்சம். மிதித்து இறப்பாரும், உம் - இழிவு சிறப் போடு இறந்தது தழுவிய எச்சம். இவற்றை எண்ணும்மைகளாகக் கொள்ளுதல் சிறப்பன்று; வெவ்வேறு வாக்கியங்களில் வந்ததனால்.

அஃதறிவார் என்பதில், ஆய்தம் மெய்போல் ஒலித்தது; வெண் டளை பொருந்த அலகிட்டுக் காண்க. (எ)

கூஉ. தண்டாச் சிறப்பிற்றம் மின்னுயிரைத் தாங்காது
கண்டுழி யெல்லாந் துறப்பவோ—மண்டி
யடிபெயரா தாற்ற விளிவந்த போழ்தின்
முடிகிற்கு முள்ளத் தவர்.

(இ - ள்.) அடி பெயராது-வைத்தகாலைப் பெயர்க்கவொட்டாதபடி, ஆற்ற - மிகவும், இளி - தாழ்வு, மண்டி - இடைவிடாது நெருங்கி, வந்த போழ்தின் - வந்தகாலத்திலும், முடிகிற்கும் - (அதற்குக் கலங்காமல் ஏற்றுக்கொண்ட விரதத்தை) நிறைவேற்றும்படியான, உள்ளத்தவர் - மனவலிமையையுடைய துறந்தவர்கள்,—தண்டா சிறப்பின் - நீங்காத சிறப்பினையுடைய, தம்இன் உயிரை - தமது இனிய பிராணனை, தாங் காது-தரியாமல், கண்ட உழி எல்லாம் - கண்ட விஷயங்களி லெல்லாம், துறப்பவோ - விடுவார்களோ? [விடார் என்றபடி]; (எ - று.)

இச்செய்யுள், பிறர் தம்மை அவமதித்ததற்காகச் சினந்து உயிரை விடுஞ் சிற்றறிவினரைக் குறித்துச் சொல்லியதாகச் செய்யப்பட்டதென அறிக.

பேரிகழ்ச்சி நேர்ந்தவிடத்தும் அதைப் பாராட்டாமல் தாம் எடுத்த காரியத்தையே முடிக்குந்தன்மையுடையோர், கண்டகண்டஇகழ்ச்சிக்கெல் லாங் கலங்கி உயிரைத் துறவாமற் சாந்தமாகவேயிருப்பர் என்பதுகருத்து. முத்தி பெறுதற்கு உரியதாதலின் 'தண்டாச் சிறப்பினுயிர்' என்றும், உயி ரினும் இனியதொன்று இன்றுதலால் 'இன்னுயிர்' என்றுங்கூறப்பட்டது. தமது உயிரை ஒழித்தாவது மானத்தைப் பாதுகாக்கவேண்டுமென்ற தன் மை இல்லறத்தார்க்குப்போலத் துறவறத்தார்க்கு இன்றியமையாததன்

றென மறுத்தவாறு. இம்மைப்பயனுகிய புகழைமாத்திரமே விளைத்தற்கு உரிய மானங்காத்தல் இல்லறத்தார்க்குச் சிறத்தலும், முத்திப்பேற்றுக்குக் காரணமாகாத அத்தமானத்தை காக்கும்பொருட்டு அரிதிற்கிடைத்த மானிடயாக்கையை விட்டு அதுகொண்டு முயன்று பெறுதற்கு உரிய வீடுபேற்றை யிழத்தல் துறவறத்தார்க்குச் சிறமாமையும் காண்க.

இப்பாட்டிற்கு வேறுவகையாகப் பொருளுரைக்கலுறின், அதிகாரத்தோடும் துறவறவிலக்கணத்தோடும் பொருந்தாதாம்.

கண்டுழி - விகாரம். ஓ - எதிர்மறை. 'அடி பெயராது' என்பது, இழிவின்மையை விளக்கிற்று. மூடிகிற்கும் என்பதற்கு, சந்தர்ப்பத்திற்கு ஏற்ப, மூடிக்கிற்கு மெனப் பிறவினைபோகப் பொருள்கொள்ளப்பட்டது; இவ்வாறு தன்வினை பிறவினைப்பொருளில் வருவதை வட நூலார் **'அந்தர்ப்பாவிதணிச்'** என்பர். மூடிகிற்கும்-மூடி-பகுதி, கில்-ஆற்றலுணர்த்தும் இடைநிலை, கு-சாரியை, உம்-வந்திசைப் பெயரெச்சவிகுதி. (உ)

சுகு. காவா தெனாருவன்றன் வாய்திறந்து சொல்லுஞ்சொ
லோவாதே தன்னைச் சுடுதலா—லோவாதே
யாய்ந்தமைந்த கேள்வி யறிவுடையா ரெஞ்ஞான்றுங்
காய்ந்தமைந்த சொல்லார் கறுத்து.

(இ - ள்.) ஒருவன் - பிறனெருத்தன், தன் வாய்-தனது வாயை, காவாது - காத்துக்கொள்ளாமல், திறந்து - (அதனைத்) திறந்து, சொல்லும் - சொல்லுகின்ற, சொல் - தீச்சொல், ஓவாதே-ஒழியாமல், தன்னை-தம்மை, சுடுதலால்-வருத்துதலினால்,—ஓவாதே-ஒழியில்லாமல், ஆய்ந்து-(நூல்களை) ஆராய்ந்து, அமைந்த - நிரம்பிய, கேள்வி- நூற்கேள்வியோடு கூடிய, அறிவு உடையார் - ஞானத்தையுடைய துறந்தவர், எ ஞான்றும்-எப்பொழுதும், கறுத்து - கோபித்து, காய்ந்து அமைந்த- உக்கிரமாயுள்ள சொற்களை, சொல்லார் - சொல்லமாட்டார்கள்; (எ-று.)

பிறர்கூறிய கடுஞ்சொல் தமதருந் தன்பந்தருதலையே திருஷ்டாந்தமாகக்கொண்டு தாம் கூறிய கடுஞ்சொல்லும் இங்ஙனமே பிறரை வருத்துமென்றுணர்ந்து, விவேகிகள், சினந்து பிறர்விஷயத்திற் கடுஞ்சொற்களைக் கூறுரென்பது கருத்து. ''தீயினுற் சுட்டபுண் ணுள்ளாறு மாறுதே, நாவினுற் சுட்ட வடு'' என்பவாதலால், 'ஓவாதே தன்னைச் சுடுதலால்' என்றார். 'தன்னை,' 'அறிவுடையார்' என வந்தது - **ஒருமைப்பன்மை மயக்கம்: வழுவமைதி.**

இனி, இச்செய்யுளுக்கு - துறந்தவனெருவன் தன்வாயைக்காவாமல் திறந்து சினந்து பிறரைச்சொல்லுஞ் சாபச்சொல் அவனது தவத்தைக் கெடுத்து அத்தவத்துன்பத்தோடு பழைய பிறவித் துன்பங்களையும் ஒருங்கே எய்துவித்துச் சொன்ன அவனையே வருத்துதலால், கல்வி கேள்விகளால் நிறைந்த அறிவுடையோர் எப்பொழுதும் அப்படிப்பட்ட சொற்களைக் கோபித்துச் சொல்லார் என்றும் பொருள் கொள்ளலாம்;

"தன்னைத்தான் காக்கிற் சினம் காக்க காவாக்கால், தன்னையே கொல்லுஞ் சினம்" என்றார் **திருவள்ளுவனாரும்.**

எஞ்ஞான்றும் - சினஞ்செய்தற்குக்காரணம் ஒருவனிடத்தில் உள தானபொழுதும் என்றபடி; தம்மை ஒருவன் சொற்செயல்களால் வருத்தியபொழுதும் என்க. ஆய்ந்தமைந்த - நூல்களே ஆராய்ந்து கற்று அடக்கங்கொண்ட என்றும் உரைக்கலாம்; "கற்றறிவார் கண்டது அடக்கம்" என்பது மேற்கோளாதலின். **கேள்வி**யாவது-கேட்கப்படும் நூற்பொருள்களைக் கற்றறிந்தார் கூறக்கேட்டல்; கற்றார்க்குக் கல்வியறிவைவற்புறுத்தியும், கல்லாதார்க்குக் கல்வியறிவை உண்டாக்கியும், இது மிகப் பயன்படும். கேள்வி-'வி'விகுதிபெற்ற தொழிற்பெயர். 'அமைந்த' என்னுஞ் சொல் இரண்டனுள், முன்னது - பெயரெச்சம், பின்னது 'அன்சாரியை பெறுதபலவின்பாற்பெயர். எஞ்ஞான்றும், எகரவினை-எஞ்சாமைப் பொருளது; உம்மை - முற்று. கறுத்தல் - கோபமுணர்த்தும் உரிச்சொல்; "கறுப்புஞ் சிவப்பும் வெகுளிப் பொருள" என்பது **தொல்காப்பியம்:** இது கருமை யென்னும் பண்பின் அடி விகாரப்பட்டு வினைத்தன்மை பெற்றதாம். (கூ)

சுஅ. நேர்த்து நிகரல்லார் நீரல்ல சொல்லியக்கால்
வேர்த்து வெகுளார் விழுமியோ—ரோர்த்ததனை
யுள்ளத்தா னுள்ளி யுரைத்துரா யூர்கேட்பத்
துள்ளித்தூண் முட்டுமாங் கீழ்.

(இ - ள்.) நிகர் அல்லார் - தமக்கு ஒப்பாகாதவர் [கீழ்மக்க ளென்றபடி], நேர்த்து - எதிர்த்து, நீர் அல்ல - (சொல்லத்) தகுதியல்லாதசொற்களை, சொல்லியக்கால் - சொன்னால், விழுமியோர் - சிறந்த துறவையுடைய பெரியோர், வேர்த்து - (மனம்) புழுங்கி, வெகுளார் - கோபியார்; கீழ் - கீழ்மக்களோ வென்றால்,—அதனை-அந்நிந்தைச்சொல்லை, உள்ளத்தான் உள்ளி-மனத்தாற் சிந்தித்து, ஓர்த்து - ஆராய்ந்து, ஊர் கேட்ப - ஊரிலுள்ளவரெல்லாருங்கேட்கும் படி, உரைத்து-(பலரோடுஞ்) சொல்லி, உராய் - (சுவர்முதலியவற்றில்) உராய்ந்து, துள்ளி - எழும்பிக்குதித்து, தூண் முட்டும் - தூணில் முட்டிக் கொள்வர்; (எ - று.)

இச்செய்யுள் பெரியோரது தன்மையையும் கீழோரது தன்மையையும் இனியவாகக் கூறுவதனால், **தன்மைநவிற்சியணி.** இயற்கையை உள்ளபடி கூறியே கற்றறிந்தவரதுமனத்தை மகிழ்விப்பதனால், இவ்வணி எல்லாவணிகளினுஞ் சிறந்ததெனக் கொண்டாடிக் கூறியுள்ளார், **தண்டியாசிரியர்.**

முதலடியைப் பின்வாக்கியத்தோடுங்கூட்டுக. வேர்த்து-உடம்புபுழுங்கியென்றுமாம்.வேர்த்தல்,உராய்தல், துள்ளுதல், தூண்முட்டுதல் என்னும் இவை - கோபத்தின் மிகுதியால் நிகழ்வன. நேர்த்து, ஓர்த்து-நேர்ந்து, ஓர்ந்து என்பவற்றின் வலித்தல். விழுமியோர்-சிறப்புணர்த்தும் 'விழுமம்' என்னும் உரிச்சொல்லினடியாப் பிறந்தபெயர்;"விழுமஞ்சீர்மையுஞ் சிறப்புமிடும்பையும்" என்பது **தொல்காப்பியம்.** விழுமம் என்பது, அம் கெட்டு

விழும் என நின்றது; இ - சாரியை. ஊர் - இடவாகு பெயர். உராய் - பகுதியே வினையெச்சமாகநின்றது; "வரிப்புனை பந்து" என்பதில் 'வரி' என் பதுபோல; இதில், விகுதி முதலியன புணர்ந்து கெட்டன வென்க. இனி. 'உராய்' என்பதற்கு - எங்குஞ்சென்று என்று பொருள்கொள்ளுதலும் ஒன்று. 'கீழ்முட்டும்' என்ற முடிபை, சுஎ.-ஆம் பாட்டில் 'மேல் பரியாது' என்றுற்போலக் கொள்க. ஆம்-அசை. அல்ல-பெயர். தூண்-ஸ்தூணு என் னும் வடசொல்லின் திரிபு. (சு)

சுஙூ. இஃயா னடக்க மடக்கங் கிஃபொரு
ளில்லான் கொடையே கொடைப்பய—னெல்லா
மொறுக்கு மதுகை யுரனுடை யாளன்
பொறுக்கும் பொறையே பொறை.

(இ - ள்.) இஃயான்-யௌவனமுடையவனது, அடக்கம்-(சிற்றின்ப வழியிற் செல்லாமல்) அடங்கியிருத்தலே, அடக்கம்-சிறந்த அடக்கமாம்; கிஃபொருள் இல்லான்-மேல் மேல் வளரும்படியான பொருள் வரும்படி யில்லாதவனது, கொடையே - ஈகையே, கொடை பயன்-சிறந்த ஈகைப் பயனும்; (அவைபோல),—எல்லாம்-எல்லாவற்றையும், ஒறுக்கும்-அழிக்க வல்ல, மதுகை உரன் - (தவ) வலிமையின் மிகுதியை, உடையாளன்-உடைய துறந்தவன், பொறுக்கும்-(சினமில்லாமற் பிறர்செய்த பிழை களைப்) பொறுத்துக் கொள்ளுகின்ற, பொறையே - பொறுமையே, பொறை - சிறந்த பொறுமையாம்; (எ - று.)

வாயதில் முதிர்ந்தவன் வலிமையில்லாமையால் அடங்கியிருத்தலும், அளவிறந்த செல்வமுடையவன் தனது செல்வத்தின் மிகச்சிறிதொரு பகுதியைப் பிறர்க்குக் கொடுத்தலும், பிறர்மேற் கோபங்கொண்டு அவரை வருத்துதற்கு வேண்டும் வல்லமை யில்லாதவன் பொறுத்திருத்தலும் இயல்பேயாதலால், அவை விசேஷகுணமென்று கொண்டாடத்தக்கன வல்ல; பொறிகளை வெல்லுதற்கரிய இளமைப்பருவ முடையவன் இந்திரிய நிக்ரகஞ் செய்திருத்தலும், வறியவன் தனக்குக் கிடைத்தவற்றிற் சிறிது பிறர்க்குக்கொடுத்தலும், எவ்வளவு மேம்பட்டோரையும் அழிக்கவல்ல தபோபலமுடையவர் கோபங்கொள்ளா தொழிதலுமே அரியன வாதலாற் கொண்டாடத்தக்கன என்பதாம். இங்ஙனம் பொதுப்பட இப்பாட்டில் மூன்று பொருள்கள் சொல்லப்பட்டிருப்பினும், அதிகாரத்தால், முத லிரண்டு வாக்கியங்களை உபமானமாகவும், மூன்றுவதை உபமேயமாகவும் கொண்டு **எடுத்துக்காட்டுவமையணி**யின்பாற்படுத்துக. போகங்களை யனுப விக்துச் சலித்த முதியார் ஐம்பொறிகளை யடக்குதலில் அருமையில்லை யென்பது தோன்ற 'இஃயானடக்கமடக்கம்' என்றாரென்று ஒருவர் விசேடவுரையெழுதியுள்ளார். 'எல்லாமொறுக்கும்' என்ற அடைமொழி யாலும், அதிகாரத்தாலும், 'மதுகையுரனுடையாளன்' என்றது - ஆற்ற லாற் பெரியராய அரசரினும் தவத்தாற்பெரியராய முனிவர்க்கும் உரிய தாம்.

இஃயான் - இளமையென்னும் பண்பினடியாப்பிறந்த ஆண்பாற் பெயர்: பண்புப்பெயர் ஈறுபோய் இடைஅகரம் ஐயாயிற்று; இனி, இச்

சொல்-எதிர்மறைத் தெரிநிலை வினையாலணையும் பெயராகும்பொழுது, இலேத்திடாதவன் எனப் பொருள்படுதலுங் காண்க. அடக்கம், கொடை, பொறை-தொழிற் பெயர்கள். கிழோ பொருள்-வினேத்தாகை. பிரிநிலை யேகாரத்தை முதல் வாக்கியத்திலும் கூட்டுக. மதுகையுரன் - ஒரு பொருட்பன்மொழி : (துவத்தானை) மிக்கவலிமையென்க. (சு)

சுசு. கல்லெறிந் தன்ன கயவர்வா யின்னுச்சொ
லெல்லாருங் காணப் பொறுத்துய்ப்ப—ரொல்லை
யிடுநீற்றுற் பையவிந்த நாகம்போற் றந்தங்
குடிமையான் வாதிக்கப் பட்டு.

(இ - ள்.) (துறந்தவர்).—இடு நீற்றால் - (மந்திரித்து) எறிந்த விபூதி யினால், (தடைசெய்யப்பட்டு), பை அவிந்த - படமெடுக்கமாட்டாமல் ஒடுங் கிய, நாகம்போல்-நல்லபாம்புபோல, தம் தம் குடிமையான்-தந்தமது ஆச் சிரமத்துக்கு உரிய ஒழுக்கத்தால், ஒல்லை-விரைவிலே, வாதிக்கப்பட்டு-தடுக்கப்பட்டு,—கல் எறிந்தன்ன - கல்லால் எறிந்தாற்போலத் துன்பஞ் செய்கின்ற, கயவர் வாய் இன்னு சொல் - மூடர்வாயி லுண்டான இனிமை யல்லாத [கடுஞ்] சொற்களை, எல்லாரும் காண - பலரும் அறிய, பொறுத்து—, உய்ப்பர்-(சமதுவிரதத்தைச) செலுத்துவர்; (எ - று.)

மந்திரபூர்வமாக மேலே விபூதியெறியப்பட்ட சர்ப்பம் தன்னை அப் பொழுது பிறர் வருத்தினாலும் அவரைத் தான் சீறித் தீண்டி வருத்தாமல் தடைக்கு அஞ்சிக் கட்டப்பட்டு அடங்கிக்கிடத்தல்போல, அடக்கத்துக்கு உரிய துறவறத்தை மேற்கொண்ட பெரியோரும் தம்மைப் பிறர் நிந்தித் தாலும் அவரைத் தாம் கோபித்து வருத்தத்தொடங்காமல் தமது ஆசிரம த்தின் தருநியை நோக்கி அடங்கிநடப்பர் என்பதாம். **உவமையணி.**

இன்னுசொற்களுக்கு 'கல்லெறிந்தன்ன'என உவமைகூறியது, துவ ரூமல் பிறவருத்தத்தக்கன என்பதற்கு. 'சொல்' எனவே அமைந்திருக்க, 'வாய்' என வேண்டாது கூறியதனால், அவர்வாய் எப்பொழுதும் நல்ல சொற்கள் பயின்றறியாதென அதன் இழிவு விளங்கும். உய்ப்பர்-சினபின் மையென்னும் விரதந் துவரூமல் ஒழுகுவர் என்றபடி. நாகம்-வடசொல்; நாகத்தில் வாழ்வதென்று காரணப்பொருள்: நகம்-மரமும், மலையும்.

தத்தம்-தாம் என்பதன் விகாரமாகிய தந்தம்என்பதன் **வலித்தல்.** குடி மை, மை-தன்மைப்பொருளுணர்த்துமிகுதி. கயமை-கீழ்மை; '**கயமை யாவது**-குணங்கள் யாவும் இலராய கீழோரது தன்மை' என்றூர் பரிமே ழகரும்; அதனையுடையவர், கயவர். குடிமையென்பது, உயர்குடிப்பிறப் பிற்கேற்ற ஒழுக்கமெனப் பொருள்படுவதாயினும், இங்கே, இடத்துக்கு **ஏற்ப,** ஆச்சிரமவொழுக்கமாயிற்று. வாதிக்க = பாதிக்க. ஒல்லையெனவிந்த என இயைப்பினுமாம். ஒல்லை-விரைவுணர்த்தும் இடைச்சொல். (சு)

சுஎ. மாற்றூராய் நின்றுதம் மாறேற்பார்க் கேலாமை
யாற்றுமை யென்னு மறிவுடையா—ராற்றுமை
நேர்த்தின்னு மற்றவர் செய்தக்காற் றூமவரைப்
பேர்த்தின்னு செய்யாமை நன்று.

(இ - ள்.) மாற்றார் ஆய் நின்று-பகையுள்ளவர்களாய்நின்று, தம் மாறு எற்பார்க்கு-தமது பகைமைக்கு உரிய காரியங்களே மேற்கொண்டவர்கள் விஷயத்தில், எலாமை - (தாமும் அவற்றை) மேற்கொள்ளாமலிருப்பதை, அறியுடையார்—, ஆற்றுமை என்னும்-(துறந்தவர்களுக்கு) வலியில்லாமை யென்று இழித்துப்பேசார்; (ஆதலால்), அவர் - அப்பகைவர், ஆற்றுமை - பொறுமையில்லாமல், சேர்த்து-எதிர்த்து,இன்னா-துன்பந்தருவனவற்றை, செய்தக்கால் - (தமக்குச) செய்தால், தாம்-தாமும்,அவரை-அவர்களுக்கு, பேர்த்து - மீட்டும், இன்னாசெய்யாமை-அக்கொடுமைகளைச் செய்யாதிருத்தல், நன்று - நல்லது; (எ - று.)

தமக்குப் பகைவராய்த் தீங்குசெய்பவர்க்குத் தாம் எதிராய் நின்று தீங்குசெய்யாமை உத்தமம். முதிரிய வீரர்க்குப்போலத் துறவறத்தார்க்குத் திறனின்மை யென்னும் பழிப்புக்கு இடமாகாது; பிறர் செய்த தீங்குகளைப் பொறுத்து அவர்க்குத் தீங்குசெய்யாமையே தகுதி யென்பதாம்.

மாற்றார்-மாறுதலுடையவர்; ற் - விரித்தல்: (மனத்தை) மாற்றுபவரு மாம். எற்பார்க்கு, அவரை என்பன-உருபுமயக்கங்கள். ஆற்றுமை என் னுஞ்சொல் இரண்டனுள், மூன்னது-எதிர்மறைத் தொழிற்பெயர்; பின் னது - எதிர்மறைவினையெச்சம். இன்னா - பண்படியாகப் பிறந்த எதிர்ம றைப்பலவின்பாற்பெயர். மற்று - அசை; வினைமாற்றுமாம். (எ)

கூஅ. நெடுங்கால மோடி னுஞ் சீர் வெகுளி
கெடுங்கால மின்றிப் பிறக்கு—மடுங்காலை
நீர்கொண்ட வெப்பம்போற் றானே தணியுமே
சீர்கொண்ட சான்றோர் சினம்.

(இ - ள்.) சீர்-சீர்மைக்களது, வெகுளி - கோபம், நெடுங்காலம் ஓடி னும் - பலகாலந்சென்றாலும், கெடுங்காலம் இன்றி-(தான்) அழியுங் கால மில்லாமல், பரக்கும் - மேன்மேல் வளரும்; சீர் கொண்ட - சிறப்பைப் பெற்ற, சான்றோர் - (துறவொழுக்கம்மிக்க) மேலோரது, சினம்-கோப மோவென்றால்,—அடுங்காலை நீர் கொண்ட வெப்பம்போல்-காய்சசப்பட்ட காலத்தில் ஜலங்கொண்ட சூடுபோல, தானே தணியும்-(பிறர் ஆற்றவேண் டாமல்) தானேகவே (விரைவில்) தணிந்துபோம்; (எ - று.)

அநாதியாய் வருகின்றவாறுபற்றித் துறந்தவர்க்கும் ஒரோவிடத்து வெகுளிதோன்றினும் தோன்றியபொழுதே அதனை அவரது மெய்யுணர்வு அழிக்குமாதலால், இங்ஙனங்கூறினார்; இதுபற்றியே, **திருவள்ளுவனாரும்** "குணமென்னுங்குன்றேறி நின்றார் வெகுளி, கணமேயும்" என்றது: "கற் பிளவோ டொப்பர் கயவர் கடுஞ்சினத்துப், பொற்பிளவோ டொப்பாரும் போல்வாரே—விற்பிடித்து, நீர்நிழியவெய்த வடுப்போல மாறுமே, சீரொ ழுகு சான்றோர் சினம்" என்ற **முதுரை**யையுங் காண்க. சான்றோர்சினம் தானே தணியு மென்றதனால், நீர்வெகுளி பிறர் பலர் தணிக்கும்படி எவ் வளவு முயன்றாலும் தணியாதென்பது பெறப்படும். 'அடுங்காலை நீர் கொண்டவெப்பம்' என்ற உபமானத்தால், "அந்தண ரென்போ ரறவோர் மற்றெவ்வுயிர்க்குஞ், செந்தண்மை பூண்டொழுகலான்" என்றபடி துறவி

கள் இயற்கையில் தண்மையான அருளுடையவரென்பதும், அவர்க்குச் சினம் பிறர்செய்யுந் தீங்குபற்றிச் செயற்கையிலாகுவதே யென்பதும் விளங்கும். **உவமையணி.**

ஓடினும், உம் - சிறப்பு. வெகுளி - வெகுளுதல்: 'இ' விகுதி பெற்ற தொழிற்பெயர். காலம் - காலை யென விகாரம்; சாமரம் - சாமரை, சரிதம் - சரிதை, வதம் - வதை என்பன போல. நீர், சீர் என்பவற்றை-நீரும், சீரும் என்னும் வடசொல்லின்சிதைவு என்பர். தணியுமே, ஏ - தேற்றம்; வியப்புமாம். (அ)

சுகூ. உபகாரஞ் செய்ததனை யோராதே தங்க
ணபகார மாற்றச் செயினு—முபகாரந்
தாஞ்செய்வ தல்லாற் றவற்றினுற் றீங்கூக்கல்
வான்றோய் குடிப்பிறந்தார்க் கில்.

(இ - ள்.) உபகாரம் செய்ததனை-(தாம்) நன்றிசெய்ததை, ஓராதே - நினையாமலே, தங்கண்-தம்விஷயத்தில், அபகாரம்-தீங்குகளை, (பிறர்), ஆற்ற-மிகுதியாக, செயினும்-செய்தாலும், தாம்—, உபகாரம் செய்வது அல்லால்-(அவர்கட்கு மேன்மேலும்) நன்றிசெய்வதே யல்லாமல், தவற்றினுல்-(அவரிடத்து உண்டான) குற்றங்காரணமாக(க் கோபித்து), தீங்கு ஊக்கல்-(தாமும் அவர்க்குத்) தீமைசெய்யமுயலுதல், வான் தோய் குடி பிறந்தார்க்கு - பெருமைபொருந்திய உயர்குலத்திற் பிறந்து துறந்தவர்களுக்கு, இல் - உண்டாகாது; (எ - று.)

தாம் செய்த உபகாரத்தை மறவாமலிருந்து பிரதியுபகாரஞ்செய்யாமையோடு,அதனை மறந்து மேலும் தமக்கு அபகாரத்தை விகிச்செய்தற்குந் தொடங்கிய நீசர்களுக்கு - தாம் அபகாரஞ் செய்யாமையோடு மேன்மேல் உபகாரஞ்செய்தல் துறவிகளியல் என்பதாம்.

வான் தோய் குடி-(புகழால்) தேவலோகத்தை அளாவியகுடியென்றுமாம்; இனி, ஆகாயத்தையளாவிய குடி யென்ற பொருளால் உயர்ந்தகுடியென்னுங்கருத்துப்பட 'வான்தோய்குடி' என்றதாகவுங் கொள்ளலாம்: **திருக்குறளில்** "வானுயர்தோற்றம்" என்பதற்கு - 'வான்போலுயர்ந்த தவவேடம்" என்றுபொருள்கூறின **பரிமேலழகர்** 'வானுயர் தோற்றம் என்பது - "வான் தோய்குடி" என்றாற்போல **இலக்கணவழக்கு**' என்றதுங் காண்க. 'குடிப்பிறந்தார்' என்பது - அதிகாரத்தால், துறவறத்தார் மேல் நின்றது. 'வான்தோய் குடி' என்ற தொடர், இந்நூலில் 'குடிப்பிறப்பு' என்னும் அதிகாரத்தின் இரண்டாஞ்செய்யுளிலும் வந்துள்ளது. ஓராதே, ஏ - தேற்றத்தோடு இரக்கம். செயினும், உம் - இழிவுசிறப்பு.

"இன்னுசெய்தாரை யொறுத்த லவர்நாண, நன்னயஞ்செய்துவிடல்," "இன்னு செய்தார்க்கு மினியவே செய்யாக்கா, லென்னபயத்ததோ சால்பு" என்றவற்றாலும், தீங்குசெய்தார்க்கு எதிர்த்தீங்கு செய்யாமையும், நன்கு செய்தலும் சிறப்பாதல் அறிக. (கூ)

எ0. கூர்த்துநாய் கௌவிக் கொளக்கண்டுந் தம்வாயாற்
பேர்த்துநாய் கௌவினு ரீங்கில்லை—நீர்த்தன்றிக்
கீழ்மக்கள் கீழாய சொல்லியக்காற் சொல்பவோ
மேன்மக்க டம்வாயான் மீட்டு.

(இ - ள்.) நாய்—, கூர்த்து-கோபம்மிக்கு, கௌவிக்கொள-(தம்உடம்பைக்) கடித்துப்பிடிக்க, கண்டும்-பார்த்தும், தம் வாயால்—, பேர்த்து நாய் கௌவினுர் - மாறுபட்டு நாயைக் கடித்தவர்கள், ஈங்கு - இவ்வுலகத்தில், இல்லை—; (அதுபோல), கீழ்மக்கள் - அற்பர்கள், நீர்த்துஅன்றி - குணமுடைய சொல் ஒன்றையுஞ் சொல்லாமல், கீழ் ஆய - தாழ்வாகிய சொற்களையே, சொல்லியக்கால்-சொன்னுல், மேல் மக்கள் - மேலோர் [துறந்தவர்]; தம்வாயால்—, மீட்டு சொல்பவோ - மாறுக (அப்படிப்பட்ட சொற்களை)ச சொல்வார்களோ ? [சொல்லா ரென்றபடி]; (எ - று.)

கீழோர் தம்மை வைதால் மேலோரும் அவரைக்கோபித்து எதிர்வைதல், நாய்கடித்தால் அதனை எதிரிற் கடித்தல்போலத் தகுதியற்ற தென்ப தாம். "நீர்த்தகவில்லார் நிரம்பாமைத் தம் நலியில், கூர்த்தவரைத் தாம்நலிதல் கோளன்றுல் சான்றோர்க்குப், பார்த்தோடிச்சென்று கதம்பட்டு நாய் கௌவிற், பேர்த்து நாய் கௌவினு ரில்" என்ற **பழமொழி**ச்செய்யுளோடு இதனை ஒப்பிடுக. கீழ்மக்கட்கு நாயுவமை கூறியது, அவர்களிழிவை ஈன்கு புலப்படுத்தற்கு.

'சொல்ப' எனவே அமைந்திருக்க,'தம்வாயால்'என வேண்டாதுகூறினர், அவர்கள்வாய் நல்ல சொற்கஞேயே பயின்ற தெனத் தாம் வேண்டியதன் சிறப்பு முடித்தற்கு; இங்ஙனம் நுட்பமாகக் கருத்துக் கொள்ளுதல், வடநூலில் **தாத்பர்யம்** எனப்படும்: "ஒழுக்க முடையவர்க் கொல்லாவே தீய, வழுக்கியும் வாயாற் சொலல்" என்ற **திருக்குறளி**லும் இங்ஙனங் காண்க. நீர்த்து-நீர்மையென்னும் பண்பினடியாப் பிறந்த ஒன்றன்பாற் குறிப்புவினையாலணையும் பெயர். ஆய - பெயர்.

உபமான உபமேயங்களைத் தனித்தனி நிறுத்தி அவற்றின் இடையில் உவமவுருபுகொடாமற் பிம்பப்பிரதிபிம்ப பாவந் தோன்றக் கூறினமையால், இது-**எடுத்துக்காட்டுவமையணி**; இதனை வட நூலார் '**திருஷ்டாந்தாலங்காரம்**' என்பர். (கo)

துறவறவியல் முற்றிற்று.

இரண்டாவது

இல்லறவியல்

செல்வநிலையாமை முதல் ஏழதிகாரங்களால் அறத்துப்பாலின் முதற் கூறுகிய துறவறம் கூறி, இனி அதன் இரண்டாங்கூறுகிய இல்லறம் கூறு வான் தொடங்கினர். **இல்லறமாவது** — 'இம்மை மறுமையாகிய இருமை யின்பங்களையும் அனுபவித்தற்குரிய இல்வாழ்க்கைநிலைக்குச் சொல் லிய நெறியில் நின்று, அதற்குத் துணையாகிய கற்புடைமனைவியோடுஞ் செய்யப்படும் தருமம்' என்றும், 'பொறையுடைமை முதல் ஆறு அதிகார ங்கள் இல்லறவியல்' என்றும், இதனை "அறவியலிருவகைத்தா மவைதாம் மூள், துறவேழில்லற மிருமூன் றென்ப" என்ற பழைய வுரைசசூத் திரத்தா னுணர்க' என்றும் முன்னரே **உரைப்பாயிரத்**தில் உரைத்தவாறு ரல் இதன்பொருள் முதலியன இனிது விளங்கும்.

ஆ - ஆம் அதிகாரம்—பொறையுடைமை.

அதாவது - காரணம்பற்றியாவது அறியாமையாலாவது ஒருவன் தமக்குக் குற்றஞ் செய்தவிடத்துத் தாமும் அதனை அவனிடத்தில செய் யாமற் பொறுத்தலே யுடையவராதல். இல்வாழ்பவர்க்கு உரிய பலகுணங் களிலும் இது இன்றியமையாச் சிறப்புடைய தாதலின், இல்லறவியலில் வைக்கப்பட்டது. திருவள்ளுவனாரும் பொறையுடைமை யென்னும் அதி காரத்தை இல்லறவியலில் வைத்தவாறுகாண்க. சினமின்மையும் பொறை யுடைமையும் வெவ்வேறு இயல்பின்பாற் பட்டன வாதலால், இது கூறியது கூற லாகாது.

எக. கோதை யருவிக் குளிர்வரை நன்னாட
பேதையோ டியாது முரையற்க—பேதை
யுரைப்பிற் சிதைந்துரைக்கு மொல்லும் வகையான்
வழுக்கிக் கழிதலே நன்று.

(இ - ள்.) கோதை - மாலைபோல விழுகின்ற, அருவி - நீரருவிகளை யுடைய, குளிர்-குளிர்ச்சிபொருந்திய, வரை-மலைகளையுடைய, நல்-சிறந்த, நாட-பாண்டிய நாட்டையுடைய அரசனே!—பேதையோடு-அறிவில்லாத வனோடு, யாதும்-எதையும், உரையற்க-சொல்லாதிருக்கக்கடவை; உரைப் பின்-சொன்னால், பேதை - அவனறிவில்லாதவன், சிதைந்துஉரைக்கும் - வரம்பழிந்து பேசுவான்; (ஆதலால்), ஒல்லும் வகையான் - கூடிய வித்தி தால், வழுக்கி - தப்பி, கழிதலே - (அவனது தொடர்ச்சியினின்று) நீங்கு தலே, நன்று - நல்லது; (எ - று.)

தம்மோடு கலந்த அறிவில்லாதவனொருவன் தமக்கு யாதாயினும் ஒரு பிழையைச் செய்தால் அதற்காகக் கோபித்து அவனை ஒன்றுஞ்சொல் லலாகாது; சொன்னால் அவன் மேன்மேல் எதிர்த்துப்பேசி இகழ்வான்; ஆதலால், சமயம் பார்த்து விரோதமில்லாமலே அவனது தொடர்ச்சியை விட்டுவிடுதலே நல்லது என்பது கருத்து.

நாட்டின் நிலவளத்துக்கு முக்கியகாரணமாகிய நீர்வளத்துக்கு இடமாதலின், மலையின் செழிப்பைக் கூறினார். இதனால் மருதநிலமாகிய அந்நாட்டை அடுத்துள்ள குறிஞ்சிநிலமாகிய மலையின் மாட்சி விளங்கும்; "இருபுனலும் வாய்ந்த மலையும் வருபுனலும், வல்லரணும் நாட்டிற்கு உறுப்பு" என்ற திருக்குறளினாலும், 'இடையறாது நீர்பொழிதலும், தன்வளத்தாலும்' மாரிக்கண்ண உண்டாகி மேகமண்டலத்தை முட்டுமையபற்றி 'வாய்த்தமலை' என்றார்' என்ற அதன் உரையாலும், மலை நாட்டிற்கு அடையவராதலும் நிலவளத்துக்கு இன்றியமையாத நீர்வளத்துக்குக் காரணமாதலுங் காண்க.

வரை - கரை: அதனையுடைய மூங்கில் மிகையும் மலைக்கு இருமடியாகு பெயர். பேதைமை - அறியாமை; பேதைமை யென்னும் பண்பின் அடி: இங்கே, அறிவில்லாதவர்க்கு, பண்பாகுபெயர். பேதைமையோடியாதும் - குற்றியலிகரம். உரைப்பின் - எதிர்காலவினையெச்சம்: ப்-எழுத்துப்பேறு: எதிர்காலவிடைநிலையன்று; விகுதியே காலங் காட்டுதலினால். ஒல்லும் வகை, ம் - மகரக்குறுக்கம். சான்று - ஒன்றன்பாற்குறிப்பு முற்று.

"இலர் பல ராகிய காரண மானும், வினைபல வற்றுள் மலைதலு மாங்கே" என்றார், சிந்தாமணியிலும். 'மேகமதையருவிக் குலமீர் வரைசான்றனை' என்பதை, ஆடூஉமுன்னிலை: இரண்டாங்கூறியவினை- மலைவளம் பாடுதல் பாண்டியற்கு முரிமைபற்றி: "தண்டமர் நீள்சோலை சார்ல் மலைநாட" என மேலும் வரும். (க)

கூ. நேரல்லார் நீரல்ல ரென்பதூஉம் மற்று நா
தாரித் திருத்தல் தகுதிபோற்—சீரிற்
புகழ்மையாக் கொள்வாரு மில்லைபோங் குன்ற
சமழ்மையாக் கொண்டு விடும்.

(இ - ள்.) நேர் அல்லார் - (தமக்கு) ஒப்பாகாதவர் [கீழ்ப்பட்டவர் என்றபடி], நீர் அல்ல - நற்குணத்தையுடையனவாகாதசொற்களை, சொல்லிய்க்கால் - சொன்னால், அது-அவ்வாறு சொன்னதை, தாரித்திருத்தல்-பொறுத்திருத்தலே, தகுதி-(மேன்மேலார்க்குரி) தாகுதாம்; மற்று - அதற்கு வேறுகிய பொறுமையின்மையை, பொற்கு நீர் ஞாலம்-பிறக்க நீரையுடைய கடலாற் சூழப்பட்ட பூமியி லுள்ள உயர்ந்தவர், புகழ்மை ஆ கொள்ளாது-புகழுக்குக்காரணமாக எண்ணுமல், சமழ்மை ஆ கொண்டுவிடும் - பழித்தற்குக் காரணமாக எண்ணிவிடுவர்; (எ - று.)

"சிறியோர்செய்த சிறுபிழையெல்லாம், பெரியோராயிற்பொறுப்பது கடனே" என்ப வாதலால், கீழோர்சொன்ன தகுதியில்சொற்களைப் பொறுத்தலே புகழாம்; பொறுது தாமும் தகுதியில்சொற் கூறினால் அது கீழ்மையின்பாற்பட்டுப் பழிப்புக்கு இடமாமென்க.

ஆ-ஆக என்பதன் ஈகாரம்; இது "சாவவென்மொழி யீற்று உயிர் மெய்சாதலும் விதி" என்றதன் உபலக்ஷணத்தாற் கொள்ளத்தக்கது. தாரித்து - தரித்து. நேர் அல்லார் - செவ்வையான குணமில்லாதவ ரென்றுமாம். அல்ல - பெயர். முதலடியில் மற்று - அசை. இரண்டாமடியில், மற்று - அவ்வாறு. பொறுத்திராமல் தாமும் அப்படிப்பட்ட சொற்

கனை எதிரேசொன்னல் அது என்னும்பொருளைத் தந்ததனால், பிறிது என்னும் பொருளது. 'ஒரும்'—அசை; "அஞ்சுவ தோரு மறனே" என்ற விடத்துப் போல. புகழ்மை, சமழ்மை என்பவற்றில், 'மை'விருதி தன் மைகுறித்தது. பொங்கு நீர் - வினைத்தொகைப் புறத்துப்பிறந்த அன் மொழித்தொகை. "உலகமென்பது உயர்ந்தோர் மாட்டே" என்பதனால், ஞாலம் - இங்கே, உயர்ந்தோரை உணர்த்திற்று. ஞாலம் சொண்டுவிடும்-

சொற்நிலை நோக்கிய முடிபு. (உ)

எங. காதலார் சொல்லுங் கடுஞ்சொ லுவந்துரைக்கு
மேதிலா ரின்சொலிற் றீதாமோ—போதெலா
மாதர்வண் டார்க்கு மலிகடற் றண்சேர்ப்ப
வாவ தறிவார்ப் பெறின்.

(இ - ள்.) போது எலாம் - பூக்களிலெல்லாம், மாதர் வண்டு-அழகிய வண்டுகள், ஆர்க்கும் - ஆரவாரிக்கப்பெற்ற, மலி கடல் தண் சேர்ப்ப - நிறைந்த கடலின் குளிர்ச்சியான கரையையுடைய அரசனே!—ஆவது அறிவார் பெறின் - (ஒன்றினால்) உண்டாவதாகிய பயனை (நல்லது தீயது என்று) பகுத்தறிபவரைப் பெற்றால்,—காதலார் சொல்லும் கடுஞ்சொல்- (தம்மிடம்) அன்புள்ளவர் சொல்லுகிற கொடியசொல், எதிலார் உவந்து உரைக்கும் இன்சொலின் - விரோதிகள் மகிழ்ந்து சொல்லுகின்ற இனிய சொல்லைப்போல, தீது ஆமோ - தீமையைத் தருவதென்றாகுமோ? (எ - று.)—ஆகாது, நன்மையையே தரும் என்றபடி.

அன்புள்ள நண்பர் தற்காலத்தில் இனியனவாகாமல் வெறுக்கத்தக்க சொற்களைச் சொன்னாலும் அவை பிற்காலத்தில் நன்மையையே தரும்; அன்பில்லாத பகைவர் செவிக்கினிய சொற்களையே சொன்னாலும் அவை விரைவில் தீமையைத் தரும்; இத்தன்மை, சொல்லின்பயனை அறிவார்க்கு நன்கு விளங்கும்; ஆதலால், வேண்டியவர் கடுஞ்சொற்சொன்னாலும் பயன் நோக்கிப் பொறுக்கவேண்டு மென்பது, கருத்து. "இனியவ ரென் சொலினு மின்சொல்லே யின்னர்,கனியு மொழியுங்கடுவே-யனல்கொளுந் தும், வெங்காரம் வெய்தெனினு நோய்தீர்க்கு மெய்பொடிப்பச், சிங்கி குளிர்ந்துங்கொலும்", "மாசற்ற நெஞ்சுடையார் வன்சொலினி தேனைய வர், பேசுற்ற வின்சொல்பிறிதென்க - ஈசற்கு, நல்லோ னெறிசிலையோ நன்னுதா லொண்கருப்பு, வில்லோன்மலரோ விருப்பு" என்றார் பின் னோர்களும். போதெலா மாதர் வண்டார்க்குஞ் சேர்ப்ப என்ற இடத்து- மலரில் வண்டு ஆரவாரிப்பது அம்மலரை மலர்த்துதற்கே ஆவதுபோல காதலார் கடுஞ் சொல்லும் ஒருவனை நல்வழிப்படுத்தற்கே யாகும் என்ற பொருள் தொகைமொழியால் தோன்றும்: "நெஞ்சினிற்பொருளை நிரப்ப வேறொருரு, செஞ்சொலிற் காட்டுந்திறனே தொகைமொழி."

கடுஞ்சொல் - செவிக்கு இன்னாத சொல். போது-மலரும் பருவத்து அரும்பு. அறிவார்ப்பெறின்-இயல்பின் விகாரமாய்ப்பகரம் மிக்கது. 'போதெலாம் மாதர்வண்டார்க்கும்' என்பது, நெய்தல் நிலமாகிய கடற் கரையின் வளத்தைச் சிறப்பித்தது. பெறுதலின் அருமை தோன்ற, 'பெறின்' என்றார். (கூ)

எச. அறிவு தறிந்தடங்கி யஞ்சுவ தஞ்சி
யுறுவ துலகுவப்பச் செய்து—பெறுவதனு
னின்பற்று வாழ்வ மியல்புடையா ரெஞ்ஞான்றுந்
துன்பற்று வாழ்த லரிது.

(இ - ள்.) அறிவது - அறியவேண்டியவையெல்லாம், அறிந்து—, அடங்கி- பொறுமைக்குணமுடையராய், அஞ்சுவது-அஞ்சத்தக்கபழிபாவங்களுக்கு, அஞ்சி - பயந்து, உறுவது-(தாம்) செய்யுங் காரியத்தையெல்லாம், உலகு உவப்ப-உலகத்தார் மகிழும்படி, செய்து—, பெறுவதனால்-அதனாற் பெறும் பயன்களால், இன்பு உற்று-இன்பமடைந்து, வாழும்-வாழ்கின்ற, இயல்பு உடையார்-தன்மையையுடையவர், எஞ்ஞான்றும்-எப்பொழுதும், துன்பு உற்று வாழ்தல்-துன்பமடைந்து வாழ்தல், அரிது-இல்லை; (எ-று.)

"அறிவுடையா ராவதறிவார்," "கற்றறிவார் கண்டதடக்கம்," "அஞ்சுவதஞ்சாமைபேதைமை யஞ்சுவ, தஞ்சவறிவார்தொழில்," "உலகத்தோ டொட்டவொழுகல் பலகற்றுங், கல்லாதவறிவிலாதார்" என்பன, இங்குக் காணத்தக்கன.

இப்பாட்டில் அறிவுடைமை, தீவினையச்சம், ஒப்புரவுசெய்தல், நிரம்பிய மனமுடைமை என்ற பிறபொருள்களுஞ் கூறப்பட்டிருந்தாலும், 'அடக்கி' என்றதைப் பிரதானமாகக்கொண்டு, இப்பாட்டு இவ்வதிகாரத்திற் சேர்க்கப்பட்ட தென்க.

அறிவது, அஞ்சுவது, உறுவது, பெறுவது - **சாதியொருமை.** உலகு - லோகமென்னும் வடசொல்லின் திரிபு; இது, இடத்தையும் மக்களையும் உணர்த்தும். 'அரிது' என்பதில், அருமை - இன்மைகுறித்தது. (ச)

எந. வேற்றுமை யின்றிக் கலந்திருவர் நட்டக்காற்
றேற்றரு வொழுக்க மொருவன்க ணுண்டாயி
னூற்றுந் துணையும் பொறுக்க பொறானெயிற்
றாற்றுதே தூர விடல்.

(இ - ள்.) இருவர்-இரண்டுபேர், வேற்றுமை இன்றி - மனவேறுபாடு இல்லாமல் [ஒற்றுமையாக], கலந்து-சேர்ந்து, நட்டக்கால்-சிநேகித்தால், (பின்பு), ஒருவன்கண்-(அவ்விருவருள்) ஒருவனிடத்து, தேற்ற ஒழுக்கம்-நம்பத்தகாததியாடத்தை, உண்டு ஆயின் - உண்டாகுமானால், (மற்றொருவன்), ஆற்றும் துணையும்-(தன்னுற்) பொறுக்கக்கூடியமட்டும், பொறுக்க-பொறுக்கக்கடவன்; பொறான் ஆயின் - பொறுக்கமாட்டாமற்போனால், தேற்றுதே - (அவனது தீயொழுக்கத்தைப்) பலரும் அறியவெளிப்படுத்தாமல், தூரவிடல் - (அவனது சிநேகத்தைத்) தூரத்தில் விடக்கடவன்; (எ - று.)

நட்டக்கால் என்ற எதிர்காலவினையெச்சத்தில், நள்-பகுதி. ளகரம் டகரமானது - சந்தி, ட் - எழுத்துப்பேறு, அ - சாரியை, க் - சந்தி, கால்-விகுதி. தேற்ற என்பதில், பகுதியாகிய தேற்று என்பதைத் தன்வினை பிறவினை இரண்டுக்கும் பொதுவென்றுவது, பிறவினை தன்வினைப்பொருளில் வந்ததென்றுவது, தேறுஎன்ற தன்வினையினிடையில் றகரமெய்

விரித்தல்விகார மென்றுரைத்தது கொள்க; "சில சொல்லல் தேற்றாதவர், "வாளினுற் பேரிணல்லால் நாவினுற் பேசல் தேற்றாதவன்," "தேற்றாப் பெருமை பொய்யே" எனப் பிறவிடங்களிலும் இவ்வாறு வரும். நாடு - விடல் என்றது, உலகவழக்கு; இனி, நாடு - (அவனது நாட்டுப்) தூர்த்த போம்படி [அழியும்படி], விடல் - விடக்கடவனென்றும் பொருள்கொள்ளலாம். விடல்-அல்லீற்று உடன்பாட்டு வியங்கோள்.

இது - ஒருவிகற்ப இன்னிசைவெண்பா. (ஙு)

எ கு. இன்னு செயினு மினிய வொழிகென்று
தன்னேயே தானேவி னல்லது—நுன்னிக்
கலந்தாரைக் கைவிடுதல் கானக நாட
விலங்கிற்குஞ் சால்பு வரைந்து.

(இ - ள்.) கானகம் நாட - காடுசெறிந்த நாட்டையுடையவனே!—இன்னு செயினும் - (தன்னேநெருங்கி நிமோகித்தவர் தனக்கு) இனிமையல்லாத [துன்பந் தருகிற] காரியமாகவே செய்தாலும், இனிய ஒழிக என்று - (அவை) இனியனவாய்விடக்கடவன என்று எண்ணிப் பொறுத்து, தன்னேயே தான் ஏவின் அல்லது-(அவர் அவ்வாறுசெய்தற்குக் காரணமாய் முற்பிறப்பில் தீவினை செய்துள்ளன) தன்னேயே தான் வெறுத்துக்கொள்வதேயல்லாமல், நுன்னி கலந்தாரை - நெருங்கி நட்புக்கொண்டவரை, கைவிடுதல் - விட்டுவிடாதே; (எனென்றால்),—விள்ளல் - (சினேகித்தபின்பு ஒன்றைவிட்டு ஒன்று) பிரிதல், விலங்கிற்குஞ் - (பகுத்தறிவில்லாத) மிருகங்களுக்கும், அரிது - அருமையையுடையது: (ஆதலால்); (எ - று.) —அப்படியிருக்க, மக்கட்கு எளிதோ என்பது, இதில் **ஒழியிசையெச்சம்** என்பர், மயிலைநாதர்.

"கூடிப் பிரியேல்" என்றார் **ஔவையாரும்**. இனி, இனிய ஒழிக என்று என்பதற்கு-அவற்றை இனியனவாக எண்ணிச் சினமொழிவாயாக என்று மனத்தைநோக்கிச் சொல்லியென்றும், தன்னேயேதான் ஏவின் அல்லது என்பதற்கு-(மூன்னே செய்கையாக ஆராயாமல் அவரது நட்பை ஏற்றுக்கொண்ட) தன்னேயே தான் வெறுத்துக்கொள்வதல்லாமலென்றுங் கொள்ளலாம்.

"கானகநாட" என்று, நாட்டிற்கு உறுப்பாய் அதற்கும் அரசனுக்கும் காவலாகுஞ் சிறப்புடைய நால்வகையரண்களுள் ஒன்றாகிய காட்டரணின் அமைதியைக் கூறியவாறு; "அணிகிழற், காடு முடையது தரண்" என்றார் **திருவள்ளுவனாரும்**. இத்தொடர் - மூல்லைநிலத்தலைவனென்பதைப் புலப்படுத்தும். விலங்கு - 'திரியக்' என்னும் வடசொல்லின் பொருள் கொண்டது; குறுக்காக உடம்பமையப்பெற்ற தென்பது பொருள்.

கைவிடுதல் = கைவிடல்: எதிர்மறை ஏவலொருமை முற்று; து-வேண்டாவழிச் சாரியை: இனி,'து'என்னுஞ் சாரியையை இடையிற் பெற்ற'அல்' ஈற்று எதிர்மறைவியங்கோள் எனினுமாம்; இனி,'அல்'விகுதிபெற்ற வியங்கோள்போல, 'தல்' விகுதிபெற்ற வியங்கோளும் உடன்பாட்டோடு எதிர்மறைக்கும் வருமெனக் கொள்ளுதலும் ஒன்று. அன்றி,'கைவிடுதல்' என்பதைத் தொழிற்பெயராகவே கொண்டு,'கூடாது' என்னுமுற்றுவருவித்து

முடித்தல் நேராம். 'அரிது' என்பதனையே 'கைவிடுதல்' என்னுந் தொழிற் பெயர்க்கும் பயனிலையாகக்கொண்டு கூட்டிமுடித்தல் எளியவழி. ஒழிகென்று-வியங்கோளின் ஈற்று அகரம் தொகுத்தல். உம்-இழிவுசிறப்பு. (சு)

எ எ. பெரியார் பெருநட்புக் கோடலுஞ் செய்த
வரிய பொறுப்பவென் றன்றே—வரியரோ
வொல்லெ னருவி யுயர்வரை நன்னாட
நல்லசெய் வார்க்குத் தமர்.

(இ - ள்.) ஒல் என்-ஒல்லென்று ஒலிக்கிற, அருவி-நீரருவிகளையுடைய, உயர்-உயர்ந்த, வரை-மலைகளையுடைய, நல் நாட-சிறந்த நாட்டையுடைய அரசனே!—பெரியார பெரு நட்பு-(அறிவு ஒழுக்கங்களாற்) பெரியோரது மேன்மையான சிநேகத்தை, கோடல்-(யாவரும் விரும்பிக்) கொள்ளுதல், தாம் செய்த—, அரிய-(பொறுப்பதற்கு) அரிய குற்றங்களை, பொறுப்ப - பொறுத்துக் கொள்வார்கள், என்று அன்றே-என்று எண்ணி யல்லவோ ? நல்ல செய்வார்க்கு-நல்லவைகளையே செய்பவர்களுக்கு, தமர்-நண்பராகுபவர், அரியரோ-(கிடைத்ததற்கு) அரியரோ ? [அல்லர், எளிதிற் பலர் கிடைப்பர் என்றபடி]; (எ - று.)

தம்மைச் சேர்ந்தவர்கள் அதிக குற்றங்களைச் செய்தாலும், தாம் அவற்றைப் பொறுத்தல் பெரியோரியல்பு ; குற்றமொன்றேனுஞ் செய்யாமல் நன்மைகளையே செய்பவர்களுக்கு எவரும் நட்பாவ ராதலால், அது விசேஷமன்று என்பதாம். பெரு நட்பு - என்றும் இடையறுதல் நட்பு. அரிய என்பதற்கு-கேட்கப்படாதனவும் காணப்படாதனவுமான குற்றங்கள் என்றுரை ஒருரையாளர். இச்செய்யுளிலுள்ள ஆறடிமுன்னிலையில், பயனின்றியே யொலிக்கின்ற அருவியைத் தன்னிடத்துக்கொண்ட மலை போலக் குற்றஞ் செய்கிற நட்பினரையும் ஏற்றுக்கொள்க என்ற பொருள் தொகைமொழியாம்.

கோடல்-தொழிற்பெயர். அரிய, நல்ல-பெயர். அன்றே, ஓ-தேற்றம். அரியரோ, ஓ-எதிர்மறை. ஒல்லெனல்-ஒலிக்குறிப்பு. உயர்வரை-வினைத்தொகை. உயர்ந்த உயர்கிற உயரும் என விரியும் : உயர்வாகிய வரையென விரித்துப் பண்புத்தொகையெனல் இலக்கணத்துக்குப் பொருந்தாது : உயர் என்பது வினைப்பகுதியாதலாலும், காலந்தோன்ற நிற்றலாலும் எனக் காண்க. உச்சிமேற் புலவர்கொள் நச்சினார்க்கினியர், தொல்காப்பிய வுரையில் 'உயர்திணை என்பது-உயர்ந்த ஒழுக்கமென இறந்தகால வினைத் தொகை ; இதனைப் பண்புத்தொகை யென்பாரும் உளர் : அது பொருந்தாது ; என்னை ? இது காலந்தோன்ற நிற்றலின்' என்றவாறு அறிக. (எ)

எ அ. வற்றிமற் றுற்றப் பசிப்பினும் பண்பிலார்க்
கற்ற மறிய வுரையற்க—வற்ற
மறைக்குந் துணையார்க் குரைப்பவே தம்மைத்
துறக்குந் துணிவிலா தார்.

(இ - ள்.) வற்றி-(உடம்பு) உலர்ந்து, ஆற்ற பசிப்பினும்-மிகவும் பசித்தாலும், பண்பு இலார்க்கு-குணமில்லாதவர்களுக்கு, அற்றம்-(தமது) வறுமையை, அறிய-(அவர்) அறியும்படி, உரையற்க-சொல்லாதொழிக; தம்மை துறக்கும் துணிவு இலாதார்-(விசேஷசங்கடகாலங்களில்) தம் உயிரை மாய்த்துவிடும் மனவுறுதியில்லாதவர், அற்றம்-(தமது) வறுமையை, மறைக்கும் தூணையார்க்கு-நீக்கவல்ல தன்மையையுடைய நண்பர்க்கு, உரைப்ப-சொல்லுவர்; (எ - று.)

மிக்க வறுமை நேர்ந்த விடத்தும், உயிர்போனலும் போகவென்று பொறுத்துக்கொண்டிருப்பதே, பொறுமை; அவ்வாறன்றிப் பிறரோடு சொல்லத் துணிந்தாலும், அதனை வெளியிடாமல் நீக்கவல்லவர்க்குச் சொல்லலாமே யல்லாமற் பிறர்க்குச் சொல்லலாகாதென்பது, கருத்து. ஒருதையாளர் நிலைபெற்ற வீடுபேற்றுக்கு உரிய உயிரை நிலையாமையான வறுமையைக் கருதித் துறத்தல் பாவம்' என்ற அறநூற் கொள்கைபற்றிப் பண்புடையாரிடத்து உரைத்து உயிரோம்புக என்றார்' என உரைத்தனர்: அன்னர், இது இல்லறவியல் என்பதைக் கருதவில்லை போலும். மற்று-அசை; வினைமாற்றுமாம். மறைத்தலென்பது நீக்குதலென்னும் பொருளதாதலை, "தம்வயிற்குற்றம் மறையாவழி" எனத்**திருக்குறளி**லுங் காண்க: இனி, இரட்டுறமொழிதலென்னும் உத்தியால், மறைத்தல் என்பதற்கு-வெளியிடாதொழித்தல் என்ற பொருளும் இங்குப்பொருந்துமாறு காண்க. பண்பாவது - எல்லாரியல்புகளும் அறிந்து ஒத்து ஒழுகுதல்; "பண்பெனப்படுவது பாடறிந் தொழுகல்" என்றார் **கலித்தொகை**யிலும். அற்றம்-எல்லாப்பொருள்களும் அறுதல்: இல்லையாதல்; தொழிற்பெயர்; அறு-பகுதி, அம்-விகுதி; ற்-விரித்தல். எ-அசை.

இச்செய்யுள் - பொறுத்தலென்கிற சம்பந்தத்தால் இவ்வதிகாரத்திற் சேர்க்கப்பட்டது; அடுத்த இரண்டு செய்யுள்களும் இவ்வாறே. (அ)

எசு. இன்பம் பயந்தாங் கிழிவு தலைவரினு
மின்பத்தின் பக்க மிருந்தைக்க—வின்ப
மொழியாமை கண்டாலு மோங்குருவி நாட
பழியாகா வாறே தலை.

(இ - ள்.) ஓங்கு அருவி நாட-உயர்ந்த அருவிகளையுடைய நாட்டையுடையவனே!—இன்பம் பயந்த ஆங்கு-இன்பத்தைத்தந்த அவ்வழியில், இழிவு தலைவரினும்-தாழ்வுநேர்ந்தாலும், இன்பத்தின் பக்கம் இருந்தைக்க - (அதனைவிடாமல்) அவ்வின்பம் வருகிறவழியிலேயே விரும்பியிருக்கிற உனக்கு,—இன்பம் ஒழியாமை கண்டாலும்-இன்பம் நீங்காமலிருப்பதைப் பார்த்தாலும், பழி ஆகா ஆறே - பழிப்பு. உண்டாகாத வழியே, தலை - தலைமையானதாம்; (எ - று.)

ஒருதொழில் இன்பத்தோடு பழியையுந் தருவதானால், அதனைப் பழிதருதலைநோக்கி விடவேண்டும்: இன்பந்தருதலைநோக்கி, விரும்பலாகாது என்பது, கருத்து; எனவே, அப்படிப்பட்ட தொழிலைச் செய்யாமற் பொறுத்தல் தகுதியென்பதாம். இனி, இன்பத்தையடைந்தது போலவே துன்பம் நேரினும் தன்மனத்தை இன்பத்தினிடத்தே செலுத்துக [துன்பத்தையும் இன்பமாகக் கருதுக]; இங்ஙன் இன்பம் நீங்காதிருப்பினும்,

பழியுண்டாகாத வழியே செல்லுதற்கு உரிய சிறந்த வழியாம் என்று கருத்துக் காண்பாருமுளர்.

பயந்தாங்கு-பெயரெச்சவீறு தொகுத்தல். பக்கம்-பகுதி: வடசொல். இருந்தை-முன்னிலை யொருமை யிறந்தகால வினையாலணையும் பெயர். ஐ-விகுதி. இருந்தைக்க—கு உருபு, அகரச்சாரியை பெற்றது; "கடிதிலை யின்றே யாசிரியற்க" என்பதிற் போல. "ஐயான்குச் செய்யுட்கு அவ்வு மாகும்" என்றார், நன்னூலார். இனி, இருந்தைக்க-இருக்க என வியங் கோள் முற்றுமாம்: சிலப்பதிகாரத்தில் துன்பமாலையில், "மடமகளிரெல் லீருங் கேட்டைக்க" என்ற விடத்து, 'வினையசைச்சொல்...வியங்கோட் பொருண்மையால், கேட்க என்னும் பொருட்டாயிற்று' என்று உரைத் ததையும், ஊர்சூழ்வரியில் "எழுதெழிலின் மலருண்கணிருந்தைக்க வெனப் போனான்" என்றவிடத்து, 'இருந்தைக்க இருக்க' என்று உரைத்ததையும் காண்க. (கூ)

அ0. தான்கெடினுந் தக்கார்கே டெண்ணற்க தன்னுடம்பி
னூன்கெடினு மூண்ணூர்கைத் துண்ணற்க—வான்கவிந்த
வையக மெல்லாம் பெறினு முரையற்க
பொய்யோ டிடைமிடைந்த சொல்.

(இ - ள்.) தான் கெடினும்-தான் அழிய நேர்ந்தாலும், (அவ்வழிவை ஒழிக்கும்பொருட்டு), தக்கார் கேடு-மேலோரது கெடுதலை, எண்ணற்க-(பொருமைபால்) நினையாதிருக்கக்கடவன்; தன்உடம்பின்ஊன்கெடினும்-தன் உடம்பிலுள்ள தசை (பசியால் மெலிந்து) அழிவதாயினும், (அதனைப் பொறுத்திடாமைபற்றி), உண்ணூர் கைத்து உண்ணற்க-உண்ணத்தகாத வரது கையிலுல்வரும் உணவை உண்ணாதிருக்க; வான் கவிந்த-ஆகாயத் தாற் கவியப்பட்ட, வையகம் எல்லாம்-பூமி முழுவதையும், பெறினும்-(தான்) பெறுவதாயிருந்தாலும், (நன்வறுமையைப் பொறுக்கமாட்டாமை பற்றி), பொய்யோடு இடைமிடைந்த சொல்-பொய்யோடு இடையிலே கலந்த சொல்லை, உரையற்க-சொல்லாதிருக்க; (எ - று.)

இவை யெல்லாம் பொறுமைக்குணமுடையவரது செய லென்றபடி.

முன்னிரண்டடியில், உம்-இழிவுசிறப்பு; மூன்றாமடியில். உம்-உயர்வு சிறப்பு. வையகம்-பொருள்கள் வைக்கப்படும் இடம். (கo)

கூ - ஆம் அதிகாரம்.—பிறர்மனை நயவாமை.

அஃதாவது-காமமயக்கத்தாற் பிறருடைய மனையாளை விரும்பா திருத்தலை உணர்த்துவது. பொறையுடையரான இல்வாழ்வார்க்கு, பொறுத்தற்கு அரிய காமத்தைப் பொறுத்தல் மூக்கியமாக வேண்டுமென் பதுதோன்ற, இது பொறையுடைமையின்பின் வைக்கப்பட்டது. பிறர் மனைநயத்தல் பொறுத்தற்கரிய குற்ற மென்பதைக் காட்டும்பொருட்டு, பொறையுடைமையின்பின் இது வைக்கப்பட்டதெனினும் அமையும்: திருக்குறளில், பிறனில்விழையாமையின்பின் பொறையுடைமை வைத்த தும், இவ்விரண்டு அதிகாரங்களுக்கு முள்ள சம்பந்தத்தை வற்புறுத்தும். மனை-ஆகுபெயர்.

அக. அச்சம் பெரிதா லதற்கின்பஞ் சிற்றளவா
னிச்ச நினையுங்காற் கோக்கொலையா—னிச்சலுங்
கும்பிக்கே கூர்த்த வினையாற் பிறன்றூர
நம்பற்க நாணுடை யார்.

(இ - ள்.) அச்சம் பெரிது-(பிறர்மனைவியை விரும்பி எழுங்காலத்துத் தமக்குள்ளே தோன்றுகின்ற) அச்சம் பேரளவுடையது; அதற்கு இன்பம் சிறுஅளவு-அவ்வச்சத்திற்கு (த் தம்மால் அனுபவிக்கப்படுஞ்) சிற்றின்பம் சிறியஅளவுடையது;நிச்சம்நினையுங்கால்-(தமதுகளவொழுக்கத்தின்)உண்மையை ஆராயுமிடத்து, கோ கொலை-(அரசனுற்) கொல்லுதல் தண்டனை (இம்மையில்நேரும்);(அதுமாத்திரமேயன்றி மறுமையில்),நிச்சலும்-எந்நாளும், கும்பிக்கே கூர்த்த வினை-நரகத்திற்கே எதுவாகிய மிக்கபாவமாம்; (ஆதலால்), நாண்உடையார்-நாணத்தையுடையவர், பிறன் தாரம்-அயலானது மனைவியை, நம்பற்க-விரும்பாதிருக்கக்கடவர்; (எ - று.)

பிறர்தாரம் நம்பினவர் மறுமையிலடையும் நரககதியை "வம்புலாங் கூந்தல்மனைவியைத் துறந்து பிறர்பொருள் தாரமென் றிவற்றை, நம்பிஞ் நிறந்தால்நமன் தமர்பற்றியெற்றிவைத்தெரியெழுகின்ற,செம்பிஞலியன்ற பாவையைப்பாவீ தழுவென மொழிவதற் கஞ்சி, நம்பனே வந்துன்திரு வடியடைந்தேன் நைமிசா ரணியத்து ளெந்தாய்" என்னும் **பெரிய திரு மொழி** யாலும், "காதலாள்கரிந்துநையக்கடியவே கனிந்துகன்றி, ஏதிலார் தாரம் நம்பி யெளிதெனவிறந்த பாவத்து, ஊதுலை யுருகவெந்த வொள்ளழற்செப்புப்பாவை, ஆதகாதென்னப்புல்லியலறுமால் யானேவேந்தே" என்னுஞ் **சிந்தாமணி**யாலும், "தங்கிருட்போதில் தலைச்சென்றயல்மனை, யுங்குமகிழ்ந்தாளவளிவள்காணெனச், செங்கன லேயென வெம்பிய செம்பினிற், பொங்கனற் பாவைகள் புல்லப் புணர்ப்பார்" என்னுஞ் **சூளாமணி** யாலும் அறிக.

அச்சம்-அவளுக்கு உடையவர் தம்மை அடித்தல் முதலியவற்றால் நேர்வன. 'ஆல்' நான்கும் - அசை; **புறப்பொருள் வெண்பாமாலை**யில் 'வீடுணேர்ந்தோர்க்கும்வியப்பாமால்' என்றவிடத்து, உரைகாரர் 'ஆல்-அசை; சொல் விழுக்காடாயினுமாம்' என உரைத்ததுகொண்டு, 'ஆல்'-வாக்கியாலங்கார மென்றலுமாம். பெரிதால், அளவால், கொலையால், வினையால் என்ற நான்கிடத்தும் பெரிதாதலாலும், அளவாதலாலும், கொலைநேருமாதலாலும் கொடுவினையாமாதலாலும்என ஏதுப் பொருண்மையில்வந்த மூன்றும் வேற்றுமையென்றலும் ஒன்று. அதற்கு, 'கு'உருபு-எல்லைப்பொருளில் வந்ததலால், உருபு மயக்கம். நிச்சம்-நிச்சய மென்னும் வடசொல்லின் விகாரம். நிச்சல்-நித்யமென்னும் வடசொல்லின் சிதைவு. தப்தகும்பம், கும்பீபாகம் முதலிய நரக விசேஷங்களை 'கும்பி' என்றார்; வடசொல்திரிபு. நம்பற்க-நசையுணர்த்தும்-நம்பு என்னும் உரிச்சொல்லினடியாப் பிறந்த எதிர்மறைவியங்கோள்; "நம்பும் மேலும் நசையாகுமே" **நாணுவது**-செய்யத் தகாதனவற்றில் உள்ள மொடுங்குதல்.நாண்-நாணுதல்; மூதனிலத்தொழிற்பெயர். 'நாணுடையார் பிறன்தார நம்பற்க' என்றதனால், பிறர்தாரம் நம்புபவர்-நாணிலரென்றது, தானேவிளங்கும். தாரம்-தாராஃ என்னும் வடசொல்லின்திரிபு. நினையுங்கால் - எதிர்காலப் பெய

செச்சத்தொடர்; 'நினைத்தக்கால்' என்பதுபோல இதனை ஒரு சொல்லாக் கொண்டு காலீற்று எதிர்காலவினையெச்சமென்றல் மரபன்மையை உய்த்துணர்க. கால்-காலமென்னும் வட சொல்லின் விகாரம்.

அஉ. அறம்புகழ் கேண்மை பெருமையிந் நான்கும்
பிறன்மூர நச்சுவார்ச் சேரா—பிறன்மூர
நச்சுவார்ச் சேரும் பகைபழி பாவமென்
றச்சத்தோ டிந்நாற் பொருள்.

(இ-ள்.) பிறன்தாரம் நச்சுவார்-அயலானது மனையாளை விரும்புபவரை, அறம்-தருமமும், புகழ்-கீர்த்தியும், கேண்மை-சிநேகமும், பெருமை-கௌரவமும் ஆகிய, இந்நான்கும்-இந்த நான்கு பொருள்களும், சேரா-(ஒரு காலுஞ்) சேராவாம்; பிறன் தாரம் நச்சுவார்-அயலானது மனைவியை விரும்புவரை, பகை-பகையும், பழி-பழியும், பாவம் என்று-பாவமும், அச்சத்தோடு-அச்சமும் ஆகிய, இந்நால் பொருள்-இந்த நான்கு பொருள்களும், சேரும்—; (எ-று.) எனவே, அவர் இம்மை மறுமை என்னும் இருமையின்பங்களையும் இழத்தல் பெறப்பட்டது.

நான்குபோய் நான்கு வருமென்றதனால், இப்பாட்டில் **பரிவர்த்தநாலங்காரம்** என்னும் **மாற்றுநிலையணி** தொனிக்கின்றது. "பகை பாவமச்சம் பழியென நான்கும், இகவாவா றில்லிறப்பான்கண்" எனவுரை **திருவள்ளுவனாரும்.** அறம் புகழ் கேண்மை பெருமை என்றதற்கு, எற்ப, பாவம் பழி பகை அச்சம் என்பதே முறையாயினும், செய்யுள் நோக்கிப் பிறழவைத்தார். அறம் முதலிய நான்கும் **செவ்வெண்ணு**தலின், ஈற்றில் தொகைபெற்றன; பகைமுதலிய நான்கும் இவ்வாறே. வைசேடிகர் பொருள் பண்பு தொழில் சாதி விசேடம் இயைபு என்பன வற்றை அறுவகைப்பொருளென்றாற்போல, இங்குப் பாவவாகிய பண்பும், பகை பழி அச்சங்களாகிய தொழில்களும், 'பொருள்' எனப்பட்டன. (உ)

அங. புக்கவிடத் தச்சம் போதரும்போ தச்சந்
துய்க்குமிடத் தச்சந் தோன்றுமற் காப்பச்ச
மெக்காலு மச்சந் தருமா லெவன்கொலோ
வுட்கான் பிறனில் புகல்.

(இ-ள்.) புக்க இடத்து-(பிறன்மனையாளிடம்) போகும் பொழுதும், அச்சம்-பயம் (உண்டாகின்றது); போதரும் போது-மீண்டுவரும் பொழுதும், அச்சம்—; துய்க்கும் இடத்து-அனுபவிக்கும்போதும், அச்சம்—; தோன்றுமல் காப்பு-(அதனைப்) பிறரறியாமற் காக்கும்போதும், அச்சம்—; எ காலும் அசசம் தரும்-(இவ்வாறு) எப்போதும் பயத்தையே தருகின்றது; (இப்படியிருக்க), உட்கான்-(ஒருவன்) அஞ்சாதவனாய், பிறன் இல் புகல்-பிறன்மனையாளிடஞ் செல்லுதல், எவன் கொலோ-எவ்வாறோ? (எ-று.)

முந்தின செய்யுளிற் பிறர்மனை நயப்பவனுக்கு நேர்வனவென்று பொதுப்படக் கூறப்பட்ட நான்கு குற்றங்களுள், அச்சத்தின் தன்மை இச்செய்யுளில் சிறப்புவகையாற் கூறப்பட்டது. காமங் காரணமாகப் பாவ வழியில் நிற்பவர்களாகிய பெண்வழிச்செல்பவரும், விலைமகளி

ரோடும் இழிகுலமகளிரோடுங்கூடி இன்பமனுபவிப்பவரும் போல, அறத்தையும் பொருளையும் இழத்தலேயன்றி, பிறர்மனைநயப்பவர் அச்சத்தால் தாம் கருதிய இன்பத்தையு மிழக்கின்றாராதலால், அச்சத்தின் கொடுமை தனியே கூறவேண்டுவதாயிற்று.

'எக்காலு மச்சந்தரும்' என்பதற்கு, 'பிறர்மனை நயத்தல்' என்ற எழுவாய் அதிகாரத்தால் வருவிக்க. போதருமபோது, தா-**துணைவினை**. போது-பொழுது என்பதன் மரூஉ ; போழ்து என்றும் மருவி வழங்கும். ஆல்-அசை ; ஆதலால் என்பதன் விகாரமாகவுங் கொள்ளலாம். எவன் - விளுவடியாப் பிறந்த அஃறிணைப்பொதுக்குறிப்புமுற்று. கொல் ஓ என்ற இரண்டனுள், ஒன்று இழிவையும், மற்றொன்று இரக்கத்தையும் உணர்த்துமென்னலாம். உட்கான்-எதிர்மறைத் தெரிநிலை முற்றெச்சம் ; உட்கு - பகுதி. புகல் என்பதை இடக்கரடக்கல் என்னலாம் ; "தினைத்துணையுந் தேரான் பிறனில் புகல்" எனத் **திருக்குறளி**லும் காண்க.

இது-**ஒருவிகற்ப இன்னிசை வெண்பா.** மேல் அஅ-ஆம் செய்யுளும் இது. (உ)

அசை. காணிற் குடிப்பழியாங் கையுறிற் கால்குறையு
மாணின்மை செய்யுங்கா லச்சமா—நீணிரயத்
துன்பம் பயக்குமாற் றுச்சாரி நீகண்ட
வின்ப மெனைத்தெனைத்தாற் கூறு.

(இ - ள்.) காணின்-(பிறர்) கண்ணால், குடி பழி ஆம்-தன் குலத்துக்கு நிந்தை உண்டாம் ; கை உறின் - அகப்பட்டுக் கொண்டால், கால் குறையும்-கால் வெட்டப்படும்; மாண் இன்மை செய்யும் கால்-மாட்சிமையில்லாத அத்தீச்செயல்களைச் செய்யும்பொழுது, அச்சம் ஆம் - பயம் தோன்றும் ; (இவையேயன்றி), நீள் நிரயம் துன்பம் பயக்கும்-(அவ் வொழுக்கம்) நெடுங்காலம் அனுபவிக்கும்படியான நரகவேதனையை உண்டாக்கும் ; (ஆகவே), துச்சாரி-தீச்செய்கை செய்பவனே ! நீ கண்ட இன்பம்-நீ (அதில்) அனுபவித்த சுகம், எனைத்து-எவ்வளவினது? எனக்கு—கூறு-சொல்லு ; (எ - று.)

பிறர்மனைநயந்து செல்லும் ஒருவனை நோக்கி அவனை அங்ஙனஞ் செல்லவொட்டாது நற்புத்திகூறி விலக்கத்தொடங்கின நண்பனொருவன் கூறியதாக இப்பாட்டுச் செய்யப்பட்டதென்க.

பிறன்தாரம் நச்சுங் குற்றத்திற்கு கால் குறைத்தல் தண்டனையாக மூற்காலத்து விதிக்கப்பட்டிருந்த தென்பது 'கையுறிற் கால் குறையும்' என்பதனாற் பெறப்படும். அதிகாரத்தால், 'மாணின்மை'-பிறர்மனை நயத்தலாம் ; அன்றி, **இடக்கரடக்க**லென்னலாம். பாவமென்ற பொருளில் 'மாணின்மை' எனப் பட்டது ; "தெளிந்தாரிற், றீமை புரிந்தொழுகுவார்" என்ற **திருக்குறளில்**, 'தீமை' என்றது போல. ஆண் இன்மை எனப் பிரித்து-உத்தம புருஷனுக்கு உரிய குணமாகாத அத்தீயொழுக்கத்தையென்று பொருள்கொள்ளலுமாம். பொருட்பொருத்தத்தோடு மோனைப் பொருத்தத்துக்கும் இதுவே தகுதி. இந்திரியங்களை அடக்கு

தலேஆண்மையாதலால், அதனையடக்காமல் தீவழிச்செல்லுதலே ஆணின்மை யென்றல்பொருத்தம்; "பிறன்மனைநோக்காத பேராண்மை" என்ற **திருக்குறளில்** பிறர்மனை நயவாமையை'பேராண்மை' என்றதனலும், பிறர்மனைநயத்தல் ஆண்மையின்மையென்பது அமையும்; அக்குறளினுரையிற் பரிமேலழகர் 'புறப்பகைகளே யடக்கும் ஆண்மையுடையார்க்கும் உட்பகையாகிய காமம் அடக்குதற்குஅருமையின், அதனையடக்கிய ஆண்மையைப் பேராண்மை என்றார்' என உரைத்தது உணரத்தக்கது. துச்சாரி-வடமொழி.'ஆல்' இரண்டும்-அசை;முதலதை ஏதுப்பொருளதாகக்கொள்ளலுமாம். 'இன்பமெனக்கெனைத்தாற்கூறு' என்பது, இன்பஞ்சிறிதுமில்லை யென்பதை விளக்கும். எனைத்து-எத்தனைத்து என்பதன் மரூஉ. (ச)

அரு. செம்மையொன் றின்றிச் சிறியா ரினத்தராய்க்
கொம்மை வரிமுலையா டோண்மரீஇ—யும்மை
வலியாற் பிறர்மனைமேற் சென்றூரே யிம்மை
யலியாகி யாடியுண் பார்.

(இ - ள்.) உம்மை-முற்பிறப்பில், செம்மை ஒன்று இன்றி-நடுவுநிலைமை சிறிதும் இல்லாமல், சிறியார் இனத்தர் ஆய்-அற்பகுணமுடைய விடரோடு சேர்ந்தவராய், கொம்மை வரி முலையாள்-திரட்சியையுஞ் சுணங்கையுமுடைய தனங்களே யுடையவளது, தோள்-தோள்களே, மரீஇ-சேரவிரும்பி, வலியால்-(தமக்கு உள்ள) வலிமையினுல், பிறர் மனைமேல் சென்றூரே-பிறரது மனையாளிடஞ் சென்றவரே,--இம்மை-இப்பிறப்பில், அலி ஆகி-நபும்சகராய், ஆடி-கூத்தாடி, உண்பார்-(அதனுற்) சீவிப்பவரா வர்; (எ - று.)—ஆதலால், பிறர்மனை நயக்கவேண்டாவென்றவாறு. முற்பிறப்பில் பிறர்மனைநயந்தா இப்பிறப்பில் அலியாய்ப் பிறத்தலோடு வறுமையையுமடைவ ரென்க.

செம்மை ஒன்று இன்றி-பழிபாவங்களுக்குச் சிறிதும் அஞ்சாமலென்றபடி; அன்றி, தன் மனையாளதுபதிவிரதாதருமம்போலவே பிறன்மனையாளது பதிவிரதா தருமமும் பாதுகாத்தற்கு உரியதென்று பகுத்து பாதமின்றிக் கருதவேண்டியிருக்க, அது செய்யாமல் எனக்கொள்கை பொருத்தம். சிறியாரினத்தராய்-"வறுமொழி யாளரொடு வம்பப்பரத்தரொடு, குறுமொழிக் கோட்டி நெடுநகைபுக்குப், பொச்சாப்புண்டு பொருளுரையாளர், நசசுக்கொன்றேற்கு" எனச் **சிலப்பதிகாரத்**திற் கோவலன் கூறினற்போல்வன. கொம்மை-இளமையும், அழகும், வன்மையும், பருமையுமாம். வரி-தொய்யிலிரேகையுமாம். மரீஇ-மருவி; சொல் விகாரப்பட்டு அளபெடுத்ததனுல், சொல்லிசையளபெடை.உம்மைச்சென்றூரென இயையும். பிறர்மனைமேற் சென்றூர்-இடக்கரடக்கல்; "பிறன்கடைநின்றூரிற் பேதையாரில்" என்ற **திருக்குறளில்** 'நின்றூர்'என்றதுபோல. அலி-ஆணுறுப்பு மிகுந்து பெண்ணுறுப்புக் குறைந்த நபும்சகம். (பெண்ணுறுப்புமிக்கு ஆணுறுப்புக்குறைந்த நபும்சகம் பேடியெனப் படுமென்றும், பேடு என்பது-நபும்சகம் என்ற வடசொற்போல இவ்விருவகைக்கும் பொதுவென்றும் அறிக.) 'கொம்மைவரு'என்ற பாடத்துக்கு-திரட்சியோடு வளர்ந்தவென்க. (கு)

அஉ. பல்லா ரறியப் பறையறைந்து நாட்கேட்டுக்
கல்யாணஞ் செய்து கடிபுக்க — மெல்லியற்
காதன் மனையாளு மில்லாளா வென்னுருவ
மேதின் மனையாள் நோக்கு.

(இ - ள்.) நாள் கேட்டு-நல்லநாளை விசாரித்து, (அந்நாளில்), பல்லார் அறிய-பலரும் அறியும்படி, பறை அறைந்து-மங்கள வாத்தியங்களை முழங்குவித்து, கல்யாணம் செய்து-விவாகஞ்செய்யப்பட்டு, கடி புக்க-(தம்) காவலிற் புகுந்த, மெல் இயல்-மென்மையான குணங்களையும், காதல்-விருப்பத்தையுமுடைய, மனையாளும்-மனைவியும், இல்லாள் ஆ-(தன்) வீட்டிலுள்ளவளாக, ஒருவன் —, ஏதில் மனையாள்-அயலானது மனைவியை, நோக்கு-பார்ப்பது, என்-யாது காரணத்தினாலோ? (எ - று.)

இங்ஙனங்கூறியது, தன்மனையாளிருக்க அயலான் மனையாளிடத்திற் செல்வதன் குற்றத்தை நன்குவிளக்குதற்பொருட்டேயன்றி, தன்மனையாளில்லாவிடின் பிறன்மனையாளிடஞ் செல்லலாமென்று கூறியதன்றெனக் கொள்க; "அறனிற்கொண்டதன்மனையாளமளித்தலத்திலழுதிரங்கப், பிறனிற்றேடும் பெரும்பாவி" எனப் பாரதத்தில் வருதலுங்காண்க. இதனால், இங்கு 'இல்லாள்' என்பதற்கு-இல்லாதவளென்று பொருளுரைக்க இடமின்மையும் அறிக. நோக்கு-இடக்கரடக்கல்; "பிறன்மனைநோக்காத பேராண்மை" என்ற திருக்குறளிற் போல; அங்கு 'பிறன்மனை நோக்காத' என்பதற்கு-பரிமேலழகர் 'பிறன்மனையாளை உட்கொள்ளாத' என்று உரை கூறியவாறு அறிக. பெண்களுக்கு உரிய நற்குணங்களெல்லாம் அமைந்துள்ளவளென்பது தோன்ற, 'மெல்லியல்' 'காதல்' என்னும் அடைமொழிகள் கொடுத்தார். மனையாளுக்கு 'காதல்' என்ற அடைமொழி கொடுத்ததனால், அவளுக்கு இவனிடம் வேட்கையுளதேயன்றி இவனுக்கு அவளிடம் வேட்கையிலதென்பது தோன்றும்.

அறைந்து = அறைவித்து; பிறவினைப் பொருளில்வந்த தன்வினை. வினையெச்சம்: அன்றி, எதுதற்கருத்தாவென்றால், 'எளியவழி. கல்யாணம்-வடசொல். கடி-உரிச்சொல். உம்-உயர்வுசிறப்பு. என்-எவன் என்னும்வினாவினைக் குறிப்புமுற்றின் விகாரம். ஏதில்-ஏதிலனுக்குப் பண்பாகுபெயர்; ஏதில்-அயல். நோக்கு-முதனிலைத்தொழிற் பெயர். (சு)

அஎ. அம்ப லயலெடுப்ப வஞ்சித் தமர்பரீஇ
வம்பலன் பெண்மரீஇ மைந்துற்று — நம்பி
நிலைமையி னெஞ்சத்தான் றுப்புரவு பாம்பின்
றலைநக்கி யன்ன துடைத்து.

(இ - ள்.) அயல்-அயலார், அம்பல் எடுப்ப-(அறிந்து) பழித்தல்செய்யவும், தமர்-உறவினரும் நண்பரும், அஞ்சி-(அறிந்து இவனுக்கு என்னநேருமோவென்று) பயந்து, பரீஇ-வருந்தவும், வம்பலன் பெண் மரீஇ-அயலானது மனையாளைச்சேர்ந்து, மைந்து உற்று-களிப்படைந்து, நம்பும் நிலைமை

இல் நெஞ்சத்தான் - நம்பத்தக்க நிலைமையில்லாத மனமுடையவனது, துப்புரவு - கிற்றின்ப ஆசைச்செயலானது,—பாம்பின் தலை நக்கி அன்னது உடைத்து - பாம்பினது தலையை நக்குவோன்ற தன்மையுடையது.

பளபளப்பாயிருக்கிறதென்று பாம்பின்தலையை நக்கினால் அது விஷந்தம்பட்டு உடனே மரணமடைவதற்கு எதுவாவதுபோல, தற்காலத்தில் இன்பந் தருகிறதென்று பிறன்மனைவியைச் சேர்ந்தால் அது விரைவிற் பெருந் துன்பத்திற்கு எதுவாமென்பது கருத்து. **உவமையணி**.

அயல் - ஆகுபெயர். பரிஇ - பரியவென்னுஞ் செயவெனெச்சத்தின் திரிபாகிய பரிந்து என்பதன் சொல்லிசையளபெடை. வம்பு - புதுமை ; அதனையுடையவன், வம்பலன் : அல் - வேண்டாவழிச்சாரியை. அம்பலென்பது - வெளிப்படச் சொல்நிகழ்த்தாமல் முணுமுணுத்துச் சொல்லுதலென்று பொருள்படுமெனவும், இதன் இனமாகிய அலரென்பது - பலரறிய வெளிப்படையாச் சொல்லித் தூற்றுதலென்று பொருள்படுமெனவும், **இறையனாரகப் பொருளுரை**யாலும், **தொல்காப்பிய நச்சினார்க்கினியத்தா**லுந் தெரிகின்றது. இங்கே 'பெண்' என்பது-மனைவியென்ற பொருளில் வந்தது : "பெண்ணிடர் விடுப்ப வாழ்விற் சாதலே பெரிது நன்று" (கனக.-196) என்ற சிந்தாமணிச்செய்யுளி னுரையையுங் காண்க. (எ)

அ.அ. பரவா வெளிப்படாப் பல்லோர்கட் டங்கா
வுரவோர்கட் காமநோ யோஒ கொடி-தே
விரவாரு ஞாணுப் படலஞ்சி யாது
முரையாதுள் ளாறி விடும்.

(இ - ள்.) உரவோர்கண் - புத்தி பலமுடையவரிடத்து (உள்ளதாகிற), காமம் நோய் - காமவியாதியானது, பரவா - வளராமலும், வெளிப்படா-வெளியாகாமலும், பல்லோர்கண் தங்கா - பலரிடத்துஞ் சென்று தங்காமலும், விரவாருள் நாணுப்படல் அஞ்சி - (அந்நோய்) கலவாதவரிடத்து வெட்கப்படுவதற்குப் பயந்து, யாதுமுரையாது-ஒன்றுஞ் சொல்லாமல், உள்ளாறிவிடும் - உள்ளேயே அடங்கிப்போம் ; (ஆதலால்)—,ஓஒ கொடிது - (அது) மிகவுங் கொடியது ! (எ - று.)

அறிவுடையார்க்கும் வினைவசத்தாற் காமமுண்டாகலாம் ; அது, விருத்தியாகாமலும், வெளிப்படாமலும், பல விஷயங்களிற் செல்லாமலும், அவர் பலர்க்கும் நாணவேண்டியிருப்பதனால், உள்ளேயே ஆறிப்போம் ; ஆனபடியால், அது மிகவுங் கொடியது என்பதாம். கொடிது என்றது, காமத்தின் தீமையை நோக்கி அதையும் பொறுக்கிறார்களே யென்று உண்டான வியப்பினாலென அறிக.

அறிவுடையோர் காமமிகுதியாற் பிறர்மனை நயவாரென்ற சம்பந்தம் பற்றி, இச்செய்யுள் இவ்வதிகாரத்திற் சேர்க்கப்பட்டது.

பரவா, வெளிப்படா, தங்கா-ஈறுகெட்ட எதிர்மறை வினையெச்சங்கள். ஈறுகெட்ட எதிர்மறை வினையெச்சங்களின்முன்னே வலியியல்பா தற்கு விதியில்லை யாதலால், 'வெளிப்படா பல்லோர்கட்டங்கா' என்ற பாடம் கொள்ளத்தக்கதன்று; எதிர்மறைப்பலவின்பால் முற்றெச்சமாக் கொண்டு, "அல்வழியா மாமியா **முற்றுமுன் மிகா**" என்றபடி இயல்பான தாகக் கொள்ளலாகாதோவெனின்,—ஆகாது: 'கொடிது' என்ற ஒன்றன்பால் முற்றோடு மாறுபடுதலால். இனி, பரவாது, வெளிப்படாது, தங்காது என்ற எதிர்மறை யொன்றன்பால் முற்றுக்கள் ஈறுகெட்டு நின்றனவெனக்கொள்ளின், இயல்பாதற்கு இடமுண்டு. தீயொழுக்க முடையவரது இகழ்ச்சி ஒருபொருளாகப் பாராட்டத்தக்கதன் றுதலால், 'விரவாருள் நாணுப்படலஞ்சி' என்றார். 'யாதுமுரையாது' என்றது - சிறிதும் வெளிப்படாது என்பதை யுணர்த்த வந்த குறிப்பு மொழி: இனி பிறர் யாதுங் கூறிப் பழிக்க இடமில்லாதபடி யென்றுங் கொள்ளலாம். ஆறிவிடும் என்பதில், விடு என்பது-துணிவுப்பொருளை விளக்கிற்று. காமம்-தற்சம வடசொல். மனத்தையும் உடம்பையும் வருத்துதலினால், காமம் 'நோய்' எனப்பட்டது. ஓ-சிறப்பு; அள பெடை-செய்யுளிசை நிறைக்கவந்தது. ஏ-தேற்றம். நாணு, உ-சாரியை.

அகூ. அம்பு மழலு மவிர்கதிர் ஞாயிறும்
வெம்பிச் சுடினும் புறஞ்சுடும்—வெம்பிக்
கவற்றி மனத்தைச் சுடுதலாற் காம
மவற்றினு மஞ்சப் படும்.

(இ - ள்.) அம்பும்-பாணமும், அழலும்-நெருப்பும், அவிர் கதிர் ஞாயிறும்-விளங்குகின்ற கிரணங்களையுடைய சூரியனும், வெம்பி சுடினும்-வெப்பங்கொண்டு சுட்டாலும், புறம் சுடும்-புறமாகிய உடம்பையே சுடவல்லனவாம்; காமம்-பெண்ணாசையோ வென்றால், வெம்பி - வெப்பங்கொண்டு, மனத்தை-அகமாகிய நெஞ்சத்தை, கவற்றி - கவலைப்படுத்தி, சுடுதலால் - எரித்தலால், அவற்றினும்-அந்த அம்பு முதலியவற்றினும் (அதிகமாக), அஞ்சப்படும்—; (எ - று.)

புறத்தையே சுடுவனவாகிய அம்பு முதலிய உபமானப்பொருள்களினும் அகத்தைச்சுடுங் காமமாகிய உபமேயப்பொருளுக்கு உள்ள வேறுபாடு தோன்றக் கூறினமையால், இது, **வேற்றுமையணி**யின்பாற் படும்.

ஞாயிறு = ஞாயிறு; முதற்போலி. கவற்றி-வினையெச்சம்; கவல்-என்பதன் பிறவினையாகிய கவற்று-பகுதி; இகில், பிறவினைவிகுதி - று.

இச்செய்யுள் முழுவதும் **இயற்சீரான்** அமைந்துள்ளது. (கூ)

கூ. ஊரு ளெழுந்த வுருகெழு செந்தீக்கு
நீருட் குளித்து முயலாகு—நீருட்
குளிப்பினுங் காமஞ் சுடுமேகுன் றேறி
யொளிப்பினுங் காமஞ் சுடும்.

(இ-ள்.) ஊருள் எழுந்த-(தான் இருக்கும்) ஊர்முழுவதிலும் பற்றியெழுந்த, உரு கெழு செம் தீக்கு-உருவம் விளங்குகிற செம்மையான நெருப்புக்கு, நீருள் குளித்தும்-தண்ணீருள் மூழ்கியாயினும், உயல் ஆகும்-தப்பிப் பிழைக்கக்கூடும்; காமம்-காமமாகிய நெருப்பு, நீருள் குளிப்பினும்-நீருள் மூழ்கினாலும், சுடுமே-சுடாமல் விடாது; காமம்—, குன்று எறி ஒளிப்பினும்-மலைமேலேறி ஒளித்துக்கொண்டாலும், சுடும்—; (எ-று.)

ஆதலால் நெருப்பினும் அஞ்சப்படுமென்பது கருத்து. "ஊர்தலைக் கொண்டு கனலுங் கடுந்தீயு, நீர்பெய்தக்காலே சினந்தணியும் மற்றிஃதோ, நீருட்புகினுஞ் சுடும்" என்ற கலித்தொகை இங்கு நோக்கத்தக்கது. "காலத்தால் வருவதொன்றே காமத்தாற் கனலும்வெந்தீச், சீலத்தாலழிவதன்றிச் செய்யத்தா னை துண்டோ" எனக் **கம்பராமாயணத்து** வருவதுங் காண்க.

நீருள்மூழ்கி நின்றுரையும் நெடுந்தூரஞ்சென்று அகப்படாது நின்றுரையும் சுடமாட்டாத நெருப்பாகிய உபமானத்திலும், அங்ஙனம் நின்றுரையுஞ் சுடவல்ல காமமாகிய உபமேயப்பொருளுக்கு உள்ள வேறுபாடு தோன்றக் கூறினமையால், இதுவும்-**வேற்றுமையணி**: வடநூலார் **வ்யதிரேகாலங்காரம்** என்பர். இனி, இப்பாட்டுக்கு-காமத்தாலாகிய பூவம் புண்ணியதீர்த்தங்களிற்சென்று நீராடுதலினாலும் பெரிய மலைமேலேறி ஏகாந்தமாக இருந்து அரிய தவஞ்செய்தலாலும் தீர்த்தற்கரியது என்னுங் கருத்துப்பட உரைப்பாருமுளர்.

இவ்விரண்டு செய்யுட்களாலும், பிறர்மனைநயத்தலுக்குக் காரணமான காமத்தின் கொடுமையைக் கூறினர்.

உரு-ரூபமென்னும் வடசொல்லின் சிரிபு. 'உருகெழு' என்பதற்கு-அஞ்சத்தக்கதன்மை மிக்க என்றுங் கொள்ளலாம்; அப்பொழுது, 'உரு' என்பது-உரிச்சொல்: "உரு உட்காகும்" என்ற **தொல்காப்பியச்** சூத்திரங் காண்க. செந்தீ-தீக்குச் செம்மை, **இயற்கை பற்றிய அடைமொழி**: இனம் விலக்கவந்ததன்று. காமத்தை நெருப்பென்றது, தான்சேர்ந்த இடத்தை எரித்து அழித்தலால். உயல்-உய்தல்: தொழிற்பெயர்; உய்-பகுதி. (கo)

கo-ஆம் அதிகாரம்—ஈகை

அஃதாவது-வறியவராய் இரந்தவர்க்கு இல்லையென்னுமற் கொடுத்தல் வேண்டுமென்பதை உணர்த்துவது. இல்வாழ்வானுக்குப் பிறர்மனைநயவாமைபோல ஈகைக்குணமும் இன்றியமையாததாதலின், இது அதன்பின் வைக்கப்பட்டது. இம்மைக்குப் புகழையும் மறுமைக்குப் புண்ணியத்தையுந் தவறாமல் மிகவினைத்தலில் ஈகை பிறர்மனைநயவாமையையும், இம்மையிற் பழியையும் மறுமையிற் பாவத்தையுந் தவறாமல் மிகவினைத்தலில் ஈகையின்மை பிறர்மனைநயத்தலையும் போலுதலால், ஈகை பிறர்மனைநயவாமையை யடுத்துக் கூறத்தக்க குணமாயிற்றென்க. ஈகை-'கை' விகுதிபெற்றதொழிற் பெயர்.

கூக. இல்லா விடத்து மியைந்த வளவினு
ளுள்ள விடம்போற் பெரிதுவந்து—மெல்லக்
கொடையொடு பட்ட குணனுடை மாந்தர்க்
கடையாவா மாண்டைக் கதவு.

(இ-ள்.) இல்லா இடத்தும்-(தமக்குச் செல்வம்) இல்லாமற்போன காலத்தும், இயைந்த அளவினுள்-(தமக்குக்) கூடியமட்டில், உள்ள இடம் போல்-(செல்வம்) உள்ள காலத்திற்போல, பெரிது உவந்து-(இரப்பவர் வருகைக்கு) மிகவும் மகிழ்ந்து, மெல்ல-சாந்தமாக, கொடையொடு-கொடுத்தலோடு, பட்ட-கூடின, குணன் உடை மாந்தர்க்கு-நற்குண முள்ள மனிதர்க்கு, ஆண்டை கதவு-அவ்வுலகத்துக்கதவுகள், அடையா-மூடப்பட்டிரா; (எ-று.)

எப்பொழுதும் இரப்பவர்க்குக் கொடுப்பவரது வருகையை நோக்கி மேலுலகத்தவர் தம் மூலகத்துக் கதவைத் திறந்துவைப்பர் என்பதாம்; என்றது-தானஞ்செய்பவர்க்கு மறுமைப்பயன் தவறுது சித்திக்கு மென்றவாறு. 'பெரிதுவந்து', 'மெல்ல' என்றவற்றால், இரப்பவரைக் கண்டபொழுது முகமலர்ச்சியும் அவர் நெருங்கிவந்தபொழுது இன் சொல்லு முடைமை ஈகைக்கு இலக்கணமென்பது விளங்கும்.

ஆம்-அசை. உம்மை-இழிவுசிறப்பும்மை. எச்சப்பொருளது. பெரிது-குறிப்புமுற்றெச்ச வினையுரி. குணன்-ஈற்றுப்போலி. உடை-உடைய என் னுங்குறிப்புப் பெயரெச்சத்து அகரவீறு தொகுத்தல். ஆண்டை, ஐ-சாரியை; "ஐயீற்றுடைக்குற்றுகரமு முளவே."

மேல் **ஈயாமை** என்னும் அதிகாரத்து "ஈட்டார்க்கும் ஈள்ளாதவர்க் கும்" என்னுஞ் செய்யுள், இதனோடு ஒப்புநோக்கத்தக்கது. (க)

கூஉ. முன்னரே சாநாண் முனிதக்க மூப்புள
பின்னரும் பீடழிக்கு நோயுள—கொன்னே
பரவன்மின் பற்றன்மின் பாத்துண்மின் யாதுங்
கரவன்மின் கைத்துண்டாம் போழ்து.

(இ-ள்.) முன்னரே-(உங்கள்) முன்னமே, சாம் நாள்-இறக்குங்கால மும், முனிதக்க மூப்பு-வெறுத்தற்குத்தக்க கிழத்தனமும், உள-உள்ளன; பின்னரும்-(அவைமாத்திரமேயன்றி) மேலும், பீடு அழிக்கும் நோய்-வலிமையைக்குலைக்கும்படியான வியாதிகளும், உள-உள்ளன; (ஆதலால்), கைத்து உண்டாம் போழ்து-கைப்பொருள் உண்டாயிருக்குங் காலத்தில், கொன்னே-வீணாக, பரவன்மின்-(மேலுஞ்சம்பாதித்தற்கு) அலையாதிருங் கள்; பற்றன்மின்-(உள்ளபொருளே உலோபத்தால்) இறுக்கிப் பிடியா திருங்கள்; பாத்துஉண்மின்-(யாவர்க்குஞ் சோறுமுதலியவற்றைப்) பகுத்துக்கொடுத்து (மிகுதியை) உண்ணுங்கள்; யாதும் கரவன்மின்-(பிறரால் இரக்கப்பட்டவற்றுள்), எதையும் ஒளியாதிருங்கள்; (எ-று.)

முன்னரே - பிரதியுபகாரமாக என்றபடி ; என்றது - நீங்கள் கட்புலனுகக் காண உலகத்திற் பலர்க்கும் பிண்டீமூப்புச்சாக்காடு உண்டாகின்றனவே : அவற்றைக்கண்டாயினும், நமக்கும் இவை உண்டென்று துணியலாகாதோ ? என்றவாறு. அன்றி, பிறப்பெடுக்குமுன்னமே சாகாள் முதலியன முன்னைய வினைக்கு ஏற்ப அமைந்துள்ளன என்றவாறுமாம். பரவன்மின் - கிடைத்த மட்டில் திருப்தியுடையவராயிருங்கள் என்றபடி. "பகுத்துண்டு பல்லுயிரோம்புதல் நூலோர், தொகுத்தவற்று ளெல்லாந் தலை" என்ப வாதலால், 'பாத்துண்மின்' என்றார். **திருக்குறளில்** "பழியஞ் சிப்பாத்தூணுடைத்தாயின்" என்றவிடத்து, 'பாத்தூண்' என்றதற்கு, பரிமேலழகர் 'அப்பொருளை இயல்புடைய மூவர் முதலாயினர்க்கும், தென்புலத்தார் முதலிய நல்லார்க்கும் பகுத்துத் தானுண்டல்' என உரைத்தது உணரத்தக்கது.

'மூளிதக்க' என்பதில், மூளி என்பது - முதனிலைத் தொழிற்பெயர்: ஈன்காம் வேற்றுமைத்தொகை. பாத்து என்பதில், பகு என்பதன் மரூஉவாகிய பா - பகுதி. (உ)

கக... நடுக்குற்றுத் தற்சேர்ந்தார் துன்பந் துடையார்
கொடுத்துத் தான் றுய்ப்பினு மீண்டுங்கா லீண்டு
மிடுக்குற்றுப் பற்றினு நில்லாது செல்வம்
விடுக்கும் வினையுலந்தக் கால்.

(இ - ள்.) செல்வம்—, ஈண்டும் கால்-(நல்வினையால்) சேருங்காலத்து, கொடுத்து தான் துய்ப்பினும்-(பிறர்க்குங்) கொடுத்துத் தானும் அனுபவித்து வந்தாலும், ஈண்டும்-சேர்ந்துகொண்டேயிருக்கும் ; விடுக்கும் வினை உலந்தக்கால்-(முற்பிறப்பிற் செய்து குறையாக) விட்ட அந்நல்வினை முடிந்தகாலத்து, இடுக்குற்று பற்றினும்-இறுக்கிப் பிடித்தாலும், நில்லாது-நிலைபெறுமற் போய்விடும் ; (இதனை அறியாத பலர்), நடுக்கு உற்று தன் சேர்ந்தார் - (வறுமையினால்) நடுங்குதலை அடைந்து தம்மைச் சேர்ந்தவரது, துன்பம்-துன்பத்தை, துடையார்-(அவர் வேண்டியன கொடுத்துப்) போக்கார் ; (எ - று.)

அங்ஙனம் இருக்கலாகாது, தானும் அனுபவித்துப் பிறர்க்குங் கொடுத்தல் வேண்டும் என்பதாம்.

ஊற்றுநீர் இறைக்கஇறைக்கச் சுரத்தல்போல, தானஞ் செய்யச் செய்யப் பொருள் செழிக்கு மென்பார், 'கொடுத்துத் தான் துய்ப்பினு மீண்டுங்கா லீண்டும்' என்றார் ; பிறர்க்குக் கொடுத்தலால் கைப்பொருள் செலவழிந்துபோகப் பின்பு வறுமைப்படவேண்டி வருமே யென்று கருதி, கொடுக்கப் பின் வாங்குகிறவரை நோக்கி 'பொருளழிதற்குக் காரணம் வினைப்பயனேயன்றி ஈகை பன்று' என்று பின்னிரண்டடிகளால் விளக்கியவாறு.

'தற்சேர்ந்தார்,' 'தான்துய்ப்பின்' எனப் பன்மைவரவேண்டிய விடத்து ஒருமை மயங்கிவந்தது - **வழுவமைதி** ; ஒருமைப்பன்மைமயக்கம். இடுக்கு, நடுக்கு-முதனிலைதிரிந்ததொழிற்பெயர். பிடுக்கு உற்று எனப் பிரித்து - வலிமை பொருந்தி யென்றும் பொருள் கொள்வர்.

இப்பாட்டு, இரண்டாமடி முதலிலும், நான்காமடி அதன் பின்னும், மூன்றாமடி அதன்பின்னும், முதலடி அதன் பின்னுமாக மூன் பின்னாக எடுத்துமாற்றிப் பொருள் கொள்ளப்படுதலால், இது, எற்புழி யெடுத்துடன் கூட்டுறும் அடியதாகிய **அடிமறிமாற்றுப் பொருள்கோளாம்.**

இது-**ஒருவிகற்ப இன்னிசை வெண்பா** ; மேல் கசு, கoo-ஆம் பாட்டுக்களும் அது. (கூ)

கசு. இம்மி யரிசித் துணையானும் வைகலு
நும்மி லியைவ கொடுத்துண்மி—னும்மைக்
கொடாஅ தவரென்பர் குண்டுநீர் வையத்
தடாஅ வடுப்பி னவர்.

(இ-ள்.) வைகலும்-நாள்தோறும், இம்மி அரிசி துணை ஆனும்-இம்மியென்னும் அரிசியவ்வளவாயினும், நும்மில் இயைவ-உங்களுக்குக்கொடுக்கக்கூடியவற்றை, கொடுத்து-(பிறர்க்குக்)கொடுத்து, உண்மின்-(மிகுதியை) உண்ணுங்கள்; (அவ்வாறுசெய்யாவிட்டால்), குண்டு நீர் வையத்து-ஆழமாகிய நீரையுடைய கடலாற் சூழப்பட்ட இந்நிலவுலகத்தில், அடா அடுப்பினவர்-சமைக்காத அடுப்பையுடைய சோற்றுப்பிச்சைக்குவரும் வறியவர், உம்மை-உங்களை, கொடாதவர் என்பர்-கொடுக்காத லோபிகளென்று இகழ்வர்; (எ று.)

மறுமைக்கு வேண்டிய நல்வினையின்பொருட்டுக் கொடாவிட்டாலும் இம்மைக்கு வேண்டிய புகழின்பொருட்டாகவாயினுங்கொடுங்க ளென்றபடி.

இனி, பின்னிரண்டடிக்கு-பூமியில் வறியவர் முற்பிறப்பில் தானஞ் செய்யாதவரெனப்படுவராதலாலென்றும் பொருள்கொள்ளலாம்;உம்மை-முற்பிறப்பு : அப்பொழுது கருத்து, மறுபிறப்பில் நீங்கள் செல்வமுடையவராயிருக்கவேண்டி இப்பிறப்பில் தானஞ்செய்யுங்க ளென்பதாம்.

சிந்தாமணியில் "இம்மியனு நுண்பொருள்கள்" என்றவிடத்து நச்சினார்க்கினியர் 'இம்மியரிசி-மத்தங்காய்ப் புல்லரிசி' என உரைத்தது அறியத்தக்கது; இது, 'தினை' என்பதுபோல, சிறுமைக்கு எடுத்துக் காட்டுவதோர் அளவை. நும்இல் எனப்பிரித்து-உங்கள் வீட்டிலென்பாருமுளர். இயைவ-பெயர். அளபெடைகள், செய்யுளோசைநிறைக்கவந்தன;அலகிட்டுக்காண்க. என்பர்-செயப்பாட்டு வினைப்பொருளில்வந்த செய்வினை. (சு)

கூஙி. மறுமையு மிம்மையு நோக்கி யொருவர்க்
குறுமா றியைவ கொடுத்தல்—வறுமையா
லீத லிசையா தெனினு மிரவாமை
யீத லிரட்டி யுறும்.

(இ ள்.) மறுமையும் இம்மையும் நோக்கி-மேலுலகத்துப் பயனையும் இவ்வுலகத்துப் பயனையும் நன்றாக ஆராய்ந்து, ஒருவர்க்கு-ஒருவருக்கு, இயைவ-கொடுக்கக்கூடியவற்றை, உறும் ஆறு-தக்கபடியே, கொடுத்தல்-கொடுக்கக்கடவர்; வறுமையால்-இல்லாமையால், ஈதல்இசையாது எனினும்-கொடுத்தல் இசையாமற்போனாலும், இரவாமையாசியாதிருத்தல், ஈதல் இரட்டி உறும்-கொடுத்தலினும் இருமடங்கு நல்லதாகும்; (எ-று.)

மறுமையிற் சுவர்க்க இன்பமும், இம்மையிற் புகழ்ப்பெருமையும் வருவதை நோக்கி இயைந்தவளவு பிறர்க்குக் கொடுக்கவேண்டும்; அவ்வாறு கொடுக்கக்கூடாமற்போனலும் தான் பிறரை இரவாமலிருப்பது மிகவும் நல்லது என்பதாம்.

மறுமை, இம்மை - ஆகுபெயர்கள். உறுமாறு கொடுத்தல்-தக்ககாலத்தில்முகமலர்ந்து நன்மனத்தோடும் இன்சொல்லோடும் கைம்மாறு கருதாது கொடுத்தல். உறும்ஆறு - பயன்பெறும்படி · என்பாருமுளர். இயவ - பெயர். கொடுத்தல் - தல்லீற்று உடன்பாட்டு வியங்கோள். இரட்டி - இரட்டுதலுடையது; இரட்டுதல் - இரண்டாகுதல் : இ - பெயர் விகுதி.

மூன்றுமடி - **முற்றுமோனை.** (கு)

சுகூ. நடுவூருள் வேதிகை சுற்றுக்கோட் புக்க
படுபனை யன்னர் பலர்நச்ச வாழ்வார்
குடிகொழுத்தக் கண்ணுங் கொடுத்துண்ணு மாக்க
ளிடுகாட்டு வேற்றைப் பனை.

(இ - ள்.) பலர் நச்ச வாழ்வார்-பலரும் (தம்மை) விரும்பிவந்து அடுத்துப் பயன்கொள்ளும்படி வாழ்பவர்,—நடு ஊருள்-ஊர்நடுவில், வேதிகை சுற்றுக்கோள் புக்க-மேடையினுல் எல்லாப்புறமுஞ் சூழ்ந்து கொள்ளுதலேப் பொருந்திய, படு பனை அன்னர்-(காய்த்தல்) பொருந்திய பெண்பனைமரங்களே ஒப்பர்; குடி கொழுத்தக் கண்ணும் - (தமது) குடித்தனம் (செல்வத்தால்) மிக்கவிடத்தும், கொடுத்து உண்ணு மாக்கள்-(பிறர்க்குக்) கொடுத்து (த் தாமும்) உண்ணுத மனிதர், இடு காட்டுள் ஏற்றை பனை - சுடுகாட்டிலுள்ள காய்க்காத **ஆண்பனைமரங்களே** ஒப்ப வராவர்; (எ - று.)

பரிசுத்தமான ஊர்நடுவிற் பழந்தரும் பனைமரம் ஒன்று இருந்து அதைச் சுற்றிலும் திண்ணேயுமிருந்தால் வேண்டியவர் வந்து பழம்பறித்துக்கொண்டு அத்திண்ணேமேலிருந்து புசித்தல்போல, உயர்குலத்துப் பிறந்த உபகாரிகளே யாவரும் வந்து அடைந்து அவரிடத்துத் தமக்கு வேண்டும் பயன்களேப் பெறுவர்; அபரிசுத்தமான இடத்தில் தோன்றிப் பலனேயுந் தராத மரத்தை எவரும் சேராதவாறுபோல, இழிகுலத்துப் பிறந்த லோபிகளாயிருரை ஒருவரும் அடையார் என்றபடி.

"பயன்மர முள்ளூர்ப் பழுத்தற்ருற் செல்வம், நயனுடை யான்கட் படின்" என்ற **திருக்குறளும்**, "உதவுமாடியர், பார்கெழு பயன்மரம் பழுத்தற்ருகவும்" என்ற **கம்பராமாயணமும்**, "கற்றையுஞ் சுடர்மணி கனக மேனேய, பிற்றையென்னுதருள் பெரியர் வண்மைபோன், மற்றவணுள்ள பன்மரமும் தம்பய, னெற்றையு முலப்புரு தீகைசான்றவே" என்ற **கந்த புராணமும்** காணத்தக்கன.

'ஊர்நடு' என்பது 'நடுவூர்' என முன்பின்னுகத் தொக்குவந்த ஆரும் வேற்றுமைத்தொகை; இலக்கணப்போலி எனவும்படும். வேதிகை-வேதிகா என்னும் வடசொல் ஈறுதிரிந்தது. சுற்றுக்கோள்-சுற்றுக்கொள் என்னும் முதனிலேதிரிந்த தொழிற்பெயர். வேதிகைச்சுற்று என்ற பாடத்துக்கு-வேதிகையின் சுற்றுதலேயுடைய, கோட்புக்க-காய்த்த என்னலாம்.

பகுபனை-வினைத்தொகை. செல்வம் மிகுதியாக இருக்கவும் கொடுத்து உண்ணுதலரது இழிவுதோன்ற, 'மாக்கள்' என்றார். மாக்களெனப்படுவார் - மனவுணர்ச்சியில்லாமல் ஐம்பொறியறிவுமாத்திரமேயுடைய விலங்குபோன்ற ஒருசார் மானிடங்கள்; மா என்பது விலங்கின் பெயராதலால், அதன் பன்மையாகிய மாக்கள் என்பது திருகப்ராயராகிய அவிவேகிகளைக் குறிக்குமென்க. மக்களாவார் - ஐம்பொறியுணர்வோடு மனவறிவுமுடைய விவேகிகளான மானிதர்: "மாவுமாக்களு மையறிவினவே," "மக்கள் தாமே ஆறறி வுயிரே" என்ற **தொல்காப்பியச்** சூத்திரங்களைக் காண்க. இடுகாடு - (உயிர்நீங்கிய உடல்களை) இடுங் காடு; இடுதல் - கொண்டுபோகடுதல்.

ஏற்றை - ஆண்பெயர்; "ஆற்றலொடு புணர்ந்த ஆண்பாற் கெல்லாம், ஏற்றைக் கிளவீ யுரித்தென மொழிப" என்னுந் **தொல்காப்பியச்** சூத்திரத்து 'எல்லாம்' என்றதனால், சிறுபான்மை ஆற்றலில்லாததற்கும் இது கொள்ளப்பட்டது. 'ஏற்றுப்பனை' என்று பாடமோதுவாரும் உளர்: மேற்காட்டிய "ஆற்றலொடு புணர்ந்த" என்ற தொல்காப்பியச் சூத்திரத்தினுரையில் நச்சினார்க்கினியர் 'எல்லாம் என்றதனால், சிறுபான்மை ஆற்றலில்லாதனவுங் கொள்க; அது "இடுகாட்டு ளேற்றைப்பனை" என்பதுபோன்றுவருவன' என்று இதனையே உதாரணங் காட்டியதனால், அப்பாடங்கொள்ளப்படாது, 'ஏற்றைப்பனை' என்ற பாடமே கொள்ளப்பட்டது. தொல்காப்பியர் "ஏறும் ஏற்றையும்" என்று இரண்டு பெயர்களையும் உடன்வைத்துச் சூத்திரஞ்செய்துள்ளதனால், 'ஏறு' என்பதுபோல 'ஏற்றை' என்பதும் தனியே ஒரு பெயரென்றும், ஏறு என்பது ஏற்றை என ஜகாரச்சாரியை பெற்றதன்றென்றும் அறிக. (கூ)

கூ. பெயற்பான் மழைபெய்யாக் கண்ணு முலகஞ்
செயற்பால செய்யா விடினுங்—கயற்புலால்
புன்னை கடியும் பொருகடற் றண்சேர்ப்ப
வென்னை யுலகுய்யு மாறு.

(இ - ள்.) கயல் புலால் - மீன்களின் புலால்நாற்றத்தை, புன்னை - புன்னை மலர்கள், கடியும்-நீக்கப்பெற்ற, பொரு-அலைமோதுகின்ற, கடல்-கடலின், தண்-குளிர்ச்சியான, சேர்ப்ப-கரையையுடையவனே!—மழை - மேகங்கள், பெயல்பால்—பெய்யப்படுந் தன்மையுடைய நீரை, பெய்யாக்கண்ணும் - (காலத்திற்) பெய்யாவிட்டாலும், உலகம்-உயர்ந்தோர், செயல் பால-செய்யத்தக்க உதவிகளை, செய்யாவிடினும்-(காலத்திற்) செய்யாவிட்டாலும், உலகு-உலகத்து உயிர்கள், உய்யும் ஆறு-பிழைக்கும் வழி, என்னை -யாதோ? (எ - று.)—சேர்ப்பு-கரை.

எல்லா வுயிர்களும் உய்வதற்கு மழைபொழிவது இன்றியமையாத வாறுபோல, இல்லாதவரெல்லாம் உயிர்வாழ்வதற்கு உள்ளவர் ஈதல் இன்றியமையா தென்பது கருத்து.

பெயற்பால்-அன்மொழித்தொகை. இனி,பெயற்பால்-பெய்தற்குரியகாலத்தில், மழை பெய்யாக்கண்ணும்-மழைபெய்யாவிட்டாலும் என்றும் உரைக்கலாம். பெய்யாக்கண் என்பது-கண்ணீற்று எதிர்மறைவினையெச்ச

மாகிய ஒருமொழியென்றுவது, ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சத் தொடரென்றுவது கொள்ளத்தக்கது. "உலகமென்பது உயர்ந்தோர் மாட்டே" ஆதலால், 'உலகம்' என்ற பொதுமொழிக்கு உயர்ந்தோர்எனச் சிறப்புப்பொருள் கொள்ளப்பட்டது. செயற்பால-செய்தற்கு உரியவை யென்று நான்காம்வேற்றுமைத் தொகைநிலைத்தொடராகிய பெயர். கயல், புன்னை - இவை நெய்தனிலத்துக் கருப்பொருள்கள். 'கயற்புலால் புன்னைகடியும்' என்றதனால், புன்னைப்பூவின் நறுமணநிகுதி விளங்கும் : இவ்விளியில் புலால்நாற்றத்தைப் புன்னை கடிவதுபோல இரப்போரின் வறுமையைப் பெரியோர் போக்கார்நிற்ப ரென்பது, தொகைமொழி. என்னை, ஐ - சாரியை.

'பெயற்பால் மழைபெய்யாக் கண்ணும்' என்ற உபமானமும், 'உல கம் செயற்பால செய்யாவிடினும்' என்ற உபமேயமும் 'உலகுய்யுமாறு என்னை' என்ற ஒருதன்மையில் முடிக்கப்பட்டதனால், இது-**தீபகாலங்கார** மாம் ; தமிழில் **விளக்கணி** எனப்படும்.

"கைம்மாறு வேண்டா கடப்பாடு மாரிமாட், டென்ஞற்றுங் கொல்லோ வுலகு" என்ற **திருக்குறளி**லும் கைம்மாறு கருதாது மழை பொழியும் மேகம் கைம்மாறு கருதாது உயர்ந்தோர் செய்யும் உதவிக்கு உவமை கூறப்பட்டவாறு உணர்க. (எ)

கூஅ. ஏற்றகை மாற்றுமை யென்னுந் தாம்வரையா
ராற்றுதார்க் கீவதா மாண்கட—ஞற்றின்
மலிகட றண்சேர்ப்ப மாரிவார்க் கீதல்
பொலிகட னென்னும் பெயர்த்து.

(இ - ள்.) மலி கடல் தண் சேர்ப்ப - (வளங்கள்) மிகுந்த கடலின் குளிர்ந்த துறையையுடையவனே !—மாற்றுமை - மறுக்காமல், என் ஆனும் - (தமக்கு உள்ளது) யாதொன்றையாயினும், தாம் வரையார் - தாம் (இன்னார்க்கு இன்னதைக் கொடுக்கலாமென்றும் கொடுக்கலாகா தென்றும்) வரைந்துகொள்ளாதவராய், ஆற்றுதார்க்கு - பிரதியுபகாரஞ் செய்யமாட்டாத வறியவர்க்கு, ஏற்ற கை - (யாசகன்) இரந்து ஏந்திய கையில், ஈவது - கொடுப்பதுவே, ஆண் கடன் ஆம் - உத்தம புருஷர்க ளுக்குக் கடமையாம் ; ஆற்றின் - (தாம்) கொடுப்பதானால், மாறு ஈவார்க்கு - கைம்மாறு கொடுக்கவல்லவர்க்கு, ஈதல் - கொடுத்தல்,— பொலிகடன் என்னும் பெயர்த்து - கொழுத்த கடன்கொடுத்தலென்னும் பெயரையுடையது ; (எ - று.)—வரையாது என்று பிரதிஷேதம்.

இல்லையென்று மறுக்காமலும், உறவு நண்பு அயல் என்னும் வேறு பாடு நோக்காமலும், வறியோர்க்கு, அவர் இரந்த பொருளைத் தமக்கு இயைந்தவளவு கொடுத்தல்வேண்டும் ; அதுவே தானமென்று சிறப்புப் பெறும் : அன்றி, பிரதியுபகாரஞ் செய்யவல்லவர்க்கு [வறியரல்லா தார்க்கு]க் கொடுப்பது, கடன்கொடுத்தல்போலாகுமேயன்றித் தானமாக மாட்டாது என்பதாம். இப்பாட்டின் கருத்தை "வறியார்க் கொன் றீவதேயீகை மற்றெல்லாங், குறியெதிர்ப்பை நீரதுடைத்து" என்ற **திருக்குறளி**லுங் காண்க. "ஆற்றுகார்க்கு அளிப்போர் அறவிலை பகர்

வோர், ஆற்ரு மாக்க ளரும்பசி காளோர், மேற்றே உலகின் மெய்ந்நெறி வாழ்க்கை'' என்ற **மணிமேகலை**யடிகளும் காணத்தக்கன. வரையார் என்பதற்கு - தமக்கென்று ஒன்றையும் வரைந்து வைத்துக்கொள்ளாதவ ராய் என்றும் பொருள் கொள்ளலாம்.

ஏற்ற, ஏல் - பகுதி. கை என்பது - இங்கு இரண்டாம்வேற்றுமைத் தொகை யாதலால், ''குறில்வழியத் **தனியைந்** நொதுமுன் **மெலி மிகலு மாம்**'' என்ற விதிப்படி அதன்முன் மெலிமிகாமல் விகாரத்து இயல்பா யிற்று. மாற்ருமை - மையீற்று எதிர்மறை வினையெச்சம். மாண்கடன் என்று எடுத்து, சிறந்த கடமை யென்னுமாம். கடலுக்கு வளங்கள் - ''ஓர்க்கோலை சங்கம்ஒளிர் பவளம் வெண்முத்தம், நீர்ப்படு மூப்பிலை டைந்து'' என்பன. (அ)

கூகூ. இறப்பச் சிறிதென்ரு தில்லென்ரு தென்று
மறப்பயன் யார்மாட்டுஞ் செய்க—முறைப்படுதவி
ஈயம் புகூஉந் தவசி கடிஞைபோற்
பைய நிறைத்து விடும்.

(இ - ள்.) இறப்ப சிறிது என்னுது - (நமக்கு உள்ளபொருள்) மிக வுஞ் சிறியது என்று எண்ணுமலும், இல் என்னுது - இல்லையென்று சொல்லாமலும், என்றும் - எப்பொழுதும், அறம் பயன் - தானதரும மாகிய பயனை, யார்மாட்டும் - யாவரிடத்தும், செய்க - செய்யக்கடவர் ; (அங்ஙனஞ்செய்தால், சிறிது சிறிதாகச செய்யப்பட்ட அச்செயல்), முறை - கிரமமாக, புதவின் - வாயில் தோறும், ஐயம் புகூஉம் - பிச்சைக் குச் செல்கின்ற, தவசி - சந்யாசியினது, கடிஞைபோல் - பிச்சைப் பாத் திரத்தைப்போல, பைய - மெல்லமெல்ல, நிறைத்துவிடும்-(அறப்பயனைப்) பூரணமாக்கும் ; (எ - று.)

'சிறிது கொடுத்தலிற் பயனென்?'என்று ஆலோசித்து, கொடுத்தலைத் தவிரலாகாது ; இயன்றவளவும் இல்லையென்ருமல் யார்க்கும் எப்பொழு தும் கொடுத்தல் வேண்டும் ; அங்ஙனங் கொடுக்கப்பட்ட சிறுகொடை களின் தொகுதியால் புண்ணியப்பயன் பூர்த்திபெறும் ; வீடுதோறும் சிறிது சிறிதாக இடப்பட்ட பிச்சைகளால் பிச்சைக்காரனது பாத்திரம் நிறைந்துவிடவில்லையா ? என்பதாம். **உவமையணி**.

புதவின், இன் - ஏழனுருபு. தவசி - தபஸ்வீ என்னும் வடசொல் லின் திரிபு ; தவஞ்செய்பவ னென்று பொருள். சந்யாசிகள் அந்நபிக்ஷை வாங்கியுண்டே சீவிக்கவேண்டுமென்பது நூல்துணி பாதலால், தவசி யென்பதற்கு - சந்யாசியென்று உரைக்கப்பட்டது. பைய - குறிப்பு வினையெச்சம். புகும் என்பது, செய்யுளோசைநிறைக்க நெடிலாகி அள பெடுத்தது ; மூன்றுமாத்திரை ; இது இன்னிசையளபெடை யன்று. (கூ)

க00. கடிப்பிடி கண்முரசங் காதத்தோர் கேட்ப
ரிடித்து முழங்கியதோர் யோசனையோர் கேட்ப
ரடுக்கிய மூவுலகுங் கேட்குமே சான்ரோர்
கொடுத்தா ரெனப்படுஞ் சொல்.

(இ - ள்.) கடிப்பு இடு-குறுந்தடியால் அடிக்கப்படுகின்ற, கண்-கண் னினையுடைய, முரசம்-பேரிகையின் ஒலியை, காதத்தோர்-ஒருகாததூரத் தூளிருப்பவர், கேட்பர்—; இடித்து முழங்கியது-(மேகம்)இடியிடித்துக் கர்ச்சித்த ஓசையை, ஓர் யோசனையோர் கேட்பர்-ஒருயோசனை தூரத்து ளிருப்பவர்கேட்பர் ; சான்றோர் கொடுத்தார் எனப்படும் சொல்-பெரியோ ரால் (இவர் யாசகாக்குக்) கொடுத்தாரெனப்பட்ட சொல்லையோ வென் றால், அடுக்கிய மூ உலகும்-(ஒன்றன்மேல்ஒன்று) அடுக்கு அடுக்காக அமை ந்துள்ள மூன்று உலகத்தவரும், கேட்கும்-கேட்பர் ; (எ - று.)

முரசொலி காததூரத்தளவும் கேட்கப்படும்; இடிமுழக்கம் யோசனை தூரத்தளவும் கேட்கப்படும்; இவர் கொடுத்தாரென்று பெரியோர் சொல் லுஞ் சொல் எல்லாவுலகங்களிலுங் கேட்கப்படும் என இங்ஙனம் **மேன். மேலுயர்ச்சியணி**படக் கூறியதனால், கொடுப்பவரது புகழ் எங்கும் பரவு மென்பதாம்.

கடிப்பு-முரசடிக்குங் குறுந்தடி; "வாய்ப்பறையாகவும், நாக்கடிப்பாக வும்" என்றார் பிறரும். கண்-வாத்தியத்தில் அடிக்கப்படும் இடம். முரஜம், யோஜநா என்ற வடசொற்கள் திரிந்தன. காதம்-ஏழரைநாழிகைவழி. காதம் யோசனையென்பன ஒரு பொருளன வென்பா ருளராயினும், இங் கே, காதத்தினும்யோசனை பெரியதென்று கொள்ளுதலே பொருத்தம். நான்குகாதத்தை யோஜனையென்பது, ஜைநநூல்வழக்கு ; **சீவகசிந்தாமணி** யில் " ஓசனைகமழும் " என்றதற்கு, நச்சினார்க்கினியர் ' நாற்காதவெல்லை நாறும் ' என உரைத்தது இங்கு உணரத்தக்கது. முழங்கியது-வினையா லணையும் பெயர். மூவுலகு-மேல் நடு கீழ் என்பன ; சுவர்க்க மத்திய பாதா ளங்கள். ஏ-தேற்றம். சான்றோர்-மூன்றும் வேற்றுமைத் தொகை ; சான் றோரால் எனப்படும் என இயையும்.

இச்செய்யுள், " யோஜநம் பரிஸ்பத்ஸ்ச மேகஸ்பத்ஸ்ச த்வாதஸ, தாத்ருணம்தாநஸ்பத்ஸ்ச - த்ரைலோக்யம்ஸசராசரம் " என்னும் வட மொழிச் சுலோகத்தை அடியொற்றியது. (கூ)

ககஆம் அதிகாரம்—பழவினை

அஃதாவது-முற்பிறப்புக்களிற் செய்யப்பட்டதஞ்ற் பழையனவாகிய நல்வினை தீவினைகள் தம்மைச்செய்த உயிர்க்குத் தம்பயன்களாகிய இன்ப துன்பங்களைப் பிற்பிறப்புக்களில் தவறுமல் தருமென்பதைப்பற்றிக் கூறு வது. பழவினை-ஜந்மாந்தரகர்மம்: இது ' ஊழ் ' என்றும் சொல்லப்படும். நல்வினை தீவினை-புண்ணிய பாபங்கள். இக்கருமந்தான்-**ஸஞ்சிதம், பிராரப் தம், ஆகாம்யம்** என மூன்றுவகைப்படும்; அவற்றுள், **ஸஞ்சிதம்** - பிறப்பு அநாதியாய் வருதலின் உயிரால் அளவில்லாமற் செய்து சேர்க்கப்பட்ட வினைகளின் பயன்கள்: **பிராரப்தம்**-அவற்றுள் இறந்த உடம்புகளால் அனுப விக்தன வொழியப் பிறந்த உடம்புகளால் அனுபவித்தற்கு எடுத்துக் கொள்ளப்பட்டன : **ஆகாம்யம்**-அவையன்றிப் பின்னும் அனுபவிக்கக் கட

வனவாய்க் கிடந்தன ; இவையெல்லாம் அடங்குதற்கு, பொதுப்பட, 'பழ வினை' என்றார். பழவினை-பண்புத்தொகை; பழமையாகிய வினையென் றிரியும். தானம் முதலிய நல்வினைகளை முற்பிறப்புக்களிற் செய்தவர்கள் பிற்பிறப்புக்களிற் செல்வம் முதலியவற்றுற் பலநன்மைகளை அனுபவிப்ப ரென்பதையும், அவற்றைச்செய்யாதவர் பசிபிணி முதலியவற்றுற் பல தீமைகளை அனுபவிப்பரென்பதையும் அறிவித்தற்கு, இவ்வதிகாரம், ஈகையென்னும் அதிகாரத்தின் பின் வைக்கப்பட்டது.

கூக. பல்லாவு ளூய்த்து விடினுங் குழக்கன்று
வல்லதாந் தாய்நாடிக் கோடலைத்—தொல்லைப்
பழவினையு மன்ன தகைத்தேதற் செய்த
கிழவினை நாடிக் கொளற்கு.

(இ - ள்.) பல் ஆவுள்-பலபசுக்களின் நடுவில், உய்த்துவிடினும்-தான் செலுத்திவிடப்பட்டாலும், குழ கன்று-இளங்கன்றானது, தாய் நாடிக்கோ டலை-(தனது) தாயைத் தானே தேடி யடைதலில், வல்லது ஆம்-வல்லமை யுடையதாம்; தொல்லை பழ வினையும்-மிகவும் பழமையாகிய கருமமும், தன் செய்த கிழவினை நாடிக் கொளற்கு-(பலஜீவகோடிகளுள்ளும்) தன் னைச்செய்த உரிமையுடையவனைத் தேடி யடைவதில், அன்ன தகைத்தே-அப்படிப் பட்டதன்மையை [வல்லமையை] யுடையதேயாம் ; (எ - று.)

மிகச் சிறியதாயிருப்பினும் கன்று தான் பசுமந்தையின் நடுவில் விடப்பட்டால் தன்தாயையே நாடி யடைவதுபோல, பழமையாகவருகிற வினையும் ஜீவகோடிகளுள் தனக்கு உரியவனையே நாடியடையுமென்பதாம்; **உவமையணி**. ('யதா தேநுஸஹஸ்ரேஷு, வத்ஸோ விந்ததிமாதரம்-ஏவம் பூர்வக்ருதம் கர்ம, கர்த்தார மநுகச்சதி'' என்ற **மஹாபாரதத்து ஆநுசாஸ நிகபர்வ**த்துச் சுலோகத்தை அடியொற்றியது, இச்செய்யுள்.)

பல்லா - பண்புத்தொகை ; பல்+ஆ : பலவென்பது, தன்முன் பிற வர அகரங்கெட்டது ; [ந்ன்-உயிர்-உ.] 'பல்லா வொளித்து விடினும்' என்கிற பாடத்துக்கு-(தாய்ப்பசுவைப்) பல பசுக்கூட்டத்தினிடையே மறைத்து வைத்துவிட்டாலுமென்று பொருள். விடின்என்பது-இவ்வுரை யிற் செய்வினைப் பொருளையும், முன்னுரையிற் செயப்பாட்டு வினைப் பொருளையும் உணர்த்திற்று; செயப்பாட்டுவினைப்பொருளுணர்த்தும் போது, அகரச்சாரியையும் படு விகுதியும் செய்யுள் விகாரத்தால் தொக்கு நின்றன வென்று அறிக. உம்-சிறப்பும்மை. குழ-இளமையுணர்த்தும் உரிச்சொல். வல்லது-பண்படியாப் பிறந்த ஒன்றன்பாற் குறிப்புமுற்று ; அ-சாரியை, து-விகுதி. ஆம்-ஆசை ; ஆகுமெனப் பொருள்கொண்டால், 'வல்லது'-பெயராம். தாய்-இருதிணைப் பொதுப்பெயர்.

கோடலை, கொளற்கு - இரண்டனுருபும் நான்கனுருபும் ஏழாம்வேற் றுமை யிடப்பொருளில் வந்தமையால், உருபுமயக்கம். தொல்லை-பண்புப் பெயர் ; தொல்-பகுதி, ஐ-விகுதி : (இப்பகுதி 'மை' விகுதிபெற்றுத் தொன்மையெனவும், 'று' விகுதிபெற்றுத் தொன்று எனவும் வரும்.) தொல்லை, பழ-ஒருபொருட்பன்மொழி ; வினையினது அநாதியாய் வருந்

தன்மையை வற்புறுத்துதற்பொருட்டு, இவ்வாறுகூறினு ரென்க. இனி, தொல்லையென்பதைப் பண்பாகுபெயராகக்கொண்டு, முற்பிறப்புக்களிற் செய்தலாற் பழமையாகிய வினை யென்னவுமாம். உம் - இறந்தது தழுவிய எச்சம். அன்ன - சுட்டடியாப்பிறந்த குறிப்புப் பெயரெச்சம்; அ - பகுதி, அ - விகுதி, ன் - சாரியை, மற்றுரு ன் - சந்தி. தன் + செய்தது = தற்செய்தது; னகரம் றகரமாயிற்று. கிழவன் - உரியவனென்னும் பொருளில் கிழமை ஈறுபோன கிழ-பகுதி, பெண்பால்-கிழத்தி. (வயது முதிர்ந்தவனென்னும் பொருளில், கிழம் - பகுதி; பெண்பால் - கிழவி.) (கூ)

கoஉ. உருவு மிளமையு மொண்பொருளு முட்கு
மொருவழி நில்லாமை கண்டு—மொருவழி
யொன்றையு மில்லாதான் வாழ்க்கை யுடம்பிட்டு
நின்றுவீழ்ந் தக்க துடைத்து.

(இ - ள்.) உருவும்-அழகும், இளமையும்-யௌவனமும், ஒள் பொருளும் - மேலான செல்வமும், உட்கும் - (பலரும்) அஞ்சத்தக்க மதிப்பும், ஒரு வழி - ஒரேதன்மையாகி, நில்லாமை - (ஒருபிறப்பில்) நிலைபெற்றிராமையை, கண்டும்-பார்த்திருந்தும், ஒரு வழி-யாதாயினும் ஒரு வழியால், ஒன்றையும் - ஒருசிறிதுநல்வினையையாயினும், இல்லாதான் - செய்துவைத்தலில்லாதவனது, வாழ்க்கை-உயிர்வாழ்தலானது, உடம்பு இட்டு நின்று வீழ்ம் தக்கது உடைத்து-உடம்பை(ச் சிலகாலம்) பெற்று நின்று (அதனுலாகிய பயனைக் கொள்ளாமல்) விழுந் தன்மையை யுடையது.

உருவம் முதலியவற்றின் நிலையின்மையைக் கண்டும் நிலையான நல்வினையைச் செய்யாதவனது பிறப்பு வீணென்பது, கருத்து. எனவே, இங்ஙனம் நல்வினை செய்யவொட்டாது ஒருவனது வாணுளை வீணுளாக்குவது பழவினையின் செயலே யென்றதாயிற்று. ஒரு. வழி - ஒருவனிடத்தும் எனவும், ஒரு வழி ஒன்றேயும் - ஒப்பற்ற உயர்கதியைத் தரத்தக்க ஒரு நற்செய்கையையும் எனவும் உரைப்பாரு முளர்.

உட்கு - கருவிப்பொருள்விகுதி புணர்ந்துகெட்ட பெயர்; முதனிலைத்தொழிலாகுபெய ரென்னவுமாம். உட்குதல்-அஞ்சுதல். நின்று-அசையுமாம். வீழும் என்னும் எதிர்காலப்பெயரெச்சம், ஈற்றுயிர்கெட்டு 'வீழ்ம்' என நின்றது; "செய்யுமெனெச்சவீற்றுயிர்மெய் சேறலும்" என்னுஞ் சூத்திரத்தின் **உரையிற்கோடலால்** இதனை அமைக்க. தக்கது என்பது - தகை தகுதி என்பன போல, குணத்தையுணர்த்துந் தொழிற் பெயர். (உ)

கoஊ. வளம்பட வேண்டாதார் யார்யாரு மில்லை
யளந்தன போக மவரவ ராற்றுன்
விளங்காய் திரட்டிஞ நில்லைக் களங்கனியைக்
காரெனச் செய்தாரு மில்.

(இ - ள்.) வளம் பட வேண்டாதார் - (செல்வம் முதலியவற்றுற்) சிறப்பைப் பெறவிரும்பாதவர், யார்-(உலகத்தில்) யாவர் உளர்? யாரும்

இல்லை—; (ஆயினும்), போகம் - (அவரவரது) சுகானுபவங்கள், அவர் அவர்ஆற்றுன் அளந்தன-அவரவராது ஊழ்வினையால் (முன்னமே) அளவு செய்யப்பட்டுள்ளன; விளகாய் நிரட்டினுர் இல்லை - விளங்காயைத் திரண்ட உருவினதாகச்செய்துவைத்தவர் இல்லை; கள கணியை கார் என செய்தாரும் இல் - களாப்பழத்தைக் கரிய உருவினதாகச் செய்து வைத் தவரும் இல்லை; (எ - று.)

விளங்காய் முதலியன தம்தம் இயற்கையால் அமைந்திருப்பனபோல அவரவர்சுகமும் அவரவரது புண்ணியத்திற்குத் தக்கவாறுக அமைந்த தென்பதாம்; **எடுத்துக்காட்டுவமையணி.**

"அளந்தன போகமெல்லா மவரவர்க் கற்றறுளே, யளந்தன வாழு நாளும்" என்ற **சிந்தாமணி** இங்கு ஒப்பு நோக்கத்தக்கது. 'யார்? யாரு மில்லை' என வினவும் விடையுமாக இருமுறை கூறியது, வற்புறுத்தற்கு; "உண்டோ வுணர்சகி மற் றில்லாகும்" என்றுற்போல. வளம்பட - தமக் குச் செல்வமுண்டாகுமாறு என்றுமாம். யார்யாரும் என எடுத்து - எப் படிப்பட்டவரும் என்றும் உரைப்பர்.

அளந்தன - செயப்பாட்டுவினைப்பொருளில்வந்த செய்வினை. விளங் காய், களங்கனி - மரப்பெயர்முன்னர் இன்மென்மை தோன்றிற்று. **போகம்** - வடசொல்.

இது - **இருவிசும்ப இன்னிசைவெண்பா.** (கூ)

கஅச. உறற்பால நீக்க லுறுவர்க்கு மாகா
பெறற்பா லனையவு மன்னவா மாரி
வறப்பிற் றருவாரு மில்லை யதனைச்
சிறப்பிற் றணிப்பாரு மில்.

(இ - ள்.) உறல் பால-(ஊழ்வினையால்) நேரிட்டத்தக்க துன்பங்களை, நீக்கல்-விலக்குவது, உறுவர்க்கும் - ஆற்றல் மிக்க முனிவர்கட்கும், ஆகா-கூடாததாம்; பெறல்பால் அனையவும்-பெறத்தக்க தன்மையையுடைய அவ் வின்பங்களைப் பெறுதல்களும்; அன்ன ஆம் - அப்படிப்பட்டனவேயாகும் [முனிவர்களாலுந் தரமுடியாதனவாம்]; (எவைபோலவெனில்),—மாரி வறப்பின் - மழைபெய்யாதாயின், தருவாரும் - (அதனைப்) பெய்து தரு விக்க வல்லவரும், இல்லை—; சிறப்பின் - (அம்மழை) மிகுதியாகப்பெய் தால், அதனை—, தணிப்பாரும் - குறையச்செய்பவரும், இல் - இல்லை.

மழை பெய்யாமல் தவிர்ந்தால் அதனைப் பெய்வித்தல் எவர்க்கும் முடியாதவாறுபோல, புண்ணியப்பயன் வாராதவிடத்து அதனைக் கொடுப் பவரும் இல்லை; மழைமிகுதியாகப் பெய்யுமிடத்து அதனைத் தடுத்தல் முடியாதவாறுபோல, தீவினைப்பயன் மிகுதியாக நேருமிடத்து அதனைத் தவிர்த்தலும் முடியா தென்பதாம்; எல்லாம் பழவினையின்படியே நடக்கு மென்பது, கருத்து.

எடுத்துக்காட்டுவமையணி. மழை வேண்டியவளவாகப் பெய்வது உலகத்துக்கு நன்மைபயத்தல்பற்றி அதற்கு நல்வினையும், மிகுதியாகப் பெய்வது தீமைவிளைத்தல்பற்றி அதற்கு த் தீவினையும் உவமையாதல் எற்கும்.

மாரிவறப்பிற்றருவாருமில்லை, பெறற்பாலனையவுமன்னவாம்; அதனைச் சிறப்பிற்றணிப்பாரு மில்லை, (அதுபோல) உறற்பாலநீக்க லுறுவர்க்குமாகா என மாறிச் சென்றியைதலால், இச்செய்யுள் - **எதிர்நிரனிறைப் பொருள்கோள்.**

இனி, உறற்பால - நேரிடக்கூடிய துன்பங்கள், நீக்கல் ஆகா - நீக்குதற்கு முடியாதனவாம் என்றும், பெறற்பால் அனையவும் - பெறக்கூடிய நல்வினைகளும், அன்ன ஆம் - அவ்வாறே நீக்கமுடியாதனவாம் என்றும் உரைப்பாருமுளர். இவ்வுரைக்கு, **முறைநிரனிறையாக**வே இயைக்கலாம். "மன்னுப்பொருளு மன்னவியற்றே" என்ற தொல்காப்பியச் சொல்லதிகாரவுரையில் "உறற்பால நீக்கலுறுவர்க்குமாகா" என இல்லாப்பொருளும் எச்ச வும்மை பெற்றவாறு காண்க என்றனர், நச்சினர்க்கினியர்.

இதுவும், அடுத்தகவியும் - **ஒருவிகற்ப இன்னிசைவெண்பா.** இவ்வதிகாரத்து கூ, கo - ஆஞ் செய்யுள்களும் அது. (ச)

கoநி. தினைத்துணைய ராகித்தந் தேசுள் ளடக்கிப்
பனைத்துணையார் வைகலும் பாடழிந்து வாழ்வர்
நினைப்பக் கிடந்த தெவனுண்டா மேலை
வினைப்பய னல்லாற் பிற.

(இ-ள்.) பனை துணையார்-பனையளவு பெரியவர்கள், வைகலும் - நாள்தோறும், பாடு அழிந்து - (தமது) பெருமை கெட்டு, தினை துணையர் ஆகி-தினையளவு சிறியவர்களாய், தம் தேசு உள்அடக்கி - தமது ஒளியை உள்ளே அடக்கிக்கொண்டு, வாழ்வர் - உயிர்வாழ்வார்கள்; (இதற்குக்காரணம்), நினைப்ப - ஆலோசித்தால், மேலை வினை பயன் அல்லால் - முற்பிறப்பிற்செய்த தீவினையின் பயனே யல்லாமல், பிற - வேறுக, கிடந்தது - பொருந்தியது, எவன் உண்டு ஆம் - யாது உள்ளதாம்? [எதுவு மில்லை யென்றபடி]; (எ - று.)

செல்வம் அதிகாரம் கல்வி முதலியவற்றுல் உயர்ந்தவர்கள் பலர் விரைவிலே அவ்வுயர்ச்சியொழிந்து தாழ்வையடைந்து ஒளிகுன்றி இரத்தல் முதலியன செய்து வாழ்தற்குக் காரணம் பழவினையே யென்பது, கருத்து.

தினை, பனை என்பன - சிறுமை பெருமைகட்கும், தாழ்வு உயர்வு கட்கும் எடுத்துக்காட்டப்படும் சில அளவுகள்; "தினைத்துணை நன்றி செயினும் பனைத்துணையாக், கொள்வர் பயன் தெரிவார்" என்ற **திருக்குறளி**லுங் காண்க. மரப்பெயராய பனையென்பது, பெருமைகுறிக்கும். தேசு - தேஜஸ் என்ற வடசொல்லின் சிதைவு. தினைத்துணையர், பனைத்துணையார் என்பன - இங்குத் தாழ்வடைந்தவர்கள், கௌரவம் பெற்றவர்கள் என்ற பொருளைத் தந்தன. வைகலும் - நாளடைவிலே யென்றுமாம். (இ)

கoசு. பல்லாண்ற கேள்விப் பயனுணர்வார் வீயவுங்
கல்லாதார் வாழ்வ தறிதிரேற்—கல்லாதார்
சேதன மென்னுமச் சேறகத் தின்மையாற்
கோதென்று கொள்ளாதாங் கூற்று.

(இ - ள்.) பல்-பலவகைப்பட்ட, ஆன்ற-சிறந்த, கேள்வி-நூற்கேள்வி களினால், பயன்-(உயிர்வாழ்க்கையின்) பயனை, உணர்வார்-அறிபவராகிய கற்றோர்கள், வீயவும் - (பலர் விரைவிலே) இறக்கவும், கல்லாதார் - படி யாதவர்கள், வாழ்வது - (பலகாலம்) உயிர்வாழ்வதைப்பற்றி, அறிதிர் எல் - (காரணமென்னவென்று) ஆலோசித்தறிவீராலால்,—கல்லாதார் - படியாதவர்கள், சேதனம் என்னும் அ சேறு அகத்து இன்மையால்- அறி வென்கிற அந்தச்சாரத்தை (த் தமது) உள்ளே உடைத்தாகாமையால், (அவர்களை), கூற்று - யமன், கோது என்று - அசாரமென்று நினைத்து, கொள்ளாது - எடுத்துக்கொள்ளான்; (எ - று.)

சாரத்தை விரைவிலே கிரகித்துக்கொண்டு அசாரத்தை விட்டிடுதல் எவர்க்கும் இயல்பாதலால், யமனும் கல்வியுடையோரை இளமையிலேயே எடுத்துக்கொண்டு அஃதில்லாரை விட்டிடுகின்றனென்பது, கருத்து.

படித்தவர் விரைவிலிறத்தலும் படியாதவர் நெடுநாளிருத்தலு மாகிய மாறுபாட்டிற்கும், சிலர் அறிவுடையராயிருத்தலும் சிலர் அறிவிலராயிருத் தலுமாகிய வேறுபாட்டிற்கும் காரணம் சன்மாந்தர கருமமேயென இப் பாடலுக்கு இவ்வதிகாரத்தோடு இயைபு காண்க.

"பாபீ சிராயுஸ் ஸுக்ருதீ கதாயுஃ" என்றபடி உலகத்திற் பாவிகள் நெடுநாளிருத்தற்கும், புண்ணியவான்கள் விரைவிலிறத்தற்கும் காரணங் கற்பித்துக்கூறியது- **ஏதுத்தற்குறிப் பேற்றவணி;** வடநூலார் **ஹேதூத்ப்ரே க்ஷாலங்காரம்** என்பர்.

சேறு - ஸாரம் என்னும் வடமொழியின் சிதைவு; "சேறு படுமலர் சிந்தவிரைந்தே" எனச் **சிந்தாமணி**யிலும், ஸ்ரீஸாரஸமுத்திரத்தைத்திருச் **சேறை** யென வழங்கு பிடத்துங் காண்க. தேவர்களை இருதிணையாகவுஞ் சொல்லலா மாதலால், 'கூற்றுக் கொள்ளாது' என அஃறிணையாக் கூறப் பட்டது. ஆம் - அசை. (சு)

கoள. இடும்பைகூர் நெஞ்சத்தா ரெல்லாருங் காண
நெடுங்கடை நின்றுழல்வ தெல்லாம்-அடும்பம்பூ
வன்னங் கிழிக்கு மலைகடற் றண்சேர்ப்ப
முன்னை வினையாய் விடும்.

(இ - ள்.) அடும்பம் பூ - அடும்பங்கொடியின் மலர்களை, அன்னம் - அன்னப்பறவைகள், கிழிக்கும் - (மூக்கினாற் கொத்திக்) கிழித்துவிளை யாடுதற் கிடமான, அலை கடல் தண் சேர்ப்ப-அலைகின்ற கடலினது குளிர்ந்த துறையையுடைய பாண்டியனே!—(உலகத்திற் சிலர்), எல்லா ரும் காண - யாவரும் (தம்மைப்) பார்க்கும்படி, இடும்பை கூர் நெஞ்சத் தார்-வறுமைத்துன்பம் மிக்க மனமுடையவர்களாய், நெடுங் கடைநின்று-பெரிய பலவீட்டு வாயில்களிற் போய் நின்று, உழல்வது எல்லாம் - (பிச் சைக்காக) வருந்துஞ் செய்கையெல்லாம், முன்னை வினை ஆய்விடும் - முற்பிறப்பிற்செய்த தீவினையின் பயனேயாம்; (எ - று.)

கீழ் இவ்வதிகாரத்தின் ரு-ஆங் கவியில் உயர்ந்தவர்தாழ்வுஅடைதற்கு ஏது முன்னைவினையென்று கூறியதுபோல, இங்கு, இயற்கையிலேயே வறி

ஞராயிருத்தலும் முன்னைவினையினாலேயே யென்று கூறியவாறும்; "அகத்தாரே வாழ்வாரென் றண்ணாத்துநோக்கிப், புகத்தாம்பெரு அர் புறங்கடைபற்றி, மிகத்தாம்வருந்தியிருப்பரே மேலைத், தவத்தாற் றவஞ் செய்யாதார்" என்றது, இங்குக் காணத்தக்கது.

இனி, முதலடிக்கு-(தமது தாழ்ந்த நிலைமையை நோக்கி) யாவரும் மிக இரக்கம் பொருந்திய மனத்தையுடையவர்களாய்த் தம்மைக் காணும் படி யென்றும் உரைக்கலாம். நெடுங்கடை-வெகுகாலம் என்று உரைப் பாருமுளர். மூன்றுமடி - அந்நாட்டின் நீர்வளத்தையும், நெய்தனிலச் சிறப்பையும் விளக்கிற்று. அடும்பு - நெய்தல்நிலத்தில் கடற்கரையில் படருங் கொடிவகை: இதன்மலர் சதங்கைமணிபோல இருக்குமென் பர். "அடம்பம்பூ" என்ற பாடமும் உண்டு. (அடம்பில், மரஅடம்பு கொடியடம்பு என இருவகையுண்டு என்றும், அன்னமிருந்துகோதுத லால், இது மரவடம்பு என்றும் கூறினர் ஒருசாரார்: இவர் தாமரையை மரமென்று நினைத்துள்ளாரோ?) இனிய மலரை அன்னங்கோதிக் கிழித் தல்போல, சிறந்தோரையும் ஊழ்வினை வருத்து மென்பது, இதிலுள்ள விளியாற் பெறப்படுந் தொகைமொழி.

கூர் - உரிச்சொல். உழல்வதெல்லாம் - ஒருமைப்பன்மைமயக்கம். அடும்பு-ஓர்கொடியின் பெயர்; அம்-சாரியை. ஆய்விடும், விடு-துணிவுப் பொருளை உணர்த்திற்று. அன்னம் - ஹம்ஸம் என்னும் வடமொழி. தனிச்சொல்லும் மூன்றும் அடியும்-**ஆடூஉ முன்னிலை**. அடுத்த செய் யுளிலும் இப்படியே. (எ)

கஅ. அறியாரு மல்ல ரறிவு தறிந்தும்
பழியோடு பட்டவை செய்தல்—வளியோடி
நெய்த னறவுயிர்க்கு நீள்கடற் றண்சேர்ப்ப
செய்த வினையான் வரும்.

(இ-ள்.) வளி ஓடி-காற்று வீசுதலினால், நெய்தல்-நெய்தற்பூக்கள், நறவு உயிர்க்கும்-(அசைந்து) தேனைச்சொரிகின்ற, நீள் கடல் தண் சேர்ப்ப-பெரிய கடலினது குளிர்ந்த கரையையுடைய பாண்டியனே!— (சிலர்), அறியாரும் அல்லர்-அறியாதவரு மல்லர்: அறிவது அறிந்தும்-அறிதற்கு உரியவற்றை அறிந்திருந்தும், பழியோடு பட்டவை செய்தல்-உலகநிந்தையோடு பொருந்திய தீயதொழில்களைச் செய்தல், செய்த வினையான் வரும்-(மூற்பிறப்பிற்) செய்த தீவினையினால் உண்டாகும்.

இயற்கையறிவோடு செயற்கையறிவைப் பெற்றிருந்தும் பழிப்பன செய்தல் பழவினைப்பயனே யென்பது கருத்து. "தவமுந் தவமுடை யார்க்காகும்" என்றபடி நல்வினைக்கு நல்வினையேகாரணமாதல்போல, தீவினைக்குந் தீவினையே காரணமாம் என்றவாறு. பழவினைக்கு ஏற்பவே மனம்செல்லுமென்ற கருத்து, இச்செய்யுளின் ஆடூஉமுன்னிலையில் தொகைமொழியாக அமைந்துள்ளது.

ஓடி = ஓட: எச்சத்திரிபு; இனி, வளி ஓடி நெய்தல் நறவு உயிர்க் கும்-காற்றுத் தான் வீசைந்துசென்று நெய்தல்மலரினது வாசனையை வீசு கின்ற எனவுமாம்; நெய்தல்-நீர்ப்பூங்கொடிகளுள் ஒன்று. அறிவது-சாதியொருமை. நறவு-நறு என்பதன் விகாரம்.

'வழியோடி' என்று பாடமோதி, (காற்றின்) வழியே போய் என்று உரைப்பாரு முளர். 'நீள்கழித்தண்சேர்ப்ப' என்பதும் பாடம்.

முதலடி-**முற்றுமோனை**; அதாவது - ஓரடியின் சீர்களிலெல்லாம் மோனைவருவது. இச்செய்யுளின் முன்னிரண்டடிகளில் **உயிரேதுகை**; அதாவது இரண்டாமெழுத்து ஒன்றுதாயினும் இரண்டாமெழுத்தின் மேலேறிய உயிர் ஒன்றி நிற்பது. (அ)

கஅகூ. ஈண்டுநீர் வையத்து நிலல்லாரு மெத்துணையும்
வேண்டார்மற் றீய விழைபய னல்லவை
வேண்டினும் வேண்டா விடினு முறற்பால
தீண்டா விடுத லரிது.

(இ - ள்.) ஈண்டு நீர் வையத்துள்-நெருங்கிய கடலாற் சூழப்பட்ட நில வுலகத்தில், எல்லாரும்-யாவரும், எத்துணையும்-மிகச்சிறிதும், தீய-கொடி யனவாகிய துன்பங்களை, வேண்டார் - (பெற) விரும்பார்; விழை பயன்-(யாவரும்) விரும்பும் பயன், நல்லவை - நல்லனவாகிய இன்பங்களே யாகும்; (ஒருவர்), வேண்டினும் - விரும்பினும், வேண்டாவிடினும்-விரும்பாவிட்டாலும், உறற்பால - (பழவினையால்) வந்து அடைதற்கு உரியனவாகிய இன்பங்களும் துன்பங்களும், தீண்டா விடுதல்-(அவரை) அடையாமல் விடுவது, அரிது-இல்லை; (எ - று.)

நாம் எப்போதும் நன்மையொன்றனையே நாடினும் நல்வினைப் பயனும் தீவினைப்பயனும் பழவினைக்குத் தக்கவாறு அவ்வக்காலத்து வந்தே தீரு மென்பதாம்.

விழைபயன் அல்லவை எனப் பிரித்து-விரும்பப்படும் பயனல்லாதன வாகிய தீயனவற்றை யென்றும் உரைக்கலாம். நீர்-கடலுக்கு ஆகுபெயர். இனி, ஈண்டு நீர்-வினைத்தொகை யன்மொழியாகவுமாம். மன்-அசை. "தனக்குவமை யில்லாதான் தாள்சேர்ந்தார்க் கல்லால், மனக்கவலை மாற்றலரிது" என்ற **திருக்குறளி**ற்போல, இங்கு அருமை இன்மையின் மேல் நின்றது; அங்குப் **பரிமேலழகர்** இந்நாலடியையே மேற்கோள் காட்டினர்.

இச்செய்யுளின் பிற்பாதி, **பழமொழி**யென்ற நூலில் "கழுமலத்தில் யாத்த" என்ற செய்யுளின் பிற்பாதியாகப் பயின்றுள்ளது.

'எட்டுணையும்' என்றும், 'விழை பயனல்லது' என்றும் பாடம். (க)

கஅ0. சிறுகா பெருகா முறைபிறழ்ந்து வாரா
வுறுகாலத் தூற்றுகா வாமிடத்தே யாகுஞ்
சிறுகாலைப் பட்ட பொறியு மதனை
யிறுகாலத் தென்னே பரிவு.

(இ - ள்.) சிறுகாலை-உயிர் உடம்பையடையுங்காலத்தில்தானே, பட்ட-(அனுபவிக்கவேண்டுமென்று) நியமிக்கப்பட்ட; பொறியும்-ஊழ் வினைகளெல்லாம்,—சிறுகா-குறையமாட்டா; பெருகா - வளரமாட்டா; முறை பிறழ்ந்துவாரா - (முற்பிறப்பிற்செய்யப்பட்ட) முறைதவறி முன் பின்னாக வரமாட்டா; உறு காலத்து ஊற்று ஆகா-(துன்பம்) வருங் காலத்து ஊன்றுகோல்போல் உதவி அத்துன்பத்தை ஒழிக்கமாட்டா;

ஆம் இடத்தே ஆகும்-வரவேண்டிய காலத்திலேயே வரும்; அதனால்-ஆதலால், இறு காலத்து-(தீவினைப்பயனுற்) கெடுதியடையுங்காலத்தில், பரிவு-இரங்குவது, என்னை - என்? (எ - று.)

அனுபவித்தே தீரவேண்டுவதாகிய விதியின்பயனைக் குறித்துத் துக்கிப்பது வீண் என்பது, கருத்து.

"வருந்தி யழைத்தாலும் வாராத வாரா, பொருந்துவன போலி னென்றும் போகா—இருந்தேங்கி, நெஞ்சம்புண்ணாக நெடுந்தூரந் தானினைந்து, துஞ்சுவதே மாந்தர் தொழில்" என **ஔவையார்** கூறியதும் காண்க. "சாதலும் பிறத்தல்தானும் தம்வினைப் பயத்தினாகும், ஆதலு மழிவுமெல்லாம் அவை பொருட்கியல்பு கண்டாய், நோதலும் பரிவுமெல் லாம் நுண்ணுணர்வின்மை யன்றே" என்ற **சிந்தாமணியும்** இங்கு அறியத் தக்கது. (கo)

கஉ - ஆம் அதிகாரம்—மெய்ம்மை.

அஃதாவது-உண்மையை யுணர்த்துவது; இங்கே, உண்மையென்றது-அந்தந்தப்பொருள்களின் இயற்கையான தன்மை. இது ஊழ்வினையால் அமைவதாதலின், பழவினையின்பின் வைக்கப்பட்டது.

கஙக. இசையா வொருபொரு ளில்லென்றல் யார்க்கும்
வசையன்று வையத் தியற்கை—நசையழுங்க
நின்றூடிப் போய்த்த னிரைதொடீஇ செய்ந்நன்றி
கொன்றூரிற் குற்ற முடைத்து.

(இ - ள்.) நிரை தொடீஇ-ஒழுங்காகிய வளையல்களை யுடையவளே! இசையா ஒருபொருள் இல்லென்றல்-(தம்மாற்கொடுப்பதற்குக்) கூடாத தொரு பொருளை (யாசகர்க்கு) இல்லையென்று (இரந்த அப்பொழுதே) சொல்லுதல், யார்க்கும் வசை அன்று - எவர்க்கும் பழிப்பாகாது; வையத்து இயற்கை - உலகத்தாரின் இயல்பாம்; நின்று - (கொடுப்ப னென்பது தோன்ற நாளைக்குத் தருவேன், வேறொரு நாள் தருவேன் என்று சொல்லிக்கொண்டு) நின்று, ஓடி-நெடுங்காலங் கழித்துச்சென்று, (பின்பு), நசை அழுங்க-(இரப்பவரது) ஆசை கெடும்படி, பொய்த்தல் - (இல்லையென்று சொல்லிப்) பொய்யுரைத்தல், செய் நன்றி கொன்றூரின் குற்றம் உடைத்து - (தமக்குப் பிறர்)செய்த உபகாரத்தை மறந்தவரது குற்றத்தினும் (அதிகமான) குற்றத்தையுடையது; (எ - று.)

உலகத்தில் யோக்கியர்கள் தம்மாற்கொடுத்தற்கு இசையாத பொருளை ஒருவர் யாசித்தால் அப்பொழுதே இல்லையென்று சொல்லி அனுப்பிவிடுவர்; அது குற்றமன்று; அயோக்கியர்களோ, யாசகர்க்குத் தாங்கள் கொடுப்பதாக நெடுங்காலம் ஆசைகாட்டிக் கடைசியில் இல்லை யென்று பொய்யுரைவர்; அது எல்லாக்குற்றங்களினும் பெரியதொரு குற்றமாமென்பது, கருத்து. இதனால், யோக்கிய அயோக்கியர்களது இயற்கை சொல்லப்பட்டது. "**க்ருதக்நே** நாஸ்தி நிஷ்க்ருதிஃ" என்னும் வடநூன் மேற்கோளாலும், "எந்நன்றிகொன்றூர்க்கு முய்வுண்டா முய்வில்லை, செய்ந்நன்றிகொன்ற மகற்கு" என்னுந் **திருக்குறளாலும்**, செய்ந்நன்றிமறத்தல் பிராயச்சித்தமில்லாததொரு பெரும் பாவமாதலை உணர்க.

இனி, நின்று-(யாசகன் நெடுங்காலத்து) நின்று, நசை அழுங்க-(பின்) ஆசை கெடும்படி, ஒடி பொய்த்தல்-(கொடுப்பதற்கு இசைந்த பொருளைக்கொடாமல்) ஓடிஒளித்தல் எனவும் பொருள் கொள்ளலாம். நிரை தொடி - வினைத்தொகைப் புறத்துப்பிறந்த அன்மொழித்தொகை; ஈறு நீண்டு அளபெடுத்தது-விளியுருபு : இது, **மகடூஉ முன்னிலை.**

"இசைவ கொடுப்பதூஉ மில்லென்பதூஉம், வசையன்று வையத்தி யற்கையஃதன்றிப், பகைகொண்டவ னிற்பப்பாத்துண்ணு ஞயின், நசை கொன்றுன் செல்லுலகம்தில்" என்பது, **பழமொழிச் செய்யுள்.** (க)

ககஉ. தக்காருந் தக்கவ ரல்லாருந் தந்நீர்மை
யெக்காலுங் குன்ற லிலராவ—ரக்காரம்
யாவரே தின்னினுங் கையாதாங் கைக்குமாந்
தேவரே தின்னினும் வேம்பு.

(இ - ள்.) தக்காரும் - தகுதியையுடைய யோக்கியரும், தக்கவர் அல்லாரும்-தகுதியையுடையவரல்லாத அயோக்கியரும், எக்காலும்-எப் பொழுதும் [பெரியவர் வந்தபொழுதும் சிறியவர்வந்தபொழுதும்], தம் நீர்மை குன்றல் இலர் ஆவர் - தங்களது இயல்பானகுணம் குறைதலில் லாதவராவர்; (எதுபோலவெனின்),—அக்காரம் - கருப்பஞ்சாற்றுக் கட்டி, யாவரே தின்னினும் கையாது-எவர்தின்றாலுங் கசவாது ; வேம்பு-வேப்பங்காய், தேவரே தின்னினும்-தேவர்களே தின்றாலும், கைக்கும் - கசக்கும்; (எ - று.)

அக்காரம் மிகத்தாழ்ந்தவர் தின்றாலும் இன்சுவையுடையதாவது போல, தக்கார் எப்போதும் நற்குணமுடையவராவர்; வேம்பு தேவர்கள் தின்றாலும் கைப்பேயுடையதாவதுபோல, தக்கவரல்லாத அயோக்கியர் எப்போதும் தீக்குணங்களேயே யுடையவராவர் என்பதாம்; **எடுத்துக் காட்டுவமையணி.**

தக்கார் நீர்மை - உத்தமகுணம்; வாய்மை முதலியன. தக்கவரல்லார் நீர்மை-அதமகுணம்: பொய்ம்மை முதலியன. அக்காரம்-இக்ஷுஸாரம் என்னும் வடமொழியின் சிதைவுபோலும்; இங்கே வெல்லம், சர்க்கரை, கற்கண்டு முதலியவற்றைக் குறித்தது. ஏகாரங்கள்-முறையே இழிவு சிறப்பும், உயர்வுசிறப்பும் உணர்த்தும். ஆம் - அசை. (உ)

ககஙஉ. காலாடு போழ்திற் சுழிகோளர் வானத்து
மேலாடு மீனிற் பலராவ—ரேலா
விடரொருவ ருற்றக்கா லீர்ங்குன்ற நாட
தொடர்புடையே மென்பார் சிலர்.

(இ - ள்.) ஈர் குன்றம் நாட - குளிர்ந்த மலைகளையுடைய நாட்டை யுடையவனே!—கால் ஆடு போழ்தில் - (ஒருவர்க்குச்) செல்வம் வந்த காலத்தில், வானத்து மேல் ஆடும் மீனின் பலர் - ஆகாயத்தில் உயரச் சஞ்சரிக்கின்ற நக்ஷத்திரங்களினும் அநேகர், கழி கோளர் ஆவர்-(அவர்க்கு) மிக்க உறவினராவர்; ஒருவர் எலா இடர் உற்றக்கால்-அவ் வொருவரே தகாத துன்பத்தை அடைந்தால், தொடர்பு உடையேம் என் பார் - (அவரோடு யாம்) உறவையுடையோ மென்றுசொல்லி முன்வந்து உதவுபவர், சிலர்-சிலரே; (எ - று.)

செல்வமுள்ள காலத்துப் பலர் வந்துசூழ்ந்து பொய்யுறவு பாராட்டி நடித்தலும், வறுமைவந்த காலத்துச் சிலர்மாத்திரமே மெய்யுறவினராக வந்து உதவுதலுமாகிய உலகவியற்கை, இதனைச் சொல்லப்பட்டது. "பொருள் கையுண்டாய்ச் செல்லக்காணிற் போற்றியென் றேற்றெழுவர், இருள்கொள் துன்பத்தின்மை காணில் என்னே யென்பாருமில்லை" என்ற **ஆழ்வார் பாசுரமும்**; "அற்ற குளத்தி லறுநீர்ப்பறவைபோ, லுற்று ழித் தீர்வாருறவல்ல—ரக்குளத்திற், கொட்டியு மாம்பலு மெய்தலும் போலவே, யொட்டியுறுவா ருறவு" என்ற **ஔவையார் வாக்கும்** காண்க.

ஈர் என்ற அடைமொழி, பலநீருவிகளையுடைமையாகிய குன்றத்தி னது வளத்தைத் தெரிவித்தது. நாட்டின் நிலவளத்துக்கு முக்கிய காரண மாகிய நீர்வளத்துக்கு இடமாகலின், மலையின் செழிப்பைக் கூறினர். சிலர் என்றது, அருமை குறித்து நின்றது.

கால் ஆடுதல்-பாதம் நினைத்தஇடம் போதல்; இது - **இலக்கணை**யால், செல்வம் பெறுதலை உணர்த்திற்று; 'கைசாய்தல்,' 'சாய்கால்,' 'செல் வாக்கு' என்பனபோலக் கொள்க: **சீவக சிந்தாமணி**யில் "கண்ணுடி வென்று" என்பதற்கு - 'கண் எல்லாரிடத்தும் உலாவி வென்று' என்று உரைகூறிய ஆசிரியர் **நச்சினார்க்கினியர்** "காலாடுபோழ்தின்" என்றுற் போல என்று அதற்கு இதனை மேற்கோள் காட்டியவாறும் உணர்க. அன் றியும், காலாடுதல்-செல்வச்செருக்குக்கு ஒருகுறியா மென்பர். காலாடு தல்-முயற்சியால் தொழில்செய்தல் என்று ஒருவர் பொருள் கூறினர். போழ்து-மரூஉமொழி. கழி-உரிச்சொல்; இனி, கழிகிளைஞர்-இழிவான உறவினரென்றும் பொருள் கொள்ளலாம். கிளைஞர்-மரத்தைக் கிளை போல ஒருவரைத் தழுவுபவர்; ஞ்-பெயரிடைநிலை. மீன்-விண்மீன்: மின்னுவது மீன் எனக் காரணக்குறி; வானமாகிய கரியபெரிய கடலுக்கு மீன்போலுள்ளது என உவமை பற்றிய பெயரென்றலு மொன்று. (கூ)

ககச. வடுவிலா வையத்து மன்னிய மூன்றி
னடுவண தெய்த விருதலையு மெய்து
நடுவண தெய்தாதா னெய்தும் உலைப்பெய்
தடுவது போலுந் துயர்.

(இ - ள்.) வடு இலா - குற்றமில்லாத, வையத்து - இவ்வுலகத்திலே, மன்னிய-பொருந்திய, மூன்றில்-(அறம்பொருள் இன்பம் என்னும்)மூன்ற னுள்ளே, நடுவணது-நடுவிற்சொல்லப்பட்ட பொருளை, எய்த-(ஒருவன்) அடைய, (அதனால்), இரு தலையும்-முன்னும் பின்னுமுள்ள அறத்தையும் இன்பத்தையும், எய்தும்-அடைவான்; நடுவணது எய்தாதான்-இடையில் நின்ற அச்செல்வத்தை அடையாதவன், உலை பெய்து அடுவது போலும் துயர்-(கொல்லனது) உலைக்களத்திலே இட்டுக்காய்ச்சப்படுவதனாலாகுந் துன்பத்தைப்போன்ற துன்பத்தை, எய்தும்-அடைவான்; (எ - று.)

இதனால், செல்வவறுமைகளின் இயற்கை கூறப்பட்டது. செல்வத் தைப்பெற்றால் தானதருமங்களைச்செய்யவும், இம்மை யின்பங்களை அனுப விக்கவுங்கூடும்; அதனைப் பெறுமற்போனால் இரத்தல் முதலியவற்றால்

மிக்க துன்பத்தையடைவான் என்பதாம். "ஒண்பொருள் காழ்ப்ப வியற்றியார்க்கெண்பொரு, ளேனை யிரண்டு மொருங்கு," "பாரோர் சொலப்பட்ட மூன்றன்மே யம்மூன்று, மாராயிற் ரூனேயறம்பொருளின்பமென், ரூராரிவற்றி னிடையதனே யெய்துவார், சீரா ரிருகூலயு மெய்துவர்," "இல்லா ரிருமையு நல்லவெய்தார்," "வறியா ரிருமையறியார்" என்பன காண்க. **உவமையணி.** (ச)

கஉந. நல்லாவின் கன்றுயி ரூகும் விலைபெறூஉங்
கல்லாரே யாயினுஞ் செல்வர்வாய்ச் சொற்செல்லும்
புல்லீரப் போழ்தி னுழவேபோன் மீதாடிச்
செல்லாவா நல்கூர்ந்தார் சொல்.

(இ - ள்.) நல் ஆவின் கன்று ஆயின்-உயர்ந்தசாதிப் பசுவினதுகன்ரு யிருக்குமாலுல், நாகும்-இளங்கன்றும், விலை பெறூஉம்-(மிக்க) விலையை அடையும்; (அதுபோல), கல்லாரே ஆயினும்-படியாதவர்க ளாலுலும், செல்வர் வாய் சொல்-பொருளுடையோரது வாக்கிலிருந்து வருஞ் சொற்கள், செல்லும்-(தகாதனவாயினும் பலராலும்) அங்கீகரிக்கப்படும்; நல் கூர்ந்தார் சொல்-(படித்தவராயினும்) வறுமைப்பட்டவரது சொற்கள், (நல்லனவாயினும்), புல் ஈரம் போழ்தின் உழவே போல்-அற்பமான ஈரத்தையுடைய காலத்தில் உழவு (நிலத்திலிறங்காமல் மேலெழுந்தவாரூய்ச் செல்வது) போல, மீது ஆடி-மேலே மாத்திரந்தோன்றி, செல்லாஆம்-உள்ளே ஏற்றுக்கொள்ளப்படாதனவாம்; (எ - று.)

நல்ல சாதிப்பசுவினது கன்று மிக்க இளமையையுடையதா யிருப்பினும் மிக்க விலை பெறுதல்போல, செல்வமுடையவர் மிக்க இளமையையுடையராய்ப் படியாதவராயிருப்பினும் அவர்க்கும் மிக்க செல்வாக்கு உண்டாம்; மேல்தோற்றத்தில்மாத்திரம் ஈரமுடையதாய்த் தோன்றுங் கழனியில் உழுதல் பயனற்றதாவதுபோல, தரித்திரனுடைய சொல் செல்லாது பயனற்றதாகும் என்பதாம். இதனுல், செல்வத்தின்சிறப்பான இயற்கை கூறப்பட்டது.

எடுத்துக்காட்டுவமையணியும், முற்றுவமையணியுஞ் சேர்ந்துவந்த சேர்வையணி.

"நல்லாளே யாலுலுங் கைப்பொருளொன் றுண்டாயின், எல்லாருஞ் சென்றங் கெதிர்கொள்வர் — இல்லானே, இல்லாளும் வேண்டாள்மற் றீன் றெடுத்த தாய்வேண்டாள், செல்லா தவன் வாயில் சொல்" என்ரூர் **ஔவையாரும்**; "ஏழை வார்த்தை யம்பல மேறுது" என்பது, **பழமொழி.**

நாகு-இளமையையும் பெண்மையையும் உணர்த்தும் பெயர்; "ஏருமையுமரையும் பெற்றமு நாகே" என்னுந் **தொல்காப்பியச்** சூத்திரத்தால், இது பசுவிற்குரியதாதலேஉணர்க.விலைபெறூஉம்-இன்னிசைநிறைத்தற் பொருட்டுக் குறில்நெடிலாய் அளபெடுத்தது. நல்குஊர்என்னும் இரண்டு சொற்கள் ஒருசொல்லின்தன்மைப்பட்டு நல்கூர்என நின்றன; நல்கூர்தல்-பிறர்கொடுத்ததைப் பெற்றுக்கொள்ளச் செல்லுதல்; இது வறுமையைக் குறித்தலால், காரியத்தைக் காரணமாகக்கூறிய **உபசாரவழக்கு.** நல்குதல்-

கொடுத்தல், ஊர்தல் - செல்லுதல். 'வாய்ச்சொல்' என்றவிடத்து 'கூர்ப்' எனவேண்டாதுகூறியது, அதன்சிறப்பை உணர்த்தற்கு. புல்லீரம்-நமிட்டீரம். உழுவு-தொழிற்பெயர்; உழு - பகுதி. (இ)

கக்சு. இடம்பட மெய்ஞ்ஞானங் கற்பினு மென்று
மடங்காதா ரென்று மடங்கார்—தடங்கண்ணு
யுப்பொடு நெய்பா றுயிர்காயம் பெய்தடி னுங்
கைப்பறு பேய்ச்சுரையின் காய்.

(இ - ள்.) தட கண்ணுய் - பெரிய கண்களை யுடையவளே !—அடங்காதார்-(இயல்பாய்) அடங்குந் தன்மையில்லாதவர்கள், மெய் ஞானம்-தத்துவ ஞானத்தையுணர்த்தும் நூல்களை, இடம் பட-அதிகமாக, என்றும்-எப்பொழுதும், கற்பினும் - படித்துவந்தாலும், என்றும் அடங்கார் - எப்பொழுதும் அடங்கமாட்டார்கள்: [இயற்கையறிவினால் அடங்காதவர் செயற்கையறிவினால் அடங்கமாட்டாரென்றபடி]; (எதுபோலவெனின்), —உப்பொடு-உப்பையும், நெய்-நெய்யையும், பால்-பாலையும், தயிர்-தயிரையும், காயம்-பெருங்காயத்தையும், பெய்து-(தனித்தனியே) சேர்த்து, அடினும்-சமைக்கப்பட்டாலும், பேய்ச்சுரையின் காய்-பேய்ச்சுரைக்காய்கள், கைப்பு அறு-(தமதுஇயற்கையான) கசப்பு நீங்காவாம்; (எ - று.)

இதனால், அடங்காதவரது தன்மை கூறப்பட்டது.

ஞானம்- நூலுக்குக் காரியவாகுபெயர். தட-உரிச்சொல். தடங்கண்-உரிச்சொற்புணர்ச்சியாதலால், இனமெலிமிக்கது. கண்ணுய்-கண்ணுள் என்பதன் விளி; **மகடூஉமுன்னிலை**. 'உப்பொடு' என உப்பை 'ஒடு'க்கொடுத்துப் பிரித்தது, அறுசுவையுள்ளுந் தலைமைபெறுதலாகிய அதன் சிறப்புத் தோன்ற. பேய்ச்சுரையின்காய்' என்பதை, இன் பேய்ச்சுரைக்காய் என மாற்றி-கண்ணுக்கினிய பேய்ச்சுரைக்காய் என உரைப்பாருமுளர்.

'பெய்தடினும்' என்றவிடத்து, உம்மை - உயர்வுசிறப்புப் பொருளது; இனி, எச்சவும்மையாகக்கொண்டு, அதனைக் கத்திரிகொண்டு துணிப்பதன்றி எனப்பொருள் காணலாம்; ஆகவே, இப்பின்னிரண்டடி-"யஸ்ச நிம்பம் பரஸுநா, யஸ்சைநம்மதுஸர்ப்பிஷா-யஸ்சைநம்கந்தமால்யாத்யை:, ஸர்வத்ர கடுரேவ ஸ:" என்ற **சுலோக**த்தோடு ஒத்தகருத்துடையதாய், **ஒப்புமைக் கூட்டவணி**யின்பாற் படும்; நன்மைபுரிவாரிடத்தும், தீமைபுரிவாரிடத்தும் ஒத்ததொழிலுடைமையைக்கூறுதல், இதனிலக்கணம். பின்னிரண்டடியில் 'அடங்காதார் அடங்கார்' என ஒருவரிடத்துள்ள தன்மையையே வற்புறுத்துதற்பொருட்டு மீண்டும் விதித்தது, **விநியணி**யாம். முன்னிரண்டடியும் பின்னிரண்டடியும் பிம்பபிரதிபிம்பபாவந்தோன்றநிற்பது, **எடுத்துக்காட்டுவமையணி**. இவ்வாறு பல அணிகள் சேர்ந்துவருவது-**சேர்வையணி**யெனப்படும்.

இச்செய்யுளின் பின்னிரண்டடியை, 'ஓங்காரமிட்டு அரைத்துக் கரைத்தாலும், தன் நாற்றம் போகாதாம்பேய்ச்சுரைக்காய்" என்ற பழமொழியோடு ஒப்பிட்டுக் காண்க. காரம் - ஸம்ஸ்காரம். (சு)

ககள..தம்மை யிகழ்வாரைத் தாமவரின் முன்னிகழ்க
வென்னை யவரொடு பட்டது—புன்னை
விறற்பூங் கமழ்கானல் வீங்குநீர்ச் சேர்ப்ப
வுறற்பால யார்க்கு முறும்.

(இ - ள்.) புன்னை-புன்னைமரங்களின், விறல்-பெருமையையுடைய, பூ-மலர்கள், கமழ் - வாசனைவீசுகின்ற, கானல்-சோலைகளையுடைய, வீங்கு நீர் - மிக்க நீரையுடைய கடலினது, சேர்ப்ப - துறையையுடையவனே!—தம்மை இகழ்வாரை-(காரணமின்றித்) தம்மை நிந்திப்பவர்களை, தாம் அவரின்முன் இகழ்க-அவர் நிந்திப்பதற்குமுன்னே [நிந்தித்தவுடனே யென்ற படி] தாம் நிந்திக்கக்கடவர்; அவ்வொடு பட்டது என்னை-(தம்மை நிந்திக்கிற) அவர்களோடு (தமக்கு) உண்டான தாக்ஷிணியம் என்ன? உறல் பால - வரத்தக்கனவாகிய இன்பதுன்பங்கள், யார்க்கும்-எவர்க்கும், உறும்-(தவறாமல்) வந்தே தீரும்; (எ - று.)

வரவேண்டிய நன்மையோ தீமையோ விதியின்படி வந்தே தீருமாதலால், பிறர் நம்மைப் பழிக்கும்போது 'இதனுல் என்ன தீங்கு விளையுமோ?' என்று அஞ்சிப் பின்வாங்காது அவரைப்பழிப்பதே அவர் வாயை யடக்கும் விதமா மென்றவாறு. இங்ஙனங்கூறியது, காரணமின்றிப் பிறரைப் பழிப்பவர்களது நிந்தையைக் குறைவுபடுத்தற்கு உபாயமா மென்னுங் கருத்தாலென்க; "கதநன்று சான்றாண்மை தீது கழிய, மதநன்று மாண்பில்லார் முன்னர்" எனப் **பிறர்** கூறியதுங் காண்க. இச்செய்யுளிலுள்ள விளியில் புன்னைமலர் புலாலையடக்கித் தன்மணம்மேலிடப்பெறுதல் போல, மாறு இகழின் பகைவர் பழிப்பதை யடக்கித் தம் பெருமையை மிகுவிக்கு மென்ற கருத்துத் தொகைமொழியாற் பெறலாகும்.

இதனுல், கீழ்மக்களின் தன்மையும், அவரையடக்கும் உபாயமும் கூறப்பட்டன.

'உறற்பால யார்க்கு முறும்' என்ற ஈற்றடி, 'தம்மையிகழ்வாரைத் தாமவரின் முன்னிகழ்க' என்ற வாக்கியத்திற்கு ஏதுவாய் நின்று சாதித்து நிற்பது, **தொடர்நிலைச்செய்யுட்குறியணி**; இது, வடமொழியில் **காவ்யலிங்காலங்காரம்** எனப்படும்.

'அவரின் முன்' என்பதற்கு-அவரது புறத்திலேயன்றி எதிரிலே யென்றும் பொருள்கொள்ளலாம். 'விறல்' என்றது, கடலுக்கு இயற்கையாயுள்ள துர்க்கந்தத்தையும் போக்குந் திறத்தை. நெய்தல்நிலக் கருப்பொருளாதலால், புன்னை கூறப்பட்டது. பூங்கமழ்-"பூப்பெயர்முன் இனமென்மையுந் தோன்றும்" எனப்பொதுப்படக் கூறியதனுல், அல்வழி எழுவாய்த் தொடரில் மெலிமிக்கது. **கானல்**-கடற்கரைச்சோலை. வீங்குநீர்-வினைத்தொகை யன்மொழி.

இச்செய்யுளின் முன்னிரண்டடிகளில் **இனவெதுகை**; அதாவது வல்லெழுத்துக்களுள் ஒன்றற்கு ஒன்றும், மெல்லெழுத்துக்களுள் ஒன்றற்கு ஒன்றும், இடையெழுத்துக்களுள் ஒன்றற்கு ஒன்றும் எதுகையாய் நிற்பது. இவை முறையே வல்லினவெதுகை, மெல்லினவெதுகை, இடையின வெதுகை எனப்படும். (எ)

ககஅ. ஆவே றுருவின வாயினு மாபயந்த
பால்வே றுருவின வல்லவாம்—பால்போ
லொருதன்மைத தாரு மறநெறி யாபோ
லுருவு பல கொள லீங்கு.

(இ-ள்.) ஆ வேறு உருவின ஆயினும்-பசுக்கள் வெவ்வேறு நிறத்தை யுடையனவாயிருந்தாலும், ஆ பயந்த பால்-அப்பசுக்கள் தந்த பால்கள், வேறு உருவின அல்ல ஆம்-(வெண்ணிறத்தனவேயன்றி) வெவ்வேறான நிறத்தையுடையவை யாகமாட்டா; பால் போல்-அந்தப் பால்போல,—அறம்-தருமமானது, ஒரு தன்மைத்து ஆகும்-ஒரேதன்மையையுடைய தாம்; நெறி-(அத்தருமத்தின்) வழிகள், ஈங்கு-இவ்வுலகத்தில், உருவு பல கொளல்-பலரூபங்களாக்கொண்டிருத்தல், ஆ போல்-அப்பசுக்கள்போல (ஆகும்); (எ-று.)

இதனால், அறத்தினது தன்மை சொல்லப்பட்டது. பசுக்கள் பல நிறமாயிருத்தல்போலத் தருமத்தைச் சம்பாதித்தற்குரிய வழிகள் பல வாயிருப்பினும், பசுவின்பால் ஒரேநிறமுடைய தாதல்போல அந்நெறி களாற் செய்யப்படுந் தருமமும் ஒரேதன்மையையுடைய தென்பதாம்; **உவமையணி**. என்றது-தானம், தவம், விரதம், வழிபடுகடவுள் வணக்கம் முதலாகத் தருமஞ் செய்யும் வழி பலவாதலையும், தருமம் நன்மை யொன் றையே விளைப்பதாதலையும் நோக்கியென்க.

"உருவே அட்டையும் வடிவும் நிறமும்" என்பதனால், 'உரு' என்பது-நிறத்தையும் வடிவையும் உணர்த்துமாறு அறிக. தெரு-தெருவு, நடு-நடுவு என்பனபோல, உரு-உருவு என உகரச்சாரியை பெற்றது. 'ஈங்கு'-சுட்டு நீண்டது. இனி, 'நெறி ஆ போல் உருவு பல கொளல்' என்பதற்கு-தரும மார்க்கங்களாப் பசுக்களாப்போலப் பலவுருவமாகக்கொள்கஎன்றும் உரைக்கலாம்; இவ்வுரைக்கு, 'கொளல்' என்பது-அல்ஈற்று உடன் பாட்டுவினைமுற்று: தொழிற்பெயரன்று.

இச்செய்யுளின் முன்னிரண்டடிகளில் **லகரவொற்று இடைவந்த ஆசெதுகை**; அதாவது-முதலெழுத்துக்கும் இரண்டாமெழுத்துக்கும் இடையே யரலழ என்ற மெய்களுள் ஒன்று ஒரோவிடத்து வருவது. (அ)

ககக. யாஅ ருலகத்தோர் சொல்லில்லார் தேருங்கால்
யாஅ ருபாயத்தின் வாழாதார்—யாஅ
நிடையாகு வின்னுத தெய்தாதார் யாஅர்
கடைபோகச் செல்வமுய்த் தார்.

(இ-ள்.) தேரும் கால்-ஆராயுமிடத்து, உலகத்து-உலகத்தில், ஓர் சொல் இல்லார்-ஒரு நிந்தைச்சொல்லை யுடையராகாதவர், யார்-எவர்? [எவருமிலரென்றபடி]; உபாயத்தின் வாழாதார்-நந்நிமித்தால் வாழா தவர், யார்-எவர்? இடை ஆக-(தமது ஆயுளின்) இடையிலே, இன்னு தது எய்தாதார்-துன்பத்தை அடையாதவர், யார்—? கடை போக-வாழ் நாளின் முடிவுவரையில், செல்வம் உய்த்தார்-செல்வத்தை அனுபவித் தவர், யார்—? (எ-று.)

உலகத்தில் எல்லாரும் எதாவதொரு நிந்தையை அடைதலும், யாதா யினுமோர் உபாயத்தால் வாழ்தலும், இடையிலே துன்பத்தை அடைத லும், செல்வத்தையிழத்தலும் இயற்கை யென்பது கருத்து.

முதல்வாக்கியத்திலுள்ள 'உலகத்து', 'தேருங்கால்' என்ற சொற் கள் மற்றை வாக்கியங்களிலுஞ்சென்று இயைவது, **முதனிலைத் தீவகம்**. 'யார்' என்ற சொல் ஒன்றே ஒருபொருளிற் பலமுறை வந்தது - **சொற் பொருட்பின்வருநிலையணி**.

சொல் என்பதற்கு-புகழ்ச்சொல் என்றும் உரைக்கலாம். அளபெ டைகள் - செய்யுளோசை நிறைக்கவந்தன. 'உபாயம்' என்றது - சாம, பேத தான தண்டங்களை. **சாமம்**-இனிதாகக்கூறல்; **பேதம்**-மென்மையா னும் வன்மையானும் மனத்தினைப் பேதித்தல்; **தானம்**-பகைவர் மன மகிழக் கொடுத்தல்; **தண்டம்**-பகைவரைப் போர்செய்து அழித்தேவிடு தல். இனி, உழவு வர்த்தகம் சேவகம் பிச்சை முதலியன என்னவுமாம். 'கடைபோக'வென்பது இப்பொருளில் வருவதை "ஈறு கடைபோக வெனக்கரு ளென்றலும்" என்ற **மணிமேகலை**யிலுங் காண்க.

இச்செய்யுளில் அளபெடைகள் பல வந்தது, **அளபுத்தொடை**யாம்.

இச்செய்யுள், "கஸ்யதோஷ: குலே நாஸ்தி, வ்யாதிநா கோ நபீடித:-வ்யஸநம்கேநநப்ராப்தம், கஸ்யஸௌக்யம் நிரந்தரம்" என்னும் சுலோகத் தைப் பெரும்பாலும் ஒத்தது.

'வாழாதாரியார்' என்றும், 'செல்வமுற்றூர்' என்றும் பாடம். (கூ)

கஉ0. தாஞ்செய் வினையல்லாற் தம்மொடு செல்வதுமற்
றியாங்கணுந் தேரிற் பிறிதில்லை—யாங்குத்தாம்
போற்றிப் புனைந்த வுடம்பும் பயமின்றே
கூற்றங்கொண் டோடும் பொழுது.

(இ - ள்.) தேரின்-ஆலோசித்துப் பார்த்தால்,—தம்மொடு செல் வது - (உடம்பை விட்டபின்பு) தமது உயிரோடு வருவது, தாம் செய் வினை அல்லால் - அவரவர் செய்த கருமமே யல்லாமல், பிறிது - வேறொன்று, யாங்கணும் - எவ்விடத்தும், இல்லை—; கூற்றம்கொண்டு ஓடும்பொழுது - யமன் (உயிரைக்) கொண்டு விரைந்துபோகும்போது, ஆங்கு தாம் போற்றி புனைந்த உடம்பும் - அவ்வாறு தாம் பாதுகாத்து (ஆடையாபரணமுதலியவற்றால்) அலங்கரித்த சரீரமும், பயம் இன்றே-பிரயோசனமில்லாததேயாம்; (எ - று.)

'இதுதான் உயிர்' என்று தேகத்தினிடத்தில் மிக்க அபிமானங் கொண்டு உணவு முதலியவற்றாற் பலவகையாகப் பிரயாசைப்பட்டு வருந்தி வளர்த்த இவ்வுடம்பே யமன்உயிரைக் கொண்டுபோம்போது நமக்குப் பயன்படுவதில்லை யென்றால், மற்று எதுதான் நமக்குப்பயன் படப்போகின்றது? எதுவுமில்லை; ஆகவே, நம்மோடு வருவன இருவினை களே யென்பதைத் தெளிவாகவுணர்ந்து தீவினைகளை நீக்கி நல்வினை களைச் செய்யவேண்டு மென்று கருத்து.

இச்செய்யுளில், ஒரு பொருளைக் கூறுவதனால் மற்றொரு பொருள் எளிதிற் சித்தித்தலாகிய **கைமுதிகநியாயந்** தோன்றி, **தொடர்நிலைச் செய்யுட்பொருட்பேறணி** தொனித்தல் காண்க.

நீதிநூல்களி லெங்கும், நன்மைதீமையான காரியங்களின் தன்மையை மாத்திரங் கூறுமிடங்களில், 'நன்மையைச்செய்ய வேண்டும், தீமையைத் தவிரவேண்டும்' என்று கூறியதாகக் கருத்துக்கொள்க.

'உடம்பும் பயமின்றே' என்றது, அது இவ்வுலகத்தே கழிந்துவிடுதலால். 'உடம்பும்' என்றஉயர்வு சிறப்பும்மை, மற்றைச் செல்வம் இளமை சுற்றம் கல்வி முதலியவற்றின் பயனின்மையையும் உணர்த்திற்று.

இப்பாட்டினுல், வினை உடம்பு இவற்றின் தன்மை கூறப்பட்டது.

"ஈட்டிய வொண்பொருளு மில்லொழியும் சுற்றத்தார், காட்டுவாய் நேரே கலுழ்ந்தொழிவர்-மூட்டும், எரியினுழுழியு முடம்பு ஈர்ங்குன்ற நாட, தெரியி னறமே துணை," "மனையாளும் மக்களும் வாழ்வும் தனமும் தன்வாசல்மட்டே, இனமான சுற்றம் மயானமட்டே வழிக்கு எது துணை, நினையாமளவு எவ்வளவாகினும் முன்புசெய்த தவம், தனையாள என்றும்பரலோகஞ் சித்திக்கும் சத்தியமே," "அத்தமும் வாழ்வும் அகத்து மட்டே வீழியம்பு ஒழுங்க, மெத்திய மாதரும் வீதிமட்டே விம்மி விம்மியிரு, கைத்தலை மேல் வைத்தழு மைந்தருஞ் சுடுகாடுமட்டே, பற்றித் தொடரும் இருவினைப் புண்ணியபாவமுமே" என்ற **செய்யுள்கள்** இங்குக் காணத்தக்கன; "அர்த்தா க்ருஹே நிவர்த்தந்தே, ஸ்மஶாநே மித்ர பாந்தவாஃ—ஸுக்ருதம் துஷ்க்ருதஞ்சைவ, கச்சந்த மநுகச்சதி" என்னும் **வடநூன்மேற்கோளுங்** காண்க.

மற்று-அசை. யாங்கண்-யாக்கண் என்பதன் மெலித்தல். 'முடிப்ப முடித்துப் பின் பூசுவ பூசி உடுப்ப உடுத்து உண்ப உண்டி' பாதுகாக்கப் படுதலினுல், 'ஆங்குத் தாம்போற்றிப்புனைந்த உடம்பு' எனப்பட்டது. இங்கே 'ஆங்கு' என்றது, **உலகறிசுட்டு**. மற்றியாங்கண்-குற்றியலிகரம். குற்றியலிகரம், இங்கு அலகுபெறவில்லை. எ-தேற்றம்.

இச்செய்யுளின் முன்னிரண்டடிகளில் **வினைவதுகை**. (கo)

கூ – ஆம் அதிகாரம்—தீவினையச்சம்.

அஃதாவது-பாவத்தைத் தருகின்ற கொடிய தொழில்களைச் செய்வ தற்கு அஞ்சி யொழுகவேண்டு மென்பதைப்பற்றிச் சொல்வது. பொருள் களின் உண்மையான தன்மையை உணர்ந்தா லல்லது தீவினை தருபவை இவையென அறிந்து அவற்றினின்று அஞ்சி அவற்றைச்செய்யாதொழுகு தல் கூடாமையால், இது மெய்ம்மை யென்னும் அதிகாரத்தின்பின் வைக்கப்பட்டது.

கூஉ. துக்கத்துட் டேங்கித் துறவின்கட் சேர்கலா
மக்கட் பிணத்த சுடுகாடு—தொக்க
விலங்கிற்கும் புள்ளிற்கும் காடே புலங்கெட்ட
புல்லறி வாளர் வயிறு.

(இ - ள்.) சுடுகாடு-மயானங்கள்,—துக்கத்துள்-சம்சாரத் துன்பங் களிலே, தேங்கி-தங்கியிருந்து, துறவின்கண்-துறவறத்திலே, சேர்கலா-சேராத, மக்கள்-மனிதர்களுடைய, பிணத்த-பிணங்களையுடையன; புலம் கெட்ட-நல்லறிவில்லாத [மாமிசபோஜனஞ் செய்கிற], புல் அறிவு ஆளர்-அற்ப அறிவையுடையவர்களது, வயிறு-வயிறுகளோவென்றால்,--தொக்க விலங்கிற்கும் புள்ளிற்கும் காடே-தொகுதியான மிருகங்களுக்கும் பறவை களுக்கும் உரிய இடுகாடுகளேயாம்; (எ - று.)—இப்பாட்டால், மாமிச போசனம் தீவினையென்பது கூறப்பட்டது.

"அரிதரிது மானிட ராதல் அரிது" என்றபடி பிறவிக்குள் உயர்ந்த மனிதரது பிணத்தையுடைய சுடுகாட்டினும், மக்களினும் பலமடங்கு இழிந்த மிருகபக்ஷிகளின் பிணங்களையுடைய அற்பர்களது வயிறு மிகவும் இழிவானதாம் என்பது போதருதலால், குறிப்பால்வந்த **வேற்றுமையணி**: உபமான உபமேயங்களுள் ஒன்றற்குச் சிறப்புக்கூறுதல், இவ்வணியின் இலக்கணம்: இதனை வடநூலார் **வ்யதிரேகாலங்காரம்** என்பர். இங்கே உபமானத்தினும் உபமேயத்து விசேஷம் கூறினர். மூற்பிறப்பிலே பிரா ணிகளைக் கொன்றுதின்றவர் இப்பிறப்பிலே ஆயுள்வரையில் துறக்க மன மில்லாது மனைவாழ்க்கையி லிருந்து துன்பப்படுவ ரென்பது, இதிற் போதரும்.

'புலங்கெட்ட' என்றது, உயிர் உய்வதற்கு உபாயமாகிய தத்துவ ஞானத்தை உடைத்தாகாமையால். 'புல்லறிவாளர்' என்றது, உண்ணல் உடுத்தல் உறங்கல் முதலியவற்றுக்கு உரிய சாதாரண அறிவை யுடைமை யால். துறவிகளது தூய உடல் சுடுகாட்டிற் சேர்த்துச் சுடப்படாமற் சிறந்ததோ ரிடத்திற் சேமஞ்செய்து புனிதமாகப் போற்றப்படுதலால், அதனைஒழித்து 'துக்கத்துட்டேங்கித் துறவின்கட்சேர்கலா மக்கட்பிணத்த சுடுகாடு' என்றார்.

சுடுகாடு-பால்பகா அஃறிணைப்பெயர்: (இறந்தவரைச்) சுட்டு எரிக் கும் காடுகள். பிணத்த-'அன்' சாரியை பெறாத பலவின்பால்முற்று. (க)

கஉஉ. இரும்பார்க்குங் காலரா யேதிலார்க் காளாய்க்
கரும்பார் கழனியுட் சேர்வர்—சுரும்பார்க்குங்
காட்டுளாய் வாழுஞ் சிவலுங் குறும்பூழுங்
கூட்டுளாய்க் கொண்டுவைப் பார்.

(இ - ள்.) சுரும்பு-வண்டுகள், ஆர்க்கும்-ஆரவாரிக்கின்ற, காட்டுள்-வனத்திலே, ஆய்-பொருந்தி, வாழும்-வாழ்கின்ற, சிவலும் குறும்பூழும்-கவுதாரி காடை முதலான பறவைகளை, கூட்டுள்-கூட்டினுள்ளே, ஆய்-ஆகும்படி, கொண்டுவைப்பார்-கொண்டுபோய் வைத்துவளர்ப்பவர்கள்,—(மறுபிறப்பில்), இரும்பு ஆர்க்கும் காலர் ஆய்-இருப்புலிலங்குகள் ஒலிக்கின்ற கால்களை யுடையவர்களாய், ஏதிலார்க்கு ஆள் ஆய்-அயலார்க்கு அடிமைகளாய், கரும் பார்-வட்டை நிலங்களிலும், கழனியுள்-வீளைநிலங்களிலும், சேர்வர்-(வேலைசெய்தற்குப்) போய்ச் சேர்வர்கள்; (எ - று.)

பறவைகளைக் கொன்று தின்பதையன்றி அவற்றைப்பிடித்துக் கூட்டிலடைத்து வருத்துவதும் தீவினையென்பது, இதனைக் கூறப்பட்டது. (தசகுமாரசரிதத்துள் அன்னப்பார்ப்பை நூலிட்டுக் காலைக்கட்டிய பாவத்தாற் பின்பு வெள்ளிலிலங்கு காலிற் கிடந்ததென்று ஆசிரியர் கூறியவாறும், சீவகசிந்தாமணியுள் முற்பிறப்பில் அன்னப்பார்ப்பைச் சுற்றத்தினின்றும் பிரித்துச் சிறைவைத்த தீவினையாற் சீவகன் சுற்றத்தினின்றும் பிரிந்து சிறைப்பட்டானென்று சாரணர்கூறியவாறும் உணர்க. "பூவைகிளிதோகை புண ரன்னமொடுபன்மா, யாவையவைதங்கிளையி னீங்கியழவாங்கிக், காவல்செய்து வைதகுவர்கள் தங்கிளையி னீங்கிப், போவர் புகழ்நம்பி யிதுபொற்பிலது கண்டாய்" என்னுஞ் **சிந்தாமணிச்** செய்யுளையுங் காண்க. தம்விருப்பின்படி கானகத்துத்திரியும் பறவைகளை இனத்தினின்று பிரித்துக் கூட்டிலடைத்து அவற்றாலாகிய பயனைப் பெறுபவர் அத்தீவினைப்பயனால் தம்மினத்தினின்று பிரித்து விலங்கிடப்பட்டுத் தம்மாலாகிய பயனை ஏதிலாரால் கொள்ளப்பெறுவாரென்று இதன் கருத்தை விரித்துரைப்பர்.

கரும் பார்-கருமையான பார்; இங்கே, கருமை-வலிமை; அதாவது-வட்டையாயிருத்தல்; பயனில்லாத நிலம். இனி, இருளுலகமாகிய தாமிஸ்ரம் என்னும் நரகவிசேடமென்று உரைப்பாருமுளர். கரும்பு ஆர் எனப் பிரித்து-கரும்புகள் விளைகிற கழனியென்றும் உரைப்பர். சுரும்பு-வண்டுகளில் ஓர்சாதி. 'ஆய்' என்ற சொல் நான்கனுள், பின்னது-ஆக என்னும் எச்சத்தின் திரிபு. வைப்பார்-பெயர். சிவல், குறும்பூழ்-மற்றைப் பறவைகட்கும் **உபலக்ஷணம்**. இரும்பு-விலங்குக்குக் கருவியாகுபெயர். இரும்பு ஆர்க்கும்-இரும்புவிலங்கினாற் கட்டப்பட்ட என்றலுமாம். ஏதிலார் = ஏதுஇலார்-யாதொரு சம்பந்தமும் இல்லாதவர் பகைவருமாம். (உ);

கஉஊ. அக்கேபோ லங்கை யொழிய விரலழுகித்
துக்கத் தொழுநோ யெழுபவே—யக்கா
லலவனைக் காதலித்துக் கான்முரித்துத் தின்ற
பழவினை வந்தடைந்தக் கால்.

.(இ - ள்.) அ கால்-முற்பிறப்பில், அலவனை-நண்டை, காதலித்து-விரும்பி, கால் முரித்து-(அதன்)காலை ஒடித்து, தின்ற-தின்றதனாலாகிய, பழவினை-பழைய தீவினை, வந்து அடைந்தக்கால்-(பிற்பிறப்பில்) வந்து சேர்ந்தால்,—(அத்தீவினை செய்தவர்),—அக்கே போல்-சங்குமணிபோல, அகம் கை ஒழிய-அகங்கைமாத்திரம் நிற்க, விரல் அழுகி-விரல்கள் அழுகிப்போய், துக்கம் தொழு நோய் எழுப-(மிக்க) துன்பத்திற்கு இடமான குஷ்டவியாதி உண்டாகப்பெறுவர் ; (எ - று.)

'அலவன்' என்றது-பிறபிராணிகட்கும் **உபலக்ஷணம்.** நண்டு முதலிய பிராணிகளை முரித்துத்தின்றவர்க்குக் குட்டநோயுண்டா மாதலால், அதுவுந் தீவினை யென்பது, கருத்து. காலைமுரித்தலின் பயன் விரலழுகி வீழ்தலும், அதுதின்ற தீவினையின் பயன் தொழுநோயுண்டாதலு மென்ப.

அகம்+கை = அங்கை எனப் புணர்ந்தது. தொழுநோய் - தொழுவாகிய நோய்; இருபெயரொட்டுப் பண்புத்தொகை. "உயர்திணைதொடர்ந்த பொருள் முதலாறும், அதனெடு சார்த்தினதுதிணை முடிபின" என்னுஞ் சூத்திரத்தால், 'நோய்' என்னும் அஃறிணையெழுவாய் 'எழுப' என்னும் உயர்திணை யெழுவாயின் முற்றைக்கொண்டது; **தினைவழுவமைதி.** தின்ற பழவினை - 'சங்குசுட்ட சுண்ணம்பு' என்பதிற்போல, பெயரெச்சம் காரணப் பொருளதாய்க் காரியப்பெயரைக் கொண்டது. பின்னிரண்டடி - **இனவெதுகை.** (கூ)

கஉச. நெருப்பழற் சேர்ந்தக்கா னெய்போல் வதூஉ
மெரிப்பச்சுட் டெவ்வநோ யாக்கும்—பரப்பக்
கொடுவினைய ராகுவர் கோடாருங் கோடிக்
கடுவினைய ராகியார்ச் சார்ந்து.

(இ - ள்.) நெய் போல்வது உம் - நெய்யும்,—நெருப்பு அழல் சேர்ந்தக்கால் - நெருப்பினது வெப்பத்தைத் தான் சேர்ந்தால், எரிப்ப சுட்டு - (உடம்பை) எரிக்கும்படி காய்ந்து, எவ்வம் நோய் ஆக்கும்- (தன்னைச்சார்ந்தவர்க்குத்) துன்பந்தரும் நோயை உண்டாக்கும்; (அதுபோலவே), கோடாரும் - (நல்லொழுக்கத்தில்) தவறாத யோக்கியர்களும்,—கடு வினையர் ஆகியார் சார்ந்து - கடுமையான பாதகச்செயல்களையுடைய அயோக்கியரைச்சேர்ந்தால், கோடி - (அச்சேர்க்கையால் தம் ஒழுக்கத்தில்) தவறி, பரப்ப கொடு வினையர் ஆகுவர் - மிகவும் கொடிய தொழில்களைச் செய்பவராவர்; (எ - று.)

பலவகையாலும் உடம்புக்கு உறுதிதருவதாகிய நெய்யும் நெருப்பைச்சேர்ந்தால் தான் அவ்வுடம்பையே யெரிப்பதுபோல, தீவினையுடையாரைச்சேர்ந்தால் நல்லவரும் அத்தீவினையையே யுடையராவ ரென்பதாம்; **தற்குஷ்டாந்தாலங்காரம் [எடுத்துக்காட்டுவமையணி.]**

"தீயகந்த மூள்ளதொன்றைச் சேர்ந்திருப்ப தொன்றற்குத், தீயகந்த மேறுந்திறமதுபோல்—தீய, குணமுடையோர் தங்களுடன் கூடி யிருப் பார்க்குக், குணமதுவே யாஞ்செறிவு கொண்டு" என்பது காண்க.

தீயோர்சேர்க்கையினால் வருந் தீமை இதனாற் கூறப்பட்டது.

'நெய்யும்'என்றஉயர்வுசிறப்பும்மை-அதனது தன்மையையும்,எத்தன்மையான புண்களையும்ஆற்றுமியல்பையும்,"ஆயுர்வைக்ருதம்"என்றுவேதத்

திலும் கூறும்படி ஆயுளளிக்கவல்ல தாதலையுங் காட்டிற்று. போல்வது-**ஒப்பில்போலி**; "ஒப்பில் போலியு மப்பொருட்டாகும்" என்னும் **தொல்காப்பியச்** சூத்திரத்தின் உரையில், ஒன்றற்கொன்று ஒக்குமென்னும் பொருள் தன்கண் இன்றி வரும் 'போல்' என்னுஞ் சொல் சிறிது பொருளுணர்த்தி உரையசையாய் நிற்பதற்கு இதனை உதாரணங்காட்டியிருத்தல் காண்க. இனி, கோடிக்கடவினையர் என எடுத்து - மிகப்பலவாகிய தீவினைகளையுடையவர் என்றுமாம். (ச)

கஉடு. பெரியவர் கேண்மை பிறைபோல நாளும்
வரிசை வரிசையா நந்தும்—வரிசையால்
வானூர் மதியம்போல் வைகலுந் தேயுமே
தானே சிறியார் தொடர்பு.

(இ - ள்.) பெரியவர் கேண்மை-(அறிவினால்) பெரியோர்களது சினேகம்,—பிறைபோல - இளஞ்சந்திரன் போல, நாளும்-தினந்தோறும், வரிசை வரிசை ஆ-முறையே, நந்தும்-வளரும்; சிறியார் தொடர்பு-(அறிவினால்) சிறியவரது சினேகமோ,—வான் ஊர் மதியம் போல் - ஆகாயத்திற் செல்லும் பூர்ணசந்திரன்போல, வைகலும்-நாள்தோறும், வரிசையால் - முறையாக, தானே-தனக்குத்தானே [பிறருடைய முயற்சியில்லாமலே], தேயும் - குறைந்துவிடும்; (எ - று.)

இவ்வாறு இருநிறத்தாரது நட்பையும்உணர்ந்து,சிறியார்தொடர்பை அஞ்சி விடவேண்டுமென இவ்வதிகாரத்திற்கு ஏற்பக் கருத்துக்கொள்க. இதனை, கஉஅ-ஆங் கவியோடு ஒப்பிடுக.

அறிவுடையார் தமக்குட் செய்துகொண்ட நட்பு முன்னருங்கிப் பின் பெருகுதற்கும், அறிவிலார் தமக்குட் செய்துகொண்ட நட்பு முன்பெருகிப் பின் சுருங்குதற்குங் காரணம், தமக்குள் ஒருவர் ஒருவருடைய குணத்தை முன் அறியாமலிருத்தலும் பின் அறிதலுமா மென்க. "நிறைநீர நீரவர்கேண்மை பிறைமதிப், பின்னீர பேதையார் நட்பு" என்னுந் **திருக்குறளை** நோக்குக. "ஆரம்ப குர்வீ ஷியிணீக்ரமேண, **லக்ஷ்மீ**புராவ்ருத்திமதீச பஸ்சாத், திநஸ்யபூர்வார்த்த பராத்**தபி**ந்நா, **சா**யேவ மைத்ரீ கலஜ்ஜநா நாம்" என்னும் பத்யமும் இங்குக் கவனிக்கத் தக்கது.

"குன்றமார்பரிந்து வெள்வேற் குடுமிமா மஞ்ஞை யூர்ந்து" என்ற **சிந்தாமணி**யினுரையில், 'ஊர்தல் - ஈண்டுப் போதல்மேற்று: "வானூர் மதியம்" - போல' என்று **நச்சினார்க்கினியர்** உரைத்தது இங்குஉணரத்தக்கது.

கஉசு. சான்றோ ரெனமதித்துச் சார்ந்தாய்மற் சார்ந்தாய்க்குச்
சான்றாண்மை சார்ந்தார்கணில்லாயிற்—சார்ந்தோய்கேள்
சாந்தகத் துண்டென்று செப்புத் திறந்தொருவன்
பாம்பகத்துக் கண்ட துடைத்து.

(இ - ள்.) (நீ), சான்றோர் என மதித்து-(இவர் எல்லாநற்குணங்களாலும்) நிறைந்தவ ரென்று நன்குமதித்து, சார்ந்தாய் - (சிலரைச்) சினேகித்

தாய்; சார்ந்தாய்க்கு - (அவ்வாறு) சினேகித்த உனக்கு, சான்ரூண்மை-அந்தற்குண நிறைவுடைமை, சார்ந்தார்கண்-(உன்னைற்) சேரப்பட்ட அவரிடத்து, இல் ஆயின் - இல்லாமற்போனால், (அது),—ஒருவன்—,சாந்து அகத்து உண்டு என்று-வாசனைத்திரவியம் இதனுள்ளே இருக்கிறதென்று எண்ணி, செப்பு திறந்து-ஒருசிமிழைத் திறந்து, அகத்து - அதனுள்ளே, பாம்பு கண்டது - பாம்பைக்கண்ட தன்மையை, உடைத்து - உடையது; சார்ந்தோய்-சினேகஞ்செய்தவனே! கேள் - (இதனைக்) கேட்டறிவாயாக; (எ - று.)

இதனாலும், மேலிரண்டுசெய்யுள்களாலும், அஞ்சப்படுவதாகிய தீயோர் தொடர்பா லுண்டாகுந் தீமை கூறப்படுகின்றது.

நன்கு ஆராயாமல் ஒருவரோடு நட்புச் செய்தல் பெருந்தீமை வருதற்குக் காரணமா மென்பதை உபமான முகத்தால் விளக்கினார். சான்ரோரென மதித்துச் சார்தலுக்கு-சாந்தகத்துண்டென்று செப்புத்திறத்தலும், அங்குச் சான்ரூண்மையின்மையைக் காணுதற்குப் பாம்பை அதனகத்துக் காணுதலும் உபமானமெனக் காண்க.

கண்டாற்போன்ற தன்மையையுடையது எனக் கூறுது 'கண்டது உடைத்து' என உபமேயத்தை உபமானமாகவே கூறியது, **காட்சியணி.** ஒருகாரியத்தைச் செய்யத்தொடங்கி இஷ்டத்தை யடையாது அநிஷ்டத்தை யடைதலாகிய **தகுதியின்மையணி**யையும் இச்செய்யுளிலே காண்க. இவ்வாறு இரண்டணிசேர்ந்தது - **சேர்வையணி.** இவ்வுவமையை அச்சவுவமைஎன்றனா, தொல்காப்பியத்துப்பொருளதிகாரத்துப் பேராசிரியர்.

மன் - அசை; மிகவும் என்றும் பொருள்கொள்ளலாம்: **ஒழியிசைப் பொருள** தென்றலுமாம். சான்று ஆண்மை என்ற வினையெச்சத் தொடர்-(நற்குணங்களால்) நிறைந்து அவற்றை ஆளுந்தன்மை என்று பொருள் படும். சாந்து-சந்தநம் என்னும் வடமொழியின் விகாரம்; சிறப்புப்பெயர் பொதுப்பொருள் குறித்தது.

இச்செய்யுளின் பின்னிரண்டடி **இனவெதுகை.** (சு).

கஉ௭. யாஅ ரொருவ ரொருவர்த முள்ளத்தைத்
தேருந் துணைமை யுடையவர்—சாரற்
கனமணி நின்றிமைக்கு நாடகேண் மக்கண்
மனம்வேறு செய்கையும் வேறு.

(இ - ள்.) சாரல்-மலைப்பக்கங்களிலே, கனம் மணி-பெருமை பொருந்திய இரத்தினங்கள், நின்று-நிலைபெற்று, இமைக்கும்-விளங்குகின்ற, நாட-நாட்டையுடைய அரசனே!—கேள் - கேட்பாயாக:—ஒருவர்தம் உள்ளத்தை-வேறொருவருடைய மனத்தை, தேரும் - ஆராய்ந்தறியக்கூடிய, துணைமை-வல்லமையை, உடையவர்-உடையவராகிய, ஒருவர்-ஒருத்தர், யார் - எவருளர்? [ஒருவரு மில்லை]; (ஏனெனில்),—மக்கள் மனம்வேறு செய்கையும் வேறு-மனிதர்களது எண்ணமும் வேறு செய்யுந் தொழிலும் வேறு; (எ-று.)

உலகத்தில் மனிதர்பலர்க்கு மனமுஞ் செயலும் ஒற்றுமைப்பட்டிரா மல் வேறுபட்டிருக்குமாதலால், ஒருவரது உள்ளம் இத்தன்மையதென்று அவர் செய்கையைக்கொண்டு தெளியலாகாது என்பது கருத்து. எனவே, பலநாள் பலவழியால் ஆராய்ந்து ஒருவரை நட்புக்கொள்ளவேண்டுமே யன்றி, ஆராயாது நட்புக்கொள்ளின் தீயரோடும் நட்பு நேர்ந்துவிடு மாத லால், அத்தீவினைக்கு அஞ்சி நடக்கவேண்டு மென்பதாம்.

'மக்கள் மனம்வேறு செய்கையும்வேறு' என்பது முன்னிரண்டடி யைச் சாதித்து நிற்பது-**தொடர்நிலைச் செய்யுட்குறியணி**. "மநஸ்யேகம் வசஸ்யேகம், கர்மண்யேகம் மஹாத்மநாம் - மநஸ்யந்யத் வசஸ்யந்யத், கர்மண்யந்யத் துராத்மநாம்" என்னும் வட நூல் மேற்கோள் கவனிக்கத் தக்கது.

ஆடூஉமுன்னிலை, ஒருவனது தூய்மையைத் தானே புலப்படுத்து மென்பதைத் **தொகைமொழியால்** தெரிவிக்குமென்ப. கேள்-முன்னிலை யசையுமாம். வேறு - ஐம்பால் மூவிடத்துக்கும் பொதுவான குறிப்பு வினைமுற்றுப் பகாப்பதம். (எ)

கஉஅ. உள்ளத்தா னள்ளா துறுநித் தொழிலாய்க்
கள்ளத்தா னட்டார் கழிகேண்மை—தெள்ளிப்
புனற்செதும்பு நின்றலைக்கும் பூங்குன்ற நாட
மனத்துக்கண் மாசாய் விடும்.

(இ - ள்.) புனல்-அருவிநீர், தெள்ளி - தெளிவுடையதாய், செதும்பு-சேற்றை, நின்று அலைக்கும்-இடைவிடாது ஒழித்துநிற்கின்ற, பூ குன்றம் நாட - பூங்குன்ற நாடனே!—உள்ளத்தால் நள்ளாது - மனப்பூர்வமாகச் சினேகஞ் செய்யாமல், உறுதி தொழிலர் ஆய் - (பிறரது நன்மையிற் சிறிதுங் கருத்துவையாது தமது) நன்மையையே நோக்கித்தொழிலையுடைய வராய், கள்ளத்தால் நட்டார் - வஞ்சனையாற் சினேகஞ் செய்தவரது, கழி கேண்மை-மிகுதியான நட்பு, மனத்துக்கண் மாசு ஆய்விடும்-மனத்திற் குற்றமாய் முடியும்; (எ - று.)

ஆதலால், அதற்கு அஞ்சவேண்டு மென்பதாம்.

'மனத்துக்கண் மாசாய்விடும்' என்றது, பின்பு பலதீமையை விளைக் குமென்றபடி. பூங்குன்றநாடு என்பது-பூங்குன்றமென்றவூரைத் தலைமை யாகக்கொண்ட நாடு என்று பொருள்படும்: (பூங்குன்றம் என்ற ஊரவராதலாலேயே ஒரு சங்கப்புலவர் 'பூங்குன்றனார்' என்று பெயர் பெற்றார். பூங்குன்றமென்ற ஊர் மதுரை ஜில்லாவிலுள்ளதாகத் தெரிதலால்), பூங்குன்ற நாட என்ற விளி, பாண்டியவரசனைக் குறிக்கு மென்னலாம். இத்தொடர் உகஉ-ஆம் பாடலிலும் வந்துள்ளது. பூங்குன்றம்-அழகிய குன்றத்தைக் கொண்டதெனப் பண்புத்தொகையன் மொழி. பூங்குன்றம் என்பது ஒரூருக்குப் பெயரென்று கொள்ளாதார், பூங்குன்றநாட - அழகிய மலையையுடைய நாட்டையுடையவனே! என்பர். செதும்பு - சேறு. செதும்புபுனல் - சிலவாக ஒடும் நீருமாம். நீர் அலைத் தல்போல, கள்ளநட்புடையார் கேண்மை, நல்லோர் மனத்தை வருத்து மென்பது தொகைமொழி.

'கழிகிழமை' என்றும் பாடம். (அ)

கஉகூ. ஒக்கிய வொள்வாடன் ஞெஞ்ஞர்கைப் பட்டக்கா
ஆக்க மழிப்பதூஉ மெய்யாகு—மாக்க
மிருமையுஞ் சென்று சுடுதலா னல்ல
கருமமே கல்லார்கட் டூர்வு.

(இ - ள்.) ஒக்கிய - (போரிற் பகைவரைக் கொல்லுதற்பொருட்டு ஒருவன்) உயரவெடுத்த, ஒள் வாள் - பிரகாசமான வாளாயுதமானது, தன் ஒன்னர் கை பட்டக்கால்-அவனது பகைவரது கையில் அகப்பட்டுவிட்டால், ஊக்கம் அழிப்பதூஉம் - (பகைவரை அழியாமையோடு தன்) வலிமையை நாசப்படுத்துவதும், மெய் ஆகும்-(இம்மையில்) உண்மையாம்; (அதுபோலவே),—ஆக்கம் - (மூடர்க்குத் தாம்செய்யும்) உபகாரம், இருமையும் சென்று சுடுதலால் - (இம்மைமறுமை யென்கிற) இரண்டிடத்துந் தொடர்ந்து (தம்மை) வருத்துவதனால், கல்லார்கண் தீர்வு-அறிவில்லாதவரிடத்தினின்றும் நீங்குதல், நல்ல கருமமே - நல்ல காரியமேயாம்; (எ - று.)

பகைவர் கையில் தவறி அகப்பட்ட தமதுவாள்லினால் உண்டாகுந் தீமையினும், அறிவில்லார்க்குத் தாம்செய்த உபகாரத்தாலுண்டாகுந் தீமைக்கு மிகவும் அஞ்சவேண்டுமென்பது, கருத்து: ஏனெனில், பகைவர் கையிற்பட்ட வாள் இம்மையில் தம் உயிர்வாழ்க்கையை யொழித்தாலும் மறுமையில் வீரசுவர்க்கவின்பத்துக்குக் காரணமாம்: அறிவிலார்க்குச் செய்த உபகாரமோ செய்தவர்க்கு இம்மையிற் பழியையும் மறுமையிற் பாவத்தையும் தந்து அவரை இருமையுங்கெடுக்கு மாதலி னென்க. **வேற்றுமையணியை** உட்கொண்டு வந்த **எடுத்துக்காட்டுவமையணி.**

ஒக்கிய என்னும் இறந்தகாலப் பெயரெச்சத்தில், ஒங்கு என்பதன் பிறவினை யாகிய ஒக்கு - பகுதி; மெலி வலியானது - பிறவினைக்குறி. ஒன்னர் - ஒன்னூர் என்பதன் மரூஉ; சேராதவ ரென்று பொருள்.

'ஆக்க மிருமையுஞ் சென்று சிதைத்தலால்' என்று பாடங்கொண்டு, தம்முடைய நன்மையை இம்மை மறுமையென்ற இரண்டிடத்துங் கெடுத்தலால் என்று பொருளுரைத்தலு மொன்று. (கூ)

கஙO. மனைப்பாசங் கைவிடாய் மக்கட்கென் றேங்கி
யெனைத்தூழி வாழ்தியோ நெஞ்சே—யெனைத்துஞ்
சிறுவரையே யாயினுஞ் செய்தநன் றல்லா
லுறுபயனே வில்லை யுயிர்க்கு.

(இ - ள்.) நெஞ்சே - மனமே!—மனை பாசம் கைவிடாய் : மனையாளிடத்து உள்ள அன்பை விடாமல், மக்கட்கு என்று ஏங்கி - பிள்ளைகளுக்காகவும் இரங்கி, எனைத்தூழி வாழ்தியோ - எத்தனைகாலம் வாழ்வாயோ? எனைத்தும் சிறுவரையே ஆயினும் - எவ்வளவு சிறிதாயினும், செய்த - (ஒருவன்) செய்துள்ள, நன்று அல்லால் - நற்காரியமேயல்லாமல், உயிர்க்கு - (அவனது) உயிர்க்கு, உறு பயனே-அடையும்படியான நற்பயனே, இல்லை - வேறில்லை; (எ - று.)

உயிர்க்குஉறுதியாகிய நல்வினையைத் தேடாது ஸம்ஸாரபாசபந்தத்திலகப்பட்டு உழன்று வீண்காலங்கழித்தலாலாகுந் தீவினைக்கு அஞ்சவேண்டுமென்பது, இதனுற் கூறப்பட்டது.

'எனைத்தூழி வாழ்தியோ' என்றதனால், யாக்கை நிலையாமையைக் குறிப்பித்தவாறு. முதலடியினால், பெண்டு பிள்ளைகள் மறுமைக்கு உதவாமையை உணர்த்தினார். பாசம் - பிசாசுமாம்.

இச்செய்யுளின் பின்னிரண்டடியை, கீழ் கஉ0-ஆந் செய்யுளின் முன்னிரண்டடியோடு ஒருசார் ஒப்பிடுக.

இச்செய்யுளில், ஸாந்தரஸம் தோன்றுமாறு காண்க.

ஸம்ஸாரத்தினின்றுஅப்பாற்செல்லவொட்டாது கயிறுபோலக் கட்டுப்படுத்தலால், அன்பை 'பாசம்' என்றே கூறினார்: உவமையாகு பெயராகிய காரணக்குறி. கைவிடாய்-முற்றெச்சம்; கை-**உபசர்க்கம்**: தனக்கென்று ஒரு பொருளில்லாமல் வினையையடுத்து வந்தது. சிறுவரை - சிறிய அளவு. (கo)

இல்லறவியல் முற்றிற்று.

அறத்துப்பால் முற்றுப்பெற்றது.

இரண்டாவது
பொருட்பால்

அஃதாவது - இல்லறத்தின் வழிப்படுவனவாகிய பொருளின்பங்களுள் பொருளே உணர்த்தும் பாகம். இரண்டாம் வேற்றுமையுருபும் பயனுமுடன் தொக்கதொகை. பொருளின்பங்களிற் பற்றுவிடுதலே துறவாதலால், இவை-துறவறத்தின் வழிப்படுவனவல்ல. பொருளாவது - தனது அனுபவத்தால் இம்மையையும் தானம் முதலியவற்றால் மறுமையையுந் தருவதாகித் தரும வழியிற் சேர்க்கப்பட்ட பொன் மணி நெல் முதலியன. உலகத்திற்கு உயிர்போலச்சிறந்த அரசனது நீதி பொருளுக்குத் துணைக்காரண மாதலால், அவ்வரசநீதி கூறவே பொருளின் தன்மை கூறியதா மெனக்கொண்டு, இப்பொருட்பா லிருபத்து நான்கதிகாரங்களாலும் அதனைக் கூறுகின்றார்.

இப்பொருட்பால்-பதினைங்காம் அதிகாரம் முதல் எழு அதிகாரங்கள் அரசியலென்றும், அதன்பின் நான்கு அதிகாரங்கள் நட்பியலென்றும், அதன் பின் மூன்று அதிகாரங்கள் இன்பவியலென்றும், அதன்பின் நான்கு அதிகாரங்கள் துன்பவியலென்றும், அதன்பின் ஓர் அதிகாரம் பொதுவியலென்றும், அதன்பின் நான்கு அதிகாரங்கள் பகையியலென்றும், அதன்பின் ஓர் அதிகாரம் பன்னெறியியலென்றும் ஏழு உட்பிரிவுகளையுடையதாய் அமைக்கப்பட்டது; "பொருளியல் வகை யேழ்புலப் படக்கிளப்பின், அரசியலேழதிகாரமாகு, நட்பியல் நான்கதிகாரமின்ப, மூன்றே துன்பவியலதிகார, நான்கே ஒன்றே பொதுவியல் பகையியல், கூறதிகார நான்கே பன்னெறி, கூறதிகார மொன்றே" என்ற பழைய உரைச்சூத்திரத்தை உணர்க. (இதனால், ஓரியல்தானே ஓரதிகாரமாக வருதலுமுண்டு என்பதும் போதரும்.) அவற்றுள்,

முதலாவது
அரசியல்.

அஃதாவது-அரசனது தன்மையைக் கூறும் பாகம் என்றவாறு. அரசனீகியைக் கூறும்பொழுது முதலில் அரசனது தன்மையைக் கூறியே பின் வேறு கூறவேண்டியிருத்தலால், அதனைத்தெரிவிக்கும் அரசியல் முதலில் வைக்கப் பட்டது: அரசு இயல்-இராசதருமம்; அஃதாவது-காவலை நடாத்தும் முறைமை.

கச - ஆம் அதிகாரம்—கல்வி.

அஃதாவது-அவ்வரசன் தான் கற்பதற்கு உரிய நூல்களைக் கற்ற லைப்பற்றிச் சொல்வது. அவை - அற நூலும், நீதி நூலும், தேர் யானை குதிரை படைக்கலம் என்னப்பட்ட இவற்றின் நூல்களும் முதலியன. பொருள் பெறுதற்கு முதற்காரணமாயும், பெற்ற பொருளைக் காத்தற்கும் பிறர்க்குச் செலவழித்துத் தானும் அனுபவித்தற்குந் துணைக்காரணமா யும் இருத்தல் பற்றி, கல்வி முதலில் வைக்கப்பட்டது. அரசன் அறிவு டையவனையிருந்தால் தனது உயிர்க்கேயன்றி உலகத்து உயிர்கட்கும் பயன் படுதல் நோக்கி இஃது அரசியலுள் வைக்கப்பட்டதாயினும், யாவர்க்கும் உறுதியைத் தருஞ் சிறப்பை யுடைமையாற் பொதுப்படக் கூறப்படுகின் றது. 'கல்வியாவது-தத்தங் குலத்திற்கேற்ப ஓதுதலும், பொருள்களை விளங்கக் கேட்டறிதலும், பின்பு அவற்றைத் தான் வருத்துக்கூற வல்லனா தலுமாம்' என்பது, பழையவுரை. கல்வி - தொழிற்பெயர்; வி - விகுதி.

கஉக. குஞ்சி யழகுங் கொடுந்தானைக் கோட்டழகு
மஞ்ச ளழகு மழகல்ல—நெஞ்சத்து
நல்லம்யா மென்னு நடுவு நிலைமையாற்
கல்வி யழகே யழகு.

(இ - ள்.) குஞ்சி அழகும்-மயிர்முடியின் அழகும், கொடுந்தானை கோடு அழகும் - மடிப்புள்ள ஆடையினது கரையின் அழகும், மஞ்சள் அழகும் - கலவைப் பூச்சினது அழகும், அழகுஅல்ல-அழகாகமாட்டா; நெஞ்சத்து நல்லம் யாம் என்னும் நடுவுநிலைமையால் - மனத்தில் யாம் நற்குணமுடையோமென்று காண்கின்ற கோணுதலில்லாத தன்மையால், கல்வி அழகே அழகு - படிப்பினாலுண்டாகும் அழகே அழகாம்; (எ-று.)

குஞ்சியழகு முதலியன தம்மைப்பார்க்கும் பிறர்க்கேயன்றித் தமக்கு இன்பந்தருவன அல்ல, கல்வி யொன்றே தம்மனத்துக்கு இன்பந்தரு வது என்பதாம். இனி, பின்னிரண்டடிக்கு மனத்தில் நல்லவர்களா யிருக்கக்கடவோம் யாமென்று எண்ணுகிற பக்ஷபாதமில்லாத தன்மை யோடுகூடிய கல்வியினது அழகே அழகென்று உரைப்பாரு முளர்.

ஆடவர்க்கு உரிய குஞ்சியை முதலிலும், மகளிர்க்கு உரிய மஞ்சளை இறுதியிலும், இருவர்க்கும் பொதுவாகிய தானையை இடையிலும் வைத் துக்கூறியதாகக்கொண்டு இப்பாட்டை ஆண்கல்விக்கும் பெண்கல்விக் கும் பொது வென்பர் சிலர்.

"மயிர்வனப்புங் கண்கவரு மார்பின் வனப்பும், உகிர்வனப்புங் காதின் வனப்புஞ்—செயிர்தீர்ந்த, பல்லின் வனப்பும் வனப்பல்ல நூற்கியைந்த, சொல்லின் வனப்பே வனப்பு" என்னுஞ் **சிறுபஞ்சமூலச்**செய்யுளையும், "இடைவனப்புந் தோள்வனப்பு மீடின் வனப்பு, நடைவனப்பு நாணின் வனப்பும்—புடைசால், கழுத்தின் வனப்பும் வனப்பல்ல வெண்ணை, டெழுத்தின் வனப்பே வனப்பு" என்னும் **ஏலாதிச்** செய்யுளையும் இங்கு ஒப்பு நோக்குக. "கேயூராணி ந பூஷயந்தி புருஷம் ஹாரா ந சந்த்ரோஜ் வலாஃ, நஸ்நாநம் நவிலேபநம் ந குஸுமம் நாலங்க்ருதா மூர்த்தஜாஃ:, வாண் யேகா ஸமலங்கரோதி புருஷம் யா ஸம்ஸ்க்ருதா சார்யதே, க்ஷீயந்தே **கலு பூஷணாநி** ஸததம் வாகபூஷணம் பூஷணம்," "வித்தையை பூஷணம் புன்ஸாம்" என்னும் வடநூல் மேற்கோள்கள் இங்கு ஒப்பிடத்தக்கன.

குஞ்சி-ஆண்மயிர்; பங்கி, குடுமி, சிகை என்பனவும் இவ்வாறே: (அளகம், ஓதி, கூந்தல், ஐம்பால், கோதை என்பன - பெண்மயிரின் பெயராம்.) கொடுமை-வளைவு; கொடுங்கோல், கொடுவாள், கொடுமரம், கொடும்புறம் என்றவிடங்களிலும் காண்க; இங்கே மடிப்புக்குக் கொள்ளப்பட்டது. மஞ்சள் - மற்றும் பலவகைப்பட்ட மேற்பூச்சுக்களுக்கும், கொடுந்தானைக்கோடு - ஆபரணங்களுக்கும், குஞ்சி-பிறவுறுப்புக்களுக்கும் **உபலக்ஷணம்.** நல்லம் - தன்மைப் பன்மைக் குறிப்புமுற்று; அம்-விகுதி. ஏ - பிரிநிலை. (க)

கஙஉ. இம்மை பயக்குமா லீயக் குறைவின்றாற்
நம்மை விளக்குமாற் றுப்புரவராக் கேடின்றாற்
லெம்மை யுலகத்தும் யாங்காணைங் கல்விபோன்
மம்ம ரறுக்கு மருந்து.

(இ - ள்.) (கல்வியானது),—இம்மை-இப்பிறப்பின் பயனெகிய தத்துவஞானத்தை, பயக்கும் - (தன்னையுடையானுக்குத்) தரும்; ஈய-(பிறர்க்குக்) கொடுக்க, [போதித்தலால் என்றபடி], குறைவு இன்று - (செல்வம் போலக்) குறைவுபடாது [மேன்மேல் வளரும்]; தம்மை விளக்கும் - தம்மை (ப் புகழால் நெடுந்தூரமட்டும்) விளங்கச்செய்யும்; தாம் உளர் ஆகேடு இன்று - தாங்கள் உயிருள்ளவராக வாழுமளவும் அழிதலில்லை; ஆல் - ஆதலால்,—யாம்—, கல்விபோல் மம்மர் அறுக்கும் மருந்து - கல்விபோல அறியாமையாகிய நோயையொழிக்கின்ற தொரு மருந்தை, எம்மை உலகத்தும் - எத்தன்மையான உலகத்திலும், காணேம் - காண்கின்றே மில்லை; (எ - று.)—மம்மர் - மயக்கம்.

கல்விப்பொருளானது செல்வப்பொருள்போலவே இம்மையைப் பயந்தும் ஈயக்குறைவதில்லை; அன்றியும், தம்மை விளக்குவதாயிருந்தும் தா முள்ளபோது கெடுவதில்லை; அதுவன்றியும், செல்வமோ அவிவேகத்தைவளர்க்கின்றது; இக்கல்வியோ அதனை அடியோடு ஒழிக்கின்றது எனச்செல்வத்திற்கும் கல்விக்கும் வேற்றுமைதோன்றக் கூறியுள்ளது காண்க.

கல்வியை மருந்தாகக் கூறியதற்கு ஏற்ப, மம்மரை நோயாகக்கூறுதலால், இஃது - **ஏகதேசவுருவகவணி**; 'கல்விபோல்' என **உவமையணி**யுங் கலந்துவந்தது.

உடற்பிணிதீர்க்கும் மருந்தினும் உயிர்ப்பிணிதீர்க்குங் கல்வி பல வகையாலுஞ் சிறந்ததென்பது; இதனாற் கூறப்பட்டது.

இச்செய்யுள், தொல்காப்பியப் பொருளதிகார நச்சினார்க்கினியருரையில் **ஓதற்சிறப்பு**க்கு எடுத்துக்காட்டப்பட்டுள்ளது. "அறம்பொருளின்பமும் வீடும் பயக்கும், புறங்கடை நல்லிசையுநாட்டு—முறுங்கவலொன், றுற்றுழியும் கைகொடுக்குங் கல்வியி னூங்கில்லை, சிற்றுயிர்க்குற்ற துணை" எனப் **பின்னோர்** கூறியதுங் காண்க.

இம்மை-பயனுக்கு ஆகுபெயர்; மை விகுதி-இம்மை யென்பதில் இடப்பொருளையும், எம்மை யென்பதில் தன்மைப்பொருளையும் உணர்த்திற்று. தேவலோகத்து மருந்தாகிய அமிருதமும் மம்மரறுக்கா தாதலால் அதனினுஞ்சிறந்ததென்பது தோன்ற, 'எம்மை யுலகத்தும் யாங்காணேங் கல்விபோன் மம்மரறுக்கு மருந்து' எனப்பட்டது. இம்மை - செல்வம் எனவுமாம். முதலிலுள்ள மூன்று 'ஆல்' - அசை; நாலாவது 'ஆல்' - ஆதலால் என்பதன் விகாரம். (உ)

கஉ. களர்நிலத் துப்பிறந்த வுப்பினைச் சான்றோர்
விளைநிலத்து நெல்லின் விழுமிதாக் கொள்வர்
கடைநிலத்தோ ராயினுங் கற்றறிந் தோரைத்
தலைநிலத்து வைக்கப் படும்.

(இ - ள்.) களர் நிலத்து பிறந்த - (இழிவாகிய) உவர்நிலத்தில் உண்டான், உப்பினை - உப்பை, சான்றோர் - பெரியோர், விளை நிலத்து நெல்லின் விழுமிது ஆ-விளைகின்ற (நல்ல) நிலத்தில் தோன்றிய நெல்லினுஞ் சிறந்ததாக, கொள்வர் - கொள்வார்கள்; (அதுபோலவே), கடைநிலத்தோர் ஆயினும் - இழிவானசாதியிற் பிறந்தவர்களானாலும், கற்று அறிந்தோரை - (நூல்களைக்) கற்று (அவற்றின் பொருளை) அறிந்தவர்களை, தலை நிலத்து வைக்கப்படும் - மேன்மையான இடத்தில் வைத்துக் கௌரவிக்கவேண்டும்; (எ - று.)

பிறப்புப்பற்றி உயர்வு தாழ்வு பாராட்டாமற் கல்விச்சிறப்பால் நன்கு மதிக்கவேண்டு மென்பது, கருத்து. "நாற்பாற் குலத்திற் மேற்பாலொருவன், கற்றிலனாயிற் கீழிருப்பவனே," "எக்குடிப் பிறப்பினும் யாவரே யாயினும், அக்குடியிற் கற்றோரை வருக வென்பார்," "ஆக்கு மறிவானலது பிறப்பினன், மீக்கொ ளுயர்விழிவுவேண்டற்க," "மெய்த்த திருவள்ளுவனார் வென்றுயாந்தார் கல்விநலந், துய்த்த சங்கத்தார் தாழ்ந்தார் சோமேசா - வுய்த்துரையின், மேற் பிறந்தா ராயினுங் கல்லாதார் கீழ்ப்பிறந்துங், கற்றோனைத்திலர் பாடு," "வேற்றுமை தெரிந்த நாற்பாலுள்ளுங், கீழ்ப்பாலொருவன் கற்பின், மேற்பாலொருவனு மவன்கட் படுமே" என்பன காண்க. உப்பின்சுவை உணவுக்கு இன்றியமையாதது போலக் கல்வியறிவு மக்கட்கு இன்றியமையாததென்பது தோன்ற, உப்பைத் திருவள்ளுவநாயனார் எடுத்துக்கூறினார். உப்பு விழுமிதாக் கொள்ளப்படுதலை, "தேண்ணும் ரஸாநாம் லவணம் **ப்ரதா**நம்" என்னும் **வடநூல் மேற்கோ**ளைக்கொண்டும், "உப்பில்லாப் பண்டம் குப்பையிலே" என்னும் **பழமொழி**யைக் கொண்டும் உணர்க, இனி, நெல்லின் - நெல்லைப்போல் எனவும் உரைப்பர்.

விழுமிது-விழுமமென்னும் உரிச்சொல்லினடியாகப் பிறந்த ஒன்றன் பாற் குறிப்புவினையாலணையும் பெயர். வைக்கப்படும்-ஒருவகை வியங் கோள் வினைமுற்று: செய்வினை: செயப்பாட்டு வினையன்று. அன்றி, வைக்க என்பதைச் செயவெனச்சம் தொழிற்பெயர்த்தன்மைப்பட்டு வந்த தாகக்கொண்டு, வைக்க - வைத்தல், படும் - தகும் என்றும் உரைக்கலாம்.

இச்செய்யுளில் **வருக்கவெதுகையோடு உயிரெதுகை;** அதாவது - இரண்டாமெழுத்து ஒன்றுதாயினும் இரண்டாமெழுத்தின்மே லேறிய உயிர் ஒன்றி நிற்பது. (கூ)

கஙூச. வைப்புழிக் கோட்படா வாய்த்தியிற் கேடில்லை
மிக்க சிறப்பி னரசர் செறின்வவ்வா
ரெச்ச மெனவொருவன் மக்கட்குச் செய்வன
விச்சைமற் றல்ல பிற.

(இ - ள்.) (விச்சை) - கல்விகள், வைப்பு உழி-வைக்கப்பட்ட இடத்தில், கோள்படா - (பிறராற்) கவரப்படமாட்டா; வாய்த்து - (கொள்ள வர்தக்கவராகக்) கிடைத்து, ஈயின் - (அவர்க்குக்) கொடுத்தால், கேடு இல்லை - குறைதலில்லை; மிக்க சிறப்பின் - மிகுதியான சிறப்பினாலே, அரசர் - அரசர்கள், செறின் - (பொறுமைகாரணமாகக்) கோபித்தாலும், வவ்வார் - அபகரிக்கமாட்டார்கள்; (ஆதலால்), ஒருவன்—, எச்சம் என - ஆக்கமென்று, மக்கட்கு - (தனது) பிள்ளைகளுக்கு, செய்வன - சேர்த்து வைக்கத்தக்கவை, விச்சை - கல்விப்பொருள்களேயாம்; பிற அல்ல - மற்றைச் செல்வப் பொருள்களல்ல; (எ - று.)

செல்வப் பொருள்கள் கள்ளராலும் ஞாதியர் முதலியோராலுங் கவர்ந்து கொள்ளப்படும்: பிறர்க்குக்கொடுத்தாற் செலவழிந்துபோம்: கொடுங்கோன் மன்னராற்கொள்ளை கொள்ளப்படும்; கல்விப்பொருளுக்கு இத்தன்மையான அபாயங்கள் ஒன்றும் இல்லை; ஆதலால், செல்வப் பொருளினுங் கல்விப்பொருளே சிறந்த தென்பது கருத்து. **வேற்றுமையணி.**

"கேடில் விழுச்செல்வங் கல்வி யொருவற்கு, மாடல்ல மற்றையவை" "தந்தை மகற்காற்று நன்றி யவையத்து, முந்தி யிருப்பச் செயல்" என்ற **திருக்குறள்**களையும், 'அழிவின்மையாவது - தாயத்தார் கள்வர் வலியர் அரசர் என்றிவராற் கொள்ளப்படாமையும், வழிபட்டார்க்குக் கொடுத்து ழிக் குறையாமையுமாம்' என்ற **பரிமேலழகருரை**யையும் இங்கே அறிக.

செல்வத்தினுங் கல்வி சிறந்ததென்பதற்குக் காரணங்காட்டி, அதனை மக்கட்குச் செய்யவேண்டுவது கடமையென்பது, இதனாற் கூறப்பட்டது.

வைப்பு உழி - வைத்தலையுடைய இடம். கோள் - கொள்ளுதல்; முதனிலை திரிந்த் தொழிற்பெயர். எச்சம் - (சம்பாத்தியத்தில்) மிச்சப் பட்டு நிற்பது; ஆஸ்தி. எஞ்சு - பகுதி, அம் - கருத்தாப்பொருள்விகுதி, வலித்தல் - விகாரம். விச்சை - வித்யா என்னும் வடமொழியின் சிதைவு. மற்று - அசை; வினைமாற்றுமாம்; மற்று, பிற - ஒருபொருட்பன்மொழி யெனவும் கொள்ளலாம்.

"நசோரஹார்யம் நசராஜஹார்யம், விதேயாநேநசபாரகாரி | ஏதத் தநம் ஸர்வதநாத் ப்ரதாநம், வித்யாதநம் யத் புருஷா வஹந்தி" என்ற சுலோகம் இங்கு ஒப்பிடத்தக்கது.

இந்நாலடிநாணூற்றில், ஒவ்வொரு செய்யுளும் ஒவ்வொரு புலவரால் தனித்தனி பாடப்பட்டதாதலால், இச்செய்யுளில் 'ஈயிற்கேடில்லை' என்றது, கீழ் "ஈயக்குறைவின்று" என்றதனோடு **கூறியதுகூற** லென்னுங் குற்றமாகாதென அறிக; மற்றும் இங்ஙனம் வருவனவற்றிற்கெல்லாம் இஃது ஒக்கும். இச்செய்யுளில் **இனவெதுகை.** (சு)

கஉ. கல்வி கரையில கற்பவர் நாள்சில
மெல்ல நினைக்கிற் பிணிபல—தெள்ளிதி
னாராய்ந் தமைவுடைய கற்பவே நீரொழியப்
பாலுண் குருகிற் றெரிந்து.

(இ - ள்.) கல்வி கரை இல - வித்தைகளாகிய கடல்களோ கரையை யுடையனவல்ல; கற்பவர் நாள் சில - (அவற்றைப்) படிப்பவரது வாழ் நாட்களோ சிலவாம்; மெல்ல நினைக்கின் பிணி பல-விசாரிக்கின் ஆலோசித்துப் பார்த்தால் (அவ்வாழ்நாள் சிலவற்றுள்ளும்) நோய்களோ பல உள்ளன; (ஆதலால்), நீர் ஒழிய பால் உண் குருகின்-நீர் ஒழியப் [பிரித்து விட்டுப்] பாலைமாத்திரமே உண்கின்ற அன்னப்பறவைபோல, தெரிந்து-(நூல்களின் தன்மைகளைப் பகுத்து) அறிந்து, தெள்ளிதின் ஆராய்ந்து-தெளிவாக ஆராய்ச்சிசெய்து, அமைவு உடைய - சாரமாகவுள்ள ஞான நூல்களையே, கற்ப - (விவேகிகள்) படிப்பார்கள்; (எ - று.)

கல்வி கடல்போற் பரந்தும், ஆயுள்நாள் மிகக்குறுகியும், அவ்வாழ் நாளிலும் கற்கவொட்டாது தடைசெய்யும் பலவகையாகிய பிணிகள் மிக்கும் இருத்தலால், பெறுதற்கரிய மனிதசனனமெடுத்தோர் ஸாரமானவற்றைப்படித்து உய்யக்கடவரென்பதாம். ("அநந்தபாரம் பஹுவேதிதவ்யம், அல்பஸ்ச காலோபஹவஸ்சவிக்நா-யத்ஸாரபூதம் ததுபாதாதீத, ஹம்ஸோயதா க்ஷீரமிவாம்பு மிச்ரம்" என்ற வடநூல் மேற்கோளும் இப் பொருளுடையதே.)

'அமைவுடைய' என்றது, **வேதாந்தநூல்களை.** பாலையும் நீரையுங் கலந்துவைத்தால் அன்னப்பறவை நீரைப்பிரித்துவிட்டுப் பாலை உண்ணு மென்பது நூற்றுணிவு; "பாணிறக்குருகினுய்ந்து" என்றார் சிந்தாமணியாரும். இதுபற்றியே, அன்னம் தலைமாணாக்கர்க்கு உவமை கூறப்படும். கரை - எல்லை, முடிவு.

இச்செய்யளின் பின்னிரண்டடிகளில் **இனவெதுகையோடு வருக்க வெதுகை.** (கு)

கஉ. தோணி யியக்குவான் றொல்லை வருணத்துக்
காணிற் கடைப்பட்டா னென்றிகழார்—காணு
யவன்றுணையா வாறுபோ யற்றேநூல் கற்ற
மகன்றுணையா நல்ல கொளல்.

(இ-ள்.) (கீழ்ப்பட்டசாதியிற் பிறந்தவனுயினும்), நூல் கற்ற மகன்-சாஸ்திரங்களைப்படித்த மனிதனை, துணை ஆ - (ஒருவன்) துணையாகக் கொண்டு, நல்ல - சிறந்த நூற்பொருள்களை, கொளல்- அறிந்துகொள்ளுதலானது,—தோணி இயக்குவான் - மரக்கலத்தைச் " செலுத்துபவன், தொல்லை வருணத்து- பழமையான சாதிகளுள், கடைப்பட்டான் என்று-இழிவான சாதியிற்பிறந்தவனென்று, காணின் - (யாவரும்) அறிந்திருந்தும், இகழார் - (அவனை) இகழ்ச்சிசெய்யாதவர்களாய், அவன் துணை ஆ-அவனைத் துணையாகக்கொண்டு, ஆறுபோய் அற்றே-ஆற்றுவெள்ளத்தைக் கடந்துபோனற் போன்றதாம்; (எ - று.)

தாழ்ந்தசாதியனுயினும் நீகாமனைக்கொண்டே வெள்ளத்தைக் கடப்பது இன்றியமையாதிருத்தல்போல, தாழ்ந்தசாதியனுயினுங் கற்ற வனைக்கொண்டே அவசியமானபொழுது நூல்களைக் கறகவேண்டு மென் பதாம். **உவமையணி**. பிறப்பினுலுண்டாகும் பெருமையினும் கல்வியினு லுண்டாகும் பெருமை சிறந்ததென்றவாறு. "வேற்றுமைதெரிந்த நாற் பாலுள்ளுங், கீழ்ப்பாலொருவன் கற்பின், மேற்பாலொருவனு மவன்கட் படுமே" என்ருர் **பிறரும்**. 'கற்றவன்' என்னுது 'கற்றமகன்' என்றது, கல்லாதவன் மனிதருள் வைக்கப்படாது விலங்குகளோடு ஒப்ப மதிக்கப் படுவ னென்பது விளங்குதற்கு.

தோணி - த்ரோணீ என்னும் வடமொழியின் சிதைவு. சாதிவிகற் பம் திருஷ்டிகாலத்தே ஏற்பட்டதன்றி இடையிலே வந்ததன்றென்பது தோன்ற, 'தொல்லைவருணம்' எனப்பட்டது. காணுய் - முன்னிலை யசை; நீ அறி என்றுமாம். போய் - போனு லென்னும் எச்சத்தின் திரிபு; இனி, போயற்று என்பதை-போயதற்று என்பதன் விகாரமாகவுங் கொள்ளலாம்.

இச்செய்யுளின் பின்னிரண்டடிகளில் **உயிரெதுகையோடு மூன்றுமெ ழுத்தொன்றெதுகை.** மூன்றுமெழுத்தொன்றெதுகையாவது - இரண்டா மெழுத்து ஒன்றுது நிற்க மூன்றுமெழுத்து ஒன்றிநிற்பது. (சு)

கஉ எ. தவலருந் தொல்கேள்வித் தன்மை யுடையா
ரிகலில ரெஃகுடையார் தம்முட் குழீஇ இ-
நகலி னினிதாயிற் காண்பா மகல்வானத்
தும்ப ருறைவார் பதி.

(இ - ள்.) தவல் அரு-தவறுதலில்லாத, தொல் - பழமையான [தொன்றுதொட்டுப் பரம்பரையாக வருகின்ற], கேள்வி - நூற்கேள்வி களினது, தன்மை - தன்மையை, உடையார் - உடையவர்களும், இகல் லிலர் - பகைமைக் குணமில்லாதவர்களும், எஃகு உடையார் தம்முள் - டூக்கிக்கூர்மை யுடைய பர்களும் ஆகிய கற்றவர்களுடைய குழாத்தி ளுள்ளே, குழீஇ - கூடி யிருந்து, நகலின் - மகிழ்தலைக்காட்டிலும், னினிது ஆயின் - இன்பந்தருவதாமாஞல், அகல் வானத்து உம்பர் உறை வோர் பதி-பரந்த விண்ணுலகத்தில் வாசஞ் செய்கின்ற தேவர்களது நகர மாகிய அமராவதியை, காண்பாம் - (யாம்) காணக்கடவோம்; (எ - று.)

கற்றோர் நேசத்தைப்போலச் சுவர்க்காநுபவம் தத்துவஞானத்துக் கும் முத்திபெறுவதற்கும் வழுவாகாததனுல், கற்றவர்களோடு சினேகித்து அநுபவிக்கும் ஆனந்தம் சுவர்க்காநுபவத்தா லுண்டாகும் ஆனந்தத்தி

னுஞ் சிறந்ததென்பது, கருத்து. அறிவுடையோருடன் கூடி மகிழ்தலினும் இனிய தன்மைதலின் தேவர்பதியை யாம் காணக்கடவேமல்லேம் எனக் கற்றறிந்தோரது கூட்டுறவின் அருமைபெருமைகளைத் தெரிவித்த படி. தேவர்கட்கும் வித்துவான்கட்கும் வடமொழியில் **'விபுதர்'** என்ற பெயரும், தென்மொழியில் 'புலவர்' என்ற பெயரும் உள்ளது, இங்குக் காணத்தக்கது.

ஒவ்வொருவனும் பெரும்பாலும் தன்னைப்பற்றித்தான் பன்மையாகவே எண்ணுதல் இயல்பாதலால், 'காண்பாம்' எனப்பட்டது; தனித்தன்மைப் பன்மை. தவல் - தொழிற்பெயர்; தபு என்பதன் மரூஉவாகிய தவு- பகுதி. **கேள்வி**யாவது - கேட்கப்படும் நூற்பொருள்களைக் கற்றறிந்தார் கூறக்கேட்டல்; இது, கற்றவர்க்குக் கல்வியறிவைவலியுறுத்துதலாலும், கல்லாதவர்க்கும் அவ்வறிவை உண்டாக்குதலாலும் சிறந்ததா மென அறிக. கேள்வி-தொழிற்பெயர். எஃகு - ஆயுதம்: கூர்மை; இங்கே, புத்திநுட்பம். எஃகு உடையார் - புத்திக்கூர்மையை யுடையவர், தம்முள் குழீஇ - தமக்குள் ஒன்றியிருந்து, நகலின் - மகிழ்தலைக் காட்டிலும் எனினுமாம். குழுமி அல்லது குழுவி என்பது, குழீ இ எனவிகாரப்பட்டு அளபெடுத்தது; இது, சொல்லிசையளபெடையின் பாற்படும். உம்பர்- மேலிடம்; இங்கே, சுவர்க்கம். அகல் வானம் - விசும்பு.

தொல்காப்பியப் பொருளதிகார (தொல்-பொ-259) வுரையில், இப் பாட்டு, அறிவுபொருளாக உவகை பிறந்ததற்கு உதாரணங் காட்டப் பட்டுள்ளது. (எ)

கஉஅ. கனைகடற் றண்சேர்ப்ப கற்றறிந்தார் கேண்மை
நுனியிற் கரும்புதின் றற்றே—நுனிநீக்கித்
தூரிற்றின் றன்ன தகைத்தரோ பண்பிலா
ஈர மிலாளர் தொடர்பு.

(இ - ள்.) கனை-ஒலிக்கின்ற, கடல்-கடலினது, தண்-குளிர்ச்சியான, சேர்ப்ப - துறையையுடையவனே!—கற்று - (நல்ல நூல்களைப்) படித்து, அறிந்தார் - (அவற்றின் பொருள்களை) அறிந்தவர்களது, கேண்மை- சினேகமானது, நுனியின் கரும்பு தின்று அற்று - நுனியிலிருந்து (அடிவரையிற்) கரும்பைத் தின்றாற்போன்றது [வரவர இனிமைமிகும்]; பண்பு இலா - (அக் கற்றறிவாகிய) குணமில்லாத, ஈரம் இலாளர் - அன்பில்லாதவர்களுடைய, தொடர்பு-சினேகமோ,-நுனி நீக்கி-(அக்கரும்பை) நுனியிலிருந்து தின்னுதலை ஒழித்து, தூரின் தின்று அன்ன - அடியிலிருந்து தின்றாற் போன்ற, தகைத்து - தன்மையையுடையது [வரவர இனிமைகுறையும்]; (எ-று.)

பயனுவமையணி. இதனை, கஉசு, கசுசு - ஆங் கவிகளோடு ஒப்பிடுக. "கருத்துணர்ந்து கற்றறிந்தார் கேண்மை யெஞ்ஞான்றுங், குருத்திற் கரும்புதின் றற்றே - குருத்திற், கெதிர்செலத் தின்றன்ன தகைத்தரோ வென்றும், மதுரமிலாளர் தொடர்பு" என மேல் நட்பாராய்தலில் வருவதும் காண்க. அரோ - ஈற்றசை.

"இதேதாரக்ராத் க்ரமஸ்ஃ, பர்வனிபர்வணி யதா ரஸவிஸேஷஃ | தத்வத் ஸஜ்ஜநமைத்ரீ, விபரீதாநாந் து விபரீதா" என்னும் வடநூல்மேற் கோளை அடியொற்றியது இச்செய்யுள். (அ)

கஙஉ. கல்லாரே யாயினுங் கற்றுரைச் சேர்ந்தொழுகி
னல்லறிவு நாளுந் தலைப்படுவர்—தொல்சிறப்பி
னெண்ணிறப் பாதிரிப்பூச் சேர்தலாற் புத்தேடு
தண்ணீர்க்குத் தான்பயந் தாங்கு.

(இ-ள்.) தொல் சிறப்பின்-பழமையான (இயற்கையாயுள்ள) சிறப்பையும், ஒள் நிறம்-பிரகாசமான நிறத்தையுமுடைய, பாதிரி பூ-பாதிரி மரத்தின் மலரை, சேர்தலால்-அடைதலினால், புது ஓடு-புதிதான பானையோடானது, தண் நீர்க்கு-(தன்னிடமுள்ள) குளிர்ந்த நீர்க்கு, தான் பயந்து ஆங்கு-பாதிரிமலர் (தானே வாசனையைக்) கொடுத்தாற்போல,—கல்லாரே ஆயினும்-(தாம்) படியாதவர்களேயானாலும், கற்றுரை சேர்ந்து ஒழுகின்-படித்தவர்களைச் சேர்ந்துநடந்தால், நல்அறிவு நாளும் தலைப்படுவர்-(அச்சேர்க்கையால்) நல்லஅறிவு நாள்தோறும் உண்டாகப் பெறுவர்; (எ - று.)

புத்தேடு-கல்லார்க்கும், பாதிரிப்பூ-கற்றார்க்கும், நல்ல பரிமளம்-நல்லறிவுக்கும் உவமை யெனக் காண்க. 'புத்தேடுதண்ணீர்க்குத்தான் பயந்தாங்கு' என்ற உவமையால், முன்னே கல்லாதவர் பின்பு கற்றோரது சேர்க்கையால் தாம் அடைந்த அறிவைத் தம்மைச்சார்ந்தவர்க்குந் தருவ தென்பது பெறப்பட்டது. புதுப்பானையிற் பாதிரிமலர்களையும் நீரையும் பெய்துவைத்தால் அந்நீர் நல்ல மணத்தைப் பெறுமென அறிக. "பூவோடுசேர்ந்த நாரும் மணம்பெறும்" என்ற பழமொழியோடு ஒத்தது இவ்வுவமை. "நல்ல மணமுள்ளதொன்றை நண்ணியிருப்பதற்கு நல்ல மணமுண்டாம் நலமதுபோல்—நல்ல, குணமுடையோர் தங்களுடன்கூடி யிருப்பார்க்குக், குணமதுவேயாஞ் சேர்வுகொண்டு" என்றார் பெரியாரும். அறிவு தலைப்படுவர் - இங்ஙனமுமுரைப்ப: [நன்-பொது-உரை.] புதுமை யென்னும் பண்புப்பெயர், ஈறுபோய்த் தன்னொற்றிரட்டி, புத்தேடு எனப் புணர்ந்தது. ஆங்கு - உவமவுருபாகிய இடைச்சொல். (கூ)

கசo. அலகுசால் கற்பி னறிவுநூல் கல்லா
துலகநூ லோதுவ தெல்லாங்—கலகல
கூஉந் துணையல்லாற் கொண்டு தடுமாற்றம்
போஒந் துணையறிவா நில்.

(இ-ள்.) அலகு சால்-அளவு மிக்க, கற்பின்-வித்தைகளுள்ளே, அறிவு நூல்-தத்துவஞானத்தைத் தருகின்ற சாஸ்திரங்களை, கல்லாது-படியாமல், உலகம் நூல்-இவ்வுலகத்துக்கே பயன்படுகின்ற வேறு நூல்களை, ஓதுவது எல்லாம்-படிப்பது முழுவதும், கலகல கூஉம் துணை அல்லால்-கலகலவென்று கூப்புமளவேயல்லாமல், கொண்டு-(அவ்வுலக நூலோதுவதைக்) கொண்டு, தடுமாற்றம் போம்-துணை-(பிறவித் துன்பங்களில்) தடுமாறுதல் நீங்குந் தன்மையை, அறிவார்-அறிபவர், இல்-இல்லை; (எ - று.)

அறிவுநூல்-ஞானசாஸ்திரங்கள். உலகநூல்-தருக்கம், வியாகரணம் முதலியன. 'அறிவுநூல்கல்லாது உலகநூ லோதுவது' என்றதனால், தத்துவநூற்பயிற்சிக்கு வேண்டிய அளவு மற்றையநூல்களையுங் கற்றல்

வேண்டுமென்க ; கீழ்த்துறவென்னும் அதிகாரத்தில், "தொலேவில்லாச், சத்தமுஞ் சோதிடமுமென்றுங் கிவைபிதற்றும், பித்தரிற் பேதையாரில்" என்றதிலும் இச்செய்யுளின் கருத்து இருத்தல் காண்க.

இச்செய்யுளினால், இன்னது கற்கவேண்டுமென்று கூறியவாறு.

'அறிவனூலோதாது' என்ற பாடத்துக்கு - ஞானசொரூபியான கடவுளைப்பற்றிய நூல்களைப் படியாமலென்று பொருள்; அன்றி, இறைவனைக் கூறப்பட்ட ஆகமநூல்களை ஓதாமல் என்றுங் கொள்ளலாம்.

கற்பு-கல்வி ; தொழிற்பெயர் : பு-விகுதி, இன்-ஏழனுருபு. எதிர்கால வினையெச்சமாகக்கொண்டு, கற்பின்—கற்கப்புகுமிடத்து என்றலும் ஒன்று. கலகல-**அநுகரணம்; இரட்டைக்கிளவி**; இங்கே, பொருளில்லாமையைக் குறித்தது. அளபெடைகள்-செய்யுளோசை நிறைத்தன. கூம், போம்-கூவும், போகும் ; செய்யுமெனைச்சத்து ஈற்றுமிர்மெய் கெட்டது. சால்-உரிச்சொல்.

பின்னிரண்டடிகளில் **அளபுத்தொடை** காண்க. (கo)

கடு - ஆம் அதிகாரம்—குடிப்பிறப்பு

. அஃதாவது-உயர்ந்த குலத்திற் பிறத்தலினது சிறப்பைக் கூறுவது. உயர்குடியிற் . பிறந்தார்க்கே பெரும்பாலும் கல்விகேள்விப்பயன்கள் அமைதலால், இது கல்வியின்பின் வைக்கப்பட்டது ; அன்றியும், கல்வி ஒருவன் பிறந்த குடியை உயர்த்துதலே அதிகாரமுறைமைக்குக் காரணமென்னலாம்.

கசக. உடுக்கை யுலறி யுடம்பழிந்தக் கண்ணுங்
குடிப்பிறப் பாளர்தங் கொள்கையிற் குன்ரு
நிடுக்கண் டலேவந்தக் கண்ணு மரிமா
கொடிப்புற் கறிக்குமோ மற்று.

(இ-ள்.) உடுக்கை உலறி உடுக்கப்படும் ஆடையும் உருக்கெட்டு, [சிதைந்து], உடம்பு அழிந்தக்கண்ணும்-(உணவில்லாமையால்) உடம்பும் மெலிந்து அழிந்துபோவதாலும், குடி பிறப்பு ஆளர்-உயர்ந்த குடியிற் பிறத்தலேயுடையவர்கள், தம் கொள்கையின் குன்ரூர்-தீமது குலத்துக்கு ஊரிய ஒழுக்கத்திற் குறைவுபடார் ; (எதுபோலவெனின்),—இடுக்கண் தலேவந்தக் கண்ணும் - (பசியினுலாகிய) துன்பம் மிகுதியாய் உண்டாம் பொழுதும், அரிமா - சிங்கமாகிய மிருகம், கொடி புல் கறிக்குமோ - கொடியாகப்படர்ந்திருக்கும் புல்லைத் தின்னுமோ? [தின்னாது]; (எ-று.)

மிருகேந்திரனுகிய சிங்கத்துக்குப் புல்லைத்தின்னுமைபோல, சிறந்தவராகிய குடிப்பிறப்பாளர்க்கு ஒழுக்கங்குன்ரூமை இயல்பென்பதாம். இதனுல், புல்லைத்தின்னுதல் பசுமுதலியவற்றிற்கு இயல்பாதல் போல ஒழுக்கங் குறைதல், தாழ்குடிப்பிறந்தார்க்கு இயல்பா மென்பதும் பெறப்படும். **எடுத்துக்காட்டுவமையணி.**

குடிப்பிறப்பாளர் கொள்கை - அருள், அடக்கம், வாய்மை, இனிய சொல்லல், குரவரைப்பேணல் முதலியன. இரண்டு வாக்கியங்களிலு முள்ள இழிவுசிறப்பும்மைகளால், பிறகாலங்களில் நிலே வேறுபடாமை கூறுதே குறிப்பிக்கப்பட்டது. "புலி பசித்தாலும் புல்

லத் தின்னுது", "நல்லாரெழுக்கின் றலைநின்றார் நல்கூர்ந்தும், அல்லன செய்தற் கொருப்படார்—பல்பொறிய, செங்கட் புலியே றறப் பசித்துந்தின்னுவாம், பைங்கட் புனத்த பைங்கூழ்" என்பன காண்க. 'தலைவந்தக் கண்ணும் வரிமா' என்ற பாடத்துக்கு - கோடுகளையுடைய புலியென்று பொருள்.

உடுக்கை உலறி - பொல்லாவுடுக்கையாற் பொலிவிழந்து என்றுமாம். உடுக்கை - உடுக்கப்படுவது என ஆடைக்குக் காரணப்பெயர்; இதனைத் தொழிலாகுபெய ரென்பாரு முளர். பிறப்பாளர் - பிறப்பை ஆள்பவர். '**இடுக்கண்** என்பது - மலர்ந்தநோக்கமின்றி மையல்நோக்கம் பட வரும் இரக்கம்' என **ஆசிரியர் நச்சினார்க்கினியர்** கூறியிருத்தலைக் கொண்டு, இடுங்குகண் என்பது இடுக்கண் என விகாரப்பட்ட தென்றும், துன்பம் நேருங்காலத்திற் கண் இடுங்குதலால் துன்பத்திற்கு இடுக்கண் எனப் பெயரென்றும் உணர்க. அரிமா - இரு பெயரொட்டுப் பண்புத் தொகை. ஓ - எதிர்மறை; மற்று - அசை. (க)

கசஉ. சான்றுண்மை சாய லொழுக்க மிவைமூன்றும்
வான்றோய் குடிப்பிறந்தார்க் கல்லது—வான்றோயு
மைதவழ் வெற்ப படாஅ பெருஞ்செல்வ
மெய்தியக் கண்ணும் பிறர்க்கு.

(இ - ள்) வான் தோயும் - ஆகாயத்தை அளாவிய, மை தவழ் - மேகங்கள் தவழ்கின்ற, வெற்ப - மலையையுடைய அரசனே!—சான்றுண்மை - நற்குணங்களால் நிறைந்து (அவற்றை) ஆளுதலும், சாயல் - மென்மையும், ஒழுக்கம் - நல்லொழுக்கமும், இவை மூன்றும்—, வான் தோய் குடி பிறந்தார்க்கு அல்லது - (கீர்த்தியால்) மேலுலகத்தை அளாவிய [உயர்ந்த] குடியிற் பிறந்தவர்க்கே யல்லாமல், பிறர்க்கு - மற்றையோர்க்கு, பெருஞ் செல்வம் எய்தியகண்ணும் - மிக்க செல்வம் உண்டாஞலும், படா - உண்டாகாவாம்; (எ-று.)

"சாயல் மென்மை" என்னுந் **தொல்காப்பியச் சூத்திரத்தால்**, சாயல் என்பது-ஐம்பொறிகளாலும் நுகரப்படும் பலவகை மென்மைகளையும் உணர்த்துவதோர் உரிச்சொல்லாதலை உணர்க. வான்தோய் குடி-"வானுயர் தோற்றம்" என்றாற்போல, உயர்ந்தகுடி யென்னும் பொருள்பட நின்றது.

'வான்தோயு மை தவழ்வெற்ப' என்றவிடத்து, மலைக்கும் மேகத்துக்குஞ் சம்பந்தமில்லாமலிருக்கவுஞ் சம்பந்தத்தைக் கற்பித்துக் கூறியதனால், **தொடர்புயர்வு நவிற்சியணி**. வட நூலார் **'ஸம்பந்தாதிசயோக்தி'** என்பர்: இதனால், மலையினது உயர்வு தொனிக்கின்றது. வெற்பில் மழை தவழ்தல்போல, சான்றுண்மை குடிப்பிறந்தார்க்கே யுளதாமென்ற தொகைமொழி, ஆகூமுன்னிலையில் தோன்றும்.

முதலடியில், **பெயர்ச்செவ்வெண்** ஈற்றில் தொகை பெற்றது. ஆண்மை - பண்புப் பெயர்; வினைப் பகுதியடியாப் பிறந்தது: தொழிற் பெயரெனினும் இழுக்காது. (உ)

கசஊ. இருக்கை யெழுவு மெதிர்செலவு மேனை
விடுப்ப வொழிதலோ டின்ன—குடிப்பிறந்தார்
குன்ற வொழுக்கமாக் கொண்டார் கயவரோ
டொன்ற வுணரற்பாற் றன்று.

(இ - ள்.) (பெரியோரைக் கண்டால்), இருக்கை எழுலும்-(உடனே தமது)ஆசனத்தை விட்டு எழுந்து நிற்றலும், எதிர் செலவும்-(அவர்களை) எதிர்கொண்டு சென்று அழைத்துவருதலும், ஏனை-இன்னமும், விடுப்ப ஒழி தலோடு-(அவர்கள் மீளும்பொழுது) விடைகொடுக்கத் தாம்(அவரை விட் டுப்) பிரிதலும், இன்ன-இத்தன்மையான செய்கைகளை, குடிபிறந்தார்-உய ர்ந்தகுடியிற் பிறந்தவர்கள், குன்ற ஒழுக்கம் ஆ-(என்றுங்) குறைவுபடாத [இயற்கையான] ஒழுக்கமாக, கொண்டார் - வைத்துக்கொண்டார்கள்; (ஆதலால், அவர்களை), கயவரோடு - மூடர்களுடனே, ஒன்று ஆ - ஒரு தன்மையாக, உணர்பாற்று அன்று - மதித்தல் தக்கதன்று; (எ - று.)

நற்குடிப்பிறந்தாரும் பிறவாதாரும் மேல்நோக்கில் ஒத்திருப்பினும் இவ்விருவர்க்குமுள்ள வேறுபாடு அவ்வவருடைய ஒழுக்கத்தால் நன்கு புலனுமென்பதாம். 'இன்ன' என்றதனால், இவைபோன்ற மற்றும் பல நல்லொழுக்கங்களும் கொள்ளப்படும். இவையெல்லாம் இழிகுலத்தா ரிடத்து இயற்கையாக அமைந்திராவாதலால், 'கயவரோடொன்று வுண ரற்பாற்றன்று' என்றார். " இருமூன்று மரபினேனோர் பக்கமும் " என்ற இடத்து இது வழிபாடு கூறியது என்றனர் நச்சினார்க்கினியர். "வேண் டுகையார்க்கும் பணிவு" என்ற திருக்குறளுரையில், இருக்கையெழல் முத லியன பணிவினிலக்கணமென்றார் பரிமேலழகர். இருக்கை-'கை'விகுதி பெற்ற தொழிலாகுபெயர். ஏனை - வினைமாற்றுப்பொருளில் வந்த இலேடச்சொல். ஓடு-எண்ணிடைச்சொல். **கயமையாவது**-நற்குணங்கள் யாவும் இல்லாத தன்மை: அதனையுடையவராகிய, கீழோர், கயவர். முதலடி - **முற்றுமோனை.** (கூ)

கசச. நல்லவை செய்யி னியல்பாகுந் தீயவை
பல்லவர் தூற்றும் பழியாகு—மெல்லா
முணருங் குடிப்பிறப்பி னூதிய மென்னை
புணரு மொருவர்க் கெனின்.

(இ - ள்.) (உயர்குடியிற் பிறந்தவர்கள்), நல்லவை செய்யின் - நல்ல காரியங்களைச்செய்வராயின், இயல்புஆகும்-(அஃது அவர்கட்கு) இயற்கை யென்று எண்ணப்படும் [சிறப்பாகக் கொள்ளப்படாது]; தீயவை (செய் யின்) - கெட்ட காரியங்களைச் செய்தாலோ, பல்லவர் தூற்றும் பழி ஆகும் - (அது) பலரும் எடுத்துச் சொல்லும் பழிப்புக்குக் காரணமாம்; (ஆதலால்), ஒருவர்க்கு—, புணரும் எனின்-(உயர்குடிப் பிறப்பு முன்னைய நல்வினையாற்) கூடினால், எல்லாம் உணரும் குடி பிறப்பின் - எல்லாவற் றையும் அறியவல்ல அவ்வுயர்குடியிற் பிறத்தலினால், ஊதியம் - பயன், என்னை - யாதோ? (எ-று.)

உயர்குடிப் பிறந்தார்க்கு மிக்க நல்லொழுக்கத்தாலும் பெரும்புக ழுண்டாதலில்லை; சிறிய தீயொழுக்கத்தாலும் பெரும்பழி உண்டாகின் றது; தாழ்குடியிற் பிறந்தார்க்கோ இங்ஙனமில்லை: சிறிது நல்லொழுக் கத்தாற் பெரும்புகழும், பெருந்தீயொழுக்கத்தாற் சிறுபழியும் உண்டா கின்றன: ஆதலால், உயர்குடிப்பிறந்தார்க்கு அக்குடிப் பிறப்பால் நஷ்டமேயொழிய லாபமில்லை என, **வஞ்சப்புகழ்ச்சி [நிந்தாஸ்துதி]** வகையாற் குடிப்பிறப்பின் மேன்மையை விளக்கியபடி. இனி, நல்லவை செய்தலை இயல்பாகவும். தீயவை செய்தலைப் பலரும் தூற்றும்பழி

யாகவுங்கொண்டு யாவராலும் அறிந்து நன்குமதிக்கப்படுகின்ற உயர்குடிப் பிறப்பு ஒருவர்க்குக் கூடுமாயின் அதனினும் இலாபம் வேறுயாதோ? [எதுவுமில்லை] என்று உரைப்பினும் அமையும். முந்தின பொருளுக்கு 'இன்' என்ற ஐந்தனுருபு - ஏதுப்பொருளதும், பிந்தின பொருளுக்கு, எல்லைப் பொருளதுமாம். வெள்ளாடைக்கு மாசுபடிதல்போல, உயர்ந்தோர்க்குப் பழியுண்டாவது எளிதாம்; "குடிப்பிறந்தார்கண் விளங்குங்குற்றம் விசும்பின், மதிக்கண் மறுப்போலுயர்ந்து", "ஒன்றுய்விடினு முயர்ந்தார்ப்படுங் குற்றங், குன்றின்மேலிட்ட விளக்கு" என்பன காண்க. முதலடியில் 'நல்லவை,' 'தீயவை' என மாறுபட்ட சொற்கள் வந்தது - **முரண்தொடை**. (ச)

கசடு. கல்லாமை யச்சங் கயவர் தொழிலச்சஞ்
சொல்லாமை யுள்ளுமோர் சோர்வச்ச—மெல்லா
பிரப்பார்க்கொன் றீயாமை யச்ச பரத்தாரிம்
மாணாக் குடிப்பிறந் தார்.

(இ - ள்.) கல்லாமை அச்சம் - தாம் படியாமைக்கு அஞ்சுதலும், கயவர் தொழில் அச்சம்-கீழோர்செய்யும் இழிதொழில்களைச் செய்தற்கு அஞ்சுதலும், சொல்லாமையுள்ளும் ஓர் சோர்வு அச்சம்-(பொய் கோள் கடுஞ்சொல் பயனில்சொல் என்னுந் தீச்சொற்களைச) சொல்லாமலிருப்பதிலும் எந்த இடத்தில் தவறிப்போமோ என்று) ஒரு தளர்ச்சிக்கு அஞ்சுதலும், எல்லாம் இரப்பார்க்கு ஒன்று ஈயாமை அச்சம்-(தமக்குவேண்டுவன) பலவற்றை இரப்பவர்களுக்கு (அப்பொருள்கள் பலவற்றுள்) யாதாயினுமொன்றைக்கொடுக்கக்கூடாமற்போனால் அதற்கு அஞ்சுதலும், (இத்தன்மையான பல அச்சங்கள், உயர்குடிப்பிறந்தார்க்கே உள்ளன;ஆதலால்,) இ மாணு குடி பிறந்தார்-மாட்சிமைப்படாத இவ்வுயர்குடியிற்பிறந்தவர்கள்,மரத்தார்-மரக்கலத்திலுள்ளார் போல் எப்பொழுதும் அச்சமுடையார்; (எ-று.)

இதுவும் - **வஞ்சப்புகழ்ச்சியணி**யமையக் குடிப்பிறப்பின் மேன்மையைத் தெரிவித்தது."ஒன்றனுந் தீச்சொற் பொருட்பயனுண்டாயின்,நன்றுகா தாகிவிடும்" ஆதலால்,'சொல்லாமையுள்ளுமோர் சோர்வச்சம்' எனப்பட்டது.தம்மிடத்து உள்ளதை எல்லாங்கொடுத்து,இல்லாததைக்குறித்து இரங்குவதென்பார்,'எல்லாமிரப்பார்க்கு ஒன்று ஈயாமை அச்சம்'என்றார். திருக்குறளில் (224) "இன்று திரக்கப்படுதல்" என்ற இடத்து, இரக்கப்படுதல்-ஈவலென்றிருத்தல் : அதனை இன்னது என்றது-எல்லாம் இரப்பார்க்கு ஒன்றுஈயாமை கூடுங் கொல்லோ என்ற அசசம்நோக்கி' என்று பரிமேலழகியார் உரைத்தது ஈண்டுக் காணத்தக்கது. உயர் குடியை'மாணக்குடி' என்றது, எப்பொழுதும் பல அச்சத்திற்கு இடமாயிருத்தல்பற்றி; இனி,மாண் ஆகுடி எனப் பிரித்து, மாட்சிமையாதலையுடைய குடியென்று உரைத்தலும் பொருந்தும். மரக்கல மென்பது சில இடங்களிற் கலமென நிற்றல்போல, இங்கே மரமெனநின்றது; இவ்வாறு வருவதனை, வடநூலார் **'நாமைகதேமோநாமக்ரஹணம்'** என்பர். இனி, மரமென்பதை-அதனாலாகிய தோணிக்குக் கருவியாகு பெயரெனக் கொள்ளலுமாம். இனி, மாணாக் குடிப்பிறந்தார்- மாட்சிமையில்லாத தாழ்ந்தகுடியிற் பிறந்தவர்கள், மரத்தார்-(இப்படிப்பட்ட அச்சத்திற்குக் காரணமான உணர்ச்சி சிறிதும் இல்லாமையால்) மரத்தோடொப்பர் என்றும் உரைத்தல் கூடும்; மரத்தார் - மரத்தினாற்செய்த பாவைபோன்றவ ரென்றும் உரைப்பர். (இ)

கசசு. இனநன்மை யின்சொலொன் றீதன்மற் றேனை
மனநன்மை யென்றிவை யெல்லாங்—கனமணி
முத்தோ டிமைக்கு முழங்குவரித் தண்சேர்ப்ப
விற்பிறந்தார் கண்ணே யுள.

(இ - ள்.) கனம்-சிறந்த, மணி- இரத்தினங்கள், முத்தோடு-முத்துக் களுடனே, இமைக்கும்-பிரகாசிக்கின்ற, முழங்கு உவரி-ஆரவாரிக்கின்ற கடலினது, தண் சேர்ப்ப-குளிர்ச்சியான கரையையுடையவனே!—இனம் நன்மை-நல்ல சினேகிதரை யுடைத்தாயிருத்தலும், இன்சொல் - இனிய சொற்களைச்சொல்லுதலும், ஒன்று ஈதல்- இரப்பதொருபொருளை (இரந் தோர்க்கு) க் கொடுத்தலும், ஏனை மனம் நன்மை - மற்றும் மனத்தினது தூய்மையும், என்ற இவை எல்லாம்-என்று சொல்லப்பட்ட இந்நற்குணங் களெல்லாம், இல் பிறந்தார் கண்ணே - உயர்குடியிற் பிறந்தவரிடத்தே, உள - (இயல்பாக) உள்ளன; (எ - று.)

உயர்குடிப்பிறந்தார்க்கே இன நன்மை முதலிய நற்குணங்க ளுளவா மென்றவாறு. **'ரத்நாகரம்'** என்னும் வடமொழிப்பெயரின் பொருள் விளங்க, 'கனமணி முத்தோ டிமைக்கு முவரி' எனப்பட்டது. 'இற்பிறந்தார்கண்ணே' என்னும் பிரிநிலை ஏகாரத்தால், தாழ்குடிப்பிறந் தாரிடத்து இவை இல வென்பது பெறப்படும். பாண்டிய வரசன் மலை வளம் படைத்திருத்தல் போலவே, கடல்வளமும் படைத்துள்ளதனால், அன்னனை, 'கனமணி—சேர்ப்ப' என்று விளித்தது: "தண் கடற்பிறந்த முத்தினைரமும்...தன்மலை,...குறவர் தந்தசந்தினைரமும், இருபேராரமுமெ ழில்பெறவணியும், திருவீழ்மார்பின் றென்னவன்" எனவருவது காண்க. மற்று - அசை. என்றிவை - பெயரெச்சவிகாரம்; இனி, என்று இவை எனப்பிரித்து, எண்ணிடைச்சொல்லாகக்கொண்டு, பிறவிடத்துங் கூட்டி யுரைத்தலும் ஒன்று. உவரி - உவர்ப்புச்சுவையுடையது; உவர் - உப்பு, இ- பெயர்விகுதி. "நகை யீகை யின்சொ லிகழாமை நான்கும், வகையென்ப வாய்மைக்குடிக்கு" என்பது, **திருக்குறள்.** முதலடி - **முற்றுமோனை.** (சு)

கசஎ. செய்கை யழிந்து சிதன்மண்டிற் றாயினும்
பெய்யா வொருசிறை பேரி லுடைத்தாகு
மெவ்வ முழந்தக் கடைத்துங் குடிப்பிறந்தார்
செய்வார் செயற்பா லவை.

(இ-ள்.) பேர் இல்-பெரியவீடாயிருந்தால் அது, செய்கை அழிந்து-கட்டுக் குலைந்து, சிதல் மண்டிற்று ஆயினும்-செல்லால் அரிக்கப்பட்டதா னலும், பெய்யா ஒரு சிறை உடைத்து ஆகும் - (மழைநீர்) உள்ளே ஒழு காத ஒருபக்கத்தை யுடையதாம்; (அதுபோல), குடி பிறந்தார்-உயர்குடி யிற் பிறந்தவர், எவ்வம் உழந்தக்கடைத்தும்-(வறுமைநோய் முதலியவற் றால்) துன்ப மனுபவிக்கும் பொழுதும், செயல் பாலவை - தாம் செய் தற்கு உரிய கடமைகளை, செய்வர் - (விடாமற்) செய்வார்கள்; (எ-று.)

எடுத்துக்காட்டுவமையணி.

சிதல் - கறையான். சிதல்மண்டிற்று ஆயினும் - சிதல்கள் நெருங்கிய தானாலும் என்றுமாம். சிதல் - **சாதியொருமை.** பாலவை - பான்மையென் னும் பகுதியினடியாப்பிறந்த பலவின்பாற் குறிப்பு வினையாலணையும் பெயர்; இரண்டனுருபு தொக்கது. (எ)

கசஅ. ஒருபுடை பாம்பு கொளினு மொருபுடை
யங்கண்மா ஞாலம் விளக்குறூஉந்—திங்கள் போற்
செல்லாமை செவ்வனோர் நிற்பினு மொப்புரவிற்
கொல்கார் குடிப்பிறந் தார்.

(இ - ள்.) ஒரு புடை-(தனது) ஒருபாகம், பாம்பு கொளினும்-பாம்பி னுற் பிடிக்கப்பட்டிருந்தாலும், ஒரு புடை - மற்றொருபாகத்தால், அம் கண் மா ஞாலம்-அழகிய இடத்தையுடைய பெரிய பூமியை, விளக்குறூஉம் - பிரகாசிப்பிக்கின்ற, திங்கள் போல் - பூரணசந்திரன் போல,—குடி பிறந்தார் - உயர்குடியிற் பிறந்தவர்கள், செல்லாமை - வறுமை, செவ்வன் நேர் நிற்பினும் - நன்றாக (த் தம்மிடம்) நேர்ந்து நின்றாலும், ஒப்புரவிற்கு - (பிறர்க்கு) உபகாரஞ் செய்வதற்கு, ஒல்கார்-தளரார்; (எ - று.)—**உவமையணி.**

கிரகணகாலங்களிற் சந்திரனே மறைக்கின்ற பூமியின் சாயையை இராகு கேதுக்களென்னுங் கரும்பாம்பு செம்பாம்புகளாகக் கூறுகின்ற புராணநூல்வழக்குப்பற்றி, இங்ஙனங் கூறியது. இதனை கசக - ஆஞ் செய்யுளோடு ஒப்பிடுக. செல்லாமை-எண்ணமும் சொல்லும் தொழிலும் ஆகிய திரிகரணங்களின் செயல்கள் சித்தி பெறுமை; எனவே, வறுமை யாம். செவ்வன் - பண்புப்பெயர்; அன் - விகுதி. செவ்வன் ஒப்புரவிற்கு-செவ்வனை ஒப்புரவிற்கு என்றலும் ஒன்று. நேர் - 'நேர்ந்து' என்னும் வினையெச்சத்தின் விகாரம்: "வரிப்புனை பந்து" என்பதில், 'வரி' என்பது போல. ஒப்புரவு-உலக நடையை அறிந்து அதற்கு ஏற்பப் பிறர்க்கு உதவி செய்தல்; ஒப்பு உரவு என்று பிரிக்க: உலகத்தாரோடு ஒத்துச்செய்யுஞ் சிறந்ததொழி லென்றபடி. செவ்வனே நிற்பினும் என்றும்பாடம். (அ)

கசஉ. செல்லா விடத்துங் குடிப்பிறந்தார் செய்வன
செல்லிடத்துஞ் செய்யார் சிறியவர்—புல்வாய்
பருமம் பொறுப்பினும் பாய்பரி மாபோற்
பொருமுர ணேற்றுத லின்று.

(இ - ள்.) செல்லா இடத்தும் - (வறுமை முதலியவற்றுற்) செய்ய முடியாதகாலத்திலும், குடி பிறந்தார் - உயர்குடிப்பிறந்தவர், செய்வன - செய்யும் நற்கருமங்களை, சிறியவர் - தாழ்குடிப்பிறந்தவர், செல் இடத்தும் - (செல்வம் முதலியவற்றுற்) செய்யக்கூடிய காலத்திலும், செய்யார்-செய்யமாட்டார்; புல்வாய்-மானினது, பருமம் பொறுப்பினும்-சேணம்முத லியபோர்க்கோலத்தைத் தாங்கினாலும், பாய் பரிமா போல்-(இயற்கையாகப்) பாய்ந்தோடுந் தன்மையையுடைய குதிரைபோல, பொருமுரண் ஆற்றுதல் இன்று-போர்செய்யுந் தன்மையை யுடைத்தாதலில்லை; (எ - று.)

திருஷ்டாந்தாலங்காரம்.

புல்வாய் - புல்லத்தின்னும் வாயையுடையது என மானுக்குக் காரணப்பெயர்; வேற்றுமைத் தொகைப்புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை. பருமம் - குதிரைமேற்றவிசு. பருமம் பொறுப்பினும் - பருத்திருத்தலை யுடைத்தா யிருந்தாலும் என்றுமாம். பிறவற்றைக்கூறாது புல்வாயையும் பரிமாவையுங் கூறியது, இரண்டுக்கும் மானென்று ஒருபெயர்

பொதுவாக உள்ளதனால்; அன்றியும், ஒருவகைமான் குதிரைபோலப் பருத்திருக்கும். மான்சாதியுள் சில சேணந்தாங்கி வண்டியிழுத்தலுக்கும சவாரிசெய்தலுக்கும் பயன்படு மென்பதையும் கொண்டு, புல்வாயைக் கூறியதென்பார் ஒரு சாரார். பொருமூரண் - வினைத்தொகை. 'பெரு மூரண்' எனவும் பாடம். இச்செய்யுளோடு மேல் கஅச, கூடுஅ-ஆஞ் செய்யுள்களை ஒப்பிட்டுக்காண்க. (கூ)

கரூ. எற்றென்று மில்லா விடத்துங் குடிப்பிறந்தா
ரற்றுத்தற் சேர்ந்தார்க் கசைவிடத் தூற்றுவ
ரற்றக் கடைத்து மகல்யா றகழ்ந்தக்காற்
றெற்றெனத் தெண்ணீர் படும்.

(இ-ள்.)குடிப்பிறந்தார்—,எற்றுஒன்றும்இல்லா இடத்தும்-யாதொரு பொருளு மில்லாதகாலத்தும், அற்று தன் சேர்ந்தார்க்கு - வேறுகதியில் லாமல் தம்மை அடைந்தவர்கட்கு,அசைவு இடத்து ஊற்றுஆவர்-தளர்ச்சி நேர்ந்தவிடத்து ஊன்றுகோல்போல உதவுவர்; (எதுபோல எனின்),— அகல்யாறு-பெரிய நதியானது, அற்றக்கடைத்தும்-நீர்வற்றியபொழுதும், அகழ்ந்தக்கால்-(தன்னைத்) தோண்டினால், (தோண்டின அவ்விடத்தில்), தெற்றென-விரைவாக,தெள் நீர் படும்-தெளிவான நீர் உண்டாகப்பெறும்.

ஆறானது வெள்ளமுள்ள காலத்துத் தன்னை எவரும் தோண்டுதல் வேண்டாமலே தானே எங்குஞ் சென்று நீரை உதவி நீர்வறண்டகாலத் திலே தோண்டின மாத்திரத்தில் நீரை உதவுதல்போல, குடிப்பிறந்தார் செல்வமுள்ள காலத்தே எவரும் தம்மைச சேர்ந்து யாசிக்க வேண்டா மலே தாமே எங்குஞ் சென்று பலஉதவிகள் செய்து செல்வமில்லாத காலத்திலே தம்மையடைந்த மாத்திரத்தில் உதவிசெய்வர் என்பதாம். "ஆற்றுப் பெருக்கற் றடிசுடுமென் ஞாஞமவ்வா, றூற்றுப் பெருக்கா லுல கூட்டும் - ஏற்றவர்க்கு, நல்ல குடிப்பிறந்தார் நல்கூர்ந்தா ராஞலு, மில்லை யென மாட்டா ரிசைந்து" என்பதனோடு இதனை ஒப்பிடுக.

இதுவும், **திருஷ்டாந்தாலங்காரம்.**

மேல் கஅஅ - ஆஞ் செய்யுளோடு இதனை ஒப்பிட்டுக் காண்க.

எற்று - வினைவடியாகப்பிறந்த ஒன்றன்பாற் குறிப்புவினையாலணையும் பெயர். தற்சேர்ந்தார்-ஒருமைப்பன்மைமயக்கம்; 'தஞ்சேர்ந்தார்' எனின், **வழாநிலை**யாம். தெற்றென - **விரைவுக்குறிப்பு.** 'தண்ணீர்ப்படும்' என்ற பாடத்துக்கு, தெற்றென - தெளிவாக என்க. யாறுநீர்ப்படும் - இடத்து நிகழ் பொருளின் தொழில் இடத்தின்மேலேற்றிக் கூறப்பட்ட **உபசார வழக்கு.** சேர்ந்தார சைவிடத்து என்றும் பாடம். (கஅ)

ககூ - ஆம் அதிகாரம்.—மேன்மக்கள்.

அஃதாவது - செய்தற்கரியனசெய்தல் பிறர்குற்றங்கூறுமை செருக் கின்மை என்ற இவை முதலிய நற்குணங்களாற் பெரியார்களது தன்மை யைப்பற்றிக் கூறுவது. மேன்மக்களாவதற்கு உயர்குடிப்பிறப்பு ஒருதலை யான காரணமாதலின், இவ்வதிகாரம் குடிப்பிறப்பென்னும் அதிகாரத் தின் பின் வைக்கப்பட்டது.

கடுக. அங்கண் விசும்பி னகனிலாப் பாரிக்குந்
திங்களுஞ் சான்றோரு மொப்பர்மற்—றிங்கண்
மறுவாற்றுஞ் சான்றோரஃ தாற்றூர் தெறுமந்து
தேய்வ தொருமா சறின்.

(இ - ள்.) அம் - அழகிய, கண் - இடத்தையுடைய, விசும்பின்-ஆகாயத்திலே யிருந்து, அகல் நிலா பாரிக்கும் - பரந்த நிலாவை வீசுகின்ற, திங்களும்-சந்திரனும், சான்றோரும்-பெரியோரும், மன் ஒப்பர் - பெரும் பாலும் (தம்மில்) ஒத்திருப்பர்; (ஆனால்), திங்கள்-சந்திரன், மறு ஆற்றும்-களங்கத்தைத் தான்பொறுக்கும்; சான்றோர் - பெரியோர்களோ, அஃது ஆற்றூர்-மறுவைப் பொறுக்கமாட்டார்கள்: (பின்னே என்னவெனின்),-ஒரு மாசு உறின் - சிறிது மறு (தம்மை) அடையுமாயின், தெருமந்து - வருந்தி, தேய்வர்-அழிந்தேவிடுவர்; (எ - று.)

'திங்களுஞ் சான்றோரு மொப்பர்' என்றது-சந்திரன் புறவிருளை யொழித்தலும் தண்மையுடைத்தாதலும், சான்றோர் அகவிருளை யொழித்தலும் தண்ணளியுடைத்தாதலுமாகிய பொதுத்தன்மைபற்றி யென்க. 'மறு' என்பதற்கு-களங்கம் என்றும் பங்கம் என்றும் இரண்டு பொருள். திங்களும் சான்றோரும் சிலகுணங்களால் ஒப்பராயினும் மறுவாற்றுமையால் திங்களினுஞ் சான்றோர் சிறந்தவர் என்பது போதருதலால், இது, **குறிப்பாலறிந்த வேற்றுமையலங்காரம்**; இவ்வலங்காரத்தினது இலக்கணம்-உபமான உபமேயங்களுள் யாதாயினுமொன்றை வெளிப்படையாகவாவது குறிப்பாகவாவது விசேஷமுடையதாகச் சொல்வது: இதனை வடநூலார் **வ்யதிரேகாலங்காரம்** என்பர். இங்கே உபமானமாகிய சந்திரனினும் உபமேயமாகிய சான்றோர்க்கு மாசு சிறிதும் ஆற்றுமையாகிய விசேடம் சொல்லப்பட்டது காண்க. திங்களினுஞ் சான்றோர் சிறந்தவரென்னுங் கருத்தைப் பின்னிரண்டடியினது குறிப்பினுற் பெறவைத்ததனால், 'குறிப்பால்வந்த வேற்றுமையலங்காரம்' எனப்பட்டது; இதற்கு, 'மறு' என்பதிலுள்ள **சிலேடையணி** அங்கமாக நின்றது.மறு-களங்கமும், (பிறரிடத்துப் பெறும்) அவமானமும்.

திங்கள் மறுவாற்றுதலையும் சான்றோர் அஃதாற்றுமையையும் முறையே (**நன்னெறி**) "திங்கள், கறையிருளை நீக்கக் கருதாதுலகில், நிறையிருளை நீக்கும் மேல்நின்று," (**திருக்குறள்**) "மயிர்நீப்பின் வாழாக் கவரிமானன்னார், உயிர் நீப்பர் மானம் வரின்" என்றவற்றில் அறிக. திங்களுக்கு 'அங்கண் விசும்பி னகனிலாப்பாரிக்கும்' என்ற அடைமொழியைக் கொடுத்ததற்கு ஏற்ப, சான்றோர்க்கு 'அழகிய இடத்தையுடைய நிலவுலகத்திலே இருந்து பெரிய கீர்த்தியை எங்கும் பரவச்செய்கின்ற' என்னும் விசேஷணத்தை அமைத்துக்கொள்க. திங்களை 'அங்கண்விசும்பின்' என்று உயர்ந்த இடத்தைக்கூறி விசேடித்த அதனால், மேன்மக்கள் உயர்குடியிற் பிறந்தவரென்பது தொனிக்குமாறு அறிக. 'சான்றோர்தேய்வர்' என்றதனால், சந்திரன் தேய்ந்தாலும் மறுபடி வளர்கிறான், சான்றோர் அங்ஙனம் பங்கப்பட்டபின் பெருமிதங் காட்டார் என்பது குறிப்பிக்கப்படுகின்றது.

அகல் நிலா-வினைத்தொகை. 'மன்' என்ற இடைச்சொல், இங்கே, மிகுதியென்ற பொருளில்வந்தது. 'திங்கள்' என்னும் அஃறிணையும்

'சான்றோர்' என்னும் உயர்திணையுங் கலந்து சிறப்பிலுல் 'ஒப்பர்' என்னும் உயர்திணைமுடிபைப் பெற்றன; **திணைவழுவமைதி**. சான்றோர் திங்கள் போல மறுத்தாங்கமாட்டாமை, இங்கேசிறப்பு; அன்றியும், உயர்திணையாயிருத்தலேயே அஃறிணையினுஞ் சிறப்பாகக் கொள்ளலாம். திங்கள் என்பது-பொருளால் இருதிணைப்பொதுவாயினும், சொல்லால் அஃறிணையெனக்கொள்க. 'தேவர்களே உயர்திணையாகவும் அஃறிணையாகவுஞ் சொல்லலாம்' என்னும் விதியையே நோக்கின், 'திங்களுஞ் சான்றோரு மொப்பர்' என்னும் முடிபு **வழாநிலை**யாம்.

எஞ்ஞான்றும் தம்நிலையில் தாழாமையும் ஊழ்வினையால் தாழ்வுவந்த விடத்து உயிர்வாழாமையு மாகிய மேன்மக்களது மானமுடைமை, இச் செய்யுளாற் கூறப்பட்டது; "குடிப்பிறந்தார்கண்விளங்குங் குற்றம் விசும் பின், மதிக்கண் மறுப்போ லுயர்ந்து" என்ற **திருக்குறளும்**,"வந்து தோன்றிய மலர்கதிர் மண்டிலம், சான்றோர் தங்க ணெய்திய குற்றம், தோன்று வழி விளங்குந் தோற்றம்போல, மாசறுவிசும்பின் மறுகிறங்கிளர" என்ற **மணிமேகலை**யும் இங்கு நினைக்கத் தக்கன.

'அஃதாற்றூர்' என்றவிடத்து **ஆய்தம்** மெய்போல் ஒலித்தது; சான்றோரஃதாற்றூர் எனப் பிரித்து அலகிட்டு, தேமாங்காய்முன் நேர்வந்தமை காண்க: உயிர்போலொலித்ததாகக்கொண்டு அஃதாற்றூர் எனப் பிரித்துப் புளிமாங்காயாக அலகிட்டால், அதற்குமுன் 'தெரு' என்னும். நிரை வருவது வெண்டளைக்கு இயையாமை அறிக. (க)

கருஉ. இசையு மெனினு மிசையா தெனினும்
வசைதீர வெண்ணுவர் சான்றோர்—விசையி
னரிமா வுளங்கிழித்த வம்பினிற் றீதோ
வரிமாப் பிழைப்பெய்த கோல்.

(இ - ள்.) சான்றோர்-பெரியோர்கள், இசையும் எனினும்-(தமக்கு எளிதில்) முடியுமாயினும், இசையாது எனினும்- (எளிதில்) முடியாதாயினும், வசை தீர-பழிப்பில்லாதபடி, எண்ணுவர்-(பெருங்காரியங்களையே செய்ய) நினைப்பர்; (எனெனில்), அரி மா-சிங்கமானது, பிழைப்ப-குறித்த இலக்குத்தவறி உய்யும்படி, எய்த-(அதன்மேல்) பிரயோகித்த, கோல்-அம்பானது,—விசையின்-வேகத்தோடு (சென்று), நரி மா-நரியினது, உளம்-மார்பை, கிழித்த-பிளந்து ஊடுருவிச்சென்ற, அம்பினில்-அம்பைக் காட்டிலும், தீதோ-தீமையுடையதோ? [அன்று, நன்று என்றபடி].

சிங்கத்தின்மேல் அம்புஎய்து அதுதவறினாலும் பெருமையுண்டு, நரியின்மேல் அம்புஎய்து அதன்மார்பைப் பிளந்தாலும் பெருமையில்லை; அதுபோல, செய்தற்கரிய பெரியகாரியத்தைத் தொடங்கி முயன்று அது முடிவு போகாதாயினும் பெருமையுண்டு, இழிவான தொழிலைத்தொடங்கி முடித்தாலும் பெருமையில்லை; ஆதலால், பெரியோர் தம்மிடத்தில் பழிப்பு உண்டாகாதபடி மேலான காரியத்தையே செய்ய நினைப்பர் **என்று கருத்து.**

பெரியகாரியம் முடிவுபோகாமற்-செய்த-முயற்சி விரைவோடு சிறிய காரியத்தை முடித்த முயற்சியினும் நன்று என்னும் பொருள் தோன்ற நின்றதனால், பின்னிரண்டடி - **பிறிதுமொழிதல்** என்னும் அலங்காரம்: இச்செய்யுளில் பின்வாக்கியத்திற்கூறிய கருத்து, முன்வாக்கியத்திற் கூறியபொருளுக்குக் காரணமென அறிக; இங்ஙனம் ஒன்றைக் காரணங் காட்டிச் சாதித்தல், **ஏதுவலங்காரம்.**

"கான முயலெய்த வம்பினில் யானை, பிழைத்தவே லேந்த வினிது" என்னுந் **திருக்குறளோடு** இக்கவியின் பின்னடிகளை ஒப்பிடுக. "பெருமை யுடையவராற்றுவா ராற்றின், அருமையுடைய செயல்" என்ற **திருக்குறளை** யும் அறிக. மேன்மக்களது செயற்கரியன செய்யுந் தன்மை இதனுற் கூறப்பட்டது.

விசையின் - உடனிகழ்ச்சிப் பொருளில் வந்த மூன்றாம்வேற்றுமைத் தொகை; இன்-சாரியை. இனி, விசையால் என உரைத்து, ஏதுப் பொருளில் வந்த ஐந்தாம்வேற்றுமைவிரி யெனினும் ஒக்கும். நரியாகிய மா, அரியாகிய மா என **இருபெயரொட்டு.** உளம் - இருதயம்; உளமென் னும் மனத்தின் பெயர், அது உள்ள இடமாகிய மார்புக்கு இங்கே தானி யாகுபெயர். அம்பினில்-ஐந்தனுருபு, உறழ்பொருவு; இது எல்லைப்பொ ருளில் அடங்கும். பிழைப்ப என்னுஞ் செயவெனெச்சம் ஈறுதொக்கது. ஓ-**எதிர்மறை.** உம்மைகள் - முறையே உயர்வு சிறப்பும், இழிவுசிறப்பும்.

முதலடி - **தொடைமுரண்.** (உ)

கருஙூ. நரம்பெழுந்து நல்கூர்ந்தா ராயினுஞ் சான்றோர்
குரம்பெழுந்து குற்றங்கொண் டேறு—ருரங்கவறு
வுள்ளமெனு நாரிஞற் கட்டி யுளவரையாற்
செய்வர் செயற்பா லவை.

(இ - ள்.) சான்றோர்-மேன்மக்கள், நரம்பு எழுந்து-(உணவின்மை பற்றி உடம்பு மெலிதலால்) நரம்புகள் மேலேதோன்றப்பெற்று, நல்கூர்ந் தார் ஆயினும்-வறுமையடைந்தவர்களாஞலும், குரம்பு எழுந்து - (தமது நல்லொழுக்கத்தின்) வரம்பினின்றுங் கடந்து, குற்றம் கொண்டு-குற்ற மான செய்கையை மேற்கொண்டு, ஏறார்-(அச்செய்கையில்) அதிகப்பட்டு நடவாமல், உரம்-(தமது) அறிவையே, கவறு ஆ - கருவியாகக்கொண்டு, உள்ளம் எனும் நாரிஞல்-முயற்சியென்கிற கயிற்றினுலே, கட்டி - (மனத் தைக்) கட்டி, உள வரையால்-(பொருள் தமக்கு) உள்ள அளவிற்கு ஏற்ப, செயற்பாலவை - செய்யத்தக்க நற்காரியங்களை, செய்வர்—; (எ - று.)

மேன்மக்களது வரம்புகடவாமையும் உதாரகுணமுங் கூறப்பட்டன.

கவறு-பிளப்புள்ள பலகட்டை; இது-ஒன்றைப்பிடித்துக் கயிற்றைக் கட்டிவைத்தற்கு ஆதாரமாம். உரம் - வலிமை; தேகபலம் முதலியன நல்லொழுக்கத்திற்குக் கருவியாகாமையால், உரமென்பது - இங்கே, சிறப்பாய், புத்தி பலத்துக்கு வந்தது. 'உரங்கவறு உள்ளமெனும் நாரிஞற் கட்டி'—வறுமையால் தளராதபடி மனத்தை அறிவினுலும் முயற்சியினு லும் உறுதிப்படுத்திக்கொண்டு என்றபடி. **உருவகவணி.** செயற்பாலவை- செய்தற்கு உரிய பான்மையையுடையவை.

(**நீதிநெறிவிளக்கம்**) "நல்லா ரொழுக்கின் றலைநின்றூர் நல்கூர்ந்து, மல்லன செய்தற் கொருப்படார்," (**திருக்குறள்**) "சலம்பற்றிச் சால்பில செய்யார் மாசற்ற, குலம்பற்றி வாழ்துமென் பார்" என்பவற்றோடு இக் கவியை ஒப்பிடுக. இங்கே 'குரம்பெழுந்துகுற்றங்கொண்டேறூர்' என்றதை "கொதித்தவுள்ளமொடு குரம்புகொண்டேறி" என்ற **மணி மேகலை**யோடு ஒப்பிடுக. (கூ)

கடுச. செல்வுழிக் கண்ணெருநாட் காணினுஞ் சான்றவர்
தொல்வழிக் கேண்மையிற் றோன்றப் புரிந்தியாப்பர்
நல்வரை நாட சிலநா ளடிப்படிற்
கல்வரையு முண்டா நெறி.

(இ - ள்.) நல்வரை நாட-நல்ல மலைகளையுடைய பாண்டியநாட்டை யுடையவனே! செல்வுழிக்கண் - போகிறவிடத்திலே, ஒருநாள்—, காணினும் - (ஒருவரைப்) பார்த்தாலும், சான்றவர்-பெரியோர்கள், தொல் வழி கேண்மையின் தோன்ற-பழைய வழியால்வந்த சினேகம்போலக் காணப் படும்படி, புரிந்து-அன்புசெய்து, யாப்பர்-(சினேகிதராகத் தம்மோடு அவ ரைக்) கட்டுவர்; சில நாள் அடிபடின்-சிலகாலம் காலடி பட்டுவருமாயின், கல் வரையும்-கல்மலையிலும், நெறி உண்டு ஆம்-வழிஉண்டாகும்; (எ-று.)

'எறும்பூரக் கல்லுந் தேயும்' என்றவாறு சிலகாலங் காலடிபட்டு வந்தாற் கல்லிலும் வழி உண்டாவதுபோல, வல்நெஞ்சர்க்கும் பழகினாற் சினேகமுண்டாகும்; அது சிறப்பன்று: சான்றோர்களோ "ஒருநாட் பழ கினும் பெரியோர் கேண்மை, யிருநிலம் பிளக்க வேர்வீழ்க் கும்மே" (**நற்றிணை**) என்றவாறு கண்டவுடனே சினேகித்துச் சிறுபழக்கத்தால் அச்சினேகத்தை உறுதிப்படுத்துவரென்பது கருத்து. "புணர்ச்சி பழகு தல் வேண்டா வுணர்ச்சிதான், நட்பாங் கிழமை தரும்" என்றார் **திரு வள்ளுவனாரும்**. நல்வரைநாட என்ற விளி-ஒருநாள் வந்தார்க்கும் தேன் பால் முதலியவற்றைத் தருவதுபோல ஒருநாள் பழகினார்க்கும் சான்றோர் உதவுவரென்பது புலப்படுத்தும்.

இதனால், மேன்மக்களது நட்பின்தன்மை கூறப்பட்டது.

செல்+உழி = செல்வுழி; மெய்யீற்றின்முன் உயிர்வர உடம்படுமெய் யல்லாத வகரமெய் பெற்றது: இதனை 'மெய்யீற்றுடம் படுமெய்' என்பர், **ஆசிரியர் நச்சினார்க்கினியர்**. தொல்வழி-தொன்று தொட்டு வந்த; பரம் பரையாய்வந்த. வரைக்கு நன்மை-மிளகு கோட்டம் அகில் தக்கோலம் குங் குமம் முதலிய பொருள்களோடு நீரருவியையும் உடைத்தாதல். சில நாள அடிப்படின் கல்வரையுமுண்டாநெறி-**பிறிதுமொழிதல்** என்னும் அலங்காரம். 'கல்' என வேண்டாது கூறினார், மலையினது திண்மையை உணர்த்து தற்கு. உம்மைகள் - இழிவுசிறப்பு. புரிந்தியாப்பர்-குற்றியலிகரம். (சு)

கடுரு. புல்லா வெழுத்திற் பொருளில் வறுங்கோட்டி
கல்லா வொருவ னுரைப்பவுங் கண்ணுடி
நல்லார் வருந்தியுங் கேட்பரே மற்றவன்
பல்லாரு ணூல்பரிந்து.

(இ - ள்) புல்லா - பொருந்தாத, எழுத்தின் - இலக்கண நூல்களையுடைய, பொருள் இல் - அருத்தஞானமில்லாத, வறுங் கோட்டி - வீண் கூட்டத்தினிடையிலே, கல்லா ஒருவன் - (படித்தற்கு உரிய நூல்களைப்) படியாத ஒருத்தன், உரைப்பவும் - (தனக்குத்தோன்றிய தொருபொருளை எடுத்துச்) சொல்லவும், நல்லார்-மேன்மக்கள், வருந்தியும் - (குற்றமுடைய அதனைக் கேட்டற்கு) வருத்தப்பட்டும், அவன் பல்லாருள் நாணல் பரிந்து-அக்கல்வியறிவில்லாதவன் பலபேர்முன்னிலையில் அவமானப்படுதற்கு மனம்இரங்கி, கண் ஓடி-(அவனிடத்துத்) தாட்சிணியம்வைத்து, கேட்பர்-(காதுகொடுத்துக்) கேட்டிருப்பர்; (எ - று.)

நற்குணமுடையோர் தமது உள்ளத்திற்கு உவப்பு இன்றியினும், அறிவுடையதாம் உபதேசஞ்செய்தால் அதுநோக்கிப் பிறராலும் உபதேசிக்கப்பட்டு கல்லாதவன் பலர்முன் அவமானப்படுவனே யென்பதற்கு இரங்கி, அவன் பேசும்பேச்சுக்களையும் புறத்தே செவிகொடுத்துக் கேட்பர் என்றபடி.

இதனை "பாடமேயோதி - பரிந்து" என்னும் நகசு - ஆஞ் செய்யுளோடு ஒப்பிடுக.

புல்லா எழுத்தின் கோட்டி என்பதற்கு - எழுத்தினைப்புல்லாத கோட்டி என்று கருத்து; இதனை "அருங்கேடன்" (**திருக்குறள்**) என்பது போலக்கொள்க; இது**வடமொழியுடை.** எழுத்து-அக்ஷரம்; எழுதப்படுவது. இது, இங்கு இலக்கணத்திற்கு ஆகுபெயர். எழுத்தின்-இன்சாரியை நிற்க இரண்டனுருபு தொக்கது. கோட்டி-கோஷ்டீ என்னும் வடமொழியின் திரிபு. உம்மைகள் - இழிவுசிறப்பு. மற்று - அசை; நற்குணமில்லாத அவனென்றுங் கொள்ளலாம். உரைப்ப என்பதைப் பெயராகக்கொண்டு, இரண்டாம் வேற்றுமைத் தொகையாக்கி, உரைப்பவற்றை என உரைப்பினுமாம். இதனுல் மேன்மக்களது பொறுமை கூறப்பட்டது.

இங்கு "புல்லாவெழுத்திற் பொருளில்வறுங்கோட்டி" என்றதை "வெள்ளைக்கோட்டி" என்ற **சிலப்பதிகார**த்தோடும், "வம்பக்கோட்டி" என்ற **மணிமேகலை**யோடும், "நிரம்பிய, நூலின்றிக் கோட்டிகொளல்' என்ற **திருக்குறளோடும்** ஒப்பிடுக. (கு)

கருசு. கடித்துக் கரும்பினைக் கண்டகர நூறி
யிடித்துநீர் கொள்ளினு மின்சுவைத்தே யாகும்
வடுப்பட வைதிறந்தக் கண்ணுங் குடிப்பிறந்தார்
கூரார்தம் வாயிற் சிதைந்து.

(இ - ள்.) கரும்பினை - கரும்பை, கடித்து-(வாயாற்) கடித்தும், கண்தகர-கணுக்கள் நொறுங்கும்படி, நூறி-(ஆலையிற்போகட்டுச்) சிதைத்தும், இடித்து-(உலக்கை கல் முதலியவற்றால்) நொறுக்கியும், நீர் கொள்ளினும்-இரசத்தைக் கொண்டாலும், இன் சுவைத்தே ஆகும்-(அக்கருப்பஞ்சாறு) இனிய உருசியை யுடையதேயாம்; (அதுபோல),—வடு படக்குற்றந்தோன்றும்படி, வைது இறந்தக்கண்ணும்-(தம்மைப் பிறர்) திட்டிப்போனவிடத்

தும், குடி பிறந்தார் - உயர்குடியிற்பிறந்தவர்கள், சிதைந்து - (தமது நல்ல நிலைமை) கெட்டு, தம் வாயின் - தங்கள் வாயினால், கூறார் - (தீயசொற்க ளைச்) சொல்லமாட்டார்கள்; (எ - று.)

இதனால், பிறர் வருத்தியகாலத்தும் பிக்குவிளங்குகின்ற மேன்மக்க ளது நற்குணம் கூறப்பட்டது.

இது - **எடுத்துக்காட்டுவமையணி.**

'வாயின்' எனவேண்டாது கூறினார், 'நல்லசொற்கள் பயின்றது' எனத் தாம் வேண்டியதன் சிறப்பு முடித்தற்கு; அடுத்தசெய்யுளிலும், களவு-ஆம் செய்யுளிலும் இதுகொள்க. சுவைத்து-ஒன்றன்பாற் குறிப்புவினையா லணையும்பெயர். உம்மைகள் - இழிவுசிறப்பு. ஏ - தேற்றம். 'சிதைந்து' என்றதனால், 'தீயசொற்களை' என்பது பெறப்பட்டது. (சு)

கருவி. கள்ளார்கள் ஞண்ணூர் கடிவ கடிந்தொரீஇ
யெள்ளிப் பிறரை யிகழ்ந்துரையார்—தள்ளியும்
வாயிற்பொய் கூறார் வடுவறு காட்சியார்
சாயிற் பரிவ திலர்.

(இ - ள்.) வடு அறு காட்சியார் - குற்றமற்ற அறிவையுடைய மேன் மக்கள், கள்ளார் - (பிறர்பொருளைக்) களவுசெய்யமாட்டார்; கள் உண் ணூர்-மதுபானஞ்செய்யார்; கடிவ கடிந்து ஒரீஇ - (நூல்களால்) விலக்கப் பட்ட தீசசெயல்களை வெறுத்துச் செய்யாதொழிந்து, பிறரை எள்ளி இகழ்ந்து உரையார்-அயலாரை அவமதித்து நிந்தித்துப் பேசார்; தள்ளி யும் - மறந்தும், வாயின் பொய் கூறார் - வாயினற் பொய்சொல்லார்; சாயின் பரிவது இலர்-(தமக்கு வறுமை முதலியவற்றால்) தளர்ச்சிசேர்ந்த காலத்தும் வருந்துதலையுடைத்தாகார்; (எ - று.)

இதனால், மேன்மக்களது தீச்செயலின்மை கூறப்பட்டது. கடிவ - காமம் கொலை என்பன காட்டுமென்னலாம்.

கடிவ - பலவின்பாற்பெயர். தள்ளியும் - பிறரால் ஏவப்பட்டும் என்று மாம். பிரதியுபகாரமாகக்காணுதல்போல் அறிவினற் காணுதல் கூடுமாத லால், அறிவுக்கு 'காட்சி' என்று ஒரு பெயர். அறிவுக்குக் குற்றம்-ஐயந் திரிபு அறியாமைகள். 'சாயின்' என்றதில் இழிவுசிறப்புஉம்மை தொக் கது. தள்ளியும், உம்-இழிவு சிறப்பு.

இப்பாட்டு சான்றோர்தன்மையைக்கூறியதனால், **தன்மைநவிற்சி.**

கருவி. பிறர்மறை யின்கட் செவிடாய்த் திறனறிந்
தேதிலா நிற்கட் குருடனாய்த் தீய
புறங்கூற்றின் மூங்கையாய் நிற்பானேல் யாது
மறங்கூற வேண்டா வவற்கு.

(இ - ள்.) (ஒருவன்), திறன் அறிந்து - நல்லொழுக்கத்தின் வகையை உணர்ந்து, பிறர் மறையின்கண் செவிடு ஆய் - அயலாரது இரசியங்களைக் கேட்பதிற்செவிடனாகியும், ஏதிலார் இல்கண் குருடன் ஆய்-அயலாரது

மனிவியரைக் காதலோடு காண்பதிற் குருடனுகியும், தீய புறம் கூற்றின் மூங்கை ஆய்-(ஒருவர்மேல்) தீயசொற்களை அவர்களைக் காணுதவிடத் துச்சொல்லுவதில் ஊமையாகியும், நிற்பான் எல்-நிற்கமாட்டுவனுயின், அவற்கு-அவனுக்கு, யாதும் அறம் கூறவேண்டா-எந்தத் தருமமும் (பிறர்) உபதேசிக்க வேண்டியதில்லை; (எ - று.)

இம்மூன்று தன்மையும் உடையவனிடத்து எல்லாத்தருமங்களும் நிரம்பியுள்ளனவென்றும், இம்மூன்றுமே எல்லாத் தருமங்களுள்ளுஞ் சிறந்தனவென்றும், இவற்றையுடையான் தருமத்தைப் பிறர்க்கெல்லாம் உபதேசிக்கவல்லா னென்றுங் கருத்து.

இதனுல், மேன்மக்களது ஒழுக்கங்களின் சிறப்புக் கூறப்பட்டது.

மறை-(வெளிப்பட்டாற் குற்றமவருமென்று அஞ்சிப் பிறர்க்கு) மறைத்து ஒருவன் சொல்லுஞ் சொல்; செயப்படுபொருள்விகுதி புணர்ந்து கெட்டபெயர். செவிடு - பண்பாகுபெயர். திறன் - ஈற்றுப்போலி. இல்-வீடு: வீட்டிலிருந்து சமுசாரகாரியங்களை நிர்வகிக்கின்ற மனைவியர்க்கு இடவாகுபெயர். தீய-பலவின்பாற்பெயர்; பெயரெச்சமாகக் கொண்டும் உரைக்கலாம். கூற்று-கூறு என்னும் முதனிலை திரிந்த தொழிற்பெயர். மூங்கை-மூக என்னும் வடமொழியின் திரிபு; இது; மூகை எனவும் நிற் கும். நிற்பானேல் என்றது, அங்ஙனம் நிற்றலின் அருமையை விளக்கிற்று. வேண்டா என்றது-வேண்டும் என்பதன் எதிர்மறையாதலின், ஒருவகை வியங்கோளெனக் கொள்க.

'பிறர்மறையின்கட்செவிடாய்', 'தீயபுறங்கூற்றின்மூங்கையாய்', 'யாதுமறங்கூறவேண்டாவவற்கு'என்பவற்றை—"பல்லார்மறையிற்செவி யிலன்", "தீச்சொற்கண்மூங்கை", "அயல அயலவர்நூல்" என்னும் எலாதியோடு ஒப்பிடுக. "பரரந்த்ரேஷு ஜாத்யந்தா, பரதாரேஷ்வபும்ஸ கா-பரீவாதேஷு யேமூகா, தே (அ) தீவதயிதாமம" என்னும் வட மொழி மேற்கோள் இங்கே உணரத்தக்கது. (அ)

கநிகூ. பன்னுளுஞ் சென்றக்காற் பண்பிலார் தம்முழை
யென்னுனும் வேண்டுப வென்றிகழ்ப—வென்னுனும்
வேண்டினு நன்றுமற் றென்று விழுமியோர்
காண்டொறுஞ் செய்வர் சிறப்பு.

(இ - ள்) பண்பு இலார்-மேன்மைக்குணமில்லாதவர்கள், தம்உழை-தம்மிடத்து, பல் நாளும்-பலதினமும், சென்றக்கால்-(ஒருவர்) வருவாரா யின், என் ஆனும் வேண்டுப என்று-(இவர்) யாதாயினும் ஒருபொருளைத் (தம்மிடத்துப் பெற) விரும்புவரென்று கருதி, இகழ்ப-(அவர்களை)இகழ் சி செய்வார்கள்; விழுமியோர் - மேன்மக்கள், என் ஆனும் வேண்டினும் நன்று என்று - (இவர்) யாதாயினும் (நம்மிடத்துப் பெற) விரும்பினலும் நல்லதே யென்றுகருதி, காண்தொறும் - (அவர்களைப்) பார்க்கும் பொழு தெல்லாம், சிறப்புசெய்வர்-உபசாரங்களைச் செய்வார்கள்; (எ - று.)

இதனுல், மேன்மக்களது மனமாட்சி கூறப்பட்டது.

தொறு என்பது-இடைச்சொல்லாயினும், பெயர்ப் பொருளைத் தருதலால், பெயரெச்சத்திரிபாகிய 'காண்' என்னும் வினைத்தொகை அதனைக்கொண்டுமுடிந்தது. நாளும், உம்மை-முற்று. ஆனும், உம்மை -இழிவு சிறப்பு. நன்று என்றது, அங்கீகாரப் பொருளது. சென்றக்கால்

என்றதில், செல் என்ற பகுதி "தரல் வரல் கொடை செலல் சாரும் படர்க்கை, எழுவாயிரண்டும் எஞ்சிய வேற்கும்" (**நன்னூல்**) என்ற விதிக்கு மாறாக இங்கே தன்மைக்கு வந்தது, **இடவழுவமைதி**: இங்ஙனம்வருதல் சிறுபான்மை. தம்முழை, உழை,-ஏழனுருபு. (கூ)

கஙo. உடையா ரிவரென் றொருதலையாப் பற்றிக்
கடையாயார் பின்சென்று வாழ்வ—ருடைய
பிலந்தலைப் பட்டது போலாதே நல்ல
குலந்தலைப் பட்ட விடத்து.

(இ - ள்.) (உலகத்திலே சிலர்),—உடையார் இவர் என்று-செல்வ முடையார் இவரென்றுகருதி, ஒருதலை ஆ பற்றி-ஒரே துணிவாகப் பிடித்து, கடையாயார் பின் சென்று - கீழ்மக்கள்பின்னே போய்க் கொண்டு, வாழ்வர் - உயிர்வாழ்வார்கள்; (அதனுற் பயனென்ன? அங்ஙனம் வாழ்பவர்கள்), நல்ல குலம் தலைப்பட்ட இடத்து - சிறந்த குலத்திற் பிறந்தவர்களோச்சேர்ந்த விடத்து, உடைய பிலம்தலைப்பட்டதுபோலாதே-(வேண்டும்பொருள்க ளெல்லாவற்றையும்) உடையதொரு சுரங்கத்தைச் சேர்ந்ததுபோலாகாதா? [ஆகுமென்றபடி :] (எ - று.)

உலகோர், செல்வமுடையோ ரென்ற காரணத்தால் கடையாயார் பின் சென்றும் வாழ்வார்: அதனுல் யாதுபயன்? செல்வமுடையார் நற் குடிப் பிறந்தவராக நட்புக்கொள்ள வாய்ப்பின் இன்பமும், செல்வமும், புகழும் பெறலாமென்றவாறு. பிலம் என்பதற்குக் குகையென்றுபொருள் கூறி, முற்காலத்து யாற்றினடியிலும் (அகநானூறு-372) நகரங்களி லும் (அகநானூறு 265) நிதிசேமித்து வைக்கப் பெற்றிருந்த வரலாறு பேசப்படுதல்போல, இங்கு மலைக்குகையில் சேமித்துவைத்த நிதியம் கூறப்படுகிற தென்பர்: மதுரைக் காஞ்சியில், "தென்புல மருங்கில்விண்டு [மலை] நிறைய, வாணன் வைத்த விழுநிதி" என வருதலையும் காணலாம்.

செல்வரை 'உடையார்' என்றது, உலகவழக்குப்பற்றி. தலையாயார், இடையாயார் என்பன-கடையாயார் என்பதன் எதிர்மொழிகள்;உத்தமர், மத்தியமர், அதமர் எனக் காண்க. வாழ்தல்-ஜீவித்தல். தலைப்படுதல்-ஒரு சொல்; தலை-தமிழுபசர்க்கம். குலம்-அதிற் பிறந்தார்க்கு **இடவாகுபெயர்**. தலைப்பட்டவிடத்து-ஒருவகைவினையெச்சம்போலும். போலாது-இடைச் சொல்லடியாப்பிறந்த எதிர்மறைமுற்று; ஏகாரம்-வினவகையால், எதிர் மறைகாட்டிற்று: இங்கு இரண்டு எதிர்மறை, உடன்பாடு உணர்த்திற்று.

கள - ஆம் அதிகாரம்.—பெரியாரைப்பிழையாமை.

அஃதாவது - பெரியராயினுரை அவமதித்து ஒழுகாமை. **இரட்டுற மொழிதலென்னும் உத்தி**யால், பெரியார் என்பது-வலியாற் பெரியராகிய அரசர்மேலும், தவத்தாற்பெரியராகியமுனிவர்மேலும் நின்றது; அன்றியும், பொதுப்படப் பெரியா ரென்றதனுல், அறிவு பருவம் ஒழுக்கம் இம்மூன் றினலும் பெரியவராகிய ஞானவருத்தர், வயோவருத்தர், சீலவருத்தர் என்னும் இவரையும்உணர்த்தும்: அன்றியும், குலத்திற்பெரியோருமாம். பிழை யாமை-பிழைசெய்யாமை; எதிர்மறைத் தொழிற்பெயர். மேன்மக்களது சிறப்பை அறிந்து அவருடன் பழகுவார்க்கு இன்றியமையாததாதலின், இஃது, மேன்மக்களென்னும் அதிகாரத்தின் பின்வைக்கப்பட்டது.

ஈஙூஈ. பொறுப்பரென் றெண்ணிப் புரைதீர்ந்தார் மாட்டும்
வெறுப்பன செய்யாமை வேண்டும்—வெறுத்தபி
னூர்க்கு மருவி யணிமலை நன்னுட
பேர்க்குதல் யார்க்கு மரிது.

(இ-ள்.) ஆர்க்கும்-பேரொலிசெய்கின்ற, அருவி-நீரருவிகளையுடைய, அணி-அழகிய, மலை-மலையையுடைய, நல் நாட - சிறந்த பாண்டியநாட்டை யுடையவனே!—பொறுப்பர் என்று எண்ணி-(இவர் நாம் செய்யும் பிழை களைப்) பொறுத்துவிடுவரென்று நினைத்து, புரை தீர்ந்தார்மாட்டும்-குற்றம் நீங்கிய பெரியோர்களிடத்தும், வெறுப்பன செய்யாமை - அவர் வெறுக்கத் தக்க கொடுஞ்செய்கைகளைச் செய்யாதிருத்தல், வேண்டும்-தகுதி; (எனெனில்),—வெறுத்த பின் - (அவர்பொறுமல்) வெறுப்பா ராயின் அதன்பின்பு, போக்குதல் - (அதனால்வரும் தீங்கை) நீக்குதல், யார்க்கும்-எவ்வகை மேம்பட்டோர்க்கும், அரிது-முடியாது; (எ - று.)

"சிறியோர் செய்த சிறுபிழை யெல்லாம் பெரியோராயிற்பொறுப் பது கடனே" (**நறுந்தொகை**) என்ற நீதியையே முக்கியமாகக்கொண்டு, பெரியோர்பக்கல் எவ்வகைப்பிழையையுஞ் செய்யற்க; செய்யின், "சிறியோர் பெரும்பிழை செய்தனராயின், பெரியோரப்பிழை பொறுத் தலு மரிதே" (**நறுந்தொகை**) என்றவாறு, பிழையின் கொடுமையால் அவர் கள் மனம்பொறாது கோபித்தால் அக்கோபம் தன்பயனைத்தராது நீங்காதாதலால், அதனால் வருந் தீங்கை விலக்குதல் எவராலுமாகாது என்பதுகருத்து. "குணமென்னுங் குன்றேறி நின்றார்வெகுளி, கணமேயுங் காத்தலரிது" என்றார் **திருக்குறளி**லும். மலையினிடத்து ஆரவாரிக்கும் அருவி கீழ்விழுவதுபோலப் பெரியாரைப் பிழைத்தவர் கெடுவரென்பது, இதிலுள்ள விளியில் தோன்றும்.

புரைதீர்ந்தார்மாட்டும், மாடு - ஏழனுருபு. **உண்மை** - உயர்வுசிறப்பு. இதனை எச்சவும்மையாகக் கொண்டால், எவரிடத்தும் வெறுப்பன செய்ய லாகாதென்பது போதரும். நாட்டுக்கு நன்மை - நிலவளம் நீர்வளம் முதலிய பலவளங்களையும் உடைமை. 'வெறுத்தபின்' என்றது எதிர்கால வினையெச்சத்தின் தன்மையது. 'போக்குதல்' என்றும் படிக்கலாம். (க)

ஈஙூஉ. பொன்னே கொடுத்தும் புணர்தற் கரியாரைக்
கொன்னே தலைக்கூடப் பெற்றிருந்து—மன்னோ
பயனில் பொழுதாக் கழிப்பரே நல்ல
நயமி லறிவி னவர்.

(இ - ள்.) நல்ல நயம் இல் அறிவினவர் - சிறந்த மேன்மை யில்லாத அறிவையுடைய கீழ்மக்கள்,—பொன்னே கொடுத்தும் புணர்தற்கு அரி யாரை-(அதிகமாகப்) பொன்னையே (காணிக்கையாகக் கொண்டுபோய்க்) கொடுத்தாலும் சினேகித்தற்கு அரியரான பெரியோர்களை, கொன்னே-ஒன்றுந் தாராமலே, தலைக்கூட பெற்றிருந்தும் - சினேகிக்கப் பெற்று வைத்தும்,-அன்னோ-ஐயோ! பயன் இல் பொழுது ஆ கழிப்பரே - (அக் காலத்தை நல்ல பயன் தருவதாகச் செய்வித்துக்கொள்ளாமல்) பிரயோ சனமில்லாத [வீண்] காலமாகக் கழிப்பார்களே! (எ - று.)

அருமையான பெரியோர் வலியத் தம்மிடம்வந்து கூடியபொழுதும் அவர்களைக்கொண்டு நன்மைபெறுமற் காலங்கழிப்பதும் பெரியாரைப் பிழைத்தலாம்; ஆதலின், அவ்வாறு செய்யலாகாது என்பது கருத்து.

. பொன்னே, ஏ-உயர்வுசிறப்பு. கொடுத்தும், பெற்றிருந்தும் என்பவற்றில் உள்ள உம்மைகளும் இப்பொருளனவே. அன்னே-அந்தோ, ஐயோ என்பனபோல, இரக்கப்பொருள்குறிக்கும் இடைச்சொல்; 'கழிப்பரே' என்பதில், ஏகாரமும் - இப்பொருளது. (உ)

ககூஉ. அவமதிப்பு மான்ற மதிப்பு மிரண்டு
மிகைமக்க ளான்மதிக்கற் பால—நயமுணராக்
கையறியா மாக்க ளிழிப்பு மெடுத்தேத்தும்
வையார் வடித்த நூ லார்.

(இ - ள்.) அவ மதிப்பும்-தாழ்ந்தமதிப்பும், ஆன்ற மதிப்பும்-உயர்ந்த மதிப்பும், இரண்டும்—, மிகை மக்களால்-பெருமையையுடைய மேன்மக்களினால், மதிக்கல் பால - மதிக்கத்தக்க தன்மையையுடையனவாம்; நயம் உணரா-நற்குணத்தை அறியமாட்டாத, கை அறியா-நல்லொழுக்கத்தையும் (தாம்ஒழுக) அறியாத, மாக்கள் - கீழ்மக்கள் செய்கின்ற, இழிப்பும்-அவமதிப்பையும், எடுத்து ஏத்தும் - சிறப்பித்துப் புகழ்தலையும், வடித்த நூலார்-தெளிந்தெடுத்த நூல்களை உணர்ந்த பெரியோர்கள், வையார்-(ஒரு பொருளாக மனத்திற்) கொள்ளமாட்டார்கள்; (எ - று.)

'நாயின்மேலேறி வையாளிவிட்டா லென்ன, வீழ்ந்தாலென்ன?' என்ற **பழமொழி**ப்படி, அற்பர் புகழ்ந்தாலும் இகழ்ந்தாலும் அதனைப் பிறர்க்கு வருவதோர் உயர்வும் தாழ்வும் இல்லை யென்பதாம். பெரியாரது மதிப்பின் சிறப்புக்கூறுவார், சிறியாரது மதிப்பின் சிறப்பின்மையையும் உடன் கூறினார்.

ஆன்ற என்பதில், சால் என்பதன் மரூஉவாகிய ஆல்-பகுதி; 'அகன்ற' என்பதன் மரூஉ என்னவுமாம். முதலடியில், உம்மைபெற்ற சொற்கள், ஈற்றில் இரண்டு என்னுந் தொகை பெற்றன. மதிப்பு - தொழிற்பெயர்; 'அவ' - இன்மை யுணர்த்துவதொரு வடமொழி உபசர்க்கம். மிகை - மிகுதி; தொழிற்பெயர்: ஐ - விகுதி.

'கையறியாமக்கள்' என்னுது 'மாக்கள்' என்றது - அவர்கள் விலங்கின் தன்மையென்னும் இழிவு தோன்றற்கு. உணரா, அறியா என்னும் எதிர்மறைப் பெயரெச்சங்கள் அடுக்கி, 'மாக்கள்' என்னும் ஒருபெயரைக் கொண்டன; "மூவா முதலா வுலகம்" என்ற **சிந்தாமணி**யிற் போல. ஏத்து-முதனிலைத் தொழிற்பெயர்.

இச்செய்யுளை, மேல்வரும்உகூச-ஆஞ்செய்யுளோடுஒப்பிட்டுக்காண்க.(ங)

ககூச. விரிகிற நாகம் விடருள தேனு
முருமின் கடுஞ்சினஞ் சேணின்று முட்கு
மருமை யுடைய வரண்சேர்ந்து மூய்யார்
பெருமை யுடையார் செறின்.

(இ - ள்.) விரி நிறம் நாகம்-படம்விரிக்குந் தன்மையையுடைய ஒளியையுடைய பாம்பானது, விடர்உளது எனும்-வெடிப்புநிலத்திலுள்ளே

இருந்தாலும், உருமின் கடு சினம்-இடியினது மிக்ககோபத்தாலாகியது போன்ற ஒலி, சேண்நின்றும்-வானத்தில் வெகுதூரத்திலிருக்கவும், உட்கும்-(அதற்கு) அஞ்சும்; (அதுபோல), பெருமை உடையார்செறின்-பெருமைக்குணமுடையவர்கள் கோபிப்பாராயின், (அவர்க்குப் பிழைசெய்த பிறர்), அருமை உடைய அரண் சேர்ந்தும்-(பிறரால் அழித்தற்கும் புகுதற்கும்) அரிய காவலிடத்தைச் சேர்ந்திருந்தாலும், உய்யார் - (அவா கோபத்துக்குத் தப்பி) உயிர் வாழமாட்டார்; (எ - று.)

எடுத்துக்காட்டுவமையணி. பெரியாரைப் பிழைத்தலினு லுண்டாகிற கேட்டைத் திருஷ்டாந்தமுகமாய் விளக்கினர். "பிறந்தமைந்த சாபுடையாராயினு முய்யார், சிறந்தமைந்த ஈசார் செறின்" என்றார் **திருக்குறளி**லும்.

கடுஞ்சினம்-இடியோசைக்கு இலக்கணை. "வானின்றுலகம்வழங்கிவருதலால்" என்ற **திருக்குறளி**ற்போல, 'உற்ப' என்பது-'நின்று' எனத் திரிந்து நின்றது; தன்கருத்தாவின்வினையைக் கொண்டு முடிதற்கு ஏற்ற செய்தென்னும் வாய்பாட்டு வினையெச்சம், 'உட்கும்' என்னும் பிறகருத்தாவின் வினையைக்கொண்டு முடிதற்கு எளிமையால், அதனை அதற்கு ஏற்ற செயவெனெச்சத்தின் திரிபாகக் கொள்ளவேண்டிய தாயிற்று. பாம்பு இடியோசைக்கு அஞ்சிவருந்துதல், இயல்பு. ஈகம்-வடசொல்; ஈகத்தில்வாழ்வது; **தத்திதாந்தநாமம்**; ஈகம்-மலையும், மரமும். அரண்-ஈடணமென்ற வடசொல்லின் திரிபு. (சு)

கஈரு. எம்மை யறிந்திலி ரெமரேபோல்வா ரில்லென்று
தம்மைத்தாஞ் சொல்வது சோலவன்று—தம்மை
யரியரா நோக்கி யறனறியுஞ் சான்றோர்
பெரியரா கொள்வது கோள்.

(இ - ள்.) 'எம்மை அறிந்திலிர்-எமது சிறப்பை (நீவிர்) அறிந்தீரல்லீர்: எம்போல்வார் இல் - எம்மைப்போன்றவர் (உலகத்தில்) இல்லை,' என்று—, தம்மை தாம் கொள்வது-தம்மைத்தாமே சிறப்பித்துக்கொள்வது, கோள் அன்று-ஒரு பெருமையாகாது; அறன் அறியும் சான்றோர்-தருமங்களை அறிந்த மேன்மக்களால், தம்மை அரியர் ஆ நோக்கி-தம்மை (உலகத்தில் பிறர்க்கு) அருமையான குணங்களை யுடையவராகப் பார்த்து, பெரியர் ஆ கொள்வது - பெரியோர்களாக அங்கீகரித்து மதிக்கப்படுவதே, கோள்-(ஒருவர்க்குப்) பெருமையாம்; (எ - று.)

இதனால், பெரியார் தம்மைத் தாமே நன்கு மதித்துக்கொள்ளாரென்பதும், பெரியாரால் மதிக்கப்படுவதே பெருமையென்பதும் கூறப்பட்டன.

முதலடியில் 'எம்' என்றது, செருக்குப்பற்றிவந்த தன்மைப்பன்மை: அறிந்திலிர்-முன்னிலைப்பன்மை யெதிர்மறை யிறந்தகாலமுற்று. கோள்-கொள்ளப்படுவது; செயப்படுபொருள் விகுதி கெட்டு முதல்நீண்ட பெயர்; முதனிலை திரிந்ததொழிலாகுபெய ரென்பாரு முளர்.

இச்செய்யுளை, மேல் நஉ0-ஆஞ் செய்யுளோடும், "வியவற்கவெஞ் ஞான்றுந் தன்னை" என்ற **திருக்குறளோ**டும், "தனை வியப்பிப்பான் தற் புகழ்தல்" என்று தொடங்கும் **நீதிநெறிவிளக்கத்தோ**டும் ஒப்பிட்டுப் பார்க்க. (நி)

கசுசு. நளிகடற் றண்சேர்ப்ப நாணிழற் போல
விளியுஞ் சிறியவர் கேண்மை—விளிவின்றி
யல்கு நிழற்போ லகன்றகன் றேறுமே
தொல்புக ழாளர் தொடர்பு.

(இ - ள்.) நளி-பெரிய, கடல்-கடலினது, தண்-குளிர்ந்த, சேர்ப்ப - துறையையுடையவனே! சிறியவர் கேண்மை-கீழோரது நட்பு,-நாள் நிழல் போல - உதயகாலத்துச் சாயைபோல, விளியும் - வரவரச் சுருங்கும்; தொல் புகழ் ஆளர் - தொன்றுதொட்டு [பரம்பரையாக] வருகிற கீர்த்தி யையுடைய பெரியோரது, தொடர்பு - சிநேகம்,-விளிவு இன்றி-(அங்ஙனஞ்) சுருங்குதலில்லாமல், அல்கு நிழல் போல் - சாயங்காலத்துச் சாயை போல, அகன்று அகன்று ஓடும் - மிகவும் வளர்ந்து நீளும்; (எ - று.)

இச்செய்யுளில் உபமானம் உபமேயம் உவமவுருபு பொதுத்தன்மை என்னும் நான்கும் அமைந்திருப்பதால், **முற்றுவமையணி**; வடநூலார் **பூர்ணோபமாலங்காரம்** என்பர்.

இச்செய்யுளால், பெரியார்நட்பின் சிறப்பும், சிறியார்நட்பின் சிறப் பின்மையும் ஒருங்கு கூறப்பட்டன. "நிறைநீர நீரவர் கேண்மை பிறைம திப், பின்னீரபேதையார் நட்பு" என்றார் **திருக்குறளி**லும். "பெரியவர் கேண்மை பிறைபோல நாளும், வரிசை வரிசையா நந்தும் - வரிசையால், வானூர் மதியம்போல் வைகலுந்தேயுமே, தானே சிறியார் தொடர்பு" என்ற செய்யுளோடு இதனை ஒப்பிடுக. "**ஆரம்பகுர்வீ ரூயிணீக்ரமேண, லக்ஷீபுராவ்ருத்திமதீசபஸ்சாத் - திநஸ்யபூர்வார்த்த பரார்த்த பிந்நா, சாயேவ மைத்ரீ கலஜ்ஜநாநாம்**" என்னும் வடநூல்மேற்கோளும் காண்க.

பிற்பகற்பொழுது கழியுந்தோறும் நிழல் நீண்டுகொண்டே வருதல் போலப் பெரியார்நட்பு அவர் முடியுமளவும் மிகுந்துகொண்டேவரும்; **ஆத** லால், அவர் சிறத்துப் பிழைசெய்யாமல் அவரைத் துணைக்கொள்க: சிறி யோர்நட்பு முதலில் அதிகமாயிருப்பினும் வரவரக் குறைந்துவிடுமாதலால் அவர்கள்நட்பைக் கொள்ளற்க என்பது கருத்து. பெரிய கடலைச்சேர்ந்த நாடு குளிர்ச்சி பெற்றிருப்பதுபோலப் பெரியாரைப் பிழையாதார் நன்மை யெய்துவரென்ற கருத்தை, இதிலுள்ள விளி, தோற்றுவிக்கும்.

பெரியாரைப்பிழையாமைக்கு அவர்நட்பின் பெருமையையறிதல் ஏது வாகுமாதலால், இப்பாட்டு இவ்வதிகாரத்தில் வைக்கப்பட்டது.

நளி-பெருமையுணர்த்தும் உரிச்சொல்; "தடவுங் கயவும் நளியும் பெருமை" என்னுந் **தொல்காப்பியத்**தால் உணர்க. சேர்ப்பன் - நெய்தல் நிலத்தலைவன்பெயர். ஒருவர்க்கொருவர் தேமே சமாசாரங்களைக் கேட்ப தனால், **கேண்மை**யென்று நட்புக்குப்பெயர்; இது- பண்புச்சொல். அல்கு என்னும் பகுதிக்கு- சுருங்கு என்று பொருள்; இது, பகற்பொழுது சுருங் குதற்கு இங்கு ஆயிற்று. அகன்று அகன்று-மிகுதிபற்றிய அடுக்கு. (சு)

கசூள. மன்னர் திருவு மகளி ரெழினலமுங்
துன்னியார் துய்ப்பர் தகல்வேண்டா—துன்னிக்
குழைகொண்டு தாழ்ந்த குளிர்மர மெல்லா
முழைதங்கட் சென்றூர்க் கொருங்கு.

(இ - ள்.) மன்னர் திருவும் - அரசர்களது செல்வத்தையும், மகளிர் எழில் நலமும்-பெண்களது வளர்ச்சியோடுகூடிய அழகையும், துன்னியார்-(அவரை இடைவிடாது) சேர்ந்தவர்கள், துய்ப்பர் - அனுபவிப்பார்கள்; தகல் வேண்டா-(அவற்றிற்கு இன்னும்) தகுதியுடையவரென்பது வேண்டுவதில்லை; (எதுபோலவெனில்),—குழை கொண்டு தாழ்ந்த-தளிர்களை (த்தம்மிடத்தே) கொண்டு தாழ்ந்துள்ள, குளிர் மரம்-குளிர்ந்த மரங்கள், தங்கண் துனனி சென்றூர்க்கு எல்லாம் - தம்மிடத்து நெருங்கி வந்தவர்களுக் கெல்லாம், ஒருங்கு - (வேறுபாடில்லாமல்) ஒரு தன்மையாக, உழை-இடமாம்; (எ - று.)

"பயன்மர முள்ளூர்ப் பழுத்தற்றுற் செல்வம், நயனுடையான் கட்படின்" (**திருக்குறள்**) என்றவாறு எல்லார்க்கும் எளிதில் தவறுமற் பயன் கொடுத்து உதவுகின்ற அரசர்களது சிறப்பு இதனுற்கூறப்பட்டது; படவே, ஆற்றலாற் பெரியராய அவர்களைப் பிழையாமற் பலரும் பயன் பெற வேண்டுமென்பது கருத்து.

இதில் 'மன்னர்திரு, மகளிரெழினலம்' என்னும் இரண்டு பொருள்களையும், 'துன்னியார் துய்ப்பர் தகல்வேண்டா' என்னும் பொதுவாகிய ஒருதருமத்தில் முடித்ததனால், **ஒப்புமைக் கூட்டவணி**; வடநூலார் **துல்ய யோகிதாலங்கார**மென்பர். பின்னிரண்டடி - **எடுத்துக்காட்டுவமையணி**; இவ்விரண்டும், சேர்ந்துவந்ததனால், **சேர்வையணி**; வடநூலார் **'ஸங்கரம்'** என்பர்.

மகளிர் - பொதுமகளிர் எனக் கொள்ளல், தகுதி. தாழ்ந்தோர் உயர்ந்தோர் என்னும் வரம்பு இன்றி வந்தவரையெல்லாந் தம்மிடஞ்சேர்க்கின்ற அறிவில்லாத மரங்கள்போலவும் வேசையர்போலவும், அரசர் பெரியாரைச் சிறியாரோடு வாசியறச் சேர்த்தலும் பெரியாரைப் பிழைத்தலாம் என்று இப்பாட்டுக்குக் கருத்துக் கூறுவாரு முளர்.

இச்செய்யுளை "ஆஸந்நமேவந்ருபதிர் பஜதேமநுஷ்யம், வித்யாவிஹீந மகுலீநமஸங்கதம்வா - ப்ராயேணபூமிபதயஃ ப்ரமதாலதாஶ்ச, யத் பார்ஶ்வதோபவதி தத் பரிவேஷ்டயந்தி" என்னும் வடநூல் மேற்கோளோடு ஒப்பிட்டுக் காண்க. (எ)

கசூஅ. தெரியத் தெரியுந் தெரிவிலார் கண்ணும்
பிரியப் பெரும்படர்நோய் செய்யும்—பெரிய
வுலவா விருங்கழிச் சேர்ப்பயார் மாட்டுங்
கலவாமை கோடி யுறும்.

(இ - ள்.) உலவா - நீர்வற்றாத, இருங் கழி - மிக்க கழியையுடைய, பெரிய—, சேர்ப்ப-கடல்துறையையுடையவனே! தெரிய தெரியும் தெரிவு இலார்கண்ணும்-விளங்க ஆராயும் ஆராய்ச்சி யில்லாதவரிடத்தும், பிரிய - (ஒருவன் கூடிப்) பிரிய, (அப்பிரிவு அவனுக்கு), பெரு படர் நோய் செய்யும்-மிக்க நினைவிற்கு ஏதுவான துன்பத்தைச் செய்யும்; (ஆதலால்), யார்

மாட்டும் கலவாமை - எவரிடத்தும் சிநேகஞ்செய்யாமை, கோடி உறும்- (சிநேகஞ்செய்து பிரிதலினும்) பலமடங்கு நல்லது; (எ - று.)

அறிவிலாரிடத்துக் கூடிப்பிரியினும் பெருந்துக்கமுண்டாமாதலால், அறிவுடைய பெரியோரைக் கூடிப்பிரிதலா லுண்டாகுந் துக்கத்துக்கு ஒருவரையறையில்லை; ஆதலால், சினேகஞ்செய்து பிரிதலினும் சிநேகஞ்செய்யாமை நல்லது என்பதாம். சிநேகித்தற்குமுன்பே செவ்வையாக ஆராய்ந்து ஒருவரோடு கூடவேண்டும்; கூடினபின்பு பிரிதலாகாது என்பது கருத்து. "கூடிப் பிரியேல்" என்ற **ஔவையார்** அமுதமொழி உணரத்தக்கது. இதனால், பெரியாரைக் கூடிப்பிரிதல் பிழையாமெனக் குறிப்பித்தவாறும்.

இச்செய்யுளிலுள்ள விளரி, பெரியகடல் கழியைப் பிரியாதவாறு போலப் பெரியோரும் தம்மையடுத்த சிறியோரைப் பிரியாரென்ற கருத்தைப் புலப்படுத்தும்.

படர் - பிரிவாற்றுமையா லுண்டாகுந் துன்பத்தை எப்பொழுதும் நினைத்தல்: சிந்தை; இப்பொருளை, (**திருக்குறள்**) "படர்மெலிந்திரங்கல்"; 'தனிப்படர்மிகுதி' என்ற இடங்களிற் காண்க: "படரே யுள்ளல் செலவுமாகும்" என்ற **தொல்காப்பியத்**தால், இது ஓர் உரிச்சொல்லாமென அறிக. உம்மை இரண்டனுள், முன்னது - இழிவுசிறப்பு. பின்னது - முற்று. கோடி - வடசொல்: நூறுலட்சம்; மிகப்பலவான எண்ணிற்கு ஒன்று எடுத்துக்காட்டியது. இச்செய்யுளின் முதலடியோடு மேல் உரை - ஆந் செய்யுளின் மூன்றாமடியை ஒப்பிடுக. (அ)

கசஎ. கல்லாது போகிய நாளும் பெரியவர்கட்
செல்லாது வைகிய வைகலு—மொல்வ
கொடாஅது கொழிந்த பகலு முரைப்பிற்
படா அவாம் பண்புடையார் கண்.

(இ - ள்.) கல்லாது - (படித்தற்கு உரிய நூல்களைப்) படியாமல், போகிய - கழிந்த, நாளும் - தினமும்,—பெரியவர்கண் - பெரியோர்களிடத்து, செல்லாது - (கேட்டற்குரிய நூற்பொருள்களை அறியும்பொருட்டுப்) போகாமல், வைகிய - கழிந்த, வைகலும் - தினமும்,—ஒல்வ - (தம்மாற்கொடுக்கக்) கூடிய பொருள்களை, கொடாது - தானஞ்செய்யாமல், ஒழிந்த - கழிந்த, பகலும் - தினமும்,—உரைப்பின் - சொல்லுமிடத்து,—பண்பு உடையார் கண் - நற்குணநற்செய்கையுடையாரிடத்து, படா ஆம் - உண்டாகாவாம்.

இதனால், பெரியாரது நற்குணநற்செய்கைகள் கூறப்பட்டன. இதனால் - கல்லாமையும், பெரியோரிடத்துச் செல்லாமையும் ஈயாமையும் தீக்குணங்க ளென்பது பெறப்படும்.

நாள், வைகல், பகல் என ஒருபொருளையே குறிக்கின்ற பலசொற்கள் அடுத்துவந்ததனால், **பொருட்பின்வருநிலையணி**. கல்லாதுபோகிய நாள் பெரியவர்கண்செல்லாதுவைகிய வைகல், ஒல்வகொடாது ஒழிந்த பகல் என்ற மூன்றுக்கும் இயையும்படி இறுதியில் 'பண்புடையார்கண்படாவாம்' என்ற வினையை வைத்தது, **கடைநிலைத்தொழில்தீவகவணி**.

பகற்போதின் இரண்டாவது பத்து நாழிகையே ஈதற்குக் காலமாதலால், பகலென்பது அப்பொழுதையே காட்டு மென்பர் ஒரு சாரார்.(கூ)

கஎ0. பெரியார் பெருமை சிறுதகைமை யொன்றிற்
குரியா ருரிமை யடக்கந்—தெரியுங்காற்
செல்வ முடையாருஞ் செல்வரே தற்சேர்ந்தா
ரல்லல் கஃப வினின்.

(இ - ள்.) தெரியும்கால் - ஆராயுமிடத்து, பெரியார் பெருமை-பெரியோர்களது பெருமைக்குணமாவது, சிறு தகைமை-(பெருமைபாராட்டாமல்) வணங்கியிருத்தலாம்;ஒன்றிற்கு உரியார் உரிமை-(கல்வி முதலியவற்றுள்யாதாயினும்) ஒன்றற்கு உரிமையுடையவர்களுக்கு உரிய குணமாவது, அடக்கம்-(மனமொழிமெய்கள்) அடங்கியிருத்தலாம் ; செல்வம் உடையாரும்-தனவான்களும், தன் சேர்ந்தார் அல்லல் கஃப எனின் - தம்மை அடுத்தவர்களது துன்பங்களை நீக்குவார்களாயின், செல்வரே - செல்வமுடையோரே யாவர்; (எ - று.)

இதனால், பெரியோர்களது வணக்கமும் அடக்கமும் பிறர்க்கு உதவி செய்தலும் கூறப்பட்டன. இவ்வாறுள்ள குணங்களை யுடையரான பெரியார் திறத்திற் பிழையற்க என்றவாறு.

(**நீதிநெறிவிளக்கம்**) "கல்வியுடைமை பொருளுடைமையென்றிரண்டு, செல்வமுஞ் செல்வ மெனப்படு-மில்லார், குறையிரந்து தம்முன்னர் நிற்ப போல் தாமுந், தலைவணங்கித்தாழப் பெறின்," (**திருக்குறள்**) "தாளாற்றித் தந்த பொருளெல்லாந் தக்கார்க்கு, வேளாண்மை செய்தற் பொருட்டு," "நயனுடையா னல் கூர்ந்தா ஞதல் செயுநீர, செய்யா தமைகலா வாறு" என்பவற்றை இங்கே அறிக.

சிறுதகைமை-சிறுமையாகிய தகைமை யென விரியும். செல்வமுடையார் என்ற பன்மைக்கு ஏற்ப 'தஞ்சேர்ந்தார்' என்னுமல் 'தற்சேர்ந்தார்' என்றது, **ஒருமைப்பன்மைமயக்கம்** ; "நடுக்குற்றுத் தற்சேர்ந்தார் துன்பந் துடையார்" என்ற இடத்துப்போல. (கo)

கஅ - ஆம் அதிகாரம்—நல்லினஞ்சேர்தல்.

அஃதாவது- தாம் நன்னெறியில் ஒழுகுதலேயன்றித் தம்மைச்சேர்ந்தவர்களையுந் தீநெறியினின்று விலக்கி நல்நெறியிற் செலுத்தவல்ல பெரியோர்களதுசேர்க்கை : நல்ல இனத்தைச் சேர்தல் என விரியும். பெரியோர்பக்கற் பிழையாம லொழுகுதலேயன்றி அவரைப்பிரியாமல் நட்புக் கொள்ளவும் வேண்டும் என உணர்த்துகின்றமையால், இது பெரியாரைப் பிழையாமையின்பின் வைக்கப்பட்டது.

கஎக. அறியாப் பருவத் தடங்காரோ டொன்றி
நெறியல்ல செய்தொழுகி யவ்வு—நெறியறிந்த
நற்சார்வு சாரக் கெடுமே வெயின்முறுகப்
புற்பனிப் பற்றவிட் டாங்கு.

(இ - ள்.) அறியா பருவத்து-அறிவுடையராகாதிருந்த இளம்பிராயத்தில், அடங்காரோடு-அடக்கமில்லாத அயோக்கியர்களோடு சேர்ந்து, நெறி அல்ல செய்து ஒழுகியவும் - சன்மார்க்கமல்லாத பாவகாரியங்க

ஆச் செய்து நடந்த குற்றங்களும், நெறி அறிந்த நல்சார்வு சார-நல்வழியை உணர்ந்த நல்லபெரியோர்களைச் சேர்தலால், புல் பனி வெயில் மூறுக பற்று விட்டு ஆங்கு - புல்லைச் சேர்ந்திருந்த பனித்துளி வெயில்மிகுதியால் (அதனைப்) பற்றுதலை விட்டாற்போல, கெடும் - அழியும்; (எ - று.)

இதனால், நல்வினைஞ்சேர்தலின்பயன் கூறப்பட்டது. **உவமையணி.**

அல்ல, ஒழுகிய - பெயர். முன்பின்னாக மாற்றி, செய்து ஒழுகியவை யாகிய நெறியல்லவையும் என்றும் உரைக்கலாம். ஒழுகிய**வ்**வும், வகரமெய்-**விரித்தல்விகாரம்.** நெறி - சாஸ்திர எற்பாடு. சார்வு - சார்தத்தக்கவர்க்குத் **தொழிலாகுபெயர்.** சார - காரணப்பொருளதாதலால், இறந்தகாலங்காட்டிய செயவென்னும் வினையெச்சம். விட்டால் என்பது-விட்டு எனத் திரிந்து, ஆங்கு என்னும் உவமையிடைச்சொல்லோடு சேர்ந்தது. (க)

கஎஉ. அறிமி னஞநெறி யஞ்சுமின் கூற்றம்
பொறுமின் பிறர்கடுஞ்சொற் போற்றுமின் வஞ்சம்
வெறுமின் வினைதீயார் கேண்மையெஞ் ஞான்றும்
பெறுமின் பெரியார்வாய்ச் சொல்.

(இ - ள்.) எஞ் ஞான்றும் - எப்பொழுதும், அறம் நெறி - தருமமார்க்கத்தை, அறிமின் - அறியுங்கள்; கூற்றம் - யமனுக்கு, அஞ்சுமின் - பயப்படுங்கள்; பிறர் கடு சொல் - அயலார்சொல்லும் வன்சொற்களை, பொறுமின்-பொறுத்துக்கொள்ளுங்கள்; வஞ்சம் - வஞ்சனையாகிய குணத்தை, போற்றுமின் - (உம்மிடம் வாராதபடி தடுத்துப்) பாதுகாத்துக்கொள்ளுங்கள்; வினை தீயார் கேண்மை-தீச்செயல்களையுடையவரது சினேகத்தை, வெறுமின்-வெறுத்துவிடுங்கள்; பெரியார் வாய்சொல்-பெரியோரது வார்த்தையை, பெறுமின்-கேட்கப்பெற்று (அங்ஙனமே) ஒழுகுங்கள்; (எ-று.)

'அறிமின்' முதலிய ஆறும்-ஏவற்பன்மை. 'அஞ்சுமின் கூற்றம்' என்றது - மரணம்வருவது இன்னபோதென்று நிச்சயிக்கப்படாமையால் அதற்குஅஞ்சி விரைந்து அறஞ்செய்யவிரும்புங்கள் என்றவாறு; தீவினைசெய்தல்பற்றி யமனுல்விதிக்கப்படுந் தண்டனையினின்று பயந்து நல்வினை செய்யுங்களென்றுங் கருத்துக்கொள்ளலாம். போற்றுமின் வஞ்சம்' என்ற விடத்திலுள்ள போற்றுதலென்பதை "செல்லிடத்துக் காப்பான் சினங் காப்பான்" என்ற **திருக்குறளில்** 'காத்தல்' என்பதுபோலக் கொள்க. இனி இவ்வாக்கியத்திற்கு - பிறர்செய்யும் வஞ்சனையினின்றும் உம்மை இரட்சித்துக்கொள்ளுமென்றும் பொருள்கொள்ளலாம். வினைதீயார் - தீவினையார் என விகுதி பிரித்துக்கூட்டப்பட்டது; வினையில் தீயவ ரென்றுமாம். பெரியார்வாய்ச்சொல் - பெரியோர்களது ஆசீர்வாதமுமாம்.

இந்தச்செய்யுளை "மாத்திரை முதலா (தொல். பொ. 416)" என்ற சூத்திரத்துப் பல நோக்காயோடியதற்கு மேற்கோளாக காட்டுவர், இளம்பூரணர். "நோக்காவது - கேட்போரை மீண்டும் நோக்கிப் பயன்கோடலையுடையவராகச் செய்யுங்கருவி" என்பர், நச்சினார்க்கினியர். இப்பாட்டினுள் "ஒரு வழிநின்ற 'எஞ்ஞான்றும்' என்பதனைப் பிரித்துப் பிறவழியுங் கூட்டி முடிக்கவேண்டுதலின் பிரிநிலை யெச்சமாயிற்று. இதனை விளக்கு [நடைநிலைத்தீவகம்] என்ப" என்றார், மயிலைநாதர். நல்வினைஞ்சேர்தற்கு எதிர்மறையாகிய தீயினஞ்சேர்தலை விலக்கவேண்டு மென்பார், அதுபோல இன்றியமையாத பிறவற்றையும் இனமாக உடனெடுத்துக்கூறினார். (உ)

களக. அடைந்தார்ப் பிரிவு மரும்பிணியுங் கேடு
முடங்குடம்பு கொண்டார்க் குறலாற்—றொடங்கிப்
பிறப்பின்னு தென்றுணரும் பேரறிவி னுரை
யுறப்புணர்க வம்மாவென் னெஞ்ச.

(இ - ள்.) தொடங்கி-(நூல்களை) ஆராயத்தொடங்கி, 'அடைந்தார் பிரிவும்-(தம்மோடு) சேர்ந்த பந்துக்கள் சினேகிதர் முதலியோரை நீங்குதலும், அரு பிணியும்-(தீர்தற்கு) அருமையான நோய்களும், கேடும்-(மற்றும் பலவகைத்) தீங்குகளும், உடம்பு கொண்டார்க்கு - இவ்வுடம்பைப் பெற்ற மனிதர்களுக்கு, உடங்கு- ஒருசேர, உறலால்-நேர்தலால், பிறப்பு இன்னது-சன்மம் இனிமையைத்தருவதன்று', என்று—, உணரும்-அறிகின்ற, பேர் அறிவினுரை - சிறந்த புத்தியையுடைய நல்லோர்களை, என் நெஞ்சு-எனது மனம், உற புணர்க-உறுதியாகச் சேரக்கடவது ; (எ-று.) அம்மா - அசை ; இவ்வசைச்சொல்நீட்டமும் எதிர்முக மாக்குதலால், விளியாகக் கொள்ளப்படும் : (தொல் - சொல். 155.) இப்பிடிப்பட்ட நற்கருத்து அருமையாகத் தனக்கு உண்டாகியதைப்பற்றி 'அம்மா' என வியந்ததாகவுங் கொள்ளலாம்.

பிறப்பின் துன்பங்களைக் கண்டு அதனை வெறுத்திருக்கின்ற ஞானியரைச்சேர்தல் நன்மைக்கு எதுவா மென்பது கருத்து.

அடைந்தார்ப்பிரிவு - இரண்டாம்வேற்றுமைத்தொகை யாதலால், உயர்திணைப்பெயர்முன் வல்லெழுத்து மிக்கது: "இயல்பின் விகாரம்". உடங்கு - 'ஒருங்கு' என்பதுபோல, ஒருவகை யிடைச்சொல். 'உறலால்,' என்னும் மூன்றாம்வேற்றுமைக்கு, 'இன்னது' என்பது முடிக்குஞ்சொல். இனி, 'புணர்க' என்பதை முடிக்குஞ் சொல்லாகக் கொண்டு, பிறப்பிற் பல துன்பங்கள் சேர்தலால் (அப்பிறப்பையொழிக்கும் பொருட்டு) என் மனம் அதன் தன்மையை யறிந்தோரைச் சேர்கவென்றும் பொருள் கொள்ளலாம். தொடங்கி உணரும் என்று இயையும். தொடங்கி உறலால் என்று இயைப்பினுமாம். தொடங்கு இப்பிறப்பு என எடுத்து-ஊழ்வினை தொடர்தற்கு இடமான இந்தப்பிறவி யெனவுங் கொள்ளலாம். (க)

களக. இறப்ப நினையுங்கா லின்னு தெனினும்
பிறப்பினை யாரு முனியார்—பிறப்பினுட்
பண்பாற்று நெஞ்சத் தவர்களோ டெஞ்ஞான்று
நண்பாற்றி நட்கப் பெறின்.

(இ - ள்.) பிறப்பினுள்-பிறந்த மனித சன்மத்திலே, பண்பு ஆற்றும் நெஞ்சத்தவர்களோடு-நற்குணமுடையவற்றைச் செய்யவேண்டு மென்னும் மனமுடைய நல்லோர்களுடனே, நன்பு ஆற்றி - சினேகத்தைச்செய்து, எஞ்ஞான்றும் - எப்பொழுதும், நட்க பெறின் - (பிரியாமல் ஒருவர் அவர்களோடு) கூடி வாழப்பெற்றால்,-இறப்ப நினையுங்கால்-மிகவும் ஆலோசிக்குமிடத்து,—இன்னுது எனினும்-(பிறப்பு) துன்பந்தருவதாயினும், பிறப்பினை-(இந்தச்) சன்மத்தை,யாரும்-எவரும், முனியார்-வெறுக்கமாட்டார்,

பிணி பசி மூப்புத் துன்பங்களையும் சிலவாழ்நாளையு முடைய மனிதப் பிறப்புக்குச் சிறப்பைத்தரும் பெரும்பயனுவ்து, நல்லினஞ்சேர்தலே என்பதாம்.

பெறின் என்றது, அங்ஙனம் சிநேகித்தலினது அருமையைக் குறித்தது. நினையுங்கால் இறப்ப இன்னது என்றும் இயைக்கலாம். (அ)

களரு. ஊரங் கணநீ ருரவுநீர்ச் சேர்ந்தக்காற்
பேரும் பிறிதாகித் தீர்த்தமா—மோருங்
குலமாட்சி யில்லாருங் குன்றுபோ னிற்பர்
நலமாட்சி நல்லாரைச் சார்ந்து.

(இ - ள்.) ஊர் அங்கணம் நீர் - ஊரிலுள்ள சலதாரையினது நீரானது, உரவு நீர் சேர்ந்தக்கால் - சிறப்புப்பொருந்தியதொரு (நதி குளங்களின்) நீரைச் சேர்ந்தால், பேரும் பிறிது ஆகி - (அதற்குப்) பெயரும் வேறாய், தீர்த்தம் ஆம்-(அது) புண்ணியதீர்த்தமாய்விடும்; (அதுபோலவே),—குலம் மாட்சி இல்லாரும் - (தாம் பிறந்த) குலத்தின் பெருமையில்லாதவர்களும், நலம் மாட்சி நல்லாரை சார்ந்து-நற்குணங்களையுடைய உயர்குடிப்பிறந்தோரை அடைந்து, (அதனால்), குன்று போல் நிற்பர் - மலைபோலப் பெருமையுடையராய் நிற்பர்; (எ - று.)

எடுத்துக்காட்டுவமையணி. 'ஓரும்' என்பது - அசைநிலை; "அஞ்சுவ தோரு மறனே" என்ற **திருக்குறளிற்**போல. இனி, எதிர்காலப்பெயரெச்சமாகக் கொண்டு, (யாவரும்) அறியும் என்றும் பொருளுரைக்கலாம்: ஏவற்பன்மையுமாம்; (நீங்கள்) அறியுங்கள் என்று பொருள். அங்கணம், தீர்த்தம் - வடசொற்கள்.

'குன்றுபோல்' என்ற உவமையால், அளவுசெய்யப்படாத கல்விப் பொருளும், பிறராற் குற்றஞ்சொல்லப்படாத அசைவின்மையும், கல்வியறிவு ஒழுக்கங்களால் யாவரும் அறிய நிற்றலும், பொருள்வரும்படி இல்லாக்காலத்தும் பிறர்க்கு உபகாரஞ்செய்தற்கு உடன்படுதலும் முதலிய குணங்களையுடைய ராவரெனக் கொள்க.

"நல்லமணமுள்ள தொன்றை நண்ணி யிருப்பதற்கு, நல்லமண முண்டா நயமதுபோல் - நல்ல, குணமுடையோர் தங்களுடன் கூடியிருப் பார்க்குக், குணமதுவே யாஞ்சேர்வு கொண்டு" என்னும் **உபதேசரத்தினமாலை**யோடும், "ஸத்ஸங்காத்பவதிஹி ஸாதுதாகலாநாம்" என்னும் வடநூல் மேற்கோளோடும் இதனை ஒப்பிடுக.

'பேரும்பெரிதாகி' என்றும் பாடம். (கூ)

களசு. ஒண்கதிர் வாண்மதியஞ் சேர்தலா லோங்கிய
வங்கண் விசும்பின் முயலுந் தொழப்படூஉங்
குன்றிய சீர்மைய ராயினுஞ் சீர்பெற்றுவர்
குன்றன்னுர் கேண்மை கொளின்.

(இ-ள்.) ஓங்கிய-உயர்ந்த, அம் கண்-அழகிய இடத்தையுடைய, விசும்பின்-ஆகாயத்திலே,—ஒள் - ஒளிக்கமாகிய, கதிர் - கிரணங்களையுடைய,

வாள்-பிரகாசமான, மதியம்-சந்திரனை, சேர்தலால்-அடைந்திருத்தலினால், —முயலும்-முசலும், தொழப்படுஉம்-(யாவராலும்)வணங்கப்படும்; (அது போல),—குன்றிய சீர்மையர் ஆயினும்-குறைந்தசிறப்புள்ளவர்களானாலும், குன்றுஅன்னர் கேண்மை கொளின்-மலையையொத்த பெரியோர்களது சினேகத்தைக் கொண்டால், சீர் பெறுவர்-(அதனால் தாமும்) சிறப்புப் பெறுவர்; (எ - று.)

இதுவும் - **எடுத்துக்காட்டுவமை**. முயலுக்குஅஞ்சலிசெய்தல் தொழுவார்கருத்தி லில்லையாயினும், அவ்வஞ்சலியைச் சந்திரனிடத்தே யிருந்து முயல் தானும் பெறுதல்போல, சீர்மை குன்றினர்க்குச் சிறப்புச்செய்தல் செய்பவரது கருத்திலில்லையாயினும் அச்சிறப்பை நல்லோரினத்திலே யிருந்து தாமும் பெறுவரென்பது, கருத்து. "மிக்காரைச்சேர்தன் மிக மாண முன்னினிதே" என்றார், **இனியவை நாற்பதிலும்**. "வ்யபதேஶாத மஹதாம், வித்திஸ்ஸஞ்ஜாயதேபரா - ஶஶிநோவ்யபதேஶாத, வஸந்தி ஶஶகாஸ் ஸுகம்" என்பது நோக்கத்தக்கது.

சந்திரனைத் தோன்றுங்காலத்துத் தொழுதல் இயல்பு. சந்திரனிடத் திலுள்ள களங்கத்தை முயலென்றும், மானென்றும், மறுவென்றும், மலை யென்றும், பூமியின்சாயை யென்றும், மரமென்றும் கூறுவது, கவிசமயம்.

'தூதுரதந்தனென்னும் அரசயானைக்கு ஒரு முயல் சந்திரமண்டலத் தைக் காட்டி அதனைத் துரத்திவிட்டுத் தன்னினத்தோடு சுகித்திருந்தது' என்னும் பஞ்சதந்திரகதை, இங்கே நினைக்கத் தக்கது. "குறுமறு நிறங்கி ளர மதிநிறைந்து" என்பது அகம்.

'ஒள்கதிர்' என்பதில், ளகரம் முன் டகரமாகி, பின்பு ணகரமாகமெலி ந்தநெனக் கொள்வர். 'வான் மதியம்' என்றும் பாடம்.

இச்செய்யுள், **இனவெதுகை**யால் வந்தது. (சு)

கஎஎ. பாலோ டளாயநீர் பாலாகு மல்லது
நீராய் நிறந்தெரிந்து தோன்றுதாந்—தேரிற்
சிறியார் சிறுமையுந் தோன்றுதா னல்ல
பெரியார் பெருமையைச் சார்ந்து.

(இ - ள்.) பாலோடு அளாய நீர் - பாலுடனே கலந்தநீரானது, பால் ஆகும் அல்லது-அந்தப்பாலாய்த்தோன்றுமேயல்லாமல், நீர் ஆய் நிறம்தெரி ந்து தோன்றுது-நீராய்த் தன்நிறம் விளங்கிக் காணப்படாது;(அதுபோல), தேரின் - ஆராயுமிடத்து, நல்ல பெரியார் பெருமையை சார்ந்து-நற்குண முடைய பெரியோர்களது மகிமையைச் சேர்தலினால், சிறியார் சிறுமையும் தோன்றுது - அற்பர்களது கீழ்மைக்குணமும் வெளிப்படாது ; (எ-று.)

இதுவும்; **எடுத்துக்காட்டுவமையணி**யே. "தெருண்ட மேலவர் சிறிய வர்ச்சேரினு மவர்தம், மருண்டதன்மையை மாற்றுவ ரெனுமிது வழக்கே" எனக் கவிக்சக்கரவர்த்தியாகிய **கம்பர்** கூறியதும் இருக்கருத்துப்பற்றியே.

அளாவிய என்னும் இறந்தகாலப் பெயரெச்சம், அளாய என மருவி யது; அளாவு என்னும் முதனிலை ஈற்றுயிர்மெய் குறைந்து இறந்தகாலங்

காட்டும் யகர இடைநிலையும் அகரவிகுதியுஞ் சேர்ந்து வந்ததென்னலாம். 'நிறந்திரிந்து' என்னும் பாடத்துக்கு - வருணம் வேறுபட்டு என்க. 'ஆம்' என்பது - இரண்டுவாக்கியத்திலும் **அசை.** (எ)

களஅ. கொல்லே யிரும்புனத்துக் குற்றி யடைந்தபு
லொல்காவே யாகு முழுவ ருழுபடைக்கு
மெல்லியரே யாயினு நற்சார்வு சார்ந்தார்மேற்
செல்லாவாஞ் செற்றூர் சினம்.

(இ - ள்.) கொல்லே-(காட்டினுள்ள) கொல்லைகளிலும், இரு புனத்து-பெரிய வயல்களிலும், குற்றி - மரக்கட்டையை, அடைந்த - அடுத்துள்ள, புல்-புற்கள், உழுவர் உழுபடைக்கு-உழுபவர்களது கலப்பைக்கு, ஒல்காவே ஆகும்-அசையாதனவேயாம்; (அதுபோல), மெல்லியரே ஆயினும்-(இயற்கையில்) வலியில்லாதவர்களே யானாலும், நல் சார்வு சார்ந்தார் மேல்-நல்லினத்தாரைச சேர்ந்தவர்களின்மேல், செற்றூர் சினம் - பகைத்தவர்களது கோபம், செல்லா ஆம் - பயன்படாவாம்; (எ - று.)

இதுவும், **எடுத்துக்காட்டுவமையணி.** குற்றி பெயர்க்கப்படாமையால், அதை யடித்த புல்லும் பெயர்க்கப்படாது: அதுபோல, பகைவர்சினம் வலியாரிடத்துச் செல்லாமையால் அவரையடுத்த எளியாரிடத்துஞ் செல்லாது என்பது கருத்து. 'சத்துருக்கள் படைசெய்யமாட்டார்கள்; அவர்களே வெல்லப்போகாது' என்பது, பழைய வுரை. "தக்காரினத்தனுய்த் தாழ்ஞ்ழுக வல்லானைக், செற்றூர் செயக்கிடந்தில்" என்றார், **திருவள்ளுவனாரும்.** 'மெலியோர் வலியவிரவலரை யஞ்சார், வலியோர்தமைத் தாம் மருவின்'' என்ற **நன்னெறி**யையுங் காண்க.

குற்றி - குறுமையையுடையதென மரக்கட்டைக்குக் காரணப்பெயர்; குறு என்னும் பண்படி, தன்ஒற்று இரட்டித்தது: இ-பெயர்விகுதி.புல்,சினம் என்பவை-பால்பகா அஃறிணைப்பெயர்களாதலால், பன்மைவினைகொண்டன. ஒல்கா, செல்லா - எதிர்மறைப் பலவின்பால் முற்றுக்கள்: "ஆவே யெதிர்மறைக் கண்ணதாகும்" (நன்னூல்) என்றதனால், 'ஆ' விகுதி பலவின்பாலோடு எதிர்மறைப்பொருளையுங் காட்டும். படை-கருவி; உழுபடை-வினைத்தொகை நிலைத்தொடராய், கலப்பைக்குக் காரணப்பெயராயிற்று; வினைத்தொகையாதலின், வலி மிகவில்லை. நற்சார்வு என்றது-தம்பகை வரினும் மிக்க வலிமையுடையாரை. (அ)

களக. நிலநலத்தா னந்திய நெல்லேபோற் றத்தங்
குலநலத்தா லாகுவர் சான்றோர்—கலநலத்தைத்
தீவளி சென்று சிதைத்தாங்குச் சான்றுண்மை
தீயினஞ் சேரக் கெடும்.

(இ - ள்) நிலம் நலத்தால்-வினைநலத்தினது நல்லவளத்தால், நந்தியவளர்ந்த,நெல்லேபோல்-நெற்பயிர்போல, (மனிதர்கள்),தம்தம் குலம்நலத்தால்-தாங்கள் தாங்கள் சேர்கிற கூட்டத்தின்நன்மையால், சான்றோர்ஆகுவர்-மேன்மக்களாவர்;கலம்நலத்தை-மரக்கலத்தினது வலிமையை,தீவளி-

கடுங்காற்று, சென்று-போய், சிதைத்து ஆங்கு - கெடுத்தால் (அக்கலம் கெடுவது) போல, சான்ருண்மை-(ஒருவரது) மேன்மை, தீ இனம் சேர-தூர்க்குணமுள்ள கூட்டத்தைச் சேர்தலினால், கெடும்-அழியும்; (எ-று.)

உவமையணி. நிலநலத்தால் நந்திய நெற்போல் என்பதற்கு-நிலநலத்தால்நெல் நந்துதல்போல என்று கருத்து. கலம்-பொதுப்பெயர், இங்கே சிறப்பாய்க் கப்பலைக் குறித்தது; அணிகலம், உழுகலம், படைக்கலம், அளவுகலம், உண்கலம்முதலாகப் பலவற்றிற்குப் பொதுவாகுமாறு காண்க. 'கலநலத்தைத் தீவளிசென்று சிதைத்தாங்கு' என்பதற்கு - கலநலம் தீவளி செல்லுதலாற் சிதைந்தாற்போல என்று கருத்து. **சான்ருண்மையா**வது - (பலகுணங்களாலும்) நிறைந்து (அவற்றை) ஆளுதல்தன்மை; சான்று ஆண்மை எனப் பிரியும்: 'பலகுணங்களாலும்' என்பது சாலுதற்றொழிலாற் பெறப்பட்டதனால், (அவற்றை) என்பது வருவிக்கப்பட்டது; ஆண்மை-ஆள் என்னும் வினைப்பகுதியின்மேற் பிறந்த பண்புப்பெயர்.

நல்லினஞ்சேர்தலின் சிறப்புக் கூறுவார், தீயினஞ்சேர்தலின் இழிப்பும் உடன் கூறினர். "ஊதியமென்பதொருவர்க்குப் பேதையார், கேண்மை யொரீஇவிடல்" என்றது, **திருக்குறள்.** (கூ)

கஉ0. மனத்தான் மறுவில ரேனுந்தாஞ் சேர்ந்த
வினத்தா லிகழப் படுவர்—புனந்து
வெறிகமழ் சந்தனமும் வேங்கையும் வேமே
யெறிபுனந் தீப்பட்டக் கால்.

(இ - ள்.) மனத்தால் மறு இலர் எனும்-மனத்தின் நிலைமையால் குற்றமில்லாதவர்களாயினும், தாம் சேர்ந்த இனத்தால்-தாங்கள் சேர்ந்த கூட்டத்தின் தீமையால், இகழப்படுவர்-நிந்திக்கப்படுவார், (மனிதர்கள்); (அது எதுபோல எனின்),—வெறி புனம்-வெட்டப்பட்ட மரச்செறிவில், தீ பட்டக்கால் - நெருப்புப் பற்றினால், புனத்து - அக்காட்டிலுள்ள, வெறி கமழ்-வாசனை வீசுகின்ற, சந்தனமும்-சந்தனமரமும், வேங்கையும்-வேங்கைமரமும், வேம்-வெந்துபோம்; (எ - று.)

இயற்கையிற் குற்றமிலராயினுஞ் சேர்க்கைக்குற்றத்தாற் கெடுவ ரென்பது கருத்து. இதனால், தீயினஞ்சேர்வதனாலாகுங் கேடு விளக்கப் பட்டது.

இது, **திருஷ்டாந்தவலங்காரம்.** "சந்தனத்தைச் சார்தருவுந் தக்க மணங்கமழுஞ், சந்தனத்தைச் சார்வேய் தழல்பற்ற—வந்தவனந், தானு மச்சந்தனமுந் தன்னினமு மாள்வதன்றித், தானுங் கெடச் சுடுமே தான்" என்னும் **நீதிவெண்பாவை** இதனோடு ஒப்பிடுக. "மனத்தானு மாந்தர்க் குணர்ச்சி யினத்தானு, மின்ன னெனப்படுஞ் சொல்." "மனநல நன்கு டையராயினுஞ் சான்ருேர்க்கு, இனநலமேமாப் புடைத்து" என்ருர் **திருக்குறளி**லும்.

மனத்தா லென்பதற்கு-உருபுமயக்கமாக, மனத்தில் என்றும் பொருள்கொள்ளலாம். ஏகாரம், பிரசித்தியை விளக்கிற்று. (க0)

ஙக-ஆம் அதிகாரம்—பெருமை.

அஃதாவது-எவ்வழியும் மனக்கலக்கமின்றித் தாம் செய்யவேண்டிய வற்றை இயன்றவளவு செய்யும் உறுதிப்பாட்டா லாகிய பெருந்தன்மை யை உணர்த்துவது. பெருமை-மகிமை; பண்புப்பெயர். இப்பெருமை நல் வினத்தின் தன்மையாதலால், அதன்பின் வைக்கப்பட்டது; அன்றி, நல் வினஞ் சேர்தலாற் பெருமையுளதா மென்பதுபற்றி, வைக்கப்பட் டதுமாம்.

கஅக. ஈத லிசையா தியைமைசே ணீங்குதலாற்
காத லவருங் கருத்தல்லர்—காதலித்
தாதுநா மென்னு மவாவினைக் கைவிட்டுப்
போவதே போலும் பொருள்.

(இ - ள்.) *ஈதல் இசையாது-* (பொருளின்மையாற் பிறர்க்கு ஒன் றைக்) கொடுத்தலும் முடியாது: *இளமை சேண் நீங்குதலால்-*யௌவன மும் நெடுந்தூரத்தில் நீங்கிவிட்டதனால், *காதலவரும்-*(நம்மேல் முன்பு) அன்புடைய மகளிரும், *கருத்து அல்லர்-*(இப்பொழுது நம்மை) எண்ணு தலும் இல்லாராயினர்: (*ஆதலால்*), *காதலித்து-*(அம்மகளிரை) விரும்பி, *'நாம்—,ஆதும்-*வாழக்கடவோம்', என்னும்-என்கிற, *அவாவினை-*ஆசை யை, *கைவிட்டு-*முழுவதும் நீக்கி, *போவதே-*(துறவுக்குச்) செல்வதே, *பொருள் போலும்-*நல்ல காரியமாகும்; (எ - று.)

இச்செய்யுள் ஒருவன் தன்மனத்தைநோக்கி உபதேசித்ததாகச் செய் யப்பட்டதென அறிக. ஒருவர்க்கு ஒன்றுகொடுத்து உபகாரஞ் செய்யக் கூடாமலும் போகங்களை அனுபவிக்கக்கூடாமலும் போனபின்பும் சிற் றின்பத்தில் ஆசைவைத்துத் தடுமாறுவதைவிட்டு ஆத்துமானுபவசுகத் தைப்பெற மனந்துணிவதே பெருமை என்பது கருத்து.

காதலவரும், உம்மை - உயர்வு சிறப்பு. கருத்து - முதனிலைதிரிந்த தொழிற்பெயர். ஆதும்-மேலாகக்கடவோம்; தன்மைப் பன்மை யெதிர் காலமுற்று. போலும்-ஒப்பில்போலி; "ஒப்பில்போலியு மப்பொருட் டாகும்" என்ற **தொல்காப்பியத்**தால், இங்கு **உரையசைப்** பொருளதாய் நின்றது. (க)

கஅஉ. இற்சார்வி னேமாந்தே மீங்கமைந்தே மென்றெண்ணிப்
பொச்சாந் தொழுகுவர் பேதையா—ரச்சார்வு
நின்றன போன்று நிலையர் வெனவுணர்ந்தா
ரென்றும் பரிவ திலர்.

(இ - ள்.) *பேதையார் - அறிவில்லாதவர்கள், 'இல் சார்வின் - இல் வாழ்க்கையை அடைந்ததனால், ஏமாந்தேம்-*இன்பமடைந்தோம்; *ஈங்கு -*இவ்வுலகத்தில், *அமைந்தேம்-*(எல்லாவற்றாலும்) நிறைந்தோம்,' என்று *எண்ணி-*என்று நினைத்து, *பொச்சாந்து ஒழுகுவர்-*(பின்வருந்துன்பத்தை)

மறந்து நடப்பார்கள்; 'அ சார்வு - (இல்வாழ்க்கையாகிய) அப்பற்றுக்கள், நின்றனபோன்று - நிலைபெற்றனபோற் காணப்பட்டு, நிலையா-நிலைத்திரா வாய் அழிந்துபோய்விடும்,'என உணர்ந்தார்-என்று அறிந்தபெரியோர்கள், என்றும்-எப்பொழுதும்,பரிவது இலர்-வருந்துதலில்லாதவராவர்;(எ-று.)

எல்லாவற்றின் தன்மைகளையும் உள்ளபடியறிந்த தத்துவஞானிகள் சுகதுக்கங்களை ஒருநிகராகக் கருதுவதன்றித் துயர்வருங்காலத்து வருந் தாரென்பதாம்: அழியாத வீட்டுலகத்தில் நிரதிசயவின்பம்பெற்று வாழப்பார்ப்ப ரென்பது கருத்து.

ஏமாந்தேம், ஏமா-பகுதி; அலமா, இறுமா, அல்லா, சோகா என்பன போலஒருசொல்:இனி,ஏமம் யா அல்லது ஏமம் ஆ என்னும் இரண்டுசொல் ஒருசொல்லின் தன்மைப்பட்டு ஏமா என்று நின்றதெனவுங் கொள்ளலாம். பொச்சாந்து, பொச்சா-பகுதி. ஈங்கு - இங்கு என்னும் சுட்டின் நீட்சி.பரி வது இலர் - (அந்த இல்வாழ்க்கையை) விரும்புதலிலராவர் என்னலுமாம்.

கஅங. மறுமைக்கு வித்து மயலின்றிச் செய்து
சிறுமைப் படாதேநீர் வாழ்மி—னறிஞராய்
நின்றுழி நின்றே நிறம்வேறுங் காரண
மின்றிப் பலவு முள.

(இ - ள்.) நீர்-நீங்கள்,அறிஞர்ஆய்-அறிவுடையவர்களாய், மறுமைக்கு வித்து-மறுமையின்பத்துக்குக் காரணமான நற்காரியத்தை,மயல்இன்றி-மயங்குதலில்லாமல், செய்து-துணிந்துசெய்து, சிறுமைபடாதே-சிறியோ ரது தன்மையிற் பொருந்தாமல், வாழ்மின்-வாழுங்கள்; (ஏனெனில்),—நின்றுழி நின்றே நிறம் வேறு ஆம்-இருந்தவிடத்திலிருந்து கொண்டே நிறம் வேறுபட்டுப்போம்; காரணம் இன்றி பலவும் உள-ஒருகாரணமுந் தெரியாமற் பலவேறுபாடுகளும் உண்டாம்; (எ - று.)

இதனால், பெருமைப்படுதற்கு உபாயங கூறப்பட்டது. மறுமை-இறந்தபின்பு அடையுங் கதி. 'நின்றுழி நின்றே நிறம் வேறும்' என்றது-உடம்பு நின்ற நிலையில் நிற்கையிலேயே விரைவில் இளமை முதலிய அதன்தன்மைகள் வேறுபடு மென்றபடி. 'காரணமின்றிப் பலவுமுள' என்றது-நமக்குக் காரணமின்னதென்று தெரியாமல் வருத்தந்தருவதற் குரிய பல இடையூறுகள் நேர்வன என்றவாறு. (கூ)

கஅச. உறைப்பருங் காலத்து மூற்றுநீர்க் கேணி
யிறைத்துணினு மூராற்றுமென்பர்-கொடைக்கடனுஞ்
சாயக் கண்ணும் பெரியார்போன் மற்றையா
ராயக் கண்ணு மரிது.

(இ - ள்.) உறைப்பு அரு காலத்தும் - மழைபெய்தல் அருமையான காலத்திலும், ஊற்று நீர் கேணி-ஊற்றினால் நீரையுடைய குளம்,இறைத்து உணினும்-இறைத்துக் குடித்தாலும், ஊர் ஆற்றும்-ஊரிலுள்ளாரைக்காப் பாற்றும், என்பர்-என்று சொல்லுவார்கள்;கொடை கடனும்-தானஞ்செய் தலாகிய கடமையும், சாயக்கண்ணும்-(வறுமையால்) தளர்ந்த விடத்தும்,

பெரியார்போல்-பெரியவர்கள்போல, மற்றையார்-சிறியோர், ஆயக்கண் ணும்-செல்வமுடையோரானவிடத்தும், அரிது-உண்டாதலில்லை; (எ-று.)

சுரப்புள்ளதொருசுனம் மழையில்லாத பொழுதும் ஊற்றுநீராற் பல ரைக் காப்பாற்றுவதுபோல, பெருமையுடையார், செல்வந் தங்களுக்கு இல்லாதபொழுதும் யாதோ ஒருவகையாற் பிறருக்கு உதவி செய்வர்; சிறியாரோ செல்வமிருதியிலும் அப்படிச்செய்யார் என்பது கருத்து.

முன்னிரண்டடியிற் கூறிய உபமானம் பெரியோர்களது தன்மை யாகிய உபமேயத்தைக் குறித்ததனால், **பிறிதுமொழிதல்** லென்னும் அணி.

ஊற்று-ஊறுவது. சுளத்தைக் கேணி யென்பது, அருவாநாட்டார் வழங்குந்திசைச்சொல். ஊர-ஊரிலுள்ளார்க்கு இடவாகுபெயர்;'ஊருணி' 'ஊரடங்கிற்று' என்றவற்றிற்போல. கடனும், உம்மை-அசை; உயர்வு சிறப்பு என்றலும் ஒன்று. சாயக்கண், ஆயக்கண்-**'கண்'** விகுதி பெற்ற எதிர்கால வினையெச்சங்கள்: இரண்டிலும், அளபெடை-செய்யுளோசை நிறைத்தற் பொருட்டு வந்தது. மற்றையார் - மற்றையென்னும் இடைச் சொல், வேறு என்னும் பொருளது. அரிது என்பதற்குக் கடனும் என்பது எழுவாய்.

'சாஅ அயக்கண்', ஆஅஅயக்கண்' என ஈரளபெடையான பாடத் துக்கு, ஒரு அளபெடை இன்னிசைநிறைக்க வந்ததெனக் கொள்க. பின் னிரண்டடிகளில் அளபெடை வந்தது-**அளபுத்தொடை**. (சு)

கூஅநு. உறுபுன றந்துல கூட்டி யறுமிடத்துங்
கல்லூற் றுழியூறு மாறேபோற்—செல்வம்
பலர்க்காற்றிக் கெட்டுலந்தக் கண்ணுஞ் சிலர்க்காற்றிச்
செய்வர் செயற்பா லவை.

(இ - ள்.) உறு புனல் தந்து - (செழித்தகாலத்தில்) மிகுந்த நீரைக் கொடுத்து, உலகு ஊட்டி-உலகத்தாரை உண்ணச்செய்து, அறும் இடத் தும்-நீர் அற்றகாலத்திலும், கல் ஊற்று உழி-தோண்டப்படுகிற ஊற்றுக் குழியிலே, ஊறும்-நீர்சுரக்கின்ற, ஆறே போல் - நதியே போல,—(பெரி யோர்கள்), செல்வம் - (தமது) பொருளை, பலர்க்கு ஆற்றி-(செழித்துள்ள காலத்தில்) பலபேர்க்குந் தானஞ்செய்து, கெட்டு உலந்தக்கண்ணும்-அழி ந்து வறந்தவிடத்தும், சிலர்க்கு-சிலர்க்காயினும், ஆற்றி-தானஞ்செய்து, செயற்பாலவை - செய்யத்தக்க உபகாரங்களை, செய்வர்-செய்வார்கள்; (எ - று.)

ஆறானது வெள்ளமுள்ள காலத்துத் தன்னை எவரும் தோண்டுதல் வேண்டாமலே தானேஎங்குஞ் சென்றுநீரைஉதவி,நீர்வறண்டகாலத்திலுந் தோண்டினமாத்திரத்தில் நீரை உதவுதல்போல, குடிப்பிறந்தார்செல்வ முள்ளகாலத்தே எவரும் தம்மைச் சேர்ந்து யாசிக்கவேண்டாமலே தாமே எங்குஞ்சென்று உதவிகள் செய்து செல்வமில்லாத காலத்திலுந் தம்மை அடைந்தமாத்திரத்தில் உதவிசெய்வர் என்பதாம். "எற்றென்று மில்லா விடத்துங் குடிப்பிறந்தார், அற்றுத்தற்சேர்ந்தார்க்கசைவிடைத் தூற்றுவர்,

அற்றக் கடைத்து மகல்யாறகழ்ந்தக்கால், தெற்றெனத்தெண்ணீர் படும்'' என இந்நூற்பதினேந்தாம்அதிகாரத்தில்வந்ததையுங்காண்க. **உவமையணி.**

''ஆற்றுப் பெருக்கற் றடிசுடு மந்நாளு மவ்வா, றூற்றுப்பெருங்காலுல கூட்டும்-எற்றவர்க்கு, நல்ல குடிப்பிறந்தார் நல்கூர்ந்தாராஞலும், இல்லை யென மாட்டா நிசைந்து'' என்ற **நல்வழி**ச்செய்யுளோடு இதனை ஒப்பிடுக. ''இடனில் பருவத்து மொப்புரவிற் கொல்கார், கடனறி காட்சி யவர்'' என்னுந் **திருக்குறளி**லும் இக்கருத்தே விளங்குகின்றது.

கல்லூற்று - வினைத்தொகை.

இச்செய்யுளின் ஈற்றடி போலவே கசஎ, கருங - ஆஞ் செய்யுள் களில் ஈற்றடியுமிருத்தல் காண்க. (ருு)

கஅசூ. பெருவரை நாட பெரியார்கட் டீமை
கருநரைமேற் சூடேபோற் ரோன்றுங்—கருநரையைக்
கொன்றன்ன வின்ஞ செயினுஞ் சிறியார்மே
லொன்ரூனுந் தோன்ரூக் கெடும்.

(இ - ள்.) பெரு வரை நாட - பெரிய மலையையுடைய நாட்டை யுடைய பாண்டியராசனே!—பெரியார்கண் - பெரியோரிடத்துண்டான, தீமை - குற்றமானது, கரு நரை மேல் சூடே போல் - பெரிய வெள்ளை யெருதின்மேற் போகட்ட சூட்டின் வடுப்போல, தோன்றும்-நன்கு விளங் கும்; கருநரையை கொன்று அன்ன - பெரிய எருதைக் கொன்றது போன்ற, இன்ஞ - தீச்செயல்களை, செயினும் - செய்தாராஞலும், சிறி யார்மேல் - கீழ்மக்களிடத்து, ஒன்ரூனும்-ஒருகுற்றமாயினும், தோன்ரூ - விளங்கிக்காணுமல், கெடும் - அழியும்; (எ - று.)

இதனுல், பெருமையுடையோர் சிறிதுங் குற்றஞ்செய்யாது தம்மைக் காக்கவேண்டு மென்பது பெற்ரும்; ''கன்றி முதிர்ந்த கழியப்பன்ஞள் செயினும், ஒன்றுஞ் சிறியார்க ணென்ஞனுந் தோன்ரூவாம், ஒன்ரூய் விடினு முயர்ந்தார்ப்பங்குற்றம்,குன்றின்மே லிட்ட விளக்கு'' (**பழமொழி**) எனப் பிறர்கூறியதுங் காண்க. **உவமையணி.** 'பெரும்பாதகமாகிய பசுக் கொலையைக் குறிப்பித்தற்கு, 'நரையைக்கொன்றன்ன' என்ரூர்.

நரை-வெண்மை; வெள்ளெருதுக்குப் பண்பாகுபெயர். சூடு-சுடப்படு வது; முதனிலை திரிந்தது. 'கருநரைமேற் சூடேபோல்' என்பதற்கு-கரிய எருதினமேலுள்ள முசுப்புப்போல என்றும் உரைப்பர். தோன்ரூ - ஈறு கெட்ட எதிர்மறை வினையெச்சம்; இதன்முன் வல்லொற்று மிகுவதே தகுதி. 'தோன்ரூகெடும்' என ஒற்றுமிகாமற் பாடங்கொண்டு, அஃறி ணைப் பன்மைமுற்றெச்ச மென்பார்க்கு, ஒன்ரூனும் என்ற ஒருமையோடு வழுவாமென மறுக்க. (சூ)

கஅள. இசைந்த சிறுமை யியல்பிலா தார்கட்
பசைந்த துணையும் பரிவா—மசைந்த
நகையேயும் வேண்டாத நல்லறிவி னூர்கட்
பகையேயும் பாடு பெறும்.

(இ - ள்.) சிறுமை - கீழ்மைக்குணம், இசைந்த-பொருந்திய, இயல்பு இலாதார்கண்-நற்குண மில்லாதவரிடத்து, பசைந்த தூணையும்-சினேகித்த வனவும், பரிவு ஆம்-துன்பமேயாம்; அசைந்த - நிலைதடுமாறிய தீச்செயல் களை, நகையேயும் - விளையாட்டிலேயும், வேண்டாத - விரும்பாத, நல் அறிவினர்கண் - நல்ல அறிவையுடைய பெரியோரிடத்து, பகையேயும் - விரோதமும், பாடு பெறும் - பெருமையடையும்; (எ - று.)

ஒருவன் பெரியோரிடத்துப் பகைமைகொண்டால், பெரியோர்கள் மிக்க பொறுமையை யுடையவராதலால், அதனால் அவனுக்குத் தீங்குவா ராது; வந்தாலும் ஒருவாற்றால் உய்தல்கூடும். தீயோர் சேர்க்கையால் உண்டாகுந் தீமைகளுக்கு ஒருவாற்றாலும் தப்பமுடியாது என்பதுகருத்து. "பேதை பெருங்கழீஇ நட்பி னறிவுடையார், எதின்மை கோடி யுறும்" என்றார் திருக்குறளிலும்

சிறுமை - நற்குணங்கள் யாவு மின்மை. அசைந்த- பெயர். இதற்கு-பிறர் நடுங்குதற்குக்காரணமானகொடுந்தொழில்கள் என்றும் உரைப்பர். நகை - சிரித்தல்; நகு - பகுதி, ஐ - விகுதி: நகை-பகுதியாயின், முத னிலைத் தொழிற்பெயர்; பரிகாசமென்றபடி. இனி, நகையேயும் என்ப தற்கு-களிக்குங்காலத்தும் என்றும் உரைக்கலாம்.

பரிகாசத்திலுந் தகாததைக் கொள்ளலாகாதென்பதை "பரிஹாஸே ப்யநைஸித்யம்" என்னும் வடநூல் மேற்கோளாலும் அறிக. (எ)

கஅஅ. மெல்லிய நல்லாருண் மென்மை யதுவிறந்
தொன்னருட் கூற்றுட்கு முட்குடைமை யெல்லாஞ்
சலவருட் சாலச் சலமே நலவரு
ணன்மை வரம்பாய் விடல்.

(இ - ள்.) மெல்லிய - மெத்தென்ற இயல்பையுடைய, நல்லாருள் - (பகைவரல்லாத) நல்லவரிடத்து, மென்மை-(தானும்) மிருதுவாயிருத்தற் கும்,—ஒன்னருள்-(வலிய) பகைவர்களிடத்து, அது இறந்து-அம்மென் மைத்தன்மையைவிட்டு, கூற்று உட்கும் உட்கு உடைமை-யமனும் அஞ் சும்படியான பயங்கரத்தன்மையை உடைத்தாயிருத்தற்கும்,—எல்லாம் சலவருள்-எல்லாக்காரியங்களிலும் பொய்யுடையோரிடத்து, சால சல மே-மிகவும்பொய் பேசுதற்கும்,—நலவருள்-நற்குணமுடையோரிடத்து, நன்மை-நற்குணமுடைமைக்கும்,—வரம்பு ஆய்விடல் - (ஒருவன்) எல்லை யாயிருக்கக்கடவன்; (எ - று.)

அயோக்கியரிடத்து அயோக்கியராயும் யோக்கியரிடத்து யோக்கிய ராயும் நடப்பது பெருமை யென்பது கருத்து.

'மெல்லிய' என்றதனால் ஒன்னர் வலியவரென்றும், 'ஒன்னர்' என்ற தனால் நல்லார் பகையில்லாதவரென்றுங் கொள்ளப்பட்டது. சலமுடை யோர், சலவர்; நலமுடையோர், நலவர். சலம் - தனியாக்கோபமுமாம். சால - உரிச்சொல்லடியாப் பிறந்த செயவெனெச்சம்.

மென்மை,உடைமை,சலம் என்றவிடங்களில் 'வேண்டுக'என்றுவது, 'செலுத்துக' என்றுவது வினை வருவித்துத் தனித்தனிவாக்கியமாக முடிப்

பாருமுளர். ஆய்விடல்-'அல்' விகுதிபெற்றுவந்த உடன்பாட்டு வியங் கோள் வினைமுற்று; "மக்கட் பதடி யெனல்" என்ற திருக்குறளில் 'எனல்' என்பதுபோல: இதில், விடு-துணிவுப்பொருளுணர்த்திற்று. இனி, வரம் பாய்-எல்லையாகி; விடல்-செலுத்துக என்றும் உரைக்கலாம்.

இச்செய்யுளில் 'வரம்பாய்விடல்' என்பது; **கடைநிலைத்தொழிற்றீவகம்.**

சஅஙூ. கடுக்கி யொருவன் கடுங்குறளை பேசி
மயக்கி விடினு மனப்பிரிப்பொன் றின்றித்
துளக்க மிலாதவர் தூய மனத்தார்
விளக்கினு ளொண்சுடரே போன்று.

(இ - ள்.) ஒருவன் - ஒருத்தன், கடுக்கி - (முகத்தைக்) கடுமையாக வைத்துக்கொண்டு, கடு குறளை பேசி-(பிறர்மேல்) கொடிய கோட்களைச் சொல்லி, மயக்கி விடினும்-(தமது அறிவு) மயங்கும்படி செய்ய முயன்றாலும், தூய மனத்தார்-பரிசுத்தமான மனத்தை யுடையவர், மனம் பிரிப்பு ஒன்று இன்றி-மனத்தில் வேறுபடுதல் சிறிதும் இல்லாமல், விளக்கினுள் ஒள் சுடரே போன்று-தீபத்தினிடத்துள்ள பிரகாசமான சுவாலையையே யொத்து, துளக்கம் இலாதவர்-சலித்தலில்லாதவராவர்: (எ - று.)

ஒருவனிடத்துத் தாமாகக் குற்றங்கண்டன்றிப் பிறர்சொல்லுங் கோட்சொற்களைக் கேட்டு அவற்றைக்கொண்டு துரபிப்பிராயப்படுவது பெருமை யன்றென்பது கருத்து.

குறளை-பழிமொழி; புறங்கூறல். ஒன்று என்பது, இங்கே, சிறிதென் பதைக்காட்டி நின்றது. சுடரே, ஏ-உயர்வுசிறப்பு. 'இன்றி' என்னுங் குறிப்பு வினையெச்சம், 'இலாதவர்' என்னுங் குறிப்பு வினையாலணையும் பெயரைக் கொண்டது. (கூ)

ஙஙூ. மூற்றுத்துந் துத்தினை நாளு மறஞ்செய்து
பிற்றுத்துத் துத்துவர் சான்றவ—ரத்துத்து
முக்குற்ற நீக்கி முடியு மளவெல்லாந்
துக்கத்து ணீக்கி விடும்.

(இ - ள்.) சான்றவர்-பெரியோர்கள், முன் துத்தும் துத்தினை-முன்னே உண்ணுதற்கு உரிய உணவை, நாளும்-தினந்தோறும், அறம் செய்து-(பிறர்க்குத் தானஞ்செய்தலாகிய) தருமமாகச் செய்துவிட்டு, பின் துத்து-பின்பு உண்ணுதற்கு உரிய உணவை, துத்துவர்-(பின்புதாம்) உண்பர்; அ துத்து-அங்ஙனம் பிறர்க்குக் கொடுத்ததும் தானுண்டதுமாகிய உணவு,—(அவர்களது), மு குற்றம் நீக்கி-(காமம் வெகுளி மயக்கம் என்னும்) மூன்று குற்றங்களையும் போக்கி, முடியும் அளவு எல்லாம்-(அவர்கள்) வீடுபெறுமளவும், துக்கத்துள் நீக்கிவிடும்-(அவர்களைப்) பல துன்பங்களினின்றும் நீங்கச்செய்யும்; (எ - று.)

தமக்கு அருமையாகக்கிடைத்த உணவு இரண்டு கவளமேயானாலும் அவற்றுள் முதலிலெடுக்கும் கவளத்தை விருந்தினர் சுற்றத்தார் முதலி

யோர்களுள் நேர்பவர்க்குக் கொடுத்து மற்றொரு கவளத்தையே தாம் உண்பது, நெடுங்காலமட்டுக் துன்பங்களை நீக்கி இன்பங்களைத் தரும்படியான பெருமைக்குணமாம் என்பது கருத்து. இங்ஙனஞ்செய்வது, ஐம் பெருவேள்விகளில் ஒன்றாகிய மநுஷ்யயஜ்ஞம் [விருந்தோம்பல்] எனப் படும். (மற்றவை—பிரமயஜ்ஞம் [வேதமோதுதல்], தேவயஜ்ஞம் [ஓமம் வளர்த்தல்], பித்ருயஜ்ஞம் [தர்ப்பணஞ்செய்தல்], பூதயஜ்ஞம் [பலியீதல்] என்பனவாம்.)

துத்தும்-எதிர்காலப் பெயரெச்சம்; து-பகுதி, த்-சந்தி, து-சாரியை, உம்-விகுதி. துத்து-வினையாலணையும்பெயர்; உண்ணத்தக்க தென்பது பொருள்: து-பகுதி, து-ஒன்றன்பால் விகுதி; து-தொழிற்பெயர் விகுதி யெனக்கொண்டு, தொழிலாகுபெய ரென்றலுமாம். இனி, 'துற்றும்', 'துற்றினை', 'துற்று', 'துற்றுவர்' 'துற்று' எனப்பாடங்கொள்வாரு மூளர்; அப்பாடத்திற்கு, துற்று-பகுதியென்க. முடியுமளவு-இறக்குமளவு என்றுமாம். எல்லாம் என்பதை 'அத்துத்து' என்பதனோடு கூட்டலுமாம்.

'அறநெறியாகிய அவிச்சையும், அதுபற்றி யான்என மதிக்கும் அகங்காரமும், அதுபற்றி எனக்கு இதுவேண்டுமென்னும் அவாவும், அதுபற்றி அப்பொருளின்கண் செல்லும் ஆசையும், அதுபற்றி அதன் மறுதலையின் கண் செல்லுங்கோபமும்' என வடநூலார் குற்றம் ஐந்தென்றார்; இவை-அவித்யா, அஸ்மிதா, ராகம், அபிநிவேசம், த்வேஷம் என்னும் பஞ்சக்லேசமெனப்படும்: அவற்றுள் அகங்காரம் அவிச்சையிலும், அவாவுதல் ஆசையிலும் அடங்குதலால், தமிழ்நூலார் குற்றம் மூன்றென்பர்; "காமம் வெகுளி மயக்கமிவை மூன்றன், நாமங்கெடக் கெடு நோய்" என்றார் **திருவள்ளுவனாரும்.** (கo)

உo - ஆம் அதிகாரம்—தாளாண்மை.

அஃதாவது-இடைவிடாத மெய்ம்முயற்சியை ஆளுந்தன்மை. எல்லா நற்காரியங்களையுங் கைகூட்டுவிக்கின்ற இக்குணம், பெருமையுடையோர்க்கு இன்றியமையா தாதலின், இது பெருமையின்பின் வைக்கப்பட்டது. முயற்சியுடையார்க்கே பெருமை சித்திக்குமென்பது அதிகார முறைமைக்குக் காரணமெனினுமாம்.

கசுக. கோளாற்றக் கொள்ளாக் குளத்தின்கீழ்ப் பைங்கூழ்போற்
கேளீவ துண்டு கிளைகளோ டஞ்சுப
வாளாடு கூத்தியர் கண்போற் றடுமாறுந்
தாளாளர்க் குண்டோ தவறு.

(இ - ள்.) கோள் - கொள்ளுதற்கு உரிய நீரை, ஆற்ற-மிகுதியாக, கொள்ளா-கொள்ளமாட்டாத, குளத்தின் கீழ்-நீர்நிலையின் கீழுள்ள, பைங்கூழ் போல்-பசிய பயிர்போல, கேள் ஈவது உண்டு-அன்பர்கள் கொடுப்பதைப்புசித்து, கிளைகளோ-(அக்கொடுப்பவர்களுக்கு) உறுப்பாயுள்ளவர்களோ, துஞ்சுப-(அவனுக்கு வறுமைநேர்ந்தவிடத்துத் தாமும்) வருந்துவர்;

(அங்ஙனமன்றி), வாள் ஆடு கூத்தியர் கண் போல்-வாளின்மேலிருந்து ஆடுகின்ற கூத்தையுடைய மகளிரது கண்கள்போல, தடுமாறும்-(பலவிஷயங்களிலும் ஏககாலத்தில்) ஒழியாமல் விரைந்து செல்கின்ற, தாள் ஆளர்க்கு-முயற்சியைக் கையாளுகின்றவருக்கு, தவறு உண்டோ-(நினைத்துந் தொடங்கியுமுள்ள காரியம்) கைகூடாமற்போவது உண்டோ? [இல்லை யென்றபடி]; (எ - று.)

'துஞ்சுக' 'துஞ்சுவ' 'துஞ்சுவர்' என்றும் பாடமுண்டு.

மிக்கநீரைக் கொள்ளமாட்டாத எரியின்கீழ்ப் பயிர் அவ்வேரி செழித்திருக்குமளவுஞ் செழித்திருந்து அது வறண்டால்தானும் அழிவது போல, ஒரு முயற்சியுஞ் செய்யாமல் அன்பர்கள் கொடுக்கத் தின்று கொண்டு காலங்கழிக்குஞ் சோம்பர்கள் அவர் செல்வம் வறளும்போது தாமும் அழிவர்; கத்திமுனையின் மேலிருந்து கூத்தாடுகிறவள் அவ்வாட்டந் தவறுமலும் தனக்கு அபாயம் வராமலுங் கவனமாய்க் கண்ணே நாற் புறமுஞ் செலுத்துவது போலக் கவனமாய் முயற்சிசெய்பவர்களுக்கு எக் காரியமுந் தவறிப் போகாதாதலால் அவர்களுக்கு எப்பொழுதும் ஒரு குறைவும் இல்லை என்பது கருத்து.

ஆற்ற - ஆற்று என்னும் டகுதியின்மேற் பிறந்த செயவெனெச்சம். கூழ் என்னும் உணவின்பெயர், அதற்குக்காரணமான பயிருக்குக் காரியவாகு பெயர். கிழகளோ, ஓ-இரக்கத்தில் வந்தது. வாளாடு கூத்தியர்-இரண்டு கையிலும் வாளை எடுத்துச் சுழற்றிக்கொண்டு தாமுஞ் சுழன்று ஆடும் இளமங்கையரென்றலும் ஒன்று; இவர்கள், மதங்கியரெனப்படுவர். வாள் ஆடு என்பதற்கு - ஒளிபொருந்திய எனப் பொருளுரைத்து, கண்ணுக்கும் அடைமொழியாக்குவர். கூத்தாடும் மகளிரது வாள்போலுங் கண் எனினுமாம். கூத்து-பகாப்பதமாகிய தொழிற்பெயர். தடு-தம்பித்திருத்தல், அது மாறுதல்-தடுமாற்றம். (க)

ககூ. ஆடுகோ டாகி யதரிடை நின்றதூஉங்
காழ்கொண்ட கண்ணே களிறுணக்குங் கந்தாகும்
வாழ்தலு மன்ன தகைத்தே யொருவன்றன்
முழ்வின்றித் தன்னைச் செயின்.

(இ - ள்.) ஆடு கோடு ஆகி-துவளுகின்ற சிறுகொம்பாகி, அதரிடை-வழியிலே, நின்றதூஉம்-நின்ற இளமரமும், காழ்கொண்ட கண்ணே-உள்வயிரங்கொண்டவிடத்தே, களிறு அணைக்கும் கந்து ஆகும்-யானையைக் கட்டுவதற்கு ஆதாரமான தறியாகிவிடும்; ஒருவன்—, தான்—, தன்னை—, தாழ்வு இன்றி - (நின்ற நிலையினின்றுங்) கீழ்ப்படுதலில்லாதபடி, செயின்-(முயற்சியால்) விருத்தி செய்வானாயின், வாழ்தலும் - (அவனுடைய) வாழ்க்கையும், அன்ன தகைத்தே-அப்படிப்பட்ட தன்மையை யுடையதே யாம்; (எ - று.)

முதலில்மிகமெல்லியதாயிருந்தாலும்முடிவில்நிரம்பவலியதாம்என்க.

கொண்ட கண் - பெயரெச்சத்தொடர். 'கொண்டக்கண்' என்னும் பாடத்திற்கு - கண்ணீற்று எதிர்கால வினையெச்சமென்க. களிறு-ஆண்

பாற்பெயர்; "வேழக் குரித்தே விதந்து களி றென்றல்" என்னுந் **தொல் காப்பியத்தால்**, இது யானைக்கு உரியதாதலை அறிக. (பெண்பால் - பிடி; "பிடியென் பெண்பெயர் யானைமேற்றே" என்னுர் **தொல்காப்பியனுர்**.) களிறு - களிப்புடையது; களி - பகுதி. று - பெயர்விகுதி. மதத்தாற் கதஞ் சிறந்த ஆண்யானையைக் கட்டுந் தறி மிகவலியதாயிருத்தல்வேண்டு மாத லின், 'களிறணைக்குங் கந்தாகும்' என்னுர். கந்து-ஸ்கந்தம் என்னும் வட மொழியின் திரிபு. 'கின்றதூஉம்' என்றதனுல், போற்றி வளர்ப்பாரில் லாமல் தானேவளர்வ தென்றவாறு; இது, பிறருதவியில்லாமல் தானே முயன்று சிறப்படைதற்கு உவமை.

உவமையணி. இரண்டாமடி - **முற்றுமோனை.** (உ)

ககங. உறுபுலி யூனிரை யின்றி யொருநாட்
சிறுதேரை பற்றியுந் தின்னு—மறிவினுற்
காற்றொழி லென்று கருதற்க கையினுன்
மேற்றொழிலு மாங்கே மிகும்.

(இ - ள்.) உறு புலி-வலிமை மிகுந்தபுலியானது, ஊன் இரைஇன்றி-(தான் உண்ணுதற்கு உரிய மிக்க) இறைச்சியாகிய உணவு இல்லாமல், ஒருநாள் - ஒரு தினத்தில், சிறு தேரை பற்றியும் தின்னும் - சிறிய தவளையைப் பிடித்தும் புசிக்கும்; (அதுபோலவே, ஒருவன்), அறிவினுல்-தன் அறிவினுலே, கால்தொழில் என்று கருதற்க - (கிடைத்ததொரு தொழிலைக்) காலாற் செய்தற்குரிய சிறுதொழி லென்று நினைத்து அலக்ஷியஞ் செய்யாதிருக்கக் கடவன்; (எனெனில்), ஆங்கே - அச்சிறு தொழில் செய்துவருகையிலேயே, கையினுல் மேல் தொழிலும்-கையாற் செய்தற்குரிய மேலான செய்கையும், மிகும் - உண்டாகும்; (எ - று.)

புலியும் ஒரு சமயத்தில் தேரையைத் தின்னும்படி நேரிடும் **ஆத** லால், நாமும் சமயத்துக்கு ஏற்றபடி ஒரு அற்பகாரியஞ் செய்யவந்தால் அதை அற்பமென்று நினையாமல் முயன்றுல்,மேலான காரியம் அப்படியே கைகூடும் என்பது கருத்து. **எடுத்துக்காட்டுவமையணி.**

பேரிறைச்சி கிடையாதகாலத்துப் புலி கிடைத்த சிற்றிறைச்சியை யும் இகழ்ந்து தின்னுதொழிந்தால் இறந்துவிடுமன்றே ? அங்ஙனம் இற வாமல் கிடைத்ததை யுண்டு ஜீவித்தால் மறுநாளாயினும் பேரிரை கிடைக்கப்பெறுதல் கூடும்; அதுபோலவே, பெருந்தொழில் கிடையாத காலத்து ஒருவன் கிடைத்த சிறுதொழிலையும் இகழ்ந்து செய்யாதொழிந் தால் அழிந்து விடுவனன்றே ? அங்ஙனம் அழிந்திடாமல், கிடைத்த தொழிலைச் செய்து வாழ்வதனுல் மற்றொரு காலத்தாயினும் பெருந் தொழில் கிடைக்கப் பெறுதல் கூடுமென்க. (ங)

ககச. இசையா தெனினு மியற்றியோ ராற்று
லசையாது நிற்பதா மாண்மை—பிசையுங்காற்
கண்ட நிரையலக்குங் கானலந் தண்சேர்ப்ப
பெண்டிரும் வாழாரோ மற்று.

(இ - ள்.) கண்டல் - தாழையை, திரை - அலைகள், அலைக்கும்-அலையச்செய்கின்ற, கானல் - கரைச்சோலையையுடைய, அம் - அழகிய, தண்-குளிர்ந்த, சேர்ப்ப - கடல்துறையையுடைய பாண்டியனே!—இசையாது எனினும்-(செய்யத் தொடங்கியதொருதொழில்எளிதில்) முடியாதாயினும், இயற்றி - (இடையூற்றின் பிருதிக்கு அஞ்சி) விடாமல் அரிதின் முயன்று செய்து, ஓர் ஆற்ரல் அசையாது - ஒருவகையாலுந் தளராமல், நிற்பது - (அம்முயற்சிவழியிலேயே) நிலைத்துநிற்பது, ஆண்மை ஆம் - ஆண்தன்மையாம்; இசையும் கால் - (அங்ஙனமன்றி மிகஎளிதில் ஒன்றுவொரு காரியமுங்) கைகூடுவதனால், பெண்டிரும்-பெண்களும், வாழாமேர - (ஆடவர்போல) மேன்மைபெறமாட்டாதவளாரி (எ - று.)

மகளிரிலும் ஆடவர்க்கு உள்ள சிறப்பு, எத்துணைசெய்தற்கரிய செயலையுந்தொடங்கிஇடையூற்றினோக்கிஇடையில்விட்டிடாமல்முடிவுவரையிலும் முயன்று செய்து போலுமியல்பென்று கருத்து. "அருமையுடைத் தென்றசாவாமை வேண்டும், பெருமை முயற்சி தரும்" என்ரார் **திருவள்ளுவரும்**. கண்டலை அலைகளலைப்பதனால் ஒருசிறப்பும் இல்லாதவாறு போல எளிய தொழிலைச் செய்தலாற் சிறப்பில்லையென்பது விளியாற் பெறப்படுமென்ப. கண்டல்-முள்ளி எனபாருமுளர்.

மற்று-வினைமாற்று. அம் - அழகைக்குறிக்கும் உரிச்சொல்; சாரியையாகவுமாம். ஆண்மை, மை-தன்மைப்பொருளதாகும் விகுதி. ஓர் ஆற்ரல் இயற்றி என இயைத்து, ஒருவாரு கச செய்து என்றுமாம். வாழாமேர-இரண்டு எதிர்மறை உடன்பாடு. கானல் - கடற்கரைச்சோலை. (ஒ)

ககூகூ. நல்ல குலமென்றுந் தீய குலமென்றுஞ்
சொல்லை வல்லாற் பொருளில்லை—தொல்சிறப்பி
னெண்பொரு ளொன்றே தவங்கல்வி யாள்வினை
யென்பினாற் ரூருங் குலம்.

(இ - ள்.) நல்ல குலம் என்றும் - உயர்ந்த குடி யெனவும், தீய குலம் என்றும்-தாழ்ந்த குடியெனவும், சொல் அளவு அல்லால்-சொல்மாத்திரமாயிருப்பதேயல்லாமல், பொருள் இல்லை-(அசைசொற்களுக்குச் சிறந்த) பொருள் இல்லை;(எனெனில்),தொல் சிறப்பின்-பழமையான சிறப்பையுடைய, ஒள் பொருள் ஒன்றே-சுத்தமான செல்வமொன்று மாத்திரத்தாலோ, தவம்-தவமும், கல்வி-படிப்பும், ஆள் வினை-முயற்சியும், என்ற இவற்றுன்-என்றுசொல்லப்பட்ட இக்குணங்களால், குலம்—, ஆகும்-மேன்மையடையும்; (எ - று.)

இயற்கையாய் நல்லகுலமென்றும் தீயகுலமென்றும் இல்லை; நற்குண நற்செய்கையுடைமையால் நல்லகுலமென்றும் அவையின்மையால் தீயகுலமென்றும் ஆகும் என்று கருத்து.

ஒண் பொருள்-ஒளியையுடைய பொருள்; பொருளுக்கு ஒளியாவது-நல்வழியாற் சம்பாதிக்கப்படுதல். அப்படிப்பட்ட பொருளுக்குச் சிறப்பு-அறம் இன்பம் என்னும் இரண்டு புருஷார்த்தங்களாயுந் தருவதாதல். இச் சிறப்பு மனு முதலிய பழைய நூல்களிற் கூறப்பட்டது என்பது பற்றின்ற, 'தொல் சிறப்பு' என்ரார். ஒன்றே என்பதை எண்ணிடைச் சொல்லாகவுங் கொள்ளலாம்; "அறனெனொன்றே வான்ற வொழுக்கு" என்ற **திருக்குறளிற்** போல. என்றிவற்றுன்-பெயரெச்சத்தின் ஈறு தொகுத்தல்; இனி,

என்று என்பதை எண்ணிடைச் சொல்லாகக்கொண்டு, நின்றவிடத்துப் பிரித்துப் பிறவிடத்துங்கூட்டி உரைத்தலும் ஒன்று. ஆள்வினை-ஆளும் வினையென வினைத்தொகை; தொழிலை நடத்துதற்குக் காரணமான முயற்சியை ஆள்வினையெனக் காரியத்தின் பெயராற் கூறினர்.

"ஆக்கு மறிவா னலது பிறப்பிஞன், மீக்கொ ளுயர்விழிவு வேண்ட ற்க" என்னும் **நன்னெறி**யை உணர்க. "சாதி யிரண்டொழிய வேறில்லை சாற்றுங்கால், நீதிவழுவா நெறிமுறையின்-மேதினியில், இட்டார் பெரி யோர் இடாதார் இழிகுலத்தோர், பட்டாங்கு லுள்ள படி" என்ற **நல்வழி**ச் செய்யுளோடு ஒத்த வாய்பாடுடையது இச்செய்யுள். "குணே ருத்துங்கதாம் யாதி, நது ஜாதிப்ரபாவத:" என்ற வடமொழிமேற்கோளும் காண்க. (இ)

ககூக. ஆற்றுந் துணையு மறிவினை யுள்ளடக்கி
யூக்க முரையா ருணர்வுடையா—ருக்க
முறுப்பிஞ லாராயு மொண்மை யுடையார்
குறிப்பின்கீழ்ப் பட்ட துலகு.

(இ - ள்.) ஆற்றும் துணையும்-(ஒருகாரியத்தைச்) செய்து முடிக்கு மளவும், அறிவினை-(அதுசெய்தற்குத் தமக்குள்ள) அறிவை, உள் அடக்கி-(வெளிப்படுத்தாமல்) மனத்திலேயே அடங்கவைத்து, ஊக்கம்-(தமது) முயற்சியை, உணர்வு உடையார்-அறிவுடையவர்கள், உரையார்-(பிறர்க் குச்) சொல்லார்; ஊக்கம்-(பிறர்) மனவலியை, உறுப்பிஞல்-(அவர்களது முகம் கண் முதலிய) அவயவங்களின் குறிப்பிஞல், ஆராயும்-ஆராய்ந்தறி கிற, ஒண்மை உடையார்-அறிவையுடையவர்களது, குறிப்பின்கீழ்-புத்தி நுட்பத்தில், உலகு-உலகம், பட்டது-அடங்கியிருக்கின்றது; (எ - று.)

புத்திமான்கள் தமதுமுயற்சி பயன்படுமளவும் தமது கருத்தைக் குறிப்பிஞல் பிறர் அறியவொண்ணுதபடி அடக்குவர்; பிறர் கருத்தை அவர்களுறுப்புக்க ளிருக்குந் தன்மையால் அறிந்துகொள்வர்: அப்படிப் பட்டவர்களது குறிப்பில் உலகமெல்லாம் அடங்கியுள்ளது என்பது கருத்து.

ஊக்கம் உறுப்பிஞ லாராயப்படுதலை, "அடித்தது காட்டும் பளிங்கு போல் நெஞ்சங், கடுத்தது காட்டும் முகம்", "பகைமையுங் கேண்மையுங் கண்ணுரைக்குங் கண்ணின், வகைமை யுணர்வார்ப் பெறின்" என்ற **திருக்குறள்**களா லறிக. குறிப்பின்கீழ் என்பதற்கு-குறிப்பாலேவுகின்ற குற்றேவலில் என்றும் உரைக்கலாம்.

இரண்டாமடி - **முற்றுமோனை.**

"யஸ்யக்ருத்யம் நஜாநந்தி, மந்த்ரம் வா மந்த்ரிதம் பரே-க்ருதமே வாஸ்யஜாநந்தி, ஸ்வைபண்டிதஉச்யதே" என்னும் வடநூன் மேற்கோளை ஒப்புநோக்குக. (சு)

ககூ. சிதலை தினப்பட்ட வால மரத்தை
மதலையாய் மற்றதன் வீழுன்றி யாங்குக்
குதலைமை தந்தைகட் டோன்றிற்ருன் பெற்ற
புதல்வன் மறைப்பக் கெடும்.

(இ - ள்.) சிதலை - செல்லினால், தின்பட்ட - அரிக்கப்பட்ட, ஆல மரத்தை—,அதன் வீழ்-அதனினின்று இறங்கிய விழுதானது, மதலைஆய்-தாங்குந் தூணாய்நின்று, ஊன்றி ஆங்கு-தாங்கினின்றாற்போல,—தந்தை கண்-பிதாவினிடத்தில், குதலைமை-தளர்ச்சி, தோன்றின்-உண்டானால், (அது), தான் பெற்ற புதல்வன் மறைப்ப-அவன்பெற்ற புத்திரன் (தன் முயற்சியால்) மறைக்க, கெடும் - நீங்கிப்போம்; (எ - று.)

செல்லரித்து வீழ்ந்துபோகத்தக்க ஆலமரத்தை அதன் விழுது தாங்குதல்போலத் தந்தைசெய்யுந் தொழிலுக்கு நேருந் தளர்ச்சியை மைந்தன் முயற்சியால் நீக்கவேண்டும் என்பது கருத்து. இதனால், தன்னையேயன்றித் தன் முன்னோரையும் பெருமைப்படுத்தவல்ல முயற்சியின் சிறப்புக் கூறப்பட்டது.

ஆலமரம், அம்-சாரியை. மற்று அசை; பின்பு எனினுமாம். வீழ்-விழுந்துள்ளது; கருத்தாப்பொருள் விகுதி புணர்ந்துகெட்ட பெயர். மதலை என்பதில் மகனென்னும் பொருளுந் தோன்றும். **உவமையணி.**

"நைந்தடியற்ற வாலம் நடுங்கிவீழ்கின்றதென்று, வந்தவீழுன்றி வீழா வகைகிலை விலக்குமாபோல், மைந்தர்கள் தமக்குள் நல்ல அறிவினால் மகிழ்ந்து சேர்ந்து, தந்தையைத் தளராவண்ணம் தாங்குவர் தவத்தினென்றூன்" என்ற **ஒட்டக்கூத்தருத்தரகாண்டச** செய்யுள் இச்செய்யுளை அடியொற்றியது. "தூங்கு சிறைவாவலுறை தொன்மரங்க ளென்ன, ஓங்கு குலதையவதனுட் பிறந்த வீரர், தாங்கல் கடனுகும்" என்றார், **சிந்தாமணி**யாரும். (எ)

ககூஅ. ஈனமா யில்லிருந் தின்றி விளியினு
மானந் தலைவருவ செய்பவோ—யானை
வரிமுகம் புண்படுக்கும் வள்ளுகிர் நோன்றா
ளரிமா மதுகை யவர்.

(இ - ள்.) யானை-யானையினது, வரி-புள்ளிகளையுடைய, முகம்-முகத்தை, புண்படுக்கும்-விரணப்படுத்துகின்ற, வள்-கூர்மையான, உகிர்-நகங்களையும், நோன் தாள்-வலிமையுடைய கால்களையுமுடைய,—அரிமா-சிங்கத்தினது, மதுகையவர்-வலிமைபோன்ற வலிமையுடையவர்கள், ஈனம் ஆய் - (தம் தொழில்முயிற்சி) குறைபட்டு, இல் இருந்து - வீட்டிலேயே யிருந்து, இன்றி - (ஒருபொருளும்) இல்லாமல், விளியினும் - இறக்க நேர்ந்தாலும், மானம் தலை வருவ - இழிவு நேரும்படியான காரியங்களை, செய்பவோ - செய்வார்களோ ? [செய்யார்]; (எ - று.)

நல்ல சாமர்த்தியமுள்ளவர்கள் ஒருகால் தங்கள் முயற்சி இடையூறுற்றுத் தொடங்கிய தொழில்முடியாமல் வறுமையால் இறக்கும்படி நேரிட்டாலும் பொறுத்திருந்து அம்முயற்சியை மீண்டுங் கைகூடப் பார்ப்பார்களேயன்றி இழிதொழில்களைச் செய்யார் என்பதாம். (**நீதிநெறி விளக்கம்**) "நல்லாரெழுக்கின் றலைநின்றூர் நல்கூர்ந்தும், அல்லன செய்தற் கொருப்படார்-பல்பொறியு, செங்கட் புலியே றறப்பசித்துந் தின்ஞவாம், பைங்கட்புனத்த பைங்கூழ்" எனவும், (**நீதிவெண்பா**) "தோல்வற்றிச் சாயினுஞ் சான்றாண்மை குன்றுமை" எனவும் பிறர் கூறுமாறுங் காண்க.

உபமேயத்தில் 'இல்லிருந் தின்றி வினியினும்' என்பதற்கு ஏற்ப, உபமானத்தில் 'நுகையிலிருந்து உணவின்றி இறக்கினும்' என்றும், உபமானத்தில் 'யானை வரிமுகம் புண்படுக்கும் வள்ளுகிர் நோன்முள்' என்பதற்கு ஏற்ப, உபமேயத்தில் 'பெருமுயற்சியைச் செய்து முடிக்கும் கூரறிவர் தங்கருபாயமுடையார்' என்றும் வருவித்து உரைக்க.

தலைவருவ-. பயர். முகத்திற் செம்புள்ள . ளை யுடைத்தாயிருத்தல், உத்தம கஜல. . ணம். விமானமென்பது 'மானம்' என முதற்குறை விகாரப்பட்டு வருதல்போல, இங்கே அவமானமென்பது 'மானம்' எனக் குறைந்து நின்றது; இனி, மானம் தலைவருவ-பெருமைகெடுபவை என்றும் உரைக்கலாம்; இவ்வுரையில், தலையென்னும் **உபசருக்கம்**, வா என்னும் பகுதியின் பொருளோ வேறுபடுத்தியதென்க. (அ)

கஙகூக. தீங்கரும்பி னீன்ற திரள்கா லுலையலரி
தேங்கமழ் நாற்ற மிழந்தா அங்—தீசாங்பு
பூயர்புபு டட்பிறடபா னெல்லுமை பெயர்பொறிக்கும்
பேராண்மை யில்லாக் கடை.

(இ-ள்.) தீம் - மதுரமாகிய, கரும்பு-கரும்பானது, ஈன்ற-பெற்ற, திரள் கால்-திண்ட தாளையுடைய, உலை-(குதிரை செக்கு முதலியவற்றின்) பிடரி மயிர்போன்ற, அலரி-பூவானது, தேன் கமழ் நாற்றம்-தேனேறுதி கூடிப் பரிமளிக்கின்ற வாசனையை, இழந்து ஆகு-இழந்தாற் போல,—பெயர் பொறிக்கும் பேர் ஆண்மை இல்லாக்கடை-(தன்) பெயரை நிலைநிறுத்துதற்கு ஏதுவான பெரிய முயற்சித் திறமை இல்லாத விடத்து, ஓங்கும் உயர்குடியுள் பிறப்பின்-மிக உயர்ந்த குலத்திற் பிறந்ததனால், என் ஆம்-யாது பயன் உண்டாம்? [ஒன்றுமில்லை யென்றபடி].

மிக்க நுண்சுவையுள்ள கரும்பிற் பிறந்தும் அதன் நுனியிலுள்ள மலர்க்குச் சிறப்பில்லாமைபோல, உயர்குலத்திற் பிறந்தாலும் முயற்சியில்லாதார்க்குச் சிறப்பில்லை யென்பதாம்; **உவமையணி.**

திரள்கால்-பூரிற்குமிசடணம். கால்என்றது, அதன் அடியிடத்தை. மெதுவாய்ச் செறிந்து குஞ்சம்போலிருத்தலால், உலை, கரும்பின்மலருக்கு உவமையாயிற்று. அலர்வது,அலரி; இ-கருத்தாப்பொருள்விகுதி. தேன் + கமழ் = தேங்கமழ்; தேன்மொழி இறுதியழிந்து வலிவரமெலிசிக்கது.தேம் கமழ் எனப்பிரித்தால்,இனிமைமிகுந்த என்று பொருளாம்.இழந்தஅங்கு-செய்யலோசைநிறைக்க, வந்த அளபெடை; அளபெடையில்லாக்கால், வெண்டளை தவறும். ஓங்கும், உயர்-ஒருபொருட் பன்மொழி. பிறப்பின், ஐந்தனுருபு-எதுப்பொருளது. பொறித்தல்-அறிவுடையோரால் எழுதும் படியிருத்தல். பேராண்மை-அருமையான முயற்சிகளைச் செய்யுந் திறம். இல்லாக்கடை-எதிர்மறை யெதிர்கால வினையெச்சம். (கூ)

உ00. பெருமுத் தரையர் பெரிதுவந் தீயுங்
கருணைச்சோ றூர்வர் கயவர்—கருணையைப்
பேரு மறியார் நனிவிரும்பு தாளாண்மை
நீரு மமிழ்தாய் விடும்.

(இ - ள்.) கயவர்-கீழ்மக்கள் [ஒருமுயற்சியுமில்லாத சோம்பேறிகள்],-பெருமுத்தரையர்-பெருமுத்தரையர் என்பவர், பெரிது உவந்து-மிகவும் விரும்பி, ஈயும்-அளிக்கிற, கருணை சோறு-பொரிக்கறியோடுகூடிய சோற்றை, ஆர்வர்-உண்பார்கள்; கருணையை பேரும் அறியார்-பொரிக்கறியைப் பேரினலும் அறியாதவர், நனி விரும்பு தாளாண்மை-மிகவும் விரும்பிச்செய்த (தம்) முயற்சியாற் பெற்றஉண்ட, கீரும்-கீர்மாத்திரமும், அமிழ்துஆய்விடும்-(சிறப்பினல்) அமிருதத்தை ஒத்ததாகும்; (எ - று.)

தன்முயற்சியில்லாமற் பிறர்முயற்சியால் தான் பெற்ற நல்லுணவினும், பிறர் முயற்சியா லன்றித் தன்முயற்சியாற்பெற்று உண்ட புற்கை நீர்மாத்திரமும் மேலானதென்பது கருத்து. "தெண்ணீர் நடுபுற்கை யாயினுந் தான்தந்தது, உண்ணலி னூங்கினிய தில்" என்றார் திருக்குறளினும்.

இச்செய்யுள்செய்த ஆசிரியர் காலத்துப் பெருஞ் செல்வத்தினராய் அன்னதானஞ்செய்ததலிற் சிறந்த பெருமுத்தரையை யென்பவரொருவர் இருந்தனராதல்வேண்டும்; இப்பெயர் இத்தூலின் முப்பதாம் அதிகாரத்தில் ஆருவதுசெய்யுளினும் "கல்கூர்ந்தகண்ணுமும் பெருமுத்தரையமே, செல்வரைச் சென்றிரவாதார்" எனக் காணப்படுகின்றது. ஸ்ரீரங்கத்துக்குச சமீபத்திலுள்ள முத்தரசநல்லூரில் முத்தரசன் என ஓரரசன் இருந்ததாகவும், அவன் ஸ்ரீரங்காதருக்கு முத்துக்களாலேயே குடை சாமரம் சுருட்டி முதலிய எடுபிடிகளாயும் சில திருவாபரணங்களாயுஞ் செய்வித்ததாகவும் ஐதிகியமிருப்பதால், இப்பாட்டிற் சொல்லப்பட்டவன் அவ்வரசனுகவிருப்பினும் இருக்கலாமென்றும் எழுதிவைக்கப்படுகிறது. பெருமுத்து அரையர்-பெரிய முத்துக்களையுடைய பாண்டியவரசர்கள் எனவும் உரைக்கலாம்; அக்காட்டிலே முத்து மிகுதியும் உண்டாவது பிரசித்தம்; அன்றி, பெருமுத்தரையர் எனப்பிரித்து, பெரிய மூன்று தேசங்களுக்குத் தலைவர் எனக்கொண்டு, சேர சோழ பாண்டியர் என்னுந் தமிழ்நாட்டு மூவேந்தரெனவும் உரைகூறலாம். (தமது நாட்டிலுள்ள பிரபுக்களின் பெயரை எடுத்துத் தாம் செய்யும் நூலிற் சிறப்பித்துக் கூறுதல், கவிகளதுஇயல்பு; கம்பர் இராமாயணத்தில் திருவெண்ணெய் நல்லூர்ச் சடையப்ப முதலியாரையும், புகழேந்திப்புலவர் நளவெண்பாவில் முரணைநகர்ச் சந்திரன் சுவர்க்கியையும், வில்லிபுத்தூரார் மகாபாரதத்தில் வக்கபாகை வரபதியாட்கொண்டானையும், மண்டலபுருஷன் சூடாமணிநிகண்டில் கிருஷ்ணதேவராயனையும் புகழுமாறு அறிக.)

கருணை-மற்றைத்தின்பண்டங்களுக்கும் உபலக்ஷணம். கீரும், உம்மை-இழிவுசிறப்பு. * திருப்தியையும் பெருமையையுந்தருவதனல், அமிருதத்தோடு ஒப்பிடப்பட்டது. (கo)

அரசியல் முற்றிற்று.

இரண்டாவது

நட்பியல்.

உற்றுழி உதவுபவராகிய நண்பரின் தன்மையைக் கூறும் பாகம் என் பதாம். அரசனுக்குப் படைபோல யாவர்க்கும் தொழிலிடத்து உதவுவதா கிய நட்பின் இயல்பை விதிமுகத்தாலும் எதிர்மறைமுகத்தாலும் இவ்வதி காரம்முதல் நான்கு அதிகாரங்களாற் கூறுகின்றார். ஒருவனுக்கு இன்ப துன்பங்கள் நேர்ந்தவிடத்துவந்து உதவுபவர உறவினரும் நண்பரு மாத லால்: அவ்விருதிறத்தாரது தன்மையும் இவ்வியலிற் கூறப்படுதல் அறிக.

உக-ஆம் அதிகாரம்—ஈகை.

அஃதாவது-தனது உறவினரைத் தன்னிடத்தினின்றுவிட்டுநீங்காத படி அணைத்தல். செல்வம் அதிகாரம் முதலியவற்றால் தாம் தகுந்த மேம் பாட்டை அடையும்பொருட்டுப் பலவகைமுயற்சிகளையும் இடைவிடாது செய்தொழுகும் பெருமையுடையாருக்கு, சமயத்தில்வந்து உதவும் இவ்வுற வினரைத்தழுவுதலும் அம்முயற்சிகளின்இனமானதென்றாதலின்,இவ் வதிகாரம் தாளாண்மையென்னும் அதிகாரத்தின்பின் வைக்கப்பட்டது; பலவகை முயற்சிகளாலும் பொருள்படைத்தார்க்குப் பந்துஜனவருக்கத் தைத் தழுவிப் பாதுகாத்தல் தருமவழியாதலால், இவ்வதிகாரம் தாளாண் மையென்னும் அதிகாரத்தின்பின் வைக்கப்பட்டதென்றுங்கொள்ளலாம்; தாளாண்மை கருவியும், சுற்றந்தழுவுதல் பயனுமாமெனக்காண்க; சுற்றத் தாரைப் பேணியோம்புவது அறநெறியாதலை "தென்புலத்தார் தெய்வம் விருந்து ஒக்கல் தானென்றாங்கு, ஐம்புலத்தாறோம்பல்தலை"என்னுந்திருக் குறளாலும்அறிக. கீழதிகாரத்தில் "சிதலைகினப்பட்டஆலமரத்தை,மதலை பாய் மற்றதன் வீழ்ஞன்றியாங்குக், குதலைமை தந்தைகட்டோன்றின் தான் பெற்ற, புதல்வன் மறைப்பக் கெடும்"எனத் தோற்றுவாய்செய்த மாட்சி யையே விளக்கிக் கூறுதலாலும், அதிகாரவடைவுமுறைமையை அறிக. முயற்சிசெய்து செல்வம் சேர்த்தவர்க்கல்லது, பிறர்க்கு,நெருங்கிய சுற்றம் உண்டாகாது என்பதுபற்றி, தாளாண்மையின்பின் சுற்றந்தழால் நிறுத்தப் பட்டதென்பாரும்உளர். சுற்றம்-பந்துவர்க்கம்;சுபஅசுபகாலங்களில்வந்து ஒருவனைச்சுற்றிநிற்குந்தன்மையராகலின்,சுற்றமென்றுஉறவினர்க்குக்காரணப்பெயர்; சுற்று-பகுதி,அம் கருத்தாப் பொருள்விகுதி: இதனைத்தொழி லாகுபெயராகக்கொள்ளினும்அமையும்.தழால்-தழுவுதல்;தொழிற்பெயர் : தழுவுஎன்னும் பகுதி ஈறுகெட்டு ஈற்றயலுகரமும்போய் ஆல்என்னுந்தொ ழிற்பெயர்விகுதியோடு புணர்ந்தது; 'ஒரால்' என்பதும் இவ்வாறேநிற்கும்.

உ0க. வயாவும் வருத்தமு மீன்றக்கா ணேவுங்
கவாஅன் மகற்கண்டு தாய்மறந் தாஅங்
கசாஅத்தா னுற்ற வருத்த முசாஅத்தன்
கேளிரைக் காணக் கெடும்.

(இ - ள்.) வயாவும் - கருப்பந்தரித்திருக்கிறதனலுண்டான நோயையும், வருத்தமும் - அதுபற்றி வரும் பல துன்பங்களையும், ஈன்றக்கால் நோவும் - பிரசவிக்குங்காலத்து உண்டாகும் நோவையும், (எல்லாவற்றையும்), தாய்-தாயானவள், கவான் மகன் கண்டு-(தனது) மடியின்மேல் புத்திரனைப்பார்த்து அம்மாத்திரத்தில், மறந்து ஆங்கு-மறந்துபோனதுபோல,- அசா தான் உற்ற வருத்தம் - (பலவகைத்) தளர்ச்சிகளாலும் (ஒருவன்) தான் அடைந்த துன்பமெல்லாம், உசா தன் கேளிரை காண - மேற்ஷம விசாரணை செய்யுந் தன்மையுள்ள தனது உறவினரைப் பார்த்தமாத்திரத்தில், கெடும் - இருந்தது தெரியாமல் நீங்கும்; (எ - று.)

முற்றுவமையணி. வயா - கருவுற்ற நோய். **வருத்தம்** - அக்காலத்துத் தக்க உணவையேற்றுக்கொள்ளாமையும், உடம்புமெலிந்து தன்வசந்தப்புதலும் முதலியவற்று லுண்டாவன. **ஈன்றக்கால் நோவு** - பிரசவவேதனை. 'வயா என்பது கருக்கொள்ளுங் காலத்து வருவதொரு நோவு: இதனை மசக்கையெனவுஞ் சொல்லுவார்கள்; வருத்தமென்பது-கருவைப்பொறுத்துத் திரியுங்காலத்து வருவதொரு நோவு' என்பது, **பழையவுரை.**

ஈன்றக்கால் - கருவுயிர்க்கையில்; இது, எதிர்காலவினையெச்சம்: "சொல் திரியினும் பொருள் திரியா வினைக்குறை" என்ற பொதுவிதியால், பொருளமைதிக்கு ஏற்ப, இங்கே நிகழ்காலத்துக்கொள்ளப்பட்டது. கவான்-**கவீந்** என்னும் வடமொழியின் சிதைவென்பர்; அது வேதத்தில் வழங்குவது: அதற்கு-**தொடை**யென்று பொருள். மகற்கண்டு-உயர்திணையில் ஐயுருபு தொக்கது; உயர்திணைப்பெயரீறு விகாரப்பட்டது, இரண்டாம்வேற்றுமைத் தொகையாதலின்; "இயல்பின் விகாரம்". பலராலும் நன்குவிரும்பப்படுஞ் சிறப்புப்பற்றி, மகன் என ஆண்பாலினையே கூறினராயினும், **உபலக்ஷணத்தாற்** பெண்பாலையுங் கொள்க. மகன் என்பதில், மக-பகுதி: இளமை; உரிச்சொல்; ன்-ஆண்பால் விகுதி; இதன் பெண்பால், மகள்: மக்கள் என்பது-இவற்றின் பன்மையெனக் கொள்ளலாம். சுட்டிடைச் சொல்லடியாப் பிறந்த அங்குஎன்பதன் விகாரமான ஆங்கு என்பது-இங்கே உவமவுருபு. அசா, உசா-முதனிலைத் தொழிற்பெயர்கள்; இவற்றின்மேல் எதிர்மறைத்தொழிற்பெயர்கள் - அசாவாமை, உசாவாமை என வரும். காண-செயவெனெச்சம் காரணப் பொருளதாதலின் இறந்தகாலம்; நிகழ்காலத்துக்குரிய செயவெனெச்சத்தாற் கூறினது, விரைவையுணர்த்தற்கு. இப்பாட்டிலுள்ள அளபெடை நான்கும்-செய்யுளோசை நிறைத்தற்கு வந்தன; அலகிட்டுப் பார்த்து அறிக.

இச்செய்யுளோடு "பொன்னனுன்பிறந்தபோழ்தே, மருளுடைமாதருற்ற மம்மர்நோய் மறைந்ததன்றே" என்னும் **சிந்தாமணி**யும், "ஈன்றபொழுதிற் பெரிதுவக்கும்...தாய்" என்ற **திருக்குறளும்** ஒப்புநோக்கத்தக்கன.

சுற்றந்தழுவுதல் தனது பலவருத்தங்களும் ஒழிதற்குக் காரணமென, இச்செய்யுளால் சுற்றந்தழாலினது பயன் கூறப்பட்டது. (க)

உ0உ. அழன்மண்டு போழ்தினடைந்தவர்கட் கெல்லா
நிழன்மரம்போ னேரொப்பத் தாங்கிப்-பழமரம்போற்
பல்லார் பயன்றுய்ப்பத் தான்வருந்தி வாழ்வதே
நல்லாண் மகற்குக் கடன்.

(இ - ள்.) அழல் மண்டு போழ்தின் - வெயில்வெப்பம் கொருங்கிய காலத்தில், அடைந்தவர்கட்கு எல்லாம்-(தன்னிடம்வந்து) சேர்ந்தவர்யாவர்க்கும், நிழல் மரம்போல்-நிழலையுடையமரம் (பட்சபாதமின்றி வெப்பந் தணித்து உதவுதல்) போல, நேர் ஒப்ப தாங்கி-(துன்பம் நேர்ந்த காலத்துத் தன்னிடம் வந்து சேர்ந்த சுற்றத்தார்யாவரையும்) ஒரே சமமாக (அத்துன்பத்தினின்றும்) எடுத்துக்காத்து, பழமரம்போல்-பழுத்துள்ள மரம்போல, பல்லார் பயன் துய்ப்ப - பலரும் (தன்னிட்த்துப்) பயனை அனுபவிக்கும்படி, தான் வருந்தி வாழ்வதே-தான் வருத்தப்பட்டுக் கொண்டாயினும் உயிர்வாழ்ந்திருப்பதே, நல்ஆண் மகற்குக் கடன்-ஆண் தன்மையுள்ள நல்ல மனிதனுக்குக் கடமை; (எ - று.)

இதுவும் **உவமைய ணி**. முதலடியை உபமானம் உபமேயம் என்னும் இரண்டுக்கும் கூட்டுக. பழுமரம்-ஆலமரமென்றுங் கொள்ளலாம்; "தெள்ளிய ஆலின் சிறுபழத்தொருவிசை, தெண்ணீர்க்கயத்துட் சிறுமீன் சினையினும், நுண்ணிதீது யாயினு மண்ணல் யானை, யணிதேர் புரவியாட் பெரும் படையொடு, மன்னர்க் கிருக்க நிழலாகும்மே" என்பவாதலால்.

இலை பூ காய் பழம் முதலிய தனது உறுப்புக்களில் தம்தமக்குவேண்டுவனவற்றை வேண்டியபொழுது அவரவர்கொய்துகொள்ளத்தான் இடங் கொடுத்துப் பொறுத்திருத்தலேபோல வருந்துதலாகக் கூறினது; உபமேயத்துக்கும் இங்ஙனமே ஏற்றபடி கொள்க. "பயன்மர முள்ளூர்ப் பழுத்தற்ருற் செல்வம், நயனுடையானகட்படின்" எனவும், "மருந்தாகித் தப்பா மரத்தற்ருற் செல்வம், பெருந்தகையான்கட்படின்" எனவும் **திருக்குறளி**லும்; "மன்னர் திருவும், மகளிரெழினலமும், துன்னியார் துய்ப்பர் தகல்வேண்டா-துன்னிக், குழைகொண்டு தாழ்ந்த குளிர்மர மெல்லாம், உழைதங்கட்செனறூர்க்கு ஒருங்கு" எனவும், "நடுவூருள் வேதிகை சுற்றுக்கோட் புக்க, படுபேய் யன்னர் பலர்நச்ச வாழ்வார், குடிகொழுத்தக் கண்ணுங் கொடுத்துண்ணு மாக்கள், இடுகாட்டேற்றைப் பேய்" எனவும் இந்நூலிலும்; "பார்கெழு பழுமரம் பழுத்தற்ருகவும்... வார்புனல் பெருகவு மறுக்கின்றூர்கள் யார்" எனக் **கம்பராமாயண**த்திலும் வருகின்ற செய்யுள்களின் பொருள் இதனோடு ஒத்ததாம்.

பயன், கடன்பயம், கடம்: மகரனகரம் மாறி வருஞ்சொல். 'வாழ்வதே' என்னும் ஏகாரம் - பிரிநிலை. நல் ஆண்மகன்-நற்குண நற்செய்கை களையுடைய புருஷன். ஆள் மகன் - ஆண் மகனுமாம். நல்லாண்மகன்-உயர்குலத்திற் பிறந்தவனுமாம்; நல்லாள் மகன் எனப் பிரித்தால், நல்லவளது மகனென்று ஆம்.

இச்செய்யுளை, "சாயாமன்யஸ்ய குர்வந்தி, ஸ்வயந்திஷ்டந்தி சாதபே-பலந்திச பரார்த்தேச, நாத்மஹேதோர் மஹாத்ருமாஃ" "வதான்யஸ்ஸம் விபாதேச, பூர்ணேகுர்யாதநுக்ரஹம்-சாயயா ப்யாயயந் தத்யாத், பலான்யபி மஹீருஹ ஃ" என்னும் வட நூல் மேற்கோளோடு ஒப்பிட்டுக் காண்க.

இதனால், சுற்றந்தழால் இல்லறத்தார்க்குக் கடமையெனக் கூறப்பட்டது.

உ0ஙூ. அடுக்கன் மலைநாட தற்சேர்ந் தவரை
யெடுக்கல மென்னுர் பெரியோ—ரடுத்தடுத்து
வன்காய் பலபல காய்ப்பினு மில்லையே
தன்காய் பொறுக்கலாக் கொம்பு.

(இ - ள்) அடுக்கல் மலைநாட-(கற்களை ஒன்றன்மேலொன்று) அடுக்கி வைத்தாற்போன்ற மலைகள் பொருந்திய நாட்டையுடைய அரசனே!—பெரியோர்-பெருமைக்குணமுடையவர்கள், தன் சேர்ந்தவரை எடுக்கலம் என்னுர்-தம்மை அடைந்தவர்களைப் பாதுகாக்கமாட்டோ மென்று கூறார்; அடுத்து அடுத்து வல் காய் பலபல காய்ப்பினும்-நெருங்கி நெருங்கி வலிய (பெரிய) காய்கள் அனேகங் காய்த்தாலும், தன் காய் பொறுக்கலா கொம்பு-தன் காய்களைச் சுமக்கமாட்டாத மரக்கிளைகள், இல்லையே - (உலகத்தில்) இல்லையன்றே? (எ - று.)

கனமான காய்கள் எத்தனை காய்த்தாலும் அவற்றை மரக்கிளைகள் எவ்வளவு மெல்லியனவாயிருப்பினும் பொறுப்பது இயல்பாதல் போல, பெருங் குடும்பமுடைய பந்துக்கள் எத்தனை பேர் தம்மை வந்து சேர்ந்தாலும் பெரியோர் தாங்கள் எவ்வளவு எளிய நிலைமையிலிருந்தாலும் அவர்களைக் காத்தலை இயல்பாகக் கொள்வ ரென்பதாம். **எடுத்துக்காட்டு வமையணி.**

அடுக்கல் - தொழிற்பெயர். அடுக்கல்மலை - ஒன்றொடொன்று தொடர்ச்சியான பக்கமலை யெனினுமாம். கண்டவர்களால் மலையப்படுதல் பற்றி, மலையென்பது - **காரணப் பெயர்**; மலைதல் - அஞ்சுதல்; செயப்படுபொருள் விகுதி புணர்ந்து கெட்டது. அடுக்கலைச் சிகரத்துக் கொண்டிருத்தல்போலச் சுற்றத்தாரை உயர்த்துதல் பெரியோரின் தன்மையென்பது, விளியாற் பெறப்படுந் தொகைமொழி.

'மலைநாட' என்று மலைமுகமாக நாட்டின் சிறப்பைக் கூறியது, மலையில் விளையத் தக்க மிளகு, கோட்டம், அகில், தக்கோலம், குங்குமம் முதலிய பொருள்களாலும் மலையினின்று பெருகும் அருவிநீர் வளத்தாலும் செழிப்புடைய தென்பதோடு, சிறந்த காவலான மலையரணையுடைய தென்னுங் கருத்தையுங் கொண்டு: "இருபுனலும் வாய்ந்த மலையும் வருபுனலும், வல்லரணும் நாட்டிற் குறுப்பு" என்னுந் **திருக்குறளாலும்** நாட்டிற்கு மலை நீல்லுறுப்பாதலை அறிக.

பின் 'பெரியோர்' எனப் பன்மையாக வருதற்கு ஏற்ப 'தஞ்சேர்ந்தவரை' என்னுது ஒருமையாக 'தற்சேர்ந்தவரை' என்றது, ஒருமை பன்மை மயக்கம்; இந் நூலில் கீழ் "நடுக்குற்றுத் தற்சேர்ந்தார் துன்பந் துடையார்" என்றவிடத்தும் இவ்விலக்கணவமைதி காண்க. 'தன்' என்

பதன் ஈற்றுனகரம் வன்மையோடு உறழாமல் திரிந்தே வருதல், இரண்டாம் வேற்றுமைத் தொகைச் சிறப்பு விதியால். பலபல என்ற அடுக்கு, மிகுதி பற்றி வந்தது.

'கொடிக்குக் காய் பளுவோ?' என்னும் பழமொழி வழங்குதலுங் காண்க.

இதனால், சுற்றந்தழால் பெரியோருக்கு இயல் பெனப்பட்டது. (கூ)

உ0ச. உலகறியத் தீரக் கலப்பினு நில்லா
சிலபகலாஞ் சிற்றினத்தார் கேண்மை—நிலைதிரியா
நிற்கும் பெரியோர் நெறியடைய நின்றனைத்தா
லொற்க மிலாளர் தொடர்பு.

(இ - ள்.) சிறு இனத்தார் கேண்மை-அற்பகுணமுடைய உறவினரது தொடர்ச்சி,—உலகு அறிய தீர கலப்பினும் - உலகத்தாரெல்லோரும் அறியும்படி குறைவுதீர (முதலிற்) கலந்து நின்றாலும், நில்லா - நிலை நிற்க மாட்டாவாம்: சில பகல் ஆம் - சில தினமே இருக்கும்; ஒற்கம் இல் ஆளர் தொடர்பு - (குணத்) தளர்ச்சி யில்லாத உறவினரது சம்பந்தமோ வெனின்,—நிலை திரியா நிற்கும் பெரியோர்-(தம் தம் வருணச்சிரம) நிலைமைகளினின்று மாறுபடாமல் ஒரு நிலையில் நிற்கின்ற பெரியோர்கள், நெறி அடைய-(மோக்ஷமாகிய) நற்கதியைப் பெறுதற்கு, நின்ற அனைத்து-(யோக மார்க்கத்தில்) நிலைநின்ற அத்தன்மைத்து; (எ - று.)

தவறாது நெடுங்காலம் நின்று பயன்படு மென்பது கருத்து. "நூறாண்டு பழகினும் மூர்க்கர்கேண்மை, நீர்க்குட்பாசிபோல் வேர்க் கொள்ளாதே", "ஒரு நாட் பழகினும் பெரியோர்கேண்மை, இருநிலம் பிளக்க வேர்வீழ்க்கும்மே" என்றார் **நறுந்தொகையிலும்**. **உவமையணி**.

இதனால், நற்குண நற்செய்கையுடைய உறவினரே தழுவத் தக்கவ ரென்றும், அங்ஙன மில்லாதவர் தழுவத்தகாதவ ரென்றும் வேறுபாடு கூறப்பட்டது.

அதிகாரம் சுற்றந்தழாலாதலின், 'இனத்தார்' என்றது, உறவினரையே உணர்த்திற்று; கீழிரண்டுபாடல்களில் 'அடைந்தவர்கள்', 'பல்லார்', 'சேர்ந்தவர்' என்றவையும் இவ்வாறே: மேலும் இங்ஙனஞ் சில காண்க.

உலகு-இடவாகுபெயர். தீர - முடிவுபோக, செவ்வையாக, உறுதிப்பட. உம்மை-உயர்வு சிறப்பு. நில்லா-எதிர்மறைப் பலவின்பால் முற்று; முற்றெச்சமாகவுங் கொள்ளலாம். கேண்மை-பால்பகா அஃறிணைப் பெயராதலால், நில்லா என்னும் பன்மைவினை கொண்டது: இதனை, ஈறு கெட்ட எதிர்மறை வினையெச்சமாகக் கொள்ளலாகாது; 'நில்லாச் சிலபகலாம்' என அதன்முன் வலிமிகவேண்டு மாதலால். அடைய-செய வெனெச்சம், காரியப் பொருளதாதலின், எதிர்காலம். இலாளர் - இல்லாமையை யாளுபவர்: இல்லாமையையுடையவர்; இல்லாதவரென்க. ஆல்-ஈற்றசை. (ச)

உ0நி. இன்ன ரினைய ரெமர்பிற ரென்னுஞ்சொ
லென்னு மிலரா மியல்பினுற்—றுன்னித்
தொலைமக்க டுன்பந்தீர்ப் பாரேயார் மாட்டுந்
தலைமக்க ளாகற்பா லார்.

(இ - ள்.) 'இன்னர் - இவர், இனையர் - இத்தன்மையர், எமர்-எமக்கு வேண்டியவர், பிறர்-எமக்கு வேண்டாதவர்,' என்னும்-என்று சொல்லுகின்ற, சொல்-வார்த்தை, என்னும்-மிகச்சிறிதும், இலர் ஆம்-இல்லாதவராகின்ற, இயல்பினுல் - தன்மையினுல்,—துன்னி-சேர்ந்து, தொல் மக்கள் துன்பம் தீர்ப்பாரே-(துன்பத்தால்) தளர்கிற (உறவினரான)மனிதர்களது வருத்தங்களை ஒழிப்பவர்கள் தாமே, — யார்மாட்டும்-எல்லோரிடத்தும், தலைமக்கள் ஆகல்பாலார் - மேன்மக்களாகுந் தன்மையுள்ளவர் ; (எ - று.) —துடைப்பார் யார் மாட்டும் என்றும் பாடம்.

தமது உறவினர் குணக்கேடுடையராயினும் அக்காரணத்தால் தமக்கு வேண்டாதவராயினும் அவர்களுக்கு ஒரு துன்பம் நேருமாயின் அக்காலத்திலே அவர்குற்றங்களை மறந்து அவர்களைப் பாதுகாப்பதே உத்தமமான நல்லொழுக்க மென்பதாம்.

நற்குண நிறைவுடைய உறவினரே தழுவத்தக்கவரெனக் கீழ்ப்பாட்டிற் கூறப்பட்ட விதிக்கு, சமயபேதவகையால், இப்பாடலில் விலக்குக் கூறியபடியாம். நமது உறவினரென்றும் உறவினரல்லாதவரென்றும் வேறுபாடு கருதாது யாரையுந்தழுவுதல் தலையறமென இப்பாட்டுக்குக் கருத்து உரைத்தல், அதிகாரத்தோடு முரண்படுவதாதல் காண்க.

இயல்பினுல்-இயற்கையோடுகூடி யென்றும் உரைக்கலாம். அதிகாரத்துக்கு ஏற்ப,மக்கள்-பந்துஜன மெனப்பட்டது. எ-பிரிநிலை. யார்-வினு, எஞ்சாமைகுறித்தது; மாட்டு ஏழனுருபு. தலைமக்கள்-தலையுடைய மக்கள், உத்தம அங்கமான தலைபோல யாவர்க்கும் மேற்கொள்ளத்தக்க மக்கள். ஆகற்பாலார்-ஆகுதற்கேற்ற பான்மையை யுடையார். (இ)

உ0சு. பொற்கலத்துப் பெய்த புலியுகிர் வான்புழுக்க
லக்காரம் பாலோ டமராரக்கைத் துண்டலி
னுப்பிலிப் புற்கை யுயிர்போற் கிளைஞர்மாட்
டெக்கலத் தானு மினிது.

(இ - ள்.) பொன் கலத்து பெய்த - பொன்னாலாகிய பாத்திரத்திலே இடப்பட்ட, புலி உகிர் வான் புழுக்கல்-புலியின் நகம்போல (வெண்மையான) சிறந்த சோற்றை, அக்காரம் பாலோடு-சர்க்கரையோடும் பாலோடும், அமரார் கைத்து-உறவினராகப் பொருந்தாதவருடைய கையால் வந்ததை, உண்டலின்-உண்ணுதலைக்காட்டிலும், உப்பு இலி புற்கை-உப்பில்லாததான புல்லரிசிக்கூழை, உயிர்போல் கிளைஞர்மாட்டு-(தனது) உயிர்போன்ற உறவினரிடத்து, எக் கலத்து ஆனும்-எந்தப்பாத்திரத்திலாயினும் (உண்பது), இனிது-(பலவாற்றாலும்) இனிமையுடையது; (எ - று.)

இதனுல், சுற்றத்தார்சிறப்பு வருணனைவகையாற் கூறப்பட்டது.

வால் புழுக்கல் எனப்பிரித்து, சுத்தமான சோறு எனினுமாம்; (" அகன்புனல் " போல.) புழுக்கல்-சமைக்கப்பட்ட சோற்றுக்குத் **தொழி லாகு பெயர்**; இனி, அல்-செயப்படுபொருள்விகுதி யெனினும் தவறுகாது. அக்காரம்-**இக்ஷுஸாரம்** என்ற வடமொழியின் சிதைவு என்பர் உணர்ந் தோர்; கருப்பஞ்சாறு என்று முதலிற் பொருள்: அது, பின்பு இலக்கணை யாய், அதன் காரியமான சர்க்கரைக்கு வந்தது. அக்காரம் பால்-உம்மைத் தொகை. அமரார்-எதிர்மறைப்பலர்பால் வினையாலணையும் பெயர்; எதிர் மறையாகாரம் புணர்ந்துகெட்டது. 'உப்பும்' என்னும் இழிவு சிறப் பும்மை, விகாரத்தால் தொக்கது; அது, எல்லாச்சுவைகளுள்ளுஞ் சிறந்த தான உப்பினது இன்றியமையாமையை உணர்த்தும். புற்கை-இழிவான உணவு. எக்கலத்தானும், உம்-இழிவு சிறப்பு. கலம்-உண்கலம்.

'அமரர்கைத்து' என்று பாடமோதி, (சுற்றத்தவரல்லாத) தேவர்கள் கையிலிருந்து என்று உரைத்தல், மிகத்தகுதியாம். பாலுக்குச் சர்க்கரை யில்லை யென்பார்க்கும் பருக்கையற்ற கூழுக்குப்போட வுப்பில்லை யென் பார்க்கும் அவரவர் தகுதிக்கு ஏற்பக் குறைவு குறைவே யாதலால், 'அக் காரம் பாலோடு' எனவும், 'உப்பிலிப்புற்கை' எனவும் உடன்சேர்த்துக் கூறப்பட்டது. (சு)

உ0எ. நாள்வாய்ப் பெறினுந்தந் நள்ளாதா ரில்லத்து
வேளாண்மை வெங்கருனை வேம்பாகுங்—கேளா
யபரானப் போழ்தி னடகிடுவா ரேனுந்
தமராயார் மாட்டே யினிது.

(இ - ள்.) நாள்வாய் பெறினும்-காலத்திலே பெறப்பட்டாலும், தம் நள்ளாதார் இல்லத்து-தம்மோடு சினேகஞ்செய்யாதவரது பகைவர் வீட் டிலே, வேளாண்மை-உபகாரமாகக் கொடுக்கப்பட்ட, வெம் கருனை-சுடு கையோடு கூடிய பொரிக்கறியுணவும், வேம்புஆகும்-வேப்பங்காய்போலக் கைப்புடையதாம்; கேளாய்-(யான்சொல்வதைக்) கேள்; அபரானப் போழ்தின்-பிற்பகற்பொழுதிலே, அடகு இடுவர் எனும்-இலக்கறியை இடுவராயினும், தமர் ஆயார் மாட்டே-உறவினரானவரது வீட்டிலே யாயின், இனிது-இனிய சுவை யுடையதாம்; (எ - று.)

இங்ஙனந் தோன்றுதற்குக் காரணம்-முறையே அன்பில்லாமையும், அன்புடைமையுமாம். இதுவும், உறவினரின்சிறப்பைப் புனைந்துரைவகை யாற் கூறியதே.

நாள்வாய்-தினத்தின் தொடக்கமான உதயகாலத்திலே யென்றபடி. நள்ளாதார்-சினேகஞ் செய்யாதவர்; அதிகாரத்துக்கு, ஏற்ப, உறவினர்; எதிர் மறைவினையாலணையும் பெயர். வேளாண்மை-பண்புப் பெயர். வெங் கருனை-விரும்பப்படுங் கறியமுதுமாம்; வெம்மை-விருப்பமு மாதலை "வெம்மை வேண்டல்" என்னுந் **தொல்காப்பியத்**தாலறிக. வேம்பு-மரத் தின் பெயர், அதன் காய் முதலிய சினேக்கு முதலாகுபெயர். அபரானம்-**அபராஹ்நம்**; வடசொல்திரிபு: அபர அஹ்நமெனப் பிரிக்க; அபரம்-பின், அஹ்நம்-பகல்: எனவே, மத்தியான்ன காலத்துக்குப்பின்னிட்ட பொழு

தாம் ; இது, வடமொழிப்புணர்ச்சி, தீர்க்கசந்தி. அபரானப்போழ்து - இருபெயரொட்டுப்பண்புத் தொகை. அடகு - கீரை போல்வன.

இதனை, பாண்டியனை நோக்கியதே யாகவாவது, பிறனொருவனுக்கு உபதேச மூலமாகத் தெரிவித்ததாகவாவது கொள்ளலாம்.

இவ்வதிகாரத்துப் பத்தாம் பாட்டும் இக்கருத்தையுடையது. "வெருக்குக்கண்வெங்கருனை வேம்பாம்" என்றாற்போல, 'வேளாண்மை வெங்கருனை வேம்பாகும்' எனப்பட்டது. (எ)

உ0அ. முட்டிகை போல முனியாது வைகலுங்
கொட்டியுண் பாருங் குறடுபோற் கைவிடுவர்
சுட்டுக்கோல் போல வெரியும் புகுவரே
நட்டா ரெனப்படு வார்.

(இ - ள்.) முட்டிகை போல - சம்மட்டியென்னுங் கருவிபோல, முனியாது-(தம்தொழிலிலே) வெறுப்பில்லாமல் [சோம்பாமல், ஓயாமல் என்றபடி], வைகலும்-நாள்தோறும், கொட்டி - (பிறபொருளை) அடித்தடித்து, உண்பாரும் - தாம்ஜீவிப்பவர்களும், குறடுபோல் கைவிடுவர் - (அனல்வெம்மை நணுகுங்காலத்து அதிலே பொருளை விட்டிட்டுத் தான் நீங்கியொழியுங்) குறடென்னுங் கருவிபோல (ஒருவர்க்குத் துன்பம்வந்த காலத்து அவரைக்) கைவிட்டு நீங்குவர்; நட்டார் எனப்படுவார் - அன்புடைய உறவினரென்று சொல்லப்படுபவர், சுட்டுக்கோல் போல-உலையாணிக்கோல் போல, எரியும் புகுவர் - (அப்பொருளுடன்கூட) நெருப்பையும் அடைவர்; (எ - று.)

முட்டிகை, குறடு, சுட்டுக்கோல் எனக் கம்மாளர்கருவிகளே இச் செய்யுளில் உவமையாகக் கொள்ளப்பட்டவாறு காண்க. தமது இன்பத்துக்கு மகிழ்ந்து துன்பத்துக்கு வருந்துபவரே உறவினராவரென்றும், அங்ஙனமன்றி இன்பம் நேர்ந்தகாலத்து உடன்வந்து உண்டு உயிர்வாழ்ந்து, துன்பம் நேர்ந்தவாறே அதற்கு உடனில்லாமல் விட்டொழியுந் தன்மையர் உறவினரல்லரென்றும் இதனால் உண்மை கூறப்பட்டது. "அற்றகுளத்தி லறுநீர்ப் பறவைபோ, லுற்றுழித் தீர்வா ருறவல்லர்-அக்குளத்திற், கொட்டியு மாம்பலு நெய்தலும் போலவே, யொட்டி யுலர்வா ருறவு" என்ற **ஔவையார் மூதுரை**யோடு இதனை ஒப்பிட்டு அறிக.

முனியாது-எதிர்மறைவினையெச்சம்; உ-விகுதி, த்-எழுத்துப்பேறு; து-விகுதி யென்பாரும் உளர். வைகலும், உம்மை-தொறுப்பொருளது. கொட்டியுண்பார் - ஒருவரை அடித்து வருத்தித் தாம் உண்டு வாழ்பவர். உம் - உயர்வுசிறப்பு. எரியும், உம் - இழிவு சிறப்பு. புகுவரே, ஏ-தேற்றம். அதிகாரத்தால், நட்டார் என்பது-உறவினராயிற்று. எனப்படுவார்-என்று சிறப்பித்துக் கூறப்படுவார்; "ஊரெனப்படுவது உறையூர்", "பூ வெனப்படுவது பொறிவாழ்பூவே" என்றாற் போல. (அ)

உ0கூ. நறுமலர்த் தண்கோதாய் நட்டார்க்கு நட்டார்
மறுமையுஞ் செய்வதொன் றுண்டோ—விறுமளவு

மின்புறுவ வின்புற் றெழீஇ யவரோடு
துன்புறுவ துன்புறுக் கால்.

(இ - ள்.) நறு - நல்ல மணமுள்ள, மலர் - பூக்களாலாகிய, தண் - குளிர்ந்த, கோதாய்-மாலையையுடையவளே! நட்டார்-உறவினர், நட்டார்க்கு-தம் உறவினர்க்கு, இறும் அளவும்-(அவரும் தாமும்) இறந்தொழியும் வரையிலும்,அவரோடு-அவர்களுடனே,(இம்மையில்), இன்புஉறுவ இன்புஉற்று-இன்பமடையத்தக்கவற்றிற்குஇன்பமடைந்து,எழீஇ-நடந்து [ஒழுகியென்றபடி], துன்பு உறுவ துன்பு உறுக்கால்-துன்பப்படத்தக்க வற்றிற்குத் துன்பப்படாவிட்டால், மறுமையும் செய்வது ஒன்று உண்டோ - மறுமையிலுஞ் செய்வதோர் உதவி (உலகத்தில்) உள்ளதோ? [இல்லை யென்றபடி]; (எ - று.)

ஒருவர்இன்புறத் தாம் இன்புற்று அவர் துன்புறத் தாமுங் கூடத் துன்புறுபவரே தக்க உறவினராவரென உறவினரிலக்கணங் கூறப் பட்டது. உறவின ருறவெல்லாம் உடம்பைவிட்டு உயிர் ஒழியுமளவே யாதலால், நட்டார்க்கு நட்டார் மறுமையிற் செய்வதொன்றும் இல்லை யாயிற்று.

மலர்த்தண்கோதாய் - பூக்களைச்சூடிய குளிர்ந்த கூந்தலுடையாளே என்றுமாம். நறுமலர்த்தண்கோதை - அன்மொழித்தொகை; கோதை-மாலைபோல்பவளென உரைத்தால், உவமையாகுபெயர். கோதாய் என ஈறுதிரிந்தது, விளியுருபு. இது, **மகடூஉமுன்னிலை.** ஒருவரியல்பை உணராது உறவு கொண்டாடுதல் பெரும்பாலும் மகளிர்தன்மையே யாதலால், பெண்பாலை முன்னிலைப்படுத்தி இது கூறினர். மறுமையும் என்ற உம்மையால், இம்மையிலெயல்லாமல் என்பது விளக்கப்பட்டது. உம்மை-இழிவு சிறப்புப் பொருளதே யாதல் வேண்டும்; ஒருவன் உயிர்வாழ்ந்திருந்த பொழுதிலெல்லாம் இல்லாமல் அவன் இறந்தபின்பு என்றபடி. இனி, உம்மையை ஒன்று என்பதனோடு கூட்டலுமாம். எழுந்து என்பது, 'எழீஇ' என விகாரப்பட்டு அளபெடுத்தது; **சொல்லிசையளபெடை.** எழீஇ-எழுந்து; மகிழ்ச்சியோடு தலையெடுத்து என்றவாறுமாம்.

"உத்ஸவே வ்யஸநேஷ்வ, துர்பிக்ஷே ஶத்ருஸங்கடே - ராஜத்வாரே ஶ்மஶாநேச, யஸ்திஷ்டதிஸபாந்தவ:" என்ற வடநூல்மேற்கோள் உணரத்தக்கது.
(கூ)

உக0. விருப்பிலா ரில்லத்து வேறிருந் துண்ணும்
வெருக்குக்கண் வெங்கரூஉ வேம்பாம்—விருப்புடைத்
தன்போல்வா ரில்லுட் டயங்குநீர்த் தண்புற்கை
யென்போ டியைந்த வமிழ்து.

(இ - ள்) விருப்பு இலார் இல்லத்து-(தன்மேல்)அன்பில்லாதபிறரது இல்,வேறுஇருந்துஉண்ணும்-தனியேயிருந்துஉண்ணுகின்ற,வெருகு

கண் வெம் கருனே - பூனையின்கண்போல் ஒருவகைப் பளபளப்பையுடைய சுடுகிற பொரிக்கறியுணவும், வேம்பு ஆம்-வேம்புபோலக் கைப்புடையதாம்: விருப்பு உடை தன்போல்வார் இல்லுள் - (தன்மேல்) அன்புடைய [தன்னுடொத்த] தமரது வீட்டிலே, (உண்ணப்படுகின்ற), தயங்கு நீர் தண் புற்கை - தெளிவான நீர் வடிவமாயுள்ள குளிர்ந்த புல்லரிசிக் கூழும், என் போடு இயைந்த அமிழ்து - உடம்பிற்கு ஒத்த அமிருதமாகும்; (எ - று.)

அமிருதம்போ லினியதா மென்றபடி. **உவமையணி.** இக்கருத்து, இவ்வதிகாரத்து ஆறு ஏழாம் பாட்டுக்களோடு ஒத்தது.

வேறிருந்து என்பதில், அன்பிற்குத் தக்க உபசாரம் பெறுமலிருந்து என்னும் பொருளுந் தோன்றும். வெருகு + கண் = வெருக்குக்கண்; வேற்றுமைப்புணர்ச்சியில் உயிர்த்தொடர்க் குற்றியலுகரத்துக் ககரவொற்று இரட்டிற்று; "நெடிலோ டுயிர்த்தொடர்க் குற்றுகரங்களுள், டறவொற்றி ரட்டும் வேற்றுமைமிகவே" என்ற **நன்னூற்** சூத்திரத்து '**மிகவே**' என்றது காண்க. சுடுகையே ஒருசுவையாதலால், 'வெங்கருனே' எனப்பட்டது. விருப்புடைத் தன்போல்வார் - ஒருவரோ டொருவர் அன்புடையா ரென்றபடி. தயங்கு நீர்த் தண்புற்கை-பருக்கையற்ற கூழ். என்பு - உடம்புக்குச் சினையாகு பெயர்; "என்பு முரியர் பிறருக்கு" என்ற **திருக்குறளிற்** போல; வேறிருந்து-பிறரோடொப்பப் பந்தியில்லாமல் சிறப்பாகத் தான் தனியேயிருந்து என்றுங் கொள்ளலாம். கருனே புற்கை என்றவற்றில், முறையே உயர்வுசிறப்பு இழிவு சிறப்பு உம்மைகள் விகாரத்தால் தொக்கன. அமிழ்து - அம்ருதம்; வடசொல்; மரணத்தைத் தவிர்ப்பது.

இப்பாட்டின் இரண்டாமடியிற்போலவே முன் உ0எ-ஆம் பாட்டின் இரண்டாமடியிலும் 'வெங்கருனே வேம்பாகும்' என்னும் உபமானம் வந்துள்ளது. (க0)

உஉ - ஆம் அதிகாரம்—நட்பாராய்தல்.

அஃதாவது-சிறந்த இலக்கணமுடைய சினேகிதரை இன்னரென்று ஆராய்ந்து அறிதல். ஒருவன் குணங்களை ஆராயாமல் அவனுடு விரைந்து நட்புக்கொண்டால் அதனுற் சிலசமயங்களில் தீங்குநேரு மாதலாலும், குற்றங்கண்டு பின்பு அவனைவிடுதல் குற்ற மாதலாலும், நட்புக்கொள்ளு மிடத்துக் குடிப்பிறப்பும் ஒழுக்கமும் குணநலமும் உடைமையைப்பற்றி நன்றாக ஆராய்ந்து நட்புக்கொள்ளக்கடவன் என்பதாம். ஒருவனுக்கு இன்பதுன்பங்கள் நேர்ந்தவிடத்து வந்து உறவினர்போல உதவுபவர் நண்பராதலால், இது சுற்றந்தழாலின்பின் வைக்கப்பட்டது.

நட்பு - இங்கே, நட்புடையார்க்குத் தொழிலாகுபெயர்.

உகக. கருதீதுணர்ந்து கற்றறிந்தார் கேண்மையெஞ்ஞான்றுங்
குருத்திற் கரும்புதின் றற்றே—குருத்திற்
கெதிர்செலத்தின் றன்ன தகைத்தரோ வென்று
மதுர மிலாளர் தொடர்பு.

(இ - ள்.) கருத்து உணர்ந்து - (நூல்களின்) உட்பொருளை அறியாநின்று, கற்று அறிந்தார்-படித்துத்தேர்ந்தவர்களது, கேண்மை-சினேகம், எஞ்ஞான்றும் - எப்பொழுதும், குருத்தின் கரும்பு தின்று அற்று - நுனிக்குருத்திலிருந்து (அடிவரையில்) கரும்பைக் கடித்துத்தின்ருற்போலும் [வரவர இனிமைதரும்]; என்றும்-எப்பொழுதும், மதுரம்இல்லாளர்தொடர்பு-(கல்வியறிவாகிய) இனியதன்மை யில்லாதவர்களது சினேகம், குருத்திற்கு எதிர்செலதின்று அன்ன தகைத்து - (அக்கரும்பையே) குருத்திற்கு எதிரே செல்லும்படி [அடியிலிருந்து] (நுனிவரையில்) தின்ருற்போன்ற தன்மையையுடையது [வரவர இன்னாமையைத்தரும்]; (எ - று.)—அரோ-ஈற்றசை; தேற்றமுமாம்.

இதனால், சிநேகிக்கத்தக்கவரும் சிநேகிக்கத்தகாதவரும் இன்னரெனக் கூறப்பட்டது.

அறிவுடையாரும் அறிவுடையாருஞ் செய்த நட்பு முன்சுருங்கிப் பின் பெருகுதற்கும், அறிவிலாதாரும் அறிவிலாதாருஞ்செய்த நட்பு முன்பெருகிப்பின் சுருங்குதற்குங் காரணம்,தம்முள் ஒருவர்ஒருவருடைய குணத்தை முன் அறியாமையும் பின் அறிதலுமாம். கீழ்க் கல்வியென்னும் அதிகாரத்தில் "கனே கடற் றண்சேர்ப்ப கற்றறிந்தார் கேண்மை, நுனியிற் கரும்பு தின் றற்றே-நுனிநீக்கித், தூரிற்றின்றன்னதகைத்தரோ பண்பிலா, ஈரமி லாளர் தொடர்பு" என்றதிலும் இக்கருத்தே கூறப்பட்டுள்ளது: இதனை "நிறைநீர நீரவர் கேண்மை பிறைமதிப், பின்னீர பேதையார் நட்பு" என்னுந் திருக்குறளோடும், "பெரியவர் கேண்மைபிறைபோல நாளும் வரிசை வரிசையா நந்தும்-வரிசையால், வாணூர் மதியம்போல் வைகலுந் தேயுமே, தானே சிறியா தொடர்பு" என்னும் நாலடியாரோடும் ஒப்பிடுக. **பயனுவமையணி.** கரும்பை நுனியிலிருந்துதின்ருல் வரவர இன்சுவையிகுதலும், அடியிலிருந்து தின்ருல் வரவரச் சுவை குறைதலும் இயல்பு.

உணர்ாநின்று என்ற நிகழ்கால வினையெச்சம், உணர்ந்துஎன இறந்தகால வினையெச்சமாகத் திரிந்தது; "தெய்வந்தொழாஅள் கொழுநற்றொழுதெழுவாள்" என்பதில் 'தொழுது' என்பது போல. கருத்து உணர்ந்து - தமது கருத்திஞற் கற்கப்படும் நூல்களை இன்னவையென்று அறிந்து என உரைத்தல், சிறப்பு. அறிந்தார் - காரியாகாரியங்களை அறிந்த வீவேகிகளென்றபடி. மதுரம் - வடசொல்.

"இக்ஷுசாரக்ராத்க்ரமஶः, பர்வணிபர்வணி **யதா** ரஸவிஶேஷः—ததைவஸஜ்ஜநமைத்ரீ, விபரீதாநாந்துவிபரீதா" என்னும் சுலோகம் ஒப்புநோக்கத் தக்கது. (க)

உகஉ. இற்பிறப் பெண்ணி யிடைதிரியா ரென்ப்தோர்
நற்புடை கொண்டமை யல்லது—பொற்கேழ்
புனலொழுகப் புள்ளிரியும் பூங்குன்ற நாட
மனமறியப் பட்டதொன் றன்று.

(இ - ள்.) பொன் - பொன்னைஒகூடிய, கேழ் - நல்ல நிறமுள்ள, புனல்-தண்ணீர், ஒழுக - பெருக, புள் இரியும்-பறவைகள் ஓடுதற்கு இட மான, பூ குன்ற நாட-!(உயர்குடிப்பிறந்தவர்), இல் பிறப்பு எண்ணி-(தமது) உயர்குடிப் பிறப்பை நினைத்து, இடை திரியார்-நடுவிலே (தமது நற்குணத்தினின்று) மாறுபடார், என்பது ஓர் நல்புடை-என்று சொல் லப்படுவதொரு நல்ல தன்மையை, கொண்டமை அல்லது-(தாம் சினேகிப் பதற்கு ஒரு நல்ல காரணமாகக்) கொண்டது மாத்திரமேயல்லாமல், மனம் அறியப்பட்டது ஒன்று அன்று-(பிறரொருவருடைய) மன நிலை (ஒருவரால் உட்புகுந்து) அறியப்பட்டதென்பதொரு தன்மைய தன்று; (எ - று.)

ஒருவர் மற்றொருவருடைய மனநிகழ்ச்சியைப் பிரதியக்ஷமாக உண்மை பொருந்த அறிவது அசாத்யமாதலால், உயர்குடிப்பிறந்தவர் தமது உத்தம குணத்தை எப்பொழுதும் இடையிலே மாறவிடாரென் பதோ ருறுதிபற்றி நற்குடிப்பிறந்தாருடன் நட்புக்கொள்ளவேண்டுமென இதனாற் கூறப்பட்டது.

கீழ்ப்பாட்டில் நட்பிற்குக் கல்வியறிவு ஒருகுண மென்றார்; இப்பாட் டில் உயர்குடிப்பிறப்பும் ஓர் இலக்கண மெனப்பட்டது.

தெளிவான அழகிய அருவிநீர்வெள்ளம் மேனின்று வழிந்துபாயும் பொழுது பொன்னை அடித்துக்கொண்டு ஓடி வருதலால் அதனைக்கண்டு இது யாதோ எனப் பறவைகள் அஞ்சி ஓடுகின்றன என்று பூங்குன்ற நாட்டினைச் சிறப்பித்தவாறு. 'பூங்குன்ற நாட' என்ற தொடர், கீழ் கஉஅ-ம் பாடலிலும் வந்துள்ளது. (உ)

உகங. யானை யனையவர் நண்பொரீஇ நாயனையார்
கேண்மை கெழீஇக் கொளல்வேண்டும்—யானை
யறிந்தறிந்தும் பாகனையே கொல்லு மெறிந்தவேன்
மெய்யதா வால்குழைக்கு நாய்.

(இ - ள்.) யானை அனையவர்-யானையைப் போன்றவர்களது, நண்பு-சினேகத்தை, ஒரீஇ - விட்டு, நாய் அனையார் - நாயைப்போன்றவர்களது, கேண்மை-சினேகத்தை, கெழீஇக் கொளல் - சேர்த்துக் கொள்ளுதல், வேண்டும்-தகுதி : (எனெனில்),—யானை—,அறிந்து அறிந்தும்-பலகாலம் பயின்றிருந்தும், பாகனையே-(தனக்கு உணவு முதலியன கொடுத்துக் காத்திடும், பாகனையே, கொல்லும்—; நாய்—, எறிந்த வேல் மெய்யது ஆ-(தன்னையுடையவன் தன்மேற்சினந்து) எறிந்த ஆயுதம் தன் உடம்பில் தைத்துள்ளதாயிருக்கையிலும், வால்குழைக்கும்-வாலைக் குழையவைத்து ஆட்டிக்கொண்டு (தன்எளிமையையும் அன்புடைமையையும் காட்டி) நிற்கும்.

பலகாலம் தம்மாற்பற்பலவுதவிகளைப் பெற்றிருந்தும் அவற்றையெல் லாம் அடியோடுமறந்து தம்மிடம் யாதாயினும் ஒருபோது கோபத்துக்குக் காரணமொன்று காணப்பட்டதாயின் அதனையேபிரதானமாகக்கொண்டு எப்பொழுதும் மனத்திலே மறவாது அடக்கிவைத்திருந்து சமயம்பார்த்து அழிக்குந் தன்மையரோடு சினேகஞ்செய்யலாகாது; தம்மாற்செய்யப்பட்டு வரும் பெரிய அபகாரங்கள் பலவற்றையும் மறந்திட்டுத் தம்மால் முன்பு ஒருகாலத்துச் செய்யப்பட்டதொரு சிறிய உபகாரத்தையே உள்ளத்திற்

கொண்டு பாராட்டும் இயல்பினருடனே சினேகிக்கவேண்டுமென்பதாம். **ஏதுவணி**யோடு சேர்ந்த **உவமையணி**.

ஒருவி, கெழுவி என்னுஞ் சொற்கள் விகாரப்பட்டு 'ஒரீஇ', 'கெழீஇ' என அளபெடுத்தன; சொல்லிசையளபெடை. அறிந்தறிந்து-அடுக்கு, மிகுதிப்பொருளது. வேல்-ஆயுதமென்னுமாத்திரையாய் நின்றது. யானை, நாய்-இவை, இங்குக்காட்டிய குணத்துக்கு மாத்திரமே சிறியார்க்கும் பெரியோர்க்கும் முறையே உவமை. வேண்டும் - தேற்றப் பொருள தோர் வியங்கோள்.

இங்கே நன்றி மறவாத நற்குணமுடையோர்க்குத் தாழ்ந்த மிருகமாகிய நாயை உவமை கூறியது, இழிவுவமைக்குற்றத்தின்பாற்படாது; "மிகுதலுங் குறைதலுந் தாழ்தலு முயர்தலும், பான்மாறுபடுத்தலும் பாகுபாடுடைய" என்ற **தண்டியலங்கார** சூத்திரத்தாலும், அதன் உரையாலும் உயர்ந்த பொருளை இழிந்த பொருளோடு உவமித்தல் புன்புலவர் புணர்க்குங்கால் சிறப்பின்மை தெரிந்து ஆன்றோராற் குற்றமென்று தள்ளப்படுதலும், அதுவே நன்புலவர் புணர்க்குங் கால் சிறப்புடைமை தெரிந்து ஆன்றோராற் குணமென்று கொள்ளப்படுதலுங் காண்க. இவ்வாறு நல்லிசைப்புலவர்செய்யுள்களில் வருவன கண்டுகொள்க. (கூ)

உகச. பலநாளும் பக்கத்தா ராயினு நெஞ்சிற்
சிலநாளு மொட்டாரோ டொட்டார்—பலநாளு
நீத்தா ரெனக்கை விடலுண்டோ தங்நெஞ்சத்
தியாத்தாரோ டியாத்த தொடர்பு.

(இ-ள்.) பல நாளும்-பலதினமும், பக்கத்தார் ஆயினும் - (தமது) பக்கத்திலேயேவாழ்ந்துள்ளவர்களானாலும், நெஞ்சில்ஒட்டாரோடு-மனத்திற் பொருத்தமில்லாதவர்களுடன், சில நாளும்-சிலநாளாயினும், ஒட்டார்-சேரமாட்டார், (அறிவுடையோர்); தம் நெஞ்சத்து-தமது மனத்திலே, யாத்தாரோடு-(அன்பாற்) கட்டப்பட்டவர்களுடனே, யாத்த-கொண்ட, தொடர்பு-சினேகத்தை, பல நாளும் நீத்தார் என-(அவர்) பலகாலமாய்(த் தம்மை) விட்டுள்ளாரென்று கருதி, கைவிடல் உண்டோ - (அறிவுடையோர்) நீங்கவிடுதல் (உலகத்தில்) உண்டோ? [இல்லையென்றபடி];(எ-று.)

சினேகத்துக்கும் சினேகமில்லாமைக்குங் காரணம், எப்பொழுதும் அருகிலிருத்தலும் இல்லாமையு மன்று ; மனங்கலந்திருத்தலேயா மென்பதாம். நெடுந்தூரத்திலுள்ள சூரியனைநோடி தாமரைமலர்க்குச் சிநேகமும், எப்பொழுதும் அருகிலேயுள்ள தவளையுடனே அதற்குச் சிநேகமில்லாமையுங் காண்க.

பலநாளும், சிலநாளும் என்ற உம்மைகள் - முறையே, உயர்வுசிறப்பு இழிவுசிறப்புப் பொருளன; இந்த உம்மைகள்-முறையே நாளினது மிகுதியையும் குறைவையும் விளக்குவன. பக்கம்-பக்ஷமென்னும் வடமொழியின் திரிபு. நெஞ்சத்திற் சிலநாளும் ஒட்டார் என எடுத்து, மனத்திற் சிலநாளாயினும் ஒன்று படாதவர் எனவும் உரைக்கலாம். (ச)

உகடு. கோட்டுப்பூப் போல மலர்ந்துபிற் கூம்பாது
வேட்டதே வேட்டதா நட்பாட்சி—தோட்ட

கயப்பூப்போன் முன்மலர்ந்து பிற்கூம்பு வாரை
நயப்பாரு நட்பாரு மில்.

(இ - ள்.) கோடு பூ போல - மரக்கிளைகளிலுண்டாகின்ற மலர் போல, மலர்ந்து-(முன்னே முக) மலர்ச்சிபெற்று, பின் கூம்பாது-பின்பு (அம்மலர்ச்சி) குவியாமல், வேட்டதே வேட்டது-(முன் ஒருவரோடொருவர்) விருப்பங்கொண்டதுவே விருப்பமாயிருப்பது, நட்பு ஆட்சி ஆம் - சினேக தருமத்தைக் காத்தலாகும்; தோட்ட கயம் பூபோல்-தோண்டப்பட்ட நீர்நிலையிலுண்டாகிற மலர்போல, முன் மலர்ந்து-முதலில் (முக) மலர்ச்சிகாட்டி, பின் கூம்புவாரை-பின்பு (அம்மலர்ச்சியொழிந்து முகஞ்) சுருங்குபவர்களை, நயப்பாரும்-விரும்புபவர்களும், நட்பாரும்-சினேகிப்பவர்களும், இல்-இல்லை; (எ - று)

கயப்பூவெனினும், நீர்ப்பூவெனினும், ஒக்கும். மலர்ந்தபின் குவியாதிருப்பது, கோட்டுப்பூவின் தன்மை: மலர்ந்தபின் குவிதல், கயப்பூவின் தன்மையாம். **உவமையணி.** கோட்டுப்பூ, கொடிப்பூ, நீர்ப்பூ, புதற்பூ எனப் பூ நான்கு வகைப்படும்; நிலப்பூ என ஒன்றுகூட்டி ஐந்தென்பாருமுளர். ஆம்-ஆகுமென்பதன் விகாரம். தோட்ட-தோடுகளையுடைய எனவும் உரைக்கலாம். (இ)

உகசு. கடையாயார் நட்பிற் கமுகனைய ரேனை
யிடையாயார் தெங்கி னனையர்—தலையாயா
ரெண்ணரும் பெண்ணைபோன் றிட்டஞான் றிட்டதே
தொன்மை யுடையார் தொடர்பு.

(இ - ள்.) கடை ஆயார்-கீழ்ப்பட்டவர்கள், நட்பில்-சினேகதருமத்தில், கமுகு அனையர் - பாக்குமரத்தை ஒத்திருப்பர்; ஏனை இடைஆயார்-மற்றை நடுத்தரமானவர், தெங்கின் அனையர்-தென்னைமரத்தை ஒத்திருப்பர்; தலை ஆயார்-முதல்தரமானவர்களாகிய, தொன்மை உடையார் - பழமையென்னும் பெருங்குணத்தையுடைய மேன்மக்களது, தொடர்பு-சினேகம், எண் அரு பெண்ணை போன்று-கணக்கற்றதற்கும் அருமையான (சிறப்பையுடைய) பனைமரத்தை ஒத்து, இட்ட ஞான்று இட்டதே-நட்ட அக்காலத்தில் நட்டதன்மையதே; (எ - று.)

பாக்குமரம்போல ஒருநாள் உபசரணை தவிர்ந்தாலும் பயன் கெடுபவர் அதமர்: தென்னைமரம்போல இடையிடையே உபசரணையில்லாமற்போனும் பயன்கெடுபவர் மத்தியமர்: பனைமரம்போல முதலில் நட்டது மாத்திரமேயன்றிப் பின்பு ஒரு காலத்திலும் யாதோருபசரணையையும் வேண்டாமல் என்றும் ஒருபடிப்படப் பயன்படுபவர் உத்தமர் என்பதாம். "உத்தமர்தா மீயுமிடத் தோங்குபனைபோல்வரே, மத்திமர் தாந்தெங்குதனை மானுவரே - முத்தலரும், ஆங்கமுகுபோல்வ ரதமரவர்களே, தேங்கதலியும் போல்வர் தேர்ந்து" என்னும் **நீதிவெண்பா**வையுங் காண்க. **உவமையணி.**

கமுகு-க்ரமுகம் என்னும் வடமொழியின் திரிபு. தெங்கின்-இன்சாரியைபெற்ற இரண்டனுருபு தொக்கது. பின்னிரண்டடிக்கு வேறுவகையாக

அன்வயித்துப் பொருளுரைப்பாரு முளர்; அது பொருந்துமாயிற்கொள்க. பழமையாவது-ஒருகாற்செய்த நட்பைப் பலகாலம் பாராட்டுந் தன்மை; இனி, பரம்பரையாகவரும் நற்குண மென்றுங் கொள்ளலாம். (சு)

உகள. கழுநீருட் காரட கேனு மெநருவன்
விழுமிதாக் கொள்ளி னமிழ்தாம்—விழுமிய
குய்த்துவையார் வெண்சோறே யாயினு மேவாதார்
கைத்துண்டல் காஞ்சிரங் காய்.

(இ - ள்) கழு நீருள் கார் அடகு எனும்-அரிசிகழுவிய நீரிற்சமைத்த கறுத்த இலேக்கறியேயாயினும், ஒருவன்-ஒருத்தன், விழுமிது ஆ கொள் ளின்-சிறந்த அன்புடையதாக (க்கொடுக்க) ப்பெற்றால், அமிழ்து ஆம் - (அது) அமிருதம்போ லின்சுவையதாகும்; விழுமிய-சிறந்த, குய்-தாளித்த கறிகளோடும், துவை-துவையல்களோடுங் கூடி, ஆர்-நிறைந்த, வெள் சோறே ஆயினும்-வெண்மையான நல்லரிசிச்சோறேயாலுலும், மேவா தார் கைத்து உண்டல்-தன்னேச் சினேகியாதவரது கையிலுள்ளதை உண்ணுதல், காஞ்சிரம் காய்-எட்டிமரத்தின் காயைத் தின்பதுபோல இன்னுதாகும்; (எ - று.)

இக்கவியின்கருத்தே, கீழ் அதிகாரத்து சு, எ, கo - மூன்று பாடல் களிற் கூறப்பட்டது.

கழுநீர் - கழுவுநீர் என்பதன் விகாரம்; **விளித்தொகை**. சோறேயாயி னும் என்றதிலுள்ள எகாரமும், உம்மையும் - உயர்வுசிறப்பு. கைத்து- பொருள் என்றபடி. (எ)

உகஅ. நாய்க்காற் சிறுவிரல்போ னன்கணிய ராயினு
மீக்காற் றுணையு முதவாதார் நட்பென்னுஞ்
சேய்த்தானுஞ் சென்று கொளல்வேண்டுஞ்செய்வினேக்கும்
வாய்க்கா லனேயார் தொடர்பு.

(இ - ள்.) நாய் கால் சிறு விரல் போல்-நாயின் கால்களிலுள்ள சிறிய விரல்கள்போல, நன்கு அணியர் ஆயினும்-மிக அருகில் நெருங்கியுள்ளவ ராலுலும், ஈ கால் துணையும் உதவாதார்-ஈயின்காலளவாகிலும் உதவி செய்யாதவர்களது, நட்பு-சினேகம், என் ஆம்-யாதுபயனுடைத்தாம்?[ஒரு பயனும் உள்ளதன் றென்றபடி]; செய் வினேக்கும்-கழனியைப் பயிர்வினே யும்படி செய்கின்ற, வாய்க்கால்-நீர்க்காலே, அனேயார்-ஒத்து மிக உதவுப வர்களது, தொடர்பு-சினேகத்தை, சேய்த்து ஆனும்-தூரத்திலுள்ளதாயி னும், சென்று கொளல்வேண்டும்-போய்ப் பெறவேண்டும்; (எ - று.)

'அணியராயினும்' என்ற உம்மை-உயர்வுசிறப்பு. 'ஈக்காற்றுணை யும்' என்ற உம்மை-இழிவுசிறப்பு. 'செய்த்தானும்' என்ற உம்மை-உயர்வு சிறப்பு. ஈக்கால் என்றது, இங்கேசிறுமைக்கு எடுத்துக்காட்டுவதோரளவு; "ஈச்சிற கன்னதோர் தோலறினும்" என்றவிடத்து 'ஈச்சிறகு' போல. ஈ-பெயர்ச் சொல்; ஒரு பறவை. செய்-கழனியாதலே 'நன்செய்,' 'புன் செய்' என வழக்கிலுங் காண்க. வாய்க்கால்-நீரோடுங் கால். (அ)

உகக. தெளிவிலார் நட்பிற் பகைநன்று சாதல்
விளியா வருநோயி னன்று—ளிய
விகழ்தலிற் கோற லினிதேமற் றில்ல
புகழ்தலின் வைதலே நன்று.

(இ - ள்.) தெளிவு இலார் நட்பின் - தெளிவான அறிவு இல்லாதவர் களுடன் கொள்ளுஞ் சிநேகத்தைக் காட்டிலும், பகை-(அவருடைய) விரோதம், நன்று-நல்லது ; விளியா வரும் நோயின்-எவ்வுபாயத்தாலுந் தீராமல் நீடித்து வருகிற வியாதியைக்காட்டிலும், சாதல்-இறத்தல், நன்று-நல்லது ; அளிய இகழ்தலின் - (ஒருவனது நெஞ்சம்) மிகப் புண்படும்படி நிந்தித்தலைக் காட்டிலும், கோறல்-கொல்லுதல், இனிது-நல்லது ; இல்ல புகழ்தலின்-(ஒருவனிடத்து) இல்லாத குணங்களைச் சொல்லித் துதித் தலைக் காட்டிலும், வைதலே-திட்டுதலே, நன்று-நல்லது ; (எ - று.)

மூடனுடைய பகைமையாற் பெரும்பாலுந் துன்பமே உண்டாகாது ; ஒரு கால் உண்டானாலும் அது எளிதில் ஒழித்தற்குக் கூடியதாயிருக்கும்; அங்ஙன மன்றியினும் அதனாலுண்டாகுந் தீங்கினும் அவனது நண்பினா லுண்டாகுந் தீங்குகள் மிகப்பலவாம்: ஆதலின், 'தெளிவிலார் நட்பிற் பகை நன்று' என்றார். "சாதலினின்னாததில்லை" என்றபடி ஒருவனுக்கு எல் லாத் துன்பங்களினும் மிக்கதெனப்படுகிற மரணவேதனையைத் தீராத வியாதியினும் நன்று என்றது, ஆதாரமான உடம்பு நீங்கியவாறே உயிர்க் குத் துன்பநுகர்ச்சி இன்றுமாதலின். மரணத்துன்பத்தினும் மிகுந்த துன்பத்தைத் தருவது நிந்தனை என்பது, மூன்றும் வாக்கியத்தின்கருத்து. 'இல்லபுகழ்தலின் வைதலே நன்று' என்றது, இல்லாததைச் சொல்லிப் புகழ்தலின் இழிவை விளக்குதற்கு.

தெளிவு இலார்-ஆராய்ந்து தேறி நம்பப்படாதவரென்றுங் கொள்ள லாம். விளியா என்பதைப் பெயரெச்சமாகக்கொண்டு, மேல் அரு எனப் பதம் பிரித்து, நீங்காத அருமையான நோயென்றும் கொள்ளலாம். மற்று-அசை; இல்ல-பெயர்.

அதிகாரம் நட்பாராய்தலாதலால், முதல் வாக்கியத்தை உபமேய மாகவும், மற்றை மூன்றையும் உபமானமாகவுங் கொள்க. (க)

உஉ0. மரீஇப் பலரோடு பன்னாண் முயங்கிப்
பொரீஇப் பொருட்டக்கார்க் கோடலே வேண்டும்
பரீஇ யுயிர்செகுக்கும் பாம்பொடு மின்னை
மரீஇஇப் பின்னைப் பிரிவு.

(இ - ள்.) பலரோடு - அநேகம் பெயருடனே, மரீஇ - சேர்ந்து, பல் நாள்-அநேகநாட்கள், முயங்கி - கலந்து, பொரீஇ - (தம்குணமும் அவர் குணமும்) ஒத்து, பொருள் தக்கார்-(நன்கு மதிக்கும்) பொருளாகத் தக்க வர்களே, கோடலே-சினேகஞ்செய்து கொள்ளுதலே, வேண்டும்-தகுதி ; பரீஇ-கடித்து, உயிர் செகுக்கும்-உயிரையொழிக்கின்ற, பாம்பொடும்-பாம் போடாயினும், மரீஇ - சினேகஞ்செய்து, பின்னை பிரிவு-பின்புஅதனை விட்டு நீங்குதல், இன்னா-துன்பந்தருவதாம் ; (எ - று.)

துர்க்குணமுடையவரோடு சிநேகஞ்செய்து பிரிந்தாலும் மனவருத்த முண்டாமாதலால், பின்னொருகாலத்தும் பிரியவேண்டாதபடி முன்னமே ஒருவரிடத்துள்ள குணத்தைப் பழகிப் பார்த்தறிந்து சினேகிக்கவேண்டு மென்பதாம். இச்செய்யுளில் முந்தின வாக்கியத்திற்கூறிய சித்தாந்தத்திற் குப் பிந்தினவாக்கியத்திற் காரணங்காட்டி நிறுத்தினமையால், **ஏதுவணி.**

மருவி, பொருவி, பரிந்து என்னும் இறந்தகால வினையெச்சங்கள்- மரீஇ, பொரீஇ, பரீஇ என விகாரப்பட்டு அளபெடுத்தன ; சொல்லிசையள பெடை. நான்காமடியில், மரீஇஇ-ஈரளபெடை; நான்கு மாத்திரை. பொரு ட்டக்கார்-உபயோகமாகத் தக்கவர். பாம்பொடும், உம்மை-இழிவுசிறப்பு. இன்னு என்பதை இன்னுது என்பதன் ஈறுதொகுத்தலாகவாயினும், பிரிவு என்பதைப் பன்மை குறிக்கும் பால்பகாவஃறிணைப் பெயராகவாயி னுங் கொள்க. தக்கார்க்கோடல் என்பதில், உயர்திணையீற்று ரகரத்தின் முன் வன்மை மிக்கது, இரண்டாம் வேற்றுமைத்தொகை யாதலின்.

இச்செய்யுளில் நான்குஅடியிலும் எதுகையில் உயிரளபெடை வந்தது, **அளபுத்தொடை.**

"கூடிப்பிரியேல்," "இணக்கமறிந்திணங்கு" என **ஔவையார்** கூறிய தும் இக்கருத்தே பற்றியாம். "விலங்கேயுந்தம்மோடுனுறைதன்மேவுங், கலந்தாரைக் கைவிடுதலொல்லா-விலங்கருவி, தாஅயிழியுமலைநாட வின் னுதே, பேஎயோடானும்பிரிவு" என்னும் **பழமொழிச்** செய்யுள் நோக்கத் தக்கது. தட்சகனைக்காக்கக் காண்டவவனத்து இந்திரன்முற்பட்டமை கருதத்தக்கது.

"யஸ்யநஜ்ஞாயதேஶீலம், நகுலம் நசஸம்ஶ்ரய:—நதேநஸங்கதிம் குர்யாத்" என்னும் வடநூல் மேற்கோள் இங்குக் கவனிக்கத்தக்கது.

[**தொல்காப்பியம்-எழுத்ததிகாரம்-நூன்மரபு-சூ**] "நீட்டம்வேண்டி னவ்வள புடைய, கூட்டி யெழுஉத லென்மனார் புலவர்" என்னுஞ் சூத்திர வுரையில் **ஆசிரியர் நச்சினார்க்கினியர்**கூறுமாறு:—"அவ்வளபுடைய"எனப் பன்மையாகக் கூறியவதனால் இவரும் நான்குமாத்திரையுங் கொண்டார். என்னே ? இவ்வாசிரியரை 'முந்துநூல்கண்டு' என்றாராகலின். மாபுரா ணத்து "செய்யுட்களோசை சிதையுங்கா லீரளபு, மையப்பாடின்றி யீண யுமா—மைதீரொற், றின்றியுஞ் செய்யுட்கெடி னெற்றை யுண்டாக்கு, குன்றுமே லொற்றளபுங்கொள்" என்ற சூத்திரத்தான் அவர்கொண்ட நான்கு மாத்திரையும் இவ்வாசிரியர்க்கு ஒதல்வேண்டுதலின். அது, "தூஉஉத்தீம்புகைத் தொல்விசும்பு," "பேஎஎர்த்துக்கொளல்," "செ ரூஅஅய்வாழியெஞ்சு," "இலாஅஅர்க்கில்லத்தமர்," "விராஅஅய்ச்செய் யாமைநன்று," "மரீஇஇப் பின்னேப்பிரிவு" எனச் சான்றோர் செய்யுட்க ளெல்லாம் நான்கு மாத்திரை பெற்றுநிற்றலின். அன்றி, மூன்றுமாத்திரை பெற்றனவேல் ஆசிரியத்தளை தட்டுச் செப்பலோசைகெடுமாயிற்று. இங் ஙனம் அளபெடாதுநின்று ஆசிரியத்தளை தட்டுநிற்பன கலிக்கு உறுப்பா கிய கொச்சகவெண்பாக்கள் இவையல்லனவென்று உணர்க."—என்பது.

இனி, தொல்காப்பியத்துச்செய்யுளியலில் "நேரீற்றியற்சீர்" என்னுஞ் சூத்திரத்தின் (சி. வை. தாமோதரம்பிள்ளையவர்கள் அச்சிட்ட) உரையில்

"உரு அர்க்குறுநோ யுரைப்பாய் கடலேச், செரு அய் வாழிய நெஞ்சு" எனவும், 'கலாஅற் கிளிகடியுங் கானகநாட, விலாஅர்க் கில்லைத் தமர்" எனவும், தலைவகையின்றிவந்தன' என்றும், "தாவும் போக்கும்" என்றசூத்திரத்தின் உரையில் 'இங்ஙனம் பாவேறுபடாமையினன்றே "உரு அர்க்குறு நேர்யுரைப்பாய் கடலேச்,' செரு அய் வாழியநெஞ்சு" என்பதை **வெண்பா என்பாமா யிற்றென்பது**' என்றும் காணப்படுவதை உற்றுநோக்குமிடத்து, செய்யுளியலுக்கு ஷை பிள்ளையவர்கள் அச்சிட்டுள்ள உரை "நீட்டம் வேண்டின்" என்னுஞ் சூத்திரத்தின் நச்சினார்க்கினியருரையோடு மாறுபடுதலின், அவர்கள் அச்சிட்டுள்ள செய்யுளியலுரை நச்சினார்க்கினியருரையல்ல வென்று ஊகிக்கப்படுகின்றது. ஆராய்ச்சியாளர் பேராசிரியருரையென்கின்றனர். (கo)

உரு - ஆம் அதிகாரம்—நட்பிற்பிழைபொறுத்தல்.

அஃதாவது - தம்மாற்சினேகிக்கப்பட்டாரிடத்து உள்ளனவாகும் பிழைகளைப் பொறுத்தல். ஆராய்ந்துசினேகிக்கப்பட்டாராயினும், பொறுக்கப்படுங் குற்ற முடையராதலாலும் விதிவசத்தாலும் உரிமையாலும் அந்நட்டார் தமக்குப் பிழைகளைச் செய்தல் கூடும்; அவற்றைப்பொறுப்பது அவரைச் சினேகஞ்செய்தாரது கடமையாம்; ஆதலின், இவ்வதிகாரம்நட்பாராய்தலின் பின்வைக்கப்பட்டது. நட்பு-நட்டார்க்குத்**தொழிலாகுபெயர்**. பிழை-முதனிலைத்தொழிற்பெயர். திருக்குறளில் 'நட்பாராய்தல்' என்னும் அதிகாரத்தின்பின் 'பழமை' என்னும் அதிகாரத்தை வைத்ததற்குப் பரிமேலழகர் இக்காரணமே கூறிப்போந்தவாறு காண்க.

உஉக. நல்லா ரெனத்தா நனிவிரும்பிக் கொண்டாரை
யல்லா ரெனினு மடக்கிக் கொளல்வேண்டு
நெல்லுக் குமியுண்டு நீர்க்கு நுரையுண்டு
புலிதழ் பூவிற்கு முண்டு.

(இ - ள்.) நல்லார் என தாம் நனி விரும்பி கொண்டாரை - நற்குண நற்செய்கையுடையாரென்று ஆராய்ந்தறிந்து தெளிந்து தம்மால் மிகவிரும்பிச் சினேகஞ்செய்துகொள்ளப்பட்டவரை, அல்லார் எனினும்-(பின்புஒருகாலத்தில் முன்பு தாம் தேறியபடி) நற்குணநற்செய்கை யுடையவ ரல்லாதவ ரென்று கண்டாலும், அடக்கி கொளல்வேண்டும்-(அவர்குற்றங்களைப் பிறர் அறியக்கூறி வெளிப்படுத்தாமல்தம்மனத்திலேயே) அடக்கிவைத்துக்கொள்ளுதலே தகுதி: (ஏனெனில்),—நெல்லுக்கு உமி உண்டு - (யாவராலும் உணவின் பொருட்டு மிகவிரும்பிக்கொள்ளப்படுகிற) நெல்லுக்கும் (பயனற்ற) அதன் உமியாகிய குற்றம் உள்ளது; நீர்க்கு நுரைஉண்டு-(யாவராலும் பானத்தின்பொருட்டு மிகவிரும்பி நாடியடையப்படுகிற) நீருக்கும் நுரையாகிய குற்றம் உள்ளது; பூவிற்கும் புல் இதழ் உண்டு-(சிறப்புடைய) மலருக்கும் (பயனற்ற) அதனை மேல்தழுவியுள்ள புறவிதழாகியகுற்றம் உள்ளது; (எ - று.)

பல சிறந்த குணங்களையுடைய உயர்ந்த பொருள்களிலுஞ் சில குற்றங்களிருக்கை உலகவியல்பே யாதலாலும், "குற்றம்பார்க்கிற்சுற்றமில்லை"

என்றபடி ஒவ்வொருவரிடத்துங் குற்றத்தையே நோக்கினால் நண்பரில்லை யாகு மாதலாலும், தம்மாற் சினேகிக்கப்பட்டாரிடத்துப் பின்பு காணப் படுங் குற்றங்களையெல்லாம்பாராட்டாமல் அவரிடத்துஉள்ள குணங்க ளையே முக்கியமாகக் கொள்ளவேண்டு மென்பதாம். அடக்கிக்கொளல்-இரகசியத்தில் அவர்க்குத் தாம் அறிவு கூறி அவர்களை அடங்கச்செய்து வைத்துக்கொள்ளுதல் என்றும் உரை கூறலாம்.

பின்னிரண்டடிகளிற்கூறிய மூன்றுஉபமானங்கள் எத்தனை நற்குண மூடையாரிடத்துங் குற்றங்கள் காணக்கூடுமென்ற உபமேயத்தை விளக்கு தலால், **பிறிதுமொழிதல்** என்னும் அலங்காரம்: வடநூலார் **அப்ரஸ்துத ப்ரசம்ஸை** என்பர்.

விருத்திராசுரனை வதைத்ததனால் இந்திரனைத்தொடர்ந்த பிரமகத்தி யைத்தொலைக்கும்பொருட்டு அவன் அசுவமேத யாகஞ்செய்து திருமாலைப் பூசிக்கவே, அப்பிரமகத்தி தேவர்கள் நியமனத்தின்படிநான்குகூறுகப்பிரிந்து ஒன்றினால்வெள்ளம்புரண்டுவரும் ஆற்றிலும், மற்றொன்றுற் சவட்டு நிலத்திலும்,வேறொன்றுற்பருவம்வந்த பெண்களிடத்தும்,இன்னொன்றால் வதைசெய்பவரிடத்துஞ் சென்றிருக்கிறதென்றும்,வெள்ளத்தில் நுரையா கிய பகுதியை அக்கொலைப்பாவத்தின் வடிவ மென்றும் நூல்களிற் கூறப் படுகிறவரலாற்றால்,நீருக்கு நுரைருற்றமாதல் அறிக. இனி, நீர் தாகத்தைத் தணித்தல் முதலியவற்றிற்கு உதவுதல் போல, நுரை உதவாமையால், அதனை நீர்க்குக் குற்றமென்ற தென்னலும் ஒன்று. "மங்கலமாகி யின்றியமையாதி, யாவரு மகிழ்ந்துமேற்கொள்ள மெல்கிப், பொழுதின் முகமலர்வுடையது பூவே" இதனால், பூவின்சிறப்பை அறிக.

நனி - விசேடித்த உரிச்சொல். இரட்டுறமொழிதலென்னும் உத்தி யால், புல்லிதழ் என்பதற்கு-பண்புத்தொகையாய், இழிவான இதழென்றும்; வினைத்தொகையாய், தழுவியுள்ள இதழென்றும் ஒருங்கு உரை கொள்ளப்பட்டது: முறையே புன்மையான இதழென்றும், புல்லிய இதழென்றும்விரியும். மேல் நன்றியில்செல்வம் என்னும் அதிகாரத்து சு-ஆம் பாட்டிலுள்ள "நாறுத்தகடு" என்பதனோடு ஒப்பிடத்தக்கது. பூவிற்கும் என்ற உம்மை-இறந்தது தழுவியது. "எஞ்சுபொருட்கிளவி செஞ்சொலா யிற், பிற்படக் கிளவார் முற்படக் கிளத்தல்" என்ற **தொல்காப்பிய**விதி யால், உம்மையில்லாத சொற்கள் முன்னும், உம்மையுள்ள சொல் பின்னும் வைக்கப்பட்டன. இனி, உயர்வு சிறப்பும்மையாகக்கொண்டு, நெல்லுக்கு நீர்க்கு என்பவற்றோடுங் கூட்டலாம். (க)

உஉஉ. செறுத்தோ றுடைப்பினுஞ் செம்புனலோ டீடார்
மறுத்துஞ் சிறைசெய்வர் நீர்நசைஇ வாழ்நர்
வெறுப்ப வெறுப்பச் செயினும் பொறுப்பரே
தாம்வேண்டிக் கொண்டார் தொடர்பு.

(இ - ள்.) செறு தோறு உடைப்பினும்-(தாங்கள்) அடைக்குந்தோ றும் உடைத்துக்கொண்டு போவதாயினும், செம்புனலோடீடார்-நல்ல நீருடனே சிறுகோபமுங்கொள்ளாதவர்களாய், நீர்நசைஇ வாழ்நர்-தண்ணீ ரைப் பயன்படுத்த விரும்பி வாழ்பவர்கள், மறுத்தும் சிறைசெய்வர்-மறு படி மறுபடி அணைகோலி (அந்நீரை)க் கட்டிவைப்பார்கள் ; (அதுபோல

வே),—வெறுப்ப வெறுப்ப செயினும் - வெறுக்கத்தக்க குற்றமான காரியங்களே (ஒருவர்) வெறுப்புண்டாம்படி மிகுதியாகச் செய்துவந்தாலும், தாம் வேண்டி தொடர்பு கொண்டார்-தாம் விரும்பிச் சினேகஞ் செய்து கொண்டவர், பொறுப்பர் - (அவரைப் பிழை) பொறுப்பர் ; (எ - று.)

எடுத்துக்காட்டுவமையணி. செம்புனல் - உழவர் விரும்பும் புதுப்புனல். செறு தோறு - அடக்குந்தோறும் : செறுத்தல் - அடக்குதல் : செறு தோறு-வினைத்தொகை ; தோறு என்பது இடைச்சொல்லாயினும் பெயர்ச்சொல் தன்மைப்பட்டு நிற்றலால், செறுஎன்னுங் காலங்கரந்த பெயரெச்சம் அதனைக் கொண்டது. வினைத்தொகை உகரமுன்னர் இயல்பாதற்குரிய இது, சந்தவின்பம்பொருட்டு 'செறுத்தோறு' என வரு மொழிமுதல் வலி மிக்குவந்தது. சிறைசெய்தல் - புறத்துச் செல்ல வொட்டாது தடுத்தல். நசைஇ - சொல்லிசை யளபெடை. வெறுப்ப என்னுஞ் சொல் இரண்டனுள், முன்னது - எதிர்காலப் பலவின்பால் வினையாலணையும் பெயர் ; பின்னது - செயவெனெச்சம், காரியப்பொருளது. இரண்டையும் எச்சமாகவேகொண்டு, துன்பங்களே யென வருவித்து, மிகுதிப்பொருளில்வந்த அடுக்கு எனினுமாம்: இரண்டையும், பல முறை செய்தலாகிய பொருள்நிலையில்வந்த பலவின்பாற் பெயரின் அடுக்காகக் கொள்ளலாகாது ; 'வெறுப்பசெயின்' என அஃறிணைப் பன்மைப் பெயர்முன் இயல்பாகவேண்டு மாதலால். (உ)

உஉஙு இறப்பமே தீய செயினுந்தன் னட்டார்
பொறுத்த றகுவதொன்றன்றே—நிறக்கோங்
குருவ வண்டார்க்கு முயர்வரை நாட
வொருவர் பொறையிருவர் நட்பு.

(இ - ள்) நிறம் கோங்கு - நல்லநிறமுள்ள கோங்குமரத்தின் மலர்களிலே, உருவம் வண்டு - அழகிய வடிவமுடைய வண்டுகள், ஆர்க்கும் - ஒலித்தற்கிடமான, உயர் வரை-உயர்ந்த மலைகளையுடைய, நாட-நாட்டையுடையவனே!—தன் நட்டார் - தனது சிநேகிதர், இறப்பவே தீய செயினும் - மிகவுந் தீங்குகளையே செய்தாராயினும், பொறுத்தல் - (அப்பிழைகளைப்) பொறுத்தல், தகுவது ஒன்று அன்றே - (பெருமைக்குணமுடையார்க்குத்) தகுந்திருப்பதொரு காரியமன்றே ? (ஏனெனில்),—ஒருவர் பொறை இருவர் நட்பு - ஒருத்தர் (ஒருத்தருடைய பிழையைப்) பொறுத்திடுதலே இரண்டுபேரது சினேகத்துக்குக் காரணமாகும், (ஆதலால்).

நண்பர் பெரும் பிழை செய்தாலும் அப்பிழையைப் பொறுக்கவேண்டும்: அங்ஙன் பொறுத்தலே இருவரும் சினேகித்திருத்தற்குக் காரணமென்பதாம் : "குற்றம்பார்க்கிற் சுற்றமில்லை" என்பது, ஔவையின் அமுதமொழி. **ஏதுவணி.** "ஒருவர்பொறை யிருவர்நட்பு" என்னுஞ் சொற்றொடர், "தந்தீமையில்லாதார் நட்டவர்தீமையையு, மெந்தீமையுன்றேயுணர்பதா-மந்தண், பொருதிரைவந்துலாம்பொங்குநீர்ச் சேர்ப்ப, வொருவர்பொறை யிருவர்நட்பு" என்ற **பழமொழிச்**செய்யுளிற் பயின்றுள்ளது. காரணமாகிய பொறுத்தற்குணம், காரியமாகிய சினேகமாக உபசரிக்கப்பட்டது. தேனையுண்டு தன்னைத் துறக்கும் வண்டுக்கும் பின்னும்

பூத்துத் தேனைக் கோங்கு அளிப்பதுபோலத்தன் திறத்துப் பிழைத்தார்க்கும் பெரியோர் பின்னும் உதவுவரென்பது விளியாற் பெறப்படுந் தொகைமொழி.

இறப்ப - வரம்புகடக்க. கோங்கு - மரப்பெயர், அதன் சினையான மலருக்கு முதலாகுபெயர். உயர்வரை-ஓங்கின மலை, சிறந்த மலை ; **இரட்டுறமொழிதல்** ; இது, வினைத்தொகை. "உருவுட்காகும்" என்ற சூத்திரத்தினுரையில் **உருவம்** என்பதை உரு என்றதிலிருந்து வந்ததாகக் கூறியுள்ளனர் நச்சினார்க்கினியர். (கூ)

உஉச. மடிதிரை தந்திட்ட வான்கதிர் முத்தங்
கடிவிசை நாவாய் கரையலைக்குஞ் சேர்ப்ப
விடுதற் கரியா ரியல்பிலரே னெஞ்சஞ்
சுடுதற்கு மூட்டிய தீ.

(இ - ள்.) மடி திரை தந்திட்ட-மடிந்துவிழுகின்ற அலைகள் கொணர்ந்துகொழித்திடுகின்ற, வான் கதிர் முத்தம் - சிறந்த ஒளியையுடைய முத்துக்களை, கடி விசை நாவாய் - மிகுந்த வேகத்தையுடைய மரக்கலங்கள், கரை அலைக்கும் - கரைகளிலே அலையச்செய்து தள்ளுகின்ற, சேர்ப்ப - கடல் துறையையுடைய பாண்டியனே !—விடுதற்கு அரியார் - (சினேகம்) விடுதற்குக் கூடாதவர்கள், இயல்பு இலர்எல் - இயற்கையான நற்குணம் இல்லாதவராயின், (அவர்), நெஞ்சம் சுடுதற்கு மூட்டிய தீ - (தமது) மனத்தை எரிப்பதற்கு மூட்டப்பட்ட நெருப்பையொப்பர்; (எ - று.)

கூடிப்பிரிதல் கூடாதாயினும், சினேகிக்கப்பட்டவர் நற்குணமில்லாமல் துர்க்குணமுடையராயிருந்தால் மனத்திற்கு மிக்க துன்பமே தரும் ; ஆதலின், சினேகிக்கப்பட்டவர் தம்மாற்கூடியவளவு தவறின்றி யொழுக வேண்டுமென்பதாம். கப்பல் முத்துக்களைச் சிதறவடித்தாலும் கடலால் அது விடமுடியாதவாறுபோலவே, துர்க்குணமுடைய நட்டாரும் விட முடியாதவரென்பது, தொகைமொழியாற் பெறப்படும். 'விடுதற்கரியார்' என்னும் பிரயோகம் மேல் உஉசு-ஆஞ் செய்யுளிலும், இந்தப்பொருளுள்ள 'விடற்பாலரல்லார்' என்பது அடுத்த செய்யுளிலும் வந்துள்ளன.

நாவாய் - நௌ: என்னும் வடமொழியின் சிதைவென்பர். கடலில் முத்து - சிப்பி சங்கு முதலியவற்றிலிருந்து உண்டானவை. செயற்கையான நற்குணம் சிறிதுகாலம் இருக்குமேயன்றி நீடித்து நில்லாதாதலால், 'இயல்பு' எனப்பட்டது. சுடுதற்கு-எதிர்காலவினையெச்சம் ; இச்சொல் எதிர்காலங் காட்டுதலால், தொழிற்பெயரன்று. கடி-கடி யென்னும் உரிச்சொல் ஈறு திரிந்தது. (ச)

உஉடு. இன்ன செயினும் விடற்பால ரல்லாரைப்
பொன்னகப் போற்றிக் கொளல்வேண்டும்—பொன்னெடு
நல்லிற் சிதைத்ததீ நாடொறு நாடித்த
மில்லத்தி லாக்குத லால்.

(இ - ள்.) இன்ஞ செயினும்-துன்பங்கள் பலவற்றைச் செய்தாராயினும், விடல் பாலர் அல்லாரை - விடத்தக்கவரல்லாதவரை, பொன் ஆக போற்றி கொளல்வேண்டும் - பொன்னைப்போலவேனினைத்து விரும்பி நன்கு மதித்துமேன்மையாகக் கொள்ளுதல்தகுதி; (ஏனெனில்),—பொன்ஞெடுநெல் இல் சிதைத்த தீ-பொன் முதலிய நற்பொருள்களுடனே (ஒருவருடைய) சிறந்த வீட்டையும் எரித்தழித்திட்ட நெருப்பை, நாள் தொறும் நாடி தம் இல்லத்தில் ஆக்குதலால் - தினந்தோறும் விரும்பி (அவர்) தமது வீட்டில் வளர்த்துவைத்தலால்; (எ - று.)

நன்மை தீமை பாராது அகப்பட்டவையெல்லாவற்றையும் எரித்தழிக்கும் இயல்பினதாகிய நெருப்பையும் சமைத்தல் விளக்கெரித்தல் முதலிய பிரயோசனங்களின்பொருட்டு உலகத்தில் எல்லோரும் தமது வீடுகளில் பல இடத்தும் சேர்த்திருக்கவில்லையா ? அதுபோலவே, சிலகாலம் துன்பஞ்செய்வாராயினும் பிறகாலத்து உதவிசெய்தல் நோக்கி ஒருவரது பிழைபாராது பொறுத்து அவரோடு சிநேகிக்கவேண்டு மென்பதாம். நெருப்பை உபமானமாகக் கூறினமையின், துர்க்குணமுடையாரோடு மிக நெருங்காமலும் வீட்டு நீங்காமலும் பழகவேண்டு மென்றவாறும். முன் பாட்டில் "நெஞ்சஞ்சுதற்கு மூட்டிய தீ" என்றமையின், யாவரும் அஞ்சுவாரெனக்கருதித் தீயைச் சேர்த்தல்போல அவரையுஞ்சேர்த்தல் வேண்டு மென்ற இப்பாட்டை அடுத்திருக்க வைத்தார். இந்தச் செய்யுளின் முதலடியோடு வருஞ் செய்யுளின் முதலடி ஒப்பு நோக்கத்தக்கது.

பொன் - சிறந்த பொருள்களுக்கெல்லாம் உபலட்சணம். இன்ஞ - இனிமையென்னும் பண்பினடியாப் பிறந்த எதிர்மறைப் பலவின்பாற் குறிப்பு வினையாலணையும்பெயர்.

"அப்ரியாண்யபிகுர்வாணி,யஃப்ரியஃப்ரியஎவஸஃ-தக்தமந்திரஸாரேபி, கஸ்யவஹ்நாவஹாதரஃ"என்பது,இதற்குச்சேர்ந்தவட நூன்மேற்கோள்.

உஉசு. இன்ஞ செயினும் விடுதற் கரியாரைத்
துன்ஞத் துறத்த றகுவதோ—துன்னருஞ்சீர்
விண்குத்து நீள்வரை வெற்ப களேபவோ
கண்குத்திற் றென்றுதங் கை.

(இ - ள்.) துன் அரு சீர் - (பிறவிடத்துச்) சேர்தற்கருமையான சிறப்புக்கள் (தம்மிடஞ்) சேரப்பெற்றுள்ள, விண் குத்தும் நீள் வரை-ஆகாயத்தைக் குத்துகின்ற நீண்ட மூங்கில்களேயுடைய, வெற்ப - மலைகளேயுடைய பாண்டியனே!—கண் குத்திற்று என்று தம் கைகளேபவோ-(தம்து) கண்ணைக் குத்திவிட்டதென்ற காரணத்தால் (தமது) கையை வெட்டியொழிப் பார்களோ?[உலகத்தில்எவரும்ஒழிக்கமாட்டாரன்றே],(அதுபோலவே), இன்ஞ செயினும்-துன்பங்களேச்செய்தாலும், விடுதற்கு அரியரை-விடத்தகாதவர்களே, துன்ஞ துறத்தல் - சேர்க்காமல் வீட்டிடுதல், தகுவதோ - தகுந்ததொரு காரியமாகுமோ ? [ஆகா தென்றபடி]; (எ - று.)

இது-எடுத்துக்காட்டுவமையணி. கையைத் திருஷ்டாந்தமாகக் காட்டினமையின், அவர் தமக்கு அங்கமாகுபவரென்க. தமக்குக் கண் உவமை

கூறப்பட்டதனால், தம்மையும் ஓர் அங்கமாகவே கருதுக வென்றபடியாம். இங்குக்கூறிய உவமையால், தமது அவயவங்களுள் ஒன்றில் மற்றொன்று அஜாக்கிரதையினுற்பட்டு அதற்கு வருத்தத்தையுண்டாக்கினால் அதற்காக அவ்வருத்தும் உறுப்பைக் கோபித்துக் களைபவரில்லாமைபோல, ஒருவர் மற்றொருவர்க்குச் சோர்வினால் தீங்கிழைத்தால் அதற்காக அவரையழிப்பது தகுதியன்று என்பது பெறப்பட்டது. விண்ணைக்குத்தினும் மலையை அஃது ஒன்றுஞ்செய்யாததுபோலப் பெரியோர்மட்பின் பிழைபொறுப்ப ரென்க.

வரையென்னுங் கணுவின் பெயர் - மூங்கிற்குச் சினையாகுபெயர். களைப-பலர்பால் முற்று: ஒ - எதிர்மறை. (சு)

உஉஎ. இலங்குநீர்த் தண்சேர்ப்ப வின்ஞ செயினுங்
கலந்து பழிகாணுர் சான்றோர்—கலந்தபின்
றீமை யெடுத்துரைக்குந் திண்ணறி வில்லாதார்
தாமு மவரிற் கடை.

(இ - ள்.) இலங்கு நீர் தண் சேர்ப்ப-விளங்குகிற நீரையுடைய குளிர்ந்த கடல்துறையையுடைய பாண்டியனே!—இன்ஞ செயினும்-(தமக்குத்) துன்பங்கள் பலவற்றைச் செய்திட்டாலும், சான்றோர்-(நற்குண நற்செய்கைகளாலும் கல்வி கேள்விகளாலும்) மிக்க பெரியோர், கலந்து பழி காணுர் - (ஒருவரைச்) சினேகித்து அதன்பின் (அவரிடமுள்ள) குற்றத்தைப் பாராட்டமாட்டார்;கலந்தபின் தீமைஎடுத்துரைக்கும்-சினேகித்தபின்பு (அவரது) குற்றங்களை வெளிப்படுத்துக் கூறுகின்ற, திண் அறிவு இல்லாதார் - உறுதியான அறிவு இல்லாதவர்கள், தாமும் அவரின் கடை-தாங்களும் (தங்களுக்குத் தீங்குசெய்யும்) அவர்போலவே கடைப்பட்டவராவர்.

கீழ்மக்களினும் மேன்மக்களுக்கு உள்ள சிறப்பு அவரிடமுள்ள குற்றங்களை ஒருபொருளாக நோக்காது பொறுத்தலே யாதலால், மேன்மக்கள் அங்ஙனஞ்செய்யாராயின் தாமும் கீழ்மக்களாய் விடுவரென்பதாம்.

தாம் அறிவுடையராயிருந்தும் கற்றறிமூடராய்க்குற்றங்காணுதலால், அவரிற்கடை என்பதற்கு-அவர்களினுங் கடைப்பட்டவர் என்றும் உரைக்கலாம். சிறியோர்க்குக் குற்றஞ்செய்தல்இயல்பு; பெரியோர்க்கு அது பொறுத்தல் இயல்பு: ஆகவே, சிறியோர் தம் இயல்பாற் செய்த குற்றங்களைப் பெரியோர் தம் இயல்பாற் பொறாராயின், இயல்புகெட்டு அவரினும் இழிவுடையராவரெனக் காண்க. நண்பர்க்குத் தீங்குசெய்யும் அவிவேகம் போல்வதே அவரிடத்து உள்ள குற்றத்தை யெடுத்துரைக்கும் அவிவேகமுமென்க.

இலங்கு நீர் - விளங்குந் தன்மையுள்ள என்றும் உரைக்கலாம். நீர்-நீர்மையென்னும் பண்புப்பெயர் ஈறுபோயிற்று. பழி-பழிக்கப்படுவது;செயப்படு பொருள் விகுதி புணர்ந்து கெட்டபெயர். தீமை-பண்புப்பெயர். தாமும், உம்மை-எச்சப்பொருளது; பிறர்க்குத் தீங்குசெய்யாத தாமும் என உயர்வு சிறப்பாகவுமாம். கடை-அதம மென்றபடி; கடையர்க்கு ஆகுபெயர்.

உஉஅ. ஏதிலார் செய்த திறப்பவே தீதெனினு
நோதக்க தென்னுண்டா நோக்குங்காற்—காதல்
கழுமியார் செய்த கறங்கருவி நாட
விழுமிதா நெஞ்சத்து ணின்று.

(இ - ள்.) கறங்கு அருவி நாட - ஒலிக்கின்ற மலையருவிகளையுடைய நாட்டையுடையவனே!-ஏதிலார் செய்தது-அயலார் செய்தது, இறப்பவே தீது எனினும் - மிகவுந் தீமையைத் தருவதேயாஞலும், நோக்குங்கால் - (விதியை) ஆராய்ந்துபார்க்குமிடத்து, நோதக்கது என் உண்டு ஆம்-வெறுக்கத்தக்கது யாது உள்ளதாம்? [ஒன்றுமில்லை யென்றபடி]; (ஆகவே), காதல் கழுமியார் செய்த-அன்புமிகுந்தவர் செய்த தீங்குகள், நெஞ்சத்துள் நின்று-மனத்தில்நின்ருல் [ஆராய்ந்து எண்ணினு லென்ற படி], விழுமிது ஆம்-சிறப்புடையதாய்விடும்; (எ - று.)

அயலார் செய்த குற்றமே ஆலோசிக்குமிடத்து வெறுக்கத்தகாத தென்ருல், நண்பர் செய்தது பிரியமாகுமென்னத் தட்டில்லை என்பதாம். கீழ்ச்சில பாடல்களால், நண்பர் அறிவில்லாமையாற் செய்யுங் குற்றங் களைப் பொறுத்தல் கூறப்பட்டது; இப்பாட்டில், விதிபற்றி அவரால் நிக ழுங் குற்றத்தைப் பொறுத்தல் உணர்த்தப்பட்டது. கறங்கினாலும் அரு வியை விரும்புதல்போல, பிழைபுரிந்தநட்டோரையும் பொறுக்கவேண்டு மென்பது, தொகைமொழியாற் பெறப்படும்.

செய்த-பெயர். செய்த விழுமிதாம்-பன்மையொருமைமயக்கம்; தனித்தனி விழுமியதாகு மென்க. இனி, செய்தது என்பதன் ஈறு தொகுத்தலாகவுங் கொள்ளலாம். நோதற்குத்தக்கது, நோதக்கது. நோ-முதனிலைத் தொழிற்பெயர்; ஈன்காம் வேற்றுமைத்தொகை. ஆம் - அசைநிலைப்பொருளது. நிற்ப என்பது, நின்று எனத் திரிந்தது; "வானின்றுலகம் வழங்கி வருதலால்" என்னுந் திருக்குறளிற்போல. விழு மிதா எனப் பிரித்து, துன்பந்தருவதா? [அன்று] என்றும் உரைக்கலாம் "விழுமஞ் சீர்மையும் சிறப்பு மிம்பையும்" ஆதலின். (அ)

உஉகூ. தமரென்று தாங்கொள்ளப் பட்டவர் தம்மைத்
தமரன்மை தாமறிந்தா ராயி னவரைத்
தமரினு நன்கு மதித்துத் தமரன்மை
தம்மு ளடக்கிக் கொளல்.

(இ - ள்.) தமர் என்று தாம் கொள்ளப்பட்டவர்தம்மை-தமது நண் பினரென்று தம்மால் அபிமானித்துச் சிலேகஞ் செய்துகொள்ளப்பட்ட வர்களை, தமர் அன்மை தாம் அறிந்தார் ஆயின்-தமதுநண்பரென்று கொ ள்ளுவதற்குஏற்ற குணமுடைய ரல்லாதவராகத் தாம் (பின்பு) அறிந்தாரா ஞல், அவரை தமரினும் நன்கு மதித்து-அவர்களைத் தமது உண்மையான நண்பரினும் மேன்மையாகக் கொண்டு கௌரவித்து, தமர் அன்மை தம் முள் அடக்கிக்கொளல்-(அவர்களிடங்காணப்பட்ட) தமராதற்கேலாததன் மையைத் தமது மனத்தினுள்ளேயே அடக்கிவைத்துக்கொள்க; (எ - று.)

தமரினும்நன்குமதித்தல்-அவர்கள்தம்குணத்தை நோக்கியாயினும் தம்குற்றம் ஒழிதற்பொருட்டும், தம்மிடம் அவர்கள் மேன்மேற்குற்றஞ் செய்திடாமைப் பொருட்டுமென்க.-தமரண்மை-தம்மல்லாதவர், பண்பாகு பெயர். இனி, உருபுமயக்கமாய், கொள்ளப்பட்டவர்தம்மை என்பதற்கு கொள்ளப்பட்டவரிடத்து என்றும் உரைக்கலாம். கொளல்-அல் விகுதி பெற்றவியங்கோள்உடன்பாட்டுமுற்று; "பயனில்சொல்பாராட்டுவானை— மக்கட்பதடி யெனல்" என்ற திருக்குறளில் 'எனல்' என்பது போல.

இப்பாட்டில் 'தமர்' என வந்தசொல்லும் பொருளும் மீண்டும் பல விடத்து வந்தமையால், **சொற்பொருட்பின்வருநிலையணி.** (க)

உங0. குற்றமு மேனைக் குணமு மொருவனை
நட்பி னுடித் திரிவேனே—னட்டான்
மறைகாவா விட்டவன் செல்வுழிச் செல்க
வறைகடல்சூழ் வையக.

(இ - ள்.) ஒருவனை நட்டபின்-ஒருத்தனைச் சினேகித்தபின்பு, குற்ற மும் ஏனை குணமும் நாடி திரிவேனேல்-(அவனிடத்திலுள்ள) குற்றங்களை யும் அவற்றிற்கு எதிரிடையான குணங்களையும் ஆராய்ந்து திரிவேனுனல், (யான்), அறை கடல் சூழ் வையம் நக-ஒலிக்கின்ற கடல்சூழ்ந்த நிலவுலகத் தார் யாவரும் (என்னை இகழ்ந்து) சிரிக்கும்படி, நட்டான் மறை காவா விட்டவன்செல்வுழிசெல்க-சினேகிதனதுஇரகசியத்தைஅடக்கிவைத்துக் காவாமல் வெளியிட்டு விட்ட பாவி செல்லுங் கதியிற்செல்வேனுக;(எ-று.)

இச் செய்யுள், நட்பிற்பிழைபொறுக்கும் இயல்புறுதியையுடையா னொருவன் செய்யுஞ் சபதமூலமாக அக்குணத்தின் கடமையை வெளி யிட்டவாறு.

நேசித்தவனுக்குத் துன்பந்தரக்கூடிய இரகசியங்களை வெளிப்படுத் தினவனுக்கு நேரும் நரகமே ஒருவனைச் சினேகித்தபின் அவனது குற்றங்களைப் பாராட்டுபவனுக்கும் நேர்வதென்பதாம். எனவே, இர ண்டும் ஒத்த பெரும்பாவ மென்றபடி. நட்டபின் குற்றமும் குணமும் நாடித்திரிதல் தகாது என்றமையின், நட்பதற்குமுன்னமே இவற்றை ஆராய்ச்சிசெய்யவேண்டு மென்றும், நட்புச்செய்தபின் குற்றங்களையும் குணமாகவே கருதவேண்டு மென்றும் கூறியபடியாம்.

மறை-மறைத்தற்கு உரியது, (பிறர்க்கு அறியப் படாமல்) மறுக்கத் தக்கது. செல்க-வியங்கோள்முற்று; இங்கே, தன்மையொருமைக்கு வந்தது. வையம்-எல்லாப்பொருள்களையும் வைக்குமிடமெனக் காரணப் பெயர்; இங்கே இடவாகுபெயர். (கo)

உச - ஆம் அதிகாரம்.—கூடாநட்பு.

அஃதாவது-திரிகரணங்களுள் உள்ளே மனத்தாற் கூடாமலிருந்தே வெளியே சொற்செயல்களாற் கூடியொழுகுவாரது சினேகம். கீழ்,நண்பர் செய்த பிழைகளைப் பொறுத்தல் வேண்டுமெனக்கூறி, இங்கே, பொறுக்கப்படாத குற்றமுடைமையால் விடற்பாலதாகிய நட்புக் கூறுகின்றமையின், இது அவ்வதிகாரத்தின்பின் வைக்கப்பட்டது; திருக்குறளிலும் பழமையென்னும் அதிகாரத்தின்பின் தீநட்பு கூடாநட்பு என்னும் அதிகாரங்களை வைத்தவாறு காண்க. இனி, இதற்கு-குடிப்பிறப்பாலும் குணத்தாலும் ஒழுக்கத்தாலும் மனத்தாலும் அறிவுடைமையாலும் பிறவாற்றாலும் தமது நெஞ்சுக்குப் பொருந்தாதவரைச் சினேகஞ்செய்யலாகாதென்பதை யுணர்த்துவ தென்றும் பொருள்கொள்ளலாம்.

உஙக. செறிப்பில் பழங்கூரை சேறணை யாக
விறைத்துநீ ரேற்றுங் கிடப்பர்—கறைக்குன்றம்
பொங்கருவி தாழும் புனல்வரை நன்னுட
தங்கருமம் முற்றுந் துணை.

(இ-ள்.) கறை குன்றம்-கறுப்பான மலைகளினின்று, பொங்குஅருவி தாழும்-மிகுந்த அருவிகளாகப் பெருகுகின்ற, புனல் வரை-நீரெல்லையையுடைய, நல் நாட-சிறந்த நாட்டையுடைய பாண்டியனே!—செறிப்பு இல் பழங் கூரை-கட்டுக்கோப்பில்லாத பழையகூரைவீட்டிலே,(மழைக்காலத்தில்), சேறு அணை ஆக-சேற்றிலுல் அணை உண்டாக (ச் செய்து), (நீர்) இறைத்தும்-(அதனுள்ளேவிழுந்த) நீரை (வெளியிலே) இறைத்தும், நீர் ஏற்றும்-(மேல்விழும்) நீரை (அங்ஙனம் விழுவொட்டாமற் கையினுலும் பாத்திரங்களினுலும்) ஏற்றும், தம் கருமம் முற்றும் துணை-தங்கள் காரியம் முடியுமளவும், கிடப்பர்-(சிலர் அதிலே) வாசஞ்செய்திருப்பர்;(ஏ-று.)

சிலர் தமது இயற்கை நற்குணத்தினுலல்லாமல் தங்கள் காரியம் நிறைவேறுதற்பொருட்டு அதுவரையில் மிகத்தாழ்ந்த நிலைமையில் இருப்பதாக வெளிக்குக் காட்டுவது உண்டு; அப்படிப்பட்டவர்கள்சினேகம் நம்பிக் கொள்ளத் தக்கதன்று என்பதாம்.

மனப்பூர்வமாகவன்றி வெளிக்குநட்பினர் போன்றவர் தம் காரியம் முற்றியதும் வெளிப்பட்டுப் போவரென்பது விளியிற்பெற்ற தொகைமொழி. செறிப்பு-அமைதி; தொழிற்பெயர். கூரை - இழிவான மேற்புறத்தையுடைய சிற்றில். அணை-நீரைத்தடுக்கும் செய்கரை. வரை-மலையென்னுல், குன்றம்-அதன் சிகரமென்க.

இனி, இப்பாட்டிற்கு - பழுதுபட்ட கூரைவீட்டி லுள்ளவர் மழை பெய்கையில் அதற்குப் பழுதுவராமற் பலவகையாலுங் காத்துநிற்பதுபோலச் சினேகிதரதுகாரியம்முடியுமளவும் அதனைப் பலவகையாலும் முயன்று காத்திடுபவரே நேசிக்கத்தக்கவர் பிறரல்லர் என்றும், மழைவருமுன்னமே பழுதுபட்டவீட்டைச் செவ்வைசெய்துகொள்ளாமல் வந்தபொழுது வருந்துகின்றவர்போல வருமுன்காப்பவரல்லாமல் வருங்காலம் வந்தபின்புங் காப்பவர் நட்கப்படாதவ ரென்றுங் கருத்துக்கொள்வாரு முளர்.

நீர் இறைத்தும்-(கூலிக்காகப் பிறர்பயிருக்குத்) தண்ணீரிறைத்தும், ஏற்றும்-யாசகஞ்செய்தும், சேறு அணை ஆக - சேற்றிலுல் தலைக்கு அணை யமைத்துக்கொண்டு, கிடப்பர்-படுத்திருப்பர் என்றும் காண்ப. (க)

உஙஉ. சீரியர் கேண்மை சிறந்த சிறப்பிற்றுய்
மாரிபோன் மாண்ட பயத்ததா—மாரி
வறந்தக்காற் போலுமே வாலருவி நாட
சிறந்தக்காற் சீரிலார் நட்பு.

(இ - ள்.) வால் அருவி நாட-வெண்மையான மலையருவிகளையுடைய நாட்டையுடையவனே!—சீரியர். கேண்மை-சிறப்புடையாரது சினேகம், சிறந்த சிறப்பிற்று ஆய் - மிகுந்த சிறப்புள்ளதாய், மாரிபோல்-(பெய்யும்) மழைபோல, மாண்ட பயத்தது ஆம்-மாட்சிமைப்பட்ட பயனையுடைய தாம்; சீர்இலார்நட்பு-சிறந்த குணமில்லாதவரது சினேகம், சிறந்தக்கால்-மிகுந்தால், மாரி வறந்தக்கால்போலும்-மழை (பெய்யாமல்) வறந்து போலுல் (அந்நிலைமை) போலப் பயனற்றதாம்; (எ - று.)

சிறப்பிற்று-ஒன்றன்பாற் குறிப்பு வினையாலணையும்பெயர்; சிறப்பு - பகுதி, இன்-சாரியை, று - விகுதி. ஏ - தேற்றம். (உ)

உஙங. நுண்ணுணர்வி னுரொடு கூடி நுகர்வுடைமை
விண்ணுலகே யொக்கும் விழைவிற்று—னுண்ணூ
லுணர்வில ராகிய வூதிய மில்லார்ப்
புணர்த னிரயத்து ளொன்று.

(இ - ள்.) நுண் உணர்வினுரோடு கூடி - நுட்பமான அறிவையுடைய வர்களுடனே சேர்ந்து, நுகர்வு உடைமை - (அவர்கள்சேர்க்கையா லுண் டாகும் இன்பங்களை) அனுபவிக்குந் தன்மையுடையவராயிருத்தல், விண் உலகே ஒக்கும் விழைவிற்று - தேவலோகவின்பத்தையே ஒத்திருக்கின்ற விரும்பப்படும் மேன்மையுடையது; நுண் நூல் உணர்வு இலர் ஆகிய-நுட் பமான சாஸ்திரங்களை அறியும் அறிவு இல்லாதவரான, ஊதியம் இல்லார்-பயனில்லாதவர்களை, புணர்தல்-சேர்தல், நிரயத்துள் ஒன்று - நரகத்துன் பங்களுள் ஒன்றாகும்; (எ - று.)—ஆல்-ஈற்றசை.

விண்ணுலகு, நிரயம் என்பன - அவற்றில் அனுபவிக்கப்படும் இன்ப துன்பங்களுக்கு இடவாகுபெயர். நுண்ணுணர்வு - சூக்ஷ்மபுத்தி. நுகர்வு உடைமை என்பதற்கு - உணவுண்ணுதலையுடையராதல் என உரைத்தல் சிறவாதாம். விழைவு-விரும்புதல்; இங்கே, தொழிலாகுபெயர். நிரயம்-வடசொல். அறிவுக்கு நுட்பம் - ஆழ்ந்த உட்கருத்துக்களையும் அறிதல். நூலுக்கு நுட்பம் - அரிய விஷயங்கள் பலவற்றைக் கூறுதல். (ங)

உஙச. பெருகுவது போலத் தோன்றிவைத் தீப்போ
லொருபொழுதுஞ் செல்லாதே நந்து—மருகெல்லாஞ்
சந்தன நீள்சோலைச் சாரன் மலைநாட
பந்த மிலாளர் தொடர்பு.

(இ - ள்.) அருகு எல்லாம்-சமீபமான இடங்களிலெல்லாம், சந்தனம் நீள் சோலை-சந்தன மரங்களின் பெரிய சோலைகளையுடைய, சாரல்-பக்கங் களையுடைய, மலை-மலையையுடைய, நாட-நாட்டரசனே!—பந்தம்இல்-ஆளர் தொடர்பு-(மனத்தில் அன்பின்) கட்டில்லாதவரது சிநேகம், பெருகுவது போல தோன்றி-முதலில் வளர்வதுபோலக் காணப்பட்டு, வை தீ போல்-வைக்கோலிற்பற்றிய நெருப்புப்போல, ஒருபொழுதும்செல்லாதேநந்தும்-சிறிது பொழுதுகூட நிலைத்திராமல் அழியும் ; (எ - று.)

வை-வைக்கோல். சாரல்-மலைப்பக்கம். இங்கே, மலை-மலய பருவதம்; பொதியமலை: அதிலே சந்தனமரங்கள் அதிகமென்று கவிகளெல்லாரும் வருணிப்பர். சந்தநம், பந்தம்-வடசொற்கள். வைத்து ஈப்போல்எனப் பதம் பிரித்தலில் உரை சிறவாமை காண்க. (சு)

உகூரு. செய்யாத செய்துநா மென்றலுஞ் செய்வதனைச்
செய்யாது தாழ்த்துக்கொண் டோட்டலும்—மெய்யாக
இன்புறூஉம் பெற்றி யிகழ்ந்தார்க்கு மந்நிலையே
துன்புறூஉம் பெற்றி தரும்.

(இ-ள்.) செய்யாத நாம்செய்தும்என்றலும்-(தம்மாற்)செய்யக்கூடாத காரியங்களை ‘நாம் செய்வோம்’ என்று சொல்லுதலும், செய்வதனை செய்யாது தாழ்த்துக்கொண்டுஓட்டலும்-(தம்மாற்)செய்யக்கூடியகாரியத்தைச் செய்யாமல் தாமதித்துக்கொண்டு காலங்கழித்தலும், (இவ்விரண்டும்),—மெய் ஆக இன்பு உறூஉம் பெற்றி இகழ்ந்தார்க்கும்-உண்மையாக(ஐம்புலன் களின்) இன்பங்களை அடையுந்தன்மையை இகழ்ந்த துறவறத்தார்க்கும், அந்நிலையே-அப்பொழுதே, துன்பு உறூஉம் பெற்றி தரும்-துன்பங்களை மிக அடையுந் தன்மையைக் கொடுக்கும் ; (எ - று.)

“செயக்கடவ வல்லனவுஞ் செய்துமன் னென்பார், நயத்தகு நாகரிக மென்னுஞ் - செயிர்த்துரைப்பின், நெஞ்சுநோமென்று தலைதுமிப்பான் றண்ணளிபோ, லெஞ்சா தெடுத்துரைக்கற் பாற்று,” “சொல்வன்மை யுண்டெனிற்கொன்னேவிடுத்தொழிதல், நல்வினைகோறலின்வேறல்ல-வல்லத்தம், ஆக்கங்கெடுவ தூளதெனினு மஞ்சுபவோ, வாக்கின்பயன் கொள்பவர்” என்றார் **நீதிநெறிவிளக்கத்தும்.**

செய்யக்கூடாதவை செய்வோமென்று பிறர்க்குக் கூறுதல் தற் புகழ்ச்சிவகையால் டம்பத்தன்மையாகு மாதலாலும், ஆசைகாட்டிமோசஞ் செய்த நம்பிக்கைத்துரோகமாய் முடியுமாதலாலும், பெருங்குற்றமாம். செய்யக்கூடியதைச் செய்யாமை உபகாரமாகாததோடு அதனை அபகார மாகக்கொள்வர் அறிவுடையோர் என அறிக.

செய்யாத - பெயர். செய்தும்-தன்மைப்பன்மை எதிர்காலமுற்று ; தும் - விகுதி. செய்வது - **சாதியொருமை.**

இவ்விரண்டும் கூடாநட்புடையார் செய லென்பது கருத்தாதலின், இப்பாட்டு இவ்வதிகாரத்தில் வைக்கப்பட்டது. (இ)

உகூ. ஒருநீர்ப் பிறந்தொருங்கு நீண்டக் கடைத்தும்
விரிநீர்க் குவளையை யாம்ப லொக்கல்லா
பெருநீராரீ கேண்மை கொளினுநீ ரல்லார்
கருமங்கள் வேறு படும்.

(இ - ள்.) ஒரு நீர் பிறந்து - ஒரு ஜலத்தில்தானே தோன்றி, ஒருங்கு நீண்டக்கடைத்தும்-ஒருசேரவே வளர்ந்தவிடத்தும், விரி நீர் குவளையை-மலர்ந்து விளங்கித்தேன்பெருக்குந் தன்மையுள்ள குவளை மலர்களை, ஆம்பல் - வெள்ளாம்பல் மலர்கள், ஒக்கல்லா - ஒத்திருக்கமாட்டா ; (அது போல),—பெருநீரார் கேண்மை கொளினும்-சிறந்த குணமுடையோரது சிநேகத்தைக்கொண்டாலும், நீர் அல்லார் கருமங்கள்-நற்குணமுடையவரல்லாதவரதுதொழில்கள், வேறுபடும் - வேறுகிப்போம் ; (எ - று.)

சிறந்த குவளையுடனே ஆம்பல் பிறந்துவாழ்ந்து பயின்றிருந்தும் அச் சிறப்பையடையாமல் தன் இழிதகவில் நிற்றல் போலக் குணவான்களுடனே குணமில்லாதவர் பலநாள் பழகியும் அவர் நற்குணத்தைத் தாம் பெறாமல் தமது இயல்பான தீக்குணத்திலேயே இருப்பரென்பதாம். **எடுத்துக்காட்டுவமையணி.** "வன்புலக்குவளையும் வருவிருந்தயரும்" (புறநா-42) என்றவாறு குவளை மருதநிலத்தவரால் விருந்திடப்படும் சிறப்புடைமையும், "**வெள்ளாம்பல்**லியுண்ணும் கழிகல்மகளிர்" (புறநா-280) என்றவாறு, வெள்ளாம்பல்கைம்பெண்டிர்க்கு இழிவுடைமையும் இங்கேயறிக.

முதலடியில், நீர்-ஜலம் : நீரமென்னும் வடமொழியின் திரிபு: மற்றை மூன்றிடத்தும், நீர்-குணம் : நீர்மையென்னும் பண்புப்பெயரின் விகாரம். ஒக்கல்லா - எதிர்மறைப் பலவின்பால் முற்று.

இனிய நீர்மையில்லாதவர் கூடாநட்பின ரென்க. "நிறை நீர நீரவர் கேண்மை" என்ற **திருக்குறளில்**, 'நீரவரென்றூர், (அறிவுடையாரை) இனிமைபற்றி' என்ற பரிமேலழகர் விசேடவுரையை இங்கே அறிக. (சு)

உகூ. முற்றற் சிறுமந்தி முற்பட்ட தந்தையை
நெற்றுக்கண் டன்ன விரலான் ஞெமிர்த்திட்டுக்
குற்றிப் பறிக்கு மலைநாட வின்னுதே
யொற்றுமை கொள்ளாதார் நட்பு.

(இ - ள்.) முற்று அல் சிறு மந்தி-(பருவம்) முதிர்தலல்லாத[இளமையான] பெண்குரங்குகள், முன் பட்ட தந்தையை-தமக்கு எதிரே நேர்ந்த தமதுதந்தையான பருவம்முற்றின பெரியஆண்குரங்குகளை, நெற்றுக்கண்டு அன்னவிரலால்-(பயற்றம்) நெற்றைக் கண்டாற்போன்ற தமது கைவிரல்களால், ஞெமிர்த்திட்டு குற்றி-நெரித்துக்குத்தி, பறிக்கும்-(அதன் கையிலுள்ள கனி முதலியவற்றைப்) பறித்துக்கொண்டுபோதற்கு இடமான, மலை - மலைகளையுடைய, நாட-நாட்டையுடையவனே !—ஒற்றுமைகொள்ளாதார் நட்பு-(தமது) மனத்தோடு ஒன்றுபடாதவரது சினேகம், இன்னாது - இனிமையாயிராது; (எ - று.)

மந்தி-குரங்கின் பெண்மைப்பெயர்; "குரங்கு முசுவு மூகமு மந்தி" என்றூர், **ஆசிரியர் தொல்காப்பியனார்.** இனமையையும் பேதைமையையு

முடைய பெண்குரங்குகளுக்குத் தந்தையினிடம் விளையாட்டுச் சொல்லப் பட்டது. தான் வருதற்குமுன்னமே வந்து அங்குள்ள குற்றியைப் பெயர்த் தெடுக்கமாட்டாமலிருக்கிற கிழக்குரங்கை விரலால் அப்பால்தள்ளிவிட் டுத் தான் அக்குற்றியை எளிதிற் பெயர்த்தெடுக்கிற சிறுகுரங்கையுடைய மலையென்று உரைப்பாரு முளர்.

தந்தை-இருதிணைப் பொதுப்பெயர். குற்றி-மரக்கட்டை. ஒற்றுமை-மனம் ஒன்றுபடுதல்; ஸாம்யம். மூற்றல் என்பதைத் தொழிற்பெயராகக் கொண்டு, தந்தைக்கு அடைமொழியாக்கினுமாம். (எ)

உகஅ. முட்டுற்ற போழ்தின் முடுகியென் னுயிரை
நட்டா னெருவன்கை நீட்டேனே—னட்டான்
கடிமனை கட்டழித்தான் செல்வுழிச் செல்க
நெடுமொழி வைய நக.

(இ-ள்.)முட்டு உற்ற போழ்தில்-(எனது நண்பனெருவனுக்குத்) துன்பம் நேர்ந்தபொழுது, முடுகி-விரைந்து, என் ஆர் உயிரை-எனது அருமையான உயிரை, நட்டான் ஒருவன் கைநீட்டேன்எல்-(அத்துன்பத்தினின்றும் அவனைக் காக்கும்பொருட்டு) அச்சினேகிதனெருவனது வசத்திற் கொடாமற் போவேனுமல், (யான்), நெடு மொழி வையம் நக-(மிகப் பல காலமளவும்) அழியாமல் வழங்கும் புகழ்பழிச்சொற்களையுடைய நிலவுலகத்தார்யாவரும் (என்னை)இகழ்ந்து சிரிக்கும்படி, நட்டான் கடி மனை கட்டு அழித்தான் செல் உழி செல்க-(தனது) சினேகிதனது காவலிலுள்ள மனையாளை உறுதியான கற்பை அழித்த பாவி செல்லுந் தீக்கதியிற் செல்வேனுக; (எ-று.)

தனது உயிரைக்கொடுத்தாயினும்நண்பனுயிரைக்காக்கவேண்டுவது கடமை: அங்ஙனஞ் செய்யாமற்போனுல் அது பெரும்பாவமாம் என்றபடி.

இனி, நட்டான் கடிமனை என்பதற்கு சினேகிதனுற் கலியாணஞ்செய்யப்பட்ட மனைவியென்றும் உரைக்கலாம். முட்டு-முட்டுதல், தடைப்படுதல், இடையூறு; முதனிலைத் தொழிற்பெயர். நெடுமொழி வையம்-மிகப்பிரசித்திபெற்ற உலகம் என்றுமாம். ஆதாரமாகிய உலகம் அழியுமளவும் ஆதேயமாகிய புகழ்ச்சொல்லும் பழிச்சொல்லும் அழியாது நிலைநிற்றலால், 'நெடுமொழிவையம்' எனப்பட்டது. நகல்-பரிகாசம். எவர்க்கும் உயிரினும் மேம்பட்டது ஒன்று இன்றுதலின், 'ஆருயிர்' எனப்பட்டது. கடி - பலபொருள் குறிக்கும் உரிச்சொல்.

நட்புக்குணத்தை நன்றுகவுடையானெருவனது பிரதிஜ்ஞை வார்த்தை மூலமாகச் சிறந்த கண்பாது இயல்பு கூறப்பட்டது. (அ)

கஙஉ. ஆன்படு நெய்பெய் கலனு ளதுகளைந்து
வேம்படு நெய்பெய் தனைத்தரோ—தேம்படு
நல்வரை நாட நயமுணர்வார் நண்பொரீஇப்
புல்லறிவி னுரொடு நட்பு.

(இ - ள்.) தேன் படு நல் வரை நாட-தேன்கூடுகள் மிக்க சிறந்த மலைகளையுடைய நாட்டையுடையவனே!—நயம்உணர்வார்கண்பு ஒரீஇ-சினேக குணத்தின் இயல்பை அறியுந்தன்மையுடையாரது சினேகத்தைவிட்டு, புல் அறிவினரொடு நட்பு-அற்பபுத்தியை யுடையவரோடு சினேகித்தல், ஆன் படு நெய் பெய் கலனுள் - பசுவின் சம்பந்தமாகவுண்டான நெய்யைப் பெய்து வைத்துள்ள பாத்திரத்தில், அது களைந்து - அந்த நெய்யை எடுத்து விட்டு, வேம்பு அடு நெய் பெய்து அனைத்து-வேம்பின் சம்பந்தமாகப் பொருந்திய நெய்யைப் பெய்துவைத்தாற் போலும்; (எ - று.)—அரோ-ஈற்றசை ; தேற்றமுமாம்.

தகா தென்றபடி. **உவமையணி.**

வேம்படுநெய்-வேப்பநெய்: வேப்பங்கொட்டையாலாகிய நெய்; வேப் பெண்ணெ யென வழங்குவர். தேன்-அதன் கூண்டுக்குத் **தானியாகு பெயர்.** இனி, தேம் படு - இனிமைபொருந்திய என்றுங் கொள்ளலாம். **ஆன்படு - இனவெதுகை.** (கூ)

உசo. உருவிற் கமைந்தான்க ணூரான்மை யின்மை
பருகற் கமைந்தபா னீரளா யற்றே
தெரிவுடையார் தீயினத்தா ராகுத லுகம்
விரிபெடையோ டாடிவிட் டற்று.

(இ - ள்.) உருவிற்கு அமைந்தான்கண்-பெருமைக்கு உரிய சில நற் குணங்களையுடையானிடத்து, ஊர்ஆண்மைஇன்மை-ஊரிலுள்ள பிறர்க்கு உபகாரஞ்செய்யுங் குணமில்லாமைபொருந்துதல், பருகற்கு அமைந்தபால் நீர் அளாய் அற்று-குடிப்பதற்கு ஏற்ற இன்சுவையுடைய பாலில் நீர் கலந்தாற்போலும் ; தெரிவு உடையார்-அறிவுடையார், தீ இனத்தார் ஆகுதல்-கொடிய நண்பரை யுடையராதல், நாகம் விரி பெடையோடு ஆடிவிட்டு அற்று-நல்லசாதிச் சர்ப்பம் பெட்டைவிரியன்பாம்புடன் புணர்ந்து நீங்கினாற் போலும்; (எ - று.)

பாலில் நீர்கலந்தாற் சுவைகெடுதல்போலக் குணமுடையானிடம் பிறர்க்கு உதவாமை யிருந்தாற் குணங்கெடும்; நாகம் விரிபெடையோடு புணர்ந்தால் அழிதல்போல நல்லோர் துஷ்டசகவாசத்தாற் கெடுவர் என்பதாம். நாகம் விரிபெடையோடு புணர்ந்தாற் சாகு மென்பர். 'நாகம் விரியன் பெடையுடனே புணர்ந்தால், அதின் வயிற்றிலே கற்பமுந்பவித்த அந்த நாகத்திற்கு ஆயுசுகுறைந்து போமாறுபோல, பொல்லாதவனைச் சேர்ந்தால் நல்லவனும் கெட்டுப்போவான்' என்பது பழையவுரை.

இனி, உருவிற்கு அமைந்தான் என்பதற்கு-சிநேகிப்பதற்குஒருகாரணமான வடிவழகுக்கு ஓர் இடமாகப் பொருந்தினவன் என்று உரைப்பாருமுளர். "பேடையும் பெடையு நாடி ஞெண்டும்" என்ற **தொல்காப்பியச்** சூத்திரத்து 'நாடின்' என்ற மிகையால், ஊர்வனவான நாகத்திற்குப் பெடையென்னும் பெண்மைப்பெயர் கொள்ளப்பட்டது. (கo)

மூன்றுவது

இன்பவியல்.

மனிதர்மனத்திற்கு மகிழ்ச்சியுண்டாதலேப்பற்றிக் கூறும்பிரிவு என்பதாம். இத்தன்மை இவ்வியலின் முதலதிகாரத்தால் உடன்பாடாகவும், மற்றை யிரண்டு அதிகாரங்களால் மறுதலேயாகவும் கூறப்படுதல்காண்க. இன்பமாவது-மனத்திற்கு ஆனந்தமுண்டாதற்குக் காரணமாவது.

உரு-ஆம் அதிகாரம்.—அறிவுடைமை

அஃதாவது-கல்விகேள்விகளிஞலாகிய அறிவோடு உண்மையறிவையும் உடையவனுதல்; இன்னவர் கூடாநண்பர் இன்னவர் கூடுநண்பர் என்று அறிதலும் அவர்களே முறையே கலவாமையும் கலத்தலும் அறிவுடையார்க்கல்லது கூடாமையின், இது அதன்பின் வைக்கப்பட்டது. அறிவு-காரியா காரியங்களேப் பகுத்தறிந்துகொள்ளும் விவேகம்; இயற்கையறிவோடு கூடிய செயற்கை யறிவு: நூல்களிற்கூறியபடி இம்மை மறுமை வீடுகட்கு உரியவற்றை அறிவதோடு உலகநடையையும் அறிதல். இனி எல்லாச்செல்வத்தினுஞ்சிறந்த அறிவாகியசெல்வம் என்றும் உரைக்கலாம்.

உஅக. பகைவர் பணிவிட நோக்கித் தகவுடையார்
தாமேயு ணாணித் தலேச்செல்லார் காணு
யிளம்பிறை யாயக்காற் றிங்களேச் சேரா
தணங்கருந் துப்பி னரா.

(இ - ள்.) பகைவர் பணிவு இடம் நோக்கி-பகைவர்கள் தாழ்ந்தநிலேமையை யடைந்திருத்தலேப் பார்த்து, தகவு உடையார்-தகுந்த அறிவுடையவர், தாமேயும் நாணி-தம்மில்தாமே வெட்கமடைந்து, தலேச்செல்லார்-(அவரைவெல்லுதற்கு) அச்சமயத்திற்போகமாட்டார்கள்; காணும்-(நீ) பார்: அணங்கு அருந் துப்பின் அரா-வருந்துதலில்லாத வலிமையையுடைய பாம்பு, திங்களே-சந்திரனே, இளம் பிறை ஆயக்கால்-இளேயபிறைச்சந்திரனுகும் பொழுது, சேராது-(வருத்துதற்குப்) போகாது; (எ - று.)

நன்மைதீமைபார்க்குந் தன்மையதல்லாத கொடியபாம்பும், சந்திரன் இளேத்திருக்கும் பொழுதெல்லாம் அதனே அணுகாதுவிட்டு அது பூர்ணமாய் நிறைந்திருக்கும்பொழுதே அதனேப்பிடித்துப் பீடிக்கிறது;ஆதலால், பகைவரை இளேத்திருக்குஞ்சமயம்பார்த்து வெல்லக்கருதாமல் அப்பொழுது அவர்பால் இரங்கிப் பின்பு அவர் தலேயெடுத்தபொழுதே பொருது வெல்லக்கருதுதல் வீரர்க்கு விவேக மென்பதாம். **எடுத்துக்காட்டுவமையணி.**

கிரகணகாலத்திற் சூரியமண்டலத்தை மறைக்கிற சந்திரனது சாயையையும் சந்திரமண்டலத்தை மறைக்கிற பூமியின்சாயையையும் ராகு கேதுக்க ளென்னுங் கரும்பாம்பு செம்பாம்புகளாகக்கூறுதல், கவிகளது கொள்கை.

பாற்கடல் கடைந்து அமிருதமெடுத்து அதனைத் திருமால் தேவர்களுக்குத் தனியே இருத்தி அவர்களுக்குப் பகிர்ந்துகொடுத்து வரும்பொழுது ஓரசுரன் இடையிலேவந்து கையை நீட்ட அவனை அருகிலிருந்த சூரியசந்திரரது வார்த்தையினால் விஷ்ணு அசுரனென்று அறிந்து சினந்து தலை வேறு உடல்வேறுகும்படி சிதைத்திட்டானென்றும், அப்பொழுதே அவன் இராகுகேது என்னும் இரண்டு தேவசரீரத்தைத் திருமாலின் கரஸ்பரிசத் தாற்பெற்றுப் பின்பு அவனருளால் பருவகாலங்களில் தனக்குப்பகைவரான சூரியசந்திரரைத் தான்வருத்தவும் அக்காலத்தைப் புண்ணிய காலமாகச் சனங்கள் கொண்டாடவும் வரம்பெற்றுனென்றும் பௌராணிகர் கூறுவர்.

அணங்கு-முதனிலைத்தொழிற்பெயர். அணங்கு அரு துப்பின் என்பதற்கு-(பிறர்) வருந்துதற்குக்காரணமான எவராலுந் தடுக்கமுடியாத வலிமையையுடைய என்றும் பொருள்கொள்ளலாம். தகவு-தகுதியையுடைய அறிவுக்குத் தொழிலாகுபெயர். (க)

உகூ. நளிகடற் றண்சேர்ப்ப நல்கூர்ந்த மக்கட்
கணிகல மாவ தடக்கம்—பணிவில்சீர்
மாத்திரை யின்றி நடக்குமேல் வாழுமூர்
கோத்திரங் கூறப் படும்.

(இ - ள்.) நளி கடல் தண் சேர்ப்ப-பெரிய கடலின் குளிர்ந்த துறை முகத்தையுடையவனே!—நல்கூர்ந்த மக்கட்கு-வறுமையடைந்துள்ள மனிதர்க்கு, அணிகலம் ஆவது-அணிதற்குரிய ஆபரணமாவது, அடக்கம்-அடங்கியிருத்தலாம்; (ஒருவன்), பணிவு இல் சீர்-அடங்குதலில்லாத தன்மையுடனே, மாத்திரை இன்றி நடக்கும் எல்-(தன்) வரம்புகடந்து நடப்பானால், வாழும் ஊர்-அவன்வாழ்ந்திருக்கும் ஊரிலுள்ளார் யாவராலும், கோத்திரம் கூறப்படும்-(அவனது) குலம் (இழித்துச்) சொல்லப்படும்.

எப்படிப்பட்டவர்க்கும் அடக்கம் அவசியமாயினும் தரித்திரர்அடங்கியிராமற் போனால் அவரைப்பற்றி அவர்குலமும் இகழப்படுமென்பதாம். இதனால், அடங்குதல் அறிவுடைமையென்றவாறு; இதுபற்றியே, இப்பாட்டு இவ்வதிகாரத்து நிறுத்தப்பட்டது.

நளிகடல்-உரிச்சொற்றொடராதலின், இயல்பு. கீழ்கடல் மேல்கடல் என்னும் இரண்டெல்லையளவும் உள்ள நாடு என்பார், 'நளிகடற்றண்சேர்ப்ப' என்றுரைக்க; பிறநூல்களிலும், இவனது நாட்டிலேயே சூரியனுதிப்பதும் அஸ்தமிப்பதும் எனக் கூறியவாறு காண்க. பலபண்டங்களும்ஏற்றுதல் இறக்குதலாவதற்கு ஏற்ற துறைமுகத்தையுடைத்தாயிருப்பது நாட்டுக்குப் பெருஞ் சிறப்பாதலுங் காண்க. கோத்திரம்-வடசொல். (உ)

உகூ. எந்நிலத்து வித்திடினுங் காஞ்சிரங்காழ் தெங்காகா
தென்னுட் டவருஞ் சுவர்க்கம் புகுதலாற்
றன்னுற்றா னுகு மறுமை வட்டிசையுங்
கொன்னுளர் சாலப் பலர்.

(இ - ள்.) எந் நிலத்து வித்து இடினும் - எந்த நிலத்திலே விதையைப் போகட்டாலும், காஞ்சிரம் காழ் தெங்கு ஆகா - எட்டிவிதை தென்னைமர மாகமாட்டா ; தென் நாட்டவரும் சுவர்க்கம்புகுதலால்-தென்திசை நாட்டிலுள்ளவீர்வர்களும் சுவர்க்கலோகஞ் சென்று சேர்வதனால், தன்னால் தான் ஆகும் மறுமை - தனது முயற்சிவகையாலேயே மறுமைக்கதி உளதாகும்; வடதிசையும் கொன் ஆளர் சால பலர்-வடக்குத்திக்கிலும் (நற்கதிபெற முயலாது) வீண்காலங்கழிப்பவர் பல ருண்டு ; (எ - று.)

தென்னுடெல்லாம் மிலேச்சதேசமென்றும், அதில் வாழ்வார்க்கு நற்கதியில்லை யென்றுஞ் சிலபிரமாணங்களைக்கொண்டு கூறுகிற வடநாட்டாரை நோக்கி அதனை மறுத்து வடதிசையிலிருந்துவந்த சமணமுனிவர் இங்ஙனந் தென்னாட்டாரைச் சிறப்பித்துக்கூறியதுபோலும் இது. நிலத்தினியற்கையால் வித்தினின்று உளதாகும் மரம் வேறுபடாததுபோலத் திசையினியற்கையால் அவரவர்தொழிலினின்று உளதாகும் வினைப்பயன் மாறுபடாதென்பதாம்.

தன் ஆற்றுன்-தான் ஒழுகும் ஒழுக்கவழியால் என்றும் உரைக்கலாம். கொன்-பயனின்மை ; இடைச்சொல் : அதனை ஆள்பவர், கொன்னாளர். தென்னாட்டவரும் என்பதற்கு-தென்திசைக்கணுள்ள நரகலோகத்தவரும் என்றும், வடதிசையும் என்பதற்கு-வடதிசைக்கணுள்ள புண்ணிய பூமியிலும் என்றும் உரைக்கலாம். உம்மைகளை முறையே எதிரது இறந்தது தழுவிய எச்சப்பொருளனவாகவாவது, இழிவு உயர்வு சிறப்புப் பொருளனவாகவாவது கொள்க. காழ் - பால்பகாவஃறிணைப்பெயர்.

நற்கதிபெறுதற்கு அறிவுடைமையே காரணமென்றும், திசைவேறு பாட்டாற் பயன்வேறுபடுவதாகக் கூறுவது அறிவுடைமையன் றென்றும் அதிகாரத்துக்கு ஏற்பக் கருத்துக் கொள்ளவேண்டும்.

'விரையொன்று போட்டாற் சுரையொன்று முளைக்குமா ?' என்பது **பழமொழி**.

'கபிலரகவல்' என வழங்கப்படுவதில் "தென்றிசைப்புலையன் வடதிசைக்கேகின், பழுதற வோதிப் பார்ப்பா னுவான், வடதிசைப் பார்ப்பான் தென்திசைக்கேகின், நடையதுகோணிப்புலையனுவான்" என்றதுபோன்ற பொது விதிபற்றியகொள்கை இங்குச்சிறப்புவிதிகாட்டி மறுக்கப்பட்டது.

உசச. வேம்பி னிலையுட் கனியினும் வாழைதன்
நீஞ்சுவை யாதுந் திரியாதா—மாங்கே
யினந்தீ தெனினு மியல்புடையார் கேண்மை
மனந்தீதாம் பக்க மரிது.

(இ - ள்.) வேம்பின் இலையுள் கனியினும் - வேப்பிலையிலே பழுத்தாலும், வாழை-வாழைப்பழம், தன் தீம் சுவை யாதும் திரியாது ஆம்-தனது இனிய உருசி சிறிதும் மாறுபடாதாம்; ஆங்கே - அதுபோலவே,—இனம்

தீது எனினும் - சேர்ந்தகூட்டம் குணங்கொடியதாயிருந்தாலும், இயல்பு உடையார் கேண்மை-இயற்கைநல்லறிவுடையாரது நட்பு, மனம் தீது ஆம் பக்கம் அரிது-மனம் கொடியதாகுந் தன்மை இல்லை; (எ - று.)

இயற்கையில் இன்சுவைமிக்குள்ள பழமாயின் சேர்க்கையாற் சுவை கெடுதல் இல்லைபோல, இயற்கையில் நல்லறிவு மிக்குள்ள மனிதராயின் சேர்க்கையாற் குணங்கெடுதலில்லை யென்பதாம்.

ஆங்கு-உவமவுருபு; இது உபமானஉபமேயங்களுக்கு இடையே வந்து விட்டதனால், இப்பாட்டு எடுத்துக்காட்டுவமையணியாகாது; **உவமையணி** யேயாம்.

வாழை-அதன் பழத்துக்கு, முதலாகுபெயர். 'தீச்சுவை' என வலி மிக்கு வருமிடத்து, தீமை சுவை யெனப் பிரித்து, கடுஞ்சுவையென்று பொருள் உரைக்கவேண்டும். தீம் என்பதனடியாகப் பிறந்தபெயரெச்சம் தீவிய எனவும், தீமை யென்பத னடியாகப் பிறந்தது தீய எனவும் நிற்கும் வேறுபாட்டையுங் காண்க. வாழை தன் சுவை திரியாது-தொடர்ந்தபொருள் அதன் பயனிலையையே கொண்ட முடிபு. (சு)

உருசு. கடல்சார்ந்து மின்னீர் பிறக்கு மலைசார்ந்து
மூப்பீண் டுவரி பிறத்தலாற்—றத்த
மினத்தனைய ரல்ல ரெறிகடற்றண் சேர்ப்ப
மனத்தனையர் மக்களென் பார்.

(இ - ள்.) எறி கடல் தண் சேர்ப்ப - அலைவீசுகின்ற கடலினது குளிர்ந்த துறையை யுடையவனே !—கடல் சார்ந்தும் இன் நீர் பிறக்கும்-(உப்புச் சுவையுடைய) கடலை அடுத்தும் இன்சுவையுடைய நீர் உண்டாகும்; மலை சார்ந்தும் உப்பு ஈண்டு உவரி பிறத்தலால்-(இனிய அருவிநீரை யுடைய) மலையை அடுத்தும் உப்பு நிறைந்த உவர்நீர் உண்டாகும் ஆதலால்,—மக்கள் என்பார்-மனிதரெனப்படுவர், தம்தம் இனத்து அனையர் அல்லர்-(குணஞ்செயல்களில்) தங்கள் தங்கள் இனத்தாரையொத்தவரல்லர்; மனத்து அனையர்-(தம்தம்) மனத்தின் அறிவை யொத்தவர்; (எ-று.)

தமது இயற்கை நற்குணஞ் சேர்க்கையால் மாறுபடாதவரே மனிதரென்று சிறப்பித்துக் கூறப்படுவதற்கு ஏற்றவரென்பதாம்.

'மக்களென்பார்' என்பது, "இல்வாழ்வானென்பான்," "ஊரெனப்படுவது உறையூர்" என்பனபோலச் சிறப்புத்தோன்ற நின்றது. என்பார் எனச் செயப்படுபொருள் வினைமுதல்போலக் கூறப்பட்டது. அதிகாரத்துக்கு ஏற்ப, மனம் அறிவாயிற்று. மனம் புத்தி சித்தம் அகங்காரம் என்னும் நான்கு அந்தக்கரணங்களுள் ஒன்றன்பெயர். மற்றொன்றிற்கு நூல்களில் மாறி வருவது உண்டு. 'சார்ந்தும்' என்ற உம்மை-முன்னர் இழிவு சிறப்பும், பின்னர் உயர்வு சிறப்புமாம். என்பார் என்பதை முதல் வேற்றுமைச் சொல்லுருபாகவுங் கொள்ளலாம்.

இது, **திருஷ்டாந்தாலங்காரம்**; **ஏதுவணி** எனினும் அமையும். (சு)

உசசு. பராஅரைப் புன்னை படுகடற்றண் சேர்ப்ப
வொராஅ லுமொட்டலுஞ் செய்பவோ நல்ல
மரூஉச்செய்தி யார்மாட்டுந் தங்கு மனத்தார்
விராஅ அய்ச் செய்யாமை நன்று.

(இ - ள்.) பரு அரை-பருத்த அரையையுடைய, புன்னை-புன்னைமரங் கள், படு-பொருந்தின, கடல்தண் சேர்ப்ப-குளிர்ந்தகடற்றுறையையுடைய பாண்டியனே!—தங்கும் மனத்தார் - உறுதியாய் ஒருநிலையில்நிற்கின்ற மனமுடையவர்கள், நல்ல மரூஉ செய்தியார்மாட்டும்-நற்குணங்கள் பொரு ந்தின செய்கையை யுடையவர்களிடத்தும், ஒராலும் ஒட்டலும்-கூடிநீங்கு தலையும் மறுபடி சேர்தலையும், செய்பவோ-செய்வார்களோ? [செய்யு ரென்றபடி]; (இங்ஙனஞ் செய்தலினும்), விராய் செய்யாமை-(எவரோடுங் கலந்து) சினேகஞ்செய்யாதிருத்தல், நன்று-நல்ல விவேகமாம்; (எ - று.)

அயோக்கியரிடத்துங் கூடிப்பிரிதல் காரியமன்று; ஆனபொழுது, யோக்கியரிடங் கூடிப்பிரிதலும் மறுபடி கூடுதலும் மனம் ஒருவழிப்பட்ட வரது செயலாகா: அதனினும் அவர்களைச் சேராமலிருப்பதே மிக நல்ல தாம் என்றபடி.

கூடிப்பிரிதலினும் கூடாமை நல்ல தென்றது, கூடிய நல்லோரைப் பிரிந்தகுற்றமும் துன்பமும் கூடாதவர்க்கு இல்லையாதலின். செய்தியார் மாட்டும் எனப்பிரித்து, செய்கையையுடைய யாவரிடத்தும் என உரைத்த லும் ஒன்று. தங்குமனத்தார் விராய்ச் செய்யாமை நன்று என இயைத்து, நிலைபெற்று ஒருபெற்றியேநின்ற மனத்தினையுடையார் கூடுதலேயும் பிரிதலேயுங் கலந்துசெய்யாமை நல்லதென்று உரைப்பாரு முளர்; ஒன்று, கூடியேயாவது இருக்கவேண்டும்; அல்லது, பிரிந்தேயாவது இருத்தல் வேண்டும் என்பதாம். "கூடிப்பிரியேல்" என்ற ஔவையார் நீதிவாக்கி யத்தில், எதிர்மறைவகையால் 'பிரிந்துகூடேல்' என்னும் பொருளும் ஒருவாறு தோன்று மாறு காண்க.

பரு + அரை = பராரை; **இப்பண்புத்தொகை—மரூஉமுடிபு.** புன்னை - நெய்தனிலத்துப் பொருள்களுளொன்று. புன்னைப்படுஎன்பதற்கு-புன்னை மரத்தாற் சிறந்த என்றும் உரைப்பர். மரூஉ-மருவு என்பது விகாரப் பட்ட அளபெடை. இனி, நல்லகுணங்கள் கெட்டுச் சிதைந்து மருவி வழங்கிய செய்கையாரிடத்தும் சலியாத மனமுடையோர் கூடிப்பிரிதலும் மீண்டு கூடுதலுஞ் செய்வார்களோ? என்றும் உரைக்கலாம்: இவ்வுரைக்கு, உம்-இழிவுசிறப்பு; இடையிற்கூறிய உரைக்கு, மூற்றுப்பொருளது. அரை-மரங்களிற் கிளைபிரியுமளவும் அடியிலுள்ள கட்டை.

எல்லாவடியிலும் எதுகையில் அளபெடைவந்தது ஓர் அழகாம்; **அள புத்தொடை: அளபெடைவண்ணம்.** மூன்றுமடியில் அளபெடை செய்யு ளிலக்கணத்துக்கு இன்றியமையாத தன்றுதலின், **இயற்கையளபெடை** யென்றுவது, **இன்னிசையளபெடை** யென்றுவது கொள்ளவேண்டும்.

கீழ்ப் பெரியாரைப்பிழையாமையென்னும் அதிகாரத்தில் "தெரியத் தெரியுந் தெரிவிலார் கண்ணும், பிரியப் பெரும்படர்நோய் செய்யும் -

பெரிய, வுலவா விருங்கழிச்சேர்ப்ப யார்மாட்டுங், கலவாமை கோடியுறும்" என்ற பாட்டிலும் இக்கருத்துக் காண்க.

செய்து யார்மாட்டும் எனப் பிரித்து, குற்றியலிகரமாகக் கொண்டு, நல்லகாரியங்களைப் பொருந்திச்செய்து யாவரிடத்தும் அன்புகொள்ளும் மனத்தை யுடையாரென்றும் உரையிடலாம்; இவ்வுரைக்கு, குற்றியலிகரம் அலகு பெறவில்லை யென்க. முன்னுரையில், மூன்றுமடியில் அளபெடைக்கு அலகில்லை. (சு)

உசாவ. உணர வுணரு முணர்வுடை யாரைப்
புணரப் புணருமா மின்பம்—புணரின்
றெரியத் தெரியுந் தெரிவிலா தாரைப்
பிரியப் பிரியுமா நோய்.

(இ-ள்.)உண்ர உணரும் உணர்வு உடையாரை-(நன்மைதீமைகளைப்) பகுத்தறிய வல்ல விவேகமுடையவர்களை, புணர-சேர்தலால், இன்பம் புணரும்-பலவித இன்பங்களும் உண்டாகும்; தெரிய தெரியும் தெரிவு இலாதாரை-(நன்மைதீமைகளைப்) பகுத்தறிய வல்ல விவேக மில்லாதவர்களை, புணரின்-(தெரியாமற்) சேர்ந்துவிட்டால், பிரிய-(அவரைவிட்டு) நீங்குமாத்திரத்திலே, நோய் பிரியும்-(அவராலுண்டாகும்) பலதுன்பங்களும் நீங்கும்; (எ - று.)

'ஆம்' இரண்டும்-அசை. இறுதியில், மா நோய் எனப்பிரித்து, மிகுந்த துன்பமென்றுங் கொள்ளலாம். உணரும், தெரியும் என்பவற்றிற்கு-நம்முடைய சினேககுணங்களை யென்னும் செயப்படுபொருளும் வருவிக்கலாம்.

உணர, தெரிய என்பவற்றைப் பிறவினைப்பொருளில்வந்த தன்வினை யெனக்கொண்டு, பிறர் உணர்த்த, பிறர் தெரிவிக்க எனப் பொருள் கொள்வாருமுளர். புணரின்-கூடுமாயின் என்றுமாம்.

இந்நூலில் ஒவ்வொருபாட்டும் ஒவ்வொரு சமணமுனிவரதுகருத்தாதலின், கீழ்க் கூடிப்பிரியலாகாதெனப் பலவிடத்துவந்ததனாலே இது மாறுகொளக் கூறலாகாது; பிறவும் இங்ஙனம் வருமிடங்களுக்கெல்லாம் இதுகொள்க: அதிகாரிபேதத்தால் ஒற்றுமைப்படுத்தி அமைத்தலும் ஒன்று.

அடிதோறும் வந்தசெல்லும் பொருளும் மீண்டும் வந்தது-**சொற் பொருட்பின் வருநிலையணி.**

அறிவுடையாரைக் கூடுதலும் அறிவில்லாதாரைப் பிரிதலும் அறிவுடைமை யென்பதாம். (எ)

உசாவ. நன்னிலைக்கட் டன்னை நிறுப்பானுந் தன்னை
நிலைகலக்கிக் கீழிடு வானு—நிலையினு
மேன்மே லுயர்த்து நிறுப்பானுந் தன்னைத்
தலையாகச் செய்வானுந் தான்.

(இ - ள்.) நல் நிலைக்கண் தன்னை நிறுப்பானும்-நல்லநிலையிலேயே தன்னை வைப்பவனும், நிலை கலக்கி தன்னை கீழ் இடுவானும்-(தான்நின்ற

நல்லநிலையினின்று) கலங்கச்செய்துதன்னைக்கீழ்ப்பட்ட நிலையிற்சேர்க்கிற வனும், நிலையினும் மேல் மேல் உயர்த்து நிறுப்பானும்-(தான்நின்ற) நிலை யினும் மேலே மேலே உயர்ந்த நிலையில் தன்னை ஏறிநிற்கச் செய்பவனும், தன்னை தலைஆக செய்வானும்-தன்னை(ப் பிறர்பலரினும்) முக்கியமாகச் செய்பவனும், (எல்லாம்), தான் - தானேயாவன் ; (எ - று.)

என்றது, ஒருவனுடைய உயர்வுதாழ்வுகளுக்கு அவனுடைய அறிவும் அறிவில்லாமையுமே காரணமென்பதாம். "பெருமைக்கு மேனைச் சிறு மைக்குந் தத்தம், கருமமே கட்டளைக்கல்" என்ற **திருக்குறள்** இங்குக் காணத்தக்கது.

நிலையினும், உம்மை-உயர்வுசிறப்பு : அசைநிலையுமாம். மற்றை உம்மைகள் நான்கும்-எண்ணுப்பொருளன. நிறுப்பான் முதலிய நான் கும்-எழுவாய், தான்-பயனிலை. (அ)

உசகூ. கருமவரிசையாற் கல்லாதார் பின்னும்
பெருமை யுடையாருஞ் சேற—லருமரபி
னேதை மரற்று மொலிகடற் றண்சேர்ப்ப
பேதைமை யன்ற தறிவு.

(இ - ள்.) அரு மரபின் - (பிற நாகெளிற்) பெறுதற்கு அருமையான (சிறப்புத்)தன்மையையுடைய, ஓதம் அரற்றும்ஒலிகடல்தண்சேர்ப்ப-அலை கள் மிகவொலிக்கின்ற கடலினது குளிர்ந்த துறைமுகத்தையுடைய அர சனே!—கருமம் வரிசையால்-காரியத்தின் முறைமையால், கல்லாதார் பின்னும் பெருமை உடையாரும் சேறல்-படியாத மூடர்களது பின்பும் பெருமை யுடைய புத்திமான்களும் செல்லுதல், பேதைமை அன்று-அவி வேகமன்று ; அது அறிவு - அது விவேகமேயாகும் ; (எ - று.)

காரியநிமித்தம் கல்லாதவரை அநுசரிப்பதும் அறிவுடைமையென்ப தாம். பேதைமையன்று என்றதன்பின் அது அறிவு என்றது, உறுதிப் பயத்தவந்த **அநுவாதம்**.

கல்லாதார்பின்னும், உம்-இழிவுசிறப்பு. பெருமையுடையாரும், உம்-உயர்வுசிறப்பு. சேறல்என்னுந்தொழிற்பெயரில், செல்-பகுதி. அருமரபின் என்பது, கடற்சேர்ப்புக்கு அடைமொழி. ஓதத்திற்கு அடைமொழியாக் கொண்டால், அதற்கு அருமை-மற்றொன்றுக்கு இல்லாதபடி என்றும்ஒரு விதமாய் ஒங்கியெழுந்து மடியுந்தன்மை யென்க. இனி, கருமவரிசையால் என்பதற்கு-முற்பிறப்பிற்செய்த ஊழ்வினையின் வகையால் என்றும் உரை க்கலாம் ; கல்லாதாரைத்தழுவுதல் பாபபலமா மென்றபடி. பேதைமை அது அறிவுஅன்று எனப்பிரித்துக்கூட்டி, கல்லாதவர் பின்செல்லுதல் அறியாமையாம் : அது அறிவுடைமையன்று எனத் துணிந்துரைக்கவும் இடமுண்டு. (கூ)

உ0. கருமமு முள்படாப் போகமுந் துவ்வாத்
கருமமுந் தக்கார்க்கே செய்யா—வொருநிலையே
முட்டின்றி மூன்று முடியுமே லஃதென்ப
பட்டினம் பெற்ற கலம்.

(இ - ள்.) கருமமும்உள்படா-(அறம்பொருள்களுக்குக் காரணமான) தொழில்களையும் உடன்பட்டுச்செய்து, போகமும் துவ்வா-(அவற்றால்உள் ளனவாகும்)இவ்வுலகவின்பங்களையும் அனுபவித்து, தருமமும்தக்கார்க்கே செய்யா-(தானம்முதலிய) அறத்தொழில்களையும்(அறிவொழுக்கங்களால்) தகுதியுடையவர்களுக்கேசெய்து, மூன்றும் ஒருநிலையே முட்டுஇன்றி முடி யும் எல்-இம்மூன்று காரியங்களும் (இங்ஙனம்) ஒருபிறப்பிலேயே (ஒருவ னுக்குத் தடையில்லாமல் நிறைவேறுமாயின், அஃது-அந்நிலைமை, பட்டி னம்பெற்ற கலம்-(பிறநாடுகள் பலவற்றிற் சென்று வியாபாரஞ்செய்து இலாபம்பெற்று மீண்டு தனது) பட்டினத்தையடைந்த மரக்கலத்தை யொக்கும், என்ப - என்றுசொல்வர், (அறிவுடையோர்); (எ - று.)

இம்மூன்று தொழில்களையுஞ் செய்வது அறிவுடைமை யென்பது கருத்து. இம்மூன்றும் இல்லறத்தார்க்கே உரிய தொழிலாம். 'பட்டினம் பெற்ற கலம்' என்ற உபமானத்தால், அப்பிறப்புப் பயன்பெற்ற பிறப் பென்பதாம். கருமமும், போகமும், தருமமும் என்றவற்றிலுள்ள உம்மைகள்-எதிரது இறந்தது தழுவியஎச்சப்பொருளன ; எண்ணும்மை யாகக் கொள்ளக்கூடாது ; வெவ்வேறு வினைமுடிக்குஞ்சொல் வந்தது ஞல். உள்படா, துவ்வா, செய்யா என்னும் மூன்றும்-உடன்பாட்டு இறந்த கால வினையெச்சங்கள். பட்டினம்-நெய்தல்நிலத்துஊர், துறைமுக நகரம். போகம் - வடசொல்.

இங்கே அஃது என்பதில் ஆய்தம் மெய்போல ஒலித்தது ; உயிர் போல ஒலியாமையை அலகிட்டுக் காண்க.

இப்பாட்டின் முற்பாதி, திருக்குறளுரையிற் பரிமேலழகரால் "கற்ற பின், நிற்க வதற்குத்தக" என்றவிடத்து எடுத்தாளப்பட்டுள்ளது. (க0)

உசு - ஆம் அதிகாரம்—அறிவின்மை

அஃதாவது-கல்வி கேள்விகளினுலாகிய அறிவு இல்லாமையோடு உண்மையறிவும் இல்லாதவனுதல். அறிவு - காரியாகாரிபங்களைப் பகுத் தறிந்துகொள்ளும் விவேகம் ; இயற்கையறிவோடு கூடிய செயற்கை யறிவு : நூல்களிற் கூறியபடி இம்மை மறுமைகட்கு உரியவற்றை அறிவ தோடு உலக நடையையும் அறிதல்.

சிறந்த ஐங்குரவர்முதலாயினர் அறிவுறுத்தினகாரியங்களை உட் கொள்ளாமல் ஒழித்துவிடுதலும், நூல்களிற் கூறியவற்றை ஐயந்திரிபுக ளால் அறிதலும், நூற்கொள்கைமுறைமையையும் உலகவியற்கைமுறை மையையும் இகழ்ந்துவிலக்கித் தன்மனத்திற்கு எற்றபடி நடந்து எல்லாரா லும் இகழப்படுதலும், மறுமைக்கு உறுதியல்லாதவற்றைச் செய்தலும் இப் படிப்பட்டவை அறிவின்மையின்பாற்படும். அறிவுடைமைச்சிறப்பு, முன் னதிகாரத்தில் உடன்பாட்டுமுகத்தாற்கூறியஅளவினுல் முற்றுப்பெருமை நோக்கி எதிர்மறைமுகத்தாலும் கூறப்படுகின்றதாதலால், அறிவின்மை யென்னும் இவ்வதிகாரம், அறிவுடைமையின்பின்வைக்கப்பட்டது; திருக்

குறளில் கல்வியின்பின் கல்லாமைவைக்கப்பட்டதுபோல. செல்வத்தைச் சம்பாதித்தற்கும், சம்பாதித்தபொருளைக் காத்தற்கும், அங்ஙனம் காக்கப் பட்ட பொருளைநல்வழியிற் செலவுசெய்து தானும் அனுபவித்தற்கும் அறிவு கருவியாதலால், இந்த அறிவுடைமை அறிவின்மை அதிகாரங்கள் பொருட்பாலின்பாற் படுவனவாயினவென அறிக.

உருக. நுண்ணுணர் வின்மை வறுமை யஃதுடைமை
பண்ணப் பணைத்த பெருஞ்செல்வ—மெண்ணுங்காற்
பெண்ணவா யாணிழந்த பேடி யணியாளோ
கண்ணவாத் தக்க கலம்.

(இ - ள்.) (உலகத்தில் ஒருவர்க்கு), நுண் உணர்வு இன்மை - நுட்ப மான அறிவு இல்லாமை,—வறுமை-தரித்திரத்தன்மையாம்;அஃது உடை மை-அந்நுண்ணறிவை உடைத்தாயிருத்தல்,—பண்ண பணைத்த-மிகவளர் ந்த, பெரு செல்வம் - பெரிய சம்பத்தாம்; எண்ணுங்கால்-ஆலோசித்துப் பார்க்குமிடத்து,—பெண் அவாய்-பெண்தன்மை மிகுந்து, ஆண் இழந்த-ஆண்தன்மை குறையப்பெற்ற, பேடி-பேடியானவள்,—கண் அவா தக்க - (யாவர்) கண்களும் (காணுதற்கு) விரும்பத்தக்க [மிகஅழகிய], கலம்-ஆப ரணங்களை, அணியாளோ-தரிக்கமாட்டாளோ? [தரிப்பாள்]; (எ - று.)

மனிதர்க்குச் சிறந்தசெல்வமாவது-அறிவுடைமையே;அச்செல்வமில் லாமையாவது - அறிவின்மையே: மற்றை உலகத்துப் பொன் மணி நெல் முதலிய பொருள்களெல்லாம் செல்வமென்று சிறப்பாகக் கொள்ளத்தக்க வையல்ல ; அறிவில்லாதவர்க்கு எவ்வளவு செல்வம் மிருந்தாலும் அறிவுடை யார்க்குப்போலப் பெருமையும் பயனும் உண்டாகா: அது எதுபோல வெ னின்,—பெண்தன்மை யமைந்திராத பேடிக்கு எவ்வளவு ஆபரணங்களணி ந்தாலும் இயற்கைமகளிர்க்குப்போல அழகின்சிறப்பும் இன்பப்பயனும் உண்டாகாதவாறுபோ லென்க.

பின்னிரண்டடிகளால் ஏற்பவங்கருத்து-**எடுத்துக்காட்டுவமை**. முன் னிரண்டடிகளின் கருத்தாக அமைந்த, 'அறிவிலார் செல்வமமைந்தாலும் சிறப்புடையராகார்' என்பது - இதன் உபமேயம்.

பெண்தன்மை குறைந்து ஆண்தன்மைமிகுந்த நபும்சகம்-அலியெனப் படுமென்றும், ஆண்தன்மைகுறைந்து பெண்தன்மைமிகுந்த நபும்சகம் - பேடியெனப்படு மென்றும், பேடுஎன்பது-இவ்விருவகைக்கும் பொதுப் பெயரென்றும் அறிக. மிகுதியாய் ஆபரணங்களைத்தரித்தல் மகளிர்க்கே இயல்பாதலால், இங்கே, பெண்தன்மைமிகுந்து ஆண்தன்மை குறைந்த பேடு கொள்ளப்பட்டது. பேடி ஆபரணங்களணிதலை, **சீவகசிந்தாமணியில்** வீணைபதி யென்னும் பேடியை "ஒண்பொனுருகொடியே" என்றதனாலும் அறிக. "பெண்மைவிட்டாணவாவுவ பேடான்பால், ஆண்மைவிட்டல்ல தவாவுவ பெண்பால், இருமையு மஃறிணையன்னவுமாகும்" என்ற இலக் கணம்பற்றி, இங்கே, பெண்ணவாய் ஆணிழந்த பேடியை 'அணியாள்' என உயர்திணைப் பெண்பாலாற் கூறியது; "மைந்தனிப்பொழுதே வென்று வருகுவன்பொற்றேரூர்ந்தா, னந்தமெய்ப்பேடியாகி லென்றன னந்தணு

ளன்'' என **வில்லிபுத்தூரார்பாரதத்தி**லும், ''எயேயிவளொருத்தி பேடியோ வென்னூர்'' எனச் **சிந்தாமணி**யிலும் பேடியைப் பெண்பாலாற் கூறியது காண்க.

இனி, பெண் அவாய் என்பதற்கு - பெண்தன்மையை விரும்பி என உரைத்தால், அது ஆணிழந்த என்பதனோடுமுடியாது; ஏனெனில்,—ஆண் தன்மை யிழத்தற்குக்காரணம் பெண்தன்மையைவிரும்புதலல்லாமல்ஊழ் வினைப்பயனுன இயற்கையா மாதலால். இனி, பெண் அவாய் என்பதற்கு-பெண்தன்மையை விரும்பியென்று உரைத்து,அணியாளோஎன்பதனோடு இயைத்து ,ஆணிழந்த பேடி பெண்தன்மையைஅவாவிக் கண்ணவாத்தக்க கலம் அணியாளோ? என மொழிமாற்றிப் பொருள்கொள்ளுதலும் ஒன்று.

பெண் ஆண் என்பன-பெண்தன்மைக்கும்,ஆண்தன்மைக்கும்பொருளாகுபெயர். பெள் ஆள் என்னும் வினைப்பகுதிகள் - ஈறுதிரிந்து பெண் ஆண் என நின்று, பலராலும் விரும்பப்படுதல்பற்றி மகளிர்க்கும், அம்மகளிரை ஆளுதல் பற்றி ஆடவர்க்கும் பெயராகு மென்பர். பெண்மை ஆண்மைகளுள் யாதாயினு மொன்று பேடியிடத்து முற்பிறப்பிற்செய்த ஜீவினையால் நிறைவுற்றிராமையாகிற இரங்கற்பாடு தோன்ற, 'பெண்ணவா **ணிழந்த**' என்றார்.

அவாத்தக்க - அவாவத்தக்க; ''சாவவென்மொழி யீற்றுயிர்மெய் சாதலும்விதி'' என்றதன்**உலகழ**த்தால், செயவெனெச்சத்துஈற்றுயிர்மெய் கெட்டது; 'செய்தக்க' 'நோதக்க' என இவ்வாய்பாடுகொண்ட பிறவற்றையும் இங்ஙனமே கொள்க; இனி, அவாத்தக்க - அவாவுதற்குத்தக்க எனவிரித்து, முதனிலைத் தொழிற்பெயரின்மேல் வந்த நான்காம்வேற்றுமைத்தொகை யெனினும் இழுக்காது. கலம்-அணிகலம். நுண்ணுணர்வு-சூட்சுமபுத்தி. வறுமைக்குக் காரணமான நுண்ணுணர்வின்மை காரியமான வறுமையாகவும் செல்வத்துக்குக் காரணமான நுண்ணுணர்வுடைமை காரியமான செல்வமாகவும் **உபசாரவழக்கு**ப்பற்றிக் கூறப்பட்டன. 'கன்னங்கறுத்த, சின்னஞ்சிறிய, பெண்ணம்பெரிய' என்பவைபோல, 'பண்ணப்பணைத்த' என்பதை வளர்த்தற்பொருள் பற்றிவந்த பணையென்பதன் ஒருவகை யுகிக்குச்சிதை வெனக்கொள்க.

''அறிவுடையா செல்லாமுடையா ரறிவிலார், என்னுடையரேனுமிலர்'' என்ற **திருக்குறளோடு** இப்பாட்டின் முதலிரண்டடிகளை ஒப்பிடுக. 'செல்வங்களெல்லாம் அறிவாற் படைக்கவும் காக்கவும் பதிதலின் அஃதுடையாரை 'எல்லாமுடையர்' என்றும், அவையெல்லாம் முன்னே அமைந்து கிடப்பினும் அழியாமற்காத்தற்கும் தெய்வத்தான் அழிந்துழிப் படைத்தற்குங் கருவியுடையரன்மையின்அஃதில்லாதாரை 'என்னுடைய ரேனுமிலர்' என்றுங் கூறினர்' என அங்குப் பரிமேலழகர் உரைத்தது இங்கு இதற்கும் ஒக்கும். தாயத்தார் கள்வர் வலியார் அரசர் என்றிவராற் கொள்ளப் படாமையும் வழிபட்டார்க்குக் கொடுத்தவிடத்துக் குறையாமையுமாகியசிறப்புப்பற்றி, அறிவுடைமையை 'பண்ணப்பணைத்த பெருஞ்செல்வம்' எனப் பல அடைமொழிகள் கொடுத்துக்கூறினர்; திருவள்ளுவர் ''கேடில் விழுச்செல்வங் கல்வியொருவற்கு, மாடல்லமற்றையவை''என்றாற்போல; இப்படிப்பட்ட சிறப்பு பொருட்செல்வத்துக்கு இல்லாமை காண்க.

அஃதுடைமை-இங்கே ஆய்தம் உயிர்போல் ஒலித்தது.; மெய்போல் ஒலித்ததாகக் கொண்டால் வறுமை என்ற முன்னோடு வெண்டளை தவறுதலை அலகிட்டுக்காண்க. (க)

உருஉ. பல்லான்ற கேள்விப் பயனுணர்வார் பாடழிந்
தல்ல லுழப்ப தறிதிரேற்—றொல்சிறப்பி
னவின் கிழத்தி யுறைதலாற் சேராளே
பூவின் கிழத்தி புலந்து.

(இ - ள்.) பல்-பல்வகைப்பட்ட, ஆன்ற-நிறைந்த, கேள்வி- நூற்கேள்விகளால், பயன் உணர்வார்-(உயிர்வாழ்க்கையின்)பிரயோசனங்களை அறியும் அறிவுடையவர்கள்,(செல்வமின்மையால்), பாடு அழிந்து-தம்பெருமை கெட்டு, அல்லல் உழப்பது - துன்பங்களால் வருந்துவதன் காரணத்தை, அறிதிர் எல்-ஆராய்ந்தறிய விரும்புவீராயின், (சொல்வேன் ; அது என்ன வெனில்:—) தொல் சிறப்பின்-பழமையான சிறப்பையுடைய, நாவின் கிழத்தி-சரசுவதிதேவி, உறைதலால்-(அவர்களிடம் கூடி) வசித்தலால், பூவின் கிழத்தி-ஸ்ரீமகாலட்சுமி, புலந்து-கோபங்கொண்டு, சேராளே - (அவர்களிடஞ்) சேரமாட்டாளே (என இதுவேயாம்); (எ - று.)

உலகத்தில் ஒருவனிடம் ஒருபெண்கூடியிருக்கையில் மற்றொரு பெண்வந்து கூடாமற் பிணங்கிப்போவது இயல்பாதலால் அம்மகளிரியற்கைப்படி கல்விமகள் சேர்ந்த விடத்தைச் செல்வமகள் சேராது பிணங்குவள் எனக் கற்பனை முகத்தால் வருணித்துக் கூறியபடி. உலகத்திற்பெரும்பாலும் படித்தவர் செல்வமிலராயிருத்தலும் படியாதவர் செல்வமுடையராயிருத்தலுமாகிய மாறுபாட்டிற்கு உண்மையிற் **காரணம்**, "இருவேறுலகத் தியற்கை திருவேறு, தெள்ளிய ராதலும்வேறு" என்றபடி அவரவர் முற்பிறப்பிற்செய்த **ஊழ்வினை**யேயாம்: இப்படியிருக்க, இங்ஙனம் காரணமல்லாத ஒன்றைக் கவிசாதுரியத்தாற் காரணமாகக்கூறி நிறுத்தினது, **ஏதுத்தற்குறிப்பேற்றவணி**; இதனை வடநூலார் **ஹேதூத்ப்ரேக்ஷாலங்கார** மென்பர். கல்விக்கும் செல்வத்துக்கும் தவசு பண்ணத்தக்க அறிவு வேணுமென்பது, ஒருபழையவுரை: **ஆ**தலால் முன்சன்மத்தில் கல்விக்குத்தவசு பண்ணிச் செல்வத்துக்குத் தவசு பண்ணுதவர் இப்பிறவியில் வறியவராய்வருந்துகிறார்களெனக் கருத்துக் காண்பாருமுளர்.

இவ்விருமகளிரும் ஒருவனிடம் சேர்ந்திருத்தல் அரியதொரு சிறப்பாதலை"நாவீற்றிருந்த புலமாமகளோடு நன்பொற், பூவீற்றிருந்தசிருமாமகள் புல்லநாளும்" என்ச் **சீவகசிந்தாமணி**யிற் கூறியமைகொண்டும் உணர்க. புலத்தல், பிணங்குதல், ஊடுதல் என்பன-ஒருபொருட்சொற்கள்; அதாவது-யாதாயினும் ஒரு காரணம்பற்றித் தலைமகள் தலைமகனைக் கூடாமல் மாறுபடுதல். ஒருவனிடத்தில் ஒருமகள் இருப்பதாக அறிந்தமாத்திரத்தில் மற்றொருமகள், அவனிடம் சேர்தற்குப் பிரியப்படாமல் வெறுப்பது இயல்பாதலை " கண்ணுளார் நுங்காதலர் ஒழிகாமமீங்கென, உண்ணிலாய வேட்கையா லூடினர் " என்ற **சிந்தாமணி**கொண்டும் உணர்க.

இனி, இதனை, வேறுவகையாக வருணித்துக்கூறுவதும் உண்டு; எங்ஙனமெனின்,—மாமிக்கும் மருமகளுக்கும் ஒற்றுமையில்லாமை பெரும்

பாலும் உலகவிழற்கையாதலால் அதுபற்றி, மருமகளான கலைமகள் உள்ள விடத்து மாமியான திருமகள் சேராது வெறுப்பள் என்பதாம்: திருமாலின் மனைவி திருமகளும், அத்திருமாலிடம் தோன்றிய பிரமதேவனது மனைவி சரசுவதியு மாதலால், இவர்கள் மாமிமருகிய ராவர்.

'அறிவைப் பெருமைப்படுத்திக் கூறுகிறீரே, அறிவுடையார் பலர் உலகத்திற் செல்வமின்றி வருந்துகிறார்களே' என ஒருவர் வினவினதாகப் பாவித்து உத்தரங்கூறினதாக இச்செய்யுள் செய்யப்பட்டது; இது-இச் செய்யுளில் 'அறிதிரேல்' என்ற சொல்லால் விளங்கும். 'அறிதிரே'என்ற பாடத்துக்கு - அறிவீரன்றே எனப் பொருள் கூறுக.

இப்பாட்டில் "நுண்ணுணர்வின்மைவறுமை யஃதுடைமை, பண்ணப் பணைத்த பெருஞ்செல்வம்" என்றதன்மேல்வந்த ஆட்சேபத்துக்குச் சாமாதானங் கூறியதாதலால், இப்பாட்டு இவ்வதிகாரத்து இங்குவைக்கப் பட்டது. இனி, இருவர்மகளிர் ஒற்றுமைப்பட்டு ஒருங்குசேராமையாகிய உண்மையியல்பை உணராது அறிவுடையார் சிலர் வறியராயிருத்தலையே நோக்கி அறிவுடைமையிற் குறைகூறுதல் அறிவின்மையாம் என இவ்வதிகாரத்தோடு சம்பந்த மூரைத்தலு மொன்று.

இப்பாட்டைக் கீழ்'பழமை'என்னும் அதிகாரத்தில் வந்த"பல்லான்ற கேள்விப் பயனுணர்வார் வீயவும், கல்லாதார் வாழ்வதறிதிரேற்—கல்லாதார், சேதனமென்னு மச்சே றகத்தின்மையாற், கோதென்று கொள்ளாதாங்கூற்று" என்ற பாட்டோடு ஒத்த வாய்பாடுடையதாக அறிக.

பயன்-அறம் பொருள் இன்பம் வீடெனும் புகழும் முதலியன. உணர்வார், உழப்பது என்பவற்றில், இடைநிலைகள்-எதிர்கால முணர்த்தாது தன்மைமாத்திரமுணர்த்தின. "கல்லானேயானுலுங் கைப்பொருளொன்றுண்டாயி, னெல்லாருஞ் சென்றங்கெதிர்கொள்வ-ரில்லானே, யில்லாளுந்தான் வேண்டா ளீன்றெடுத்ததாய் வேண்டாள், செல்லாதவன்வாயிற் சொல்," "இல்லாரையெல்லாருமெள்ளுவர்" என்றபடி பொருளில்லாரையாவரும் இகழ்வராதலால் 'பாடழிந்து' என்றும், "பொருளுடையான் கண்ணதே போகம்", "பொருளிலார்க் கிவ்வுலகமில்" என்றபடி செல்வமில்லாதவர்க்கு இவ்வுலகத்து இன்பமொன்றும் இன்றே மாதலால் 'அல்லலுழப்பது' என்றுங் கூறப்பட்டது.

நாமகளுக்குத் தொல்சிறப்பு-"அறம்பொருளின்பமும் வீடும் பயக்கும், புறங்கடை நல்லிசையுநாட்டும்-உறுங்கவலொன், றுற்றுழியுங் கைகொடுக்குங் கல்வியினூங்கில்லை, சிற்றுயிர்க்குற்ற துணை' எனக் கூறப்படுவதாம். இனி, அவளுக்குத் தொன்றுதொட்டு வருகிற சிறப்பு முற்பிறப்பிற்செய்த நல்வினைத்தொடர்ச்சியாற் பிற்பிறப்பிலே இயற்கையில் அமைதலென்றுங் கொள்ளலாம். கல்வி உயிர்க்குணமாய் முற்பிறப்பேதொடங்கி உயிரோடு விடாதுதொடர்ந்து அவ்வுயிர் புகுந்தவிடத்துப் புகுந்தன்மை, "ஒருமைக்கண் தான் கற்ற கல்வியொருவற்கு, எழுமையு மேமாப்புடைத்து" என்ற திருக்குறளால் அறியப்படும். இப்படிப்பட்ட தொல்சிறப்புச்செல்வத்துக்கு இல்லையாம். நாவின்கிழத்தி-நாக்கிற்குரியவள் எனச் சரசுவதிக்குக்

காரணப்பெயர்; பிரமனது நாவில் வாழ்தலாலும், அறிவுடையோர்நாவில் தங்குதலாலும் வந்தது. பூவின் கிழத்தி-பூவிற்குஉரியவள். "பூவெனப்படுவது பொறிவாழ்பூவே", "பூவிற்குத்தாமரையே", "பூவினுக்கருங்கலம் பொங்குதாமரை" என எல்லாமலர்களுள்ளுஞ் சிறந்ததாகக் கூறப்படுகிற செந்தாமரைமலரில் வசித்தலால், பூமகளென்றுபெயர். இமயமலையில் மரகதப்பாறையில் பதுமையென்னுங் கயத்தில்தோன்றிய பொற்றாமரைமலரில் திருமகள் வீற்றிருக்கின்றனளென்பது, ஐஞ நூற்கொள்கை; "அருமணிமரகதத்தங்கணறிய, எரிநிறப்பொன்னிதழ்ந்து தாமரைத், திருமகள்" என்றார் **சிந்தாமணி**யாரும். நாவின்கிழத்தி-கல்விக்கு அதிதேவதை; பூவின் கிழத்தி-செல்வத்திற்கு அதிதேவதை; இச்சொற்கள் - தகுதிப் பொருளில் வந்த நான்காம்வேற்றுமைத் தொகைநிலைத் தொடர்கள்; இவற்றில், இன் சாரியை. கிழத்தி-உரிமையென்னும் பொருளுணர்த்தும் கிழமையென்னும் பண்பினடியாப் பிறந்த கிழவன் என்பதன் பெண்பால்: (கிழம் என்னும் பெயரடியாப்பிறந்தகிழவன் என்பதன் பெண்பால், கிழவியென நிற்கும்.) (உ)

உருசு. கல்லென்று தந்தை கழற வதனையோர்
சொல்லென்று கொள்ளா திகழ்ந்தவன்—மெல்ல
வெழுத்தோலை பல்லார்முன் னீட்ட வினியா
வழுக்கோலைக் கொண்டு விடும்.

இ - ள்.) தந்தை-(தனது) பிதா, கல் என்று கழற-(கல்வியைக்) கற்பாயென்று இடித்துஅறிவுகூற, அதனை-அச்சொல்லை, ஓர் சொல் என்று கொள்ளாது-(தனக்கு உறுதியைத்தருவது) ஒரு வார்த்தையென்று கொண்டு அங்ஙனம்படியாமல், இகழ்ந்தவன்- (இளமையிலே) அலட்சியஞ் செய்து விட்டவன்,—(பின்பு), பல்லார் முன்-பலபேர்கூடிய சபையில், எழுத்து ஓலை-எழுத்து எழுதப்பட்டுள்ள ஓலையை, மெல்ல-மெதுவாக, நீட்ட-(நீ இதனைப் படியென்று ஒருவர் கொண்டுவந்து) கைநீட்டி (த் தன்னிடம்) கொடுக்க, வினியா-(அதற்குக்) கோபங்கொண்டு, வழு கோலை கொண்டுவிடும் - (அடித்தலாகிய) பிழையைச் செய்யும் தடிக்கொம்பை (அவரை அடித்தற்கு) எடுத்துக்கொண்டிடுவான்; (எ - று.)

இப்பாட்டு-அறிவின்மையின் இழிவை விளக்கும். படியாதவனேயாவராயினும் அவனுடைய அறிவின்மையை அறிந்தாவது அறியாமலாவது யாதாயினுமொரு பத்திரிகையைக்கொடுத்து இதனைப்படியென்று சொன்னால், அவன் தான் படிக்கமாட்டாமையால், பலர்முன் அவமானப்படுவதற்கு மனம்பொறாமல், அவ்வவமானம் தனக்குவருவதற்குக் காரணமாகிற அவரை அடித்தற்குப் பெருங்கோபத்தோடு தடியெடுத்துக் கொள்வான் என்பதாம். தந்தைசொல்லைக்கேட்டு அதன்படி கற்று அறிதலையுடையனாதவன் தனது குற்றத்தைத் தான்கருதி அமைந்திராது பிறர் மேற் குற்றத்தையேற்றிக் கோபித்தல் பெரிய அறிவின்மை யென்றபடி. வழு - (தன்) குற்றத்தை (ப் பலரும்) உணர எனினுமாம்.

கல்-வினைப்பகுதியே ஒசை வேறுபாட்டால் ஏவற்பொருளுணர்த்தி ற்று. கழறல் - உறுதிச்சொல்லை உறுத்திச்சொல்லுதல்; கழறு - பகுதி. ஐங்குரவருள் முதல்வனுனை தந்தையினது சொல் "தந்தைசொல்மிக்கமந்திர மில்லை" என்றபடி தலைமேற்கொண்டு நன்குமதிக்கத்தக்க தாதலின், அச்சிறப்புத்தோன்ற, அதனை 'ஓர்சொல்' என்றது. கொள்ளாது இகழ்ந்த வன்-மூத்தோர்சொல்லும் வார்த்தையை அமுதமாகக்கொள்ளாமல் உருத் தவன். இகழ்ந்தவன் என்ற இறந்தகாலம், கற்றற்கு உரிய இளம்பிரா யத்தில் என்பதைப் புலப்படுத்தும். இகழ்ந்தவன் கொண்டுவிடும் - செய்யுமென் முற்று ஆண்பாலுக்குச் சென்றது: இதில், விடு என்னுந் துணைவினை - தேற்றமுணர்த்தும். எழுத்தோலை-எழுத்தையுடைய ஓலை என இரண்டனுருபும் பொருளுந் தொக்கதொகையாக விரிக்க. கைநீட்டு தல் என்ற காரணம், கொடுத்தலாகிய காரியத்தின்மேல் நின்றது; **உபசார வழக்கு.**

வினியா-உடன்பாட்டு இறந்தகால வினையெச்சம்; இனி, வினியா - இறந்தாற்போலாகி, வழுக்கு ஓலை-(அங்கிருந்து) தப்பிப்போதற்குக்காரண மான ஒலியை, கொண்டுவிடும்-கொள்வான் என்றும் உரைப்பர்; இவ் வுரைக்கு-மானபங்கப்பட்டுச் சொல்தழுதழுத்து இடம்விட்டுநீங்க வழி தேடுவ னென்று கருத்து. வழுக்கு ஒல்-காரியப்பொருளதான வினைத் தொகை: ஓலை-ஒல் என்பதன் இரண்டாம்வேற்றுமை விரி. இனி, இனியா என்று பதம் பிரித்து, அவமதிச்சிரிப்புச்சிரித்து எனப் பொருள்கொள்ளு தல் மோனைத்தொடைக்குப் பொருந்துமென்க. (சு)

உரை. கல்லாது நீண்ட வொருவ னுலகத்து
நல்லறி வாள ரிடைப்புக்கு—மெல்ல
விருப்பினு நாயிருந் தற்றே யிரா அ
துரைப்பினு நாய்குரைத் தற்று.

(இ - ள்.) கல்லாது - கல்விகற்காமல், நீண்ட-வளர்ந்த, ஒருவன்—, உலகத்து-லோகத்தில், நல் அறிவாளரிடை புக்கு-நல்ல விவேகமுடைய வர்கள் நடுவிலே புகுந்து, மெல்ல இருப்பினும் - பேசாமலிருந்தாலும், (அந்த இருப்பு), நாய் இருந்து அற்றே-நாய் இருந்தாற்போன்றதாம்; இரா து-பேசாதிராமல், உரைப்பினும்-(யாதாயினும் ஒன்றை) எடுத்துச்சொன் னலும், (அது), நாய் குரைத்தலற்று - அந்த நாய் (வாய்மூடியிராமல்) குரைத்தாற்போலும்; (எ - று.)

பரிசுத்தமான இடத்தில் அசுத்தமானநாய் வந்துசேர்ந்தால் அம்மாத் திரத்தால் அவ்விடம் அசுத்தப்படுவதுபோல, நல்லறிவாளர்கூட்டத்தில் அறிவிலான்சென்றால் அம்மாத்திரத்தால் அக்கோஷ்டி மாசடையும்; அதன் மேலும் இவன் வாய்திறந்து ஏதாவது பிழைபடக் குளறினால், அது நாய் குரைத்தல்போல வெறுக்கப்படும் என்றபடி.

பயன்பற்றி வந்த **உவமையணி**. *நாயுவமை கூறியது, இழிவை நன்கு விளக்குதற்கு.*

உலகம்-லோகமென்னும் வடமொழியின் திரிபு ; இதனைத் தமிழ்ச் சொல்லென்று சாதிப்பர் நச்சினார்க்கினியர். நல்லறிவு-அறியவேண்டுவனவெல்லாம் அறியும் அறிவு. மெல்ல இருத்தல்-சாதுவாக இருத்தல் ; சும்மா இருப்பது. உம்மைகள்-முறையே எதிரதும் இறந்ததுந் தழுவிய எச்சப்பொருளன. இரா அது-உயிரளபெடை, செய்யுளோசை நிறைக்க வந்தது ; அலகிட்டுக்காண்க. அற்றே, எ-ஈற்றசை. இருப்பின், உரைப்பின் என்றவினையெச்சங்களினின்று எடுக்கப்படுகிற இருத்தல், உரைத்தல் என்னுந் தொழிற்பெயர்கள்-இருந்தற்று, குரைத்தற்று என்னும் வினை முற்றுக்களுக்கு எழுவாயாம். (சு)

உருடு. புல்லாப்புன் கோட்டிப் புலவ ரிடைப்புக்குக்
கல்லாத சொல்லுங் கடையெல்லாங் கற்ற
கடாஅயினுஞ் சான்றவர் சொல்லார் பொருண்மேற்
படாஅ விடுபாக் கறிந்து.

(இ - ள்.) கடை எல்லாம்-கீழ்மக்களெல்லோரும்,—புல்லா-(இலக்கணத்தோடு) பொருந்தாத, புல்-இழிவான, கோட்டி-சபையிற் கூடியுள்ள, புலவரிடை-அற்பபுத்திமான்கள் நடுவில், புக்கு-அஞ்சாதுசென்று, கல்லாத-(தாம்) கற்றறியாதவிஷயங்களேயும், சொல்லும்-(தைரியமாய்க்) கூறுவர்; சான்றவர்-(கல்வி கேள்விகளினால்) நிறைந்தவர்கள்,—கற்ற - (தாம்) படித்தறிந்த விஷயங்களேயும், கடாயினும் - (சொல்லும்படி பிறர்) கேட்டாலும், பொருள்மேல் படா விடுபாக்கு அறிந்து-(அங்ஙனம் விளைவுகிற அவர்களதுஅறிவு தாம் சொல்லும் அரிய) பொருளின்மேல் முழுவதுஞ் செல்லாமல் நீங்கிப்போகும் விதத்தை அறிந்து, சொல்லார்-சொல்லமாட்டார்கள் ; (எ - று.)

அறிவுடையார்க்கும் அறிவிலார்க்குமுள்ள வேறுபாட்டை விளக்கிய படி. அறிவிலார்க்கு அடக்கமும் அவையச்சமும் இல்லையாதலாலும், தாம் எதாயினும் ஒன்றைப் பலர்முன்சொல்லிப் பெருமையடையவேண்டுமென்ற அவா அதிகமாதலாலும், அவர் இங்ஙனங்கூறுவர் ; நல்லறிவுடையார்க்கோ அவையச்சமில்லையாயினும், "கொள்வோன் கொள்வகை யறிந்து அவனுளங்கொளக், கோட்டமில்மனத்தில் நூல்கொடுத்தல்" இலக்கணமாதலால், விளைவப்பட்ட பொருள்களுக்குள்ளும் எற்ற சிலவற்றை முறையாகக் கூறுவரே யன்றி ஒருங்கு கூறார்.

"புல்லாவெழுத்திற் பொருளில்வறுங்கோட்டி" என்றாற்போல, 'புல்லாப்புன்கோட்டி' என்றார்; அதாவது-"புகழுந் தருமநெறிநின்றோர் பொய்காமம், இகழுஞ்சினஞ்செற்றமில்லோர்—நிகழ்கலைகள், எல்லாமுணர்ந்தோரிருந்தவிடமன்றே, நல்லாரவைக்கு நலம்," "நலனடக்குஞ் செம்மை நடுவுநிலை நான்கும், குலனென் றிவையுடையோர் கோதில்—புலனில்லோர், சென்று மொழிந்தனவுங் கேட்டோர் செறிந்தவிடம், அன்றே நிறைந்த வவை" என நல்லவைக்கும் நிறையவைக்குங் கூறப்பட்ட இலக்கணஞ் சிறிதுமில்லாத சபை.

புலவர்-அறிவுடையவர்; புலம் அல்லது புலமை-அறிவு. 'புல்லாப்புன் கோட்டிப் புலவர்' எனவே, சிற்றறிவினராயிற்று: இனி, புலவர் என்பது-இகழ்ச்சிக்குறிப்பென்றுங் கொள்ளலாம். கடை-கடைப்பட்டவர்க்குப் பண்பாகுபெயர்; அதமரென்க. கடையென்பது-பொருளால் உயர் திணைப் பலர்பாலாயினும், சொல்லால் பால்பகாஅஃறிணைப்பெய ராதலால், சொல்லும் என்னும் செய்யுமென்முற்றைக் கொண்டது. எல்லாம் என்னும் பெயர், இருதிணைக்கும் பொது. கடாஅயின்-செய்யுளோசை குன்றுதலிடத்து அளபெடை இன்னிசை நிறைத்தற்கு வந்தது. படாஅ-செய்யுளோசை நிறைக்கவந்த அளபெடை; அலகிட்டுக்காண்க. இரண்டடிகளில் அளபெடை வந்தது, **அளபுத்தொடை**. உம்மை-உயர்வுசிறப்பு. பொருள்மேல், மேல்-ஏழனுருபு; இனி, மேலென்பது-பொருளினுட் செல்லுதலேயன்றி மேற்செல்லுதலும் அரிதென்பதை விளக்குவதெனவுங் கொள்ளலாம். கல்லாத, கற்ற-பலவின்பால் வினையாலணையும் பெயர்கள். விடுபோக்கு-தொழிற் பெயர். (கூ)

உருசு. கற்றறிந்த நாவினர் சொல்லார்தஞ் சோர்வஞ்சி
மற்றைய ராவார் பகர்வர் பனையின்மேல்
வற்றிய வோலை கலகலக்கு மெஞ்ஞான்றும்
பச்சோலைக் கில்லை யொலி.

(இ-ள்.) கற்று-(படித்தற்கு உரிய நூல்களைப்) படித்து, அறிந்த-(அவற்றின்பொருள்களை உள்ளபடி) உணர்ந்த, நாவினர்-நாக்கையுடைய பெரியோர்கள், தம் சோர்வு அஞ்சி-(சொல்லும் சொற்களில்) தமக்கு ஏதாவது பிழை நேரிடுமோவென்று பயந்து, சொல்லார்-(விஷயங்களைக் கண்டபடி மிகுதியாகச்) சொல்லமாட்டார்கள்; மற்றையராவார்-கற்றறிந்த நாவினரல்லாத சிறியோர், பகர்வர்-(அப்படிப்பட்ட சோர்வுக்கு அஞ்சாமல் விஷயங்களை ஆராயாது தோன்றினபடி மிகுதியாகச்) சொல்வார்கள்; (அவை எவைபோலவெனின்:—) எஞ்ஞான்றும்-எப்பொழுதும், பனையின்மேல்-பனைமரத்தின்மேல், வற்றிய ஓலை-உலர்ந்துள்ள ஓலைகள், கலகலக்கும்-கலகலவென்று ஒலிக்கும்; பச ஓலைக்கு-பசுமையாகவுள்ள ஓலைகளுக்கு, ஒலி இல்லை-ஓசை யில்லையாம்; (எ-று.)

ஈரமில்லாத உலர்ந்த ஓலைகள் மிகவொலித்தல்போல, சாரமான அறிவு இல்லாதவர் மிகப்பேசுவர்; ஈரமுள்ள பச்சையோலைகள் ஒலியாதவாறுபோல, சாரமானவிவேகமுள்ளவர் மிகுதியாகப்பேசாமல் நாவடங்கி மௌனமாக இருப்பர் என்றபடி. இப்பாட்டின் கருத்தை "சிற்றுணர்வோ ரென்றுஞ்சிலுசிலுப்பர் நன்றமைந்த, முற்றுணர்வோ ரொன்று மொழியாரே—வெற்றிபெறு, வெண்கலத்திலுள்ளதை மிகுமே விரிபசும்பொன், ஒண்கலத்தினுண்டோ ஒலி" என்ற **நீதிவெண்பாவின்** பொருளோடு ஒப்பிடுக. **எடுத்துக்காட்டுவமையணி**. இதில்'கற்றறிந்தநாவினர் சொல்லார் தம் சோர்வஞ்சி'என்பதற்கு-'எஞ்ஞான்றும் பச்சோலைக்கில்லையொலி'என்பது-உபமானம்: 'மற்றையராவார் பகர்வர்' என்பதற்கு-'பனையின்மேல் வற்றியவோலை கலகலக்கும்' என்பது-உபமானம்: ஆகவே, இப்பாட்டில் **உபமேயவாக்கியங்களை** வைத்த முறைமைக்கு ஏற்ப உபமானவாக்கியங்களை நிறுத்தாமல் மாறுபட நிறுத்தியது-**எதிர்நிரனிறைப்பொருள்கோள்**.

"ஆக்கமுங் கேடு மதனல் வருதலாற், காத்தோம்பல் சொல்லின்கட் சோர்வு", "யாகாவாராயினு நாகாக்க காவாக்கால், சோகாப்பர் சொல்லி ழுக்குப்பட்டு", "ஒன்ரூனுந் தீச்சொற்பொருட்பயனுண்டாயின், நன்ரூகா தாகிவிடும்" என்ற நீதிகளே உள்ளபடி உணர்ந்தவராதலால், கற்றறிந்தவர் தம் சோர்வஞ்சுவர்; கல்லாதவர் இப்படிப்பட்ட நீதிகளே அறியாராதலா லும், மானம் வெட்கம் பயம் இவற்றை ஒழித்தவராதலாலுஞ்சோர்வஞ்சார்.

மற்றையர் - கீழ்க்குறித்ததற்கு எதிரான பொருள் தருகின்ற மற்றை யென்னும் இடைச்சொற்பகுதியடியாப் பிறந்த பலர்பாற்பெயர். கலகலக் கும் - ஈரடுக்கொலிக் குறிப்பு; **இரட்டைக்கிளவி.** (சு)

உருள. பன்றிக்கூழ்ப் பத்தரிற் றேமா வடித்தற்ரு
னன்றறியா மாந்தர்க் கறத்தா றுரைக்குங்காற்
குன்றின்மேற் கொட்டுந் தறிபோற் றலைதகர்ந்து
சென்றிசையா வாருஞ் செவிக்கு.

(இ - ள்.) நன்று-நன்மையை, அறியா-அறியமாட்டாத, மாந்தர்க்கு - மனிதர்க்கு, அறத்து ஆறு - தருமத்தினதுவழியை, உரைக்குங்கால் - சொல்லு மளவில், (அது),—பன்றி கூழ் பத்தரில்-பன்றிக்குக் கூழ்வார்க் கின்ற தொட்டியில், தேமா வடித்தற்று - தேன்மாம்பழத்தி னிரசத்தைப் பிழிந்தாற்போலும்; (அன்றியும்), குன்றின்மேல் கொட்டும் தறிபோல்-மலைப்பாறைமேல் அடிக்கப்படுகிற கட்டுத்தறிபோல, தலைதகர்ந்து-(அந்த த்தருமவழிகள்) தலைசிதறி, செவிக்கு-(அவர்கள்) காதுகளினுள், சென் ரு இசையா ஆகும் - போய்ப் பொருந்தாதனவாம்; (எ - று.)

பன்றிக்குக் கூழின்உருசி தெரியுமேயல்லது தேமாவின் சுவை தெரி யாது: அதுபோலவே, கீழ்மக்களுக்கு அதருமவழியின் தன்மை தெரியுமே யல்லது தருமவழியின் பெருமை தெரியாது; ஆதலால், அவர்கட்குச்செய் யுந் தருமோபதேசம், மலைக்கற்பாறையின்மேல் நாட்டும்பொருட்டு வலி மையோடு அடிக்கப்படுகின்ற மரத்தறி அக்கல்லினுட் செல்ல இயலாமல் தான் முறிதல் போல, அவர்கள் காதினுட் செல்லமாட்டாமல் தடைப் பட்டு ஒழியும் என்றபடி. **உவமையணி.**

பத்தர்-பத்தல்என்பதன் இறுதி லகரத்துக்கு ரகரம்போலி; சாம்பல்-சாம்பர், பந்தல்-பந்தர் என்பனபோல. தேமா - இன்சுவைப் பழமுடைய ஒருவகை மாமரம்; இங்கே, அதன் பழத்தின் இரசத்திற்கு - **இருமடியாகு பெயர்.** தேமா - தேன் மா எனப்பிரித்து, தேன்போ லினிய மா என உவ மத் தொகையாகப்பொருள்கொள்க; தேன்மொழி, மெலிவர இறுதியழிந் தது. ஆல்-ஈற்றசை. **மாந்தர்**-ஒருமையில்லாமல் எப்பொழுதும் **பன்மையி லேயேவரும் பெயர்**; இதனை வடநூலார் நித்யபகுவசந மென்பர். உபமே யத்தில், தலையென்பது - ஒருபொருளேயுந் தாராது வந்த **உபசர்க்கமாகக் கொள்ளலாம்**; அல்லது, தலைதகர்ந்து - சிறப்புக்கெட்டு எனினும் அமை

யும். செவிக்கு-செவியில்; நான்கனுருபு ஏழாம் வேற்றுமை யிடப் பொருளில் வந்ததனால், **உருபுமயக்கம்.**

அறிவிலாதார் யாதாயினும் ஒருநன்மையைச்சொல்லப்படுதற்குந்தகாதவரென்பது, இப்பாட்டினாற் கூறப்பட்டது. முதலடியில்வந்த உபமானம், தகுதியில்லாதவிடத்துச் சென்றுசேர்தலாற் பயனற்றதாம்என்பதை விளக்கவந்தது. இதனை "அங்கணத்துளுக்க வமிழ்தற்றால் தங்கணத்த, ரல்லார் முற் கோட்டிகொளல்" என்ற **திருக்குறளோடு** ஒப்பிடுக. (எ)

உரிஅ. பாலாற் கழீஇப் பலநா ளுணக்கினும்
வாலிதாம் பக்க மிருந்தைக் கிருந்தன்று
கோலாற்கடாஅய்க் குறினும் புகலொல்லா
நோலா வுடம்பிற் கறிவு.

(இ - ள்.) பல நாள்-அநேக நாட்களில், பாலால் கழீஇ - (வெண்மையான) பாலினாலே கழுவி, உணக்கினும் - உலர்த்திவைத்தாலும், இருந்தைக்கு - (இயற்கையிற் கருநிறமுடைய) காரிக்கு, வாலிது ஆம் பக்கம் - வெண்ணிறத்தையுடையதான தொரு பகுதி, இருந்தன்று-உண்டாகமாட்டாது; (அதுபோலவே), கோலால் கடாஅய்-தடியைக்கொண்டு அடித்து அதட்டி, குறினும் - சொன்னாலும், நோலா உடம்பிற்கு-(முற்பிறப்பிற்) புண்ணியஞ் செய்திராத (உயிரையுடைய) உடம்புக்கு [நல்ல ஊழ் இன்மையால் இயற்கையில் அறிவில்லாத மனிதனுக்கு என்றபடி], அறிவு-ஞானம், புகல் ஒல்லா - வந்துசேராமாட்டாது ; (எ - று.)

காரியைப் பாலாற்கழுவினாலும் வெண்மையுண்டாகாததுபோல, ஐந்மாந்தர புண்ணியமில்லாத மனிதனுக்கு எவ்வளவு சொன்னாலும் அறிவு வருவதில்லை யென்றபடி. **எடுத்துக்காட்டுவமையணி** ; முன்னிரண்டடி-உபமானவாக்கியம் : பின்னிரண்டடி - உபமேயவாக்கியம். "இருந்தையிலங்க வெளிறுபடாதென்செய்தாலு நிம்பத்து, இருந் தையிலந்தித்தியாது" என்பர், **திருவரங்கத்தந்தாதியிலும்.**

உணக்கின் என்னும் எதிர்காலவினையெச்சத்தில், உணங்குஎன்பதன் பிறவினையான உணக்கு-பகுதி. உம்மைகள் இரண்டும்-உயர்வுசிறப்பு. வாலிது-வால் என்னும் பெயரினடியாப்பிறந்த ஒன்றன்பாற்குறிப்பு வினையாலணையும்பெயர் ; இ-சாரியை. பக்கம் - பக்ஷமென்னும் வடமொழியின் திரிபு. இருந்தன்று - எதிர்மறை யிறந்தகால ஒன்றன்பால் வினைமுற்று. குறின்-கூறின் என்பதன் **குறுக்கல்.** ஒல்லா-ஒல்லாது எனபதன் விகாரம்: எதிர்மறை ஒன்றன்பால் வினைமுற்று.

அறிவு பெரிதவனது இகழ்ச்சி தோன்ற,'உடம்பிற்கு'எனஅஃறிணையாக் கூறினார் : இழிபுபற்றிவந்த **தன்மைவழுவமைதி** ; உயர்திணைப்பொருளினுடைய உடம்பையும் உயிரையும் வேறுபிரித்து எடுத்துக்கூறினால்

அவை அஃறிணையாம்; "எவவுஞ்செய்கலான் தான்தேரு னவ்வுயிர், போஒமளவு மோர்நோய்"என இகழ்ச்சிதோன்ற உயிர்மாத்திரத்தாற் கூறியதுங் காண்க. இவனிடத்துச்சேதனமான (உணருந்தன்மையதான) உயிர்இருந்தும் அதன்தன்மை தலையெடாமல் அசேதனமான [உணருந் தன்மையதல்லாத] உடம்பின்தன்மையே முழுவதும் தலையெடுத்து நின் றமை தோன்ற, 'உடம்பிற்கு' எனக் கூறினரென்க. முற்பிறப்பில் நல் வினை செய்திருந்தாலொழிய இப்பிறப்பில் நல்லறிவு தலைப்படாதாதலால் 'நோலாஉடம்பிற்கு அறிவு புகலொல்லா' எனப்பட்டது.

"ஸ்வபாவோயாத்ருஶீ யஸ்ய, நஜஹாதிகதாசந-அங்காரஸ்ஸுத தெள தேநமலிநத்வம்நமுஞ்சதி" என்னும் வட நூல்மேற்கோள் அறியத்தக்கது.

உருகூ. பொழிந்தினிது நாறினும் பூமிசைதீல் செல்லா
திழிந்தவை காமுறூஉ மீப்போ—லிழிந்தவை
தாங்கலந்த நெஞ்சினர்க் கென்னுருங் தக்கார்வாய்த்
தேன்கலந்த தேற்றச்சொற் றேர்வு.

(இ - ள்.) பொழிந்து-(தேனைச்) சொரிந்து, இனிது-இனியதாக; நாறினும்-நல்மணம்வீசினாலும், பூ மிசைதல் செல்லாது-பூவிலுள்ளதேனை உண்ணுதற்குப்போகாமல், இழிந்தவை காமுறூஉம்- (தூர்க்கந்தமுள்ள) இழிவான பொருள்களை விரும்புகிற, ஈபோல்-ஈயைப்போல,—இழிந்த வை தாம் கலந்த-(உயர்ந்தவைகள்இருக்கவும்அவற்றைவிட்டு) இழிவான வற்றைப்பொருந்திய, நெஞ்சினர்க்கு-மனத்தையுடைய அவிவேகிகளுக்கு, —தக்கார்வாய் - (அறிவு ஒழுக்கங்களினால்) தகுதியையுடையவர்களது வாயிலுண்டாகிற, தேன்கலந்த-தேனின் தன்மைபொருந்தின, தேற்றம் சொல்-தெளிவையுண்டாக்கும் உபதேசமொழிகளினுடைய, தேர்வு-தெ ளிவு, என் ஆகும்-யாதுபயன்படும் ? [ஒருபயனையுந் தாராதென்றபடி;] (எ -று.)—பயன்பற்றிவந்த **உவமையணி.**

தாமாகவும் அறியாமல் பிறர் சொன்னாலும் உணராத பேதைகளுக்கு அஃறிணைப்பொருள்களில் இழிவை யுடைத்தான ஈயை உவமை எடுத் துக்கூறி அவர்கள் சிறுமையை விளக்கினர்.

இனிது-இனிமையென்னும் பண்பினடியாப்பிறந்த ஒன்றன்பாற்குறி ப்பு வினையாலணையும்பெயர்; இங்கே வினையெச்சப்பொருள்பட்டு, 'நாறின்' என்பதனை யடுத்து, வினையுரியாய்நின்றது; உம்-உயர்வுசிறப்பு. பூ-அதி லுள்ள தேனுக்கு **இடவாகுபெயர்.** காமுறு-காமமுறு என்பதன்விகாரம்; ஏமுறு, ஐயுறு, பேதுறு என்பனபோல: காமம்-விருப்பத்தை, உறுதல்-அடைதலென்க. தக்கார்-யோக்கியர். தேன்-தேனின்தன்மைக்கு **முதலாகு பெயர்.** இனி, கலந்த என்பதை உவமவுருபாக்கொண்டு, தேன்கலந்த-தேனையொத்த என்றுமாம். தேன்கலந்த தேற்றச்சொல்-தேன் நாவுக்கு இனிமை தருதல்போலச் செவிக்கு இனிமையைத்தந்து நன்மையையளிக் கும் வார்த்தையென்க. 'தேங்கலந்த' என்று பாடமோதி, தேம் கல ந்த எனப் பிரித்து, இனிமை பொருந்தின என வுரைத்தலு மொன்று. (கூ)

உசுo. கற்ரு ருரைக்குங் கசடறு நுண்கேள்வி
பற்ரு தது தன்னெஞ் சுதைத்தலான்—மற்றுமோர்
தன்போ லொருவன் முகநோக்கித் தானுமோர்
புன்கோட்டி கொள்ளுமாங் கீழ்.

(இ - ள்.) கற்ரூர்-(நூல்களைக்) கற்றறிந்தவர்கள், உரைக்கும்-சொல்லுகின்ற, கசடு அறு நுண் கேள்வி-குற்றமற்ற நுட்பமான நூற்கேள்விகளை, பற்ரு து-உறுதியாக உட்கொள்ளாமல், தன் நெஞ்சு-தனது மனம், உதைத்தலால்-இகழ்ந்து தள்ளிவிடுதலினால்,—கீழ்-கீழ்மகன்,—தன்போல் மற்றும் ஒருவன் முகம் நோக்கி-தன்னைப்போன்ற வேறு மொரு கீழ்மகனது முகத்தைப்பார்த்து, தானும் ஓர்புல் கோட்டி கொள்ளும்-(அறிவில்லாத) தானும் ஓர் இழிவான பிரசங்கத்தைச் செய்வான் ; (எ - று.)

கசடு-குற்றம் ; கேள்விக்குக் குற்றம்-ஐயந்திரிபுகள் : "கற்க கசடறக் கற்பவை" என்றதிற்போலக்காண்க. கேட்கப்படுகின்றபொருள்களின் நுட்பத்தைக் கேள்வியின்மேல் ஏற்றி, 'நுண்கேள்வி' என்ரூர்; "நுணங்கியகேள்வியர்" எனத் திருக்குறளிலும் காண்க. "நிரம்பிய, நூலின்றிக் கோட்டி கொளல்", "அல்லார்முற்கோட்டிகொளல்" எனத் திருக்குறளிலும், 'புல்லா வெழுத்திற்பொருளில் வறுங்கோட்டி" என இந்நூலிலும்போல, கோட்டி யென்பது-அங்குச் சொல்லும்சொல்லுக்கு இடவாகு பெயராம். தானும் என்ற உம்மை, இழிவுசிறப்பு; அறிவுடையான் பிரசங்கஞ்செய்தல்போல என்ரூவது அறிந்தவர்சொல்லும் நூற்கேள்விகளை இகழ்ந்தது மாத்திரமேயன்றிஎன்ரூவது இறந்ததுதழுவிய எச்சப்பொருளதாக்கலு மொன்று. கீழ்-கீழ்மையுடையவனுக்குப் பண்பாகுபெயர்; அவனது இழிவை நன்கு விளக்குதற்கு, 'கீழ்' என அஃறிணைச்சொல்லாற்கூறினரென்க. கீழ்மக்கள்புன் கோட்டி கொள்ளுதல், கற்ரூரிடத்துப் பொருமைமிகுதியால். ஓர், ஆம். இரண்டும்-அசைகள். (கo)

உள் - ஆம் அதிகாரம்—நன்றியில்செல்வம்

அஃதாவது-சம்பாதித்தவனுக்கும் பிறர்க்கும்பயன்படுதலில்லாததும் கேடுதருவதுமான செல்வத்தினது இயல்பு. நன்றி-நன்மை; இப்பண்புப் பெயர்-இங்கு, நல்லபயனுக்கு ஆகுபெயர். இல்செல்வம்-**பண்புத்தொகை.** செல்வத்தை நல்வழிப்படுத்துவது அறிவின்பய னுதலால், அவ்வறிவின்மை செல்வம்நல்லவழிப்படாமைக்கும் தீவழிப்படுதற்கும் காரணமாகும் இயைபுபற்றி, இவ்வதிகாரம் அறிவின்மை யென்னும் அதிகாரத்தின் பின் வைக்கப் பட்டது.

உசுக. அருகல தாகிப் பலபழுத்தக் கண்ணும்,
பொரிதாள் விளவினை வாவல் குறுகா
பெரிதணிய ராயினும் பீடிலார் செல்வங்
கருதுங் கடப்பாட்ட தன்று.

(இ - ள்.) அருகலது ஆகி-சமீபத்திலிருத்தலையுடையதாய், பல பழுத்தக்கண்ணும் - அநேகமாய்ப் பழங்கள் பழுத்திருக்கப் பெற்றாலும், பொரிதாள் விளவினை-பொரிந்த அரையையுடைய விளாமரத்தை, வாவல்-வௌவால்கள், குறுகா-சேரமாட்டா;(அதுபோல);—பெரிதுஅணியர் ஆயினும்-மிகவும் சமீபத்திலுள்ளவரா யிருந்தாலும், பீடு இலார்-(எளிதிற் பிறர்க்கு உதவுதலாகிய) பெருமைக்குண மில்லாதவர்களது, செல்வம் - ஐசுவரியம், கருதும் கடப்பாட்டது அன்று-(எளியவர்களால் தமக்குக் கிடைக்கு மென்று) நினைக்கத்தக்க முறைமையையுடைய தன்று; (எ - று.)

எடுத்துக்காட்டுவமையணி; முன்னிரண்டடியில் உபமானவாக்கியமும் பின்னிரண்டடியில் உபமேயவாக்கியமும் எற்றத்தாழ்வில்லாமல் (பிம்பப் பிரதிபிம்பபாவத்தோன்ற) ஒருபடிப்பட்டிருத்தல் காண்க.

விளாமரத்துக்குப் பெருமையிருந்தாலும் அதனை வௌவால் குறுகாமைக்குக் காரணம், இதற்கு அதனுற் பயனில்லாமையென அறிக. எளியவர்க்கு வௌவாலை உவமைசூறினது, பலவிடத்துஞ் சென்று இனியபலங்களைப் பெற்று நுகரும் இயற்கைய ரென்பது பற்றியென்னலாம். விளாவௌவாலொழிந்த பிறபலபிராணிகளுக்கு உபயோகப்படுதல் போல, பீடிலார் செல்வமும் எளியரல்லாதார்க்குக் கண்டபடிபயன்படுதலைக் கொள்க.

மரங்களுக்கு உரிய கோழரை, பொருட்டரை, பொரியரை, முள்ளரை யென்னும் நால்வகை அரையுள், விளாமரம் பொரியரையாதலால், 'பொரிதாள்விள' எனப்பட்டது. பொரியரை - பொருக்குள்ள அரை. அரை யெனினும், தாளெனினும் ஒக்கும்; அது கிளைபிரியுமளவுமுள்ள மரத்தின் அடிக்கட்டை.

அருகலது - அருகல் என்னுந் தொழிற்பெயரின்மேற் பிறந்த உடன்பாட்டு ஒன்றன்பாற் குறிப்புவினையாலணையும்பெயர்: அ - சாரியை; இனி, அருகு என்னும் வினைப்பகுதியின்மேற் பிறந்தஎதிர்மறை யொன்றன்பால் தெரிநிலைவினையாலணையும் பெயராகக் கொண்டால், குறையாததாய் என்று பொருள்படும். உம்மைகள் இரண்டும் - உயர்வுசிறப்பு. விளஎன்பதைத்தனிப்பெயரென்றுவது, விளா வென்னும் குறியதன்கீழ் ஆக்குறுகின தென்றுவது கொள்க. விளவினை, இன்-சாரியை, ஐ-இரண்டனுருபு. வாவல்-வௌவால். இச் சொல் பால்கா அஃறிணைப்பெய ராதலின், குறுகா என்னும் பலவின்பால்முற்றைக்கொண்டது. பெரிது - குறிப்பு முற்றெச்சவினையுரி. அணியர்-அணிமையென்னும் பண்பினடியாப்பிறந்த குறிப்புவினையாலணையும்பெயர். கடப்பாட்டது - கடப்பாடு என்பதன் மேற்பிறந்த ஒன்றன்பாற் குறிப்பு வினையாலணையும் பெயர்; உயிர்த்தொடர்க் குற்றியலுகரத்தின் டகரவொற்று இரட்டிற்று. கடப்பாடு என்பது-கடமை படஎன்றஇரண்டுசொற்கள்சேர்ந்து ஒருசொல் தன்மைப்பட்ட கடப்படு என்னும் முதனிலை திரிந்த தொழிற்பெயர். (க)

உசூ. அள்ளிக்கொள் வன்ன குறுமுகிழ வாயினுங்
கள்ளிமேற் கைநீட்டார் சூடும்பூ வன்மையாற்
செல்வம் பெரிதுடைய ராயினுங் கீழ்களை
நள்ளா ரறிவுடை யார்.

(இ - ள்.) அள்ளி கொள்வ அன்ன - (கைகளால்) அள்ளியெடுத்துக் கொள்ளத்தக்கவை போன்ற [அழகாய் நிறைந்த], குறு முகிழ ஆயினும் - சிறிய அரும்புகளே யுடையனவா யிருந்தாலும், சூடும் பூ அன்மையால்-(அவை) சூட்டிக்கொள்ளத்தக்க மலரல்லாமையால், (உலகத்தில்மனிதரெவரும்), கள்ளிமேல் கை நீட்டார்-கள்ளிச்செடியின்மேல் (பூப்பறிப்பதற்குக்) கைநீட்டமாட்டார்கள்; (அதுபோலவே), செல்வம் பெரிது உடையர் ஆயினும்-செல்வத்தை மிகுதியாக உடையவர்களாயிருந்தாலும், கீழ்களே - கீழ் மக்களே, அறிவு உடையார்-புத்திமான்கள், நள்ளார்-விரும்பிச் சேரமாட்டார்கள்; (எ - று.)

மிக அழகியதான பொருளின்மேல்அள்ளியெடுத்துக்கொள்ளலாம்படியானவிருப்பம் உண்டாதல் இயற்கையாதலால்,'அள்ளிக்கொள்வன்னகுறுமுகிழ' என்றார். கொள்வன்ன-கொள்வவன்ன என்பதன்தொகுத்தல்.முகிழ்ப்பது, முகிழ்; வினைமுதற்பொருள்விகுதி புணர்ந்துகெட்டது. உம்மைகள்-உயர்வுசிறப்பு. கைநீட்டார் - இரண்டாம்வேற்றுமைத்தொகை யாதலால், "குறில்வழி யத் தனியைந் நொதுமுன் மெலிமிகலுமாம்" என்ற பொதுவிதிப்படி தனி ஐகாரத்தின்முன் மெலிமிகாதாயிற்று: "**விகாரத்து இயற்பு.**" உபமானத்தில் 'சூடும்பூவன்மையால்' என்றதற்கு ஏற்ப, உபமேயத்தில் 'பயன்படுஞ் செல்வ மல்லாமையால்' என்க.

எடுத்துக்காட்டுவமையணி. (உ)

உசுஙூ. மல்கு திரைய கடற்கோட் டிருப்பினும்
வல்லூற் றுவரில் கிணற்றின்கட் சென்றுண்பர்
செல்வம் பெரிதுடைய ராயினுஞ் சேட் சென்று
நல்குவார் கட்டே நசை.

(இ - ள்.) மல்கு-மிகுந்த, திரைய-அலைகளையுடைய, கடல்-சமுத்திரத்தின், கோடு-கரையிலே, இருப்பினும்-(தாம்) வாழ்ந்திருந்தாலும், (மனிதர்), வல் ஊற்று-வலிமையான நீர்ச்சுரப்பையுடைய, உவர் இல் கிணற்றின் கண்-உப்புத்தன்மையில்லாத கிணற்றினிடத்திலே, சென்று-(வெகுதூரமாக விருந்தாலும்) போய், உண்பர்-(நீரைக்) குடிப்பார்கள்; (அதுபோலவே), செல்வம் பெரிது உடையர் ஆயினும்-(அருகிலுள்ள கீழ்மக்கள்)செல்வத்தை மிகுதியாக உடையவர்களாகவிருந்தாலும், சேண் சென்றும்-வெகுதூரத்திற்போயாயினும், நல்குவார்கட்டே நசை-கொடுக்கும் நன்மக்களிடத்திலே உள்ளதாகும் (பெரியோர்க்கு) விருப்பம்; (எ - று.)—**எடுத்துக்காட்டுவமையணி.**

கடலில் நிறைந்த நீரும் உதவாமைக்குக் காரணம் உவர்ப்பாதல் போல, கீழ்மக்கள் செல்வம் பெரிதாயினும் உதவாமைக்குக் காரணம் லோபமென்க. உபமேயத்திலுள்ள சேண் என்பதை உபமானத்திலுங் கூட்டிக்கொள்க. கிணற்றை நல்குவார்க்கு உவமை கூறியதனால், அவர்கள் சிறுசெல்வ முடையராயிருந்தாலுமென்க.

வல்லூற்று என்றது, விரைவில் நீர்சுரக்கும் நல்லூற்றன்றி, இடையிடையே நீரற்றுச்சுரத்தலும், தோண்டத்தோண்ட நீர்ஊறுதலும்

தோன்றற்கு ; "அறுநீர்ச் சிறுகிணற்றூறல்" என மேல்வருவது காண்க. இனி, விரைவில் நீர்சுரக்கும் ஊற்று எனினுமாம். வல் - முந்தியபொருளில், பண்படி; பிந்தியபொருளில், இடைச்சொல். கிணற்றிலுள்ள நீரின் உவர்ப்பின்மையைக் கிணற்றின்மேல் ஏற்றி, "**உவரில் கிணறு**" என்றார்.

மல்கு திரை - வினைத்தொகை. திரைய - குறிப்புப்பெயரெச்சம். இருப்பினும், ஆயினும் என்ற உம்மைகள் - உயர்வுசிறப்பு. சேட்சென்றும் என்ற உம்மை-இழிவுசிறப்பு. ஊற்று-ஊறுதல் : **முதனிலை திரிந்த தொழிற் பெயர். உண்ணல்** என்பது-உண்பன தின்பன பருகுவன நக்குவன எனப் பகுத்துக்கூறுமிடத்துச் சிறப்புவினையும், அங்ஙனம் பகுப்பு நோக்காத விடத்துப் பதிதாகஙகள் தீர உட்கொள்ளப்படும் பொருளெல்லாம் உண வெனப்படுமாகலின் பொதுவினையுமாகுதலால், இங்கு 'பருகுவர்' என்னுது 'உண்பர்' என்றார். நல்குவார்கட்டு - 'நல்குவார்கண்' என்ற ஏழனு ருபேற்ற பெயரினடியாப் பிறந்த ஒன்றன்பாற் குறிப்பு முற்று. (கூ)

உசுச. புணர்கடல்சூழ் வையத்துப் புண்ணியமோ வேறே
யுணர்வ துடையா ரிருப்ப—வுணர்விலா
வட்டும் வழுதுணையும் போல்வாரும் வாழ்வரே
பட்டுந் துகிலு முடுத்து.

(இ - ள்.) உணர்வது உடையார் - (அறிய வேண்டுவனவற்றையெல் லாம்) அறியும் அறிவையுடையவர்கள், இருப்ப - (செல்வமில்லாது வறிய ராய்) இருக்க, உணர்வு இலா-அறிவு (சிறிதும்) இல்லாத, வட்டும் வழு துணையும் போல்வாரும் - வட்டு வழுதுணை என்னுஞ் செடிகள்போல அசேதனமாய் எளிதிற் கிடைக்கத்தக்க கீழ்மக்களும், பட்டும்துகிலும் உடுத்து - (செல்வமிகுதியால்) பட்டுவஸ்திரங்களையும் வேறுவகை நல்ல வஸ்திரங்களையும் உடுத்துக்கொண்டு, வாழ்வரே - வாழ்கின்றார்களே ; (ஆதலால்), புணர் கடல் சூழ்வையத்து - நெருங்கிய சமுத்திரஞ் சூழ்ந்த பூமியில், புண்ணியமோ வேறே - (முற்பிறப்பிற் செய்த) நல்வினைப் பயனே வேறுவகையாயுள்ளது; (எ - று.)

செல்வத்தைச் சம்பாதித்தலும் பாதுகாத்தலும் அதனுற்பயன்கொள் ளுதலும் அறிவுடையார்க்கு அல்லது கூடாவன்றே? அவ்வாறிருக்க, அறிவுடையார் வறியராகவும் அறிவிலாதவர் செல்வராகவுங்காணுதலால், அறிவுடையரா தற்குஆகும்ஊழ் செல்வமுடையராதற்கு ஆகாது, செல்வ முடையராதற்கு ஆகும் ஊழ் அறிவுடையராதற்கு ஆகாது என்றதா யிற்று : "இருவேறுலகத் தியற்கைதிருவேறு, தெள்ளியராதலும் வேறு" என்றார், தெய்வப்புலமைத் **திருவள்ளுவனாரும்**. இதனால், **ஊழ்வினையாற்** செல்வம் பெறவேண்டிய காலத்து அறிவாகிய துணைக்காரணமும் வேண்டாவென்பது பெறப்படும்.

அறிவிலார்செல்வம் நன்மையில்லாததென இப்பாட்டிற்கு இவ்வதி காரத்திற் பொருத்தங் காண்க.

புண்யம் - வடமொழி. புண்ணியமோ, ஓகாரம் - அதிசய இரக்கச் சொல். வேறே என்ற ஏகாரம் - தேற்றம். வாழ்வரே என்ற ஏகாரம் - இரக்கத்தோடு பிரசித்தியை விளக்கிற்று. வேறு - பொதுக்குறிப்பு முற்றுப்பகாப்பதம். போல்வாரும், உம்மை - இழிவுசிறப்பு; மற்றை நான்கு உம்மைகளும் - எண்ணுப் பொருளன. வட்டு - கறிமுள்ளி யென்பர்: பனைவட்டெனக் கூறுதல் பொருந்தாது; அது, அட்டு எனப் படுவது. வட்டு-சூதாடுவட்டு எனினுமாம். வழுதுணை-கண்டங்கத்திரி. (சு)

உசுடு. நல்லார் நயவ ரிருப்ப நயமிலாக்
கல்லார்க்கொன் றுகிய காரணந்—தொல்லை
வினைப்பய னல்லது வேனெடுங் கண்ணுய்
நினைப்ப வருவதொன் றில்.

(இ - ள்.) வேல்-வேலாயுதம்போன்ற, நெடு-நீண்ட, கண்ணுய்-கண் களையுடையவளே!—நயவர் - நற்குணமுடையவரான, நல்லார்-நல்லறிவு டையவர்கள், இருப்ப-(வறியவராய்) இருக்க, நயம்இலா-நற்குணமில்லாத, கல்லார்க்கு-கற்றறிவில்லாதவர்க்கு, ஒன்று-ஒரு செல்வப்பொருள், ஆகிய காரணம்-உண்டாகிற காரணம், (என்னவெனில்),—தொல்லை வினை பயன் அல்லது-முற்பிறப்பிற் செய்த நல்வினையின் பயனே யல்லாமல், நினைப்ப வருவது ஒன்றுஇல்-ஆலோசித்துப் பார்க்கத் தோன்றுவதான காரணம் வேறொன்றுமில்லை. (எ - று.)

முன்பாட்டிற் கூறினபடி அறிவுடையார் செல்வம்பெறுமைக்கும், அறிவிலார் செல்வம்பெறுதற்கும் காரணம் - செல்வமுடையராதற்கு வேண்டிய சுகிருதம் முன்னேயோர்க்கு இல்லாமையும், பின்னேயோர்க்கு உண்மையுமே யென உறுதிப்படுத்தியபடி.

ஒன்று-ஒரு பொருளுக்கும், ஒரு காரணத்துக்கும் **எண்ணலளவாகு பெயர்.** இங்கே, தொல்லைவினை யென்றது, இடத்திற்கு ஏற்ப நல்வினை யாயிற்று; இனி, வினைப்பயன் நல்லது எனப்பிரித்து, வேறுவாக்கியமாக் கியும் உரைக்கலாம். கண்ணுக்கு வேல் உவமை-கூர்மைக்கும், வடிவிற்கும், ஆடவரை வருத்துதற்கும் என்க. கண்ணுய்-கண்ணுள் என்பதன்விளி; வேல் நெடுங்கண்ணுய்-**மகடூஉமுன்னிலை.** இப்பாட்டிற்பெண்ணை முன்னி லைப்படுத்திக்கூறியது-உலகத்துப் பெரும்பான்மையான இயற்கைபற்றி, கல்வி வறுமைக்கும் கல்வியின்மை செல்வத்துக்கும் காரணமென்று மகளிர் தமது இயற்கையான பேதைமையாற் கருதக்கூடுமென்று எண்ணி அவர்களுடைய அவ்வெண்ணத்தை அகற்றுதற்பொருட்டு ஏன்னலாம்.(கு)

உசுசு. நாருத் தகடேபோ னன்மலர்மேற் பொற்பாவாய்
நீருய் நிலத்து விளியரோ—வேருய
புன்மக்கள் பக்கம் புகுவாய்நீ பொன்போலு
நன்மக்கள் பக்கந் துறந்து.

(இ-ள்.)நாரு-பரிமளம்வீசுதலில்லாத,தகடேபோல்-புறவிதழ்போல, நல்மலர் மேல்- (எல்லாமலர்களுள்ளுஞ்) சிறந்த தாமரைப்பூவின்மேலிருக்

கிற, பொன் பாவாய்-பொன்னைலாகிய பதுமைபோ லழகிய திருமகளே! நீ —,பொன்போலும்-பொன்னைப்போல் அருமையான, நல் மக்கள் பக்கம் - நற்குணமுடைய மனிதர்களிடத்தை, துறந்து-விட்டு, வேறு ஆய-(அந் நன்மக்களினின்று) வேறுபட்ட, புல் மக்கள் பக்கம்-இழிகுணமுடைய மனிதர்களிடத்தில், புகுவாய்-சென்றுசேர்வாய்: (ஆதலால்), நிலத்து-உல கத்திலே, நீறு ஆய் விளி-சாம்பலாய் அழிவாய்; (எ - று.)

உலகத்தில் பெரும்பாலும் நற்குண நற்செய்கையையுடைய யோக்கி யர் வறியராகவும், அங்ஙனமில்லாத அயோக்கியர் செல்வராகவும் இருக் கிற அக்கிரமத்தை நடுவுநிலைமையையுடைய ஒருவன் பார்த்து மனம்பொ ருமல் அச்செல்வத்திற்கு அதிதேவதையான இலக்குமியின்மேற் கடுங் கோபங்கொண்டு அவளுக்குப் பெருஞ்சாபமிட்டதாகச் செய்யப்பட்டது இச்செய்யுளென அறிக. மனம் புண்பட்டவன் இங்ஙன் தெய்வத்தைத் திட்டுதல் இயற்கையாதலை, உலகவனுபவம் அறிவார் உணர்வர்: இங்ங னிருக்க, தெய்வத்தைத்திட்டுதல் அபசாரமெனக்கொண்டு, விளியர் என்ற முற்றுக்கு நன்மக்களும் புன்மக்களும் நசிக்கக்கடவரென்று பொருந்தாப் பொருளுரைத்தாருமுளர்.

இதில், நாணுத்தகடு என்ற உபமானம்-பூவின்மேல் இருந்தும் அப்பூ வின் நறுமணம் புறவிதழுக்கு இல்லையாதல்போல, சிறந்ததாமரைமலரில் இடையறாது வாழ்ந்தும் அம்மலருக்குரிய மென்மைக்குணம் திருமகட்குச் சிறிதும் இல்லையாமென்பதை விளக்கிநின்றது. பொற்பாவை என்ற உப மானமும், எல்லாராலும் விரும்பப்படும் அழகு திருமகட்கு இருந்தபோதி லும் அதற்கேற்ற குணம் செயல்கள் இல்லையென்பதை நன்குவிளக்கவந் தது. இனி, நாணுத்தகடேபோல் என்பதற்கு - மணமில்லாத பொற்றகடு போல மென்மையில்லாமல் கண்ணுக்கினிமை மாத்திரமாய் நிற்கிற வெனவும் உரைக்கலாம்.

தகடேபோல் பாவாய் என இயையும். தகடே, ஏ-அசை. பாவாய்-பாவையென்பதன் விளி. விளி-எவலொருமை: அர்-சாரியை; விளியர்-வியங்கோண்முற்று எனினுமாம். நன்மக்களுக்குப் பொன்உவமை-அரு மைக்குமாத்திரமேயன்றி, நன்குமதிக்கப்படுதற்கும், மங்களகரமாயிருப்ப தற்கும், யாவராலும் விரும்பப்படுதற்கும், பலவகையாக உபயோகப்படு தற்கும், பெருஞ்சிறப்புக்கு மாம். அரோ-ஈற்றசை. (சு)

உசுஎ. நயவார்க ணல்குரவு நாணின்று கொல்லோ
பயவார்கட் செல்வம் பரம்பப்—பயின்கொல்
வியவாய்காண் வேற்கண்ணு யிவ்விரண்டு மாங்கே
நயவாது நிற்கு நிலை.

(இ - ள.) வேல் கண்ணுய்-வேல்போலுங் கண்களையுடையவளே!—நயவார்கண்-உதவிசெய்தலையுடையவரிடத்து உள்ள, நல்குரவு-வறுமை, நாண் இன்று கொல் ஓ-வெட்கமில்லாததோ? பயவார்கண்-(ஒருவர்க்கும்) உதவாதவரிடத்து உள்ள, செல்வம்-ஐசுவரியம், பரம்ப பயன்கொல் - விடாமற் பரவுதற்கு (ஏற்ற) பிசிலோ? இ இரண்டும்-(நன்மக்களிடத்து வறுமையும் புன்மக்களிடத்துச் செல்வமும் ஆகிய) இந்த இரண்டும், ஆங்கே-அவ்விடத்திலே, நயவாது நிற்கும்-நன்மைப்படாமல் நிற்கின்ற, நிலை-நிலைமையை, வியவாய் காண்-(நீ) வியந்து பார்; (எ - று.)

செல்வவறுமைகளுக்கு முற்பிறப்பின்வினையே யொழிய இப் பிறப்பில் அவரவர்குணம் காரணமன்று என்று பேதைமையொழிய விளக்கியபடி.

நயவார்-நயத்தையுடையவர்; உடன்பாட்டுக் குறிப்பு வினையாலணையும் பெயர். நயம்என்பது-உதவிசெய்தலென்னும் பொருளதாதலை "செல்வம், நயனுடையான்கட் படின்", "நயனுடையான் நல்கூர்ந்தானுதல்" எனத் திருக்குறளிலுங் காண்க; இனி, நயவார்என்பது-நயஎன்னும் வினைப் பகுதியடியாப்பிறந்த எதிர்மறை வினையாலணையும்பெயராய், (செல்வத்தை ஒரு பொருளாகக்கருதி) விரும்பாதவர் எனப் பொருள்பட்டு, மேன்மக்களாதலுமாம்.

நாண்-நாணம்; **முதனிலைத்தொழிற்பெயர்.** 'நாணுவது-செய்யத்தகாத வற்றின்கண் உள்ளமொடுங்குதல்' ஆதலால், தான் சேர்ந்துவருத்துதற்கு உரியரல்லாத நல்லோரிடம் நீங்காது பலகாலஞ்சேர்ந்திருக்கிற நல்குரவை 'நாணின்றுகொல்' என்றார். உலோபிகளிடத்துச் செல்வம் விடாது பற்றிக்கொண்டிருத்தலால், அது 'பயின்கொல்' எனப்பட்டது. கொல்-இடைச்சொல்: இரண்டிடத்தும் ஐயவினப்பொருளது. ஓ-அசை. பயவார்-பயஎன்னும் வினைப்பகுதியடியாப் பிறந்த எதிர்மறைத்தெரிநிலை வினையாலணையும்பெயர்; பயத்தல்-பயன்படுதல். பயின் பரம்புதலாவது-நாற்புறமும் ஒட்டும்படி வியாபித்தல். வியவாய்-உடன்பாட்டு ஏவலொருமை முற்றெச்சம். இரண்டும், உம்-முற்று. ஆங்கு-அங்கு என்பதன் நீட்டல். ஏ - அசை. (ஏ)

உசுஅ. வலவைக ளல்லாதார் காலாறு சென்று
கலவைக ளுண்டு கழிப்பர்—வலவைகள்
காலாறுஞ் செல்லார் கருணையாற் றுய்ப்பவே
மேலாறு பாய விருந்து.

(இ - ள்.) வலவைகள் அல்லாதார்-நாணிலிகளல்லாதவர் [நாணமுடையயோக்கியர்கள்], (வறுமையினால்), கால் ஆறு சென்று-தங்கள்கால்களால் தூரவழிநடந்துபோய், கலவைகள் உண்டு-(அங்கங்குச் சிறிதுசிறிதாக இரந்துபெற்ற பலவகைக்) கலப்பானஉணவுகளைப் புசித்து, கழிப்பர்-(காலங்) கழிப்பார்கள்; வலவைகள்-நாணிலிகளான அயோக்கியர்களோ, (செல்வமுடைமையால்), கால் ஆறுஞ் செல்லார்-காலால் வழிநடத்தலுஞ் செய்யாதவராய் [ஓரடியெடுத்து வைத்தலேனும் வேண்டாதவராய்], இருந்து-(இரப்போர்க்குக் கொடுக்க மனமில்லாமல் கதவடைத்துத் தம்வீட்டினுள்ளேயே)இருந்து, மேல் ஆறு பாய-நெய்யாறு பாலாறு தயிராறுகள் மேன் மேற் பெருக, கருணையான்-பொரிக்கறிகளுடனே, துய்ப்ப-(நல்லுணவுகளைத் தாம் தனியே) உண்பார்கள்; (எ - று.)

இப்படி தகாதவரிடம் உண்டாவது நன்மையில்லாதசெல்வமா மென இப்பாட்டு நன்றியில்செல்வ மென்ற அதிகாரத்துக்கு ஏற்றதாயிற்று.

சிலப்பதிகாரத்தில் "மாதர்க்கோலத்து வலவையி னுரைக்கும்"என்ற விடத்து,அடியார்க்குநல்லார் 'வலவையின்-நாணிலிகளைப்போல;"வலவை

களல்லாதார்" என்ஞர் பிறரும்' என்று இதனைமேற்கோள் காட்டி உரைத்தது காண்க. நாணமுடையோர் "இட்டாற்றுப் பட்டிரந்தவர்க் கொன்ஞற்ஞது, மூட்டாற்றுப்பட்டு முயன்றுள்ளூர் வாழ்தலின், நெட்டாற்றுச் சென்று நிரைமனையிற் கைந்நீட்டும், கெட்டாற்று வாழ்க்கையே நன்று" என்றபடி காலாறு சென்று கலவைகளுண்டு கழிப்பவராவர். இனி, வலவையென்பதற்கு-பேய் என்ற பொருளும் உள்ளதாதலால், 'வலவைகளல்லாதார்' என்பதற்கு-பேய்த்தனமுடையவரல்லாதவர் என்றும் பொருள் கொள்ளலாம். கலப்புடையது, கலவை : கதம்பம் ; ஐ-கர்த்தாப் பொருள் விகுதி. காலாறும் செல்லார், உம்-இழிவு சிறப்பு. எற்றவாகனமிருத்தலாலும், காரியமில்லாமையாலும், சிறிதும் நடந்துசெல்லாரென்க. கருனையான்-'ஆன்' என்னும் மூன்றனுருபு, இங்கே உடனிகழ்ச்சிப் பொருளது ; "தூங்குகையோ ஞெங்குநடைய" என்பதிற்போல. துய்த்தல் என்ற வினைக்கு 'நல்லுணவுகளை' என்ற செயப்படுபொருள் வருவிக்கப்பட்டது, **அவாய்நிலையால்**. துய்ப்ப - பலர்பால் வினைமுற்று ; ப-விகுதி ; இவ்விகுதியே இங்கு எதிர்காலங்காட்டிற்று. விருந்து எனப் பதம்பிரித்து, **பண்பாகுபெயராய்**, புதியஉணவுகளையென்றும் உரைக்கலாம். இனி, மேலாறுபாய இருந்து என்பதற்கு-உடம்பின்மேல் வேர்வை நீர் ஆறுப்பெருக (வீட்டினுள்ளேயே யாசகரை வரவொட்டாது கதவடைத்து) இருந்து என்றும் பொருள் கொள்ளலாம். (அ)

உஙக. பொன்னிறச் செந்நெற் பொதியொடு பீள்வாட
மின்னெளிர் வானங் கடலுள்ளுங் கான்றுகுக்கும்
வெண்மை யுடையார் விழுச்செல்வ மெய்தியக்கால்
வண்மையு மன்ன தகைத்து.

(இ - ள்.) பொன் நிறம்-பொன்போன்ற நிறத்தையுடைய, செந்நெல்-செந்நெற்பயிர்கள், (நாடுகளிற்கழனிகளிலே), பொதியொடு பீள்வாட-பொதிந்திருக்குங் கதிர்களோடு தமது கருவும் உட்படவாடாநிற்க, (அங்கு மழையைப்பொழியாமல்), மின் ஒளிர் வானம்-மின்னல் விளங்கப்பெற்ற மேகங்கள், கடலுள்ளும் கான்று உகுக்கும்-சமுத்திரத்தினிடையில் நீரை வெளிப்படுத்திச் சொரிதலுமுண்டு ; வெண்மை உடையார்-அறிவின்மையுடையவர்கள், விழு செல்வம் எய்தியக்கால்-மேன்மையான செல்வத்தை அடைந்தால், வண்மையும் - (அவர்கள்) தானஞ்செய்தலும், அன்ன தகைத்து-அப்படிப்பட்ட தன்மையையுடையது ; (எ - று.)

அறிவிலாதார் தம்மிடம் அகப்பட்ட செல்வத்தைச் சற்பாத்திரத்தில் உபயோகப்படுத்தாமல் தகாதவர்க்கு உதவுவர் என்பது கருத்து.

உவமையணி : எடுத்துக்காட்டுவமையணியன்று; பின் வாக்கியத்தில் 'அன்னதகைத்து' என உவமவுருபு வந்ததனால். பலர்க்கும் உபயோகப்படுதலால் இன்றியமையாத பயிர்-பலர்க்கும் உபயோகப்படுகின்ற நல்லோர்க்கும், உவர்ப்புச்சுவையுடைமையால் பயன்படாத கடல்-துர்க்குணமுடைமையாற் பயன்படுதலில்லாத நல்லவரல்லார்க்கும் உவமையாயின.

செந்நெல்-ஒருவகைச் சிறந்தநெல் ; இது - நீரில் விளைவது. பொதிகருவை உள்ளே பொதிந்திருத்தலையுடைய கதிருக்குக் காரணப்பெயர்; கருத்தாப்பொருள்விகுதி புணர்ந்து கெட்டது. பீள்-பயிரின் இளங்கரு. வாட என்னுஞ் செயவெனெச்சம்-உடனிகழ்ச்சிப் பொருள தாதலின், நிகழ்கால முடையது. வானம்-ஆகாயத்திற் சஞ்சரிக்கும் மேகத்துக்கு, **இடவாகுபெயர்** ; அம்-சாரியை. கடலுள்ளும், உம்-இழிவுசிறப்பு. கான்று, கால்-பகுதி. வெண்மை-அறிவு முதிராமை. வெண்மையுடையார்-அசாரமானவர் என்றபடி. விழு-விழுமம் மென்பதன் விகாரம். விழுமம் என்பது-சிறப்பென்னும் பொருள் தரும் உரிச்சொல்லாதலை, "விழுமஞ் சீர்மையுஞ் சிறப்பு மிடும்பையும்" என்ற **தொல்காப்பியத்**தாலறிக. வண்மையும், உம்-இறந்தது தழுவிய எச்சம். (கூ)

உஎ0. ஓதியு மோதா ருணர்விலா ரோதாது
மோதி யுணையா ருணர்வுடையார்—தூய்தாக
நல்கூர்ந்துஞ் செல்வ ரிரவாதார் செல்வரு
நல்கூர்ந்தா ரீயா ரெனின்.

(இ - ள்.) உணர்வு இலார்-பகுத்தறிவில்லாதவர்கள், ஓதியும்-படித்திருந்தாலும், ஓதார்-படியாதவர்களே : உணர்வு உடையார்-பகுத்தறிவுடையவர்கள், ஓதாதும்-படியாதிருந்தாலும், ஓதி அனையார்-படித்தாற் போன்றவர்களே ; தூய்து ஆக-(மனம்) பரிசுத்தியுடையதாயிருக்க, இரவாதார்-யாசித்தல் செய்யாதவர்கள், நல்கூர்ந்தும்-வறுமை யடைந்திருந்தாலும், செல்வர்-ஐசுவரிய முடையவர்களே : செல்வரும்-செல்வமுடையோரும், ஈயார்எனின்-(தக்கோர்க்குக்) கொடாமற்போவராயின், நல்கூர்ந்தார்-தரித்திரப்பட்டவர்களே ; (எ - று.)

உபமான உபமேயத்தன்மை தோன்றத் தனித்தனி இரண்டுநீதிகள் இப்பாட்டிற் கூறப்பட்டன ; அதிகாரம் நன்றியில்செல்வ மாதலால், இப்பாட்டில் முன்னிரண்டடி-உபமானமும், பின்னிரண்டடி-உபமேயமும் ஆகும். படிப்பிற்குப் பயன் அறிவாதல்போல, செல்வத்திற்குப் பயன் தக்கவர்க்கு ஈத லென்பதாம். படித்தும் அறிவில்லாத கற்றறிமோழைகள்போல்வர், தக்கார்க்கு ஈயாத செல்வர்: செல்வமின்றியும் இரவாதார், படிப்பின்றி உணர்வடைந்தவர்போல அதிசயிக்கத்தக்கவராவரென்க.

ஓதியும், செல்வரும் என்ற உம்மைகள் - உயர்வு சிறப்பு; ஓதாதும், நல்கூர்ந்தும் என்ற உம்மைகள் - இழிவு சிறப்பு. ஓதி-ஓதினால்; எச்சத்திரிபு : இனி, ஓதி-அறிவுடையவனெனப் பெயருமாம்.

முன்னிரண்டடியில் உபமானங்களைக் கூறிய முறைமைக்கு மாறுபாடாகப் பின்னிரண்டடிகளில் உபமேயங்களை நிறுத்தினது, **எதிர்நிரனிறைப் பொருள்கோள்**. முதலடி - **முற்றுமோனை**. (க0)

நான்காவது

துன்பவியல்

மனிதர் மனத்திற்குத் துன்பமுண்டாதலைப்பற்றிக்கூறும் பிரிவு; அத்துன்பங்கள் இரப்போராக்கியாமை முதலிய காரணங்களால் உண்டாகும். அதனை இதுமுதல் நான்கு அதிகாரங்களாற் கூறுகின்றார்.

உவ - ஆம் அதிகாரம்—ஈயாமை.

அஃதாவது-வறியவர்களாய் இரக்கவர்களுக்கு இல்லையென்னுதபடி கொடுத்தலைச் செய்யாமை. கீழ்ப் பத்தாம் அதிகாரமாகிய ஈகைக்கு எதிர் மறையாய் அதன்பின் வைத்தற்கு உரிய இவ்வதிகாரத்தை இங்ஙனவைத்ததற்குக் காரணம் என்னவெனின், —சம்பாதிப்பவனுக்கும் பிறர்க்கும் பயன்படுதலில்லாதது கீழ்க்கூறிய நன்றியில்செல்வ மாதலால், அது பிறர்க்குப்பயன்படாமையாலுளதாங்குற்றம் பெரும்பான்மையதும் மனத்திற்குத்துன்ப மூட்டுவதும் பக்க இழிபுடையதாதலும்பற்றி, ஈயாமையை அதன்பின் இவ்வதிகாரத்தில் விளர்த்துக் கூறுகின்றனரென அறிக. கீழ் அதிகாரத்தின் இறுதிசெய்யுளில் "செல்வருரு கல்கூர்ந்தா ரீயாரெனின்" எனத் தோற்றுவாய் செய்யப்பட்ட ஈயாமையின் இழிவை விரித்துக்கூறுகின்றமையின், இவ்வதிகாரம் நன்றியில்செல்வத்தின்பின்வைக்கப்பட்டதென்றுங் கொள்க. ஈயாமை-எதிர்மறைத் தொழிற்பெயர்.

உஎக. நட்டார்க்கு நல்லா தவர்க்கு முளவரையா
லட்டது பாத்நுண்ட லட்டுண்ட—லட்ட
தடைத்திருந் துண்டொழுகு மாவதின் மாக்கட்
கடைக்குமா மாண்மடைக் கதவு.

(இ - ள்.) நட்டார்க்கும்-(தம்மோடு) சிநேகங்கொண்டவர்களுக்கும், நல்லாதவர்க்கும் - சிநேகங்கொள்ளாதவர்களுக்கும், உள வரையால்-(தமக்கு) உள்ள அளவிற்கு ஏற்ப, அட்டது பாத்து-சமையல்செய்த உணவைப் பங்கிட்டுக்கொடுத்து, உண்டல் - (பின்பு தாமும்) உண்ணுதல்,—அட்டு உண்டல்-சமைத்து உண்டுவாழும்விதமாம்; (அங்ஙனமின்றி), அட்டது - சமைத்த உணவை, அடைத்து இருந்துஉண்டு-(தம்மிட்டிலுள்ளவரும்வரவொண்ணுதபடி வாயிற்கதவை) மூடித் தாம்உள்ளேயிருந்துபுசித்து, ஒழுகும்-நடக்கின்ற, ஆவது இல் மாக்கட்கு - பயனில்லாதமனிதர்களுக்கு, ஆண்மடைகதவு-மேலுலகத்தின் கதவு, அடைக்கும்-(உட்புகவொண்ணுது) மூடப்படும்; (எ - று.)—ஆம்-அசை.

"செல்விருந்தோம்பி வருவிருந்துபார்த்திருப்பான், நல்விருந்துவானத்தவர்க்கு," "ஒன்றுக நல்ல துயிர்தோம்ப லாங்கதன்பின், நன்றுய்க்க தடங்கினுர்க் கீந்துண்டல்—என்றிரண்டு, குன்றுப் புகழான் வருகென்று மேலுலகம், நின்றது வாயில் திறந்து" என்றபடி இம்மையில் விருந்தோம்பியவனை மறுமையில் தேவர்கள் எதிர்கொண்டு உபசரிப்பராதலால் அப்படியில்லாதவனுக்கு மேலுலகத்தின்கதவு அடைக்கப்படுமெனப்பட்டது.

நட்டார்-சுற்றத்தார், நள்ளாதவர்-விரும்பினர் என்றும்: முன்பழக்க முண்மையாற் குறித்து வந்தவரும் அஃது இன்மையாற் குறியாதுவந்த வருமென்ற இருவகையிருந்தினருள் முன்னையவர்-நட்டார், பின்னையவர் -நள்ளாதவர் என்றுங் கொள்ளலாம். இவர்களுள், நள்ளாதவரினும் நட்ட வர் வருவது பெரும்பான்மையாதலாலும், அவர்கட்கு உதவாமை பெரும் பழிப்புக் கிடமாதலாலும், அவர்கோ முன்வைத்தது.

உம்மைகள் இரண்டும்-எண்ணுப்பொருளன. உள-உள்ள: தொகுத் தல். அட்டது என்னும் ஒன்றன்பால் வினையாலணையும்பெயர், **சாதியொ ருமை**; அட்டவை யென்க. 'அட்டது' என்ற ஒருமைச்சொல், மிகச்சிறிய தாயினும் பகுத்துண்ணுதலே தகுதியென்பதைவிளக்கு மென்க; இக் கருத்தே, 'உளவரையால்' என்பதனாலும் நன்குவிளக்கப்பட்டது. பாத்து-பகுத்து என்பதன் மரூஉ. ஆவது - செல்வம்படைத்ததனால் பெறலாகும் பயன் : எதிர்கால வினையாலணையும்பெயர்; முற்பிறப்பின் நல்வினையால் அரிதிற்பெற்ற செல்வத்தைத் தக்கபடி பயன்படுத்தாத அவிவேகிகளான மனிதரை, மக்கள்என்னாது 'மாக்கள்' என்றார். அடைக்கும்-**செயப்பாட்டு வினைப்பொருளில்வந்த செய்வினைச் செய்யுமென்முற்று.** 'அடைக்கும் கதவு' என்றமுடிபுக்குவிதி-"செயப்படு பொருளைச்செய்ததுபோலத், தொழிற் படக்கிளத்தலும் வழக்கினுளரிற்றே" என்பது. செய்மைப்பொருள் குறி க்கும் அகரச்சுட்டிடைச் சொல்லடியாப் பிறந்து முதல்நீட்சி பெற்ற ஆண்டு என்பது இங்கே, மறுமையில் இன்பம்பெறுதற்கு உரிய சுவர்க் கத்தைக் குறித்தது.

முதலடியில், **தொடைமுரண்** காண்க. (க)

உஎஉ. எத்துணை யானு மியைந்த வளவிலுற்
சிற்றறஞ் செய்தார் தலைப்படுவர்—மற்றைப்
பெருஞ்செல்வ மெய்தியக்காற் பின்னறிது மென்பா
ரழிந்தார் பழிகடலத் துள்.

(இ - ள்.) எ துணை ஆனும்-எவ்வளவானாலும், இயைந்த அளவிலுல்-(தமக்குக்கூடிய) அளவால், சிறுஅறம் செய்தார்-சிறிய தருமங்களையாயி னுஞ்செய்துவைத்தவர்கள், தலைப்படுவர்-மேன்மை யடைவார்கள்; மற்றை -இங்ஙனம் அப்பொழுது அப்பொழுது தருமஞ்செய்யாத, பெருஞ்செல் வம் எய்தியக்கால் பின் அறிதும் என்பார்-'மிகுதியானபொருள் கிடைத் தால் அதன்பின்பு (தருமஞ்செய்தலை) ஆலோசிப்போம்' என்று வாழ் நாளைக் கழிப்பவர்கள், பழிகடலத்துள் அழிந்தார்-உலகநிந்தனையாகிய கடலில் அகப்பட்டுச் சிதைந்தவராவர்; (எ - று.)

பெருஞ்செல்வம் வருவது நிச்சயமன்மையாலும், அங்ஙனம்வந்தா லும் அதன்பின் உடம்புநீடித்திருப்பது நிலையில்லையாதலாலும், கிடைத்த வரையில் இளமையிலே அறஞ்செய்யாதவர் பின்பு நாய்காணிற் கற்காணு வாறாய் நன்மை பெறுரென்பதாம்.

எத்துணையானும், உம்மை-இழிவுசிறப்பு. ஆனும்-ஆயினும் என்பதன் மரூஉ. மற்றை யென்னும் இடைச்சொல்-பிறிதென்னும் பொருளது. கடலத்துள், அத்து-சாரியை. பழிகடலத்துள் அழிந்தார்-வரம்பில்லாத பழியை யடைவ ரென்பதாம்; இனி, பழிக்கப்படுவது என்ற காரணத்தாற்-

பாபமும் பழியெனப்படுதலால், பாவக்கடலில் மூழ்குவ தென்றுமாம். பழிக் கடலத்துள்ளெனப்பண்புத்தொகையில்வலியாட்டிஷாற்பாலது, ஓசை யின் பம் நோக்கிப் பழிகடலென இயல்பாய் நின்ற தென்க. அழிந்தார்-நிச்சய மாய்அழிவர்; தெளிவுபற்றி எதிர்காலம் இறந்தகாலமாகச் சொல்லப்பட்ட **காலவழுவமைதி**. மற்றையென்பது, என்பார் என்பதோடு இயையும். பின்-இங்கே காலங்குறிக்கும்.

"மற்றறிவாம் கல்வினை", "இன்று கொலன்று கொல்" என்னும் இந் நூற் செய்யுள்கள் இங்கு உணரத்தக்கன. (உ)

உளக. துய்த்துக் கழியான் றுறவோர்க்கொன் றீகலான்
வைத்துக் கழியு மடவோனை—வைத்த
பொருளு மவனை நகுமே யுலகத்
தருளு மவனை நகும்.

(இ-ள்.) துய்த்து கழியான்-(அருமையாகப்பெற்ற பொருளைத்) தான் அனுபவித்துக் காலங்கழியாமலும், துறவோர்க்கு ஒன்று ஈகலான்-துறவ றத்தார்க்கு ஒருபொருளே யேனும் கொடுத்து உதவாமலும், வைத்து கழி யும்-(பாடுபட்டுத்தேடினபொருளை வீணாக) வைத்துப் (பயன்கொள்ளாமல்) இறக்கின்ற, மடவோனை அவனை - அறியாமையையுடையவனுகும் அந்தப் பெரிய லோபியை, வைத்த பொருளும்-(அவன் தேடி) வைத்த செல்வ மும், நகுமே - (பார்த்துச்) சிரிக்கும்; உலகத்து அருளும் - உலகத்திலே விளங்குகிற கருணையென்னுஞ் சிறந்தகுணமும், அவனை நகும் - அவனைப் (பார்த்துச்) சிரிக்கும்; (எ - று.)

"அருளிலாார்க்கு அவ்வுலகமில்லை", "அறனும் அருளுடையான் கண் ணதேயாகும்" என்றபடி தானம் முதலிய தருமங்களைச்செய்து நற்கதி யைப் பெறுதற்குக் காரணமான அருளைச் சிறிதும் உடையனுகாமல் பொருளைப் பாழ்படுத்தினதுபற்றி, அவனருள் இவனை இகழ்ந்து சிரிப்ப தாயிற்று; அருளுடையனுய்ப் பிறர்க்குக்கொடாவிட்டாலும் தானுவது அனுபவிக்கலாமே: அதுவுஞ் செய்யாமல் பொருளையீட்டுதலையே பயனுகக் கருதிக் காலங்கழித்த அறியாமையை நோக்கி, அந்தப்பொருளும் சிரிப்ப தாயிற்று. இங்கே, நகுதல்- இகழ்தல்காரணமாக உண்டாயிற்று; பரிகாச மாகச்சிரித்தல்.

துறவோர்க்கு என்பதற்கு -'(ஆதரிக்கத்தக்கவரால்) துறக்கப்பட்ட வர்க்கு' என்றும் உரைக்கலாம். கிருகஸ்தாச்சிரமத்திலிருப்பவன் மூற்றுந் துறந்த யோகவொழுக்கத்தார்க்கு அவ்வொழுக்கநெறியை முடியச்செல்லு மளவும் அச்செலவிற்குப் பசி நோய் குளிர் முதலியவற்றுல் இடையூறுவா ராமல் உண்டியும் மருந்தும் உறையுளும் முதலியன உதவி அந்நெறியில் வழுவாமற் செலுத்தவேண்டியனுதலை "இல்வாழ்வானென்பா னியல்பு டையமூவர்க்கும், நல்லாற்றி னின்றதுணை" என்ற திருக்குறளினுலும், ஆத ரிப்பவரால் துறக்கப்பட்டவர்க்குத் தான் ஆதரவாய் நின்று வேண்டுவன செய்யவேண்டுமெனுதலை "துறந்தார்க்குத் துவ்வாதவர்க்கு மிறந்தார்க்கும்,

இல்வாழ்வானென்பான் துணை" என்ற திருக்குறளினும் அதிக. பொருளும், அருளும் என்ற உம்மைகள்-முறையே எதிரதும் இறந்ததுந்தழுவிய எச்சப்பொருளன; எண்ணுப்பொருளனவாகா: வெவ்வேறு வாக்கியத்தில் வந்ததனால். ஏ - தேற்றம்; ஈற்றசையுமாம்.

பற்றுக்களை முற்றத்துறத்தலையுடையவ ரென்ற பொருளில், துறவோர் என்பதிற் பருதியாகிய துறவு - செய்வினையென்றும், களைகணைவரால் விடப்படுதலையுடையவ ரென்றபொருளில், துறவு-செயப்பாட்டுவினைப்பொருளில் வந்த செய்வினை யென்றும் அறிக. துறவோர்-உடன்பாட்டுப் பெயரின் ஈற்றயலாகாரம் ஓவாயிற்று; மடவோன் என்பதிலும் இது. கழியான், ஈகலான்-எதிர்மறை முற்றெச்சங்கள். மடவோன் என்பதில், மடம் அல்லது மடமை-பருதி. 'அருளும் பொருளும் நகும்'—அஃறிணையில், செய்யாதது செய்வதுபோலச் சொல்லப்பட்டது. ஒன்று என்பதன் இறுதியில் இழிவு சிறப்பும்மை விகாரத்தால் தொக்கது. மடவோனே, அவனே-ஒரு பொருளின்மேல் வந்த பெயர்கள். இங்ஙனம் விசேடணம், விசேடியம் என்ற இரண்டிலும் வேற்றுமையுருபுகளை விரித்துரைப்பது, ஒருவகைப் பாவைநடை.

"வஞ்ச மனத்தான் படிற்றொழுக்கம் பூதங்கள், ஐந்து மகத்தே நகும்" என்ற திருக்குறளோடு இதனை ஒப்பிடுக. (ங)

உஎச. கொடுத்தலுந் துய்த்தலுந் தேற்ற விடுக்குடை
யுள்ளத்தான் பெற்ற பெருஞ்செல்வ—மில்லத்
துருவுடைக் கன்னியரைப் போலப் பருவத்தா
லேதிலான் துய்க்கப் படும்.

(இ - ள்.) கொடுத்தலும்-(பிறர்க்குக்) கொடுத்தலையும், துய்த்தலும்-(தான்) அனுபவித்தலையும், தேற்ற-அறிந்து செய்யாத, இடுக்கு உடைஉள்ளத்தான்-லோபகுணத்தையுடைய மனமுடையவன், பெற்ற-சேர்த்துவைத்த, பெரு செல்வம்-மிகுந்த ஐசுவரியமானது,—இல்லத்து உருஉடை கன்னியரை போல-குடியிற்பிறந்த வடிவழகுள்ள பெண்களைப்போல, பருவத்தால்-(அனுபவித்தற்கு உரிய) காலம் வந்தபொழுதில், ஏதிலான் துய்க்கப்படும்-அயலாரால் அனுபவிக்கப்படும்; (எ - று.)

குடும்பத்திற்பிறந்த மணஞ்செய்யப்படாத மகளிர் இங்கேலோபியின் செல்வத்துக்கு உவமை; தன்னை வருந்திப்பெற்றுவளர்த்தவனுக்கு உதவாமல் அது செய்யாத பிறனனுபவத்துக்கே பின்பு உதவுதலாகிய இவ்வொரு பொதுத்தன்மையில்மாத்திரமே யென்க. இப்படிப்பட்டகன்னியர் தன்மையை, "வலம்புரியீன்றமுத்தம் மண்மிசையவர்கட்கல்லால், வலம்புரி பயத்தை யெய்தாது அனையரே மகளிர்" எனச் சிந்தாமணியிலும், "பலவுறு நறுஞ்சாந்தம்படுப்பவர்க்கல்லதை, மலையுளேபிறப்பினும் மலைக்கவைதா மென்செய்யும், நீனெயுங்கால்நும்மகள் நுமக்குமாங் கனையளே", "சீர்கெழு வெண்முத்தம் அணிபவர்க்கல்லதை, நீருளேபிறப்பினும் நீர்க்கவைதா மென்செய்யும், தேருங்கால் நும்மகள் நுமக்குமாங் கனையளே", "எழ்பகரின்னிசை முரல்பவர்க்கல்லதை, யாழுளேபிறப்பினும் யாழ்க்கவைதா

மென்செய்யும், சூழுங்கால் நும்மகள் நுமக்குமாங் கனையளே'' எனக் **கலித் தொகையிலுங்** கூறியவாறு காண்க. **உவமையணி**. லோபியின் பெருஞ் செல்வம் **ஏதிலான்** துய்க்கப்படுதல்-கள்ளர் முதலியோராற் பறித்துக் கொள்ளப்படுதல். லோபத் திற்குப் பற்றுள்ளமென்று ஒரு பெயராதலால், அப்பொருள்கருதி, அதனை இங்கு 'இடுக்குடையுள்ளம்' என்றார். பொருளை விடத்தகுமிடத்து விடாது பற்றுதலைச்செய்யும் உள்ளம்: எனவே, லோபமாம்.

தேற்று என்பதை - தேறுஎன்பது விரித்தல்விகாரம்பெற்ற தென்று வது, பிறவினை தன்வினைப்பொருளில் வந்ததென்றுவது, இருவினைக்கும் பொதுவென்றுவது கொள்க; ''நட்பாடல் தேற்றாதவர்'', ''வாளினுற்பேசி னல்லால் வாயினுற்பேசல்தேற்றேன்'', ''வாணிகமொன்றுந் தேற்றாய்'', ''தேற்றாய்பெரும'', ''தேற்றாவொழுக்கம்'' எனப் பிறவிடங்களிலுங் காண்க. இடுக்குஎன்னுஞ் சொல்-லோபமென்னும் பொருளதாதலை, இந்நூலில் ''இடுக்குற்றப் பற்றினும் நில்லாது செல்வம்'' என்றதனாலும் அறிக. இடுக்கு-முதனிலைத் தொழிற்பெயர்; இடுக்குதல்-இறுகப்பிடித்தல். இனி, இடுக்கு என்பதை இடுங்கு என்னும் முதனிலை திரிந்த தொழிற் பெயரெனக் கொண்டு, குணங்குறைதலையுடைய அற்ப மனமுள்ளவனென் றும் உரைக்கலாம். உரு, கன்னி, பருவம் - ரூபம், கந்யா, பர்வம் என்னும் வடமொழிகளின் திரிபுகள். பருவத்தால்-மூன்றும்வேற்றுமையின் 'ஆல்' உருபு ஏழாவதன் இடப்பொருளில் வந்ததனால் **உருபுமயக்கம்**; ''காலத்தி னாற் செய்த நன்றி'' என்பதிற் போல. (அ)

உஎடு. எறிநீர்ப் பெருங்கட லெய்தி யிருந்து
மறுநீர்ச் சிறுகிணற் றூறல்பார்த் துண்பர்
மறுமை யறியாதா ராக்கத்திற் சான்றோர்
கழிநல் குரவே தலை.

(இ - ள்.) எறி-(அலைகளை) வீசுகிற, நீர்-மிக்கநீரையுடைய,பெரு கடல்-பெரிய சமுத்திரத்தை, எய்தி இருந்தும் - (தாம்) அடைந்திருந்தா லும், (அது உவர்ப்பினாற் பயன்படாமையால், எல்லோரும்), அறு நீர் - (இடையிடையே) அற்றுஅற்றுச் சுரக்கிற நீரையுடைய, சிறு கிணறு - சிறியகிணற்றின், ஊறல்-ஊற்றை, பார்த்து-தேடிக்கண்டு, உண்பர்-(அந் நீரைக்) குடிப்பார்கள்; (ஆதலால்),—மறுமை அறியாதார் **ஆக்கத்தின்** - மறுமைப்பயனையறியாத லோபிகளுடைய பெருஞ்செல்வத்தினும், சான் றோர் கழி நல்குரவே - (மறுமைப்பயனையறிந்த மிக்க நற்குணங்களால்) நிறைந்த பெரியோரதுமிக்க வறுமையே, தலை-மேலானது; (எ - று.)

சான்றோர் வறியராயிருக்கையிலுதவுகிற அவ்வளவும் உதவார். கீழ் மக்கள் செல்வமீ நிரம்பியபொழுதிலும் என்பது கருத்து. வறுமை யடைந்திருந்தும் செல்வமுடைய லோபிகள்போல ஆகாமல், சான் றோர் மறுமைப்பயனையடைவர் என்று கருத்துக்கொள்ளினுமாம்.

'மிக்கசெல்வமுடைய லோபிகளை யடைந்திருந்தாலும் அவர்கள் **பயன்படாமையால், உலகத்தார், சிறுதுசிறிதாகவாயினும் புயன்படத்**

தக்க வறியரான நல்லோரைத் தேடியடைந்து உண்டு வாழ்வர்' என்னும் பொருள்தோன்ற நின்றதனால், முன்னிரண்டடி-**பிறிதுமொழிதல்** என்னும் அலங்காரம்; வடநூலார் அப்ரஸ்துதப்ரசம்ஸை யென்பர்: உபமேயத்தைக் கூறாமல் உபமானத்தை மாத்திரம் கூறி அதனால் உபமேயத்தைப் பெற வைத்தலும்-இவ்வணியின்இலக்கணம். பின்னிரண்டடியில், அறிவிலாரது செல்வத்திலும் அறிவுடையார் வறுமையே சிறந்ததென்பதற்கு முன்னி ரண்டடியின் கருத்துக் காரணமானது **ஏதுவணி**யின்பாற்படுமென்க.

ஊறல்என்னுந் தொழிற்பெயர், ஊறுதலையுடைய நீருக்கு ஆகு பெயர்: இதில் 'அல்'-கருத்தாப்பொருள்விகுதி யென்றுங் கூறலாம். ஆக்கப்பட்டது, ஆக்கம்; அம்-செயப்படுபொருள் விகுதி: ஆக்குதல்-சம் பாதித்தல்: உண்டாகச் செய்தல். கழி-மிகுதியுணர்த்தும் உரிச்சொல். தலை - தலைமையையுடையதென்றுவது, உத்தம அங்கமான தலைபோலச் சிறந்ததென்றுவது பொருள்.

"கடல்பெரிது, மண்ணீருமாகாததனருகே சிற்றூறல், உண்ணீரு மாகிவிடும்" என்பதனை இச்செய்யுளின் முதலிரண்டடிகளோடு ஒப்பிடுக.

கீழ் உசுஉ - ஆம் செய்யுளும் இங்குக் கவனிக்கத் தக்கது. (இ)

உஎசு. எனதென தென்றிருக்கு மேமழை பொருளை
யெனதென தென்றிருப்பன் யானுந்—தனதாயிற்
றானு மதனை வழங்கான் பயன்றுவ்வான்
யானு மதனை யது.

(இ - ள்.) எனது எனது என்று இருக்கும் ஏழை பொருளை-'என்னு டையது என்னுடையது' என்று (மிக்க அபிமானங்கொண்டு செலவுசெய் யாமல்) இருக்கிற அறிவில்லாதலோபி (சேர்த்துவைத்துக் கொண்டுள்ள) செல்வத்தை, யானும் எனது எனது என்று இருப்பன் - (அப்பொரு ளோடு யாதொரு சம்பந்தமுமில்லாத) யானும் 'என்னுடையது என்னு டையது' என்று (அபிமானம்தோன்றக்) கூறிக் களிப்புற்றிருப்பேன்; தனது ஆயின்-(அச்செல்வம்) அவனுடையதாயிருக்குமானால், தானும் அதனை வழங்கான் பயன் துவ்வான்-அவன்தானும் அச்செல்வத்தைப் (பிறர்க்குக்) கொடுத்தலும் (அத்தச்செல்வத்தால்) இன்பப்பயனைத் தான் அனுபவித்தலுங்கூடுமே அது செய்கிறதில்லை: யானும் அதனை அது - நானும் அப்பொருளை அப்படியே [பிறர்க்குவழங்குதலும் பயன்துய்த்த லும் செய்யேன்]; (எ - று.)

சம்பாதித்த லோபி செல்வத்தை உபயோகப்படுத்தாமல் 'எனது' என்று சொல்வதற்கும், சம்பாதியாதவன் அப்படி சொல்வதற்கும் ஒன்றும் **வித்தியாசமில்லை**; ஏனெனில்,—செல்வத்தின் பயனாகிய தானனுபவித்த லும்பிறர்க்குக்கொடுத்தலும்இருவர்க்கும்இல்லையாதலால்என்பதுகருத்து.

மிக்க லோபகுணமுடைய ஒருவனது செல்வத்தைக் குறித்துப் பரிகாசஞ்செய்யுமியல்புடைய் ஒருவன் சொன்னதாக இச்செய்யுள் செய் **யப்பட்டதென அறிக.**

எனது-யான் என்பதனடியாப்பிறந்து அகரச்சாரியையும் 'து' விகுதியும் பெற்ற ஒன்றன்பாற் குறிப்பு வினையாலணையும் பெயர்; ஆரும்வேற்றுமைவிரியன்று. அடுக்கு, செல்வத்தினிடத்தில் மிக்க அன்பை விளக்க வந்தது. இரண்டாமடியில் அடுக்கைத் தொனியுணர்த்த வந்ததாகவுங்கொள்ளலாம். தன்னோடு இயைபில்லாத பொருளே எனது என்று கருதி அதனிடத்துப் பற்றுச்செய்யும் அபிமானம், மமகார மெனப்படும்; இதன் இனமாகிய தானல்லாத உடம்பையானென்பது-அகங்காரம். "நுண்ணுணர்வின்மை வறுமை" ஆதலால், அறிவாகிய செல்வமில்லாத லோபியை இங்கே 'ஏழை' என்றார்; இனி, செல்வமிருந்தும் பயன்பெறுமையால் அவன் வறியவனோடு ஒப்பனென்னுங் கருத்தால் ஏழையென்றதாகவும் கொள்ளலாம். ஏழையென்பது-உயர்திணைப்பெயராதலின், 'ஏழைபொருள்' என அதன்முன் வலி இயல்பாயிற்று. இனி, ஏழையானவன் பொருளே எனது எனது என்றிருப்பன் என எழுவாய்த்தொடராகவும் உரைக்கலாம். யானும், உம்மை-இறந்தது தழுவிய எச்சமும், இழிவுசிறப்புமாம்.

இப்பாட்டிற்கூறியுள்ள விஷயம் நகைப்பை விளைத்தலால், இப் பாட்டு **ஹாஸ்யரஸத்தின்** பாற்படும்.

"க்ருஹ மத்ய நிகாதேந, நநேந நநிநோ யதி-ப்ரமாம: கிந்ந தேதைரவ, நநேந நநிநோ வயம்" என்னும் வடநூல்மேற்கோள் உணரத்தக்கது. (சு)

உளை. வழங்காத் செல்வரி னல்கூர்ந்தா ருய்ந்தா
ரிழந்தா ரெனப்படுத லுய்ந்தா—ருழந்ததனைக்
காப்புய்ந்தார் கல்லுதலு முய்ந்தார்தங் கைகோவ
யாப்புய்ந்தா ருய்ந்த பல.

(இ - ள்.) வழங்காத செல்வரின்-(பொருளை) உபயோகப்படுத்தாத தனவான்களினும், நல்கூர்ந்தார்-வறுமைப்பட்டவர், உய்ந்தார்-(துன்பங்களினின்றும்) தப்பினர்; (அது எப்படியெனில்:—)இழந்தார் எனப்படுதல் உய்ந்தார்-(இருந்தபொருளை) இழந்து விட்டார்கள் எனப்படுகிற அபவாதத்தினின்றும் தப்பினர்கள்; அதனை உழந்து காப்பு உய்ந்தார்-அப்பொருளை வருந்திக்காப்பாற்றுகிற சிரமத்தினின்றுந் தப்பினர்கள்; கல்லுதலும் உய்ந்தார்-(அப்பணத்தைப் புதைத்து வைத்தற்பொருட்டு நிலத்தைத்) தோண்டுகிற வருத்தத்தினின்றுந் தப்பினர்கள்; தம் கை நோவ யாப்பு உய்ந்தார்-தமதுகைகள் நோகும்படி இறுகப் பிடித்தலினின்றுந் தப்பினர்கள்; உய்ந்த பல-(இங்ஙனம் அவர்கள்) தப்பினவை இன்னும் பல (உண்டு); (எ - று.)

இப்பாட்டோடு "வள்ளன்மையில்லாதான் செல்வத்தின் மற்றையோன், நல்குரவே போலு நனிநல்ல—கொன்னே, அருளில னன்பிலன் கண்ணறைய னென்று, பலரா லிகழப் படான்" என்ற **நீதிநெறிவிளக்கச்** செய்யுளை ஒப்பிடுக.

இழந்தா ரெனப்படுதல் முதலிய குறைகள் செல்வமுடையவரிடத்து மிகுதியாய் நிற்க, மற்றைப் பயன்பெறுதவிஷயத்தில் செல்வரும் வறியரும் **ஒப்பரென்பது** கருத்து.

'உய்ந்த பல' என்றது-அருளில்லாதவன், அன்பில்லாதவன், கண்ணோட்டமில்லாதவன், லோபி என்று பலராலும் இகழப்படுதல் முதலியன இன்மைபற்றி. "உடாஅது முண்ணுதுந் தம்முடம்பு செற்றுங், கெடாஅத நல்லறமுஞ் செய்யார்—கொடாஅது, வைத்தீட்டிஞ ரிழப்பர் வான்ரோய் மலைநாட, உய்த்தீட்டுந் தேனீக் கரி", "உண்ணுஞெளிரிரு ரேஞ்சு புகழ்செய்யான், துன்னருங்கேளிர் துயர்கூயான்—கொன்னே, வழங்கான் பொருள்காத்திருப்பானேல் அஆ, இழந்தானென்றெண்ணப் படும்" என்ற துணிபின்படி லோபிகள் செல்வம் நிலைபெரு தழிதலால், 'இழந்தா ரெனப்படுத லுய்ந்தார்' எனப்பட்டார். (எ)

உஎஅ. தனதாகத் தான்கொடான் முயத் தவருந்
தமதாய போழ்தே கொடாஅர்—தனதாக
முன்னே கொடுப்பி னவர்கடியார் தான்கடியான்
பின்னே யவர்கொடுக்கும் போழ்து.

(இ - ள்.) (சில குடும்பங்களில், பொருள்சேர்த்து வைத்தவன்), தனது ஆக-(அப்பொருள்) தனக்கு உரியதாயிருக்க, தான் கொடான்-(அப்பொழுது) தான் (அச்செல்வத்தைப் பிறாக்குத்) தானஞ்செய்யான்; தாயத்தவரும்-(பின்பு அப்பொருளைப் பெறுதற்கு உரிய) தாயத்தார் களும், தமது ஆய போழ்து-(அப்பொருள் அவன்காலத்தின்பின்) தம் முடையதாகியபொழுது, கொடார்-(தாமும் அதனைப் பிறர்க்குத்) தானஞ் செய்யார்; முன்னே-முன்பு [சம்பாதித்தவன்வாழ்ந்துள்ளகாலத்தில்], தனது ஆக-(அச்செல்வம்) தன்னுடையதாயிருக்கையில், கொடுப்பின்-(அதனைத் தான் பிறர்க்குக்) கொடுத்தால், அவர் கடியார்-அத்தாயத்தவர் விலக்கமாட்டார்; பின்னே-பின்பு [அவனிறந்தபின் அச்செல்வம் தாயத் தாருடையதாயிருக்கையில்], அவர் கொடுக்கும் போழ்து-அத்தாயத்தவர் தானஞ்செய்யுஞ்சமயத்தில், தான் கடியான்-(அப்பொருளை ஈட்டியவன்) வந்துவிலக்கமாட்டான்; (எ - று.)

பொருளைச்சம்பாதித்தவன் தானதருமங்கள் செய்யாமலேஉலோபத் தோடு இறந்தாலும், அதன்பின் அச்செல்வத்தை அடையும் தாயத்தாரா வது "பிறர்க்குதவி செய்யார் பெருஞ்செல்வம் வேறு, பிறர்க்குதவியாக்கு பவர்பேரும்" என்றபடி நல்வழியிற் செலவுசெய்து புகழும் புண்ணியமும் பெறுதல்கூடும்: அங்ஙனமுமில்லாமல் அனைவருமே பெரிய லோபிகளா யுள்ள சிலகுடும்பத்தாரைப்பற்றி இச்செய்யுள் செய்யப்பட்டதென அறிக.

தாயத்தவரும், உம்மை-இறந்தது தழுவிய எச்சம். தாயமாவது-தமப் பன் பாட்டன் முதலானோர் மூலமாக வந்த பொருள்; அதனையெடுத்துக்கொ ள்ளத்தக்க தந்தைவழிச்சுற்றத்தவர்-தாயாதர்: அவரே இங்கு 'தாயத்தவர்' எனப்பட்டவர். ஏ-இசைநிறை. கொடாஅர்-அளபெடை, செய்யுளோசை நிறைப்பது. தனதாகக் கொடுப்பின் என்பதற்கு-தனக்குப் புண்ணியமும் புகழும் உண்டாம்படி தானஞ்செய்தா லென்றும் பொருள் கொள்ளலாம். முன், பின்-காலங்குறித்தன; ஏ, ஐ-சாரியைகள். (அ)

உஎகூ. இரவலர் கன்றுக வீவாரா வாக
விரகிற் சுரப்பதாம் வண்மை—விரகின்றி
வல்லவ ரூன்ற வடியாமேபோல் வாய்வைத்துக்
கொல்லச் சுரப்பதாங் கீழ்.

(இ - ள்.) இரவலர்-யாசகர், கன்றுஆக-கன்றை ஒப்ப, ஈவார்-கொடுப்பவர், ஆ ஆக-பசுவை ஒப்ப, விரகின் சுரப்பது-உற்சாகத்தோடு பயன்தருவதே, வண்மை ஆம்-தானகுணமாம்; விரகு இன்றி-(அப்படிப்பட்ட) உற்சாகமில்லாமல், வல்லவர் ஊன்ற வடி ஆ போல்-வலிமையுடையவர்கள் அழுத்தி வருத்தப் பால்தருகிற பசுப்போல, வாய்வைத்து கொல்ல-பல உபாயங்களாச்செய்து வருத்த, சுரப்பது-பயன்தருவது, கீழ் ஆம்-கீழ்மைக்குணமாம்.

கன்றைக்கண்டமாத்திரத்தில் மகிழ்ச்சியோடு பாலைச்சுரக்கும்நல்ல சாதிப்பசுப்போல, இரப்பவரைக்கண்டமாத்திரத்தில் சிறிதும் வெறுப்பில்லாது மகிழ்ச்சியோடு அவர்க்குவேண்டியபொருளைக் கொடுப்பதுதான் கொடை; கன்று வாயைவைத்து ஊட்டிவருத்தவும் பிறர் பலவாறுபிடித்து அழுத்தவும் மனமின்றிப் பால்சுரக்கிற அற்பசாதிப் பசுப்போல, இரப்பவர் வாயினற்பலபேசி வருத்தவும் மற்றும்பலர் பலவாறு நிர்ப்பந்தப்படுத்தவும் வெறுப்போடுகொடுப்பதுகொடையாகாதுஎன்பது கருத்து. **உவமையணி.**

இரவலர்-இரத்தலில் வல்லவர்; இர வலர் எனப் பிரிக்க: அல்லது இரத்தலேயுடையவர்; இரவல் அர் எனப்பிரிக்க: இரவல் என்னுந் தொழிற் பெயரில், அல்-விகுதியாம். கன்று-இளமைப்பெயர்; "யானேயுங் குதிரையுங் கழுதையுங் கடமையும், ஆனை டைந்துங் கன்றென்றற் குரிய" என்பது **தொல்காப்பியம்.** ஆக-உவமவுருபு. விரகின்-பக்குவமாக, சிரமமின்றியென்றபடி. வண்மையென்னும் பண்புப்பெயரில், வள்-பகுதி. வாய்-வாயில்; உபாயம். இனி, 'வாய் வைத்துக்கொல்ல' என்பதற்கு-நேர்ந்த இடங்களில் நிந்தனை செய்து வருத்த என்றும், உறுப்பிடங்களில் கருவிகளாக்கொண்டு நோவுபண்ண என்றும் பொருள்கொள்ளலாம். கொல்லுதல் என்பது-இங்கே மிக்க துன்பஞ்செய்தலே உணர்த்தி நின்றது; "தன்னையே கொல்லுஞ் சினம்" என்ற **திருக்குறளிற்**போல: அங்கு இக்காலடியாரையேமேற்கோள் காட்டினர் பரிமேலழகர். வடி-வினைத்தாகை; வடித்தல்-ஊற்றுதல்; இங்கே பால்சுரத்தல். கீழ்-கீழ்மையென்னும் பண்புப்பெயரின் விகாரம். (கூ)

உஅ0. ஈட்டலுந் துன்பமற் றீட்டிய வொண்பொருளைக்
காத்தலு மாங்கே கடுந்துன்பங்—காத்தல்
குறைபடிற் றுன்பங் கெடிற்றுன்பந் துன்பக்
குறைபதி மற்றைப் பொருள்.

(இ - ள்.) ஈட்டலும்-(பொருளைச்) சம்பாதித்தலும், துன்பம்-வருத்தமாம்; மற்று-பின்பு, ஈட்டிய ஒள் பொருளை-அங்ஙனம் சம்பாதித்த சிறந்த செல்வத்தை, காத்தலும்-பாதுகாத்தலும், ஆங்கே-அவ்வாறே, கடு துன்

பம்-மிக்கவருத்தமாம்; காத்தல்குறைபடின்-அப்பாதுகாப்புக் குறைந்தால், துன்பம்-வருத்தமாம்; கெடின்-(அச்செல்வம்) அழிவடைந்தால், துன்பம்-வருத்தமாம்; (ஆதலின், இவ்வாறு), பொருள்-செல்வம், துன்பக்கு உறை பதி-(பலவகை)வருத்தங்கட்கும் இருப்பிடமாம்; (எ-று.)—மற்றை-அசை.

இப்பாட்டோடு " இன்னல்தரும் பொருளை யீட்டுதலுந் துன்பமே, பின்னதனைப் பேணுதலுந் துன்பமே-அன்ன, தழித்தலுந் துன்பமே யக்தோ பிறர்பா, ழிழத்தலுந் துன்பமே யாம் " என்ற **நீதிவெண்பாவை** ஒப்பிக்க. "ஒண்பொருள், செய்வ மென்பார்க்குந் துயிலில்லை யப்பொருள், காப்பார்க்குமில்லை துயில் " என்றார் **நான்மணிக்கடிகையிலும்.**

துன்பத்துக்குக் காரணமானதைத்துன்பமெனக்காரியமாக்கூறியது **உபசாரவழக்கு.** உம்மைகள் இரண்டும்-முறையே எதிரதும் இறந்ததுந்தழுவிய எச்சப்பொருளன. மற்று என்னும் இடைச்சொல்-இங்கே, பின் என்னும் பொருளது. 'ஒன்பொருள்' என்றது, செல்வம்இம்மை மறுமைகளிற் புகழ் புண்ணியங்களை விளைத்து அறத்துக்கும் இன்பத்துக்குங் காரணமாகுஞ்சிறப்புப்பற்றி; இனி, ஒண்பொருள்-தருமவழியாற் சேர்க்கப்பட்ட பொருளென்றுங் கொள்ளலாம். துன்பக்கு-அத்துச் சாரியை தொக்கது.

" அர்த்தாநாமார்ஜநே துஃ கம், ஆர்ஜிதாநாஞ்ச ரக்ஷணே-ஆயேவ்யயே மஹத்துஃ கம், கத மர்த்தாஸ் ஸுகாவஹாஃ " என்பது, இதற்கு நேரான வடநூல் மேற்கோள். (கo)

உக - ஆம் அதிகாரம்.—இன்மை.

அஃதாவது-ஐம்பொறிகளால் அனுபவிக்கப்படும் பொருள்யாவும் இல்லாமை; இவ்வாமை முற்பிறப்பில் ஈயாமையின் பயனதலால், அக்காரண காரிய முறைபற்றி ஈயாமையின்பின் வைக்கப்பட்டது. இன்மை-எதிர்மறைப் பண்புப்பெயர்.

உஅக. அத்திட்ட கூறை யரைச்சுற்றி வாழினும்
பத்தெட் டுடைமை பலருள்ளும் பாடெய்து
மொத்த குடிப்பிறந்தக் கண்ணுமொன் றில்லாதார்
செத்த பிணத்திற் கடை.

(இ - ள்.) அத்து இட்ட கூறை-செங்நிறம் பொருந்திய **ஆடையை** [காஷாயவஸ்திரத்தை], அரை சுற்றி வாழினும்-இடையிலே கட்டிக்கொண்டு உயிர்வாழ்ந்தாலும்[துறவிகளாயிருந்தாலும்], பத்து எட்டுஉடைமை-பத்தாயினும் எட்டாயினும்பொருளை உடைத்தாயிருத்தல், பலருள்ளும் பாடெய்தும்-பலசனங்களுள்ளும் பெருமையை யடையும்; ஒத்த குடி பிறந்தக்கண்ணும்-(உலகத்தாரதுமதிப்புக்கு) ஏற்ற உயர்குலத்திற்பிறந்தாலும், ஒன்று இல்லாதார்-சிறிதும்பொருளில்லாதவர், செத்த பிணத்தின் கடை-உயிர்நீங்கிய உடம்பாகிய பிணத்தினுங் கடைப்பட்டவராவர் ; (எ - று.)

சக்கியாசியாயிருந்தாலும், சிறிதாயினுஞ் செல்வமிருந்தால்தான் ஒருவனைப் பலரும் பெருமைப்படுத்துவார்கள் : உயர்ந்த குலத்திற் பிறந்திருந்தாலும் சிறிதும் பொருளில்லாதிருந்தால், ஒருவனே எவரும் லட்சியஞ் செய்வாரில்லை என உலகவியல்பு கூறியவாறு. பிணத்துக்காயினும் அந்திம கிரியைகளில் சில உபசாரங்கள் நேர்கின்றன ; செல்வமில்லாதவரையோ எந்தவிதத்திலும் உபசரிப்பாரில்லை யென்பார், 'பிணத்திலும் கடை' என்றார். ''கொடிது கொடிது வறுமை கொடிது'' என்றார் **ஔவையாரும்.** பலர் உள்ளும்பாடு எனப் பிரித்து, பலருங் கருதும் மதிப்பு எனினுமாம்.

வறுமையின் இழிவைக் கூறுவார், செல்வத்தின் உயர்வையும் உடன் கூறினர். வாழினும், உம்-இழிவு சிறப்பு. பலருள்ளும், உம்-முற்று. பிறந்தக்கண்ணும், உம்-உயர்வுசிறப்பு. துறவிகள் காஷாயவஸ்திரம் தரித்தல் மரபு. இனி, அத்து இட்ட கூறை என்பதற்கு-தையல் நிறைந்த துணி யென்றும் பொருள் கொள்ளலாம். 'அத்து' என்றது-இவ்விருபொருளையு முடையதாதலை, '' **அரைப்பட்டிகையுந் துன்னமுமசைச்சொல்லும்,** செந்நிறமும் மிலை தெரியில் அத்தென்ப '' என்னும் **பிங்கலந்தையிலுலும்** அறிக. [இதில் துன்னம்-தையல், ஒன்றோடொன்று-இசைத்தல்.] பாதி யென்னும் பொருள் தரும் அரையென்பது-இங்கே, உடம்பின் மத்திய பாகத்துக்கு ஆகுபெயர். பத்து எட்டு-அப்பொருளுக்கு எண்ணலளவாகு பெயர். இவற்றின்பின் ஐயவும்மைகள் செய்யுள் விகாரத்தால் தொக்கன வென்க. பாடெய்தும்-பெருமைபெறுதற்குக் காரணமாமென்க ; **உபசார வழக்கு.** 'செத்த' என வேண்டாதுவந்த அடைமொழி, பிணத்தின் பயனின்மையை நன்குவிளக்கும். செத்து, சா-பருதி. கடை-கடையர் ; பண்பாகுபெயர். 'பதருள்ளும்' என்ற பாடத்துக்கு - அசாரமானவருளாயினு மென உரைக்க. (க)

உஅஉ. நீரினு நுண்ணிது நெய்யென்பர் நெய்யினும்
யாரு மறிவர் புகைநுட்பந்—தேரி
னிரப்பிடும்பை யாளன் புகுமே புகையும்
புகற்கரிய பூழை நுழைந்து.

(இ - ள்.) நீரினும்-(எல்லாப் பொருள்களினும் நுட்பமாயுள்ள) நீரைக் காட்டிலும், நெய் - நெய்யை, நுண்ணிது என்பர் - நுட்பமானது என்று (யாவரும் அறிந்து) சொல்வார்கள் ; நெய்யினும்-அந்நெய்யைக்காட்டிலும், புகை நுட்பம்-புகையினது நுண்ணிதாயிருக்குந்தன்மையை, யாரும் அறிவர்-எல்லோரும் அறிவார்கள் : தேரின்-ஆலோசித்தறிந்தால், இரப்பு இடும்பை ஆளன்-இரத்தலாகிய துன்பத்தையுடையவன், புகையும்புகற்கு அரிய பூழை-(அதினுநுட்பமான) அந்தப்புகையும் உட்புகுதற்கு முடியாத துவாரத்தில், நுழைந்து புகும்-நுழைந்து செல்வான் ; (எ - று.)

யாசகன் மிகவும் நொய்யவனென அவனது இழிபைக் கூறியவாறு. 'புகையும் புகுதற்கு அரிய பூழை நுழைந்துபுகும்' என்றது, **கவி அதிசயோக்தியாக** வருணித்துக் கூறியது.

எ-தேற்றம் ; ஈற்றசையுமாம். உம்மைகள் மூன்றும்-இழிவுசிறப்பு ; அவற்றின் நுண்மையைக் காட்டுதலால். இவற்றில் நுண்மை யென்றது, மிகச்சிறிய துளையிலும் நுழைதற்கேற்ற சிறுமையை. துன்பத்துக்குக் காரணமானதைத் துன்பமென்றது, **உபசார வழக்கு**. இனி, இரப்பிடும்பை -இரப்பிலு லாகிய துன்பமென்றுமாம். நிரப்பு எனப் பதம்பிரித்து, வறுமைத்துன்பமெனப் பொருள்கொள்ளினுலும் அமையும்; நிரப்பு - வறுமையாதலை, "நெருநலுங், கொன்றதுபோலு நிரப்பு," "நிரப்பினுள், யாதொன்றுங் கண்பாடரிது" எனத் **திருக்குறளி**லுங் காண்க. எல்லாப் பொருள்களும் நிரம்பியிருத்தலைக் குறிக்கும் 'நிரப்பு' என்னும் முதனிலை திரிந்த தொழிற் பெயர், **எதிர்மறையிலக்கணையால்**, பொருளொன்று மில்லாமையைக் குறிக்குமென்க. பூழை-புழை யென்பதன் நீட்டல். (உ)

உஅசு. கல்லோங் குயர்வரைமேற் காந்தண் மலராக்காற்
செல்லாவாஞ் செம்பொறி வண்டினங்—கொல்லைக்
கலாஅற் கிளிகடியுங் கானக நாட
விலாஅர்க் கில்லைத் தமர்.

(இ - ள்) கொல்லை - கொல்லைகளிலே, கலால் - கற்களைக்கொண்டு, கிளி-கிளிகளை, கடியும்-(தினைப்புனங்காப்பவர்) அதட்டி ஓட்டுதற்கு இடமான, கான் அகம் - காட்டினிடத்தையுடைய, நாட - நாட்டையுடைய அரசனே!—கல் ஓங்குயர் வரைமேல்-கற்களால் வளர்ந்துள்ள மலையின் மேலே, காந்தள்-காந்தட்செடிகள், மலராக்கால்-பூப்பவாவிட்டால், செம்பொறி வண்டு இனம்-சிவந்த உடற்புள்ளிகளையுடைய வண்டுகளின் கூட்டங்கள், செல்லா ஆம்-(அவற்றினிடத்துப்) போகாவாம்; (அதுபோலவே), இலார்க்கு-பொருளில்லாதவர்கரு, தமர் இல்லை - (விரும்பிவரும்) இனத்தவர் உளராகார் ; (எ-று.)

காந்தள் பூவாதபோது வண்டுகள் அதனிடம் செல்லாமைபோல, ஒருவன்செல்வமுடையனுகாதவிடத்து அவனிடம்உறவினர்வாராரென்பதாம். இதிற் காந்தளென்றதைப் பிறமலர்களுக்கும் உபலக்ஷணமென்னலாம்.

எடுத்துக்காட்டுவமையணி. முன்னிரண்டடி - உபமான வாக்கியம் ; இறுதியடி-உபமேய வாக்கியம். தனிச்சொல்லோடு கூடிய மூன்றுமடி-ஆசிரியமுன்னிலை. மருதநிலமாகிய அந்நாட்டை அடுத்துள்ள முல்லை குறிஞ்சி நிலங்களின் மாட்சிமை கூறுவார், 'கொல்லைக் கலாற் கிளிகடியுங்கானகநாட' என்றார். "மணி நீரு மண்ணு மலையுமணிநிழற், காடு முடைய தரண்" எனக்கூறப்பட்ட நீரரண் நிலவரண் மலையரண் காட்டரண் என்னும் நால்வகை யரண்களுள் மலையரண் காட்டரண்களின் அமைதியை 'கொல்லைக் கலாற் கிளிகடியுங் கானகநாட' என்றதனுல் **உணர்த்தினு** ரெனக் கொள்ளலு மொன்று.

கல்லால்-கலால் எனச்செய்யுளிகாரத்தால்தொக்கது. கல்லால் என்பதற்கு இரத்தினங்களாலென்று பொருள்கொண்டால், செல்வச்சிறப்பை **விளக்கும்**. கான்-காநநம் என்னும் வடமொழியின் திரிபு. அளபெடை

இரண்டும்-செய்யுளோசை நிறைப்பன. "செறுஅஅய் வாழிய நெஞ்சு" என்ற திருக்குறளிற்போல, இலாஅஅர்க்கு என்பதில் ஈரளபெடுத்தது; மாத்திரை நான்கு. உஉ0-ஆம் பாட்டின்உரையைப் பார்க்க. தமர் - தம்மவர்; தாம்-பகுதி, முதல் குறிப்பினது-விகாரம். ஓங்கு உயர் - ஒரு பொருட் பன்மொழி யென்றும் கொள்ளலாம். (கூ)

உஅச. உண்டாய போழ்தி னுடைந்துழிக் காகம்போற்
றொண்டா யிரவர் தொகுபவே—வண்டாய்க்
திரிதருங் காலத்துக் தீதிலரோ வென்பா
தொருவரு நில்வலைத் தில்.

(இ - ள்.) உடைந்த உழி - (உடம்பு உயிர்நீங்கிச்) சிதைந்தவிடத்து, காகம்போல்-அளவில்லாத காக்கைகள் (அதனைத்தின்பதற்கு அவ்விடம் வந்துசேர்தல்) போல, உண்டு ஆய போழ்தின்-(ஒருவர்க்குச் செல்வம்) உண்டானபொழுதில், ஆயிரவர்-ஆயிரம்பேர், தொண்டி-அடிமையாய், தொகுப-வந்து கூடுவார்கள்; (அவ்வொருவர்தாமே), வண்டு ஆய் திரிதரும்காலத்து-வண்டைப்போன்று (பலவிடத்தும் உணவின்பொருட்டு) அலையுங்காலத்தில், தீது இலிரோ என்பார் ஒருவரும்-(அவரை நோக்கி 'நீர் துன்பமில்லாம லிருக்கிறீரோ?' என்று தமம் விசாரிப்பவர் ஒருவரும், இலை-இல்லை. உலகத்துஇல் - இந்த உலகத்தில் இல்லை[அரிய தென்றபடி].

இழிவுதோன்ற, பிறர்பொருளை உண்ண விரும்பி அப்பொழுது மாத்திரம் ஓடிவருகின்ற துர்க்குணமுடைய பலர்க்குப் பிணம்பிடுங்கித் தின்னுங் காக்கையை உவமைகூறினார். இம்மை செல்வத்துக்குப் பிணம் உவமையாவது, அதன் நிலையில்லாமையை விளக்கும். வண்டுகள் பூக்களுள்ள விடங்களில் லெல்லாந் தேடிச்சென்று அலைந்து பலபூக்களிலு முள்ள தேனை உட்கொள்வதுபோல, இப்பவர் கொடையாளிகளுள்ள விடங்களிலெல்லாந் தேடிப் பலதிக்குக்களிலுஞ் சென்று அலைந்து அவர்களிட முள்ள பொருளைப் பெற்று உண்ணும் இரத்தல்தொழிலின் இயல்பை விளக்க, 'வண்டாய்த் திரிதரும்காலத்து' என்றார். **உவமையணி.**

போழ்தின், இன்-ஏழனுருபு. உடைந்துழி-உடைந்தவுழி: பெயரெச்சத்தின் அகரவீறு தொகுத்தல். 'உடைந்துழி'-எதிர்காலவினையெச்சமுமாம். காகம்-வடசொல்; கா என்று கத்துதல்பற்றி வழங்கும் பெயர். ஆயிரவர் - எண்ணடியாப்பிறந்த பலர்பாற்பெயர். தொகுப-பலர்பால் முற்று. எ-தேற்றம். ஆய்-உவமவுருபு. செல்வமில்லாத காலத்தில் யோகமேமம்விசாரிக்கும் ஒருவனது உயர்வுவிளங்குதற்கு, மரியாதைப்பன்மையாகக் கூறினரென்க. (ச)

உஅடு. பிறந்த குலமாயும் பேராண்மை மாயுஞ்
சிறந்ததங் கல்வியு மாயுங்—கறங்கருவி
கன்மேற் கழூஉங் கணமலை நன்னாட
வின்மை தழூவப்பட் டார்க்கு.

(இ-ள்.) கறங்கு-ஒலிக்கின்ற, அருவி-நீரருவிகள், கல்மேல்-கற்களின் மேல் (விழுந்து), கழூஉம்-(அக்கற்களின்மாசைப் போக்கிச்) சுத்தி செய்தற்கிடமான, கணம்-கூட்டமாகிய, மலை-மலைகளையுடைய, நல்-சிறந்த, நாட-நாட்டையுடையவனே!— இன்மை தழுவப்பட்டார்க்கு - வறுமையால் அடையப்பட்டவர்களுக்கு,—பிறந்த குலம் மாயும்-(அவர்கள்) பிறந்த நற்குடியின் பெருமையும் அழியும்; பேர் ஆண்மை மாயும்-சிறந்த ஆண்மைக் குணங்களும் அழியும்; சிறந்த தம் கல்வியும் மாயும்-(எல்லாப்பொருளினும்) சிறந்த அவர்களது கல்வித்திறமையும் அழியும்; (எ - று.)

பொருளில்லாதார்க்குக் குடிப்பிறப்பு முதலிய மேன்மைகள் இருந்தாலும் அவர் சிறப்படையா ரென்பதுகருத்து. ஆண்மை-பராக்கிரம மென்றுவது, அறிவு நிறை ஓர்ப்புக் கடைப்பிடி யென்னும் ஆண்குணம் நான்கு மென்றுவது கொள்க.

மழையில்லாத காலத்தும் வற்றுதலில்லாத நீர்ப்பெருக்கத்தின் அமைதியை அந்நாட்டிற்குக் கூறி அதன்வளத்தைத் தெரிவிப்பா, 'கறங்கருவிகன்மேற்கழூஉங் கணமலைநன்னாட' என்றார். கழூஉம்-கழுவும் என்பது விகாரப்பட்டு அளபெடுத்தது; சொல்லிசையளபெடை. கணம்-வடசொல். நாட்டுக்கு நன்மை-நிலவளம் நீர்வளம் முதலிய பலவளங்களு முடைமை. அடைமொழி கொடாமற் பொதுப்படக்கூறினுல் அச்சொற்கள் பெரும்பரலும் சிறப்பையே குறிப்பது மரபாதலால், 'பிறந்த குலம்' என்றது-உயர்குலமாயிற்று; குடிப்பிறப்பு, ஒழுக்க முடைமை, குணசாலி, அறிவுடையான், கந்தமலர் என்பன காண்க.

"குடிப்பிறப் பழிக்கும் விழுப்பங் கொல்லும், பிடித்த கல்விப் பெரும்புணை விடும், நாணணி களையு மாணெழில் சிதைக்கும், பூண்முலை மாதரொடு புறங்கடை நிறுத்தும், பசிப்பிணியென்னும் பாவி" என்ற **மணிமேகலை**யையும், "தொல்வாவுந் தோலுங் கெடுக்குந் தொகையாக, நல்குர வென்னு நசை" என்ற **நிருக்குறளை**யும், "நலனு மிளமையு நல்குரவின் கீழ்ச்சலம்" என்ற **நான்மணிக்கடிகை**யையும், "மானங் குலங் கல்வி வன்மை யறிவுடைமை, தானந்தவமுயற்சி தாளாண்மை—தேனின், கசிவந்தசொல்லியர்மேற்காமுறுதல் பத்தும், பசிவந்திடப் பறந்து போம்" என்ற **நல்வழி**யையும் இங்கே அறிக. (இ)

உஅசு. உள்கூர் பசியா ழுழைநசைஇச் சென்றார்கட்
குள்ளு நிருந்துமொன் றூற்றுதா—ளுள்ளு
நிருந்துயிர் கொன்னே கழியாது தான்போய்
விருந்தின ளுதலே நன்று.

(இ - ள்.) உள்-வயிற்றினுள்ளே, கூர்-மிகுந்த, பசியால்-பசியினாலே, உழை-தன்னிடத்தை, நசைஇ-விரும்பி, சென்றார்கட்கு-வந்து அடைந்தவர்களுக்கு, உள் ஊர் இருந்தும்-ஊர்க்குள்ளே யிருந்தும், ஒன்று ஆற்றுதான்-ஒருதவியுஞ்செய்யமாட்டாத வறியவன், உள் ஊர் இருந்து - அந்த ஊரினுள்ளேயிருந்து, உயிர்-தனது உயிர்வாழ்நாளை, கொன்னேகழியாது -வீணைக் கழியாமல், தான் போய்விருந்தினன் ஆதலே-தான்(வேறுஊர்க்குப்) போய் (ஒருவனுக்கு) விருந்தாளியாவதே, நன்று-நல்லது; (எ - று.)

தன்னிடம் பசித்துவந்தவர்கட்கு உதவிசெய்யமாட்டாத தரித்திரன் ஓர் ஊர்க்குள்ளே இருந்து குடித்தனஞ்செய்தலைக்காட்டிலும் எங்கேயாகிலும் போய்ப்பிச்சையெடுப்பது நல்லது என்பதாம்; எனவே, "இன்மை வேண்டின் இர வெழுக" என்றபடி யாசகனுய்ப் புறப்படுவது எல்லாவற்றினுந் துன்பந்தருவதென்பது பிரசித்தம்: அதனினுங்கீழ்ப்பட்டதாகும் பொருளில்லாமை என்பது கருத்து. இதனால், இரந்தாயினும் பொருள் சேர்த்தல் வேண்டுமென்பது போதரும். பொருளுள்ளவன் ஊரினுள் இருந்து பிறர்க்கு உதவுதலுஞ் செய்வானுதலால், பலர்க்கும் பயன்படுதல் கூடும்: பொருளில்லாதவன் ஊரினுள் இருந்தும் எவர்க்கும் பயன்படான் எனப் பொருளில்லாதானது பயனற்ற் தன்மையை விளக்கியவாறு.

கூர்-மிகுதியுணர்த்தும் உரிச்சொல். நசை என்ற பெயர்ச்சொல்-நசைஇ என அளபெடுத்து, நசைந்து என்ற வினையெச்சத்தின் பொருளைத் தந்தது; "உரனசைஇ யுள்ளந் துணையாகச்சென்றூர், வரனசைஇயின்னு முளேன்" என்ற **திருக்குறளி**ற்போல; இது செய்யுளோசை குறையாத விடத்து வந்த **சொல்லிசையளபெடை**. ஊரினது உள்-உள்ளூர்; முன் பின்னுகத் தொக்க ஆறும்வேற்றுமைத்தொகை: இது, இலக்கணப் போலியின் பாற்படும். அது-பிறர்க்குப் பயன்படத்தக்க உள்ளூரிலிருத்தலின் தகுதியை விளக்கும். உயிர்-உயிர்வாழும் நாளுக்கு இருமடியாகு பெயர். ஒருவன் பிறப்பெடுத்ததற்குப் பயன் தன்னிடம் ஒரு பொருளை விரும்பிவந்தவர்க்கு உதவுதலே யாதலால், அது செய்யாது விடுதலை 'உயிர்கொன்னே கழித்தல்' என்றூர். விருந்து-புதுமை: பண்புப்பெயர்; புதியனுய்ச் செல்பவன், விருந்தினன். ஆற்றூதான் என்பது-அதிகாரத்தால், செல்வமில்லாதவ னென்றதாயிற்று.

இனி: இப்பாட்டுக்கு "இரத்தலி னின்னுது மன்ற நிரப்பிய, தாமே தமியருணல்" என்ற **திருக்குறளி**ன் கருத்தோடொப்ப, உள்ளூரிலிருந்தும் பசியால் வந்தவர்க்கு ஒன்றைத்தராமல் தானே உண்பவன் அவனனுஞ் செய்தலினும் இரத்தலே நல்லது என்றும்பொருளுரைக்க இடமுண்டு.(சு)

உஅள. நீர்மையே யன்றி நிரம்ப வெழுந்தகங்
கூர்மையு மெல்லா மொருங்கிழப்பர்—கூர்மையின்
முல்லை யலைக்கு மெயிற்றுய் நிரப்பென்னு
மல்ல லடையப்பட் டார்.

(இ - ள்.) கூர்மையின்-கூர்மையையுடைய, முல்லை-முல்லையரும்பின் சிறப்பை, அலைக்கும்-அழியச்செய்கின்ற, எயிற்றுய்-பற்களையுடையவளே! நிரப்பு என்னும்-வறுமையென்கிற, அல்லல்-துன்பத்தால், அடையப்பட்டார்-சேரப்பட்டவர்கள், நீர்மையே அன்றி-(தமது) நற்குணங்களோமாத்திரமேயல்லாமல், நிரம்ப எழுந்த-பூரணமாய்ச்சிறந்துநிற்கிற, தம் கூர்மையும்-தமது அறிவின் நுட்பத்தையும், எல்லாம்-மற்றுமுள்ள சிறப்புக்களெல்லாவற்றையும், ஒருங்கு-ஒருசேர, இழப்பர்-இழந்து விடுவார்கள்; (எ - று.)

பொருளிலாதாருடைய நற்குணம் முதலியவை விளங்கா என்பது **கருத்து.**

நீர்மையே என்ற ஏகாரத்தை உயர்வுசிறப்பாகவாவது பிரிநிலையாகவாவதுகொள்க. கூர்மையும், உம்-இறந்ததுதழுவிய எச்சம். ஒருங்கு-எஞ்சாமைப் பொருள்தரும் இடைச்சொல். கூர்மை, வெண்மை, அழகு இவற்றில் முல்லைமலரினும் பல் சிறந்த தென்பார், 'கூர்மையின் முல்லையலக்கு மெயிறு' என்றார். முல்லை-அதன்மலருக்கு, முதலாகுபெயர். அல்லல்-இங்கே, துன்பத்துக்குக் காரண மென்றபடி. நிரப்பென்னும் அல்லல்-காரணம் காரியமாக உபசரிக்கப்பட்டது. 'எல்லா மொருங்கிழப்பர்'—"ஸர்வம்ஹரந்யம் தரித்ரஸ்ய" என்பர் வடநூலார். (எ)

உஅஅ. இட்டாற்றுப் பட்டோன் றிரந்தவர்க் காற்றாது
முட்டாற்றுப் பட்டு முயல்வுள்ளூர் வாழ்தலி
னெட்டாற்றுச் சென்று நிரைமனையிற் கைநீட்டுங்
கெட்டாற்று வாழ்க்கையே நன்று.

(இ - ள்.) இட்டு-பொருள் சுருங்கிய, ஆறு-(வறுமையின்) வழியிலே, பட்டு-அகப்பட்டு, ஒன்று-(யாதாயினும்) ஒருபொருளை, இரந்தவர்க்கு-யாசித்தவர்கட்கு, ஆற்றாது-கொடுக்கமாட்டாமல், முட்டு ஆறு பட்டு-சங்கடமான வழியிலேபொருந்தி, முயன்று-(தன்னைப்பாதுகாத்துக் கொள்ளுதற்குமாத்திரம்) பிரயத்தனப்பட்டு, உள் ஊர்-ஊரினுள்ளே, வாழ்தலின்-வாழ்தலைக்காட்டிலும், நெடு ஆறு சென்று-தூரமான வழியிலேபோய், நிரை மனையில்-வரிசையாயுள்ள வீடுதோறும், கை நீட்டும்-(பிச்சைவாங்குதற்குக்) கையை நீட்டுகிற, கெடு ஆறு வாழ்க்கையே-கெடு வழியில் வாழ்தலே, நன்று-நல்லதாம்; (எ - று.)

இப்பாட்டில் அமைந்தது இவ்வதிகாரத்தின் ஆரும்பாட்டின் கருத்தே யாதலும், அந்தப் பாடலில், இல்லறத்தானுக இருந்தே வேற்றூர் சென்று இரத்தல் நன்று என்று கூறியதாகவும், இப்பாடலில் துறவியாகியிரத்தல் நன்று என்று கூறியதாகவும் வேறுபாடு காணலாம்.

இட்டு என்பது-சிறுமையென்னும் பொருளதாதலை "ஆகாறளவிட்டிதாயினுங் கேடில்லை" எனத் திருக்குறளிலும், "இட்டிடைப்பின்னேகேள்வர்" எனத் திருச்சந்தவிருத்தத்திலுங் காண்க. இட்டு ஆறு-சிறியதான வழி; எனவே, எளிய வறுமைநெறியாயிற்று. முட்டு ஆறு - வருத்தமான வழி; எனவே, இதுவும் வறுமையாம். இட்டாற்றுப்படுதல் இரந்தவர்க்கும், முட்டாற்றுப் படுதல் இரக்கப்பட்டவர்க்குங் கொள்க. வாழ்தலின் நன்று என இயையும். 'நிரைமனை' என்ற பாடத்துக்கு-பொருள்நிறைந்த வீடு என்க. கெட்டவாறு என்பது-கெட்டாறு எனப் பெயரெச்சவீறு தொகுத்தல்; வேட்டகம், அட்டில் என்பவற்றிற் போல. (அ)

உஅக. கடகஞ் செறிந்ததங் கைகளால் வாங்கி
யடகு பறித்துக்கொண் டட்டுக்—குடைகலனு
வப்பிலி வெந்ததின் புள்ளற்று வாழ்பூவே
துப்புரவு சென்றுலந்தக் கால்.

(இ-ள்.) துப்புரவு-அனுபவிக்கப்படும் பொருள்கள், சென்றுலந்தக் கால்-அழிந்தழிந்தால், (அவ்வேழைகள்), கடகம் செறிந்ததம் கைகளால்-

முன்னே) கடகமென்னுங் கைவளைகள் பொருந்தியிருந்த தமது கைகளாலே, வாங்கி - (பக்கங்களிலுள்ள ஊறுகளை அப்பால்) தள்ளி, அடகு - கீரைகளை, பறித்துக்கொண்டு-பறித்துக்கொண்டுபோய், அட்டு-சமைத்து, குடைகலன்ஆ - (நுங்கெடுத்த பனங்காய் தேங்காயோடு முதலிய) குடையப்பட்ட பொருள்களையுடைய (வேறு பாத்திரமில்லாமையால்) உண்கலமாகக் கொண்டு, (அவற்றில்), உப்பு இலி வெந்தை தின்று - உப்பில்லாத (அந்த) வெந்த கீரையைப்புசித்து, உள்அற்று-மனவூக்கங்கெட்டு, வாழ்ப-வாழ்வார்கள் ; (எ - று.)—ஏ - இரக்கம்.

இப்பாட்டு-செல்வமில்லாமையின் தன்மையைச் சொல்வதாய் இவ்வதிகாரத்தில் வைக்கப்பட்டாலும், இதனை 'செல்வநிலையாமை' என்ற அதிகாரத்திற் சேர்த்தல் மிகப் பொருந்தும் ; அங்ஙனமிருக்கவும், இந்நூலின் நானூறு பாடல்களையும் பத்துப்பாடலையுடைய நாற்பது அதிகாரங்களாக ஒழுங்குபடப் பகுக்கவேண்டி இதனை இவ்வதிகாரத்தில் வைத்தன ரென்க.

செல்வம் மாறிஞல் கைந்நோவ இலக்கறி பறித்துச் சமைத்து உண்டு உய்யுமாறு நேரும் வறுமை மிக்க துன்பந்தருமென்று கருத்து.

வாங்கி என்பதற்கு - (கீரைக்குரிய செடிகளை) வளைத்து என்றும் பொருள் கொள்ளலாம். கடகம்-பொன் மணி முதலியவற்றுற் செய்யப்படும் ஒருவகைக் கைவளை. இதனுல், அவர்கள் முன்பு நல்ல செல்வமுடையராயிருந்தமை நன்கு புலப்படும். 'உப்பிலாப்பண்டம் குப்பையிலே' என்றபடி அறுவகைச்சுவைகளுள்ளும் உப்பு பிரதானமாதலால், அதுவுமில்லாத வெந்தையென அவ்வுணவின் இழிவை வெளியிட்டவாறு. குடை - செயப்படுபொருள்விகுதி புணர்த்துகெட்டது. இலி, இ - பெயர் விகுதி. உள் - உடம்பினுள்ளிடத்திலே யிருக்கின்ற அகத்துறுப்பாகிய மனத்துக்கு இடவாகுபெயர். துப்புரவு என்பதைத் துப்பு உரவு எனப் பிரித்து, அனுபவித்தற்கேற்ற சிறப்பையுடையவையெனக் காரணப்பொருள் கூறுக. துப்பு-அனுபவித்தல், தொழிற்பெயர். உரவு - வலிமை.

இப்பாட்டு, "பாலுடை யமிர்தம் பைம்பொற் கலத்திடைப் பாவையன்ன, நூலடு நுசுப்பி னல்லா ரேந்தவு நேர்ந்துநோக்காச், சேலகிண்ணி காந்தட்டிருமனித் துடுப்பு முன்கை, வாலட கருளிச்செய்ய வனத்துறை தெய்வமானுள்" என்னுஞ் **சிந்தாமணி**யை நினைப்பூட்டுகின்றது. (கூ)

உகo. ஆர்த்த பொறிய வணிகிளர் வண்டினம்
பூத்தொழி கொம்பின்மேற் செல்லாவா—நீர்த்தருவி
தாழா வுயர்சிறப்பிற் றண்குன்ற நன்னுட
வாழ்தார்க் கில்லைத் தமர்.

(இ - ள்.) நீர்த்து - நல்ல தன்மையையுடையதான, அருவி - நீரருவி, தாழா-குறைவுபடாத, உயர் சிறப்பின் - மேலான சிறப்பையுடைய, தண்-குளிர்ச்சியான, குன்றம் - மலைகளின் வளத்தையுடைய, நல் நாட - சிறந்த நாட்டையுடைய அரசனே ! ஆர்த்தபொறிய-(உடம்பை) நிறைத்த புள்ளி

களையுடைய, அணி இளர் வண்டு இனம்-அழகு மிகுந்த வண்டுகளின் கூட்டங்கள், பூத்து ஒழி கொம்பின்மேல் - பூப்பூத்துநீங்கின [மலரில்லாத] மரக் கிளைகளின்மீது, செல்லா ஆம்-போகமாட்டாவாம்; (அதுபோலவே), வாழாதார்க்கு - (செல்வமுடையராய்) உயிர்வாழாதவர்க்கு, தமா இல்லை- இனத்தவர் (எவரும்) உளராகார்; (எ - று.)

எடுத்துக்காட்டுவமையணி. தனிச்சொல்லுடன் கூடிய மூன்றுமடி - ஆசிரிய முன்னிலை. இப்பாட்டு - இவ்வதிகாரத்தின் மூன்றும் பாட்டோடு ஒத்த கருத்தையுடையது.

ஆர்த்த என்பதைத் தனியேஎடுத்து, ஒலியுடையவென்று பொருள் கூறி வண்டினத்துக்கு அடைமொழியாக்கினும் அமையும். நீர்த்து அருவி- நீரையுடையதாகிய அருவி யென்றலு மொன்று. (கo)

ஈo - ஆம் அதிகாரம்—மானம்.

அஃதாவது - எப்பொழுதும் தம்நிலையினின்று தாழாமையும், ஊழ்வினையால் தாழ்வுவந்தவிடத்து உயிர்வாழாமையுமாம். உலகத்திற்பெரும் பாலும் பொருளின்மைகாரணமாக மானத்தையிழந்து இரப்பது இயல்பாதலால், அங்ஙனம் மானத்தைக்கெடுப்பது தகுதியன்று என்பார், இதனை 'இன்மை' என்னும் அதிகாரத்தின் பின்னும், 'இரவச்சம்' என்னும் அதிகாரத்தின் முன்னும் வைத்தனரென அறிக. மாநம் - வடசொல்.

உகூக. திருமதுகை யாகத் திறனிலார் செய்யும்
பெருமிதங் கண்டக் கடைத்து—மெரிமண்டிக்
கானந் தலைப்பட்ட தீப்போற் கனலுமே
மான முடையார் மனம்.

(இ - ள்.) திரு மதுகை ஆக - (தம்மிடத்தில்) செல்வம் வலிமையையுடையதாக, (அச்செருக்கினால்), திறன் இலார் செய்யும் - தக்க நற்குணமில்லாதவர்கள் செய்கின்ற, பெருமிதம்-வரம்புகடந்த நடத்தையை, கண்டக் கடைத்தும்-பார்த்தபொழுதும்,-மானம் உடையார் மனம்-மானத்தையுடையவர்களுடைய நெஞ்சம்,—எரி மண்டி கானம் தலைப்பட்ட தீபோல்-எரிதல்பொருந்திக் காட்டிற் பற்றியெழுந்த அக்கினிச் சுவாலை போல, கனலும் - கொதிக்கும்; (எ - று.)—எ - தேற்றம்.

செல்வச்செருக்கால் அயோக்கியர் எல்லைகடந்து நடக்கையில், மானிகளுக்கு மனவருத்தமுண்டாமென்றபடி. பெருமிதம் - மிதத்தினும் விஞ்சியது என்க; மிதம்-எல்லை. எரி - முதனிலைத்தொழிற்பெயர். (க)

உகூஉ என்பா யுகினு மியல்பிலார் பின்சென்று
தம்பா டுரைப்பரோ தம்முடையார்—தம்பா
டுரையாமை முன்னுணரு மொண்மை யுடையார்க்
குரையாரோ தாமுற்ற நோய்.

(இ - ள்.) தம் உடையார் - தமது மானத்தைத் தாம் காக்கும் இயல்புடையவர், என்புஆய்உகினும் - (பொருளில்லாமையால் உணவு கிடையாமல் தம் உடம்பு) எலும்பு மாத்திரமாகிச் சிதைவதாயிருந்தாலும், இயல்பு இலார் பின்சென்று - நற்குணமில்லாத செல்வரது பின்னே போய், தம்பாடு உரைப்பரோ - தமது வருத்தத்தைக் கூறுவார்களோ? [கூறார்]; தம் பாடு - தமது வருத்தத்தை, உரையாமை - தாம் சொல்லாமலிருக்கையிலே, முன்உணரும் - முன்னே (குறிப்பினால்) அறிந்து உதவுத்தக்க, ஒண்மை உடையார்க்கு - கூரறிவையுடையவர்களுக்கு, தாம் உற்ற நோய் - தாம் அடைந்த துன்பத்தை, உரையாரோ - கூறாதிருப்பாரோ? [கூறுவர்]; (எ - று.)

மானிகள் எவ்வளவு தாழ்ந்த நிலைமையிலும் தமது வருத்தத்தைத் தகாதவர்க்குக் கூறார்: ஏனெனில்,—அவமானமேயன்றிப் பயனில்லாமையால்; தக்கவரோடு கூறுவார்கள்: ஏனெனில்,—தாம் கூறவிடினும் அவர்கள் தாமாகவே அறிந்து கொள்வராதலாலும், அவர்களிடங் கூறுவதிற் பயனுண்மையாலும் என்பது கருத்து. "இரத்தலுமீதலே போலுங் கரத்தல், கனவிலுந் தேற்றாதார்மாட்டு"; "இரப்பனிரப்பாரை யெல்லாமிரப்பிற், கரப்பா ரிரவன்மினென்று" என்ற திருக்குறள்களாலும், லோபிகளிடம் தம் குறைகூறுதல் குற்றமும், உதார குணமுள்ளவரிடம் கூறுதல் குற்றமன்மையுங் காண்க. "ஒட்டார் பின் சென்றொருவன் வாழ்தலி னன்றிலேயே கெட்டானெனப்படுதல் நன்று" என்பது நீதியாதலால், உடம்பு இறக்கவரினும் மானிகள் தம்மையிகழும் தன்மையாரின் பின் போய்த் தமது துன்பத்தைக் கூறாராவர். ஒருவர் கருத்தை அவர் கூறமலே அவர்களுடைய முகம், கண் முதலியவற்றின் குறிப்புக் கொண்டு அறிவது விசேஷமாதலால், 'உரையாமை முன்னுணரு மொண்மை' எனப்பட்டது.

உரையாரோ - இரண்டு எதிர்மறை உடன்பாடு உணர்த்திற்று. உரையாமை - எதிர்மறை வினையெச்சம்; மை - விகுதி. "நரம்பெழுந்து நல்கூர்ந்தாராயினும்" என்றாற்போல, 'என்பாயுகினும்' என்றார். பின் - இங்கே, இடம். "நல்லவை செய்யினியல்பாகும் தீயவை, பல்லவர் தூற்றும் பழியாகும்" ஆதலால், நற்குணம் 'இயல்பு' எனப்பட்டது. முன் - காலமுன். (உ)

உகஈ. யாமாயி னெம்மில்லங் காட்டுதுந் தாமாயிற்
காணவே கற்பழியு மென்பார்போ—ணிணைப்
புறங்கடை வைத்தீவர் சோறு மதனன்
மறந்திடுக செல்வர் தொடர்பு.

(இ - ள்.) யாம் ஆயின் - நாமானால், எம்இல்லம் காட்டுதும் - (வரும் விருந்தினர்க்கு) நமது வீடு முழுவதையுங் காண்பிப்போம்; தாம் ஆயின் - செல்வச் செருக்குடையவர்களானால், காணவே கற்பு அழியும் என்பார் போல் - (தமது வீட்டைப் பிறர் உட்புகுந்து) பார்த்த மாத்திரத்திலே அதன் உறுதி கெடுமெனக் கருதுவார்போல, நாணி - (பிறர்க்குத் தமது வீட்டைக் காட்டக்) கூச்சப்பட்டு, புறங்கடை வைத்து - (அவர்களை வீட்டு) வெளியிடத்திலேயே இருத்தி, சோறும் ஈவர் - உணவையுங்

கொடுப்பார்கள்; அதனுல் - ஆகையால், செல்வர் தொடர்பு மறந்திடுக - (மானமுடையவர்) செல்வச் செருக்குடையாரைப் பின்தொடர்தலை மறந்துவிடக் கடவர்; (எ - று.)

செல்வர் வந்தால் நாம் அவரை நம் மனையிற் கொண்டு புகுந்து நம் மாலியன்ற உபசாரங்களைச் செய்வோம்: செல்வரோ பிறர்தம் மனைக்குள் வந்தால் கற்புக் குறையுமென்பார் போல வீட்டுப்புறத்திலேயே வைத்துச் சோறும் இடுவர்: இவ்வாறான செல்வச் செருக்குடையவரின் தொடர்பை மறத்தலே நன்றென்றவாறு. செல்வர்கள் பிறரை வீட்டினுள் வரவிடாமைக்குக் காரணம் அவர்கள் பார்த்தால் தமது வீட்டின் வலிமை அழிந்து விடுமென்னுங் கருத்து என்று கற்பித்துக் கூறினது, **ஏதுத்தற்குறிப் பேற்ற வணி**யின்பாற்படும்.

'யாஅயினெம்மில்லங் காட்டுதும்' என்றது, கவிக்கூற்று; இது - உலகத்திற் செல்வச் செருக்கில்லாத தம்போலியர் வந்த விருந்தினரை உள்ளேயழைத்துப் போய் உபசரிக்கும் நல்லியல்பை விளக்கும். கற்பு - கல்லின் தன்மை. கடைப்புறம் - புறங்கடையென முன்பின்னுக மாறியது - இலக்கணப் போலி; வெளிவாயிலென்று பொருள். சோறும் என்ற உம்மை - இழிவு சிறப்பு; அது உள்ளே வைத்து இதல் தகுதியேயன்றிப் புறத்திலே வைத்து ஈதல் தகுதியன் றென்பதைக் காட்டும். மறந்திடுக - வியங்கோள்; இடு - துணிவுப் பொருளுணர்த்துந் துணைவினை. தொடர்பு-அநுசரணை; இனி, இல்லம் என்பதற்கு இடவாகுபெயராய் மனைவியென்றும், கற்பு என்பதற்கு - பதிவிரதா தருமமென்றும் உரைப்பாரு முளர். போல்-ஒப்பில் போலி: இங்கு, தற்குறிப்பு உருபு.(கூ)

உகூச. இம்மையு நன்மு மியனெறியுங் கைவிடா
தும்மையு நல்ல பயத்தலாற்—செம்மையி
னைநங் கமழுங் கதுப்பினாய் நன்றேகாண்
மான முடையார் மதிப்பு.

(இ - ள்.) நானம் - கஸ்தூரிப் புழுகு, செம்மையின் - நன்றாக, கமழும்-நறுமணம் வீசப்பெற்ற, கதுப்பினாய்-கூந்தலையுடையவளே! மானம் உடையார் மதிப்பு - மானமுள்ளவர்களது பெருமை, இம்மையும் - இவ்வுலகத்திலும் [இப்பிறப்பிலும்], நன்று ஆம் - (புகழை விளைத்தலால்) நல்லதாகும்; இயல்நெறியும் கைவிடாது-(நல்லோர்கள் செல்லத் தக்க) நியாய வழியையும் விட்டு நீங்கார்கள் பற்றி, உம்மையும் - மறுமையிலும், நல்ல பயத்தலால் - சிறந்த புண்ணியப் பயன்களை உண்டாக்குதலால், (அந்த மானம்), நன்றே - (மறுமைக்கும்) நல்லதே; காண் - (இதனை நீ) அறி; (எ - று.)—ஏ - தேற்றம். 'காண்' என்பதையும் - தேற்ற முணர்த்துவ தென்னலாம்; முன்னிலையசையென்பாரு முளர்.

மானம் இம்மை மறுமைகளில் நன்மை பயப்பதன்றி நியாய வழியும் கடவாது நிற்றலால் மானம் எப்போதும் நன்றுமென்க. "புகழின்றூற் புத்தேள் நாட்டியாதால் என்மற்று, இகழ்வார்பின் சென்றுநிலை" என்ற திருக்குறளினுல், மானங்கெடுதல் இம்மை மறுமையிரண்டு பயன்களையுந் தராத தாகுமாறு காண்க.

இனி, இப்பாட்டு-மானமுடையவர்கள் பிறரைமதிக்கும் மதிப்பு இம்மைக்கும் நல்லதாம்; இயல்பாகிய ஒழுக்கநெறியையுங் கைவிடாதுநிற்கும்; மறுமைக்கும் நல்ல இன்பங்களே யுண்டாக்கும்; ஆதலால், நல்லதாம் என்றும் பொருள்படும்.

மதிப்பு - பிறரால் நன்கு மதிக்கப்படுதல். இம்மையும், உம்மையும் என்ற உம்மைகள் - முறையே எதிரதும் இறந்ததுந் தழுவிய எச்சம். இயல்நெறி - வினைத்தொகை; இதன்மேல் உள்ள உம்மையும் - எச்சப் பொருளதே. நல்ல - பெயர்; கதுப்பு - கபோலமுமாம். கன்னத்திலும் கஸ்தூரி அளிவதுண்டு. மானம் உடையார் - மாணங்கெடாத வருமாம்.

'இசைநெறியுங் கைவிடாது' என்றும் பாடம். (சு)

உகூடு. பாவமுமே மேலைப் பழியும் படவருவ
சாயினுஞ் சான்றவர் செய்கலார் சாதல்
லொருநா ளொருபொழுதைத் துன்ப மவைபோ
லருநவை யாற்றுத லின்று.

(இ - ள்.) பாவமும்-(மறுமைக்குத்) தீவினையும், ஏனை பழியும்-மற்றை (இம்மைக்கு) உலகநிந்தனையும், பட-உண்டாகும்படி, வருவ-சேர்கிற காரியங்களே, சான்றவர்-(நற்குண நற்செய்கைகளால்) நிறைந்த பெரியோர், சாயினும்-(அவற்றைச செய்யாவிட்டால் தமக்கு) மரணம் சேர்வதாயிருந்தாலும், செய்கலார்-செய்யமாட்டார்கள்;(எனெனில்);—சாதல்-இறத்தல், ஒருநாள் ஒருபொழுதை துன்பம்-இறக்கிற ஒரு நாளிலே இறக்கிற அவ்வொருபொழுதில் மாத்திரமே (அனுபவித்துக்கழிகின்ற) துன்பமாகும்; அவைபோல்-அந்த இழிதொழில்கள்போல, அருநவை ஆற்றுதல் இன்று-(உயிருள்ளவளவும் அழியும்படி) அருமையாகிய மிக்க துன்பங்களைச் செய்தலில்லை; (எ - று.)

பாவம்-பாபம் என்னும் வடமொழியின் திரிபு. முதலடியில், உம்மைகள்-எண்ணுப்பொருளன. வருவ - பெயர். சாயினும், உம்மை - இழிவு சிறப்பு; அது - "சாதலினின்னுதலில்லை" எனக் கூறப்படுகிற மரணவேதனையின் மிக்க கொடுமையை விளக்கும். 'சாவினும்' என்றும் பாடம். பொழுதை-ஐயீற்றுடைக்குற்றுகரம். ஏதுவணி.

"வரம்ப்ராணபரித்யாகோ நமாநபரிகண்டகம் - ம்ருத்யுஸ்ஸ்யாத்க்ஷணிகந் துக்கம் மாகார்ங்கோதிநேதிநே" என்னும் வடநூல் மேற்கோள் இங்கு அறியத்தக்கது. (கு)

உகூசு. மல்லன்மா ஞாலத்து வாழ்ப வருளெல்லாஞ்
செல்வ ரெனினுஞ் சொடாதவர்—நல்கூர்ந்தார்
நல்கூர்ந்த கண்ணும் பெருமுத் தரையமே
செல்வரைச் சென்றிரவா தார்.

(இ - ள்.) மல்லல்-(பலவகை) வளப்பங்களேயுடைய, மா ஞாலத்து-பெரியபூமியிலே, வாழ்பவருள் எல்லாம்-உயிர் வாழ்பவர்களெல்லாருள்ளும், செல்வர் எனினும்கொடாதவர்-தனவான்களாயிருந்தாலும் தானஞ் செய்யாதவர்கள், நல்கூர்ந்தார்-தரித்திரரேயாவர்: நல்கூர்ந்தக்கண்ணும்-

வறுமையை யடைந்தவிடத்தும், செல்வரை சென்று இரவாதார்-பொருளுடையாரிடம் போய் அவரையாசியாதவர், பெரு முத்தரையரே - (பெருஞ்செல்வமுடைய) பெருமுத்தரையரென்னும் பிரபுவைப் போல் பவரே யாவர்; (எ - று.)

செல்வம்படைத்ததன்பயன் பிறர்க்குக் கொடுத்தலே யாதலால் அதனைச்செய்யாதவர் வறியவரும், செல்வமில்லாமையின் காரியமாகிய இரத்தல் இல்லாமையால் இரவாதவர் செல்வமுடையவருமாகக் கருதப்படுவரென்க. வறுமைக்காலத்திலும் பிறரிடம்போய் இரவாமல் மானத்தைக் காப்பது நலம் என்ற கருத்துப் புலப்படுதலால், இப்பாட்டு இவ்வதிகாரத்தாயிற்று. பெருமுத்தரையரென்ற இப்பெயர்-இந்நூலின் இருபதாம் அதிகாரத்தில் பத்தாவது செய்யுளிலும் கூறப்பட்டுள்ளது.

"மல்லல் வளனே" என்ற **தொல்காப்பிய**த்தால், மல்லல் என்பது-வளமென்னும் பொருளுணர்த்துவதோ ருரிச்சொல்லாதலே யறிக. மர்-மஹா என்னும் வடமொழியின் விகாரம்; இது-பெருமையாகிய குணத்தை யுணர்த்தலால், தமிழில் உரிச்சொல்லின் பாற்படும். (சு)

உசுள. கடையெலாங் காய்பசி யஞ்சுமற் றேனை
யிடையெலா மின்னுமை யஞ்சும்—புடைபரந்த
வில்புருவ வேனெடுங் கண்ணுய் தலையெல்லாஞ்
சொற்பழி யஞ்சி விடும்.

(இ - ள்.) புடை பரந்த-பக்கங்களிலே பரவிய, வில்புருவம்-விற்போல் வளைந்த புருவங்களையும், வேல்நெடு கண்ணுய்-வேலாயுதம்போன்ற நீண்ட கண்களையு முடையவளே! கடையெலாம்-அதமர்கள் யாவரும், காய்பசி அஞ்சும்-(வயிற்றை) வருத்துகின்ற பசிக்குப் பயப்படுவார்கள்; ஏனை-(அவர்களினும்) வேறுபட்ட, இடையெலாம்-மத்திமர்கள் யாவரும், இன்னுமை அஞ்சும்-துன்பத்திற்குப் பயப்படுவார்கள்; தலை எல்லாம்-உத்தமர்களோ எனில், சொல்பழி அஞ்சிவிடும்-(உலகத்தாருடைய) சொல்லால் வருகின்ற பழிக்குப் பயப்படுவார்கள்; (எ - று.)

லோகாபவாதத்தால் மானக்கேடு உளதாமென்று அஞ்சுவர் மேன்மக்களென்று கருத்து. "நெல்லி, னரிசியா னின்புறூஉங்கீழெல்லாம் தத்தம், வரிசையானின்புறூஉமேல்" என்றபடி கீழ்மக்கள் மான அவமானங்களைக் கருதாமல் கிடைத்த உணவு மாத்திரத்தால் உவப்பவரும், மேன்மக்கள் அங்ஙனமன்றி அவமானஞ் சிறிதுமில்லாமல் மானமே முழுதுமுண்டாக மகிழ்பவருமாதலால் 'கடையெலாங் காய்பசி யஞ்சும்' என்றும், 'தலையெல்லாஞ்சொற் பழியஞ்சிவிடும்' என்றும், தற்காலத்துப் பயனுகிய பசிநீங்குதலேயும் எக்காலத்தும் பயனுகிற புகழ்விளைதலேயும் நோக்கியல்லாமல் அரசர் முதலியோரால் நேரக்கூடிய மரணதண்டனை முதலிய துன்பங்கட்குப் பயந்து தீச்செய லொழிந்து நற்செயல்புரியுமியல்பினர் இடைப்பட்டவராதலால் 'இடையெலா மின்னுமை யஞ்சும்' என்றுங் கூறினர். "சாதலினின்னுததில்லை" என்றதனுல் இன்னுமை இறத்தலுமாம்.

பொருளால் உயர்திணைப்பலர்பாலாயினும், சொல்லால் கடை இடை தலை என்பன பால்பகா அஃறிணைப்பெயராதலால், 'அஞ்சும்' என்னுஞ் செய்யுமென் முற்றைக் கொண்டன; இங்ஙனமன்றி, செய்யுமென்முற்றுப் பலர்பாலுக்கு உரியதாகாமை உணர்க. மற்று - அசைநிலையென்றுவது, வினைமாற்றென்றுவது கொள்க. புருவத்துக்கு வில் உவமை-வளைந்தவடிவினால் மாத்திரமேயன்றி ஆடவரை வருத்துதலாலுமாம். புருவம்-ப்ரூஃ: என்னும் வடமொழியின் சிதைவென்பர்; வடமொழியில் இதன் இரண்டாம் வேற்றுமை - ப்ருவம் என நிற்கும்.

"அவ்ருத்தேர்ப்யமக்யாநாம், மத்யாநாம்மரணத்ப்யம்-உத்தமாநாந்து மர்த்யாநாம் அவமாநாத்பரம்ப்யம்" என்பது, இப்பாட்டிற்கு நேரான வடநூல்மேற்கோள். (எ)

உகூஅ. நல்லர் பெரிதளியர் நல்கூர்ந்தா ரெனறெள்ளிச்
செல்வர் சிறுநோக்கு நோக்குங்காற்—கொல்ல
னுலையூதுந் தீயேபோ லுள்கனலுங் கொல்லோ
தலையாய சான்றோர் மனம்.

(இ - ள்.) 'நல்லர் - (இவர்) நன்மையுடையவர், பெரிது அளியர் - மிகவும் கருணைசெய்யத்தக்கவர், நல்கூர்ந்தார் - வறுமையடைந்தவர், என்று - என்று இவ்வாறுகூறி, எள்ளி - அவமதித்து, செல்வர்-தனவான்கள், சிறு நோக்கு நோக்கும்கால்-(பிறரை) அற்பப்பார்வையாகப் பார்க்கும்போது, —தலை ஆய சான்றோர் மனம்-உத்தமர்களாகிய பெரியோரது நெஞ்சம், கொல்லன் உலை ஊதும் தீயேபோல்-கருமான் உலைக்களத்தில் ஊதியெழுப்பும் நெருப்புப்போல, உள் கனலும் - உள்ளே கொதிக்கும்; (எ - று.)

செல்வர் மானம் கெடக்கூறிச் செருக்குக் கொண்டு நோக்கும்போது மானிகளான சான்றோரின் மனம் வெதும்பு மென்பதாம்.

கொல் ஓ இரண்டும்-அசைநிலை; 'இடைச்சொற்கள் வேண்டிய பல பொருளே விளக்கும்' என்ற வடமொழியியாயத்தால், இங்கே இவ்விடைச் சொற்களுக்குத் தேற்றப்பொருளுரைத்தலும் பொருந்தும். நல்லர், பெரிதளியர், நல்கூர்ந்தார் என்பன - இங்கே இரக்கத்தாற் சொல்லுஞ்சொற்களல்ல வென்றும், இகழ்ச்சியாற்சொல்லுஞ் சொற்களா மென்றும் அறிக; அது, சிறுநோக்குநோக்குதலால்உணரப்படும்:ஆனதுபற்றியே, சான்றோர் மனம் கனல்வதாயிற்று. கோபத்தை யடக்குதலும் சான்றோரியல் பாதலால், அதனை வெளிக்காட்டாது 'உள்கனலும்' என்றார். சிறுநோக்கு - அலட்சியமாகப்பார்த்தல். கொல்லன்-இரும்பைக்கொல்லுதல் பற்றிவந்த பெயர்; கொல்லுதல்-மிகஅடித்தல். தீயே. ஏ-அசை; உயர்வுசிறப்புமாம். மனம் - மநஸ்; வடசொல். கால் - காலம்; விகாரம். (அ)

உகூக. நச்சியார்க் கீயாமை நாணன்று நாணுஞ
மச்சத்தா னுணுத னுணன்று—மெச்சதகின்
மெல்லிய ராகித்தம் மேலாயார் செய்தது
சொல்லா திருப்பது நாண்.

(இ - ள்.) நச்சியார்க்கு - (தம்மை) விரும்பி வந்தவர்க்கு, ஈயாமை-(அவர் வேண்டிய பொருளைக்) கொடாதிருப்பது, நாண் அன்று - நாண மன்று; நாள் நாளும் - தினந்தோறும், அச்சத்தால்-(அஞ்சவேண்டியகாரி யங்களுக்கு) அஞ்சுதலால், நாணுதல் - வெள்குதலும், நாண் அன்று-நாண மாகாது; (தாம்), எச்சத்தின் - (செல்வக்) குறைவையுடைய, மெல்லியர் ஆகி - அற்பர்களா யிருக்கையில், தம் மேலாயார் செய்தது-தம்மினும்மே லான செல்வவான்கள் தமக்குசெய்த எளிமையை, சொல்லாதிருப்பது-(பலர்க்குஞ்) சொல்லி வெளிப்படுத்தா திருப்பது, நாண் - நாணமாம்.

அடக்கமில்லாத செல்வவான்கள் தம்மிடத்துச்செய்த அவமதிப் பைப் பிறரறியச் சொல்லாதிருத்தலே, மானத்துக்கு உரிய நாணமாய் எல்லாநாணங்களினுஞ்சிறக்கு மென்பது கருத்து.

நாணுவது-லஜ்ஜை. நச்சியார்-இறந்தகால வினையாலணையும்பெயர்; நச்சு - பகுதி. நாணுள் - அடுக்கு, தொறுப்பொருளது; உம்மை - முற்றுப் பொருளது. ஆகி - ஆக; எச்சத்திரிபு. இனி, பின்வாக்கியத்துக்கு-செல் வத்தில் தாம் குறைபட்டவராயிருக்கையில் தம்மினும்மேலானவர் தமக்குச்செய்த உபகாரத்தைப் பலரும் அறிய எடுத்துக்கூறி நன்றி பாராட்டாமலிருப்பது வெட்கத்திற்குக்காரண மெனப் பொருளுரை த்தலும் தகுதியாம். (கூ)

கூ00. கடமா தொலைச்சிய காணுறை வேங்கை
யிடம்வீழ்ந்த துண்ணு திறக்கு—மிடமுடைய
வானகங் கையுறினும் வேண்டார் விழுமியோர்
மான மழுங்க வரின்.

(இ - ள்.) கடமா - காட்டுப்பசுவை, தொலைச்சிய - கொன்ற, கான் உறை வேங்கை-காட்டில்வசிக்கின்ற பெரும்புலியானது, இடம் வீழ்ந்தது உண்ணுது இறக்கும் - (தான்கொல்லும் பிராணிகளுள் தனது) இடப்பக் கத்தில் விழுந்ததைத் தின்னுமலிருந்தே சாகும்; (அதுபோலவே), விழுமி யோர்-சிறப்புள்ள பெரியோர்,இடம் உடைய-செல்வத்தையுடைய, வான்-அகம் கை உறினும் - சுவர்க்கலோகத்தினிடம் கைவசமாகக் கிடைப்பதா னாலும், மானம் அழுங்கவரின் - (தமது) மானங் கெட வருவதாயிருந்தால், வேண்டார் - (அந்தச் சுவர்க்கவின்பத்தையும்) விரும்பார்; (எ - று.)

மானக்குறைவு வருவதாயிருந்தால் எப்படிப்பட்ட சிறப்புடையதை யும் விரும்பார் அறிவுடையோர் என்பது கருத்து. பராக்கிரமமுள்ள புலிக் குத் தான் இறக்கும்படிநேர்ந்த பசியைத் தீர்த்தற்கு இன்றியமையாத உணவே யாயினும் இடப்பக்கத்தில் வீழ்ந்ததை எடுத்து உண்ணுமை இயல்பாதல் போல, மிகவிரும்பத்தக்க சிறப்புடைய பொருளேயாயினும் மானங்கெடவருவதைச் சிறிதும்விரும்பாமை மானிகளுக்கு இயல்பென்க. **எடுத்துக்காட்டுவமையணி.** உபமானத்தால், உபமேயத்தில் 'உயிர்நீப்பர் மானம் வரின்' என்ற குணமும் பெரியோரிடம் உள்ளதாக விளங்கும்.

பெருமிதமுடையபுலி மிகப்பசித்தாலும் தனது இடப்பக்கத்தில் வீழ்ந்ததை உண்ணுதாதலையும், வலப்பக்கத்தில் வீழ்ந்ததையே உண்ணுதலையும், அத்தகைய புலி மனவுறுதியுடையார்க்கு உவமையாதலையும், அது யானையைக்கொல்லும் வலியதாதலையும், " கடுங்கட்கேழ லிடம்பட வீழ்ந்தென, வன்றவணுண்ணுதாகி வழிநாட், பெருமலைவிடரகம்புலம்ப வேட்டெழுந், திருங்களிற்றிரைருத்தல் நல்வலம் படுக்கும், புலிபசித்தன்னமெலிவிலுள்ளத், துரனுடையாளர்கேண்மையோ, டியைந்த வைக லுளவாகியரோ " எனப் **புறநானூற்றிலும்** காண்க.

கடமா என்பதை-கடம் ஆ என்றுவது, கடம் மா என்றுவது பிரித்து காரணப்பெயராகப் பொருள் கொள்க: கடம்-காடு, ஆ-பசு, மா-விலங்கு. கடமா என்பதற்கு-கன்னமதத்தையுடைய யானையெனப் பொருள்கொள்ளலுமொன்று. இடம் - செல்வமாதலை "இடனில்பருவத்து மொப்புரவிற் கொல்கார்," "இடமில்லாக்காலும்" எனத் **திருக்குறளிலுங்**காண்க. இனி, இடமுடைய என்பதற்கு - விசாலமான இடத்தையுடைய எனப்பொருள் கொள்வாரு முளர். தொலைச்சிய, தொலைச்சு - பகுதி ; இது-தொலையென் பதன் பிறவினை ; தொலைச்சுதல் - ஒழியச்செய்தல். உம் - உயாவுசிறப்பு. மானம் மழுங்க என்றும் பிரிக்க இடமுண்டு. (கo)

நூக - ஆம் அதிகாரம்.—இரவச்சம்.

அஃதாவது - இரத்தற்கு அஞ்சுதல். ஒருவரிடம் சென்று ஒரு பொருளை யாசிப்பது தமது மானங்கெடுவதற்குக் காரணமாகு மாதலால், மானமுடையார் அந்த இரத்தல்தொழில் செய்வதற்கு அஞ்சுவர் என்ற காரணம்பற்றி, இது மானம் என்னும் அதிகாரத்தின்பின் வைக்கப்பட்டது. திருக்குறளுரையில், பரிமேலழகர் 'இரவச்சமாவது-மானந்தீரவரும் இரவிற்கு அஞ்சுதல்' என்று கூறியதுங காண்க. இரவச்சம் என்ற தொடர் - வேற்றுமைப் புணர்ச்சி, நான்காம்வேற்றுமைத்தொகை; இரத்தலை அஞ்சுதல் என இரண்டாம்வேற்றுமைத் தொகையாகவும், இரத்தலினின்று அஞ்சுதல் என ஐந்தாம்வேற்றுமைத்தொகையாகவும் விரிப்பினும் அமையும். இரவு அச்சம் என்ற இரண்டு சொற்களும்-தொழிற்பெயர்கள்.

பொருளைச் சம்பாதித்தற்கு உரிய நல்வழிகள் பலவற்றில் இரத்தல் ஒன்றுகக் கொள்ளத்தக்கதன்று என்ற சம்பந்தம்பற்றி, இவ்வதிகாரம் பொருட்பாலுக்குப் பொருந்துவதாயிற்று ; பிறவற்றிற்கும் இங்ஙனமே கண்டுகொள்க.

நூo க. நம்மாலே யாவரிந் நல்கூர்ந்தா ரெஞ்ஞான்றுந்
தம்மாலா மாக்க மிலரென்று—தம்மை
மருண்ட மனத்தார்பின் செல்பவோ தாழுந்
தெருண்ட வறிவி னவர்.

(இ - ள்.) 'இ நல்கூர்ந்தார்-இந்த வறியவர், நம்மாலே ஆவர்-நம்மாலேயே செல்வமுடையராவர் : (இதுவேயன்றி), எஞ்ஞான்றும்-எப்பொழு

தும், தம்மால் ஆம் ஆக்கம் இலர்-தமது முயற்சியாற் சம்பாதிக்கும் பொருளுடையவரல்லர்,' என்று - என்று எண்ணியும், தம்மை மருண்ட-தம்மைத் தாமே (மேலானவராக) மயங்கின, மனத்தார்பின்-மனத்தையுடையவர்கள்பின்னே, தெருண்ட அறிவினவர் தாமும் - தெளிந்த அறிவுள்ளவர்களும், செல்பவோ - (இரத்தற்குச்) செல்வார்களோ ? [செல்லார் ;] (எ - று.)

'பிறர்க்கு வேண்டுவன கொடுக்கவேண்டுவது நமது கடமை' என்று கொள்ளாமல், 'நாம் கொடுத்தால்தான் இந்தத் தரித்திரர்க்குப் பொருளுண்டேயொழிய அவர்களுடைய சொந்த முயற்சியால் ஒரு காசுங் கிடையாது' என்று இரப்பவர்களே இகழ்ந்தும், தம்மைப் பெருமைபாராட்டியும் செருக்குக்கொள்ளுகின்ற அற்பர்களிடத்து விவேகிகள் யாசகத்திற்காகச் செல்லமாட்டார் என்பதாம்.

கடவுள் ஒவ்வொருவர்க்கு ஒவ்வொரு முகமாய்ச் சிவனம் கற்பித்திருத்தலால், 'நாம் கொடுக்கிறோம்' என்று நினைப்பது அறிவின்மையாம்; ஆதலால், அங்ஙனம் நினைப்பவர் 'மருண்ட மனத்தார்' ஆவர். "இகழ்ந்து எள்ளாது ஈவாரைக்காணின் மகிழ்ந்து உள்ளம், உள்ளுள் உவப்பது உடைத்து" எனத் திருக்குறளிற்கூறியபடி, வருகிறயாசகர்களே அவமதித்து இழிவு சொல்லாமல் நன்கு மதித்து இனியவைகூறி வேண்டிய பொருள் கொடுப்பவரே யாசிக்கப்படத்தக்கவரென்றும், அங்ஙனம் இல்லாதாரிடத்துப்போய் ஒரு பொருளே இரத்தலைப்பற்றி அஞ்சவேண்டுமென்றும் கூறியதாயிற்று.

நம்மால் - செல்வச்செருக்கினுல் தம்மை உயர்த்தல்பற்றிவந்த தன்மைப்பன்மை. எ-பிரிநிலை. ஆவர் - ஆக்கமடைவர். பின்-இடைச்சொல்; இங்கே இடப்பொருளது. ஓ-எதிர்மறை. தாம்-அசை. உம்-உயர்வுசிறப்பு.

நஉ. இழித்தக்க செய்தொருவ னூர வுணலிற்
பழித்தக்க செய்யான் பசித்த றவறே
விழித்திமைக்கு மாத்திரை யன்றே வொருவ
னழித்துப் பிறக்கும் பிறப்பு.

(இ - ள்.) ஒருவன்—, இழித்தக்க செய்து-இழிவுக்குக்காரணமாகிய செய்கைகளைச் செய்து, ஆர உணவின்-வயிறுநிரம்ப உண்ணுதலைக்காட்டிலும், பழித்தக்க செய்யான் பசித்தல் - பழிக்கத்தக்க காரியங்களைச் செய்யாதவனுப்பசியோடிருத்தல், தவறே - குற்றமாகுமோ ? [ஆகாது]; (ஏனெனில்),—ஒருவன் அழித்து பிறக்கும் பிறப்பு-ஒரு மனிதன் அழிந்து (மறுபடி) பிறக்கிற பிறப்பு, விழித்து இமைக்கும் மாத்திரை அன்றே - (மூடின கண்ணைத்) திறந்து இமைகொட்டுதலாகிய அளவுடையதன்றே ? (எ - று.)

'மானத்தை விட்டாயினும் உயிரைப் பாதுகாக்கவேண்டும்' என்பாரது கொள்கையை இதில் மறுக்கின்றார் ; இந்த உடம்பு போலுல், வேறு உடம்பு கிடைப்பது அரிதென்று நினைக்கவேண்டா ; கண் மூடித்திறக்கும் ஒரு மாத்திரைப் பொழுதினுள்ளேயிவ்வுயிர் வேறுடம்பைச்சேரும் ஆதலால், இவ்வுடம்பைப் பாதுகாக்கும்பொருட்டென்று மானத்தைவிட்டு இரந்தாயினும், மானங்கெடாமல் பட்டினியாயிருந்து உயிர்விடு

வதேகலம் என்பதாம். இரவச்சத்தை வற்புறுத்துதற்பொருட்டு, இவ்வாறு கூறினர். உயிர்கட்கு இயல்பாய்க்கடிதிற் பிறப்பு வருமென்றும், நிலையில்லாத உடம்பைப் பாதுகாக்கும்பொருட்டு நிலையாகப் புகழ்பெறும் மானத்தைத் துறக்கலாகாதென்றும்கூறியவாறு; "பாவமுமேனைப்பழியும் படவருவ, சாயினுஞ்சான்றவர் செய்கலார் சாதல், ஒருநாளொரு பொழுதைத் துன்ப மவைபோல், அருநவை யாற்றுத லின்று" எனக் கீழ் மானமென்னும் அதிகாரத்தில் வந்ததுங் காண்க.

இழித்தக்க, பழித்தக்க-இழித்தற்குத்தக்கவை, பழித்தற்குத் தக்கவை என நான்காம்வேற்றுமைத் தொகையாக விரியும்: இழி, பழி-முதனிலைத் தொழிற்பெயர்கள். ஆர-திருப்தியுண்டாக. மாத்திரை-மாத்ரா என்னும் வடமொழியின் திரிபு. "இயல்பெழு மாந்தரிமை கொடி மாத்திரை" என்றார் நல்லூரார். அன்றே-தேற்றம். அழிந்து என்பது, எதுகை நோக்கி, அழித்து என வலித்தல் விகாரம் பெற்றது; இவ்வடலையொழித்து எனப் பிறவினையாகவுங் கொள்ளலாம். விழித்திமைக்கு மாத்திரையன்றே-இமைத்து விழிக்கின்ற பொழுதாயிருக்குமென விருதி பிரித்துக் கூட்டினுமாம்; உறங்கிக் கண்விழிக்கும் அளவன்றே? என்று உரைப்பினும் அமையும்.

"உறங்குவதுபோலுஞ் சாக்காடுஉறங்கி, விழிப்பதுபோலும் பிறப்பு" என்ற திருக்குறளையும், "பிறந்தவர் சாதலும் இறந்தவர் பிறத்தலும், உறங்கலும் விழித்தலும் போன்ற தண்மையின்" என்ற மணிமேகலையையும் இங்கே அறிக.

முன்னிண்டடியிற் கூறிய பொருளைப் பின்னிரண்டடியிற் காரணங் காட்டி நிறுவியதனால், ஏதுவணி. பின்னிரண்டடியில் உபமான உபமேயங் கட்கு ஐக்கியத்தைச் சொன்னது, காட்சியணி. (உ)

கூ0க- இல்லாமை கந்தா விரவு துணிந்தொருவர்
செல்லாரு மல்லர் சிறுநெறி—புல்லா
வகம்புகுமி னுண்ணுமி னெனபவர்மாட் டல்லான்
முகம்புகுத லாற்றுமோ மேல்.

(இ-ள்.) இல்லாமை-பொருளில்லாமை, கந்து ஆ-காரணமாக, இரவு துணிந்து-யாசிப்பதை நிச்சயித்து, ஒருவர்—, சிறு நெறி-(இரத்தலாகிய) அற்பவழியில், செல்லாரும் அல்லர்-போகாமலும் இருக்கமாட்டார்;(ஆனலும்), புல்லா-தழுவிகொண்டு, 'அகம் புகுமின்-(எமது) வீட்டுக்கு வாருங்கள்; உண்ணுமின்-புசியுங்கள்,' என்பவர்மாட்டு அல்லால்-என்று சொல்லுந் தன்மையரிடத்தல்லாமல், (பிறரிடத்து), மேல்-மேன்மைக் குணமுடையோர், முகம்புகுதல் ஆற்றுமோ-முகங்காட்டிச் செல்லுதலைப் பொறுப்பாகளோ? [பொரூ என்றபடி]; (எ-று.)

உலகத்தில் மனிதர்க்கு வறுமையால் இரக்கும்படி நேர்தலும் உண்டு; அப்படி நேர்ந்தாலும், கண்டவிடத்தும்சென்று இரவாமல், யாசகரை மனமுவந்து முகமலர்ந்து இன்சொற்சொல்லி ஆதரிக்குந்தன்மை யுள்ளவரிடமே செல்வர் மேலோர் என்பதாம். பின்னிரண்டடிகட்கு 'உலகத்தில் இப்படிச் செய்வாரில்லாமையால் இரப்பினையுஞ்சக்கடவன்' என்பது, ஓர் பழைய வுரை.

கந்து - கந்தம் என்னும் வடமொழியின் திரிபு ; *கந்து-கிழங்கு* : இங்கே காரணத்துக்கு இலக்கணை ; ' மூலம் ' என்பதுபோல. ஸ்கந்தமென்னும் வடசொல்லின் திரிபாகக்கொண்டு, பற்றுக்கோடெனப் பொருளுரைத்தலுமொன்று. செல்லாரும், உம்-இழிவு சிறப்பு. செல்லாரும் அல்லர் = செல்லலே செல்வர்; இரண்டு எதிர்மறை, உடன்பாட்டை யுணர்த்திற்று. ஓகாரம்-எதிர்மறை. ' மேல் '-மேலோர் ; பண்பாகு பெயர் ; இது பொருளால் உயர்திணைப் பலர்பாலாயினும், சொல்லால் பால்பகா அஃறிணைப் பெயராதலால், ' ஆற்றும் ' என்னும் வினையைக்கொண்டது. ஒருவர் என்பது பகுதியை நோக்குமிடத்து ஒருமையேயாயினும், விகுதிபற்றிப் பலர்பால் முற்றையே கொள்ளும். ' அகம்புகுதும் ' என்றும் பாடம். (கூ)

கூ0ச. திருத்தன்னே நீப்பினுந் தெய்வஞ் செறினு
முருத்த மனத்தோ டுயர்வள்ளி னல்லா
ரருத்தஞ் செறிக்கு மறிவிலார் பின்சென்
றிருத்திறைஞ்சி நில்லாதா மேல்.

(இ - ள்.) தன்னே—, திரு-இலக்குமி, நீப்பினும்-கைவிட்டாலும், தெய்வம்—, செறின்உம்-கோபித்து வருத்தினாலும், உருத்தமனத்தோடு-(செல்வர்பாற் சென்று இரப்பாய் என்ன, அது குறித்துக்) கோபித்த (அம்) மனத்தோடு, உயர்வு உள்ளின் அல்லால் - (தன்) மேன்மையை நினைத்தலேயல்லாமல், - மேல் - மேன்மைக் குணமுடையவன்; - அருத்தம் செறிக்கும் அறிவு இலார் பின்சென்று - (ஈகைத்தன்மை யில்லாமல் லோபத்தாற்) பொருளைச் சோத்துவைக்கும் அவிவேகிகளிடத்திற்போய், எருத்து இறைஞ்சி நில்லாது-தலை குனிந்து நிற்கமாட்டான் ; (எ - று.)

வறுமையும் மற்றும் பல துன்பங்களும் நேர்ந்தாலும் தமது மேன்மையையே எண்ணிப் பெரியோர்கள் இரவாதிருப்பர்களேயன்றி, லோபிகளிடம்போய்த் தலைவணங்கி நிற்கமாட்டார்களென்பதாம்.

செல்வம் சம்பாதித்ததற்குப் பிரயோஜனமாகிய தான் அனுபவித்தல் பிறர்க்குக்கொடுத்தல் என்ற இரண்டும் சிறிதும் இல்லாமல் செல்வத்தை வருந்தி மேன்மேலுஞ் சேர்த்து எவர்க்குந் தெரியாமற் பத்திரப்படுத்திப் புதைத்துவைத்து அழிபவர் பொருளின்பயனே அறியாதவராதலால், 'அருத்தஞ் செறிக்கும் அறிவிலார்' எனப்பட்டனர். "பாடுபட்டுத் தேடிப் பணத்தைப் புதைத்துவைத்துக், கேடுகெட்ட மானிடரே" என்றார், **ஔவையாரும்.** திரு-செல்வத்துக்கு உரிய தலைவி ; "நல்லாளுடன்படின் தானே பெருகும் கெடும்பொழுதில், கண்டனவுங் காணுக்கெடும்" ஆதலால், செல்வம் ஒழிதலை ' திரு நீப்பின் ' என்றது. உருத்த மனத்தோடு-(சோர்வில்லாமல்) ஊக்கங்கொண்ட மனத்துடனே என்பாருமுளர்.

' தன்னே ' என்பதை ' செறின் ' என்பதோடுங் கூட்டுக. உள்ளின்-வினையெச்சம், தொழிற்பெயர்த்தன்மைப்பட்டது. தெய்வம்-ஊழ்வினை.

கூ0ஞ. கரவாத திண்ணன்பிற் கண்ணன்னார் கண்ணு
மிரவாது வாழ்வதாம் வாழ்க்கை—யிரவினை
யுள்ளுங்கா லுள்ள முருகுமா லென்கொலோ
கொள்ளுங்காற் கொள்வார் குறிப்பு.

(இ - ள்.) கரவாத - (யாசகர்க்குப் பொருளை) ஒளிக்காத [உள்ளதைக் கொடுக்கின்ற], திண் அன்பின் - உறுதியான அன்பையுடைய, கண் அன்னர் கண்ணும் - (தம்) கண்ணையொத்த மேலோரிடத்தும், இரவாது வாழ்வது - யாசகஞ் செய்யாமல் வாழ்வதே, வாழ்க்கை ஆம் - (ஒருவர்க்கு) நல்வாழ்க்கையாம்; இரவினை உள்ளும் கால் - யாசித்தலாகிய தொழிலை நினைக்கும் பொழுதே, உள்ளம் உருகும் - மனம் கரைந்து அழிந்து போகின்றது; (அப்படியிருக்க), கொள்ளுங்கால் - (பிறரிடத்துத் தாம் ஒரு பொருளை இரந்து) பெறும்பொழுது, கொள்வார் குறிப்பு - (அங்ஙனம்) பெற்றுக் கொள்பவரது மனம், என்கொலோ - எப்படிப் பட்ட தாமோ? (எ - று.)

லோபிகளல்லாதவரும், மனமொத்த அன்புள்ளவரும், கண்போலச் சிறந்தவரும் **ஆனவரிடத்தும்** இரக்கக்கூடாது; எனென்றால்,—இரத்தலென்பதை நினைக்கும்பொழுதே மனம் அழிகிறது; இரந்து பொருள் பெறும்போது, மனம் என்ன நிலைதான் அடையுமோ? என்பதாம். **ஏது வணி.** இனி, 'என்கொலோ கொள்ளுங்கால் கொள்வார் குறிப்பு' என்பதற்கு - பிறர் வருந்திச் சம்பாதித்த பொருளைத் தாம் ஒரு முயற்சியுமின்றி யாசகமாய்ப் பெறுபவரது எண்ணம் என்னவோ? என்றும் கருதுக் கொள்ளலாம்: அந்த எண்ணம் இகழத்தக்க தென்றபடி.

"கரவாது உவந்தீயுங் கண்ணன்னார் கண்ணும், இரவாமை கோடியுறும்", "இரவுள்ள உள்ள முருகுங் கரவுள்ள, உள்ளதூஉ மின்றிக் கெடும்" என்ற **திருக்குறள்**கள் இங்கு ஒப்பு நோக்கத் தக்கன.

கண் அன்னர் - உறுப்புக்களிற் சிறந்த கண்போல, மனிதரிற் சிறந்த உத்தமரென்க. உம் - உயர்வு சிறப்பு. குறிப்பு - தொழிற் பெயர். உள்ளம் - அகத்து உறுப்பு. (ஙு)

ஈ0சு. இன்ன வினைய வினிய வொழிகென்று
தன்னையே தானிரப்பத் தீர்வதற்—கென்னைகொல்
காதல் கவற்று மனத்திலுற் கண்பாழ்பட்
டேதி லவரை யிரவு.

(இ - ள்.) 'இன்ன - துன்பங்கள், இயைக - (நமக்கு வந்து) பொருந்தக் கடவன: இனிய - இன்பங்கள், ஒழிக - (நம்மைவிட்டு) நீங்கக் கடவன,' என்று - என்று எண்ணி, தன்னையே - தன் மனத்தையே, தான் நிரப்ப - தான் நிரம்பச் செய்தலினால் [திருப்திப்படுத்துவதனால் என்றபடி], தீர்வதற்கு - நீங்கிப் போகும்படியான வறுமைக்காக, காதல் கவற்றும் மனத்திலுல் - பொருளாசை கவலைப்படுத்தும் மனத்தோடு கூடி, கண் பாழ்பட்டு - (துன்பத்தால்) கண்கள் பொலிவிழக்கப் பெற்று, ஏதிலவரை இரவு - அயலாரை யாசித்தல், என்னை கொல் - என்ன பயன் கருதியோ? (எ - று.)

இன்பம் துன்பம் என்பன மனத்தின் குணமாதலால், இன்பத்தைத் துன்பம் போலவும், துன்பத்தை இன்பம் போலவும் எண்ணி மனத்தில் திருப்தியடைந்துவிட்டால், வறுமைத் துன்பம் நீங்கிவிடத் தக்கதன்றோ?

அப்படி நம்மாலேயே நீக்கத் தக்க ஒன்றை ஒழிப்பதற்காக நமது மனத்தைப் பண்படுத்தாமல் புண்படுத்திப் பொருளாசையால் ஒடுங்கிப் பிறரைப் போய் யாசிப்பது சிறிதும் அவசியமில்லாத தென்பதாம். இவ்வாறு மனத்தால் துன்பம் இன்பமாகப் பாவிக்கப்படுதல் கூடுதலே, "வைததனையின்சொல்லாக் கொள்வானு நெய்பெய்த, சோறென்று கூழை மதிப்பானு—மூறிய, கைப்பதனைக் கட்டியென் றுண்பானு மிம்மூவர், மெய்ப் பொருள் கண்டு வாழ்வார்" என்பது கொண்டு அறிக. இன்பம் துன்பமாகப் பாவிக்கப்படுதல், இளமைநிலையாமை யாக்கைநிலையாமை செல்வம் நிலையாமை முதலியவற்றை உணர்தலால் இனிது கூடும்.

கவற்று - கவல் என்பதன் பிறவினை. பாழ்படுதல் - வாடுதல். கண் பாழ்பட்டு என்பதற்கு - அறிவழிந்து என்றும் பொருள் கொள்ளலாம். காதல் - காதுதல் : (மனத்தை) வருத்துவது என்கிற காரணம் பற்றி ஆசைக்குப் பெயராயிற்று. இரப்ப எனப் பிரித்து - தன்மனத்தையே தான் வேண்டிக்கொண்டால் எனினும் அமையும். (சு)

கூ0ள. என்றும் புதியார் பிறப்பினு மிவ்வுலகத்
தென்று மவனே பிறக்கலான்—குன்றின்
பரப்பெலாம் பொன்னெழுகும் பாயருவி நாட
விரப்பாரை யெள்ளா மகன்.

(இ - ள்.) குன்றின் பரப்பு எலாம்-மலைகளினுடைய பரந்த இடங்களிலெல்லாம், பொன் ஒழுகும் - பொன் ஒடுதற்குக் காரணமான, பாய் அருவி - விரைவாக வருகின்ற அருவிகளையுடைய, நாட - நாட்டையுடைய அரசனே !—ஓ உலகத்து - இந்தப் பூலோகத்தில், என்றும் - எப்பொழுதும், புதியார் பிறப்பினும்-புதியராய் மனிதர்கள் பிறந்து கொண்டிருந்தாலும், இரப்பாரை எள்ளா மகன் அவனே-யாசகர்களை இகழாத மனிதனே, என்றும் பிறக்கலான்-எப்பொழுதும் பிறவாதவன் ; (எ - று.)

இரப்பவரை அவமதியாமல் ஆதரிக்கும் இயல்புடைய உத்தம மனிதனே புதிதுபுதிதாய் மேன்மேலும் மனிதா பிறத்தற்கிடமான இவ்வுலகத்தில் தான் பிறவாமல் நற்கதியடைவன் என்பதாம். இரப்பவரையிகழாத மனிதனைப் பிறக்கக் காண்கிறோமில்லையென அருமை பாராட்டிக் கூறியதாகவும் உரைகொள்ளலாம்.

இச்செய்யுள், யாசகர்க்கு அவமிரத்தல் தொழிலிலுண்டாகிற அச்சத்தை உள்ளபடியறிந்து மனமிரங்கி அவர்கட்குத் தானஞ் செய்யுந் தன்மையுடையவனைப் புகழ்ந்து கூறுதலாகிய சம்பந்தம் பற்றி, இவ்வதிகாரத்தில் வைக்கப்பட்டதென்க. 'இது இரவச்சமானது எப்படியென்னில், இந்த உலகத்தில் இரக்குமவனை இகழாதவர் யாருமில்லை யென்றவாறுதலால், நிலையாத உடம்பினை விரும்பி இகழ்ச்சிக்கு இடங்கொடாமல் அவ்விரப்பினை யஞ்சி அதனைத் தவிர வேண்டுமென்பதாம்' என்பது, **பழைய** வுரை.

மருத நிலமாகிய அந்நாட்டை அடுத்துள்ள குறிஞ்சிநிலத்தின் மாட்சியையும் அங்கிருந்து பொன்னை அடித்துக் கொண்டு பெருகுகின்ற நீர் வெள்ளம் நிலவளத்திற்குக் காரணமாய்ச் சிறந்திருத்தலையுங் கூறுவார். **'குன்றின் பரப்பெலாம் பொன்னெழுகும் பாயருவி நாட'** என்றார்.

இவ்வுலகத்து என்றும் பிறக்கலான் என்றதனால், முத்திபெறுவ னென்பது பெறப்படும்; மீளாவுலகமாகிய முத்தியைப்பெற்றவர் மீண்டும் இங்குப் பிறத்தலில்லையென்பது, நூல்துணிபு: அப்படிப்பட்ட உயர்கதியும் உதார குணமுள்ளவனுக்குக் கிடைக்கு மென்றவாறு.

பரப்பு-பரந்த இடத்துக்குத் தொழிலாகுபெயர். ஒழுகும்-பெயரெச்சம், காரியப்பொருளது; 'நோய்தீரும் மருந்து என்ற விடத்துப் போல. இனி, ஒழுகும் என்ற தன்வினைக்கு-ஒழுக்கும் எனப் பிறவினைப்பொருள் கொண்டு, பொன்னைக் கொழிக்கிற என்று உரைப்பினுமாம். அவனே, ஏ-பிரிநிலை. மகனவன், அவன்-முதல்வேற்றுமைச் சொல்லுருபு. (எ)

ஊ0அ. புறத்துத்தன் னின்மை நலிய வகத்துத்தன்
னன்ஞான நீக்கி நிரீஇ யொருவனே
யீயா யெனக்கென் றிரப்பானே லஃதிலேயே
மாயானே மாற்றி விடின்.

(இ - ள்.) புறத்து-வெளியிலே [உடம்பிலே], தன் இன்மை - தனது வறுமை, நலிய-வருத்த [தன்மேனியைப் பொலிவழிக்க], (அதற்காக) அக த்து தன் நல் ஞானம் நீக்கி நிரீஇ-மனத்தில் தனது நல்ல அறிவைத்தள்ளி (அறியாமையை) நிலைநிறுத்தி, ஒருவனே - (செல்வமுடைய) ஒருத்தனே, எனக்கு ஈயாய் என்று இரப்பானேல்-'எனக்கு (ஒரு பொருளைக்) கொடுப் பாய்' என்று (ஒருவன்சென்று) யாசிப்பானுலல், மாற்றிவிடின்-(அந்த செல்வமுடையவன் இல்லையென்று) மறுத்துவிட்டால், அ நிலையே-அவ் விடத்திலேயே [அப்பொழுதே], மாயானே - (அவ்விரப்பவன்) இறந்து போகமாட்டானே? (எ - று.)

வறுமை காரணமாக உடம்பு வருந்துதலினால் உணர்விழந்து ஒருவ னிடம் போய் யாசிக்கிறபொழுது, அவன் இல்லையென்று சொன்னல்அந்த யாசகன் மரணவேதனையடைவானே! என்று இரங்கிக் கூறியடியாம். "இரப்பவர் சொல்லாடப் போஒமுயிர்" என்றார் **திருக்குறளிலும்**. உடம்பை வருத்துகிற வறுமையைத் தொலைக்கும்பொருட்டு யாசிப்பது, அவ்வு டம்பை இவ்வாறு மரணவேதனைக்கு உள்ளாக்கி மிகவருத்துதலாய் முடித லால், இரப்பது பேதைமை; அதற்கு அஞ்சவேண்டும் என்பது, இதனைத் போந்தபொருள். மானங்கெட்டு இரந்தும் விரும்பிய பொருள்பெறாது ஈவோனல் மறுக்கப்பட்டவனுக்கு உண்டாகும் அவமானத்தினும் அவ னது மரணமே மேல் என்ற கருத்தும் கொள்ளலாம்.

இனி, உடம்பை வருத்துகிற வறுமையை யொழிக்கும்பொருட்டு ஒரு வன் இரக்கத்துணிவானுலல் அதனிலும் அப்பொழுதே இறந்து அவ்வுட ம்பைவிடு அவ்வழியால் உடம்பைப்பற்றிய வறுமையை ஒழிப்பது நல மென்று கருத்துக்கொள்ளவும் இடமுண்டு; இக்கருத்துக்கு, அ நிலையே - (வறுமை உடம்பைவருத்துகின்ற) அப்பொழுதே, மாற்றிவிடின்-(இரக்க முயலாமல் அதனல் வருத்தப்படுகின்ற உடம்பை) ஒழித்தால், மாயானே- (அவ்வறுமை) நீங்கமாட்டானே? என்று பதவுரை கொள்க.

கலிய-இங்கே, பிறவினைப் பொருளது. ஈயாய்-ஏவலொருமை; ஆய்-விகுதி. 'ஈ'-இழிந்தோனேற்றல்வினை; "ஈதா கொடு வெனுமுன்று முறையே, யிழிந்தோ ஞெப்போன் மிக்கோ னிரப்புரை" என்றார் **நன்னூலார்.** அஃறிலையே, ஏகாரம்-தேற்றவகையால் விரைவுகுறிக்கும். மாயாலே, ஓகாரம்-இரக்கமும் வினவுமாம். ஒருவனே இரத்தல் என இயையும்.

முதலடியில் 'புறத்து', 'அகத்து' என மாறுபட்ட சொற்கள் வந்தது, **தொடைமுரண்.** (அ)

கூ0கூ. ஒருவ ரொருவரைச் சார்ந்தொழுக லாற்றி
வழிபடுதல் வல்லுத லல்லாற்—பரிசழிந்து
செய்யீரோ வென்னெனு மென்னுஞ்சொற் கின்னுதே
பையத்தான் செல்லு நெறி.

(இ-ள்.) ஒருவர்—, ஒருவரை-மற்றொருவரை, சார்ந்து ஒழுகல் ஆற்றி-சேர்ந்து (அவர்கருத்தின்படி) நடத்தலேச் செய்து, வழிபடுதல்-(அவரிடம் தாம்) வணக்கத்தோடிருத்தலே, வல்லுதல் அல்லால்-வல்லவராயிருப்பது முறைமையே யல்லாமல்,—பரிசு அழிந்து-பெருமை கெட்டு, என்னெனும் செய்யீரோ என்னும்-"(எனக்கு) ஏதாயினும் (உதவி) செய்ய மாட்டீர்களோ' என்று இரந்துசொல்லுகின்ற, சொற்கு-சொல்லுக்காட்டிலும்,—தான்பைய செல்லும் நெறி-தான் துன்பமுண்டாகப் போகும் வழி [வறுமையோடிருப்பது] இன்னுதே-இனிமையாக இராதா? (எ-று.)

ஒரு வறியவன் தன் வறுமையை நீக்குதற்பொருட்டுச் செல்வமுடைய வனே யடைந்து அவனிடம் தக்கபடி நடந்து வணக்கத்தோடு இருத்தல் செய்யத்தக்கதேயன்றி, மானமிழந்து அவனிடம் ஒரு பொருளேயும்இரத்தல் கூடாது; அப்படி இரந்து உண்டு இனிது உயிர்வாழ்தலினும் வறுமையால் வருத்தப்பட்டுக்கொண்டு காலங்கழித்தலே மேலென்பதாம். மேற்பாடலில் இரத்தலினும் இறத்தல் சாலுமென்றார்; இப்பாடலில் துறத்தல் சாலுமென்கிறு ரென்பாருமுளர்.

இச்செய்யுளில், மானமழிந்துஇரத்தலிலுள்ள குற்றத்தினால், வறுமையினால் வருந்தி நடத்தற்குக் குணங்கூறியுள்ளது, **அகமலர்ச்சியணி**யாம்; இது, வடமொழியில் **உல்லாஸாலங்கார** மெனப்படும்: ஒன்றன் குணத்தினாலாவது குற்றத்தினாலாவது மற்றொன்றற்கு குணமாவது குற்றமாவது உண்டாதலேச் சொல்லுதல், இதன் இலக்கணம்.

தான் ஒருவனைச் சார்ந்திருக்கையில், தனதுகுறிப்பையறிந்துஅவனே ஏதாவது உதவிசெய்தால் அவ்வுதவியை ஏற்றுக்கொண்டாலுங் கொள்ளலாம்; வாய்திறந்து இரப்பது இழிவு என்பது, இதனாற் போந்தபொருள். பையத்தான்செல்லும் நெறி இன்னுதேஎன்பதற்கு-மெல்லத் தான் இல்லறத்தை விட்டுத் துறவறத்திற்குப் போய் தவஞ்செய்யும்வழி இனியதன்றோ? என்று உரைப்பாருமுளர்; அவ்வுரை, தவத்தைத் தாழ்வுபடுத்திச்சொல்வதாய் முடிதலால், தகுதியென்றென விடுக்க.

வல்லுதல் என்ற தொழிற்பெயரில், வல்-பகுதி; இது-வன்மையென்னும் பண்பினடி யினேச்சொல்தன்மைப்பட்டதாதல் வேண்டும். செய்யீர்-

முன்னிலேப்பன்மை யெதிர்மறைவினைமுற்று; உடன்பாட்டு ஏகற்பன்மை யாகவுங் கொள்ளலாம். ஓ - வினு. சொற்கு - நான்காம் வேற்றுமை, எல்லேப்பொருளது. இன்னுமே, எகாரம் - வினுவகையால் எதிர்மறைப்பொருளேயுணர்த்தி, 'இரண்டு எதிர்மறை ஓர் உடன்பாட்டையுணர்த்தும்' என்ற நியாயத்தால் உடன்பாட்டுப் பொருளேக்குறித்து, மேற்றக்கருத்தை விளக்கும். பைய-துன்பப்பொருளேயுணர்த்தும் 'பை' என்பதனடியாகப் பிறந்த வினேயெச்சம்; பைதல் [துன்பம்] என வருதலேயுங் காண்க. (கூ)

கூகo. பழமைகந் தாகப் பசைந்த வழியே
கிழமைதான் யாதா னுஞ்செய்க—கிழமை
பொருஅ ரவரென்னிற் பொத்திக்குங் நெஞ்சத்
தருஅச் சுவதேகார் நீ.

(இ - ள்.) பழமை கந்து ஆக-பழைய பயிற்சி காரணமாக, பசைந்த வழியே-(ஒருவர் மற்றொருவர் பக்கல்) அன்புகொண்டவிடத்து, (அவர்), கிழமைதான் யாது ஆனும் செய்க - யாதாயினும் ஒரு தக்க உதவியைச் செய்யக்கடவர்; அவர் கிழமை பொருர் என்னின் - அவர் (அப்படி) தக்க உதவி செய்யுந் தொழிலே ஏற்றுக்கொள்ளாமற் போவாராயின், (அது), தம் நெஞ்சத்து - தமது மனத்திலே, பொத்தி - பதித்து, அரு-நீங்காமல், சுவது-எரிக்கும்படியான, ஓர் நீ - ஒரு நீயாகும்; (எ - று.)

வறுமையடைந்தவர் அவ்வறுமைநீங்கப் பிறரிடம் சென்று இரத்தலாலுண்டாகும் மானபங்கத்திற்கு அஞ்சிப் பழைய ரண்பரிடம் அன்போடு சென்ருல், அவர்கள் தம்மால் இயன்றமட்டில் உதவி செய்யக்கடவர்; அவ்வாறு உதவியொன்றும் செய்யாமற்போனுல், அது, அடைந்தவாகளது மனத்தை மிகவும் வருந்தச் செய்யும் என்பதாம். (துரோபதராசன் கிழமை பாராட்டிக் கிட்டியபோது துரோணுசாரியனே யெள்ள, அன்னுன் மனக் கொதிப்புக் கொண்டமை, இங்கே கருதத்தக்கது.)

பின்னிரண்டடிகளில் உபமான உபமேயங்கட்கு ஐகியம் [ஒற்றுமை] கூறியுள்ளது, **காட்சியணியாம்.** புறத்தையே சுடுந் நீயினும் வேறுபாடு தோன்ற 'ஓர் நீ' என்ருரென்னலாம்.

பழமை - சினேகிதரது பழையவராகுந் தன்மை. பொருஅர், அருஅ- செய்யுளோசை நிறைக்கவந்த உயிரளபெடைகள். கிழமை - உரிமை; உரிய பதவிக்குப் பண்பாகுபெயர். கிழமை பொருஅர் அவர் என்னின் என்பதற்கு-தாம் உரிமை பற்றிச் செய்த உதவியை வந்தவர் ஏற்றுக் கொள்ளாமற்போனுல் என்று உரைப்பாரு முளர்; அவ்வுரை அதிகாரத்துக்குச் சம்பந்தப்பட்டதன்ரும்.

இவ்வதிகாரத்துப் பாடல்களிற் சிலவற்றைச் செய்தவர்கள், கண்டவரிடத்தும் போய் மானங்கெட இரத்தலே முழுவதும் இகழ்ந்து, பழக்க மூடையவரை அடைந்து அவராற் குறிப்பறிந்து செய்யப்படும் உதவியை ஏற்றுக்கொள்ளுதலே ஒருவாறு உடன்படுங் கருத்துடையர் எனக்காண்க.

ஐந்தாவது

பொதுவியல்

அரசியல் முதலியவற்றுள் அடங்கா தொழிந்தவற்றின் இயல்பைக் கூறும் பிரிவு என்பதாம். அத்தன்மை அவையறிதலென்னும் இவ்வதிகார மொன்றனைக் கூறப்படுதலால், ஓரதிகாரம்தானே ஓரியலானமை அறிக.

ஈஉ - ஆம் அதிகாரம்.—அவையறிதல்

சபையின் தன்மையை அறிதல்; அஃதாவது - சபையில் உள்ளவர்களது கல்வி கேள்விகளின் தகுதிகளை நுட்பமாக அறிந்து அதற்கு ஏற்ற படி தான் அங்கு நடத்தல். இரவச்சத்துக்கும் அவையறிதலுக்கும் சமீபமான சம்பந்தமில்லையாயினும் மானத்தைப் பாதுகாப்பவர்க்கு இரவச்சம் போலவே அவையறிதலும் இன்றியமையாததென்கிற காரணம்பற்றி, இரவச்சத்தின்பின் வைக்கப்பட்டது. இரப்பது அவமானமடைவதற்குக் காரணமாவதுபோல, சபையறியாமற் சென்று நடத்தலும் மானக் கேட்டுக்குக் காரணமாகுதல் காண்க. இனி, இரவினையஞ்சுபவன் கல்வி காரணமாக அரசனிடம் பரிசில் பெறச் செல்லும்போது அவ்வரசனுள்ள அவையினது இயல்பை யறிதல் இன்றியமையாததாகலின், இவ்வவையறிதல் இரவச்சத்தின்பின் வைக்கப்பட்டதென்றலும் ஒன்று. அவை - ஸபா. சபை, சவை, அவை எனக காண்க. 'அவை'-அவையிலுள்ளாரது குணங்களுக்கு இருமடியாகு பெயர்.

ஈகக. மெய்ஞ்ஞானக் கோட்டி யுறழ்வழி விட்டாங்கே
ரஞ்ஞானந் தந்திட் டதுவாங் கறத்துழாய்க்
கைஞ்ஞானங் கொண்டொழுகுங் காறி பெயர்முன்
சொன்ஞானஞ் சோர விடல்.

(இ - ள்.) மெய் ஞானம் - உண்மையான அறிவையுடைய, கோட்டி-சபையிலே, உறழ் வழி - சேரும் முறைமையை, விட்டு-நீங்கி, ஆங்கு-அவ்விடத்திலே, ஓர் அஞ்ஞானம் தந்திட்டு - அறிவில்லாமைக்கு உரியதொரு வார்த்தையைக் கொண்டுவந்து, அது-அந்த அஞ்ஞான வார்த்தையையே, ஆங்கு - அச்சபையிலே, அற-மிகுதியாக, துழாய்-பரப்பி, கை ஞானம் கொண்டு ஒழுகும் - அற்பமான அறிவைக்கொண்டு நடக்கின்ற, கார் அறிவு ஆளர் முன் - பழிக்கப்படும் அறிவையுடையவர்களின் முன்பு, (சான்றோர்), சொல் ஞானம் - (புகழ்ந்து) சொல்லத்தக்க (தமது) ஞானமொழிகளை, சோரவிடல் - (சொல்லாமல் நழுவ) விடக்கடவர்; (எ - று.)

சிலர் விவேகிகளின் சபையிலே போய்த் தாம் அடக்கமாக இருந்து அவர்கள் சொல்வதைத் தெரிந்துகொள்வதை விட்டு, அங்கே தமது அறிவில்லாமைக்கு உரிய பேச்சை வெளியிட்டு அதனையே மூர்ட்டுத்தனமாய் ஸ்தாபிக்கவும் தொடங்குவர்; அப்படிப்பட்ட மூடர்களின் முன்னிலையில் விவேகிகள் தமது சிறந்த மொழிகளைச் சொல்லாமல் விட்டிடவேண்டும் என்பதாம். "புல்லவையுட் பொச்சாந்தும் சொல்லற்க நல்லவையுள், நன்குசெலச் சொல்லுவார்" என்றார், திருக்குறளிலும்.

இச்செய்யுளில் ஒரே பொருளுள்ள 'ஞானம்' என்ற சொல் பன்முறை வந்தது, **சொற்பொருட்பின் வருநிலையணி**யாம்.

மெய்ஞ்ஞானக்கோட்டி-சபையிலுள்ளாரது தத்துவசாஸ்திரஞானம், சபையின்மேல் ஏற்றிக் கூறப்பட்டது; **உபசாரவழக்கு**. அஞ்ஞானம்-அஜ்ஞாநம்; வடசொல். கைஞ்ஞானம், கை-சிறுமை. பழியைக் கருதிறமுடைய தென்று வருணித்தல் கவிமரபாதலால், அத்தன்மையை இங்கே பழிக்கப் படும் அறிவின்மேல் ஏற்றி, 'காரறிவு' என்றார். (க)

க கூஉ. நாப்பாடஞ் சொல்லி நயபுணர்வார் போற்றெறிக்குந்
தீப்புலவற் சேரார் செறிவிடையர்—தீப்புலவன்
கோட்டியுட் குன்றக் குடிபழிக்கு மல்லாக்கால்
மேற்படைக் கொள்ளா வெழும்.

(இ - ள்.) நா பாடம் சொல்லி-வாய்க்குவந்த பாடங்களை எடுத்துச் சொல்லி, நயம் உணர்வார் போல் - நல்ல நூற்பொருள்களை அறிபவர் போல(த் தம்மைக் காட்டி), செறிக்கும் - (கூட்டஞ்) சேர்க்குந்தன்மை யுள்ள, தீ புலவன் - தகுதியல்லாத புலவனை, செறிவு உடையார் சேரார்-அடக்கமுள்ளநற்புலவர்கள் சேரமாட்டார்கள்; (எனெனில்),—தீபுலவன்-அந்த இழிகுணமுடைய புலவன், கோட்டியுள்-சபையிலே, குன்ற-(கேட் பவர் மனம்) வருந்தும்படி, குடி பழிக்கும்-(நற்புலவர்களின்) குலத்தைதூற்றிப் பான்; அல்லாக்கால்-அப்படியல்லாவிட்டால், தோள் புடைக்கொள்ளா எழும்-தோள்களைத் தட்டிக்கொண்டு (சண்டைக்கு) எழுவான்; (எ - று.)

வாய்க்குவந்ததைச் சொல்லித் தன்னைப் படித்தவனைக் சாதாரண மனிதா மயக்கும்படி காட்டி இந்த ஆடம்பரத்தாற் சனங்களைக் கூட்டி விடுகிற டம்பத்தன்மையுள்ள போலிப்புலவனிடத்து அடக்கமுடையோர் சென்று பேசுதல் தகாது; எனென்றால்,—அவன் அங்கே தனக்குத் தோன்றியபடியெல்லாஞ் சொல்லுகிற சொல்லுக்கு இவர்கள் ஏதாவது தக்க ஆதாரம் சொன்னால், அதற்கு எற்ற உத்தரஞ் சொல்லமாட்டா மையால் அவன் கோபங்கொண்டு இவர்கள் குலத்தைப்பற்றிப் பழித்துப் பேசவாவது தலைப்படுவான்; அல்லது, கோபாவேசத்தாற் சண்டைக்குக் கிளம்பிஎழுந்து கிளம்புவான் என்பதாம்.

மூன்றிரண்டடிகளிற் கூறியுள்ள விஷயத்தைப் பின்னிரண்டடி களிற் காரணங்காட்டி நிறுவியது, **ஏதுவணி**யாம்.

இங்கே 'பாடம்' என்றது, நெட்டுருவாய்த் தனக்குத் தெரிந்த விஷய மென்றபடி. செறிக்கும் என்பதில் பகுதியாகிய செறி என்பது-தன் வினை பிறவினை இரண்டுக்கும் பொது; இங்கே பிறவினைக்கு வந்தது: செறியும் என்னாது, செறிக்கும் என வலிந்திக்கதே, பிறவினைக்குறி. புலம்-அறிவு; அல்லது, புலமை-கல்வித்தேர்ச்சி; அதாவது-பலவேறு வகைப் பட்ட நூலுணர்ச்சிகளையெல்லாம் ஒருங்கேகொண்ட பேரறிவுடைமை: பாண்டித்தியம்: அதனையுடையவன் புலவன். புலவற்சேரார் - உயர்திணை யில் இரண்டாம் வேற்றுமையுருபு தொக்கது; உயர்திணைப்பெயரின் ஈறு விகாரமாயிற்று: இரண்டாம் வேற்றுமைச் சிறப்புவிதியால். புலவன்

பழிக்கும், எழும் - செய்யுமென்முற்று ஆண்பாலுக்கு வந்தது. புடைக் கொள்ளா-புடைத்தலைக்கொண்டு; புடை-முதனிலைத் தொழிற்பெயர்.(உ)

நகந. சொற்றாற்றுக் கொண்டு சுனைத்தெழுதல் காமுறுவர்
கற்றாற்றல் வன்மையுந் தாந்தேறார்—கற்ற
செலவுரைக்கு மாறறியார் தோற்ப தறியார்
பலவுரைக்கு மாந்தர் பலர்.

(இ - ள்.) சொல் தாறு கொண்டு - சொற்களாகிய மூட்கோல்களைக் கொண்டு, சுனைத்து எழுதல் காமுறுவர்-தினவுகொண்டு (வாதஞ்செய்ய) எழுந்திருத்தலே விரும்புபவர்களாய்,—கற்ற ஆற்றல் வன்மையும்-(பிறரது) படித்த சாமர்த்தியத்தையும் (பேசுதல் முதலியவற்றிலுள்ள) வல்லமையையும், தாம் தேறார்-தாம் அறியாதவராய்,—கற்ற - (தாம்) அறிந்தவைகளை, செல - (பிறர் மனத்திற்) புகும்படி, உரைக்கும் ஆறு அறியார்-சொல்லும் வழியை அறியாதவர்களாய்,—தோற்பது அறியார்-(வாதப்போரில் தாம்) தோல்வியடைதலையும் அறியாதவர்களாய், பல உரைக்கும்-அநேகவார்த்தைகளை (வீணாகச்) சொல்லுகிற, மாந்தர்-மனிதர்கள், பலர்-(உலகத்தில்) அநேகர் (இருக்கின்றார்கள்); (எ - று.)

உலகத்தில் அற்பஞானமுடையவர் பலர், சபையில் தாமும் ஏதாவதொன்றை எடுத்துச்சொல்லி வாதஞ்செய்து பிறரோடு மாறுகொள்ளவேண்டுமென்று மிக்கவிருப்பங்கொண்டு கிளம்புவார்கள்; அவர்கட்கு, தம் எதிரில் வாதஞ்செய்பவரது படிப்பும் சாமர்த்தியமும் பிரசங்கசக்தி முதலியனவும் தெரியா; தமக்குத்தெரிந்த விஷயங்களையும் ஒழுங்குபடச் சொல்லத் தெரியாது; தாமாக ஆசைப்பட்டு எடுத்துக்கொண்ட வாதத்தில் பிறரால் தமது கொள்கை தோற்றுப்போனால் அதுவுந் தெரியாது; மேன்மேல் எதையாவது சொல்லிக்கொண்டிருப்பார்கள்; இப்படிப்பட்ட பயனிலசொல்லுந் தன்மையா சபைக்கு உரியவரல்லரென்பதாம்.

தாம்செய்யத் தொடங்கும் வாதப்போர்க்குத் தமது சிற்றறிவுடைய சொற்களையே ஆயுதமாக அவர்கள் கருதுதலால், 'சொல்தாற்றுக் கொண்டு' என்றார்; **உருவகம்.** தாறு + கொண்டு = தாற்றுக்கொண்டு; நெடிற்றொடர், வேற்றுமையில் றகரவொற்று இரட்டித்தது. சுனைத்தல்-சொறிதல்; இங்கே, உபசாரவழக்காய், அதற்குக்காரணமாகிய தினவின் மேல் நின்றது: இனி முதலடிக்கு - சொற்ற ஆறு கொண்டு - தாம் சொன்ன முறையையே விடாப்பிடியாகக்கொண்டு, சுனைத்து எழுதல் - (தம் ஈ) தினவெடுத்தாற்போல (பலகாலும் சொன்னதையே) சொல்ல எழுதலை, காமுறுவர் என்றலுமாம். இனி, சுனைத்து-கோபித்து என்றுமாம். 'சுனைத்தெழுதல்' என்ற பாடத்துக்கு-விரைந்துகிளம்புதலென்க. காமுறுவர், காமுறு-பகுதி; இது, காமமுறு என்பதன் விகாரம். கற்றாற்றல் - கற்றவாற்றல்: தொகுத்தல். தோற்பது - தோல்வித்தான மெனப்படும். (ஊ)

நகச. கற்றதூஉ மின்றிக் கணக்காயர் பாடத்தாற்
பெற்றதாம் பேதையோர் சூத்திர—மற்றதனை
நல்லா ரிடைப்புக்கு நாணுது சொல்லித்தன்
புல்லறிவு காட்டி விடும்.

(இ - ள்.) கற்றதூஉம் இன்றி - (தான்) படித்தது சிறிதுமில்லாமல், கணக்காயர் பாடத்தால்-பள்ளிக்கூடத்திற் படிப்பவர்களது வாய்ப்பாடத்தைக் கேட்டு அதனால், பேதை-மூடன், ஓர் சூத்திரம் - ஒருசூத்திரத்தின் மூலபாடத்தை, பெற்றது ஆம் - பெற்றவனவன்;(அப்படிபெற்றானாயின்), மற்று - பின்பு, அதனை-அச்சூத்திரத்தை, நல்லாரிடை புக்கு - நல்லவித்துவான்களுடைய சபையிற் போய், நாணுது சொல்லி - வெட்கப்படாமற் சொல்லி, தன்புல் அறிவு காட்டிவிடும்-தனது இழிவான அறிவை வெளிப்படுத்திவிடுவான்; (எ - று.)-'நல்லாரவைப்புக்கு' என்றும் பாடம்.

மூடன் ஆசிரியரை வழிபட்டு முறையே கல்வி கற்காமல் கல்விச்சாலைகளிற் கற்கும் மாணாக்கர் வாய்ப்பாடத்திற்காக வாய்விட்டுப் பலமுறை உருச்சொல்லும் பொழுது கேட்டு யாதாயினும் ஒருசூத்திரத்தைமாத்திரம் தான் தெரிந்துகொள்வானாயின், அவ்வளவோடு நிறாமல், படித்த பெரியோர்கள் கூட்டத்திற் போய்க் கூச்சமில்லாமல் அச்சூத்திரத்தை அரைகுறையாகக் குழறித் தனது அஜ்ஞானத்தை வெளியிடுவான் என்பதாம். பேதையர்களின் தன்மையைச் சுவைபடக் கூறியிருத்தலால், இச்செய்யுள்-**தன்மைநவிற்சியணி**யாம். இது,வடமொழியில் **ஸ்வபாவோக்தி**.

நன்றாகப் படித்தவனுக்கு, ஏதாவது ஒன்றைச் சபையிலே எடுத்துச் சொல்லும்பொழுது தவறுபடுமோ என்ற நாணம் மிகுதியாக உண்டாகக்கூடும்; அது கற்றறியாதவனுக்கு இல்லையாதலால், 'நாணுதுசொல்லி' எனப்பட்டது. அறிவுடையோரது சபையில் அறிவில்லாதவன் போனலும் மௌனமாக இருந்தால், அவனது அஜ்ஞானம் எல்லோர்க்கும் வெளிவிளங்காது; அவ்வாறு அடங்கியிராமல் "நுணலும் தன்வாயாற் கெடும்" என்ற படி தன்வாயால் தனது பேதைமையைப் புலப்படுத்துதலால் 'சொல்லித்தன்புல்லறிவு காட்டிவிடும்' என்றார்; "கற்பனவூழற்றூர் கல்விக் கழகத்தாங், கொற்கையின் றூத்தைவா யங்காத்தல்-மற்றுத்தம், வல்லுரு வஞ்சன்மி னென்பவே மாபறவை, புல்லுரு வஞ்சுவபோல்" என்றதை இங்கே அறிக.

கற்றதூஉம், உம்-இழிவுசிறப்பு, இன்னிசையளபெடை. கற்றதூஉமின்றி என்பதற்கு-வரன்முறையால் நல்லாசிரியரிடம் படித்ததொன்றுமில்லாமல் என்றும், கணக்காயர்பாடம் என்பதற்கு-உபாத்தியாயர் பிறர்க்குச்சொல்லிக்கொடுக்கிற பாடத்தினால் என்றும் உரைப்பாரு முளர். பேதை-அறிவின்மை; பேதைமையென்னும் பண்பினடி; அறிவில்லாதவனுக்குப் பண்பாகுபெயர். அவிவேகியினுடைய இழிவு விளங்க, பெற்றது என அஃறிணையாக் கூறினார்; "உவப்பினுமுயர்வினுஞ் சிறப்பினுஞ் செறலினும் **இழிப்பினும் பால்திணையிழுக்கினு மியல்பே**" என்பது காண்க. ஸூத்ரம்-வடசொல். கணக்கு **ஆயர்**-கணக்கை ஆய்த லுடையவ ரென்க; கணக்கு-எண்ணும், எழுத்தும். இனி கணக்கு - அரிச்சுவடியைக் கற்பிக்கின்ற, **ஆயம்** - ஆயத்தை (கூட்டத்தை) உடையவர்—கணக்காயரென்ற லும் ஒன்று. (ச)

நூகநி. வென்றிப் பொருட்டால் விலங்கொத்து மெய்கொள்ளார்
கன்றிக் கறுத்தெழுந்து காய்வாரோ—டொன்றி
யுரைவித் தகமெழுவார் காண்பவே கையுட்
சுரைவித்துப் போலுந்தம் பல்.

(இ - ள்.) வென்றிப் பொருட்டால் - (பிறரைத் தாம்) வெல்வது காரணமாக, விலங்கு ஒத்து - மிருகங்கள் போன்று, மெய் கொள்ளார் - உண்மைப் பொருளே ஏற்றுக்கொள்ளாதவராய், கன்றி கறுத்து - மிகக் கோபித்து, எழுந்து - (போர்க்குச்) சித்தமாய், காய்வாரோடு - மனங்கொதிப்பவர்களோடு, ஒன்றி - சேர்ந்து, உரை வித்தகம் எழுவார் - (தமது) சொல்லின் வன்மையைக் காட்டப் பிரயத்தனப்படுபவர், சுரை வித்து போலும் தம்பல் - சுரைக் காயின் விதைகள் போன்ற தங்கள் பற்களை, கையுள் காண்ப - (உடனே தங்கள்) கையிற் காண்பார்கள்; (எ - று.)

தாமாகவும் அறியாமல் பிறர்சொன்னலுங் கேட்டுத் தெரிந்துகொள்ளாமல் முரட்டுத்தனத்தையுடையவர்களாய் மிருகத்தோடொத்த குணமுள்ள அற்ப அறிவுடையாரோடு புத்திமான்கள் யாதாயினும் ஓர்உண்மைப்பொருளைச் சொல்லத்தொடங்கக்கூடாது; அப்படித்தொடங்கினல், அந்த முரடர்கள் இவர்களையும் இவர்கள் சொல்லையும் மதியாததோடு விடாமல், இவர்களைக் கன்னத்திலறைந்து இவர்கள்பற்களை உதிர்த்து இவர்கள் கையிற்கொடுப்பார்கள் என்பதாம். 'மூடர்களுடன் பேசுவதன்பயன் பல்லுடையக் கன்னத்தி லடிபடுவதே' என்பதை வேறுவகையாகக் கூறியிருப்பது, **பிறிதினவிற்சியணி**யாம்; இது, வடமொழியில் **பர்யாயோக்த** மெனப்படும்.

வென்றிப்பொருட்டால், பொருட்டு - நான்காம்வேற்றுமைச்சொல் ஈருபு; ஆல் - அசை. மிருகங்களினும் மனிதர்கட்கு உள்ள ஏற்றம், உணர்வுடைமை; அது இல்லாமையின், 'விலங்கொத்து' என்றார்; "விலங்கொடு மக்க ளனைய ரிலங்குநூல், கற்றுரொ டேனை யவர்" என்ற **திருக்குறளை**யுங் காண்க. விலங்கு - குறுக்காகவடிவமமையப்பெற்றது எனக் காரணப்பெயர்: இது - 'திர்யக்' என்ற வடசொல்லின் பொருள் கொண்டது. கன்றிக் கறுத்து - ஒருபொருட்பன்மொழி. கறுத்தல் - கோபித்தல்: கறுமை யென்னும் பண்பினடி விகாரப்பட்டு வினைத்தன்மை யடைந்தது - காண்பவே, ஏ - தேற்றம்.

நான்காமடி - வடிவுவமை "நிரைமுத்தனைய நகையுங் காணுய், சுரைவித்தேய்ப்பப் பிறழ்ந்துவேரூயின" என்ற **மணிமேகலையை**யுங் காண்க.

நூகசு. பாடமே யோதிப் பயன்றெரிந்த றேற்றுத'
மூடர் முனிதக்க சொல்லுங்காற்—கேடருஞ்சீர்ச்
சான்றோர் சமழ்த்தனர் நிற்பவே மற்றவரை
யீன்றூட் கிறப்பப் பரிந்து.

(இ - ள்.) பாடமே ஒதி-ஒருபாட்டின் மூலபாடத்தைமாத்திரமே வாய்ப்பாடமாகச்சொல்லி, பயன் தெரிதல் தேற்றாத - (அதன்) பொருளை ஆராய்ந்தறியமாட்டாத, மூடர் - அறிவில்லாதவர், மூனிதக்க சொல்லும் கால்-(கேட்பவர்) கோபிக்கத்தக்க குற்றமான சொற்களைச் சொல்லும் பொழுது, கேடு அருஞ் சீர் சான்றோர்-அறிவில்லாத புகழையுடைய பெரியோர்கள், அவரை ஈன்றாட்கு இறப்ப பரிந்து - அவர்களைப் பெற்றதாய் விஷயத்தில் மிக இரங்கி, சமழ்த்தனர் நிற்ப-(அவர்களை அவமானப்படுத்துதற்கு) நாணங்கொண்டவர்களாய் நிற்பார்கள்; (எ - று.)—எ- தேற்றம்.

செய்யுள்களின் பொருள் நுட்பமறியாத மூடர்கள் தவறுக எதைச் சொன்னாலும் புத்திமான்கள் கேட்டுப் பொறுத்துக்கொண்டு நிற்பது,'இவனைப்பெற்றதாய், இவன் நம்மால் அவமானப்படுஞ் செய்கையைக்கேள்விப் பட்டால் வருந்துவளே!' என்று எழுந்த இரக்கத்தாற்போலும் என்பதாம்.

பெரியோர் தமக்கு இயல்பாகவுள்ள பொறுமைக்குணத்தினால் மூடர்களைப் பொறுத்திருத்தற்கு, கவி, ஈன்றாட்கிறப்பப் பரிதலைக் காரணமாகக் கற்பித்துக் கூறியது; **ஏதுத்தற்குறிப்பேற்றவணி**யாம்; இவ்வணியில் தற்குறிப்பேற்ற வருபு தொக்குநின்றது; இங்ஙனம் உருபுதொக்குவரும் இவ்வணியை வடநூலார் **கம்யோத்ப்ரேக்ஷை** யென்பர்.

இவனது தாயின் தகுதியை நோக்கி இவன் பிழையைப் பொறுத்தல் கூடுமேயல்லது, இவன் பிழையையேநோக்கினால் பொறுக்கக்காரணமில்லை யென்பது கருத்து. "வாதுவல் வயிறே, வாதுவல் வயிறே நோவேனத்தை நின்னின்றனனே, எம்மில் செய்யாப் பெரும்பழி செய்த, கல்லாக் காளையை யீன்ற வயிறே" என்று தாய் துன்புறுவளாதலால்'ஈன்றாட்கிறப்பப் பரிந்து' என்றது. "புல்லா வெழுத்திற் பொருளில் வறுங்கோட்டி, கல்லாவொருவ னுரைப்பவுங் கண்ணோடி, நல்லார் வருந்தியுங் கேட்பரே மற்றவன், பல்லாருள்ளாணல் பரிந்து" என்பதனோடு இச்செய்யுளை ஒப்பிடுக.

பாடமே, எ-பிரிநிலை. தேற்றாத - பிறவினை தன்வினைப்பொருளதென்றாவது, இருவகைவினைக்கு பொதுவானது இங்கே தன்வினைக்கு வந்ததென்றாவது, தேறாதஎன்பதன் விரித்த லென்றாவது கொள்ளத்தக்கது. மூடர்-வடசொல். மூனி-முதனிலைத்தொழிற்பெயர். கேடு-முதனிலைதிரிந்த தொழிற்பெயர். மற்று-அசை; வினைமாற்றுமாம். (சு)

ஈகள. பெறுவது கொள்பவர் தோள்போ னெறிபட்டுக்
கற்பவர்க் கெல்லா மெளிய நூன்—மற்றம்
முறிபுரை மேனிய ருள்ளம்போன் றியார்க்கு
மறிதற் கரிய பொருள்.

(இ-ள்.) நூல்-சாஸ்திரங்கள்,—பெறுவது கொள்பவர்தோள்போல்-கிடைக்கிறபொருளைப் பெற்றுக்கொள்கின்ற வில்லமகளிரது தோள்கள் போல, நெறி பட்டு கற்பவர்க்கு எல்லாம் - (படிக்கிற) வழியிலே யிறங்கிப் படிக்கிறவர்கட்கெல்லாம், எளிய - சுலபத்தில் கிரகிக்கத்தக்கனவாம்; பொருள்-(அத்தச்சாஸ்திரங்களின்) அர்த்தங்களோ வெனின்,—அ முறி புரை மேனியர் உள்ளம்போன்று-தளிரையொத்த உடம்பையுடைய அந்தவேசையர்களது மனத்தை யொத்து, யார்க்கும் அறிதற்கு அரிய-எவர்க்கும் அறிவதற்கு அருமையானவை; (எ - று.)

சாஸ்திரங்களின் மூலபாடத்தையும் அதன் பதவுரையையும் அறிதல், வீலைமகளிரைச் சேர்தல்போலப் பலர்க்கும் சுலபசாத்தியமாம்; அவற்றின் சாரமானபொருளையும் ஆழ்ந்தகருத்தையும் அறிதல், அவ்வேசையரதுகருத்தின் நிலைமைபோல யாவர்க்கும் எளிதில் அறியமுடியாதவை என்பதாம்; **உவமையணி**. மூலபாடம்படித்து மேல்நோக்கில் தெரியக்கிடக்கும்பொருளையறிதலோடு நிற்காமல் ஆழ்ந்த பொருளையுங் கருத்தையும் நுட்பமாக அறியுந்தன்மையுடையவரே, சபைக்குத் தக்கவர்; அப்படியறியாதவர் தக்கவரல்லர் என அதிகாரத்துக்கு ஏற்பக் கருத்துக் கொள்க. இச்செய்யுளினால் அவைத்தலைவனுதற்கு உரியான் இன்னனென்பது தெரியப்படும். உலகில் நூல் கற்றூர்பலராக, அவைத் தலைவனுதற்கு உரியார் சிலரேயாதற்குக் காரணத்தைத் தெரிவிப்பது இது.

பெறுவது - பரிசத்தொகை: பெறுவது கோடலாவது கொடுப்பாரைக் கொள்ளாது விலையைக் கோராலென்பர் பரிமேலழகர். பெறுவது-எதிர்காலவினையாலணையும் பெயர்; சாதியொருமை. எளிய, அரிய - குறிப்புமுற்றுக்கள். மற்று-வினைமாற்று. தளிர்-மேனிக்கு, மென்மை செம்மை அழகுகளில் உவமை. புரை-உவமவுருபு; வினைத்தொகை.போன்றியார்க்கும் - குற்றியலிகரம், அலகுபெறவில்லை.

நகஅ. புத்தகமே சாலத் தொகுத்தும் பொருடெரியா
ருய்த்தக மெல்லா நிறைப்பினு—மற்றவற்றைப்
போற்றும் புலவரும் வேறே பொருடெரிந்து
தேற்றும் புலவரும் வேறு.

(இ - ள்.) புத்தகமே - புத்தகங்களை மாத்திரமே, சால தொகுத்தும்-மிகுதியாகச் சேர்த்தும், பொருள் தெரியார்-(அவற்றின்) பொருளை அறியாதவர்களாய், உய்த்து - (அவற்றைக்) கொண்டுவந்து, அகம் எல்லாம் நிறைப்பினும்-வீடுமுழுவதும் நிறைத்தாலும், அவற்றை போற்றும் புலவரும் வேறே-அப்புத்தகங்களைப் பாதுகாக்கும் புலவர்களும் வேறானவரே: பொருள் தெரிந்து - (அவற்றின்) அர்த்தங்களை அறிந்து, தேற்றும்-(பிறர்க்கும்) அறிவிக்கும், புலவரும்-அறிவுடையோரும், வேறு-வேறானவரே; (எ - று.)

புத்தகங்களை மிகுதியாகச்சேர்த்ததனாலே எவரும் புலவர்களாக மாட்டார்கள்; அவற்றின் பொருளைத் தாம் அறிந்து பிறர்க்கும் போதித்து விளங்கச் செய்பவர்களே புலவர்களாவர் என்பதாம். 'அவற்றைப் போற்றும் புலவரும் வேறே'என்றது, அவர்கள் புஸ்தகபரிபாலகராகவே மதிக்கப்படுவார்கள் என்றபடி. புத்தகங்கள் சேர்த்துவைத்தவனுக்குப் பயன்படாமல் படிப்பவர்க்கே பயன்படுதலால், செல்வம் சேர்த்துவைத்தவர்க்குப் பயன்படாமல் அனுபவிப்பவர்க்கே பயன்படுதல்போலக் கொள்க. புஸ்தகபரிபாலகரைப் புலவரென்றது, இகழ்ச்சி.

புத்தகம் - புஸ்தகம்: வடசொல்: எ - பிரிநிலை. மற்று - வினைமாற்று. புலவர் வேறு—வேறு என்பது'இருதிணைஐம்பால் மூவிடத்துக்கும்பொதுவான குறிப்புவினைமுற்றுப் பகாப்பதமாதலால், புலவர் என்ற உயர்திணைப் பலர்பால் எழுவாய்க்குப் பயனிலையாய்நின்றது. மூன்றும் அடியிலுள்ள பிரிநிலை யேகாரத்தைப் பிரித்து நான்காம் அடியோடுங் கூட்டுக. (அ)

கூகசு. பொழிப்பகல நுட்பநூ லெச்சமிந் நான்கிற்
கொழித்தகலங் காட்டாதா சொற்கள்—பழிப்பி
னிரையாமா சேர்க்கு நெடுங்குன்ற நாட
வுரையாமோ நூலிற்கு நன்கு.

(இ-ன்.) பழிப்பு இல்-குற்றமில்லாத, நிரை ஆமா-கூட்டமாகிய காட்டுப்பசுக்களை, சேர்க்கும்-(தம்மிடத்திலே) சேரச்செய்கிற, நெடுங் குன்றம்-உயர்ந்த மலைகளையுடைய, நாட-(பாண்டிய) நாட்டையுடைய அரசனே!—பொழிப்பு-பொழிப்புரையும், அகலம்-அகலவுரையும், நுட்பம்-நுட்பவுரையும், எச்சம்-எச்சவுரையும், இ நான்கின்-(ஆகிய) இந்த நான்கு வகையுரைகளாலும், கொழித்து-நன்றாக ஆராய்ந்து, நூல் அகலம்-ஒரு நூலினுடைய விரிவான பொருள்களை, காட்டாதார்-எடுத்துக் காட்டாதவர்களுடைய, சொற்கள்—, நூலிற்கு-ஒரு நூலுக்கு, நன்கு உரை ஆமோ-சிறந்த உரையாகுமோ? [ஆகா என்றபடி]: (எ-று).

ஒரு நூலுக்கு உரைகூறுமிடத்து, **அவ்வுரை நான்கு**வகைப்படும்;பொழிப்புரை, அகலவுரை, நுட்பவுரை, எச்சவுரை என. பொழிப்புரையாவது-மூலபாடங் காட்டுதல், பதப்பொருள் சொல்லுதல், உதாரணங் காட்டுதல் என்பன. அகலவுரையாவது-தான் உரையிடப்புகுந்த நூலிலும் பிறநூலிலும் உள்ள பொருள்களின் ஒற்றுமைவேற்றுமைநயங்களைப்பற்றித் தானே பல ஆட்சேபங்களை எடுத்துக்காட்டுதல். நுட்பவுரையாவது-ஏற்ற காரணங்களினால் தக்க சமாதானங்கூறி அந்த ஆட்சேபங்களை யொழித்தல். எச்சவுரையாவது-இங்ஙனம் ஆட்சேப சமாதானங்களாற் சித்தாந்தஞ் செய்யப்பட்ட பொருளை உரைத்தல். இவற்றை "பொழிப்பே யகலம் நுட்பமெச்சமெனப், பழிப்பில் சூத்திரம் பன்னல் நான்கே," "அவற்றுள்,பாடங் கண்ணழிவு உதாரண மென்றிவை,நாடித் தெரிபில வாகுதல்பொழிப்பே," "தன்னூல் மருங்கினும் பிறநூல் மருங்கினும், துன்னிய கடாவின் புறந்தோன்றும் விகற்பம், பன்னிய வகல மென்மனோர் புல்வர்," "எதுவினுங்கை வை துடைத்தல் நுட்பம்," "துடைத்துக் கொள்பொருள் எச்சமாகும்" என்னுஞ் சூத்திரங்களா லுணர்க. இனி, பதங்களின் பொருளை அன்வயக்கிரமப்படி கூறுவது பொழிப்புரையென்றும், பதப்பொருள் முதலியவற்றை நியாயங்காட்டிப் பிரித்துச்சொல்வது அகலவுரையென்றும், மூலத்தின் சாரமான பொருள்களைக் கருத்துக்களோடு நுண்ணிதாக எடுத்துரைப்பது நுட்பவுரையென்றும், நூலிற்சொல்லப்படாதொழிந்த விஷயங்களைப் பிறநூல் மேற்கோள்கொண்டு எடுத்துச்சொல்வது எச்சவுரையென்றுங் கொள்ளுதலுமுண்டு.இங்ஙனம் பலவகையாலும் நூற்பொருளை விவரமாகவிளக்கிக் காட்டாதவர்களுடைய உரைகள் சிறப்பில்லாதன என்பது, இப்பாட்டின் கருத்து. இவ்வாறு உரைகூறத்தக்கவர்களே சபைக்கு உரியவர் என அதிகாரத்தோடு சம்பந்தங் காண்க.

புல் நீர் நிழல் முதலியவளங்களாற் காட்டுப்பசுக்களுக்கு அக்காடுகளினுஞ் செழிப்பைத் தருதலால் அவற்றைத் தம்மிடம் வந்து சேரசெய்கின்றன என மலைச்சிறப்பைக் கூறியபடி. கற்றுச் சொற்பொழிவு நிகழ்த்தும் பல புலவர்க்கு இடனானவன் பாண்டிய னென்பது **விளியிற்** பெறப்படும்.

அகலம்-அகன்றிருத்தலையுடைய உரைக்குத் தொழிலாகுபெயரும், நுட்பம்-நுண்மையையுடைய உரைக்குப் பண்பாகுபெயரும், எச்சம்-எஞ்சியதைத் தெரிவிக்கும் உரைக்குக் காரியவாகுபெயருமாம்; எஞ்சியது-மிச்சமானது; மறைந்துநின்றது. 'பொழிப்பு அகலம் நுட்பம் எச்சம்' இச்செவ்வெண், 'இந்நான்கு' என்ற தொகை பெற்று வந்தது. பழிப்பு இல் உரையென இயைப்பினும் அமையும். ஆமோ, ஓ - எதிர்மறை. (கூ)

கூ0. இற்பிறப் பில்லா ரெனைத்துநூல் கற்பினுஞ்
சொற்பிறரைக் காக்குங் கருவியரோ—விற்பிறந்த
நல்லறி வாளர் நவின்றநூ றேற்றூதார்
புல்லறிவு தாமறிவ தில்.

(இ - ள்.) இல் பிறப்பு இல்லார் - உயர்குடியிற் பிறத்த லில்லாதவர், எனைத்து நூல் கற்பினும்-எவ்வளவு சாஸ்திரங்களைப் படித்தாலும், பிறர் சொல்லை காக்கும் கருவியரோ-பிறருடைய சொற்களை (இகழாமற்)காத்தற்கு உரிய (அடக்கம் முதலிய) சாதனமுடையவராவரோ? [ஆகார்];இல் பிறந்த நல் அறிவாளர்-உயர்குடியிற்பிறந்த நல்ல விவேகிகளோ, நவின்ற நூல் தேற்றூதார் புல் அறிவு-(பெரியோர்கள்) சொன்ன சாஸ்திரங்களை அறியாதவர்களுடைய அற்பபுத்தியை, தாம்அறிவது இல்-தாம்கவனித்து அறிவதுமில்லை [அறியாதவர்போல் உபேக்ஷியாயிருப்பர் என்றபடி].

உயர்குடிப்பிறவாதவர் எவ்வளவு படித்திருந்தாலும், சபையிற் பிறர் பேசும்போது உண்டாகுங் குற்றங்களை இகழாமல் அடக்கிவைக்கிற அடக்கமான குணத்தையுடையவ ராகார்; உயர்குடிப்பிறந்தவரோ, சபையிற் பிறர் பேசும்போது அதிலுள்ள குணங்களைமாத்திரம் கிரகிப்பார்களே யொழியக் குற்றங்களிற் கருத்தைச் செலுத்தவேமாட்டார் என்பதாம்.

"இற்பிறந்தார் கண்ணல்ல தில்லை யியல்பாகச், செப்பமு நாணு மொருங்கு" என்பது முதலாகத் திருக்குறளிற் கூறியபடி உயர்குடியிற்பிறந்தவர் இயற்கையில் நற்குணமுடையராயிருத்தலையுங் அக்குடிப்பிறவாதவர் அக்குணமில்லாதவராயிருத்தலையுங் கூறுகிற இப்பாட்டு, பிறர் குற்றத்தை எடுத்து இகழாமல் அடக்கிவைக்கும் உயர்குடிப்பிறந்தவர்களே சபைக்கு உரியவா என்ற சம்பந்தம்பற்றி, இவ்வதிகாரத்தில் வைக்கப்பட்டதென அறிக.

பஞ்சுகொண்டு இழைத்து நூற்கப்படும் நூல்போலச் சொற்கொண்டு தொடுத்து அமைக்கப்படுதலாலும், மரம் முதலியவற்றின் கோணலைத்தீர்த்துச் செப்பஞ்செய்தற்குக் காரணமாகும் எற்று நூல்போல மனத்தின் கோணலைத்தீர்த்துச் செவ்வைசெய்யுஞ் சாதனமாதலாலும், நூல் என்பது-உவமையாகுபெயராய்வந்த காரணக்குறியாம். கற்பினும், உம்-உயர்வு சிறப்பு. 'சொல் பிறரைக்காக்கும்' என்பதில், உருபு பிரித்துக் கூட்டப்பட்டது. கருவியரோ, ஓ-எதிர்மறை. நவின்ற, நவில்-பகுதி. (கo)

ஆருவது
பகையியல்

மனிதர்கட்கு உட்பகைபோல நின்று அழிக்கத்தக்க புல்லறிவாண்மை முதலிய இழிகுணங்களைப் பற்றிக் கூறும் பிரிவு என்பதாம். புல்லறிவாண்மையும், பேதைமையும், கீழ்மையும், கயமையும் தம்மையுடையவரைக் கெடுக்கும் பகைகளென்பது வெளிப்படை.

ஙூ - ஆம் அதிகாரம்.—புல்லறிவாண்மை

இது, அற்பமான அறிவை ஆளுந்தன்மையென விரியும் : அஃதாவது தான் சிற்றறிவுடையனுயிருந்தே தன்னைப் பேரறிவுடையனுக மதித்து, உயர்ந்தோர் கூறும் உறுதிச்சொற்களைக் கொள்ளாமை. புன்மை + அறிவு = புல்லறிவு; அல்லவழிப்புணர்ச்சி, பண்புத்தொகை. அறிவாண்மை - இரண்டாம் வேற்றுமைத்தொகை. ஆண்மை, ஆள் - பகுதி, மை - பண்புப்பெயர் விகுதி. சபைக்கு உரியவரல்லாதவர் புல்லறிவாளராதலாலும், சபையினியல்பை யறியாமை புல்லறிவாண்மை யாதலாலும், இவ்வதிகாரம் அவையறிதலின் பின் வைக்கப்பட்டது.

ஙூஉக. அருளி னறமுரைக்கு மன்புடையார் வாய்ச்சொற்
பொருளாகக் கொள்வர் புலவர்—பொருளல்லா
வேழை யதனை யிகழ்ந்துரைக்கும் பாற்கூழை
மூழை சுவையுணரா தாங்கு.

(இ - ள்.) அருளின் - (உயிர்களிடத்துக்) கருணையினால், அற - உரைக்கும் - தருமங்களை எடுத்துச்சொல்லுகிற, அன்பு உடையார் - அன்புள்ளவர்களது, வாய் சொல் - வாயிலிருந்து வருஞ்சொல்லை, புலவர்- அறிவுடையோர், பொருள் ஆக கொள்வர் - பயன்தருவதாக ஏற்றுக் கொள்வர்; அதனை - அச்சொல்லை, பொருள் அல்லா ஏழை - ஒரு பொருளாக மதிக்கப்படாத சிற்றறிவுடையவன், பால் கூழ் சுவையை மூழை உணராது ஆங்கு - பாற்சோற்றினது ருசியை அகப்பை அறியாதது போல [பயனறியாதவனுய்], இகழ்ந்து உரைக்கும் - தூஷித்துப் பேசுவான்; (எ - று.)

அருள் அன்பு முதலிய நற்குணங்களையுடைய பெரியோர்களது சொற்களை விவேகிகள் சிறந்தபொருளாக மதிப்பார்கள்; அவிவேகிகளோ, அவற்றின் சிறப்பை யறியாமல் இகழ்வர் என்பதாம். பின்னிரண்டடி - **உவமையணி**. "கல்லா வொருவனைக் காரணங் காட்டினும், இல்லைமற் றொன்றும் அறனுணர்தல் - நல்லாய், நறுநெய் நிறைபுழுக்க லுய்ப்பினும் மூழை, பெறுமோ சுவையுணருமாறு" எனப் பிறர் கூறியதுங் காண்க: '**அகப்பையறியுமோ அடிசிலின் சுவை**' என்பது, **பழமொழி**.

அருளாவது - ஒருசம்பந்தங் காரணமாக வல்லாமல் இயல்பாக எல்லாவுயிர்களிடத்துஞ் செல்லுங் கருணை என்றும், அன்பாவது - உறவு முறை சினேகம் முதலிய சம்பந்தமுடையோரிடத்து உண்டாகும் விருப்பம் என்றும் வேறுபாடு அறிக. "அருளென்னும் அன்பீன் குழவி" என்ற திருக்குறளால், அருளுக்கு அன்பு காரணமாதல் விளங்கும். 'வாய்' என வேண்டாது கூறினர், அவர்கள்வாய் எப்பொழுதும் பயனுள்ள சொற்களேயே பயின்றுள்ள தெனத் தாம் வேண்டியதன் சிறப்பை முடித்தற்கு; இங்ஙனம் அவசியமில்லாத பதத்திற்குத் தக்க பயன்கொள்ளுதலே வடநூலார் தாத்பர்ய மென்பர். ஏழை - அறிவாகிய செல்வமில்லாதவன்; "அறிவின்மை யின்மையு ளின்மை பிறிதின்மை, இன்மையாவையா தலகு", "அறிவுடைய செல்லாமுடையா ரறிவிலா, ரென்னுடைய ரேனு மிலர்" என்ற திருக்குறள்களேயும், "நுண்ணுணர்வின்மை வறுமை யஃதுடைமை, பண்ணப்பேணத்த பெருஞ் செல்வம்" என இந்நூலில் வந்ததையும் காண்க. கூழைச் சுவை உணராது - உருபு பிரித்துக் கூட்டப் பட்டது; கூழினுடைய ருசி யென உருபுமயக்கமாகவுங் கொள்ளலாம். கூழ் என்பது - இங்கே, இழிவான உணவு என்கிற பொருளே யுணர்த்தாமல், உணவென்னுமாத்திரமாய் நின்றது. ஆங்கு - உவமவுருபு. (க)

ந உஉ. அவ்விய மில்லா ரறத்தா றுரைக்குங்காற்
செவ்விய ரல்லார் செவிகொடுத்துங் கேட்கலார்
கவ்வித்தே தின்னுங் குணுங்கர்நாய் பாற்சோற்றின்
செவ்வி கொளமேற்றே தாங்கு.

(இ - ள்.) தோல் கவ்வி தின்னும் - (அசுத்தமும் சாரமற்றதுமான) தோலை (வாயாற்) கௌவித் தின்னும் இயல்புள்ள, குணுங்கர் நாய்-புலையர்களுடைய நாய்கள், பால் சோற்றின் செவ்வி கொளல் - பாலோடு கூடிய சோற்றினது நல்ல ருசியைக் கொள்ளுதலை, தேற்றாது ஆங்கு - அறியாதவிதம்போல,—அவ்வியம் இல்லார் அறத்து ஆறு உரைக்கும் கால் - பொறுமையில்லாதவர் தருமமார்க்கத்தை எடுத்துச்சொல்லும் பொழுது (அவற்றை), செவ்வியர் அல்லார் - நல்லறிவுடையரல்லாதவர், செவிகொடுத்தும் கேட்கலார் - காதுகொடுத்துக் கேட்கவும் மாட்டார். (எ - று.)

கருத்து, வெளிப்படை. அணி - மேற்கூறியதே. செல்வமுடையவரது நாயாயின் நல்லுணவு உண்ணக்கூடும்; அப்படிப்பட்டவையல்ல என்பதை விளக்க, 'குணுங்கர்நாய்' என்றார்.

அவ்வியம் - மற்றைத் தீக்குணங்கட்கும் உபலக்ஷணம். இரண்டாமடியிலுள்ள 'செவ்வி' என்பது - அதிகாரத்திற்கு ஏற்ப, நல்லறிவாயிற்று. செவ்வி - நல்ல சுவைக்குப் பண்பாகுபெயர். தேற்றாது என்பதை, கீழ்ப்பாட்டில் 'உணராது' என்பதுபோலக் கொள்க. அவ்வியம், கவ்வி என்பன-ஔவியம், கௌவி என்பவற்றின் போலியெனப்படும்.(உ)

நாஉநா. இமைக்கு மளவிற்றம் மின்னுயிர்போ மார்க்க
மெனைத்தானுந் தாங்கண் டிருந்துந்—தினைதுணையு
நன்றி புரிகல்லா நாணின் மடமாக்கள்
பொன்றிலென் பொன்றுக்கா லென்.

(இ - ள்.) இமைக்கும் அளவில் - கண்மூடித்திறக்கும் பொழுதினுள்ளே, தம் இன் உயிர் போம் - தமது இனிமையான உயிர் நீங்கிப் போகும்படியான, மார்க்கம் - வழியை, எனைத்தானும் - எல்லாவகைகளாலும், தாம் கண்டு இருந்தும் - தாம் அறிந்திருந்தும், தினை துணையும் நன்றி புரிகல்லா - தினையளவாயினும் நல்ல காரியத்தைச் செய்யாத, நாண் இல் மடம்மாக்கள் - வெட்கமில்லாத சிற்றறிவுடைய சனங்கள், பொன்றில் என் - இறந்தால் வரும் நஷ்டமென்ன? பொன்றுக்கால் என் - இறவாதிருந்தால் வரும் இலாபம் என்ன? (எ - று.)

உயிர் உடம்பில் நிலைத்திராததன்மையை அறிந்திருந்தும் தமது வாழ்நாளில் நல்லகாரியஞ்செய்யாத புல்லறிவாளர்களால் உலகத்திற்குச் சிறிதும் பயனில்லையென்பதாம். எனைத்தானும்-பிரதியவயம், அநுமானம், ஆகமம் என்னும் பிரமாணங்களெல்லாவற்றாலும் என்றபடி.

இமைக்கும் அளவு - ஒருமாத்திரைப்பொழுது. நன்றி - நல்லகாரியத்துக்குப் பண்பாகுபெயர். இனி, நன்றிபுரிகல்லா - (பிறர்க்கு) உதவி செய்யாத என்றுமாம். செய்யவேண்டிய சற்காரியங்களைத் தாம் சிறிதும் செய்யாது ஒழிவதற்கு மனம் கூசாததனால், 'நாணில் மடமாக்கள்' என்றது. நாண்-நாணம்: முதனிலைத் தொழிற்பெயர். நாணுவது-செய்யத்தகாதவற்றில் உள்ளமொடுங்குதல். மடம்-அறியாமை; இங்கே அதிகாரத்துக்கு ஏற்கப் புல்லறிவாயிற்று. மாக்கள்-பகுத்தறிவில்லாத மனிதர். மா - விலங்கு: இதன்பன்மையாய், மாக்கள் என அவிவேகிகட்கு வழங்குவதுபோலும். எவர்க்கும் உயிரினும் இனியது வேறு இல்லையாதலால், 'இன்னுயிர்'எனப் பட்டது. 'இன்னுயிர் போமாற்றை' என்றும் பாடம் உண்டு. (நா)

நாஉசா. உளநாள் சிலவா லுயிர்க்கேம மின்றுற்
பலர்மன்னுந் தூற்றும் பழியாற்—பலருள்ளுங்
கண்டாரோ டெல்லா நகாஅ தெவனொருவன்
றண்டித தனிப்பகை கோள்.

(இ - ள்.) உள நாள் - (உயிர்கள் உடம்போடுகூடி)வாழ்ந்துள்ளநாள்கள், சில-சிலவாம்; உயிர்க்கு-(அப்படிச் சிலவாழ்நாளையுடைய) உயிர்க்கு, ஏமம் - (உடம்பைவிட்டுப்போக வொட்டாமற் செய்யக்கூடிய) காவல், இன்று-இல்லை; (அந்த அற்ப ஆயுள் காளுள்), பலர் தூற்றும் பழி-பலபேர் வெளியிட்டுக் கூறும் பழிச்சொற்கள், மன்னும் - மிகுதியாம்; (இப்படியிருக்க), ஒருவன்—, பலருள்ளும்-(உலகத்திலுள்ள) பலபேர்களுள்ளும், கண்டாரோடு எல்லாம்-நேரிட்டவரெல்லாரோடும், நகாது - (இனிமையாகக் கூடிவாழ்ந்து) மகிழாமல், தண்டி-எவரோடும் கூடாமல் விலகி, தனி-தனியாயிருந்து, பகை கோள்-(பிறரோடு) விரோதம் பாராட்டுதல், எவன்-யாதுபயன்கருதி? (எ - று.)

அற்ப ஆயுளையும் அவற்றுள் பல இடையூறுகளையும் இயல்பாகவுடைய மனிதர்கள் பலபழிக்கு இடமான உலகத்தில் தம்மை எவரும் பழிக்க வொண்ணுதபடி எல்லாரோடுங் கலந்து மகிழ்ந்து வாழாமல் தனிப்பட்டு நின்று பகைபாராட்டுவது அற்பபுத்தி என்பதாம்.

பகை பாராட்டாமலிருத்தல் என்னும் காரியத்துக்குத் தக்ககாரணங் களான அற்பஆயுள் முதலியவற்றைப்பெற்றிருந்தும் மானிடரிடத்து அக் காரியம் தோன்றுமையைக் கூறியது, **காரணவாராய்ச்சியணி**; இதனை வட நூலார் **விசேஷோக்தி** என்பர்.

பலர் தூற்றும் மன்னும் பழியால் என்று இயைத்து-பலரும் தூற்று கின்ற நிரந்தரமான பழியோடு கூடி என்று உரைப்பாருமுளர். "மன் றிற் கொடும்பாடுரைப்பான்...எச்சமிழந்து வாழ்வான்" என்பவாதலால், 'வியத்தக்கான் வாழுமெனின்' என்றார். உள-உள்ள. 'ஆல்' **முன்றும்**-ஈற்றசை. எமம்-சேமம் என்ற வடமொழியின் சிதை வென்பர். கண் டார் என்பது-தம்மை வந்து கண்டவர்களையும் தம்மாற் காணப்பட்டவர் களையும் குறிக்கும். நகாஅது-அளபெடை, செய்யுளோசை நிறைப்பது. எவன்-அஃறிணைப் பொதுக் குறிப்புமுற்று; இதில், 'அன்' விகுதி-உயர் திணையாண்பாலன்று. தனி-தனித்து; பகுதியே வினையெச்சத் தன்மைப் பட்டது; "வரிப்புனைபந்து" என்றவிடத்து 'வரி' என்பதுபோல. பகை-பகுதல்: வேறுதல். (சு)

நடஉரை. எய்தி யிருந்த வவைமுன்னர்ச் சென்றெள்ளி
வைதா னொருவ னொருவனை—வைய
வயப்பட்டான் வாளா விருப்பானேல் வைதான்
வியத்தக்கான் வாழு மெனின்.

(இ - ள்.) எய்தி இருந்த - (பலபேர்) கூடியிருந்த, அவை முன்னர்-சபையின் முன்னிலையிலே, ஒருவன்—, சென்று—, ஒருவனை-மற்றொரு வனை, எள்ளி-அவமதித்து, வைதான் - திட்டினவன்; வைய - (அவ்வாறு) திட்டுகையில், வயப்பட்டான்-திட்டப்பட்டவன், வாளா இருப்பானேல்-(எதிரில் திட்டாமல்பொறுத்துக்கொண்டு)சும்மா இருப்பானாயின்(பின்பு), வைதான் வாழும் எனின் - திட்டினவன் (வாழான், அங்ஙனமாகாது) வாழ்ந்துகொண்டிருந்தால், வியத்தக்கான்-ஆச்சரியப்படத்தக்கவன்;(எ-று)

அற்ப அறிவுள்ளானொருவன் ஒரு சபையிற் போய்க் காரணமில்லா மல் ஒருவனைத் திட்டுகையில், அப்படித் திட்டப்பட்டவன் அதைப் பொறுத்துக்கொண்டு சும்மா இருந்தால், திட்டினவன் வாழமாட்டான்; ஒருகால் வாழ்வானாயின், அது அதிசயிக்கத் தக்கது என்பதாம். இதனால், புல்லறிவாளர்க்குப் பிறரானன்றித் தம்மாலேயே இம்மையிலேயே பெருந் தீங்கு நேர்தல் விளக்கப்பட்டது. "மன்றிற்கொடும்பாடுரைப்பான்...எச்ச மிழந்து வாழ்வான்" என்பவாதலால், வியத்தக்கான் வாழுமெனின் என்றார்.

வயப்பட்டான்-வையப்பட்டான் என்பதன் முதற்போலி: இனி, வசம் என்னும் வடமொழி வயம் எனத் திரிந்ததாகக்கொண்டு, வைதற்கு வசப்பட்டவன்: அதாவது - தன்னைப் பிறன் திட்ட உடன்பட்டவன் எனினும் அமையும். விய - முதனிலைத் தொழிற்பெயர்: வியத்தற்கு என நான்காம் வேற்றுமைத்தொகை. வாளா - தொழிலின்மையை யுணர்த்து வதோ ரிடைச்சொல். (ஈ)

கூஉசு. மூப்புமேல் வாராமை முன்னே யறவினையை
யூக்கி யதன்கண் முயலாதா—னூக்கிப்
புறத்திரு போகென்னு மின்னுச்சொ லில்லுட்
டொழுத்தையாற் கூறப்படும்.

(இ - ள்) மூப்பு - கிழத்தனம், மேல் வாராமை முன்னே - நெருங்கி வரா திருத்தற்கு முன்னமே, அறம் வினையை-தருமகாரியத்தை, ஊக்கி-செய்யத்தொடங்கி, அதன்கண்-அவ்விஷயத்தில், முயலாதான் - முயற்சி செய்யாதவன்,—இல்லுள்-(தன்) வீட்டில், நூக்கி-தள்ளப்பட்டு, 'புறத்து இரு-வெளியிலே இரு; போகு-(இவ்விடம்விட்டுப்) போ', என்னும்-என்கிற, இன்னு சொல்-இனிமையில்லாத [கடுஞ்] சொற்களை, தொழுத்தையால்-வேலைக்காரி யாலும், கூறப்படும்-சொல்லப்படுவான்; (எ-று.)

உடம்பை ஒடுக்குகிற முதுமைப்பருவம் வருவதற்கு முன்னமே, இடம் பொரு ளேவல்கள் ஸ்வாதீனமாக இருக்கும்பொழுதே, ஒருவன் மறுமைக்கு உதவியாகத் தருமங்களைச் செய்துவைத்துக் கொள்ளவேண்டும்; ஏனெனில், - முதுமைவந்தபொழுது, இவன்சொன்னபடி எவரும் நடவாமல் வேலைக்காரியும் அலட்சியஞ்செய்வள் என்க; அன்றியும், தருமஞ்செய்யாத புல்லறிவாளனே எவ்வாளரும் இகழ்தல், இயல்பு.

தொழுத்தையால் என்பதில், இழிவுசிறப்பு உம்மை விகாரத்தால் தொக்கது. தொழுத்தை-தொழும்ப னென்பதன் பெண்பால். (சு)

கூஉஎ. தாமேயு மின்புறூர் தக்கார்க்கு நன்றூற்று
ரேமஞ்சார் நன்னெறியுஞ் சேர்கலார்—தாமயங்கி
யாக்கத்துட் டூங்கி யவத்தமே வாழ்நாளைப்
போக்குவார் புல்லறிவி னூர்.

(இ-ள்.) புல் அறிவினூர் - அற்பபுத்தியுடையவர்,—தாமேயும் இன்பு உறூர்-(செல்வத்தை அநுபவித்துத்) தாமாகிலும் இன்பமடையார்; தக்கார்க்கும் நன்று ஆற்றூர்-(அறிவுஒழுக்கங்களில்) தகுதியுடையவர்கட்குத் தானஞ் செய்யவும் மாட்டார்; ஏமம் சார் - (உயிர்க்குப்) பாதுகாப்பாகப் பொருந்திய, நல் நெறியும் - நல்ல தருமவழியையும், சேர்கலார் - அடைய மாட்டார்; தாம் மயங்கி-(உடம்புசெல்வம் முதலியவற்றின் நிலையில்லாமையை அறியாமல்) தாம் மயக்கங்கொண்டு, ஆக்கத்துள் தூங்கி-செல்வத்திலேயே ஒன்றுந்தோன்றூமல் இருந்து, வாழ்நாளை-(தமது) ஆயுளை, அவத்தமே போக்குவார்- வீணுகவே கழிப்பர்; (எ - று.)

புத்தியீனர் செல்வத்தைத் தாமும் அநுபவியாமல் தானதருமமுஞ் செய்யாமல் தமது காலத்தை வீணே கழிப்பார்கள் என்பதாம்.

உம்மைகள் மூன்றும்-எச்சப்பொருளன; அவற்றில், முந்தியது-பிந்தியவற்றைநோக்கி எதிரதுதழுவியதும்,பிந்தியது-முந்தியவற்றைநோக்கி இறந்தது தழுவியதும், இடையிலுள்ளது-இரண்டையும் நோக்கி இறந்த

தும் எதிரதும் தழுவியதுமாம். எமம்-ரகசியம். ஈங்குதல்-இங்கே, தொழிலறுதல். வாழ்நாள்-முக்காலமுங் கருதும் வினைத்தொகை. தானம் பெறுதற்கு உரிய சற்பாத்திரம் யோகியரே யாதலால், 'தக்கார்க்கும் நன்ஞர் ஞர்' என்ஞர். அவம் என்ற பெயரின்மேல் அத்து அம் என்றசாரியைகள் சேர்ந்து அவத்தம் எனநின்ற தென்னலாம்; தனியே ஒருபெயருமாம்.(எ)

ஈஉஅ. சிறுகாலே யேதமக்குச் செல்வுழி வல்சி
யிறுகிறுகத் தோட்கோப்புக் கொள்ளா—நிறுகிறுகிப்
பின்னறிவா மென்றிருக்கும் பேதையார் கைகாட்டும்
பொன்னும் புளிவிளங்கா யாம்.

(இ-ள்.) சிறு காலேயே-இளம்பிராயத்திலேயே, தமக்கு செல் உழி வல்சி-தமக்கு (இறந்தபின்பு) போகும் மறுமையிடத்துக்கு உரிய (தரும மாகிய) சோற்றை, இறுக இறுக-மிகவும் அழுத்தமாக, தோள் கோப்பு கொள்ளார்-தோளிற்கட்டிய மூட்டையாக அமைத்துக்கொள்ளாதவர்களாய், இறுகி இறுகி-(பொருளில்) மிகவும் சிக்கெனவாகி, பின் அறிவாம் என்று இருக்கும்-(தரும விஷயத்தைப்பற்றிப்) பின்பு பார்த்துக்கொள்வோம் என்றிருக்கிற, பேதையார்-புல்லறிவாளர், கைகாட்டும் - (மரணகாலத்திலே பேச ஈ எழாமையால் தம்) கையாற் குறித்து உருவங் காட்டுகிற, பொன்னும்-பொன்னுருண்டையும், புளி விளகாய் ஆம்-புளிப்புச் சுவையுள்ள விளங்கா யாகும்; (எ-று.)

இடம்பொருளேவல்கள் தமக்குஅதீனமாக இருக்கும்பொழுதே மறுமைக்கு உதவியாகத் தருமஞ்செய்யாமல் பின்பு பார்த்துக்கொள்வோமென்று விட்டுப் பணத்தைச்சேர்த்துவைக்கும் புத்தியீனர், மரணகாலத்தில் தமது வாயடைத்துப் போனபொழுது தக்கவர்க்குத் தானஞ்செய்யக்கருதித் தாம் முன்பு பத்திரப்படுத்திவைத்துள்ள பொன்திரளை எடுத்துக்கொண்டுவரும்படி மனைவிமக்கள் முதலியோர்க்குக் கையால் அப்பொருட்டிரளின் னளவைக் காட்டினுல், அவர்கள், அக்குறிப்பையறியாமையாலோ.அச்செல்வத்தை இவர்க்காகச்செலவுசெய்யஇணங்காமையாலோ, 'இவர் புளிவிளங்காய் வேண்டுமென்கிறார்' என்று சொல்லி அதுகொண்டு வருவர் என்பதாம். புல்லறிவாளர் செல்வம் அவர்க்குப் பயன்படாமற் போம்; பிறர்க்குப் பயன்படாமற்போதலும் உண்டென இதில் விளங்கும்.

"கையாற் பொதித்துணையே காட்டக் கயற்கண்ணளதனைக் காட்டாள், ஐயா விளாம்பழமே யென்கின்றீ ராங்கதற்குப் பருவமன்றென், செய்கோவெனச் சிறந்தாள்போற் சிறவாக்கட்டுரையாற் குறித்தவெல்லாம், பொய்யே பொருளுரையா முன்னே கொடுத்துண்டல் புரிமின் கண்டீர்", "வேற்றுவரில்லா ஞமநர்க்கே செல்லினுவெருண்டீர்போல, வாற்றுணைக்கொள்ளா தடிபுறத்து வைப்பீரே யல்லீர்போலும், கூற்றங் கொண்டோடத் தமியே கொடுநெறிக்கட் செல்லும்போழ்தின், ஆற்றுணைக்கொள்ளீ ரழகலா தறிவொன்று மிலிரேபோலும்", என்ற சீவகசிந்தாமணிச் செய்யுள்களும், "மாய்வதன் முன்னேவகைப்பட்டநல்வினையை, ஆய்வின்றிச் செய்யாதார் பின்னே வழிநினைந்து, நோய்காண் பொழுதினறஞ்செய்வாராக் காலுமை, நாய்காணிற் கற்காலு வாறு," என்ற பழமொழிச் செய்யுளும் இங்கு அறியத்தக்கவை.

இறுகிறுக - இறுக இறுக என்பவற்றின் தொகுத்தல். இறுகிறுகி - இறுகியிறுகி என்பதன் தொகுத்தல்; அடுக்குக்கள் - மிகுதிப் பொருளன. அறிவாம் - தனித்தன்மைப்பன்மை. பேதையார் - அறிவில்லாதவர்; அதிகாரத்தால்: புல்லறிவாளர்மேல் நின்றது. பொன்னும்—உம் - உயர்வுசிறப்பு. விள + காய்=விளங்காய்; மரப்பெயர்முன்னர் இனமெல்லெழுத்து வரப்பெற்றது. (அ)

ஈஉஈ. வெறுமை யிடத்தும் விழுப்பிணிப் போழ்தும்
மறுமை மனத்தாரே யாகி—மறுமையை
யைந்தை யனைத்தா னும் மாற்றிய காலத்துச்
சிந்தியார் சிற்றறிவினர்.

(இ - ள்.) சிறு அறிவினர் - புல்லறிவுடையவர்கள்,—வெறுமை யிடத்தும்-செல்வமில்லாத காலத்திலும், விழு பிணி போழ்தும் - மிகுந்த வியாதி வந்த காலத்திலும், மறுமை மனத்தாரே ஆகி - மறுமைக்கு உரிய தருமத்தைச் செய்யுங் கருத்துடையவர்களாய்,—ஆற்றிய காலத்து-(தரித்திரத் தன்மையும் நோயும் இல்லாமல் நினைத்ததைச்) செய்யக் கூடிய காலத்தில், மறுமையை - மறுமைக்கு உரிய தருமத்தை, ஐந்தை அனைத்து ஆனும் - சிறு கடுகினளவாயினும், சிந்தியார் - நினைக்கமாட்டார்; (எ - று.)

அற்பபுத்தியுடையார், தாம் தரித்திரப்படும் பொழுதும் வியாதியநுபவிக்கும்பொழுதும் மாத்திரமே தரும சிந்தையுடையவர்களாய், அத்துன்பங்களில்லாத காலத்தில் சிறிதும் அச்சிந்தையில்லாதவராயிருப்பர் என்பதாம்.

வெறுமையாவது - அநுபவிக்கப்படும் பொருள் எதுவு மில்லாமை. விழு - விழுமம் என்ற உரிசசொல்லின் விகாரம். விழுப்பிணி என்பதற்கு - துன்பந் தருகிற நோயென்றும், இறக்கக்கூடிய பிணியென்றும் பொருள்கொள்ளலாம்; "விழுமஞ் சீர்மையுஞ் சிறப்பு மிடும்பையும்" என்பது, **தொல்காப்பியம்**. மறுமை - இறந்தபின் வரும் நிலை; இங்கே அதற்கு உரிய நல்வினைக்கு ஆகுபெயர். ஐந்தை - கீழ்வந்த 'தினை' என்பதுபோல, சிறுமைக்கு எடுத்துக்காட்டப்படுவதோர் அளவை. (கூ)

ஈஈ0. என்னேமற் றிவ்வுடம்பு பெற்று மறநினையார்
கொன்னே கழிப்பர்தம் வாழ்நாளை—யன்னோ
வளவிறந்த காதற்றம் மாருயி ரன்னார்க்
கொளவிழைக்குங் கூற்றமுங் கண்டு. .

(இ - ள்.) (உலகத்திற் புல்லறிவாளர்கள்), இவ்வுடம்பு பெற்றும் - (தருமங்களைச் செய்தற்கு ஏற்ற) இந்த மானுட தேகத்தைப் பெற்றிருந்தும்,—அளவு இறந்த காதல் - வரம்பு கடந்த அன்பையுடைய, தம் ஆர் உயிர் அன்னார் - தமது அருமையான உயிரையொத்த உறவினரை, கொள இழைக்கும் - (தான்) எடுத்துக்கொண்டுபோதற்கு (வேண்டிய முயற்சியை)ச் செய்கிற, கூற்றம் - யமனது செயலை, கண்டும் - (தாம்) பார்த்திருந்தும், அன்னோ - ஐயோ! அறம் நினையார் - தருமத்தைச் செய்யக் கருதாதவராய், தம் வாழ்நாளை கொன்னே கழிப்பர் - தமது ஆயுளை வீணுகக் கழிப்பார்கள்; என்னே - இது என்ன அநீதி! (எ-று.)
—மற்று - அசை, விணைமாற்றுமாம்.

"அரிதரிது மானிடராதல் அரிது" என ஔவையார் கூறியபடி கிடைத்தற்கரியதாய் நற்கதிகளே சேரிற் பெறுதற்குத் தக்கதாயுள்ள மனித சரீரம் தமக்கு முற்பிறப்பின் நல்வினையாற் கிடைத்திருந்தும் பலர் தருமஞ்செய்யாமல் வீணே காலங்கழித்தற்கு என்ன காரணமோ? தமது மனைவி மக்கள் முதலிய மிக்க அன்புவைத்தற்கிடமான சுற்றத்தார்க் கென்று சேர்க்கப்பட்ட செல்வத்தைச் செலவுசெய்யக் கூடாதெனக் கருதுவாராயின், அவர்களின் வாழ்க்கை நிலையில்லாததென்பதை உலகத்தில் அநுபவசித்தமாகப் பிரதியக்ஷப் பிரமாணத்தாற் காணக் கூடுமே என்பதாம். யார்க்காகப் பொருள் சேர்க்கப்படுகிறதோ அவர்களும் நிலையில்லாதவராதலால், செல்வத்தைச் செலவுசெய்து தானப்பயனுல் நற்கதியைப் பெறுமை புத்திக்குறைவு என்க.

என்னே, அன்னே என்பன - கழிவிரக்கப் பொருளே விளக்கும். பெற்றும்—உம் - உயர்வுசிறப்பு. கொன் - பயனில்லாமை புணர்த்துவதோர் இடைச்சொல். கூற்றம் - (உடலுயிர்களைக்) கூறுபடுத்துவது; அல்லது, (ஆயுளைப்) பகுப்பது எனக் காரணப்பெயர். கொள - உயிர் கொள்ள. ஆருயிரன்னர் - உயிர் போல இன்றியமையாதவராகப் பாவிக்கப்பட்டவர். கூற்றமும் கண்டு - உம்மை மாறுக. (கo)

ஙசு - ஆம் அதிகாரம்.—பேதைமை

அஃதாவது - யாதொன்றையும் அறியாமை; முழுமூடத்தனம். சில அறிந்து சில அறியாமையாகிய புல்லறிவாண்மைக்குப் பின் யாதும் அறியாமையாகிய பேதைமை வைத்தற்கு இயைபுடையதாத லறிக. இசசம்பந்தம் மேதான்ற, திருக்குறளிலே புல்லறிவாண்மையின் முன் பேதைமை வைக்கப்பட்டவாறும் காண்க. பேதைமை புல்லறிவாண்மை என்ற இரண்டையும் மயக்கத்தின் வகையென்னும் பரிமேலழகர். பேதைமை - பண்புப் பெயர்.

ஙஙக. கொலைவ ருலையேற்றிக் தீமடுப்ப வாமை
நலையறியா தந்நீர் படிந்தாடி யற்றே
கொலைவல் பெருங்கூற்றங் கோட்பார்ப்ப வின்னை
வலையகத்துச் செம்மாப்பார் மாண்பு

(இ - ள்.) கொலை வல் - கொல்லுதல் தொழிலிலே வல்ல, பெருங் கூற்றம் - பெரிய யமன், கோள் பார்ப்ப - (தம் உயிரைக்) கொண்டு போகுஞ் சமயத்தை எதிர்பார்த்துக்கொண்டிருக்க, இன்னை வலை யகத்து - இவ்வுலக வாழ்க்கையாகிய வலையினிடத்திலே, செம்மாப்பார் - பிறரைக் களித்திருப்பவரது, மாண்பு - தன்மையானது,—கொலைஞர் - கொலை செய்பவர், உலை ஏற்றி - உலை நீர்ப்பாத்திரத்தை அடுப்பின்மேல் வைத்து, தீ மடுப்ப - நெருப்பை மூட்டி எரிகையில், ஆமை - (அப்பாத்திரத்தில் இடப்பட்ட) ஆமை, நிலை அறியாது - (தனக்கு வந்திருக்கிற அபாய) நிலைமையைச சிறிதும் உணராமல், அ நீர் படிந்து ஆடி அற்று - அவ்வுலைநீரில் முழுகி விளையாடினற் போலும்; (எ - று.)—மிக்க பேதைமை யென்றபடி.

ஆமையைச் சமைக்கத் தீமூட்டியவிடத்து அது அறிவில்லாமல் உலை நீரில் வீளையாடுவதுபோல, தம்உயிரைக்கொள்ள யமன் சித்தஞ்செய்திருக்கையில் மனிதர்கள் உலகவாழ்க்கையில் மகிழ்வது அறிவில்லாமை என்பதாம். "வெறியயர்வெங்களத்துவேன்மகன் பாணி, முறியார் நறுங்கண்ணி முன்னர்த்தயங்க, மறிகுள குண்டன்ன மன்னுமகிழ்ச்சி, அறிவுடையாளர் கணில்" என்ற செய்யுளோ இங்கு ஒப்பிடுக. முன்னிரண்டடிகளில் "உலைப் பெய்து அவிவதுபோலுந் துயர்" என்பதைக் கருதுக. மரணத்தையஞ்சி மறுமைநற்கதிக்கு உரிய முயற்சிசெய்க வென்றவாறு. 'ஈண்டைவலை' என்ற ஒருசொற்றொடர் அங்கமாகக் கொண்டுவந்த **உவமையணி.**

ஆடி-ஆடுதல் என்னும் எசசத்தின் திரிபு. ஈண்டை-ஐயீற்றுடைக் குற்றுகரம். தம்மை நல்வழிசசெல்லவொட்டாது பந்தப்படுத்துதலால், சம்சாரத்தை 'வலை' எனறார். செம்மாப்பார்—செம்மா - பகுதி; இது - இறுமா, அலமா, சோகா என்பன போல ஒருசொல். பெருமையென்னும் பொருள் தரும் 'மாண்பு' என்னுஞ்சொல்-இங்கே எதிர்மறை யிலக்கணை யாய், இழிவான தன்மைக்கு வந்தது. (க)

க உ உட. பெருங்கடல் ஆடிய சென்றூர் தொருங்குட
மீனைசை யவிந்தாங் ஙுடிது மென்றற்று
லிற்செய் குறைவினை நீக்கி யறவினை
மற்றறிவா மென்றிருப்பார் மாண்பு.

(இ - ள்.) 'அல்செய் குறைவினை நீக்கி-குடும்பத்துக்குச செய்யவேண்டிய காரியக்குறைகளை யெல்லாம் நீர்த்து, மற்று அறம் வினை அறிவாம்-பின் தருமகாரியஞ்செய்ய ஆலோசிப்போம்,' என்று இருப்பார் - என்று கருதி வீணே காலங்கழிப்பவரது, மாண்பு - தன்மையானது,—பெருங் கடல் ஆடிய சென்றூர் - பெரிய சமுத்திரத்தில் நீராடுவதற்குப்போனவர், ஓசை ஒருங்கு உடன் அவிந்த பின் ஆடுதும் என்று அற்று-'(இக்கடலின்) ஒலிமுழுவதும் ஒருசேர அடங்கினபின்பு நீராடுவோம்' என்று காத்திருந் தாற்போலும்; (எ - று.)

கடலில் ஒலி ஓயாதவாறுபோல, சமுசாரத்தின் காரியமும் என்றுங் குறை தீர முடியாததலால், அதன்பின்பு செய்வோமென்பது பேதைமை யென்பதாம். "திரையவித்து நீராட லாகா வுரைப்பார், உரையவித் தென்றுஞ்சொ லில்லை - அனசசாய்ச, செய்துமா மென்னினு மாகா துளவரையாற், செய்தவர்க்கே யாகுந் திரு" என்ற செய்யுளோடு இதனை ஒப்பிடுக. **உவமையணி.**

ஒருங்கு, உடன் - ஒருபொருட்பன்மொழி; இரண்டும், எஞ்சாமைப் பொருளுணர்த்தும் இடைச்சொற்கள். என்று - என்ற்ல் என்னும் எசசம் திரிந்தது. மற்று - விரையாமல் என்றவாறு. அறிவில்லாதவர்களின் தன் மையை 'மாண்பு' என்றது-**பிறழுறிப்பு**வகையால், அவா கருத்தை எடுத்துக் காட்டிப் பரிகாசஞ் செய்தபடியாம். (உ)

க ஙூ ஙூ. குலந்தவங் கல்வி குடிமைமூப் பைந்தும்
லிலங்காம லெய்தியக் கண்ணு—நலஞ்சான்ற
மையறு தொல்சீ ருலக மறியாமை
நெயிலாப் பாற்சோற்றி னேர்.

(இ - ள்.) குலம்-உயர்குடிப் பிறப்பும், தவம்-விரதவொழுக்கமும், கல்வி-படிப்பும், குடிமை - (செல்வத்தாலாகும்) குடித்தனவளமும், மூப்பு-பிராய முதிர்ச்சியும், ஐந்தும் - (ஆகிய) இவ்வைந்தும், விலங்காமல்-தவறாமல், எய்தியக்கண்ணும் -(ஒருவனுக்கு) நேர்ந்த விடத்தும், (அவன்), நலம் சான்ற-பெருமை மிக்க, மை அறு தொல் சீர்-குற்றமில்லாத பழமையான சிறப்பையுடைய, உலகம்-(மறுமையில் அடையத்தக்க சுவர்க்கம் மோக்ஷம் என்னும்) உலகங்களின் தகுதியை, அறியாமை-அறியாதிருப்பது,—நெய் இலா பால் சோற்றின் நேர்-நெய்யில்லாத வெண்ணிறமான சோற்றிற்குச சமமாம்; (எ - று.)

சோறு சுத்தமாய், வெண்ணிறம் நல்லபக்குவம் காரமூடைமை முதலிய சிறப்புக்களோடு கூடியிருந்தாலும், நெய்யில்லாவிட்டால், அது "நெய்யில்லாவுண்டி பாழ்" என்றபடி இகழப்படுவதுபோல, குலம் முதலியவை ஒருவனுக்கு அமைந்திருந்தாலும் மறுமையில் நல்லுலகம் பெறுதற்கு ஏற்ற முயற்சியை அறியாத பேதைமை இகழப்படும் என்பதாம். **உவமையணி.**

நேர் - உவமவுருபு. தவமாவது - மனம் பொறிவழிபோகாமல் நிற்றற் பொருட்டு விரதங்களால் உணவுசுருக்குதல் முதலியன. குடிமை-பண்புப் பெயர். முதலடியிற் பெயர்சசெவ்வெண், ஐந்துஎன்னுந் தொகைபெற்றது. தொல்சீர் - பண்புத்தொகை; தொன்றுதொட்டு வந்த புகழென்க. உலக மறியாமை - உலகத்தாரோடு ஒப்பஒழுகும் ஒழுக்கத்தை உணராமை எனினும் அமையும்; "உலகத்தோடொட்ட வொழுகல் பலகற்றும், கல்லா ரறிவிலாதார்" என்பது காண்க. 'நெய்யிலா' என்பது - சோற்றுக்கு அடைமொழி. பாற்சோறு - பால்போன்ற சோறு; இவ்வுவமைத் தொகை, வெண்ணிறமுடைய சோறென்ற மாத்திரமாய் நின்றது. (கூ)

கூஙச. கன்னனி நல்ல கடையாய மாக்களிற்
சொன்னனி தாமுணரா வாயினும்—மின்னினியே
நிற்ற லிருத்தல் கிடத்த லியங்குதலென்
றுற்றவர்க்குத் தாமுதவ லான்.

(இ - ள்.) சொல்-(பிறர்சொல்லுஞ்) சொற்களை, நனி-நன்றாக, தாம் உணரா ஆயினும்-தாம் (கேட்டு) அறிந்துகொள்ளமாட்டாவாஞலும்,—உற்றவர்க்கு - (தம்மை) அடைந்தவர்கட்கு, இன்னினியே-(அவர்கள் தம் மிடம்வந்த) அந்தந்தப்பொழுதிலே, நிற்றல்-(மேலே) நிற்றலும், இருத்தல் -(மேல்)உட்காருதலும், கிடத்தல்-(மேற்)படுத்தலும், இயங்குதல்-(மேலே) நடத்தலும், என்று-என்றகாரியங்கட்கு, தாம் உதவலான்-தாம் (இடமாக) உபயோகப்படுதலாலே,—கல் - கற்கள், கடை ஆய மாக்களின் - கீழ்ப் பட்ட மனிதர்களோடுகாட்டிலும், நனி நல்ல-மிகவும் நல்லவை; (எ - று.)

பிறர் சொன்னதைத் தாம் அறியாத தன்மையில் மூடர்களும் கல்லும் சமமாயினும், வந்தவர்க்கெல்லாம் நிற்கவும் உட்காரவும் படுக்கவும் நடக்கவுமாகப் பலவாறு விரும்பியபடியெல்லாம் பயன்படுகிற கல்லினும், பிறர்க்கு எந்த விதத்திலும் உதவாத பேதையர் கீழ்ப்பட்டவர் என்பதாம்.

உபமேயத்தினும் உபமானத்திற்குச் சிறப்பை விளக்கியதனால், வேற்றினி; ஒன்றுக்கும் உதவாமையாகிய உபமேயத்தினது குற்றத்

தினுல் உபமானமாகிய கல்லுக்கு மேன்மையைக் கூறியுள்ளது, **அக மலர்ச்சியணி**; இவ்விரண்டனிகளும் பாலும் நீரும் கலந்தாற்போல [வேறுபாடுதோன்றுது] கலந்து வந்தது, **கலவையணி**; **பரிகாரச்சுவை** தோன்றக் கூறியவாறு.

நனி - மிகுதியுணர்த்தும் உரிச்சொல்; இது - இரண்டாம் அடியில் முழுவதும் என்ற பொருளில் வந்தது. இன்னினியே - இப்பொழுதே என்றபடி; இனி இனி என்ற இடைச்சொல்லடுக்கின் தொகுத்தல்: கீழ 'யாக்கைநிலையாமை' என்ற அதிகாரத்திலும் "இன்னினியே செய்க அறவினை—இன்னினியே" என வந்தது காண்க. மூன்றும்அடியில், நிற்றல் முதலிய பெயர்ச்செவ்வெண் தொகைபெறுது வந்தது. மாக்களின், ஐ-தாமுருபு - எல்லைப் பொருளது; இப்படி உபமான உபமேய சம்பந்தத்தில் வரும் எல்லைப்பொருளே உறழ்பொருவு என்பா. (ச)

கூடாநூ பெறுவதொன் றின்றியும் பெற்றானே போலக்
கறுவுகொண் டேடாதார் மாட்டுங்—கறுவினுற்
கோதித்தின் னுகூறி யுரையாக்காற் பேதைக்கு
நாத்தின்னு நல்ல சுனைத்து,

(இ - ள்.) பெறுவது ஒன்று இன்றியும் - (தன்னுற்) பெறப்படும் பயன் சிறிதும் இல்லாதிருந்தும், பெற்றானே போல - ஒரு பயனைப் பெற்றவன் போலவே, ஏலாதார் மாட்டும் - தகாதவர்களிடத்திலும், கறுவுகொண்டு - கோபங்கொண்டு, கறுவினுல் - தணியாத அக்கோபத்தினுல், இனனு - துன்பந்தருஞ் சொற்களை, கோத்து - தொடர்ச்சிப் படுத்தி, கூறி - சொல்லி, உரையாக்கால் - (அசசொற்களின் பொருளை) விளக்குதலுஞ் செய்யாவிட்டால், பேதைக்கு - அறிவில்லாதவனுக்கு, நல்ல சுனைத்து - நல்ல தினைவானது, நா தின்னும் - நாக்கை வருத்துவது (போலும்); (எ - று.)

ஒருபயனுமில்லாமலே மிகவுரக்கத்தோடு எப்படிப்பட்டவர்மீதும் பகைமை பாராட்டி நிந்தனைச்சொற்களை நூதனமாகக் கற்பித்துச் சொல்லி விவரிக்காவிட்டால், மூடனுக்குத் திருப்தியில்லை யென்பதாம்.

அறிவில்லாதவர் இயல்பாகப் பிறர்மீது பழிமொழிகளைக் கூறுதற்கு, (தற்குறிப்பேற்றவுருபு கொடாமல்) நா தினைவதின்னுதலைக் காரணமாகக் கற்பித்துக்கூறியது, **உய்த்துணரேதுத்தற்குறிப்பேற்றவணி.**

பெற்றானே—ஏ - தேற்றம். கறுவு - முதனிலைத் தொழிற்பெயர். ஏலாதார் மாட்டும் - செல்வம அதிகாரம் பெருமை முதலியவற்றுல் தம்மினும் மேம்பட்டவரிடத்தும் என்றபடி. கூறுதல் உரைத்தல் என்பவற்றை ஒருபொருட்ப மொழியாகவுங் கொள்ளலாம். பெற்றான்போல-பெறுபவன் போல துணிவு பற்றி எதிர்காலம் இறந்தகாலமாக வந்த காலவழுவமைதி 'நாத்தின்னும் நல்ல சுனைத்து' என்றது - **பரிகாரச் சுவையை** விளக்குவது. இதில், "உண்டற்குரிய வல்லாப் பொருளை யுண்டனை போலக் கூறலுமரபே" என்ற **வழுவமைதி** யிருத்தலையுங் காண்க. (கு)

நூநூசு. தங்க ணமர்வில்லார் பின்சென்று தாமவரை
யெங்கண் வணக்குது மென்பவர்—புன்கேண்மை
நற்றளிர்ப் புன்னை மலருங் கடற்சேர்ப்ப
கற்கிள்ளிக் கையிழந்த சற்று.

(இ - ள்.) நல் தளிர் புன்னை - அழகிய தளிர்களையுடைய புன்னை மரங்கள், மலரும் - பூக்கப்பெற்ற, கடல் சேர்ப்ப - கடலின் துறைமுகத்தையுடைய (பாண்டிய) ராசனே!—தம்கண் அமர்வு இல்லார்பின் - தம்மிடத்து விருப்பம் இல்லாதவர்களிடத்திலே, தாம் சென்று—, அவரை எம்கண் வணக்குதும் - அவர்களை நம்மிடம் மண்டம் படிந்திருக்கச் செய்வோம், என்பவர் - என்று சொல்பவர்களது, புல் கேண்மை - இழிவான சோக்கை, கல் கிள்ளி கை இழந்து அற்று - கல்லைக்கிள்ளக் கையைப் போக்கிக் கொண்டதுபோலாம்; (எ - று.)

இயல்பிலே விருப்பமில்லாதவரை விருப்பமுடையவராக்கப் பிரயத்தனப்படுவது, அசாத்தியமும் நீங்கு வினைப்பதுமாய்க் கல்லைக கிள்ளத் தொடங்கிக் கைநோவை யுண்டாக்கிக்கொள்ளுதலைப் போலுதலால் பேதைமையென்பதாம். "கற்கிள்ளிக் கையுய்ந்தாரில்" என்றார், **பழமொழியிலும்**. இனி, ஒழுக்கமில்லாத பேதையர்கள், எவராலும் தாம் கல்வழிப்படுத்தப்படாமையோடு, தம்மை கல்வழிப்படுத்த முயல்பவர்க்கு மிக்க துன்பத்தையுஞ் செய்வர் என்றுங் கருத்துக்கொள்ளலாம். **உவமையணி.** தங்கண்மரபில்லார் என்ற பாடத்துக்கு தம்மிடத்து (அடக்க முகலிய) நல்லொழுக்கமில்லாதவரென்ப.

புன்கேண்மையென்றது, இங்கே ஒருதலைச சினேகத்தை. மூன்றும் **அடி,** பாண்டியநாட்டின் நெய்தல்நிலச சிறப்புக்கூறும். புன்னை-அந்நிலத்துக்கு உரிய மரம். சேர்ப்பு - நெய்தனிலத்து ஊரின் பெயர். (சு)

நூநூஎ. ஆகா தெனினு மகத்துநெய் யுண்டாகிற்
போகா தெறும்பு புறஞ்சுற்றும்—யாதுங்
கொடாஅ ரெனினு முடையாரைப் பற்றி
விடாஅ ருலகத் தவர்.

(இ - ள்.) **ஆகாது** எனினும்-(தமக்கு உண்ணக்கிடைத்தல்) இல்லையாயினும், அகத்து நெய் உண்டு **ஆகின்** - ஒருபாத்திரத்தினுள் நெய் இருக்குமானால், எறும்பு - எறும்புகள், போகாது - (அப்பாத்திரத்தை விட்டு)நீங்காமல், புறம் சுற்றும் - வெளிப்பக்கத்திற் சுற்றிக்கொண்டேயிருக்கும்; (அதுபோல),—யாதும் கொடார் எனினும்-ஒருகிறிதுபொருளையும் கொடாதவர்களானாலும், உடையாரை - செல்வமுள்ளவர்களை, உலகத்தவர் - உலகத்திலுள்ள சனங்கள், பற்றி-சேர்ந்து, விடார்-விட்டு நீங்கமாட்டார்; (எ-று.)

உட்புகுந்து நெய்யை உண்ணக் கூடாமலிருந்தும் அப் பாத்திரத்தை எறும்புகள் **ஆசையினால்** விடாமற் சுற்றிக்கொண்டிருப்பதுபோல, தம் விருப்பத்தின்படி ஒரு பொருளும் பெறக்கூடாமலிருந்தும் செல்வமுடையாரைப் பேதைகள் **ஆசையினால்** விடாமற் சுற்றிக்கொண்டிருப்பார்களென்பதாம். **எடுத்துக்காட்டுவமையணி.**

செல்வமுள்ளவரை 'உடையார்' என்பதும், செல்வமில்லாதவரை இல்லார் என்பதும்-வழக்கு; "உடையார்முன் இலலாபோல" எனத் திருக்குறளிலும் காண்க. அளபெடையிரண்டும், செய்யுளோசைநிறைப் பன. பின்னிரண்டடியில், அளபெடை ஒன்றி வந்தது, அளபுத்தொடை.

ஊஊஅ. நல்லவை நாடொறு மெய்தா றறஞ்செய்யா
ரில்லாதார்க் கியாதொன்று மீகலா—லெல்லா
மினியார்தோள் சேரா ரிணைபட வாழார்
முனியார்கொ றும்வாழு நாள்.

(இ ள்.) (மூடர்கள்),—நாள்தொறும்-தினந்தொறும், நல்லவை-நற் குணநற்செய்கைகளை, எய்தார்-அடையார்கள்; அறம் செய்யார்-தருமஞ் செய்யமாட்டார்கள்; இல்லாதார்க்கு-ஏழைகட்கு, யாதுஒன்றும் ஈகலார்-எதையுங் கொடுக்கமாட்டார்கள்; எல்லாம் இனியார் தோள் சேரார்-குணஞ்செயல்களிலெல்லாம் இனியரான தம்மனைவியரது தோள்களைச் சேரமாட்டார்கள்; இணை பட வாழார்-கூடித்தியுண்டாக வாழமாட்டார்கள்; (இப்படிப்பட்டவர்), தாம் வாழும் (நாள் எல்லாம்)முனியார்கொல் - தாங் கள் பிழைத்திருக்குங் காலங்களையெல்லாம் வெறுக்கமாட்டார்களா?

அறம்பொருளின்பங்களைத் தாம் அடையாமலும், பிறர்க்குத் தான தருமங்கள்செய்து இம்மைக்குப் புகழும் மறுமைக்குப் புண்ணியமும் பெரு மலும் வீண்காலங்கழிக்கிற அறிவில்லாதார்க்குத் தம்வாழ்நாளில் வெறுப் பில்லாமலிருப்பது வியக்கத்தக்க தென்பது கருத்து; இதில், அவர்கள் இருத்தலும் இறத்தலும் சம மென்பதும் தொனிக்கும். 'இனியார் தோள் சேரார்' என்றதற்கு-விலைமகளிரைச் சேர்வா என்று கருத்துக் கொள்க.

நல்லவை என்றது-நல்வி கேள்வி நீதிவழியிற்பொருள் சேர்த்தல் முத லியவற்றை. ஈல் அவை எனப் பிரித்து, சிறந்தசபையைச் சேரமாட்டா கள் எனினும் அமையும். எய்தார் என்ற எதிர்மறைமுற்றில், எய்து-பகுதி; (அம்பெறிந்தாரென்ற பொருளில், எய் என்னும் பகுதியின்மேற்பிறந்த உடன்பாட்டு முற்றும்.) கீர்த்தி, இல்லறத்தில் வழுவாதார்க்கு இம்மைப் பயனாய் இவ்வுலகில் ஈகழுந்து நிலைபெறுவ தாதலால், இசைபடவாழ்தல் இறுதியிற் கூறப்பட்டது; திருக்குறளில் 'புகழ்' என்னும் அதிகாரம் இல்லறவியலின் இறுதியில் வைக்கப்பட்ட வாறுங் காண்க. கொல்- வினா வகையால், இழிவை விளக்கும்.

இல்லாதார்க் கியாதொன்றும் - இங்கே குற்றியலிகரம் அலகுபெற வில்லை; 'சீரும் தளையும் சிதையின் குற்றியலிகர உகரங்களும் அள பெடையும் மெய்யெழுத்தும் அலகுபெறாது நிற்கும்'. 'இல்லாதார்க்' என்ற தேமாங்காய்ச் சீரின்முன் 'யா' என நேர்வருதல் பொருந்துமே யன்றி, 'கியா' என நிரை வருதல் வெண்டளைக்கு ஒவ்வாமையை அல கிட்டுக் காண்க. (அ)

ஊஊக. விழைந்தாருவர் தம்மை வியப்ப வொருவர்
விழைந்திலே மென்றிருக்குங் கேண்மை—தழங்குரற்
பாய்திரைசூழ் வையம் பயப்பினு மின்னாதே
யாய்கல மில்லாதார் மாட்டு.

(இ - ள்.) ஒருவர் விழைந்து தம்மை வியப்ப - ஒருவர் (வந்து) விரும்பித் தம்மைக் கொண்டாட, (அதற்கு மாறாக), ஒருவர் விழைந்திலேம் என்று இருக்கும்-(அங்ஙனம் கொண்டாடப்பட்ட) மற்றொருவர் (நாம்) விரும்பமாட்டோமென்று ஏற்றுக்கொள்ளாதிருக்கிற, ஆய் நலம் இல்லாதார்மாட்டு - ஆராய்தற்கு உரிய நல்லறிவு இல்லாத மூடர்களிடத்தில், கேண்மை - சினேகமானது,—தழங்கு குரல் - முழங்குகின்ற ஒலியையுடைய, பாய் திரை - பாய்ந்துவருகிற அலைகளையுடைய கடல், சூழ் - சூழ்ந்த, வையம் - பூமி முழுவதையும், பயப்பினும் - தருவதாயிருந்தாலும், இன்னாது - (சான்றோர்க்கு) இனிமையாயிராது ; (எ - று.) -ஏ - தேற்றம்.

தம்மை விரும்பி வலியவந்து சினேகித்தவரைத் தாம் சினேகியாத மூடர்களின் சேர்க்கை, எவ்வளவு பயன் தருவதாலும், திருப்திகரமானதன்று என்பதாம். தம்மை ஒருவர் விரும்பாராயினும், தாமாக வலியப் போய்ச் சினேகித்தல் பெரியோரிடத்தாயின் பின்பு இனிமை தருவதாம என்பது தோன்ற, ' இன்னாதே ஆய்நலமில்லாதார்மாட்டு ' என்றார்.

பாய்திரை - அன்மொழித் தொகை யென்றுவது, அடையடுத்த சினையாகுபெய ரென்றுவது கொள்ளத்தக்கது. பயப்பினும், உம் - உயர்வு சிறப்பு ; இது - ஒரு பயனையுந் தராமை தோன்ற நின்றது. ஆய் நலம் - சிறந்த நற்குணமுமாம். கேண்மை - இங்கு, ஒரு தலைச சினேகம; எதிர்மறையிலக்கணையால், போலிச் சினேக மென்றவாறுமாம. தழங்கு குரல் என்பது - தழங்குரல் என்று விகாரப்பட்டது ; " தழங்குரன் முரசிற் சாற்றி " என்றார் சீவகசிந்தாமணியாரும். (கூ)

கூசo. கற்றனவுங் கண்ணகன்ற சாயலு மிற்பிறப்பும்
பக்கத்தார் பாராட்டப் பாடெய்துந் தானுரைப்பின்
மைத்துனர் பல்கி மருந்திற் றணியாத
பித்தனென் றெள்ளப் படும்.

(இ - ள்.) கற்றனவும் - (ஒருவன்) கற்ற கல்விகளும், கண் அகன்ற சாயலும் - (அவனிடத்து) அகுதியாகவுள்ள மென்மைக் குணமும், இல் பிறப்பும் - (அவனது) உயர் குடிப்பிறப்பும், (என்னும் இவையெல்லாம்), பக்கத்தார் பாராட்ட -அயலார் கொண்டாட, பாடு எய்தும் - பெருமை பெறும் ; (அங்ஙனம் இல்லாமல்), தான் உரைப்பின் - (தன் கல்வி முதலிய சிறப்புக்களை ஒருவன்) தானுக வெடுத்துச் சொன்னால், மைத்துனர் பல்கி - (அவனுக்குப்) பல மைத்துனர் ஏற்பட்டு, (அவர்களால்), மருந்தின் தணியாத பித்தன் என்று எள்ளப்படும் - மருந்தினாற் பரிகரிக்க முடியாத பைத்தியமுடையவனென்று (அவன்) இகழப்படுவான் ; (எ-று.)

தன் சிறப்புக்களைப் பிறர்கூறினாற் பெருமையுண்டு ; ' அங்ஙனமின்றி அறிவில்லாமையால் தற்புகழ்ச்சி செய்பவன் பரிகாசத்துக்கே பாத்திரமாவன் என்பதாம் ; " தன்னை வியப்பிப்பான் தற்புகழ்தல் தீச்சுடர், நன்னீர் சொரிந்து வளாத்தற்றால் " என்றார் பிறரும்.

இங்கே 'மைத்துனர்' என்றது, பரிகாசஞ்செய்பவர்களை; அவர்களை பரிகசித்தற்கு உரியவராதலால். மைத்துனன்-மனைவியின் உடன் பிறந்தவனும், அத்தைமகனுமாம். பாராட்டல்-பார் ஆட்டல் எனப் பிரித்து, பூமியில் வழங்கச்செய்தலெனக் காரணப் பொருளுரைப்பர். தகுனியாத என்பது-பிதற்றுக்கு அடைமொழி. "சாயல் மென்மை" என்னுந் தொல்காப்பியச் சூத்திரத்தால், சாயல் என்பது-ஐம்பொறிகளாலும் நுகரப்படும் பலவகை மென்மைகளையும் உணர்த்துவதாம் உரிச்சொல்லாத லுணர்க. (கம)

நூறு - ஆம் அதிகாரம்—கீழ்மை

அஃதாவது - கீழ்மக்களது தன்மை. இது-புல்லறிவாண்மை பேதைமைகளின் காரிய மாதலால், காரணகாரியமுறைமைபற்றி, அவற்றின் பின் வைக்கப்பட்டது.

நூ அக கப்பி கடவதாக் காலத்தன் வாய்ப்பெயினுங்
குப்பை கிளைப்போவாக் கோழிபோன்—மிக்க
கனம்பொதிந்த நூல்விரித்துக் காட்டினுங் கீழ்தன்
மனம்புரிந்த வாறே மிகும்.

(இ - ள்.) காலை-(உணவுவேண்டிய) காலத்திலே, கப்பி - கொய்யை, கடவது ஆ - போதுமான அளவினதாக, தன் வாய் பெயினும் - தனது வாயிற் (பிறர் கொண்டுவந்து) போகட்டாலும், குப்பை கிளைப்பு ஓவா - (தன் இயலபான) குப்பை கிளறுந் தொழிலை நீங்காத, கோழி போல்—, மிக்க கனம் பொதிந்த-மிக்க மகிமை பொருந்தின, நூல்-சாஸ்திரங்களின் பொருளை, விரித்து காட்டினும்-(அறிவுடையார் வந்து) விவரமாகத் தெரிவித்தாலும், கீழ்-கீழ்மகன், (தன் துர்க்குணத்தை விடாமல்), தன் மனம் புரிந்த ஆறே மிகும் - தன் மனம் விரும்பினபடியே மிக்குச் செல்வான் [வரம்புகடந்து நடப்பான்]; (எ-று.)

தன்முயற்சியில்லாமல் சிறந்த நூற்பொருளை அறிஞர் வலியவந்துஉரைத்தாலும் தனது துர்க்குணத்தைவிடாது தன்மனம் போன வழியேசெல்வது, கோழிக்குப்போலக் கீழோர்க்கு இயல்பு என்பதாம். **உவமையணி.**

கப்பி-நொய். கடவதா-கடமையாக எனினுமாம். காலை-உதயகாலமுமாம். கிளைப்பு-தொழிற்பெயர். ஓவா - ஈறுகெட்ட எதிர்மறைப்பெயரெச்சம்; ஓவு-பகுதி; இது ஒருவு என்பதன் மரூஉ எனப்படும். நூலுக்கு மிக்க கனம் - சிறந்த உறுதிப்பொருள்களைக் கூறுதல். இழிவுதோன்ற, 'கீழ்' என அஃறிணையாற் கூறினார்; இது-கீழ்மகனுக்குப் பண்பாகுபெயர். (க)

நூஉ. காழ்ஆய கொண்டு கசடற்றார் தஞ்சாரற்
றாழாது போவா மெனவுரைப்பிற்—கீழ்தகா
னுறங்குவா மென்றெழுந்து போமாமஃ தன்றி
மறங்குமா மற்றொன் றுரைத்து.

(இ - ள்.) 'காழ் ஆய கொண்டு கசடு அற்ற ஆர்த்தம் - உறுதியான நூற் பொருள்களை அறிந்து குற்றம்நீங்கினவர்களான பெரியோர்களின், சாரல் - பக்கலில், தாழாது போவாம் - தாமதமில்லாமற் சென்று சேர்வோம்', என உரைப்பின் - என்று சொல்லி (த் தெரிந்தவனொருவன்) அழைத்தால்,—கீழ்-கீழ் மகன்,—உறங்குவாம் என்று - 'தூங்குவோம்' என்று சொல்லி, எழுந்துபோம் - (அவ்விடம்விட்டு) எழுந்திருந்துபோய் விடுவான்; அஃது அன்றி - அதுவுமல்லாவிட்டால், மற்று ஒன்று உரைத்து-வேறுயாதாயினும் ஒரு காரணத்தைக் கற்பித்துக் கூறி, மறங்கும் - மறுத்துச் செல்வான்; (எ - று.)—'ஆம்' இரண்டும், 'தான்' என்ப பதும் - அசைகள்.

தெரிந்தவிடத்தில் நல்ல விஷயங்களைக் கேட்பதற்குப் போவோமென்று ஒருவன் வலியவந்து கூப்பிட்டாலும், கீழ் மகன் யாதாயினும் சாக்குச் சொல்லி மறுத்துப்போவான் என்பதாம். **தன்மைநவிற்சியணி** 'மறங்குதல்'-நோயறுதல் என்பது ஒரு பழைய வுரை. உறங்குதல் தாமச குணத்தின் காரியமாதலால், அது இகழ்ச்சித்துக் கூறப்பட்டது.

ஆய-இறந்தகாலப் பலவின்பால் வினையாலணையும் பெயர். கொண்டு அற்ற என இயையும். போவாம், உறங்குவாம்-முன்னிலையை உளப்படுத்திய தன்மைப் பன்மைகள்; நீயும் நானும் என்க; "அம் ஆம் என்பன முன்னிலையாரையும்,...தன்னொடு படுக்குந் தன்மைப் பன்மை" என்பது காண்க. அஃது என்பதன் ஆய்தம், இங்கே மெய்போல ஒலித்தது: உயிர்போல ஒலியாமையை அலகிட்டுக் காண்க. ஒன்று-ஒரு காரணத்துக்கு எண்ணலளவாகு பெயர். (உ)

நூசுக. பெருநடை தாம்பெறினும் பெற்றி பிழையா
தொருநடையர் ஆகுவர் சான்றோர்—பெருநடை
பெற்றக் கடைத்தும் பிறங்கருவி நன்னாட
வற்று மொருநடை கீழ்.

(இ - ள்.) பிறங்கு - விளங்குகிற, அருவி - மலையருவிகளையுடைய, கல்-சிறந்த, நாட - (பாண்டிய) நாட்டையுடைய அரசனே! - சான்றோர்-பெரியோர், பெருநடை (தாம்) பெறினும்-மிக்க செல்வத்தைத் தாம் பெற்றாலும், பெற்றிபிழையாது-தம் இயல்பாகிய பெருமைக் குணம் மாறாமல், ஒரு நடையர் ஆகுவர் - (எப்பொழுதும்) ஒரேவகைப்பட்ட நடத்தையுடையவராவர்; கீழ் - கீழ்மகன்,—பெருநடை பெற்றக் கடைத்தும்-மிக்க செல்வத்தை அடைந்தவிடத்து, ஒரு நடை வற்று ஆம்-(பெருமையடைதற்கு மாறாக வேறுபட்ட) ஒரு நடையை வல்லவனாவன்; (எ - று.)

எவ்வளவு செல்வம் வந்தாலும் மேலோர் தங் குணம் மாறார்; கீழோர் செல்வம் வந்தமாத்திரத்தே குணம் மாறிவிடுவர் என்பதாம்.

நடை-செல்வமாகுமாலே "நடைவழி யொழுக்கம் செல்வம்" என்ற நிகண்டினாலும் அறிக. பலவிடங்களிலும் நடப்பதுபற்றி, நடையென்பது-செல்வத்திற்குக் காரணப்பெயர்போலும்; இனி, பெருநடை என்பதற்கு-பெரிய நிறப்பு என்று உரைப்பாருமுளர். பெற்றக்கடைத்து-எதிர்கால

வினையெச்சம்; உம்-இசைநிறை. வற்று-வல் என்னும் பண்பினடியாப் பிறந்த குறிப்புமுற்று. ஆம்-அசை. கீழ்மகனது இழிவுதோன்ற, 'கீழ்வற்று' என அஃறிணையாற் கூறினர். (கூ)

கூசச. தினையனைத்தே யாயினுஞ் செய்தகன் றுண்டாற்
பனையனைத்தா வள்ளுவர் சான்றோர்—பனையனைத்
தென்றுஞ் செயினு மிலங்கருவி நன்னாட
நன்றில நன்றறியார் மாட்டு.

(இ - ள்.) இலங்கு-விளங்குகிற, அருவி-மலையருவிகளையுடைய, நல்-சிறந்த, நாட - (பாண்டிய) நாட்டையுடைய அரசனே!—தினை அனைத்து எ ஆயினும் - தினையென்னும் சிறியதானியத்தின் அளவேயாஞலும், செய்த நன்று - (ஒருவன்) செய்த உபகாரத்தை, உண்டால் - (தாம்) அனுபவித்தால், (அதனை), சான்றோர் - பெரியோர், பனை அனைத்து ஆ - பனைமரத்தவ்வளவு பெரிதாக, உள்ளுவர் - நினைப்பார்கள்; என்றும் - எப்பொழுதும். பனை அனைத்து-பனைமரத்தவ்வளவு பெரிதான உபகாரத்தை, செயினும் - செய்தாலும், நன்று அறியார் மாட்டு - செய்ந்நன்றியறியாதவர்களிடத்தில், நன்று இல - (அவ்வுபகாரங்கள்) சிறப்பில்லாதனவாம்.

தமக்குப்பிறர் செய்த சிறிய உபகாரத்தையும் பெரியதாக நினைப்பது, சான்றோரியல்பு; பெரிய உபகாரத்தையும் ஒருபொருளாக நினையாமலிருப்பது, கீழ்மக்கள் தன்மை என்பதாம். "தினைத்துணை நன்றி செயினும் பனைத்துணையாகக், கொள்வர் பயன்தெரிவார்" என்ற **திருக்குறளையும்**, அதன் உரையில் பரிமேலழகர் 'தினை பனை என்பன - சிறுமை பெருமைகட்குக் காட்டுவன சில அளவை' என்று கூறியதையும் அறிக. பனையென்பது - மரப்பெயராய்ப் பெருமை குறிக்கும். (ச)

கூசரு. பொற்கலத் தூட்டிப் புறந்தரினு நாய்பிற
ரெச்சிற் கிமையாது பார்த்திருக்கு—மச்சீர்
பெருமை யுடைத்தாக் கொளினுங்கீழ் செய்யுங்
கருமங்கள் வேறு படும்.

(இ - ள்.) பொன் கலத்து - பொன்னாற்செய்த பாத்திரத்தில் (வைத்துக்கொண்டு), ஊட்டி - (நல்லுணவை) உண்பித்து, புறந்தரினும்-(ஒருவன்) பாதுகாத்துவந்தாலும், நாய்—, பிறர் எச்சிற்கு - அயலார் (உண்டெறிந்த) எச்சிற்சோற்றுக்கு, இமையாது - கண்கொட்டாமல், பார்த்திருக்கும் - (கிடைக்கிற சமயத்தை) எதிர்பார்த்திருக்கும்; அ சீர் - அத்தன்மையாக,— பெருமை உடைத்து ஆ கொளினும் - சிறப்புள்ளவனுக (ப் பிறர்தன்னை மதித்து) ஏற்றுக்கொண்டாலும், கீழ் செய்யும் கருமங்கள் - கீழ்மகன் செய்யுங் காரியங்கள், வேறுபடும் - (பெருமைக்கு) வேறுபட்டனவாக இருக்கும்; (எ - று.)

நல்லுணவுகளைக் கொடுத்து மேன்மைப்படுத்திஞலும் இழிவான உணவை எதிர்பார்த்திருப்பது நாய்க்கு இயல்பாதல்போல, பெருமை கொடுத்துக் கௌரவித்தாலும் இழிவான காரியங்களைச் செய்வது, கீழ்

மக்களியல்பு என்பதாம். இப்பாட்டை இவ்வதிகாரத்தில் முதற்பாட்டோடு ஒப்பிடுக. இப்பாட்டில், 'சீர்' என்பது - உவமவுருபு; இவ்வுவமவுருபு வந்து விட்டதனால், இது எடுத்துக்காட்டுவமையணியாகாது: **உவமையணியே**யாம்.

கீழ்மகனது இழிவு தோன்ற, 'உடைத்து' என அஃறிணையாற் கூறினார். உம்மைகள் - உயர்வுசிறப்பு. ஊட்டி—உண் என்பதன் பிறவினையான ஊட்டு - பகுதி; உண்என்னும் பகுதி முதல் நீண்டு, 'டு' என்னும் விகுதி கூடியது. புறந்தரின், புறந்தா - பகுதி; இது ஒருசொல். (உண்டதுபோக) எஞ்சியது, எச்சில். (இ)

நா. சரு. சக்கரச் செல்வம் பெறினும் விழுமியோர்
ரெக்காலுஞ் சொல்லார் மிகுதிச்சொ—லெக்காலு
முந்திரிமேற் காணி மிகுவதேற் கீழ்தன்னை
யிந்திரனு வெண்ணி விடும்.

(இ - ள்.) சக்கரம் செல்வம் - பூமண்டலம் முழுவதையும் ஆளுவதாகிய பெருஞ்சிறப்பை, பெறினும் - (தாம்) பெற்றாலும், விழுமியோர் - மேன்மேலோர், எ காலும் - எப்பொழுதும், மிகுதி சொல் - வரம்புகடந்த வார்த்தையை, சொல்லார் - சொல்லமாட்டார்கள்; எ காலும்-எப்பொழுதாயினும், முந்திரிமேல் காணி மிகுவது எல் - முந்திரியென்னுஞ் சிறிய அளவின்மேல் காணியென்னுஞ் சிறியஅளவு செல்வம் மிகுவதாலும், கீழ் - கீழ்மகன், தன்னை—, இந்திரன் ஆ எண்ணிவிடும் - தேவேந்திரனாக நினைத்துவிடுவான்; (எ - று.)

மேலோர் பெருஞ்செல்வம் வந்தாலும் வரம்புகடந்து நடவார்; கீழோர் சிறிதுபொருள் மிகப்பெற்றாலும் தம்மை மிகச் சிறந்தவராக மதித்துப் பெருமை பாராட்டுவர் என்பதாம்.

மேலோரினும் கீழோர்க்கு உள்ள வேறுபாட்டைக் கூறிய இதில், உபமான உபமேயத்தன்மையும் தோன்றுவதால், இச்செய்யுள் **வேற்றுமையணி** யாம்; (சிறுபான்மை ப்ரஸ்துதத்தையும் [ப்ரஸ்துதம்-சொல்ல வேண்டிய விஷயம்] உபமானமாகக் கூறுதலும் உண்டு:) இங்ஙனமே மேல்வருதற்கும் இவ்வணி கொள்க.

சக்ரம் - மண்டலம்: இங்கே பூமண்டலத்துக்குக் கொள்ளப்பட்டது; இனி, ஆஜ்ஞாசக்கரத்தை உலகமுழுவதும் செலுத்தும் சக்ரவர்த்தித் தன்மை என உரைப்பினும் அமையும். சக்கரன் செல்வம் எனப் பிரித்து-இந்திரனது செல்வமென்றும், சக்ராயுதபாணியான திருமாலினது செல்வமென்றும் பொருள் கொள்ளுதலும் ஒன்று.

உம்மைகள் மூன்றனுள், முந்தினது - உயர்வு சிறப்பு; பிந்தினது - இழிவுசிறப்பு; இடையிலுள்ளது - முற்றுப்பொருளது. முந்திரியென்பது - மிகச் சிறிய அளவைக்கும், காணியென்பது - அதனின் மிக்க ஓர் சிற்றளவைக்கும் காட்டப்பட்டன. காணி - அறுபத்தாநான்கில் ஒன்று. முந்திரி - அதன் நாலில் ஒன்று. 'காணிமேல்முந்திரி மிகுவதேல்' எனச் சொற்களை மாற்றிப் பொருள் கொள்ளினும் அமையும். சக்ரம், இந்த்ரன் - வடசொற்கள். (கூ)

நாலடி. மைதீர் பசும்பொன்மேன் மாண்ட மணியழுத்திச்
செய்த தெனினுஞ் செருப்புத்தன் காற்கேயா
மெய்திய செல்வத்த ராயினுங் கீழ்களைச்
செய்தொழிலாற் காண்பப் படும்.

(இ-ள்.) மை தீர் - குற்றமற்ற, பசும் பொன் மேல் - பசுநிறமான சிறந்த பொன்னின் மேல், மாண்ட மணி அழுத்தி - மாட்சிமைப்பட்ட இரத்தினங்களைப் பதித்து, செய்தது எனினும் - செய்யப்பட்டதாயினும், செருப்பு—,தன் காற்கே ஆம் - ஒருவனது காலிற் கொள்ளுதற்கே உரியதாம்; (அது போல),—எய்திய செல்வத்தர் ஆயினும் - பொருந்திய செல்வமுடையவர்களாயினும், கீழ்களை-கீழ்மக்களை, செய் தொழிலால்- (அவர்கள்) செய்யும் இழிதொழில்களால், காணப்படும் - (இவர்கள் கீழ் மக்களென்று) அறியக்கூடும்; (எ - று.)

மாசற்ற பசும்பொன்மேல் வியூயுயர்ந்த இரத்தினமிழைத்த செருப்பேயானாலும் காலிற்கொள்ளத்தக்கதே யாவதுபோல, கீழ்மக்கள் எவ்வளவு செல்வம் பெற்றாலும் கீழ்ப்படியில் வைக்கத்தக்கவரேயன்றி மேற்படியில்வைக்கத் தக்கவரல்லரென்பதாம். **எடுத்துக்காட்டுவமையணி.**

எய்திய செல்வத்தர் - செல்வமெய்தியவர் என விகுதி பிரித்துக் கூட்டினும் அமையும். காண என்பதைத் தொழிற்பெயராகக் கொண்டு, படும் என்ற வினைமுற்றோடு முடித்து, காணுதல் படுமென்க. இனி, காணப்படும் என்பதை ஒரு சொல்லாகக் கொண்டு, தொழிற்பெயராய்த் தேற்றப் பொருள்பட்டு ஐம்பால் மூவிடத்துக்கும் பொதுவான தென்பாருமுளர். காற்கே, ஏ - பிரிநிலையோடு, இழிவுசிறப்பு. (ஏ)

நாலடி. கடுக்கெனச் சொல்வற்றாங் கண்ணேட்ட மின்றா
மிடுக்கண் பிறர்மாட் டுவக்கு—மடுத்தடுத்து
வேக முடைத்தாம் விறன்மலை நன்னாட
வேகுமா மெள்ளுமாங் கீழ்

(இ - ள்.) விறல் - பெருமையுள்ள, மலை - மலைகளையுடைய, நல் நாட - சிறந்த (பாண்டிய) நாட்டையுடைய அரசனே!—கீழ் - கீழ்மகனது தன்மை, கடுக்கென சொல் வற்று ஆம் - கடுமையாகப் பேசவல்லதாம்; கண்ணேட்டம் இன்று ஆம் - தாக்ஷிணிய மில்லாததாம்; பிறர் மாட்டு இடுக்கண் உவக்கும் - அயலாரிடத்து உண்டான துன்பத்திற்கு மகிழும்; அடுத்து அடுத்து வேகம் உடைத்து ஆம் - அடிக்கடி கோபாவேசமுள்ளதாம்; எகும் ஆம் - (கண்டவிடத்தும்) செல்வதாம்; எள்ளும் ஆம் - (பிறரைத்) தூஷிக்குமாம்; (எ - று.)—இப்பாட்டில் உள்ள 'ஆம்' என்னுஞ் சொற்கள் ஐந்தும் - அசை.

கடுமையாகப் பேசுவதும், யாரிடத்தும் தாட்சிணியம் பாராமையும், பிறர்க்கு நேரிடுகிற துன்பத்துக்குச் சந்தோஷிப்பதும், காரணமின்றி மேன்மேற்கோபமுடையதாதலும், பயனில்லாமற் பலவிடத்தும் திரிதலும், பிறரைத் தூஷிப்பதும் கீழ்மக்களியல்பு என்பதாம். **தன்மைநவிற்சியணி.**

கடுக்கென - கடுமைக் குறிப்பிடைச் சொல். சொல் என்பதை-முதனிலைத் தொழிற்பெயரென்றுவது, சொல்ல என்பதன் தொகுத்த

லென்றுவது கொள்க. 'கண்ணோட்டமாவது - தன்னெடு பயின்றுரைக் கண்டால் அவர் கூறியன மறுக்கமாட்டாமை; இஃது - அவர்மேற் கண்சென்றவழி நிகழ்வதாகலின், அப்பெயர்த்தாயிற்று' என்பது, திருக்குறள் பரிமேலழகருரை. அடித்து அடித்து—அடுக்கு - பன்மைப் பொருளது. மலைக்கு வீறல் - மழை பெய்யாமல் வறந்த காலத்திலும் தன்னைச் சேர்ந்த உயிர்கட்கு நீர்வளத்தைக் கொடுக்குங் கொடையும், அளவு செய்யப்படாத பலவகைப் பொருளையுடையதாதலும், நால்வகையரண்களுள் ஒன்றாக இயல்பில் அமைதலும் முதலியன. எகுமாம் எள்ளுமாம் - பிறரிடம் வலியச் சென்று அவரை யிகழ்வானெனினுமாம். எள்ளுமாம் எகுமாம் என மாற்றிக் கூட்டி-(எவரிடத்தும் நில்லாமல்) இகழ்ந்து செல்வான் என்று உரைப்பாரு முளர். வேகுமாம் என்று எடுத்து - மனக் கொதிப்புக் கொள்ளுமென்றுமாம்; இது, மோனைத்தொடைக்குச் சிறவாது. (அ)

கூசுகூ. பழைய நிவரென்று பன்னுட்பின் னிற்பி
னுழையினிய ராகுவர் சான்றோர்—விழையாதே
கள்ளுயிர்க்கு நெய்தற் கணைகடற் றண்சேர்ப்ப
வெள்ளுவர் கீழா யவர்.

(இ - ள்.) கள் உயிர்க்கும் - தேனை வெளிவிடுகின்ற, நெய்தல்-நெய்தற் பூக்களையுடைய, கணை கடல் தண் சேர்ப்ப - ஒலிக்கின்ற கடலினது குளிர்ந்த துறைமுகத்தையுடைய (பாண்டிய) ராசனே!—பின் நிற்பின் - (ஒருவர் தம்) பின்னே (ஒருநாள்) வந்து நின்றாலும்,—சான்றோர் - மேலோர்,—இவர் பழையர் என்று - இவர்கள் வெகுநாளாகப் பழகியவரென்று கருதி, உழை - அவர்களிடத்தில், இனியர் ஆகுவர் - இனிமையான விருப்ப முடையவராவர்; கீழ் ஆயவர் - கீழ்மக்களோ, (ஒருவா), பலநாள் பின் நிற்பின் - பலநாள் தம்பின்னே நின்றாலும், விழையாதே - (அப்படி தம் பின்வந்து நின்றவர்களை) விரும்பாமலே, எள்ளுவர் - அவமதிப்பர்; (எ - று.)

ஒருநாள் தம்மிடம் வந்தவரையும் மேலோர் பழைய சினேகிதர் போலப் பாராட்டுவர்; கீழோர் அவ்வாறு கொள்ளார் என்பதாம். பன்னுள் என்றதற்கு மறுதலையாக, சான்றோர் என்பதையெடுத்து ஒருநாள் என்பது வருவிக்கப்பட்டது. "செல்வுழிக்கண் ணொருநாட் காணினுஞ் சான்றவர், தொல்வழிக் கேண்மையிற் றோன்றப் புரிந்தியாப்பர்" என்றார், கீழும். இனி, பழையர் இவர் என்று பல்நாள் பின் நிற்பின், உழை சான்றோர் இனியராகுவர்: கீழாயவரோ எள்ளுவர் என்று உரைப்பாருமுளர்.

பழையர் - பழமையென்னும் பண்பினடியாப் பிறந்த பலர்பாற் பெயர்: பண்புப்பெயர் ஈறுபோய் இடைஅகரம் ஐயாயிற்று. நெய்தல் - சேர்ப்புக்கு அடைமொழி. (கூ)

கூருo. கொய்புற் கொடுத்துக் குறைத்தென்றுந் தீற்றினும்
வையம்பூண் கல்லா சிறுகுண்டை—யையகே
ளெய்திய செல்வத்த ராயினுங் கீழ்களைச்
செய்தொழிலாற் காணப் படும்.

(இ - ள்.) ஐய - அரசனே! கேள் - கேட்பாய்: என்றும் - எந்நாளிலும், கொய் புல் குறைத்து கொடுத்து - அறுக்கத்தக்க புல்லை அறுத்துக் கொடுத்து, தீற்றினும் - தின்னுமாறு செய்தாலும், சிறு குண்டை - சிறிய எருதுகள், வையம் பூண் கல்லா - வண்டியை இழுக்கமாட்டாவாம்; (அதுபோல), எய்திய செல்வத்தர் ஆயினும் கீழ்களே செய் தொழிலால் காணப்படும்—; (எ - று.)

இப்பாட்டின் பின் இரண்டடி - இவ்வதிகாரத்தின் எழாம்பாட்டிலும் வந்துள்ளது; வெவ்வேறு ஆசிரியர்க்கும் இவ்வாறு சிறுபான்மை பொருளோடு சொல்லும் ஒற்றுமைப்படுவது இயல்பு; இதனை, சமகாலத்தில் வேறு வேறு புலவராற் பாடப்பட்ட சிலப்பதிகாரத்திலும், மணிமேகலையிலும் சிலவிடத்துக் காணலாம். இவ்வடிகள், பழமொழியாக வழங்கி வந்து சேர்த்துக்கொள்ளப்பட்டன வென்றுமியினும், சமசியையாகக் கொண்டு பூர்த்திசெய்யப்பட்டனவென்றுமியினும் கொள்ளவும் இடமுண்டு.

எவ்வளவு மேன்மைப்படுத்தினாலும் சிற்றெருதுகள் வண்டியை யிழுக்கமாட்டாமைபோல, கீழ்மக்களும் தக்க காரியங்கட்கு உதவார் என்பதாம். **எடுத்துக்காட்டுவமையணி.**

கொய் புல்-வினைத்தொகை; பக்குவமான புல்லென்றவாறு. குறைத்து என்பதைக் கொய்புல் என்பதனோடு சேர்க்காமல், தனியேயெடுத்து காலைக்கன்றுகள் வளரவேண்டிக் கொம்பைச் சூட்டுக்கோலால் தீய்த்தல் காதுகளையறுத்தல் வால்மயிரைக்கத்தரித்தல் என்ற இவற்றைச் செய்து என்பாருமுளர். பிறவினையில், உண் என்னும்பகுதி 'டு' என்னும் விகுதி பெற்று முதல்நீண்டு ஊட்டு என நிற்றல்போல, தின் என்னும் பகுதி 'று' என்னும் விகுதிபெற்று, முதல் நீண்டு தீற்று என நிற்குமென்க; "நெண்மாவல்சி தீற்றி" எனப்பெரும்பாணாற்றுப்படையிலும், "தீற்றுதோ நாய் நட்டால் நல்ல முயல்" எனப் பழிமொழியிலும் வருவது காணலாம். குண்டையென்பது-பால்பகா அஃறிணைப் பெயராதலால், பூண்கல்லா என்னும் எதிர்மறைப் பலவின்பால்முற்றைக் கொண்டது. வையம்-தேருமாம். (கo)

நூசு - ஆம் அதிகாரம்—கயமை

அஃதாவது-மேல் இயல்களுள் வெளிப்படையாகவும் குறிப்பாகவும் கூறப்பட்டுள்ள நற்குணங்கள் யாவு மிலராய மூடர்களது தன்மை; கயமை-மூடத்தனம். கீழ்மையென்னும் முன்னைய அதிகாரத்திற் கீழோரது தன்மை முற்றும் கூறப்படாமையால், அதனையே கயமை யென்று வேறு பெயரிட்டு அவ்வதிகாரத்தைச் சார வைத்தார்.

நூடுக. ஆர்த்த வறிவின ராண்டிளைய ராயினுங்
காத்தோம்பிக் தம்மை யடக்குப—மூத்தகாறுஉந்
தீத்தொழிலே கன்றித் திரிதந் தெருவைப்பாற்
போத்தறூர் புல்லறிவி னோர்.

(இ - ள்.) ஆர்த்த அறிவினர் - (கல்விகேள்விகளினால்) நிறைந்த அறிவையுடையவர்,—ஆண்டு இளையர் ஆயினும் - வயதிற் சிறியராயிருந்தாலும், காத்து ஓம்பி-(தமது ஐம்பொறிகளையும் தீய புலன்களின்வழியே செல்லவொட்டாது) நடுத்துப் பாதுகாத்து,தம்மை—,அடக்குப-அடங்கியொழுகச் செய்வர் ; புல் அறிவினர்-அற்பமாகிய அறிவையுடையவர்,—மூத்தொறும் - வயது முதிரும்தோறும், தீ தொழிலே கன்றி - தீயசெயல்களிலேயே முதிர்ந்து தழும்பேறி, திரிதந்து - (நீ வழியிலே) திரிந்து, எருவைபோல் - கொறுக்கையைப் போல, போத்து அளர் - உள்துளையாயிருப்பது நீங்கமாட்டார் ; (எ - று.)

அறிவுள்ளவர், வயதிற்சிறியராயினும் [இளமை முதற்கொண்டே] ஐந்திரியங்கட்கு வசப்பட்டுத் தீயகாரியங்களைச் செய்யாமல் செய்தற்கு உரிய நல்ல காரியங்களையே செய்து அடக்கமுடையராயிருப்பர்; அறிவில்லாதவரோ, அப்படியன்றித் தமது ஆயுள் முழுவதும் தீத்தொழில்களையே செயது வீண் காலங்கழிப்பர் என்பது கருத்து. கொறுக்கை எவ்வளவு காலஞ்சென்றாலும் மேல் தோற்றத்தில் தடித்திருந்தும் உள்துளை நீங்காதவாறுபோல, அறிவில்லாதாரும் எவ்வளவு வயது சென்றாலும் மேல் தோற்றத்தில் தடித்த உருவத்தினராய் நல்லோரைப்போலத் தோன்றினும் உள்ளே குற்றமுடையராயிருக்குந் தன்மை நீங்காரென்க. அவ்வாறு இருப்பது தகுதியன்று என்பதாம். **உவமையணி.** இனி எருவை என்பதற்கு-கழுகென்று பொருள் கொண்டு, அறிவில்லாதவர் கழுகென்னும் பறவைபோலக் குற்றம்நீங்கா ரென்றும் உரைக்கலாம்: கழுகு நெடுந்தூரம் குணமுடைய பறவை யென்பது பிரசித்தம்.

தம்மைக் காத்து ஓம்புதல் - மனம் போன போக்கெல்லாம் போகாமல் நல்லறங்களையேசெய்து தம்மை நரகத்துக்கு ஆளாக்காமல் பாதுகாத்துக்கொள்ளுதல். ஆர்த்த-ஆர்ந்த என்பதன் வலித்தல். போத்து-பொத்து என்பது எதுகைநோக்கி நீட்டல் விகாரம் பெற்றது; பொத்து-குற்றம். இனி, 'துளை' என்று பொருள்படும் 'பொந்து' என்னும் மொழி வலித்தலும் நீட்டலும் பெற்றுப் போத்து என்று ஆயிற்று என்பாரும் உளர். மூத்தொறூஉம்—மூ - முதனிலைத் தொழிற்பெயர்; அளபெடை, குறில் நெடிலான இன்னிசையளபெடை. தீத்தொழிலே கன்றுதல் - தீய தொழில்களையேசெய்து தழும்புபடுதல். திரிதந்து,தா-துணைவினை. 'ஆர்த்த அறிவினர்' என்றும் பாடம்.

முன்னிரண்டடிகட்குப் பிரகலாதாழ்வானும், பின்னிரண்டடிகட்கு இரணியாசுரனும் எடுத்துக்காட்டாவ ரென்னலாம். இச்செய்யுளின் முன்னிரண்டடிகள், "உரை முடிவுகாணுனிளமையோ னென்ற, நரைமுதுமக்க ளுவப்ப - நரைமுடித்துச், சொல்லான் முறைசெய்தான் சோழன்" என்னும் **பழமொழி**ச்செய்யுளை நினைப்பூட்டுகின்றது. 'திரியுந் தெரிவைபோல்' என்றும், 'திரிதந்தரிவைபோல்' என்றும் பாடம். (க)

ஙநிஉ. செழும்பெரும் பொய்கையுள் வாழினு மென்னும்
வழும்பறுக்க கில்லாவாந் தேரை—வழும்பில்சிர்
நூல்கற்றக் கண்ணு நுணுக்கமொன் றில்லாதார்
தேர்கிற்கும் பெற்றி யரிது.

(இ - ள்.) தேரை - தவளைகள்,—என்றும் - எந்நாளும், செழும் பெரும் பொய்கையுள் வாழினும் - செழிப்பான [நீர் நிறைந்த] பெரிய குளத்தில் வாழ்ந்தாலும், வழும்பு அறுக்கில்லா ஆம் - (தமது உடம்பின் மேலுள்ள) வழு வழுப்பான அழுக்கை நீக்கிக கொள்ளமாட்டாவாம்; (அதுபோல),—நுணுக்கம் ஒன்று இல்லாதார் - நுட்பபுத்தி சிறிதுமில் லாதவர், வழும்பு இல் சீர் - குற்றமில்லாத சிறப்பையுடைய, நூல் - சாஸ நிரங்களை, கற்றக்கண்ணும் - கற்றுப் பழகினாலும், தேர்கிற்கும் பெற்றி- (அந்த நூல்களின் உண்மைப் பொருளை) ஆராயந்தறியுந் தன்மை, அரிது - (அவர்க்கு) இல்லையாகும்; (எ - று.)

தவளைகள் பெரிய நீர்நிலையிற் பலகாலம் வாழ்ந்தாலும் தமது உடம் பின் மேலுள்ள மாசைக் கழுவிக்கொள்ளமாட்டாமை போல, மூடர்கள் பெரிய நூல்களிற் பலகாலம் பயின்றாலும் தமது அறியாமைக் குற்றம் ஒழிந்து அவற்றின் உண்மையான கருத்துக்களை நுட்பமாக அறியுந் தன்மை யில்லாதவராவர் என்பதாம்; **எடுத்துக்காட்டுவமையணி**. உடம் பழுக்கை நீக்கிச சுத்தப்படுத்தும் ஆற்றலுடைய நீரிலிருந்தும் அழுக்குநீங் காத தவளைபோல, பலரையும் நல்வழிப்படுத்துந் திறமுடைய நூல் களிற் பழகியும் பக்குவப்படாது கீழ்மக்களுடைய மனமென்பது கருத்து.

பொய்கைக்குச் செழுமை - நீர் நிரம்பி நீர்ப்பூங்கொடிகளால் நறு மணமுறுதல். நூலுக்கு வழும்பு - களவு, சூது, காமம் முதலியவற்றைக் கூறுதல். ஞானமார்க்கத்தைக் கூறும் நூலென்பார் 'வழும்பில் சிர் நூல்' என்றார். நுணுக்கமாவது - ஐம்பொறிக ளடங்க ஒழுகுத லென்பர் ஒரு சாரார். தேர்கிற்கும் பெற்றி யரிது என்பதற்கு - நல்ல குடியிற் பிறந் தவரென்றாவது நூல்கற்றவ ரென்றாவது சான்றோரால் தெளியப்படுந் தன்மை கயவர்க்கு உண்டாகாது எனினுமாம்.

"இடம்பட மெய்ஞ்ஞானங் கற்பினு மென்று, மடங்காதா ரென்று மடங்கார்–தடங்கண்ணு,புப்பொடு நெய் பால் தயிர் காயம் பெய்தடினுங், கைப்பரு பேய்ச்சுரையின் காய்" என்றது போன்றது, இசசெய்யுள்.

நூல் - உவமையாகு பெயர். நுணுக்கம் என்னும் பண்புப் பெயர், இங்கு நுட்பமான அறிவுக்கு ஆகுபெயர். (உ)

ஙநிங. கணமலை நன்னாட கண்ணின் றெருவர்
குணனேயுங் கூறற் கரிதால்—குணனழுங்கக்
குற்ற முழைநின்று கூறுஞ் சிறியவர்கட்
கெற்றி லியன்றதோ நா.

(இ - ள்.) கணம் மலை நல் நாட - கூட்டமாகிய மலைகளையுடைய நல்ல நாட்டின் அரசனே!—கண் இன்று - எதிரில் இல்லாமல் [புறத்தில்] இருந்து, ஒருவர் குணன் எலாம் - பிறரொருவரது நற்குணத்தையும், கூறற்கு அரிது - எடுத்துச சொல்வதற்கு (நாவெழுதல்) அருமையாயிருக் கும்; (அவ்வாறிருக்க), உழை நின்று - (ஒருவரது) எதிரில் நின்று

கொண்டு, குணன் அழுங்க - (அவரது) நற்குணங்கள் அழியும்படி, குற்றம் கூறும் - குற்றங்களேயே எடுத்துப் (பலர் அறிய)க் கூறுகின்ற, சிறிய வர்கட்கு - அற்ப புத்தியையுடைய கீழோர்க்கு, நா - நாக்கு, எற்றால் இயன்றதோ - (தசையினாலல்லாமல்) எப்பொருளாற் செய்யப்பட்டதோ? (அறியோம்); (எ - று.)—ஆல் - ஈற்றசை.

ஒருவரது நற்குணத்தைப் புறத்திற் கூறுவது சாதாரணமாயினும் அவர் யாது நினைப்பாரோவென்று அஞ்சவேண்டியிருக்க, அவ்வாறன்றி ஒருவரது எதிரில் நின்றுகொண்டு அவரது நற்குணங்களே யொழித்துத் தீக்குணங்களேயே கயவர் எடுத்துக் கூறுகின்றாரதலே; அவரது நாக்குத் தசையினாற் செய்யப்படாமல் ஏதோ ஒரு கொடிய பொருளாற் செய்யப் பட்டிருக்கவேண்டுமென்று கவி வியந்து கூறியவாறு. பெரியோர்க்குப் போல அவர்க்கும் நாக்குத் தசையாற் செய்யப்பட்டதாயின் அவரும் பிறரது நற்குணங்களே எடுத்துக்கூறுவரேயன்றிக் குற்றங்களைக் கூறு ரென்பது, **குறிப்பெச்சம்**. எற்றாலியன்றதோ - கல்லினாலியன்றதோ, வேறு எட்டிக்கொட்டை போன்ற பொருளாலியன்றதோ? என்க.

பின்னே 'உழைநின்று' என வந்ததனால், முன்னே 'கண்ணின்று' என்பதற்கு - எதிரிலன்றிப் புறத்தில் எனக் கூறவேண்டியதாயிற்று. இன்று - இன்றியென்னும் எதிர்மறைக் குறிப்பு வினையெச்சத்தின் திரிபு. கண் நின்று என்று பிரித்து-எதிரில் நின்றுகொண்டு எனக் கூறுவதிற் பொருட்சிறப்பின்மை யறிக. (கூ)

கூநிசை. கோடேந் தகலல்குற் பெண்டிர்தம் பெண்ணீர்மை
சேடியர் போலச் செயறேற்றார்—கூடிப்
புதுப்பெருக்கம் போலத்தம் பெண்ணீர்மை காட்டி
மதித்திறப்பர் மற்றை யவர்.

(இ - ள்.) கோடு ஏந்து அகல் அல்குல் பெண்டிர் - பக்கங்கள் உயர்ந்து அகன்ற அல்குலையுடைய குலமகளிர், சேடியர்போல - (பணி விடை செய்யும்) வேலைக்காரிகள் போல இருந்து, தம் பெண் நீர்மை - தமது பெண்தன்மையை, செயல் - அலங்காரஞ்செய்து கொள்ளுதலை, தேற்றார் - அறியார்; மற்றையவர் - வேசையர்களோவெனில், புது பெருக்கம் போல - புதிய நீர்வெள்ளம்போல, தம் பெண் நீர்மை - தமது பெண் தன்மையை, மதித்து காட்டி - (அலங்காரஞ் செய்துகொள்ளுவ தனால் தம்மைக் கண்டவர் நன்கு) மதிக்கும்படி வெளிக்குக்காட்டி, கூடி - (ஆடவரோடு) கலந்து, இறப்பர் - நடப்பார்கள்; (எ - று.)

குலமகளிர் ஆடவரின்மனத்தை மயக்குமாறு அலங்காரங்களினால் தம்மை மதிக்கச்செய்து பிறரிடத்துப் பொருள் பறிப்பதில்லை; வேசை யரோ அவ்வாறு செய்து பொருள் பறிப்பர்; அதுபோல, யோக்கியர் தமது நற்குணங்களே வெளிக்குக்காட்டி வியக்கச்செய்யாமல் அடங்கி யிருப்பார்கள்; அயோக்கியரோ மிக்க மேன்மையுள்ளவர்போலத் தம் மைத் தாமே வெளிக்கு நடித்துக்காட்டி வஞ்சித்துப் பிறரிடம் பொருள் பறித்துக்கொள்வார்கள் என்பதாம்.

உபமானத்தைக் கூறி உபமேயத்தைப் பெறவைத்ததனால், **பிறிது மொழிதலணி**. இவ்வுவமையால், கீழ்மக்கள் டம்பத்தன்மையில் கருத்

துள்ளவரென்றும், மேன்மக்கள் வெளியாடம்பரத்திற் கருத்துள்ளவ ரல்ல ரென்றும் வெளியாம்.

"புதுப்புனலும்" என்று மேல் வரும் 370 - ஆம் பாடலும், "தலையு மாகமுக் தாளுந் தழீயதன், நிலைநிலாதிறை நின்றது போலவே, மலையி லுள்ள வெலாங்கொண்டு மண்டலால், வீலையின்மாதரை யொத்ததவ் வெள்ளமே" என்ற சம்பர்வாக்கும் இக்குக் கருதத் தக்கன. புதுநீர்ப் பெருக்கு, தான்வரும் ஆற்றினது பழவெள்ளத்தையும் அடித்துக்கொண்டு செல்வதுபோல, பரத்தையர் தாம் சேர்ந்த செல்வரது செல்வம் முழுவதையும் பறித்துக்கொண்டு பிரிந்து செல்வரென்பது பட நின்றது; ஆதலின், புதுவெள்ளம் அவர்க்குத் தொழில்பற்றிய உவமை. பின்னே 'மற்றையவர்' என வந்ததனால், முன்னே 'பெண்டிர்' என்பது - குல மகளிரை. மதித்து-மதிக்கச்செய்து; தன்னினே, பிறரினைப் பொருளது.

நகுறு. தளிர்மேலே நிற்பினுந் தட்டாமற் செல்லா
வளிநீரார் மாதோ கயவ—ளளிநீரார்க்
கென்னானுஞ் செய்யா ரெனைத்தானுஞ் செய்பவே
யின்னாங்கு செய்வார்ப் பெறின்.

(இ - ன்.) கயவர் - கீழ்மக்கள்,—தளிர்மேலே நிற்பினும் - (மிகவும் மெதுவான) தளிரின்மேல் நின்றாலும், தட்டாமல் - (ஒருவர்) தட்டித் தள்ளாமல், செல்லா - இறங்கிப்போகமாட்டாத, உளி நீரர் - உளியின் தன்மையையுடையவராவர்; (இன்னும் அவர்கள்), அளி நீரார்க்கு - (பிறர் துன்பத்தைக்கண்டு இரங்கும்) அருளேயே இயற்கைக் குணமாக வுடைய பெரியோர்க்கு, என் ஆனும் செய்யார் - சிறிய உபகாரத்தையுஞ் செய்யமாட்டார்கள்; இன்னாங்கு செய்வார் பெறின் - (தமக்குத்) தின்பஞ் செய்பவரைப் பெற்றால், எனைத்து ஆனும் செய்பவே - (அவர்கட்கு) எவ்வளவு பேருதவியையுஞ் செய்வார்கள்: (எ - று.)—மாது, ஓ-ஈற்றசை.

உளியானது மெதுவான பொருளிலும் தாமே செல்லாமல் ஒருவர் தட்டித் தள்ளியபின்னரே செல்லுதுபோல, கீழ்மக்கள் எவ்வளவு சிறிய தொழிலிலும் பிறர் ஏவாமல் பிரவேசிக்கமாட்டார்; நற்குணமுடையோர்க்கு ஒருதவியும் செய்யார்; அடித்து வருத்தங் கொடியோர்க்கு எல்லாவற் றையுங் கொடுப்பார்கள் என்பது கருத்து. முன்னிரண்டடி-**உவமையணி**.

"விட்டுக் கருமஞ் செயவைத்த பின்னரும், மூட்டா தவரை வியங் கொளல் வேண்டுமால், தொட்டக்கான் மாழ்குந் தளிர்மேலே நிற்பினுந், தட்டாமற் செல்லா தளி" என்ற **பழமொழி**ச்செய்யுள் இங்கு நோக்கத் தக்கது. "பெற்றூர் பிறந்தார் பெருநாட்டார் பேரூலகி, லுற்றூ ருகந்தா ரெனவேண்டார்—மற்றே, நிரணங்கொடுத்தா லிடுவ நிடாரே, சரணங் கொடுத்தாலுந் தாம்" என்னும் நல்வழியோடு இச்செய்யுளின் பின்னிரண் டடிகளே ஒப்பிடுக. "வாய்வைத்துக் கொல்லச் சுரப்பதாங் கீழ்" என்றூர் கீழ்; "கரும்பூபோற் கொல்லப்பயன்படுங் கீழ்" என்றூர், நாயனூரும்.

அளிநீரர்-அருளேயே இயற்கைக் குணமாகவுடையவர்: அல்லது, பிறர் அளிக்கும்படியான[இரங்கும்படியான]இயல்புடையவர்: 'இன்னாங்கு செய் வார்க்குச் செய்ப' என்றது, **இலக்கணையால்**, அவர் பறித்துக்கொள்ள இவர் இழப்பரென்பதைக்குறிக்கும். செய்வார்ப்பெறின்—"இயல்பின்விகாரம்."

நடுநி கூ. மலைநல முள்ளுங் குறவன் பயந்த
வினைநில முள்ளுஞ் முழவன் சிறந்தொருவர்
செய்தநன் றுள்ளுவர் சான்றோர் கயந்தன்னை
வைதலை யுள்ளி விடும்.

(இ - ள்.) குறவன்—, மலை நலம் - (தனக்கு உறைவிடமாகிய) மலையினது வளத்தை, உள்ளும்-நினைத்துக்கொண்டிருப்பான்: உழவன்-உழுது பயிர்செய்பவன், பயந்த - (தனக்குப்) பயன்கொடுக்குந் தன்மையுள்ள, வினைநிலம் - வினைகின்ற நிலத்தை, உள்ளும் - நினைத்துக்கொண்டிருப்பான்; சான்றோர் - (கல்விகேள்விகளாற்) பெரியராயினோர், ஒருவர் செய்த நன்று - (தமக்குப்) பிறரொருவர் செய்த உபகாரத்தை, சிறந்து உள்ளுவர் - பிறப்பாக நினைத்துக்கொண்டிருப்பார்; கயம் - கயவன் [கீழ்மகன்], தன்னை வைதலை - (பிறரெருவன்) தன்னைத் திட்டியதையே, உள்ளிவிடும் - (மறவாமற்) கருதிக்கொண்டிருப்பான்; (எ - று.)

குறவனுக்கு மலையிற் பழக்கமாதலால், அவன் அந்த மலையின் வளத்தையே கருதுவன்; அவ்வாறே உழவன் தனக்குப் பயன்தரும் வினைநிலத்தின் வளத்தையே கருதுவன்; சான்றோர் நினைத்துணை நன்றியையும் பனைத்துணையாகப் பாவித்துப் பிறரைப் பெருமைப்படுத்துதலையே மேற்கொண்டவராதலால், தமக்குப் பிறர் செய்த நன்றியையே கருதியிருப்பர்; இம்மூவர்க்கும் இந்தக் குணங்கள் பழக்கமாயிருப்பதுபோல, கீழோன் "நன்றல்லதன்றே மறப்பதுநன்று" என்னும் நீதிப்படியன்றி "ஓர்த்தநனே, யுள்ளத்தானுள்ளி யுரைத்துரா யூர்கேட்பத், துள்ளித் தூண்மூட்டுமாங் கீழ்" என்றவாறு தன்னைப் பிறர் திட்டியதையே மறவாமற் கருதிக்கொண்டிருப்பது அவனுக்கு இயற்கை யென்பதாம்.

இங்குச சான்றோரையும் உடன்கூறியது, கீழ்மகனது இழிவு தோன்றற்கு; அவனை 'கயம்' என்று அஃறிணையாகக் கூறியதும் இதுபற்றியே. குறம் - சாதிப்பெயர்; அதனையுடையவன் குறவன்: குறிஞ்சிநிலத்தில் வாழ்பவன். உழவன் - உழுதல் தொழிலுடையவன்: மருதநிலத்தில் வாழ்பவன். சிறந்து உள்ளுவர் என இயையும். சிறந்து - சிறக்க; எச்சத் திரிபு. குறவன் உள்ளும்-செய்யுமென்முற்று ஆண்பாலுக்குச் சென்றது.

நடுநி எ. ஒருநன்றி செய்தவர்க் கொன்றி யெழுந்த
பிழைநூறுஞ் சான்றோர் பொறுப்பர்—கயவர்க்
கெழுநூறு நன்றிசெய் தொன்றுதீ தாயி
னெழுநூறுந் தீதாய் விடும்.

(இ - ள்.) சான்றோர் - பெரியோர்,—ஒரு நன்றி செய்தவர்க்கு - (தமக்கு) ஒருதவியைச் செய்தவர்திறத்தில், ஒன்றி எழுந்த - இடைவிடாது தொடர்ச்சியாகத் தோன்றிய, பிழை நூறும் - நூறுகுற்றங்களாலும், பொறுப்பர்-(தமக்கு முன்பு அவர் செய்த நன்றியைக் கருதிப்) பொறுத்துக்கொள்வர்: கயவர்க்கு - கீழானவர்க்கோவெனின்,—எழுநூறு நன்றி செய்து-(ஒருவர் முன்பு) எழுநூறு உபகாரங்களைச் செய்து, ஒன்று தீது ஆயின் - (பின்பு அவர் செய்வது) ஒரு அபகாரமாகுமானால், எழுநூறும் - (முன்செய்த) அந்த எழுநூறு நன்றிகளும், தீது ஆய்விடும் - தீயனவாகவே தோன்றும்; (எ - று.)

பெரியோர் தமக்கு முன்னே ஒரு நன்மை செய்தவர் பின்னே பல தீமைகளைச் செய்தாலும் முன்செய்த அந்த ஒருநன்மையைக் கருதிப் பல தீமைகளையும்பொறுப்பர்; அற்பரோவெனின் அவ்வாறன்றிஒருதீமையைக் கருதிப் பல நன்மைகளையும் மறப்ப ரென்பது கருத்து. இவ்வாறிருப்பது அவரவரியற்கை யென்பதாம். 'எழுநூறும் தீது ஆய்விடும்' என்றது, அவ்வெழுநூறு நன்றிகளும் கீழ்மக்களால் மறக்கப்படுமென்பது பற்றி யாம். தினையளவு உதவி பனையளவாகக் கொள்ளப்படுதலினால், அவ் வொரு நன்மையே அத்தீமைகளையெல்லாம் கெடுக்குமென்க.

"ஒன்றுதவி செய்யினு மவ்வுதவி மறவாமற், பின்றையவர் செய் பிழை பொறுத்திவர் பெரியோர், நன்றிபலவாகவொரு நலை புரிவ ரேனுங், கன்றிடுவதன்றி முதுகுகயவர் நினையாரே" என்ற **விவிலியுந்தூரார் பாரதமும்** இக்கருத்துடையதே. "கொன்றன்ன வின்னு செயினு மவர் செய்த, வொன்றுநன்றுள்ளக் கெடும்" என்னுங் **திருக்குறளு** இங்கே முன்னிரண்டடிகளிற் காண்க.

'நூறு,' 'எழுநூறு' என்பன - மிகப்பல வென்பதற்குக் காட்டிய வாறு. செய்தவக்கு - காரணவுருபு கோடற்பொருளதாகாமல் இடப் பொருளதாய் நிற்றலால், உருபுமயக்கம். எழுநூறும் **தீது** - பன்மை யொருமை மயக்கம். (எ)

நூசு. எட்டைடப் பருவத்து மிற்பிறந்தார் செய்வன
மோட்டிடத்துஞ் செய்யார் முழுமக்கள்—கோட்டை
வயிரஞ் செறிப்பினும் வாட்கண்ணாய் பன்றி
செயிர்வேழ மாகுத லின்று.

(இ - ள்.) வாள் கண்ணாய் - வாள்போன்ற கண்களையுடையவளே!—இல் பிறந்தார் - உயர்குடியிற் பிறந்தவர்கள், எட்டை பருவத்தும்-பொரு ளின்மையால் தளர்ச்சியுண்டான காலத்திலும், செய்வன - செய்யும் நற் காரியங்களை, முழுமக்கள் - மூடர்கள், மோட்டிடத்தும் - (பொருளுடை மையால்) உயர்ந்த நிலையில் நின்றகாலத்திலும், செய்யார் - செய்யமாட் டார்கள்; (எதுபோலவெனின்),—கோட்டை - (தனது) தந்தங்களில், வயிரம் செறிப்பினும் - பூண் கட்டினாலும், பன்றி—, செயிர் வேழம் ஆகுதல் இன்று- கோபிக்குந் தன்மையுள்ள யானையைப்போலப் போர் செய்ய வல்லதாகுதல் இல்லை; (எ-று.)

பன்றியின்பற்களுக்கு யானைத்தந்தத்திற்குக் கட்டுவதுபோலப் பூண் கட்டினாலும் அது யானையாகாததுபோல, கீழ்மக்கள் மிக்க செல்வம் பெற்றாலும் மேன்மக்கள் வறுமைக்காலத்திற் செய்யுமளவும் நற்காரியங் கள் செய்யமாட்டார்கள் என்பதாம். பன்றியுவமை, கீழ்மக்கள் தங்கட்கு எவ்வளவு பெருமைவந்தாலும் தங்கட்குரிய இழிகுணம் நீங்காரென் பதை வற்புறுத்தும்: **எடுத்துக்காட்டுவமையணி.** "செல்லாவிடத்தும்" என்று தொடங்கும் 49-ஆம் செய்யுளை ஒப்பிட்டுக்காண்க.

கீழ் கசசு, கஅக - ஆங கவிகளோடு இச்செய்யுளை ஒப்பு நோக்குக.

எட்டை - வறுமை; இச்சொல்லை மூதேவியைக் குறிப்பதான "ஜ்யேஷ்டா" என்பதன் திரிபு என்னலாம். இனி எடு - பொல்லாங்கு: இச் சொல் திரிந்து எட்டையென்று வந்ததென்பாருமுளர். மோடு-உயர்ச்சி,

பிறந்தபின்பு கல்விகற்றல் முதலிய அருந்தொழில்களால் சிறிதும் தளரா திருத்தல்பற்றி, மூடரை 'முழு மக்கள்' என்றார்; உடம்பிலுற் குறை வில்லாதவ ரென்றபடி. கோடு - பல். கோட்டை - உருபுமயக்கம். (அ)

ஈடுகூ. இன்றுது மிங்நிலையே யாது மினிச்சிறி தது
நின்றுது மென்று நினைத்திருந்—தொன்றி
யுரையின் மகிழ்ந்ததம் முள்ளம்வே றுகி
மரையிலையின் மாய்ந்தார் பலர்.

(இ - ள்.) 'இன்று ஆதும் - இன்றைக்குச் செல்வமுடையவரா வோம்; இ நிலையே ஆதும் - (அன்றி) இப்பொழுதே செல்வமுடையவ ராவோம்; இனி சிறிது நின்று ஆதும் - இனிமேல் சிலகாலங்கழித்துச் செல்வமுடையராவோம்,' என்று நினைத்து - என்று சிந்தனை செய்து கொண்டு, இருந்து - (அறஞ் செய்யாமலே) காலங்கழித்து, ஒன்றி உரை யின் மகிழ்ந்து - இவ்வாறு மேன்மேற் சொல்லுதலினுற் சந்தோஷித்து, தம் உள்ளம் வேறு ஆகி - (தாம் நினைத்தபடியெல்லாம் நேராமையால் இறுதியில்) தமது மனம் மாறுபட்டு, மரை இலையின் - தாமரையிலைபோல, பலர் - அநேகர், மாய்ந்தார் - பயனின்றியே அழிந்தார்கள்; (எ - று.)

தாம் உள்ளகாலமெல்லாம் செல்வத்தையே எதிர்பார்த்து மனே ராச்சியஞ் செய்துகொண்டு சிறிதுந் தருமஞ்செய்யாமற் காலங்கழித்துத் தாம் நினைத்தபடி ஒன்றும் கிடையாமையால் மனமழிந்து இறந்தவர் பலர் என்பது கருத்து. இதனால், "எண்பது கோடி நினைந்தெண்ணுவன" என்றபடி வீண் கற்பனையும், டம்பமாகப்பேசுதலும் கீழோர்க்கு இயற்கை யென்பது பெறப்பட்டது. **உவமையணி.**

முதலிற் செழிப்பாயிருந்து பிறகு காளடைவில் இருந்தவிடத்திலே யே அழிதலில் கயவர்க்குத் தாமரையிலை உவமை. மரை - தாமரை யென் பதன் முதற்குறை. இனி, மரை என்பதற்கு - மான் என்றேகொண்டு, மான்கள் மேய்ந்துதின்ற இலைபோல இருந்தவிடந்தெரியாமல் அழிந்தார் என்று கலித்து பொருள்கூறுவாரு முளர்; தின்பதற்குமுன் செழிப் பாய்க் காணப்பட்டுப் பிறகு சொரூபமே தெரியாமல் அழிவதில் உவமை. உரையின், ஐந்தனுருபு - ஏதுப்பொருளது. ஆதும் - தன்மைப் பன்மை முற்று.

'இன்னினியே' என்றும் பாடம். முதலடி - **முற்றுமோனை.** (கூ)

ஈடுகூ0. நீருட் பிறந்து நிறம்பசிய தாயினு
மீரங் கிடையகத் தில்லாகு—மோரு
நிறைப்பெருஞ் செல்வத்து நின்றக் கடைத்து
மறைப்பெருங்க லன்ன ருடைத்து.

(இ - ள்.) நீருள் பிறந்து - தண்ணீரில் உண்டாகி, நிறம் பசியது ஆயினும் - பசிய நிறமுடையதாயிருந்தாலும், கிடை - சடையானது, அகத்து - தனது உள்ளிடத்தில், ஈரம் இல் ஆகும் - ஈரமில்லாததாகும்; (அதுபோல), —நிறை பெரு செல்வத்து நின்றக்கடைத்தும் - நிறைந் துள்ள பெரிய செல்வத்தில் இருந்தாலும், அறை பெரு கல் அன்னர் - பாறையாகிய பெரிய கல்லைப்போன்றவர்களே [மனமிளகுதலில்லாத வரை], உடைத்து - உடையதாயிருக்கின்றது, (இவ்வுலகம்); (எ - று.)

எப்பொழுதும் தண்ணீரிற் கிடந்தாலும் உள்ளீரமில்லாத சடை போல எப்பொழுதும் செல்வத்திற் பழகினாலும் இளகுதலில்லாத கன் னெஞ்சமுடைய மூடர் இவ்வுலகத்திற் பலர்உண்டு என்பது கருத்து. **எடுத்துக்காட்டுவமையணி.**

மனத்தில் ஈரமாவது - இரப்பவர்க்கு ஈதல் முதலியவற்றிற்குக் காரணமான தயைதாட்சிணியம். ஓரும் - அசைநிலை ; இனி, முன்னிலைப் பன்மை வினைமுற்றாய், நீர் அறியும் என்றுமாம். நிறைப்பெருஞ் செல்வம்- இனி வேண்டாமென்று திருப்திப்படுதற்குக் காரணமான மிக்க செல் வம் ; வினைத்தொகையில் வலியியல்பாக வேண்டியது, எதுகை நயம் நோக்கி நிறைப்பெரு என வலிமிக்கதென்க. இனி, முதனிலைத் தொழிற் பெயராக நிறைதலையுடைய பெருஞ்செல்வமுமாம். அறை - கற்பாறை.

"வைகலு நீருட் கிடப்பினுங் கல்லிற்கு, மெல்லென்றல் சால வரி தாகு மஃதேபோல், வைகலு நல்லறங் கேட்பினுங் கீழகட்குக், கல்லினும் வல்லென்னு நெஞ்சு" என்ற **அறநெறிச்சாரத்**தோடு ஒத்த வாய்பாடுடை யது, இசசெய்யுள். (கo)

ஏழாவது

பன்னெறியியல்

அஃதாவது - ஒன்றோடொன்று சம்பந்தமில்லாத பலவகைப்பட்ட நீதிகளைச்சொல்லும் இயல் என்று பொருள். பல + நெறி = பன்னெறி ; பல என்பது பிறிதுவர அகரம் கெட்டது. இந்நூலை அதிகாரவடைவு செய்த பதுமனார் பத்துச்செய்யுள்வீதம் கொண்ட அதிகாரங்களின் மேற் பட்ட செய்யுள்களை யெடுத்துத் தனியே ஓரதிகாரமாக்கிப் பொருட் பாலின் இறுதியில் வைத்தனரென்க. இந்த ஓர் அதிகாரம்தானே ஓரிய லானமை அறிக.

கூ எ - ஆம் அதிகாரம்—பன்னெறி

இதன் பொருள் முதலியன முற்கூறியவாற்றால் விளங்கும்.

கூஉக. மழைதிளைக்கு மாடமாய் மாண்பமைந்த காப்பா
யிழைவிளக்கு நின்றிமைப்பி னென்னும்—விழைதக்க
மாண்ட மனையாளை யில்லாதா னில்லகங்
காண்டற் கரியதோர் காடு.

(இ - ள்.) மழை திளைக்கும் மாடம்ஆய்-மேகம் தவழும்படியான உப ரிகையுடையதாய், மாண்பு அமைந்த காப்புஆய் - சிறப்புப்பொருந்திய காவலையுடையதாய், இழை விளக்கு நின்று இமைப்பின் - ஆபரணங்கள் விளக்குப்போல நிலைபெற்று விளங்கினாலும்,—விழை தக்க - விரும்பத் தக்க, மாண்ட மனையாளை - (நற்குணங்களால்) மாட்சிமைப்பட்ட மனை

வியை, இல்லாதவன் - பெற்றில்லாதவனது, இல்லகம் - வீடானது,— என் ஆம் - என்ன பயனுடையதாம்? (அது), காண்டற்கு அரியது ஓர் காடு - கண்களாற் காண்பதற்குங்கூடாத [மிகக்கொடிய] ஒரு காடு போலும்; (எ - று.)

எவ்வளவு செல்வச் சிறப்புடையதாயினும் நல்லமனையாளில்லாத வீடு சிறிதும் பயன்படாது என்பதாம். இங்கு 'மாடம்' என்றது, மேல்நிலை [உபரிகை] யைக் குறிக்கும். மாண்பமைந்த காப்பு - கள்ளர் முதலியோர் உட்புக முடியாதபடி பெருங் காவலைப் பெற்றிருத்தல். இழை விளக்கு நின்று இமைத்தல் - செல்வச் சிறப்பைக் குறிக்கும். இழை - இரத்தினங் களிழைத்துச் செய்யப்படுவதென ஆபரணத்திற்குக் காரணக்குறி. இனி, இழைவிளக்கு நின்று இமைப்பின் என்பதற்கு - நூல் திரிகளிலைலாகிய விளக்குகள் எப்பொழுதும் பிரகாசித்தாலும் என்று பொருள் கூறுவதிற் சிறப்பின்மை யறிக. விளக்குகள் பிரகாசிப்பது, வீட்டிற்கு மங்களக் குறி யென்பர். மனையாள் நற்குணநற்செயகை யில்லாதவளாயின், உற வினர் விருந்தினர் முதலியோர் வந்து சேர்தற்கு இடமில்லையாதலால், அவ்வீடு, மிகக்கொடிய காடுபோன்றதாகு மென்க.

மழைதிலைக்குமாடம்—மேகத்திற்கும் மாடத்திற்கும் சம்பந்தமில்லா திருக்கச் சம்பந்தங் கற்பித்துக் கூறியது, **தொடர்புயர்வுநவிற்சியணி;** இதனை வடநூலார் **ஸம்பந்தாதிசயோக்தி** யென்பர். இது, மாடத்தின் உயர்வை விளக்கும்.

"மனைமாட்சி யில்லாள்க ணில்லாயின் வாழ்க்கை, யெனைமாட்சித் தாயினுமில்", "இல்லதெ னில்லவண் மாண்பாரு ளுள்ளதெ, னில்லவண் மாணாக்கடை"; "இல்லா ளகத்திருக்க வில்லாததொன்றில்லை, யில்லாரு மில்லாளே யாமாயி-னில்லாள், வலிகிடந்த மாற்ற முரைக்குமே லவ்வில், புலிகிடந்த தூரும் விடும்" என்னுஞ் செய்யுள்கள், இங்கு ஒப்பு நோக்கத் தகுகன. (க)

நகூஉ. வழுக்கெனைத்து மில்லாத வாள்வாய்க் கிடந்து
மிழுக்கினைத் தாம்பெறு ராயி—னிழுக்கெனைத்துஞ்
செய்குறூப் பாணி சிறிதேயச் சின்மொழியார்
கையுறூப் பாணி பெரிது.

(இ - ள்.) (மகளிர்),—வழுக்கு எனைத்தும் இல்லாத - குற்றம் சிறிது மில்லாத, வாள்வாய் - வாளின் காவலில், கிடந்தும் - இருந்தும். இழுக் கினை தாம் பெறூர் ஆயின் (உம்) - (கற்பொழுக்கத்தினின்று) தவறு தலைத் தாம் பெறூதவராஞலும்,—அ சில் மொழியார் - இனிமையாகப் பேசுஞ் சொற்களையுடைய அம்மகளிர், இழுக்கு எனைத்தும்-சிறு குற்றத் தையாயினும், செய்குறூ - செய்யாமல் (தம்மைப்) பாதுகாத்த, பாணி-காலம், சிறிதே - சிறியதேயாம்; கை உறூ பாணி - நல்லொழுக்கத்தைக் கைக்கொள்ளாத [கற்பழிந்த] காலமோ, பெரிது-மிகப் பெரியதேயாம்.

இது, பெரும்பான்மையாக மகளிரியற்கை கூறியபடி. இயற்கையிற் கற்பொழுக்கமில்லாத மகளிரைக் கடுங்காவலில் வைத்தாலும் அவர்கள்

டரும்பாலும் இழிவானகாரியங்களேயே செய்வரென்பதாம்; "சிறைகாக்குங் காப்பெவன்செய்யும் மகளிர், நிறைகாக்குங் காப்பே தலை" என்னும் **திருக்குறளிலும்.**

வாட்காவலாவது – வாளாயுதத்தைக் கையிலேந்தியவர்களாற் காக்கப்படுதல்; வாள்போன்ற கொடிய காவலெனினுமாம். உம் – உயர்வு சிறப்பு; இரண்டாமடியில் அவவும்மையைக் கூட்டிக்கொள்க. அவ்வும்மை – மகளிர் காவல்காக்கப்பட்டுச் சிறிது குற்றஞ்செய்தற்கும் இடமில்லையாயினும் அவர் மனம் தீயவழியிற் செல்லுதலே பெரும்பான்மையென்பதை விளக்கி நின்றது. 'இழுக்கினைத் தாம் பெறுவராயின்' என்று பாடமோதுவாரு முளர். அப்பொழுது, மகளிர் கடுங்காவலிற் கிடந்தும் (சிறிது) காவற்சோர்வினைப் பெறுவராயின், கற்பில்தவறியகாலம் பெரியதாகவும் அவ்வாறு தவறுத காலம் சிறியதாகவும் ஆய்விடுமென்று கருத்துக் கொள்க. 'இழுக்கு' – காவற்சோர்வும் கற்பினின்று தவறுதலும். பாணி – பொழுது; "வேலையே யமயஞ்செவ்வி யேல்லையே பொழுது பாணி, காலை கொண்பதுமே போழ்து, காலப்பெய ரீரைந்தாகும்" என்பது, **நிகண்டு.** (உ)

கூ ள ள. எறியென் றெதிர்நிற்பாள் கூற்றஞ், நிறுகாலை
யட்டில் புகாதா ளரும்பிணி—யட்டதனை
யுண்டி யுதவாதா ளில்வாழ்பே யிம்மூவர்
கொண்டானே கொல்லும் படை.

(இ – ள்.) (தனது) கணவன் சினங்கொண்டபோது), எறி என்று-(என்னை) 'அடி' என்று சொலலி, எதிர் நிற்பாள் – எதிர்த்து நிற்பவள், கூற்றம் – (அவனுக்கு இறுதியைத்தரும்) யமன்போல்வாள்; சிறு காலை-உதயகாலத்தில், அட்டில் புகாதாள் – மடைப்பள்ளியில் (சமையல்செய்ய) நுழையாதவள், அரும்பிணி – (மருந்தினால் தணித்தற்கு) முடியாத நோய் போல்வாள்; அட்டதனை உண்டி உதவாதாள் – (தான்) சமைத்த பொருளை (அவ) உணவாக(க் கணவனுக்கு) இடாமல் தானே உண்பவள், இல் வாழ்பேய் – வீட்டில் வசிக்கின்ற பேய்போல்வாள்; இ மூவர்-இந்த மூவரும், கொண்டானே கொல்லும் படை – (தம்மைக்) கொண்ட கணவனே உயிர் வாங்கும் ஆயுதம் போன்றவராவர்; (எ-று.)

கணவன் கோபித்து எதாகிலும் சொன்னால் எதிர்த்து நிற்பதும், உணவிற்கு உரிய காலத்தில் சமைக்கத் தொடங்காமையும், கணவன் விரும்பியபோது உண விடாமையும், அக்கணவனைக் கொல்வதற்கு ஒப்பாகுமென்பது கருத்து.

"கூற்றமே, யில்லிருந்து நீங்கொழுகுவாள்" என்றவாறு தனது தீக்குணத்தினால் கணவன் ஒடுங்கி உயிரொழிதற்குக் காரணமாதல்பற்றி அப்படிப்பட்ட மனைவியை 'கூற்றம்' என்றும், காலமறிந்து உணவிடாமையால் அவனுக்கு வியாதிநேர்தற்குக் காரணமாதல்பற்றி அவளை 'அரும்பிணி' என்றும், கணவன் பசியை நோக்காமல் தானே உண்பதுபற்றி அவளை 'பேய்' என்றும் உருவகப்படுத்திக்கூறினர். கணவனுக்கு உண்டியுதவாது தானே யுண்ணும் மனைவியைப் பேயாக உருவகஞ்செய்தது, "பேஎய்ப்பிறப்பிற் பெரும்பசியும்" என்றவாறு பிறர்பசிநோக்காமல் தன் பசியையே தீர்க்குந் தன்மையனென்று குறித்தற்கு. காட்டில்

இரியும் பேயினும் வேறுபாடு தோன்ற, 'இல்வாழ்பேய்' என்றார். இத் தகைய மூவராலும் கணவரது உயிர் வருந்து மாதலால், அவரை 'கொண்டானைக்கொல்லும்படை' என்றே கூறினர்.

சிறுகாலை - உதயகாலம்; "சிற்றஞ் சிறுகாலே" என்றார் பெரியாரும். மூன்றுமடியின் ஈற்றில் முற்றும்மை கூட்டுக. அட்டில் - அட்டவில் என்பதன் தொகுத்தல். அட்ட இல் - சமையல் செய்யுமிடம். அட்ட தனை உண்டி உதவாதாள் என்பதற்கு - தான் சமைத்ததை நீ உண் என்று இடாதவள் என்று பொருளுரைப்பினுமாம்; உண்டி - உண்ணுதி; முன்னிலையொருமைமுற்று. (கூ)

நகூச. கடியெனக் கேட்டுங் கடியான் வெடிபட
வார்ப்பது கேட்டு மதுதெளியான்—பேர்த்துமோ
ரிற்கொண் டினிதிருஉ மேமுறுத லென்பவே
கற்கொண் டெறியுந் தவறு.

(இ - ள்.) (ஒருவன்),—கடி என கேட்டும் - '(இல்வாழ்க்கையை) நீக்கிவிடு' என்று (பெரியோர்) சொல்லக்கேட்டும், கடியான் - நீக்காத வனுப்,—வெடிபட - (தலை) வெடித்துப்போம்படி, ஆர்ப்பது - (சாப் பறை டொண் டொண் என்று) ஒலிப்பதை, கேட்டும் - கேட்டபிறகும், அது தெளியான் - இல்வாழ்க்கை இத்தன்மையதெனத் தெரிந்துகொள் ளாதவனுய்,—பேர்த்தும் ஓர் இல் கொண்டு-மறுபடியும் ஒரு மனையாளைக் கட்டிக்கொண்டு, இனிது இருஉம்-சந்தோஷமா யிருக்கின்ற, எமுறுதல் - மயக்கமானது,—கல் கொண்டு எறியும் தவறு - கல்லையெடுத்து(த் தன் மேல் தானே) எறிந்து கொள்ளும் (பித்தர் செயல்போலக்) குற்றமாகும், என்ப - என்று கூறுவர், (அறிவுடையோர்); (எ-று.)

நற்குணங்களும் புத்திரபாக்கியமு மில்லாதிருந்தாலும் மனைவியை விடக்கூடாததாலும், மணஞ்செய்தபின் இல்வாழ்க்கையிற்பலதுன்பங்க ளுண்டாதலாலும், இளமையிலே அவ்வில்வாழ்க்கையை விட்டுத் துற வறம் பூண்பாயென்று பெரியோர் நற்புத்தி சொல்லவும் விடாமல் ஒரு பெண்ணை மணந்தவன், அந்த மனைவி இறந்துபோனபிறகு, யாக்கை நிலையாமையையும் இல்வாழ்க்கையிற் சிறிதும் இன்பமில்லாமையையும் பிரத்தியக்ஷமாகக் கண்டும் மனந்தெளியாதவனுய் மற்றொருத்தியை மணஞ் செய்துகொண்டு மகிழ்ந்திருப்பக் கருதுவது, தன்னைத் தானே கல்லா லெறிந்துகொள்வது போன்ற பெருங்குற்றமாகு மென்பதாம். உவமை யால், தவறுமல் தனக்குத்தானே நாசத்தை விளைத்துக்கொள்பவனென் பது பெறப்படும்.

கடி—கீழ் - துறவு - சு ஆஞ் செய்யுளிற் கூறியதைக் காண்க. வெடி பட - அசரமுண்டாக எனினுமாம். ஆர்ப்பது - இங்குச் சாப்பறையின் ஓசை. இருஉம் - இருவும் என்னும் பெயரெச்சம் விகாரப்பட்ட சொல் லிசையளபெடை. எமுறுதல் = எமமுறுதல்; இன்பமில்லாத்தை இன்ப முள்ளதுபோலக் கருதி மயங்குதல். (ச)

நடூஎ. கலியே தவமுயன்று வாழ்த லொருவர்க்
கிடையே யினியார்கட் டங்கல்—கடையே
புணராதென் றெண்ணிப் பொருணசையாற் றம்மை
யுணராரின் சென்று நிலை.

(இ - ள்.) ஒருவர்க்கு—, —தவம் முயன்று வாழ்தல் - தவத்திற்கு உரிய ஒழுக்கங்களில் முயற்சிசெய்து உயிர்வாழ்வது, தலையே - முதன்மையான செய்கையே [உத்தமமாகும்]; இனியார்கண் தங்கல் - நற்குண நற் செய்கைகளையுடைய மனைவியருடன் கூடிவாழ்தல் [இல்லறவாழ்க்கையிற் பொருந்துதல்], இடையே - நடுத்தரமானது [மத்திமமமாகும்]; புணராது என்று எண்ணி - கிடையாதென்று நினைத்தும், பொருள் நசையால் - செல்வத்தினிடத்து ஆசையினால், தம்மை உணராதார்பின் - தமது குடிப்பிறப்பு முதலியவற்றை அறியாதவர்களின் பின்னே, சென்று நிலை - போய் நிற்பது, கடையே - கடைப்பட்டதே [அதமமாகும்]; (எ - று.)

மனிதர் துறவறம்பூண்டு தவஞ்செய்து வாழ்வது முக்கியமானது; இல்லையாயின் கற்புடையமனைவியோடு இல்லறத்தில் வாழவாவது வேண்டும்; இவ்விரண்டுமில்லாமல் பொருளாசையினால் தம் நிலையை அறியமாட்டாத உலோபிகளைப் பின் தொடர்ந்து யாசிப்பது மிகவும் இழிவு என்பது கருத்து.

இனியார்கண் தங்கல் என்பதற்கு - நற்குணமுடையாரோடு கூடி வாழ்தலென்று உரைப்பாரு மூளர். "புல்லா, அகம்புகுதல் வேண்டுமெனின்பவர்மாட் டல்லான், முகம்புகுதல் லாற்றுமோ மேல்," "அருத்தத்தின் மச்சரிக்கு மறிவிலார்பிறரென்ன, தெருத்திறைஞ்சி நில்லாதாம் மேல்" என்று மேற்கூறியுள்ளதனால், உதாரகுணமுடையோரிடத்து இரப்பது நல்லதென்றும், லோபிகளிடத்து இரப்பது தீயதென்றும் அறிக. 'உணராமாந்தர்-தமது குடியும் குலமும் தன்மையும் முதலான நன்மைகளை யறியாதார்' என்பது, பழைய வுரை. (இ)

உகூ. கல்லாக் கழிப்பர் தலையாயார் நல்லவை
தவ்வாக் கழிப்ப ரிடைகள்—கடைகள்
வினிதுண்ணை மாரப் பெறேமம்மா மென்னு
முளிவினைற் கண்பா டிலர்

(இ - ள்.) தலையாயார்-தலைமையான அறிவையுடையோர் [உத்தமர்], கல்லா-(ஞானநூல்களைக்) கற்று, கழிப்பர்-காலங்கழிப்பர்; இடைகள்-நடுவாயினோர் [மத்திமர்], நல்லவை-தருமவழியாற்கிடைத்த பொருள்களை, தவ்வா-அனுபவித்துக்கொண்டு, கழிப்பர்-காலங்கழிப்பர்; கடைகள்-கீழாயினோர் [அதமர்], 'யாம்-நாம், இனிது உண்ணேம்-இனிமையான உணவுகளை உண்ணப்பெற்றிலோம்: ஆர பெறேம் - (செல்வத்தை) நிரம்பப் பெற்றிலோம்,' என்னும்-என்றுகருதுகின்ற, முளிவினைஞல்-வெறுப்பினால், கண்பாடு இலர் - (இரவிலும்) தூக்கமில்லாமல் வருந்துவர்; (எ - று.)

தத்துவஞானத்திற்கு உரிய நூல்களைக் கற்றுப் பொழுது போக்குவது உத்தமர் தொழில்; ஊழ்வினையாற் கிடைத்தமட்டில் திருப்தியாய்ச் சுகத்தை யனுபவிப்பது மத்திமர் தொழில்; எவ்வளவு கிடைத்தாலும் திருப்தியில்லாமல் செல்வத்திற்காக எக்கங்கொண்டு அலைவது அதமர் தொழில் என்பதாம்.

கல்லா, தவ்வா-செய்யா என்னும் வாய்பாட்டு உடன்பாட்டு இறந்த கால வினையெச்சம். 'உண்ணேம், ஆரப்பெறேம்' என்பன - வெறுப்புக் குறிப்பன. கண்பாடு - கண்படு என்னும் முதனிலை திரிந்த தொழிற் பெயர்; கண்படுதல்-கண்ணுறங்குதல். (ஈ)

கூ௬. செந்நெல்லா லாய செழுமுளை மற்றுமச்
செந்நெல்லே யாகி விளைதலா—லந்நெல்
வயனிறையக் காய்க்கும் வளவய லூர
மகனறிவு தந்தை யறிவு.

(இ - ள்.) செந்நெல்லால் ஆய செழு முளை - செந்நெற்களாலுண்டா கிய செழிப்பான முளைகள், மற்றும்-பின்னும், அ செந்நெல்லே ஆகி விளை தலால் - அந்தச்செந்நெற்பயிராகவேயாய் மேன்மேல் விளைதலினால்,—அ நெல் - அப்படிப்பட்ட செந்நெற்பயிர்கள், வயல் நிறைய காய்க்கும்-கழனி கள் நிறையும்படி விளைகின்ற, வளம்-செழிப்பையுடைய, வயல்-வயல்க ளாற் [மருதநிலத்தாற்] சூழப்பட்ட, ஊர-ஊர்க்கு-ஊரையுடைய பாண்டியரா சனே!—தந்தை அறிவு - தகப்பனது அறிவைவிட, மகன் அறிவு - மகனது அறிவாகும்; (வ - று.)

செந்நெல்லின் முளையிலும் அந்நெல்லே விளைவதுபோல, ஒருகுல த்தில் தந்தை நற்புத்தியுடையனாயிருந்தால் அவன்மகனுக்கும் அவ்வாறே நற்புத்தியுண்டாகு மென்பதாம். தகப்பனறிவைவிட மகனது அறிவென்ற அநுமானித்து அறியப்படு மென்க. மகனது அறிவு இத்தகையதென்ற தகப்பனறிவைக்கொண்டு உய்த்துணரப்படுதலால், இது - **ஏதுவணி**.

"தன்னதே மைந்தனுமாப் பிறக்கிறான்", "மகனுரைக்குந் தந்தைநல் லதை" என்பன, இதற்கு மேற்கோள்களாகக்கூடும். "மேலாகியறிகல்லாத் தம்முறைப் புகழ்கண்முழை. மேலாகியறிப வதுமீண்மாபா - மீளுங்கி, முகனறிவார் முன்ன மறிபவ நுமீண், மகனறிவு தந்தை யறிவு" என்ற **பழமொழிச் செய்யுளிலும்** இச்செய்யுளின் ஈற்றடி பின்வருவதாயிற்று.

செந்நெல்-சாலியென்னுஞ்சிறந்தவொரு சாதி நெல். முளை-விளையு மரும்பெயர். விளைதலால் என்பதில் உள்ள **'ஆல'** உருபு - ஏதுபொருளில் வந்தது. (வ)

கூ௭. மடைப்பெருநீர், செல்வருஞ் சான்றோருங் கைவிட்டுப்
படைப்பெண்டிர் மக்களுங் கீழும் பெருகிக்
கடைக்கா லுலக்கணை போகிக் குடைக்காம்பி னாற்
கீழ்மேலாய் நிற்கு புலகு

(இ - ள்.) உடைய பெருஞ்செல்வருஞ்-விதான நிலைதாட்டிவைத்த பெருஞ் செல்வமுடையவர்களும், சான்றோருஞ்-(கல்வியறிவு நிறைந்த) பெரியவர் களும், விட்டில - (தங்கள் தங்களது நிலைமை) மாறிப்போய், புடை பெண் டிர் மக்களும்-(இழிகுணமுடைய) வைப்பாட்டிகளின் பிள்ளைகளும், கீழும்-(குலமும் அறிவு குணமும் முதலியவற்றிற் குறைந்த) கீழ்மக்களும், பெருகி - (செல்வத்தினால்) மிருந்தியடைந்து,—கடைக்கால் தலைக்கண்ணது ஆகி காற்புறத்தி லிருக்கவேண்டியது தலைப்புறத்தி லிருப்பதாகி, (இவ்வாறு ஆகலினால்),—குடை காம்பினால்-குடையினது காம்புபோல, உலகு-உலக மானது, கீழ் மேல் ஆய்நிற்கும் - கீழ்மையடைதற்கு உரியது மேன்மை யுடையதாக நிற்குந் தன்மையுடையதாகும்: (வ - று.)

பரம்பரையாகப் பெருஞ்செல்வமுடையவர்களும் இயற்கை நற்குண முடையரும் பெரியவர்களும் தமது பெருமை கெட்டுப்போதலும், குலத்திலு மும் குணத்திலுமிகத் தாழ்ந்தவர்கள் பெருஞ்செல்வம் பெற்றுப்

பெருமையுடன் வாழ்தலும், உலகம் கீழ்மேலாவதற்குக் காரணம்: 'இப்படியும் மாறிவிடுகின்றதே!' என உலகவியற்கை நோக்கிப் பிறந்த அநுதாபத்தால் எடுத்துக்கூறியவாறு. "புணர்கடல்சூழ் வையத்துப் புண்ணியமோ வேறே, புணர்வதுடையா திருப்ப வுணர்விலா, வட்டும் வழுதுணையம் போல்வாரும் வாழ்வரே, பட்டுத் துகிலுமுடித்து" என்று கீழ் நன்றியில்செல்வத்து வந்துள்ள செய்யுளோடு இதனை ஒப்பிடுக. குடையைக் கீழே வைக்குமிடத்துக் காம்பு மேலாகவும், குடைப்பகுதி கீழாகவும் இருக்க, பிடிக்கப்படும்போது கவிழ்த்துப்பிடிக்கப்படுவது வழக்கம் என்க.

கெட்டி, பெருகி, ஆகி-இவை காரணப் பொருளனவாய் வந்த செயவெனெச்சங்களின் திரிபுகள். புடைப்பெண்டிர் - பொருள்கொடுப்பார் பக்கல் சாரும் பெண்களனைத்தும் காரணப்பொருளது. கடைக்கால்-அங்குரித்தற்கு உரிய பொருளுக்கு இடவாகுபெயர். (அ)

கூ ஈக இனியார்தங் நெஞ்சத்து நோயுரைப்ப வந்நோய்
தணியாத வுள்ள முடையார்—மணிவரன்றி
வீழு மருவி விறன்மலை நண்ணுட
வாழ்வின் வரைபாய்த னன்று.

(இ - ள்.) மணி வரன்றி - இரத்தினங்களோ வாரிக்கொண்டு, வீழும் வீழுகின்ற, அருவி - நீர்ப்பாய்ச்சல்களையுடைய, விறல் மலை - வெற்றிபெற்ற [பிறர்க் சிறந்த] மலைகளையுடைய, நல் நாட-நல்ல பாண்டியநாட்டாசனே! —இனியார் - நல்ல சிநேகிதர், தம் நெஞ்சத்து நோய் உரைப்ப - தமது மனத்திலுள்ள வருத்தத்தை எடுத்துக்கூறியபிறகும், அ நோய் தணியாத அந்த வருத்தத்தை நீக்கமாட்டாத, உள்ளம்உடையார்-(வலிய) மனமுடையவர்கள், வாழ்வின்-உயிர்வாழுவதைக்காட்டிலும், வரைபாய்தல்-மலையின் மீது ஏறி விழுந்து உயிர்விடுதல், நன்று - நல்லதாம்; (எ - று.)

நல்ல சிநேகிதரது மனத்துன்பத்தை அவர் கூறுமுன்னமே குறிப்பறிந்து "உடுக்கையிழந்தவன் கைபோல வாங்கே, யிடுக்கண் களைவதாம் நட்பு" என்றபடி நீக்கி உதவவேண்டியிருக்க, அவர் எடுத்துக் கூறிய பிறகும் நீக்கமாட்டாத வலிய மனமுடையவர் உயிர்வாழாது வலுவில் உயிர்விடுதலே நல்லது என்பது கருத்து. கண்பாதி தரன்பங்கோர் தணியாமல் உயிர் வாழ்வலிற் பழிபாவங்கள் பெருகுதலால், அதனினும் உயிர்துறத்தலே நல்லதாயிற்று. தம்மால் அத்துன்பத்தை நீக்கக்கூடினும் கூடாவிடினும் அதில் மனஞ்செல்லாத பாவிக ளென்றற்கு, 'தணியாத வுள்ளமுடையார்' என்றார். 'இனியார் தங்நெஞ்சத்து நோயுரைப்ப' என்றதனால், "தோழனெடு மேழமை பேசேல்" என்ற நிலைகடந்த பெருந்துன்பத்தைக் குறித்தவாறு. தணியாத உள்ளமுடையாரோடு வாழ்வதனினும் வரைபாய்தல் நன்று என்ப ஒருசாரார். (கூ)

கூ எ0. புதுப்புனலும் பூங்குழையார் நட்பு மிரண்டும்
விதுப்பற நாடின்வே றல்ல—புதுப்புனலும்
மாரி யறவே யறுமே யவரன்பும்
வாரி யறவே யறும்.

(இ - ள்.) புது புனலும்-புதிய நீர்வெள்ளமும், பூ குழையார் நட்பும்-அழகிய காதணியையுடைய வேசையர்களது சிநேகமும், இரண்டும்-இரண்

டையும், விதுப்பு அற நாடின்-விரைவில்லாமல் [நிதானமாக] ஆராய்ந்து பார்த்தால், வேறுஅல்ல-வேறுபடுவனவல்ல [இரண்டும் ஒருதன்மையுடையனவே]; (எவ்வாறெனின்,—) புது புனல்-புதிய நீர்வெள்ளம், மாரிஅற-மழை நீங்கினால், அறும்-ஒழியும்; அவர் அன்பும்-அவ்வேசையரது சிநேகமும், வாரி அற-(பொருளின்)வருவாய் நீங்கினால், அறும்-ஒழிந்துபோம்.

மழை அதிகமாகப் பொழியும்போது மிக்குப்பெருகி அது நின்ற மாத்திரத்தில் ஒழியும் புதுநீர்ப்பெருக்குப்போல, பொருள் அதிகமாகக் கொடுக்கும்போது அன்புகாட்டி அது நின்ற மாத்திரத்தில் அன்பு குறையுந் தன்மையுடையவர் வேசையர். ஆதலால், அப்படிப்பட்ட வஞ்சனைக் குணமுடையவரோடு கூடிப்பழகுதல் வேண்டாமென்பது கருத்து; **எடுத்துக்காட்டுவமையணி.** அடுத்த அதிகாரத்தின் முதற்செய்யுளும் இக் கருத்துடையதே.

இனி: விதுப்பறநாடின் என்பதற்கு - விருப்பமில்லாமல் ஆராய்ந்து பார்த்தால் என்றும் பொருள்கொள்ளலாம்; ஒரு பொருளை ஆராயும்போது அதனிடத்து விருப்புவெறுப்பின்றி ஆராய்ந்தால்தான் உண்மை விளங்குமென்பது, நூல்துணிபு; "காய்த லுவத்த லகற்றி யொருபொருட்க, ணாய்த லறிவுடையார்க்கண்ணதே - காய்வதன்க, ணுற்றகுணந் தோன்றாது முவப்பதன்கண், குற்றமுந் தோன்றாக கெடும்," "வாரம் பட்டுழித் தீயவு நல்லவாந், தீரக்காய்ந்துழி நல்லவுந் தீயவா, மோரும் வையத்தியற்கை" என்பன காண்க.

பொதுமகளிரது தன்மையைக் கூறும் இசசெய்யுளை இங்கு வைத்தது, இனி வரும் அதிகாரம் இன்னதெனத் தோற்றுவாய் செய்தற் பொருட்டு. (கo)

பொருட்பால் முற்றுப்பெற்றது.

ஏழாவது
காமத்துப்பால்

அஃதாவது - பொருளைத் துணைக்காரணமாகவுடையதாய் இம்மையை மாத்திரமே தருந் தன்மையையுடைய காமத்தைக் கூறும் பாகம்; காமமென்பது, ஒரு காலத்திலே ஒரு பொருளால் சுவை ஒளி ஊறு ஓசை நாற்றமென்னும் ஐம்புலன்களையும் அனுபவித்தற்சிறப்புடைய காமவின் பத்தினை; பலவகைச்சுவைகளுள் இன்பச்சுவை யொன்றனைமாத்திரமே இப்பாலில் மூன்று அதிகாரங்களாலும் மிகுத்துக் கூறுகின்றார்.

இந்தக் காமத்துப்பால் - கூஅ-ஆம் அதிகாரம் இன்பதுன்பவியலென்றும், இறுதி இரண்டு அதிகாரங்கள் இன்பவியலென்றும் இரண்டு உட்பிரிவுகளையுடையதாய் அமைக்கப்பட்டது; "கடையின்ப வகைதான் கருதினிருவகை, யின்பதுன்ப வதிகார மொன்றே, யேனையின்பவதிகார மிரண்டே" என்ற பழைய உரைச்சூத்திரத்தைக் காண்க.

இது, பதுமனாரால் வகுக்கப்பட்ட பாகுபாடு. சில உரையாசிரியர்கள் - இந் நூலின் நாற்பது அதிகாரங்களுள் முதற்பதின்மூன்று அதிகார

ங்களை அறத்துப்பாலாகவும், அடுத்த இருபத்தாறு அதிகாரங்களைப் பொருட்பாலாகவும், இறுதியதிகார மொன்றை மாத்திரம் காமத்துப் பாலாகவும் வகுத்துக் கூறியுள்ளார். பொதுமகளிர் என்ற 38-ஆம் அதிகாரத்து அகப்பொருட்கிளவித்துறை இல்லாமையும், கற்புடைமகளிர் என்ற அதற்கு அடுத்த அதிகாரம் பொதுமகளிர் என்பதற்கு மறுதலையாவதோடு, அதில் ஒவ்வொருபாடலிலும் அகப்பொருட்கிளவித்துறை வாராமையும், இறுதியதிகாரத்து மாத்திரமே எல்லாச் செய்யுளிலும் அகப்பொருட்கிளவித்துறை உள்ளமையும் அவர் அவ்வாறு கொண்டதற்குக் காரணமென்ப.

முதலாவது
இன்பத்துப்பாலியல்

அஃதாவது - ஒருசார் இன்பத்தையும் ஒருசார் துன்பத்தையும் தருவதாகிய தன்மையைக் கூறும் பிரிவு என்பதாம். இது பொதுமகளிரின் சேர்க்கையாலதலால் அவரிண்டு தன்மையையுந் தருவதென்பது வெளிப்படை. ('இன்பத் துன்பவியல்' என்றும் வழங்குவது உண்டு.) இங்கு ஓர் அதிகாரம் தானே ஒரியலாயிற்று.

ஈஅ - ஆம் அதிகாரம்—பொதுமகளிர்

அஃதாவது - தமது நலத்தைப் பொருள்கொடுப்பார்யாவர்க்கும் விற்பதல்லாமல் அதற்கு ஆவார் ஆகாதா என்னும் வரையறையில்லாத மகளிரது இயல்பு; அவர் ஒருவர்க்கே வாழ்க்கைப்படாமல் பொருள் கொடுப்பவர்க்கெல்லாம் வாழ்க்கைப்படுதலால், 'பொதுமகளிர்' எனப்பட்டனர். இவரது தன்மையை முன்னைய அதிகாரத்தின் ஈற்றுச்செய்யுளில் எடுத்துக்கூறித் தோற்றுவாய் செய்தவதனால், அதிகாரமுறைமையை அறிக. இந்தப் பொதுமகளிரின் காமம் ரஸாபாஸமான தாதலால் விரும்பத்தக்க காமமாகாது. திருவள்ளுவர் இக்காரணம்பற்றியே 'வரைவின் மகளிர்' என்ற அதிகாரத்தைப் பொருட்பாலில் வைத்துள்ளார்.

ஈ0ச. விளக்கொளியும் வேசையர் நட்பு மிரண்டுந்
துளக்கற நாடின்வே றல்ல—விளக்கொளியு
நெய்யற்ற கண்ணே யறுமே யவரன்புங்
கையற்ற கண்ணே யறும்.

(இ - ள்.) விளக்கு ஒளியும் - விளக்கினது பிரகாசமும், வேசையர் நட்பும் - பொதுமகளிரது அன்பும், இரண்டும் - ஆகிய இரண்டையும், துளக்கு அற நாடின் - சஞ்சலமில்லாமல் ஆராய்ந்துபார்த்தால், வேறு அல்ல - வேறுவகைப் பட்டனவல்ல [இரண்டும் ஒருதன்மையனவே]: (எவ்வாறெனின்,—) விளக்கு ஒளியும் - விளக்கினது பிரகாசமும், நெய் அற்றகண்ணே - நெய் வற்றிய அப்பொழுதே, அறும் - நீங்கும்: அவர் அன்பும் - அந்தப் பொதுமகளிரது அன்பும், கை அற்ற கண்ணே - கையிற் பொருள்கொடுத்தல் குறைந்தபொழுதே, அறும் - நீங்கிவிடும்.

விளக்கின் பிரகாசம் அதில் விடப்படும் நெய் வற்றியபொழுது நீங்குதல் போலவே, வேசையர்நட்பும் பொருள்வருவாய்அற்றபொழுதேஅற்று

ப்போ மென்பதாம். இதுவும் மேலேச்செய்யுள் போன்றதே. இதனால், உள்ளூர அன்புபாராட்டாத பொதுமகளிரின் போகம் இனியதன்று என்பது, கூறப்பட்டது. 'வேறல்ல' என்பது - காரணம் உள்ளவளவே காரியம் நிகழு மென்றபடி.

வேசையர் - வேர்யா என்பதன் திரிபான வேசையென்பதன் பன்மை. துளக்கு - துளங்கு என்ற முதனிலை திரிந்த தொழிற்பெயர்; துளங்குதல்-சலித்தல். கை என்பது-கைப்பொருளுக்கு ஆகுபெயர். (க)

கூஎஉ. அங்கோட் டகலல்கு லாயிழையா ணம்மொடு
செங்கோடு பாய்துமே யென்றுண்மன்-செங்கோட்டின்
மேற்காண மின்மையான் மேவா தொழிந்தாளே
காற்காலெய் காட்டிக் கலுழ்ந்து.

(இ - ள்.) அம் கோடு அகல் அல்குல் ஆய் இழையாள் - அழகிய பக்கங்களுயர்ந்து அகன்ற அல்குலேயுடையவளும் ஆராய்ந்தணிந்த ஆபரணங்களேயுடையவளுமான பொதுமகள்,—நம்மொடு - நம்மோடுகூட, 'செம்கோடு பாய்தும் - செம்மையான மலேயுச்சியில் ஏறி அதனினின்றும் (நாம் இருவரும் ஒருசேர) வீழுவோம்,' என்றுள் மன் - என்று (எம்மிடத்திற் பொருள் பெறும்போது அன்புகாட்டி) உறுதியாகக் கூறினுள்; காணம் இன்மையால் - (இப்போது எம்மிடத்திற்) பொருளில்லாமையால், செம்கோட்டின்மேல் மேவாது - செம்மையான மலேயுச்சியின்மேல் ஏறி வீழ்தற்கு (நம்முடன்) கூடவராமல், கால் கால்நோய் காட்டி—'எனது காலில் வாதநோய் வந்துள்ளது, அதனால் உடன்வர முடியவில்லே' என்று (பொய்க்காரணஞ் சொல்லிக்) காண்பித்து, கலுழ்ந்து - (பொய்யாகவே) அழுது, ஒழிந்தாள் - (எம்முடன்வராது) நீங்கினுள்; (எ - று.) —இனியாம் பொருள்பெற்றுவந்தால் உடன்வருவாள் போலுமென்பது, குறிப்பு.

'நீ மலேமேல்ஏறி வீழ்ந்தாலும் நானும் உன்னுடன் விழுவேனேயன்றி உன்னேவிட்டு ஒருகணமும் உயிர்பிழைத்திரேன்' என்று என்னிடம் பொருள் பெறும்போது அன்புகாட்டி உறுதி கூறிய பொதுமகள், இப்போது எனக்கு நேர்ந்த பெரியதொரு ஆபத்தினுல் யான் மலேமேலேறி விழும்படி நேரிட, அப்போதும் அவளேபபிரிய மனமில்லாமல் அவளே உடன்வரும்படி நான் அழைத்தபோது, என்னிடம் பொருளில்லாமையால், தனது காலில் நோய்வந்தது காரணமாக உடன்வரக் கூடவில்லே யென்று பொய்க்காரணஞ்சொல்லி அழுது என்னேவிட்டு நீங்கிப் போயினளென்பதாம்; இதனால், பொதுமகளிர் ஆடவர்மீது உள்ளூர அன்புபாராட்டாமல் உழுவலன்புடையவர்போல வெளிக்கு நடித்துப் பொருளேயே பிரதானமாகக்கொண்டு வஞ்சித்து அதனேப் பறிப்பரென்பது கூறப்பட்டது. "அன்பின விழையார் பொருள்விழையுமாய்தொடியா, நின்சொ லிழுக்குத் தரும்" என்னுந் திருக்குறள் இங்கு நோக்கத்தக்கது. "நாவாரவேண்டும் விதஞ் சொல்லுவா ருனே நான் பிரிந்தாற், சாவேனென்றே யிருந்தொக்க வுண்பார்கள் கைதான் வறண்டாற், போய்வாருமென்று நடித்தலேக்கே குட்டும் பூவையர்" என்பதுங் காண்க. செல்வம் பெற்றபோது அன்புடையாள் போன்று கூறிச் செல்வமில்லாதபோது தவறிவிட்டா னென்பதைக் காட்டினமையின், 'மன்' என்னும் இடைச்சொல் - ஒழி

யிசைப்பொருளது; அசையுமாம். பாய்தும்-முன்னிலையை உளப்படுத்திய தன்மைப்பன்மைமுற்று; நீயும் நானும் என்க: இதில், தும் - காலங்காட்டும் விகுதி; இனி 'தும்' விகுதி முன்னிலையையும் படர்க்கையையும் தன்னொடு கூட்டிக்கொள்ளு மாதலால் யானும் நீயும் என்யாயும் ஆயமும் பாய்தும் என்ரு ளென்னலாம். இனி, மூன்ரும்படிக்கு-மலையின்மீது பொருள்கிடையாமையால் உடன்வராமல் உபேட்சித்தாளேயன்றி அங்கும் பொருள் கிடைக்குமாயின் உபேட்சியாது உடன்வருவளென்று கூறுதலுமொன்று. கால் நோய் - இருபெயரொட்டு: 'கால் நோய்' என்றதில், கால் என்றது-தனது பரியாயநாமமாகிய வாயுவென்னுஞ் சொல்லைக் குறிப்பிட, அது-தனது பொருள்களில் ஒன்ரூன வாத மென்னும் நோயை உணர்த்திற்று; இது - **லக்ஷிதலக்ஷணை**; (**கம்பராமாயண**த்தில் கேகயராஜவுபதேசத்தை "மயின்முறைக்குலம்" என்றதும், **சீவகசிந்தாமணி**யில் புத்திசேனனை "திங்கள் விரவியபெயரினன்" என்றதும் இத்தன்மையனவே.) (உ)

கூஎங. அங்கண் விசும்பி னமரர் தொழப்படுஞ்
செங்கண்மா லாயி னுமாகமன்—றங்கைக்
கொடுப்பதொன் றில்லாரைக் கொய்தளிர் கண்ணர்
விடுப்பர்தம் கையாற் றொழுது.

(இ - ள்.) அம் கண் விசும்பின்-அழகிய இடமகன்ற வானுலகத்திலுள்ள, அமரர் - தேவர்களால், தொழப்படும் - வணங்கப்படுகின்ற, செம்கண் மால் ஆயினும் ஆக - சிவந்தகண்களையுடைய திருமாலேயானாலும் ஆகட்டும், தம் கை கொடுப்பது ஒன்று இல்லாரை-தமது கையிற் கொடுக்கும்படியான பொருள் சிறிதுமில்லாதவரை, கொய் தளிர் அன்ஞர் - கொய்யத்தக்க தளிர்போன்ற உடம்பின் நிறத்தையுடைய பொதுமகளிர், தம் கையால் தொழுது - தமதுகைகளாற் கும்பிட்டு வணங்கி, விடுப்பர்-அனுப்பிவிடுவார்கள்; (எ - று.)

மிக்கபெருமை அழகு முதலிய குணங்கள் வாய்ந்தவராயினும் பொருளில்லாதவரைப் பொதுமகளிர் போக்குச் சொல்லி அனுப்பிவிடுவார்களே யன்றி அவரைச் சேரா ரென்பது கருத்து. இதனால், கொடுப்பாரை விரும்பாமல் பொருளையே விரும்பும் பொதுமகளிரது இரசமறியாத்தன்மையை எடுத்துக்காட்டினர்.

'அமரர் தொழப்படும்' 'செங்கண்' என்ற அடைமொழிகள் கொடுத்துக் கூறியவதனால், திருமாலுக்கு மேன்மையும் அழகுமிகுதியும் கூறியவாரும். மோஹத்தை யுண்டாக்குபவ னென்பார் 'செங்கண்மால்' என்ரூர். செங்கண்மால் - இந்திரன் எனினுமாம். அமரர் - அமிருத முண்டதனால் மரணமில்லாதவ ரெனத் தேவர்க்குக் காரணக்குறி. மன் - அசை. வனப்பு போதும் பிறப்பு தொழில் முதலியன வேண்டாரென்பது எஞ்சி நிற்றலால், 'மன்' ஒழியிசை எனினுமாம். தம் கைக்கொடுப்பது என்பதற்கு-தமது கையாற் கொடுக்கும் பொருளென்று கூறினும் பொருந்தும். (கூ)

கூஎச. ஆணமி னெஞ்சத் தணிநீலக் கண்ணர்க்குக்
காணமில் லாதார் கடவுளையர்—காணவே
செக்கூர்ந்து கொண்டாருஞ் செய்த பொருளுடையா
ரக்கார மன்ன ரவர்க்கு.

(இ - ள்) காண-ஆலோசித்துப்பார்க்குமிடத்து,—ஆணம் இல் நெஞ்சத்து - அன்பில்லாத மனத்தையுடைய, அணி நீலம் கண்ணார்க்கு-அழகிய கருங்குவளைமலர்போன்ற கண்களையுடைய பொதுமகளிர்க்கு, காணம் இல்லாதார் - பொருளில்லாதவர், (அழகுமுதலியவற்றாற் சிறந்தோராயினும்), கடு அனையர்-விஷம்போலப் பிரியமில்லாதவராவர்; செக்கு ஊர்ந்து கொண்டாரும் - செக்கு ஆதலாகிய இழிதொழிலுடையவராயினும், செய்த பொருள் உடையார் - தேடிய செல்வமுடையவரே, அவர்க்கு-அப் பொதுமகளிர்க்கு, அக்காரம் அன்னர் - சர்க்கரைபோலப் பிரியமுடையவராவர்; (எ - று.)

பொருளொன்றனையே முக்கியமாகக்கொள்ளுந் தன்மைய ராதல் பற்றிப் பொதுமகளிர் பொருளில்லாதாரை விஷத்துக்கு ஒப்பாகவும், பொருளுள்ளவரைச் சர்க்கரைக்கு ஒப்பாகவும் பார்ப்ப ராதலால், அவரது போகம் வெறுக்கத்தக்கது என்பதாம்.

"இழிபவ ருயர்ந்தோர் மூத்தோ ரிளையவர் கழியாநோயாற், கழிபவர் யாவரேனுங் கண்வலைப்பட்டு நெஞ்ச, மழிபவர் பொருள்கொண் டெள்ளுக் கெண்ணெய்போ லளந்து காட்டிப், பழிபடுபோகம் விற்பார்" எனப் பிறர் கூறியது, இங்குப் பின்னிரண்டடிக்கு ஒப்புநோக்கத்தக்கது.

'காண' என்பதை முன்னும் பின்னும் கூட்டிக்கொள்க; **இடைநிலைத் தீவகம்.** இனி, காண என்பதை 'செக்கூர்ந்து கொண்டாரும்' என்பதனோடு இயைத்து, உலகத்தார்யாவரும் காணும்படி செக்கு ஆடுந் தொழில் செய்தவராயினும் என்று பொருள் கூறினும் பொருந்தும். 'செக்கூர்ந்து கொண்டானுஞ் செய்த பொருளுடையார்' என்ற பாடத்திற்கு - செக்கு ஆடியாவது தேடிய பொருளையுடையவ ரென்க. நீலம்-பண்பாகுபெயர். ஆணும்=ஆயினும்; மரூஉ. (சு)

கூளடு. பாம்பிற் கொருதலை காட்டி யொருதலை
தேம்படு தெண்கயத்து மீன்காட்டு—மாங்கு
மலங்கன்ன செய்கை மகளிர்தோள் சேர்வார்
விலங்கன்ன வெள்ளறி வினர்.

(இ - ள்.) பாம்பிற்கு ஒரு தலைகாட்டி-(தன்னைப் பிடிக்கவரும்) பாம்புக்கு ஒருபுறத்தைக் காண்பித்து, ஒரு தலை-மற்றொருபுறத்தை, தேம் படு தெள் கயத்து மீன் காட்டும் - இனிமைபொருந்திய தெளிந்த நீரையுடைய தடாகத்திலுள்ள மீனுக்குக் காண்பிக்குந் தன்மையையுடைய, மலங்கு அன்ன - விலாங்குமீனைப்போன்ற, செய்கை - (பலரிடத்தும் அன்புகாட்டுந்) தொழிலையுடைய, மகளிர் - பொதுமகளிரது, தோள் - தோள்களை, விலங்கு அன்ன வெள் அறிவினர்-மிருகத்தை யொத்த பகுத்தறிவில்லாத மூடர்கள், சேர்வார் - சேர்வார்கள்; (எ - று.)

'மலங்கன்ன செய்கை' என்பது - அவரவர்க்கு வேற்றுமை காட்டாமல் இனமாகச் சேர்ந்து நின்று அன்பு காட்டுதலால், பாம்பு காணும்போது பாம்பு போலவும், மீன் காணும்போது மீன்போலவும் வடிவு கொள்ளும் மலங்குமீனைப்போல அவரவர்க்கு ஏற்றபடி ஒழுகிப் பலர்க்கும் ஆசைகாட்டி மயக்கும் பொதுமகளிரை, அறிவில்லாதவர் சேர்வரேயன்றி

அறிவுடையார் சேரமாட்டாரென்பதாம். பொதுமகளிர்க்கு மலங்குமீன் தொழில்பற்றிய உவமம். அவர்கள் செய்யும் வஞ்சனை தெரிந்தால் அவரது இன்பம் வெறுக்கப்படுமென்பது, குறிப்பு. அவ்வஞ்சனையை அறியாமட்டாமல் அவர்களின் தோளைச் சேர்பவரை 'வெள்ளறிவினர்' என்றார். வெள்அறிவு-சாரமற்ற அறிவு. வெண்மையென்பது சாரமின்மையென்னும் பொருளதாய், அறிவுமுதிராமைமேல் நிற்பதை, "வெண்மை யெனப்படுவதி யாதெனிஞெண்மை, யுடையம்யாமென்னுஞ் செருக்கு" எனத் திருக்குறளிலும், "வெண்மையுடையார் விழுச்செல்வ மெய்தியக்கால்"என இந் நூலிலும், "வெண்மையில்லை பல்கேள்வியுமேவலால்", "வெள்ளியையாதல் விளம்பினை"எனக் கம்பராமாயணத்திலுங் காண்க. வெள்ளறிவுஎன்றல் வழக்கு.

மீன்காட்டும் - நான்காம்வேற்றுமைத்தொகை. ஆங்கு - அசை. (இ)

ஈஅஅ. பொத்தநூற் கல்லும் புணர்பிரியா வன்றிலும்போ
னித்தலு நம்மைப் பிரியல மென்றுரைத்த
பொற்றொடியும் போர்த்தகர்க்கோ டாயிஞாண்னெஞ்சே
நிற்றியோ போதியோ நீ.

(இ - ள்.) நல் நெஞ்சே - (எனது) நல்ல மனமே!—பொத்த நூல் கல்லும் - தூளைக்கப்பட்ட [உட்டுளையுடைய] நூலிற் கோத்த இரத்தினத்தையும், புணர் பிரியா அன்றிலும்-கூடியிருத்தல் பிரியாத அன்றிற்பறவைகளையும், போல்-போல, நித்தலும்-எப்பொழுதும், நம்மை பிரியலம்-நம்மை விட்டுப் பிரியமாட்டோம், என்று உரைத்த - என்று (முன்பெல்லாம்) உறுதி கூறியிருந்த, பொன் தொடியும் - பொன்னிஞலாகிய வளையல்களையுடைய பொதுமகளும், (இப்போது), போர் தகர் கோடு ஆயிஞள் - போர்செய்யுந் தன்மையுள்ள ஆட்டுக்கடாவின் கொம்புபோல [மாறுபாடாகிய] குண முடையவளாயிஞள்; (அவள் அவ்வாறான பிறகும்), நீ -, நிற்றியோ - (அவளிடத்தில்) நிற்பாயோ? (அல்லது), போதியோ- (என்னுடன்) வருவாயோ? (சொல்); (எ - று.)

நூலும் மணியும் போலவும், இரட்டையாகிய அன்றிற்பறவைகள் போலவும் எப்பொழுதும் இணைபிரியாமலிருப்பேனேயல்லது சற்றும் உன்னை விட்டுப் பிரியேனென்று செல்வமுள்ளகாலத்தில் உறுதி கூறியிருந்த பொதுமகள், செல்வம்வறண்ட இப்பொழுது சண்டைசெய்யும் ஆட்டுக் கடாவின் கொம்பு பிற்பட்டு முறுக்குடன் வளைந்திருப்பதுபோல முன் சொன்னதற்கு விரோதமாகக் குணம்மாறிவிட்டாள்; அவள் குணம் திரிந்த பிறகும் அவளுடன் இணங்கி நடப்பது நல்லதன் றென்று ஒருவர் தமதுமனத்திற்கு நல்லறிவுகூறிய வாய்பாடுஉடையதாக இச்செய்யுள் செய்யப்பட்டதென அறிக. வேசையர் வழிச்செல்லாமல் மனத்தை வசப்படுத்த வேண்டுமென்பது, கருத்து. நூலும் மணியும் இரட்டையன்றிற் பறவைகளும் இணைபிரியாமல் உடனுறைதற்கு உவமம். பொத்துதல்-தூளைத்தல்: கோத்தலுமாம்.

அன்றிலென்பது - ஒருபறவை; அது, எப்பொழுதும் ஆணும் பெண்ணும் இணைபிரியாது நிற்கும். கணப்பொழுது ஒன்றை ஒன்று விட்டுப்பிரிந்தாலும் அத்துயரத்தைப்பொறுமல் ஒன்றையொன்று இரண்டுமூன்றுதரம்

கத்திக்கூவி அதன்பின்பும் தன் துணையைக் கூடாவிடின் உடனே இறந்து படும். இதனை, வடநூலார் க்ரௌஞ்சம் என்பர். தகர்க்கோடாதல்-பின்பு திருகி நிற்றல். போர்புரியுந்தன்மையையும், முறுக்குண்ட கோட்டையு முடையது. தகர் [ஆட்டுக்கடா] என்பதை "தகர் மருப்பேய்ப்பச் சுற்றுபு சுரிந்த," "அருகோடி நீங்காது அணைதலு மின்றித், திரிகோட்ட மாவினியச் சீறிப் - பொருகளம், புக்குமயங்கப் பொருது புறவாயை, நக்கு மாம் நல்ல தகர்" என்பவற்று ளறிக. இனி, பொத்த நூற்கல் என்பதற்கு-நூலிற்கூறியபடி யமைந்த கடையும் சாணைக்கல் என்று பொருள் கொண்டு, அக்கல்லில் இரத்தினங்களைத் தேய்க்கும்போது மணலும் கூடத்தேய்வதுபோல, அவன் கெட்டபொழுது தானும் உடன்கெடவும், அவன் வாழ்ந்தபொழுது தானும் உடன்வாழவும் இவ்வாறு வஞ்சனையாகக் கொண்டுள்ள பொதுமகளிரது மனத்திண்மைக்கு உவமைப்படுத்திக் கூறுவாரு முளர். பொத்த-பொத்து என்னும் முதனிலைத் தொழிற்பெயரினடியாப் பிறந்த குறிப்புப் பெயரெச்ச மென்னலாம். பிரியலம் - தன்மைப்பன்மை யெதிர்மறை முற்று. பொன்தொடி - வேற்றுமைத்தொகை யன்மொழி. (சு)

கூஎஎ. ஆமாபோ னக்கி யவர்கைப் பொருள்கொண்டு
சேமாபோற் குப்புறூஉஞ் சில்லுக்க ணன்பினை
யேமாந் தெமதென் றிருந்தார் பெறுபவே
தாமாம் பலரா னகை.

(இ - ள்) ஆமா போல் - காட்டுப்பசுவைப்போல, நக்கி - (முதலில் இன்ப முண்டாகப்) பரிசித்து, அவர் கை பொருள் கொண்டு - தம்மிடம் கூடியவர்களது கையிலுள்ள செல்வத்தைக் கவர்ந்துகொண்டு, (பிறகு), சேமா போல் - எருதைப்போல, குப்புறும் - கவிழ்ந்துபடுத்துக்கொள்ளுகின்ற, சில்லுக்கண் - தாழ்ந்தநடத்தையுடைய பொதுமகளினிடத்தில், அன்பினை-ஆசையை, ஏமாந்து - மயங்கி, எமது என்று இருந்தார்-எமக்கே உரியது என்று (மோகத்தினால் நம்பி) இருந்தவர்,—பலரால்-பலராலும், நகை பெறுப - அவமதிப்பைப்பெறுவர்; (எ-று.)—தாம், ஆம்-அசைகள்.

காட்டுப்பசு உடம்பை நக்கினால் அப்பொழுது சுகமாயிருந்து பின்பு விஷம்போல மரணத்தை விளைக்குமென்பர்; அன்றியும், காட்டுப்பசு பிறர்க்கு இன்பமுண்டாம்படி முதலில் நாவினால் அவருடலை நக்கி அவர்க்குத் தம் பக்கல் நம்பிக்கையையுண்டாக்கிப்பிறகு அவர் அஜாக்கிரதையாயிருக்கின்ற சமயம் பார்த்து முட்டிக் கொல்வது போல, பொதுமகளிரும் தம்மிடம்வந்த ஆடவரை இன்பமுற ஆலிங்கனம் முதலியவற்றைச் செய்து நம்பிக்கைகாட்டி அவர் கைப்பொருள் பறித்துக்கொண்டு அவர் ஏமாந்த சமயத்தில் உழவுக்கு உதவாமல் படுத்துக்கொள்ளும் எருதைப்போலக் கவிழ்ந்து மோசஞ்செய்துவிடுவார்களாதலால், அவர்கள் நடித்துக் காட்டும் பொய்யன்பை நம்புகின்றவர்கள் பலராலும்பழிக்கப்படுவார்களென்பதாம். அவ்வேசையரது அன்பு தற்காலத்தில் மகிழ்ச்சியைச் செய்தாலும் பின்பு பழிப்புக்கிடமான பல தீமைகளைத் தருமென்பது, கருத்து. உவமையணி.

சேமா - எருதாகிய விலங்கு என இருபெயரொட்டு. சில்லு - தூர்த்த [தியொழுக்கமுடையாள்]; இனி, சில்லுக்கண் என்பதற்கு-சிள்

வண்டுபோன்ற கண்களை யுடையாள் என அன்மொழித்தொகையாகப் பொருள் கொண்டு, வண்டு தேனுள்ள விடத்திற் சென்று அதனைக் கவர்ந்து நீங்குதல்போல, செல்வமுடையாரிடத்துச்சென்று அவாசெல்வத்தைப் பறித்துக்கொண்டு செல்லுந் தன்மையுடையாளென்று கூறுவாருமுளர். கண் என்றது, அப்போதைய உள்நாட்டத்தை. குப்புறுதல்-குதித்தோடுதலுமாம். (எ)

ஈளஅ. ஏமாந்த போழ்தி னினியார்போன் றின்னராய்த்
தாமார்ந்த போதே தகர்க்கோடா—மாலைக்கிற்
றங்நெறிப் பெண்டிர் தடமுலை சேராரே
செங்நெறிச் சேர்துமென் பார்.

(இ - ள்.) செம் நெறி சேர்தும் என்பார் - செவ்வியவழியை [நல்ல முத்திமார்க்கத்தை]ச் சேர்வோ மென்று கருதுவோர்,—ஏமாந்த போழ்தின் - (காமுகராலே பொருள் பெற்று) மன முவந்த போது, இனியார் போன்று-அன்புள்ளவர்களைப்போல விருந்து, தாம் ஆர்ந்த போது-தாம் அவர் பொருளை யெல்லாம் உண்டபின், இன்னர் ஆய்-(வறியரான அவரிடத்தில் தானே) அன்பில்லாதவராய், தகர் கோடு ஆம்-ஆட்டுக்கடாவின் கொம்பைப்போ லாகும்படியான, மான் நோக்கின் - மான்போன்ற பார்வையையுடைய, தம் நெறி பெண்டிர்-தமக்குரிய களவுவழியில் தவறுதலடக்கும் பொதுமகளிருடைய, தட முலை - பெரிய தனங்களை, சேரார் - அடையமாட்டார்கள்; (எ - று.)

ஏமாந்தபோது - காமுகர் மோகவலையிற் சிக்கி மயங்கியபோது எனினுமாம். காமுகர் தமதுமோகவலையிற் சிக்கி மயங்கிய போது அவர் பொருளைப் பறிப்பதற்கு அன்புடையார்போன்றிருந்து, அவர் பொருளைக் கவர்ந்தபின் மாறுபடுகின்ற பொதுமகளிரது இன்பத்தைப் பெரியோர் விரும்பிச் சேரமாட்டாரென்பது கருத்து. தாம் விரும்பிப் பற்றும் செந்நெறிக்கு அவரது இன்பம் மறுதலை யாதலின் சேரா ரென்பதாம். "பொருட் பொருளார் புன்னலந் தோயா ரருட்பொரு ளாயுமறிவினவர்", "பொதுநலத்தார் புன்னலந் தோயார் மதி நலத்தின், மாண்ட வறிவினவர்" என்றார் **திருக்குறளிலும்.**

ஆர்தல் - விரும்புதலு மாம். தம்நெறிப்பெண்டிர் - ஒருவருக்கும் வசப்படாமல் தமது மனப்போக்கின்படியே செல்கின்றவர் என்றுமாம். செந்நெறி - செவ்வையாகிய வீட்டுநெறி. (அ)

ஈளக. ஊறுசெய் நெஞ்சந்தம் முள்ளடக்கி யொண்ணுதலார்
தேற மொழிந்த மொழிகேட்டுத்—தேறி
யெமரென்று கொள்வாருங் கொள்பவே யார்க்குந்
தமரல்லர் தம்முடம்பி னர்.

(இ - ள்.) ஒள் நுதலார் - பிரகாசமான நெற்றியையுடைய பொதுமகளிர், ஊறுசெய் நெஞ்சம்-(பிறர்க்குத்) துன்பஞ்செய்யும்படியான தமது ஒண்ணத்தை, தம் உள் அடக்கி-(பிறர் அறியவொட்டாமல்) தமக்குள்ளே

மறைத்துவைத்துக்கொண்டு, தேற - (கேட்டு) நிச்சயமென்று நம்பும்படி, மொழிந்த - சொல்லிய, மொழி - பசப்புவார்த்தைகளை, கேட்டு—, தேறி-நம்பிக்கைகொண்டு, எமர் என்று கொள்வாரும் - (அந்தப்பொதுமகளிரை) இவர் எம்மைச்சேர்ந்தவரென்று நினைப்பவர்களும், கொள்ப - அவ்வாறே நினைக்கட்டும்: (அந்தப்பொது மகளிரோ), யார்க்கும் - எப்படிப்பட்டவர்க்கும், தமர் அல்லர் - உரியவராகார்: தம் உடம்பினுள் - (பிறர்க்கு உரிமையன்றித்) தமக்கே உரிய உடம்பையுடையவராவர்; (எ -று.)

தமதுவஞ்சனையை வெளிக்காட்டாமல் நல்லவர்களைப்போல நம்பும்படி பேசவல்ல வேசையரை நற்குணமுடையவ ரென்று நினைப்பவர்கள் நினைக்கட்டும்; அவர்கள் வாய்ப்பேச்சினுல் மாத்திரம் அவ்வாறுவரே யன்றித் தமது உடம்பைப் பிறர்க்கு வசப்படுத்தாமல் தமக்கே வசமாக்கி வைத்துள்ளவரென்று கருதத்தக்கவ ரென்பதாம். உடம்பினுள் - குறிப்பு முற்று. (கூ)

கூ அ. உள்ள மொருவ னுழையதா வொண்ணுதலார்
கள்ளத்தாற் செய்யுங் கருத்தெல்லாம்—தெள்ளி
யறிந்த விடத்து மறியாராம் பாவஞ்
செறிந்த வுடம்பி னவர்.

(இ - ள்) உள்ளம் ஒருவன் உழையது ஆ-(தமது) மனம் ஒருவனிடத்திலிருக்க, ஒள் நுதலார் - விளக்கமான நெற்றியையுடைய பொதுமகளிர், கள்ளத்தால் செய்யும் - கபடமாக (அன்புடையார்போன்று) செய்கிற, கருத்து எல்லாம் - நினைவுமுழுவதையும், தெள்ளி அறிந்த இடத்தும் - தெளிவாக ஆராய்ந்தறிந்தபோதும், பாவம் செறிந்த உடம்பினவர் - தீவினை மிகுதியையுடைய உடம்பை யுடையவர் [பாவிகள்], அறியார் - உண்மை யறியமாட்டார்கள்; (எ - று.)

தமது மனம் ஒருவர்மேல் நிற்க மற்றொருவர்மேல் அன்புற்றவர் போல நடிக்கும் பொதுமகளிரது வஞ்சனைக்கருத்தை நன்றாக அறிந்தாலும் பாவிகட்கு அவர்கள்மீதே அன்புசெல்லுமென்பது, கருத்து. இதனால், பொதுமகளிர் இருமனப்பெண்டிரென்றும், உருவுசொல்செயல்களால் வஞ்சிப்பது அவர்க்குச் சாதிதருமமென்றும் பெறப்பட்டது. இங்ஙனப் பாவம் என்றது, முற்பிறப்புக்களிற் செய்த தீவினைகளால் மனம் தெளிவடையாதிருத்தலை. "இருமனப்பெண்டிருங் கள்ளுங் கவறுந், திரு நீக்கப்பட்டார் தொடர்பு" என்ற திருக்குறளிற் கூறியவாறு பிளவுபட்ட மனமுடைய பொதுமகளிரிடம் பற்றுச்செல்லுதலினாலேயே அவர் தீவினையுடையாரென்று அறியப்படு மென்க. ஆம் - அசை. (கO)

இரண்டாவது

இன்பவியல்

அஃதாவது - முழுவதும் மனத்திற்கு இன்பத்தையே கொடுக்கும் பகுதி என்று பொருள். இது கற்புடைமகளிரைப்பற்றிய தாதலின், இன்பமே தருவதென்பது வெளிப்படை. திருவள்ளுவர் வாழ்க்கைத் துணை யென்றது, இந்தத் கற்புடை மகளிரையே: இவரைப்பற்றி, வாழ்க் கைத்துணைநலம் என்ற ஓரதிகாரத்தைத் திருவள்ளுவர் அறத்துப் பாலில் வைத்துள்ளார். பொருட்பாலில் 'இன்பவியல்' என்று ஒன்று இருப்பதனால், இந்தக் காமத்துப்பாலில் வரும் இன்பவியல், கடையின்ப வியல் எனப்படு மென்ப. இவ்வதிகாரமும், அடுத்த அதிகாரமும் இவ் வியலிற் சேர்ந்தவை.

ஙஉ - ஆம் அதிகாரம்.—கற்புடைமகளிர்.

அஃதாவது - பதிவிரதைகளின் தன்மை. நாணம் மடம் அச்சம் பயிர்ப்பு என்னும் மகடூஉக்குணம் நான்களேடும் பாதிவிரதியத்தையு முடையவர், கற்புடைமகளிர். (கற்பாவது - கணவனைத் தெய்வமென்று உணர்வதோர் மேற்கோள் ; பதிவிரதாதருமம். 'கொண்டானிற் சிறந்த தெய்வமில்லை' யென்றும், 'அவனுக்கு இன்னவாறு நீ குற்றேவல் செய் தொழுகு' என்றும் தாய்தந்தையாலும் பிறராலும் கற்பிக்கப்பட்டு இவ் வொழுக்கம் உண்டாகி நிலைபெறுதலால், கற்பு எனப் பெயர்பெற்றது.) செந்நெறிச் செல்வார்க்குத் துணையாகாத தீயொழுக்கமுள்ள பொதுமகளி ரது இன்பம் வெறுக்கத்தக்கது என்று அவரியல்பு கூறினவர். இனி, செந்நெறிச் செல்வார்க்குத் துணையாகும் கற்புடைமகளிரது இன்பம் அறத்திற்குப் பொருந்திய காரணமாக விரும்பத்தக்க தென்பதை அறி வித்தற்கு அவரியல்பு கூறுகின்றார்: அதனால், இது, பொதுமகளிர் என்ற அதிகாரத்தின்பின் வைக்கப்பட்டது.

ஙஅக. அரும்பெறற் கற்பி னயிராணி யன்ன
பெரும்பெயர்ப் பெண்டி ரெனினும்—விரும்பிப்
பெறுநசையாற் பின்னிற்பா ரின்மையே பேணு
நறுநுதலா ணன்மைத் துணை.

(இ - ள்) அரும் பெறல் கற்பின் - பெறுதற்கரிய பதிவிரதா தருமத் தையுடைய, அயிராணி அன்ன-இந்திராணியைப்போன்ற, பெரும்பெயர்-பெரிய கீர்த்தியையுடைய, பெண்டிர் எனினும்-பெண்களாயினும், பெறும் நசையால் - (தன்னைப்) பெற்று அனுபவிக்கவேண்டுமென்னும் ஆசையால், விரும்பி - விருப்பங்கொண்டு, பின் நிற்பார் இன்மையே-தனது பின்னே நிற்கும் ஆடவரில்லாமையாகிய நற்குணத்தையே, பேணும் - வீரதமாகக் கொண்டொழுகுந் தன்மையுள்ள, நறுநுதலாள்-அழகிய நெற்றியையுடைய பெண்ணே, நன்மை துணை - (தனது கணவனுக்கு) நன்மை பொருந்திய துணையாவாள் ; (எ - று.)

மிகச்சிறந்தவளாயினும், தன்னைச் சேரவேண்டுமென்று விருப்பங் கொள்ளும் பரபுருஷர்க்குச் சிறிதும் இடங்கொடாது ஒழுகுபவளே, தனது கணவனுக்கு உற்ற துணையாவ ளென்பதாம். இனி, மிக சிறப்

கணவனும் பெண்டிரேயானாலும் பரபுருஷனுற் காதலிக்கப்படாதவளே புடைய க்குத் துணையாகும் உத்தமபத்தினி யெனப் பொருள் காணலாம். காவிரி நீராடி வருகின்ற மருதியென்பாளைக் ககந்தன் மகனுன காந்தமன் காதலித்து அழைத்தானுக, அவள் அஞ்சிக் கலங்கி "ஞாலத்து மழைவளந்தருஉம், பெண்டிராயிற் பிறர் நெஞ்சுட்புகார்" என்று கூறினுளென மணிமேகலையில் வருவது இங்குக் காணத்தக்கது. (இதுவே தமிழரினெழுக்கவகை யென்ப.) பெண்ணின் குறிப்பை நோக் காமல் எவனும் ஒருத்தியின் பின்னே நிற்கமாட்டானுகையால், 'பின்னிற் பார்' என்றுர். அயிராணி-தேவேந்திரன் மனைவி: இவளை இங்கே உவமை கூறியதற்குக் காரணம், நகுஷன் புதிதாக இந்திரபதவிபெற்றுத் தன்னை விரும்பி யணுகியபோதும் தனது பழைய கணவனுகிய இந்திரனையே யன்றி அவனை விரும்பாது கற்புநெறியில் நின்று ளாதலின். 'பெரும் பெயர்' என்பது, பெரும்புகழ்; அதாவது-தான் வாழும் ஊரார் கற்புடை மையால் தன்னைப் புகழ்ந்து கூறுவது. கற்புடைய மனைவி தான் பிறந்த குலத்தார்க்கும் புகுந்த குலத்தார்க்கும் நற்கதி யுண்டாக்குதலால், அத் தகைய பெண்ணைப் பொதுவாக 'நறு நுதலாள் நன்மைத்துணை' என்று ரெனினுமாம்; இத்தன்மையை, "கற்பு மேய கனங்குழை மாதரைப், பெற்றுளோர்த மரபும் பெருந்தவக், கற்பினுட்கொண்ட காதலனுருயிர்ச், சுற்றம் யாவுந் துறக்கத்தினெய்துமால்" என்னுஞ் செய்யுளால் அறிக. (க)

கூடலூ. குடநீரட் டுண்ணு மிடுக்கட் பொழுதுங்
கடனீ ரறவுண்ணுங் கேளிர் வரினுங்
கடனீர்மை கையாறுக் கொள்ளு மடமொழி
மாதர் மனைமாட்சி யாள்.

(இ-ள்.) குடம் நீர் அட்டு உண்ணும் இடுக்கண் பொழுதும்-ஒரு குடத்து நீரைக் காய்ச்சி உண்ணும்படியான [நீரையேயன்றி உண்பதற்கு உரிய பொருளொன்றும் அகப்படாத] வறுமைத்துன்பம் வந்தகாலத்தும், கடல் நீர் அற உண்ணும் கேளிர் வரினும்-கடலின் நீரே வற்றும்படி உண் ணத்தக்க [மிகப் பெருங் கூட்டமான] சுற்றத்தார் வந்தாலும், கடன் நீர்மை-(தனது) கடமையாகிய குணங்களையே, கையாறு ஆ கொள்ளும்-ஒழுக்க நெறியாகக் கொள்ளுகின்ற, மடமொழி மாதர்-இசமான இன் சொற்களையுடைய பெண்ணே, மனை மாட்சியாள்-இல்லறவாழ்க்கைக் குத் தக்க பெருமையுடையவளாவள்; (எ-று.)

சுற்றத்தவர் பலர் வந்தாலும் தனது கணவன் வறுமைப் பட்டாலும் மனஞ்சோராது தனது கடமைகளைத் தவருது நடத்துபவளே இல்வாழ்க் கைக்குரிய மனைவியாவ ளென்பதாம். **மனைவிக்குக் கடமையாவன**-துறந்த வரை உபசரித்தலும், விருந்தோம்பலும், சுற்றந்தழுவுதலும், வறியவ ரிடத்து அருளுடைமையும், வாழ்க்கைக்கு வேண்டும் பொருள்களைத் தேர்ந்து காப்பாற்றிவைத்தலும், உண்டி சமைத்தல் வல்லமையும், உபகா ரஞ் செய்தலும் முதலியவையாம். இடுக்கண் என்பது, அதற்குக் காரண மான வறுமையைக் குறித்தது; **உபசாரவழக்கு**. முதலடி-வறுமை மிகுதியையும், இரண்டாமடி-உறவினர் மிகுதியையும் குறிப்பன. (உ)

௫அ௯. நாலாறு மாறுய் நனிசிறிதா யெப்புறனு
மேலாறு மேலுறை சோரினு—மேலாய
வல்லாளாய் வாழூர் தற்புகழு மாண்கற்பி
னில்லா ளமர்ந்ததே யில்.

(இ - ள்.) நால் ஆறும் ஆறு ஆய்-நான்குபக்கங்களிலும் வழியையுடைய தாகியும்,—நனி சிறிது ஆய் - மிகச்சிறியதாகியும்,—எ புறனும் - எல்லாப் பக்கங்களிலும், மேல் ஆறு - மேல்வழியினின்று, மேல் - தன்மேல், உறை சோரினும் - மழைநீர் பெருகிவழிந்தாலும், மேல் ஆய வல்லாள் ஆய் - சிறந்த தருமங்களைச் செய்ய வல்லவளாய், வாழும் ஊர் - தான் வாழுகின்ற ஊரிலுள்ளார், தன் புகழும் - தன்னைப் புகழும்படியான, மாண் கற்பின் - மாட்சிமைப்பட்ட பதிவிரதாதருமத்தையுடைய, இல் லாள் - மனைவி, அமர்ந்ததே - பொருந்தப்பெற்றதே, இல் - வீடாகும்.

நான்கு பக்கங்களிலும் வழியையுடையதாய் மிகச்சிறியதாய் மழை மேலே கொட்டுமாறு எங்கும் ஒழுக்கலெடுத்த வீடாயிருந்தாலும் தனது நல்லொழுக்கத்திற் சிறிதுங் குறையாத புகழ்பெற்ற கற்பினையுடைய மனைவி பொருந்தப்பெற்ற வீடாயின் அதுவே வீடென்று சிறப்பித்துச் சொல்லத்தக்க தென்றவாறு.

எப்புறனும் மேலாறு மேலுறை சோர்தல்-வீட்டின் கட்டுக்கோப்புக் குலைந்து மழைநீர் ஒழுகப்பெறுதல். வறுமையால் நன்கு கட்டப்படாத தென்பதை விளக்க 'நாலாறு மாறுய்.....சோரினும்' என்றது. வாழும் ஊர் தற்புகழ்தல்—"தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகை சான்ற, சொற்காத்துச் சோர்விலாள் பெண்" என்னுந் திருக்குறளின் பரிமேலழகருரையில் 'தன்மாட்டுப் புகழாவது-'வாழும் ஊர் கற்பால் தன்னைப் புகழ்வது' என்றது காண்க. இதனால், எவ்வளவு வறுமைக் காலத்திலும் தனக்கு உரிய நல்லொழுக்கத்திற் குறையாது கற்புநெறியில் நிற்பவளே சிறந்த பெண் என்பது பெறப்படும். "கழிவினும்" (தொல். கற். 12) என்ற சூத்திரத்தில் இவ்வெண்பாவை நச்சினார்க்கினியர் விருந்து புறந்தருதலுமா மென்றனர். (௫)

௫அ௰. கட்கினியாள் காதலன் காதல் வகைபுனைவா
ளுட்குடையா ளூரா னியல்பிலு—ளுட்கி
யிடனறிந் தூடி யினிதி னுணரு
மடமொழி மாதரா ளப்பெண்.

(இ - ள்.) கட்கு இனியாள் - கண்ணுக்கு இனிய உருவமுடையவ ளாகியும்,—காதலன் காதல் வகை புனைவாள் - (தனது) கணவனது ஆசையின்படி (தன்னை) அலங்கரித்துக் கொள்பவளாகியும்,—உட்கு உடையாள் - அச்சமுடையவளாகியும், - ஊரான் இயல்பிலுள் - உப காரியாந் தன்மையுடையவளாகியும்,— உட்கி - (தனது கணவ னிடத்து) அஞ்சி, இடன் அறிந்து - சமயமறிந்து, ஊடி - (அவனோடு) பிணங்கி, இனிதின் உணரும் - இன்பமுண்டாம்படி உடனேயறிந்து ஊடல்தீர்கின்ற, மடமொழி மாதராள் - கபடமில்லாத இன்சொற்களை யுடையவளாகியுமிருப்பவளே, பெண் - மனைவியாவாள்; (எ - று.)

முகக்கோட்டம் கடுகடுப்பு முதலிய துர்க்குணங்களில்லாமல் பார்ப்பதற்கு இனிய தோற்றமும், தனது கணவனிஷ்டப்படி தன்னை யலங்கரித்துக் கொள்ளுதலும், செய்யத்தகாத காரியங்களில் அஞ்சி விலகுதலும், பர புருடரிடத்தில் நாணங்கொள்ளுதலும் ஊடலையும்

கூடலையும் உரிய சமயங்களிற் கொள்ளுதலும் - கற்புடைய மனைவியின் குணங்க ளென்பதாம். "கழிவினும் வரவினும்" என்ற தொல்காப்பியச் (கற்பியல்-12) சூத்திரத்தில் இச்செய்யுளை உதாரணங காட்டி, 'கட்கினி யாள்-இதுகாமம் :வகை புனைவாள்—இது கற்பு : உட்குடையாள்-இஃது ஒழுக்கம் : ஊராண்மை—இது சுற்றமோம்பல் : ஊடியுணர்தல் - இது அல்லவை கடிதல்' என்றனர் நச்சினார்க்கினியர். ஊராணியல்பு-ஊராண் மையாகிய இயல்பு : இரு பெயரொட்டு.

ஊர்நாணியல்பினுள் என்ற பாடத்திற்கு - தான் வாழும் ஊரிலுள் ளார் தன்னைக்கண்டு வெட்கமடையும்படியான சிறந்த நல்லொழுக்கமுடை யாளென்க. உவப்பிற்கு ஏதுவாதலால் 'இடனறிந்து ஊடி' என்றும், அவ்வூடலைத் தணித்துக்கொள்ளாமல் நீட்டித்தல் வெறுப்பைத்தருமாத லின் 'இனிதினுணரும்' என்றுங் கூறினர். ஊடலாவது - இன்பநிலை யில் அவ்வின்பத்தை மிகுவிக்குமாறு ஆடவர்மீது மகளிர் கோபித்தல். இங்ஙனம் விளையாட்டுவகையாற் கலவியிற் கொள்ளும் பிணக்கு, புலவி யெனவும்படும்; ப்ரணயகலஹ மென்பது, இதற்கு ஏற்ற வடமொழி. இதன் முதிர்ந்த நிலைமை, துனியெனப்படும்.

"ஊடலுணர்தல் புணர்த லிவைகாமங, கூடியார் பெற்ற பயன்" "ஊடிப்பெறுகுவங் கொல்லோ நுதல்வெயர்ப்பக், கூடலிற் ரோன்றிய வுப்பு" என்னுந் திருக்குறள்கள் இங்குக் கவனிக்கத்தக்கன. (சு)

கூஅரு. எஞ்ஞான்று மெங்கணவ ரெந்தோண்மேற் சேர்ந்தெழினு மஞ்ஞான்று கண்டேம்போ லுணுதுமா—லெஞ்ஞான்று மென்னே கெழீஇயினர் கொல்லோ பொருணசையாற் பன்மார்பு சேர்ந்தொழுகு வார்.

(இ - ள்.) எ ஞான்றும் - எந்தநாளும், எம் கணவர் - எமது தலை வர், எம் தோள்மேல் சேர்ந்து எழினும் - எம்முடைய தோள்களில் அணைந்து எழுந்தாலும் [தினந்தோறும் கூடி இன்பமனுபவித்தாலும்],— அ ஞான்று - (புதிதாக மணஞ்செய்துகொண்ட) அக்காலத்தில், கண் டேம்போல் - (யாம்) கண்டதுபோல, நாணுதும் - (அவரிடம் இப்பொழு தும்) நாணமடைகின்றோம் ; (இவ்வாறு இருக்க),—எ ஞான்றும் - எந் நாளும், பொருள் நசையால் - பொருளாசையால், பல் மார்பு சேர்ந்து ஒழுகுவார் - பலரது மார்புகளைச் சேர்ந்து நடக்கின்ற பொதுமகளிர், கெழீஇயினர் - (நம் கணவரிடம் நாணமின்றி) உரியராயிருக்கின்றனர் ; என்னே கொல் ஓ - இது என்ன தன்மையோ ! (எ - று.)

நாம் எமது கணவரிடத்தில் எப்பொழுதும் கூடிப்பழகினாலும் அவரை முதலிற்கண்டபோது எவ்வாறு நாணினோமோ அவ்வாறே இப் பொழுதும் நாணவேண்டியிருக்கின்றது ; இப்படியிருக்க, பொருளாசை யாற் பலபுருடரைச் சேரும் பொதுமகளிர் சிறிதும் நாணமில்லாமல் நம் கணவரைச் சொந்தமாகக் கையாளுகின்றார்களே ; இது என்ன ! என்க. பொதுமகளிரைப் போல நாணமில்லாமல் குலமகளிர் நடவாரென்பதாம். ஒரு குலமகள் பொதுமகளிரின் நாணமின்மையை நோக்கிவியந்து கூறிய வாறு. இனி இச்செய்யுளைப் பரத்தையரோடுகூடிப்பிரிந்து வந்த தலைமகன் தலைவியோடு தன்னைச் சேர்ப்பிக்குமாறு தோழியை வாயில்வேண்ட, மறுத்துக் கூறியதாகக் கருத்துக் காணலுமாம்.

உண்மையறிவை யுண்டாக்கும் நீதிநூல்களில் அகப்பொருட் கிளவித் துறைகளை இடையிடையே கூறுதல் கவிசமயமாதலை இலக்கி

யங்கள் கொண்டு உணர்க. சிருங்கார ரசப்பிரதானமான அகப்பொருட் கிளவித் துறைகளே ஞானமுண்டாதற்குக் காரணமாகிய நீதி நூல்களிற் கூறுதற்குக் காரணம், கடித்தின்ஞதானைக் கட்டிபூசிக் கடித்தின்பிப்பார் போலச் சிற்றின்பங் கூறும் வகையாற் பேரின்பத்தைக் காட்டி நாட்டுதல் என்பர். கெழீஇயினர் - கெழுவினர்; சொல்லிசையளபெடை. ஆல், கொல் - அசைகள். (ஙு)

[தலைவன் தலைவியுரிமையை வியந்து கூறல்.]

ஙஉஅ. உள்ளத் துணர்வுடையா ஞெகிய நூலற்ருல்
வள்ளன்மை பூண்டான்க ணெண்பொரு—டெள்ளிய
வாண்மகன் கையி லயில்வா ளனைத்தரோ
நாணுடையாள் பெற்ற நலம்.

(இ - ள்.) நாண் உடையாள் - நாணமுடைய குலமகள் [என் தலைவி], பெற்ற - அடைந்துள்ள, நலம் - அழகிய தன்மைகள், - உள்ளத்து உணர்வு உடையான் - மனத்தில்கல்லறிவுடையவன், ஓதிய -கற்றறிந்த, நூல்அற்று - நூலேயும் போலும்; வள்ளன்மை பூண்டான்கண் - ஈகைத்தன்மையை மேற்கொண்டவனிடத்திலுள்ள, ஒள் பொருள் - மிக்க செல்வத்தையும், (அற்று) - போலும்; தெள்ளிய ஆண் மகன் - தேர்ந் தெடுக்கப்பட்ட (மிகச் சிறந்த) வீரபுருஷனது, கையில் - கையிலுள்ள, அயில் வாள் அனைத்து - கூரிய வாளாயுதத்தையும் போலும்; (எ - று.) —ஆல், அரோ - ஈறற்சைகள்.

கற்புடைய குலமகளுக்கு இல்லறத்தை இனிது நடத்த நேர்ந்த நன்மைகள் - தெளிந்த அறிவுடையான் கற்ற நூல் போலவும், கொடையாளிக்குக் கிடைத்த செல்வம் போலவும், சுத்தவீரன் கையிற் பிடித்த ஆயுதம் போலவும் பெருமையடையுமென்க. தொல். பொ-146-இல் "அஞ்சவந்த உரிமைக் கண்ணும்" என்னும்பகுதிக்கு இப்பாடலே உதாரணங் காட்டி, இதனுள் நலமென்றது—(இல்லறம் நிகழ்த்துமாறு தன்மனத்தாற் பலவகையாகக் காணலும், பிறர்க்குத் தான் கொடுத்தலும், கற்புச் சிறத்தலும் என்ற) இம்மூன்றினையும் என்றும், தலைவி இல்லறப்பகுதியை நிகழ்த்துமாறு பலவகையாகக் காணுந் தன்மை - உணர்வுடையா ஞெகிய நூல் விரியுமாறு போல விரியா நின்றதெனவும், இவள் கொடை நலம் - வள்ளன்மை பூண்டான் பொருளனைத்தெனவும், இவளது கற்புச் சிறப்பு - பிறர்க்கு அச்சஞ் செய்தலின் வாளனைத்தெனவும் உரைத்து, தலைவன் தலைமகளுரிமைகளே வியந்து கூறியவாறு என்றனர் நச்சினர்க்கினியர்.

முதலடியிலுள்ள 'அற்று' என்பதை இரண்டாமடியிலும் 'ஒண் பொருளற்று' என்று கூட்டிப் பொருள் காண்க. நாண் என்பது - மடம், அச்சம், பயிர்ப்பு என்னும் மற்றை மகடூஉக் குணங்கட்கும் உபலக்ஷணம் என்னலாம். இவை ஆறு செய்யுள்களாலும், கற்புடை மகளிர்க்கு உரிய இயற்கைநற்குணங்கள் பொதுவாக எடுத்துக் கூறப்பட்டன. (சு)

[பரத்தையிற் பிரிந்துவந்த தலைமகனிடம் தலைவி புலந்து கூறியது.]

ஙஉஎ. கருங்கொள்ளுஞ் செங்கொள்ளுந் தூணிப் பதக்கென்
றிருருங்கொப்பக் கொண்டானூர—னெருங்கொவ்வா
நன்னுதலார்த் தோய்ந்த வரைமார்ப னீராடா
தென்னையுந் தோய வரும்.

(இ - ள்.) ஊரன் - சிற்றூரிலுள்ளாரெருவன், கருங்கொள்ளும் - கறுத்த கொள்ளேயும், செம் கொள்ளும் - சிவந்த கொள்ளேயும், ஒருங்கு ஒப்ப - (இவ்விரண்டிற்குமுள்ள வேற்றுமையைக் கருதாது) ஒரு நிகராக, தூணிபதக்கு என்று-(ஒன்றற்குச் சிறப்புக் கொடாமல்) தூணிப் பதக்கு என்னும் ஒரே அளவாக, கொண்டான் ஆம் - வாங்கிக்கொண்டானும்; (அது போலவே),--ஒருங்கு ஒவ்வா - முழுவதும் ஒத்திராத, நல் நுதலார் - அழகிய நெற்றியையுடைய பொதுமகளிரை, தோய்ந்த - அனுபவித்த, வரை மார்பன் - மலேபோன்ற மார்பையுடைய (எனது) கணவன், நீர் ஆடாது - ஸ்நானஞ் செய்யாமல், என்னேயும் தோய வரும் - (குல மகளாகிய) என்னேயும் அனுபவிக்க வருகின்றான்; (இது என்ன அநீதி!)

பகுத்தறிவில்லாத நாட்டுப்புறத்தானெருவன் கருங்கொள் செங் கொள் என்னுமிரண்டனது வேறுபாடு கருதாமல் இரண்டையும் ஒரே விலேக்கு ஒரே யளவாக வாங்கிக்கொண்டாற்போல, பொதுமகளேயும் குலமகளேயும் வேற்றுமைகருதாது என் தலேவன் பொதுமகளேப் புணர்ந்தபடியே என்னேயும் அனுபவிக்கவருவது தகுதியன்றென்று பிணங்கிக் கூறின ளென்பதாம். பொதுமகளிர் உன்னேயனுபவித்ததனல், அவர் மிசசிலாகிய நினது மார்பினேப் பொருந்தேனென்பது, குறிப்பு; "பெண்ணியலா ரெல்லாரும் கண்ணிற் பொதுவுண்பார், நண்ணேன் பரத்தநின் மார்பு" என்ற திருக்குறள் இங்கு நோக்கத் தக்கது.

உபமானத்தில் கருங்கொள்ளேயும் செங்கொள்ளேயும் ஒரு நிகராகக் கருதியமை கூறியதனல், உபமேயத்தில் பொதுமகளிர்க்கு உரிய தாழ்வையும், குலமகளிர்க்கு உரிய உயர்வையும் கருதாமை வெளிப்படும். 'ஒருங் கொவ்வா நன்னுதலார்' என்றது, கற்பு நாண் முதலாகிய நற்குணங்களில்லாமையால், பொதுமகளிர்க்கு உள்ளது பெண்ணுயிருக்குந் தன்மை மாத்திரமே யென்னுங் கருத்தால், தூணி, பதக்கு - முகத்தலளவைப் பெயர்கள். தூணி - நான்கு மரக்கால்; பதக்கு - இரண்டு மரக்கால். 'ஆம்' என்பது - இங்கு அலட்சியந் தோன்ற நின்றது; "கைத்தோடுஞ் சிறை கற்போயை, வைத்தோனின்னுயிர் வாழ்வானும், பொய்த்தோர் வில்லிகள் போவாராம், இத்தோ டொப்பதி யாதுண்டே" எனக் கம்ப ராமாயணத்திலும் காண்க. நன்னுதலார்த் தோய்ந்த - "இயல்பின் விகாரம்." 'வரைமார்பின்' என்றும் பாடம். வரைமார்பு-உத்தம விலக்கண மாகிய கோடுகளே யுடைய மார்பு எனினுமாம். (எ)

[தலேவனது வாயிலாகப் பாணன் வர அவனே நோக்கித் தலேவி நகையாடிக் கூறியது.]

நகஅ. கொடியவை கூறுதி பாணநீ கூறி
னடிபைய விட்டொதுங்கிச் சென்று—துடியி
னிடக்கண் ணனேயம்யா மூரற் கதனல்
வலக்கண் ணனேயார்க் குரை.

(இ - ள்.) யாம்—, ஊரற்கு - தலே மகனுக்கு, துடியின் இடக்கண் அனேயம் - உடுக்கையினது இடப்பக்கத்தைப் போலப் பயன்படாதிருக்கின்றேம்; அதனல்—, பாண - பாணனே!—கொடியவை கூறுதி - (தலேவனேப் பற்றிய) கொடுமையான சொற்களே (எம்மிடம் கூறுகின்றாய்; அங்ஙன்) சொல்லாதே; நீ கூறின் - (அப்படிப்பட்ட சொற்களே) நீ சொல்வதாயிருந்தால், பைய அடி விட்டு ஒதுங்கி சென்று - (நீ) மெதுவாக இவ்விடம்விட்டு அப்புறம்போய், வலக்கண் அனேயார்க்கு - (அந்த

உடுக்கையின்) வலப்பக்கத்தைப்போலப் பயன்படும் மகளிர்க்கு, உரை - சொல்வாயாக; (எ - று.)

தலைமகனுக்கு வாயிலாவார் பன்னிருவருள் பாணன் ஒருவன். [வாயிலாவது - தலைவனுக்கும் தலைவிக்கும் இடை நின்று கூட்டுவிக்குந் தூது.] பாணன்-பாட்டுப்பாடுகின்ற ஓர்இழிகுலத்தான்; இவன், தலைவன் தலைவிகளுக்குத் தூதுசெல்வது உண்டு. ('பாணன் - நெஞ்சிலன்றிக்கே யிருக்கப் பண்ணுந் தோத்திரமொழியுடையான்' என்பர்.) தலைமகன் வாயில்பெற்றுப் புகுந்ததை யறியாது, வாயிலாகவந்த பாணனிடம் தலை மகள் ஈகையாடிச் சொல்லியது இது. தலைவியை யூடல்தணிவித்துத்தலை மகனுடன் கூட்ட எண்ணிய பாணன் தலைமகனுடைய கொடுமையைக் கூற, அவன்கருத்தினையறிந்த தலைவி, தான் முன்னரே ஊடல் நீங்கித் தலைவனைக் கூடினமை தோன்ற, 'நீ என்னிடம் தலைவன் கொடுமை கூற வேண்டா; நான் அது கேட்டுப் பொறுத்திரேன்: இப்போது நீ மெல்லச் சென்று பரத்தையை யணுகி அங்கு அத்தலைவன் இல்லாமையால், கூறு வாயென்றாளென்க. தலைமகன் கொடுமையைப் பிறர் கூறக்கேட்டுத் தலைவிபொறாது இயற்படமொழிதலியல்பாதலின், இவ்வாறு கூறினாள். தனது தலைவன் பிரிந்து பரத்தையரிடஞ்செல்வதைப் பாணன் தன்னி டம் வந்துகூற, தலைவி அது கேட்கப்பொறாமல் 'பயன்படாத என்னி டம் நீ இதனைச் சொல்லவேண்டாம்: பயன்படும் பரத்தையரிடம் சொல்' என்று வருந்திக்கூறின ளென்பாருமுளர். தனக்கும் தலைமகளுக்கும் வேற்றுமை கருதாது பாணனை நோக்கித் தோழி கூறியதுமாம். உடுக் கைக்கு வலப்பககம் அடிபட்டுப் பயன் படுதலும், இடப்பக்கம் அடிபட் டுப் பயன்படாமையும் கருதி இவ்வுவமை கூறப்பட்டது. கண் - அடிக்குமிடம். கூறுதி - எவலொருமை யெகிர்மறைமுற்று.

இவ்வதிகாரத்து ஈற்றுச்செய்யுள் இங்கு நோக்கத்தக்கது. (அ)

['பரத்தையிற்பிரிந்துவந்ததலைமகனுடு நீ புலவாமைக்குக் காரணம் என் ?' என்ற தோழிக்குத் தலைவி சொல்லியது.]

ஈஅக. சாய்ப்பறிக்க நீர்திகழுந் தண்வய லூரன்மீ
தீப்பறக்க நொந்தேனும் யானேமற்—றீப்பறக்கத்
தாக்கி முலைபொருத தண்சாந் தணியகல
நோக்கி யிருந்தேனும் யான்.

(இ - ள்.) சாய் பறிக்க-(நீரொழுக்கிற்கு இடையூறுயிருந்த) கோரை யைப் பிடுங்கியெறிந்த மாத்திரத்தில், நீர் திகழும்-தண்ணீர் தடையின்றி யொழுகப்பெற்ற, தண் வயல் - குளிர்ச்சியான கழனிகள் சூழ்ந்த, ஊரன் மீது-ஊர்களையுடையவனை (எனது) தலைவன்மேல், (முன்பு), ஈ பறக்க-(ஒரு பெண்) ஈயானது பறந்து வந்து உட்கார்ந்தாலும், நொந்தேனும் - மனம் பொறாமல் ஊடிப்புலந்தவளும், யானே—; மன் - (அது) கழிந்தது: (இப்போது), தீ பறக்க - நெருப்புப்பொறி பறக்கும்படி, முலை தாக்கி பொருத - (பொதுமகளிர் தமது) தனங்களினால் தாக்கிப் போர் செய்த [தழுவி இன்பமனுபவித்த], தண் சாந்து அணி அகலம் - குளிர்ச்சியான கலவைச்சந்தனத்தை யணிந்த (அத்தலைவனது) மார்பை, நோக்கி—, இருந்தேனும் - பொறுத்திருப்பவளும், யான் - யானே; (எ - று.)

முன்பெல்லாம் தலைவன்மேல் பெண்ணீயானது பறந்தாலும் பொறு மல் ஊடிந்தன்மையளான நான், இப்போது வேசையர் தமது முலை ளெழுங்கப்புல்லி யின்பமனுபவித்த அத்தலைவனது மார்பைக் கண்டும்

புலவாமல் நிற்கின்றேன்: இதற்குக் காரணம் யான் புலந்தே நிற்பின் தலைவன் என்னை யகன்று பரத்தையர்மாட்டுச் செல்லுதலும் கூடுமென்ற அச்சமே யென்றவாறு: இது, புலவி பொருளாகத் தோன்றியது: "பிணங்கல் சாலா அச்சம் (தொல். பொ. 256)" என்றமையான் இஃது அமைந்தது. இதனால், குலமகளிர் தமதுதலைவர் பொதுமகளிரைக் கூடியவழியும் அவரை அலட்சியஞ் செய்யாதிருக்கவேண்டு மென்பது பெறப்படும்.

சாய் - ஒருவகைக்கோரை. 'சாய்பறிக்க நீர்நிகழுந் தண்வயலூரன்' என்றது, நீர்வளமிகுதியைக் குறிக்கும். இத்தொடர், என்மேல் அன்பு செய்தற்குத் தடையாயிருந்த புலவியை யான் நீக்கவே, அத்தலைமகன் பெரிதுந் தலையளி செய்தானென்ற பொருளைக் குறிப்பிக்கும். முன் கொள்ளும் புலவி கழிந்தது என்ற பொருளை தெரிவித்தலால், 'மன்' - கழிவுப்பொருளது. நொந்தேன், இருந்தேன் - வினையாலணையும்பெயர்கள். பறக்க என்பதன் பின், சிறப்பும்மை விகாரத்தால்தொக்கது. (கூ)

[தலைவி பாணனெடு வெகுளல்.]

நகூ0. அரும்பவிழ் தாரிஞ னெம்மருளு மென்று
பெரும்பொய் யுரையாதி பாண—கரும்பின்
கடைக்கண் ணனையதா மூரற் கதனு
லிடைக்கண் ணனையார்க் குரை.

(இ - ள்.) பாண - பாணனே!—'அரும்பு அவிழ் தாரினன்-பூவரும்புகள் மலரப்பெற்ற மாலையை யணிந்த தலைவன், எம் அருளும் - எமக்கு அருள்செய்வான்', என்று—, பெரும் பொய் உரையாதி - பெரிய பொய் வார்த்தைகளைச் சொல்லாதே; (ஏனெனில்,—) நாம்—, ஊரற்கு - தலைவனுக்கு, கரும்பின் கடைக்கண் அனையம் - கரும்பினது கடைசியிலுள்ள கணுக்களை யொத்திருக்கின்றோம்; அதனால்—, (இப்பேச்சை), இடைக்கண் அனையார்க்கு உரை - (அக்கரும்பினது) இடையிலுள்ள கணுக்களை யொத்த பரத்தையர்க்குச சொல்வாயாக; (எ - று.)

தலைமகளைப் பிரிந்துசென்று பரத்தையைக்கூடிநின்ற தலைமகன், மீண்டு தலைமகளிடம் வருமளவில், அவன் செய்கையை அறிந்து சினங்கொண்ட அத்தலைமகள் தலைவன்வரவை ஏற்றுக் கொள்ளாது மறுக்க, அதனால் வருத்தமுற்ற அத்தலைமகன் அவட்குச் சமாதானங்கூறி அவளைக் கோபந்தணித்தற்பொருட்டு ஒருபாணனை அவள்பக்கல் அனுப்ப, அவன் அங்ஙனமே வந்து தலைவியைநோக்கி 'நீ மறுத்தலால் நினது தலைவர் நின்மனைக்கு வரக்கூசி நின்றார்; அவர் நின்மீது மிக்க காதலையுடையர்' என்பனபோன்ற சில நயப்புரைகளை எடுத்துக்கூற, அது கேட்ட தலைவி அவனைப் பரிகசித்து வெகுண்டு கூறியது இது வென அறிக.

கரும்பின் கடைக்கணுக்களைப்போன்று அவனுக்கு உருசி குறைந்துள்ள எம்மிடத்தில் தலைவன் அன்புடையனுயுள்ளா னென்று பொய் சொல்லாதே; கரும்பின் இடைக்கணுக்களைப் போன்று அவனுக்கு உருசி மிகுந்துள்ள பரத்தையரிடம் இப்பேச்சைச் சொல்வா யென்று பாணனை நோக்கித் தலைவி கூறியது இது. கரும்பின் கடைக்கணுக்களில் இனிப்பின்மையும் இடைக் கணுக்களில் இனிப்புண்மையும் வெளிப்படை. கடைக்கண் இடைக்கண் என்பவற்றிற்கு - கணுவின் கடைப்பகுதி, கணுவின் இடைப்பகுதி என்று பொருள் கொள்ளலுமாம். (க0)

ச0 - ஆம் அதிகாரம்.—காமநுதலியல்.

அஃதாவது - காமவின்பத்தின் பகுதிகளைக் குறித்துச் சொல்லுகின்ற பிரிவு என்பதாம். நுதலுதல் - குறித்துக் கூறுதல். இழிகுண முடைய பரத்தையரன்றிக் குலமகளிரது இன்பம் சிறத்தலால், அதனை இவ்வதிகாரத்திற் சிறப்பித்துக் கூறுகின்றன ரென்று அறிக. அதிகார முறைமையும் இதனுலே விளங்கும். இனி, இயல் என்பதற்கு - இலக்கண மென்று கொண்டு, இன்பமுறைமையைக் கூறும் இலக்கண மென்றும் பொருள் கூறுவர்.

[தலைமகற்கு வாயில் நேர்ந்த தோழி, தலைமகள் புலவி நீங்கச் சொல்லியது]

நூகூக. முயங்காக்காற் பாயும் பசலைமற் றூடி-
யுயங்காக்கா லுப்பின்றூங் காமம்—வயங்கோத
நில்லாத் திரையலைக்கு நீள்கழித் தண்சேர்ப்ப
புல்லாப் புலப்பதோ ராறு.

(இ - ள்.) வயங்கு - விளங்குகின்ற, ஓதம் - கடலானது, நில்லா - நிலையா யிராமல், திரை அலைக்கும் - அலைகளால் மோதுகின்ற, நீள் கழி - நீண்ட கழிகளினது, தண் - குளிர்ந்த, சேர்ப்ப - கரையையுடைய அரசனே!—முயங்காக்கால் - கூடா விட்டால், பசலை பாயும் - (பிரிவுத் துன்ப மிருதியால்) நிற வேறுபாடு (உடம்பில்) மிக்குப் பரவும்; ஊடி உயங்காக்கால் - ஊடல்கொண்டு வருந்தாவிட்டால், காமம் உப்பு இன்று ஆம் - காமநுகர்ச்சி இன்பமுடையதாகாது; (ஆதலால்), புல்லா புலப்பது - (முதலிற்) கூடி(ப் பிறகு) ஊடுவது, ஓர் ஆறு - (காமநுகர்ச்சியில் சுவையுண்டாதற்கு) ஒரு வழியாம்; (எ - று.)

தலைவனும் தலைவியும் கூடாவிட்டால் உடம்பிற் பசலை யுண்டாகின்றது; ஊடல் கொள்ளாமல் எப்பொழுதும் சேர்ந்தேயிருந்தால் காமத்தில் சுவையுண்டாதலில்லை; ஆதலால், கூடுவதும் ஊடுவதும் காமநுகர்ச்சிக்கு அழகு என்பதாம். "உப்பமைந்தற்றூற் புலவி", "துனியும் புலவியு மில்லாயிற் காமங், கனியுங் கருக்காயு மற்று," "ஊட லுணர்தல் புணர்தலிவைகாமங், கூடியார் பெற்ற பயன்" என்னுந் **திருக்குறள்கள்** நோக்கத்தக்கன. ஒருபடியாக நில்லாத அலைகள் மாறிமாறி அலைத்தலால் கழி சிறப்புறுதல்போல் ஊடலாதல் கூடலாதல் ஒருபடியாக அன்றி மாறிமாறிச செய்தல் காமத்திற்குச் சிறப்பாகின்றதென்பது, விளியிற் பெறப்படும் தொகைமொழி. இனி, இச்செய்யுள் தலைமகளூடல் நீக்கிக் கூடிய தலைமகன் பேருவகையனுய்த் தன்னுள்ளே சொல்லியதுமாம்; இதில் ஊடலின் கண்ணே உவகை பிறத்தலின், ஊடலுவகையாம்.

வாயில் நேர்தல்-வாயிலாயிருத்தற்கு உடன்படுதல். புலவி-புலத்தல்; ஊடுதல். பசலை-தலைவனைப் பிரிந்த துன்பத்தினுல் தலைமகளது உடம்பிலுண்டாகும் நிறவேறுபாடு. உப்பு என்பது - இனுகு, இனிமையென்னும் பொருளில் வந்தது. இங்கு 'பசலை' என்பது - துயிலின்மை, உடம்பு மெலிதல், எல்லாவற்றிலும்வெறுப்பு முதலியவற்றிற்கும் **உபலக்ஷணம்.** மற்று - அசை. (க)

[பருவங்கண்டு ஆற்றுளாகிய தலைவி தோழிக்குச் சொல்லியது.]

நூகூஉ. தம்மமர் காதலர் தாரூ ழணியகலம்
விம்ம முயங்குந் துணையில்லார்க்—கிம்மெனப்

பெய்ய வெழிலி முழங்குந் திசையெல்லா
நெய்த லறைந்தன்ன நீர்த்து.

(இ - ள்.) தம் அமர் காதலர் - தம்மிடத்து விருப்பமுடைய தலைவ ரது, தார் சூழ் அணி அகலம் - மாலையை யணிந்த அழகிய மார்பை, விம்ம முயங்கும் - (மகிழ்ச்சியினால்) பூரிக்கும்படி தழுவுதற்கு உரிய, துணை - தலைவரை, இல்லார்க்கு - இல்லாத [பிரிந்த] மகளிர்க்கு,—இம்மென - இம்மென்னும் ஓசையோடு, பெய்ய - மழைபொழியும்படி, எழிலி முழங் கும் - மேகங்கள் கர்ச்சிக்கின்ற, திசை எல்லாம் - திக்குக்களிலெல்லாம், (அம்முழக்கம்), நெய்தல் அறைந்து அன்ன நீர்த்து - சாப்பறையடித்தாற் போன்ற தன்மை யுடையதாம்; (எ - று.) - மிகுதியும் வருத்தந்தரு மென்பதாம்.

கார்காலத்திலே மீண்டு வருவேனென்று காலங்குறித்து வினை மேலாவது பொருளீட்டவாவது பிரிந்து சென்ற தலைமகன் அக்காலம் வந்தும் வாராததனால், காலத்தை நோக்கித் தலைமகள் ஆற்றாது வருந்திக் கூறியது இது. சேர்தற்கு உரிய காலத்தில் தனது தலைவனைச் சேரப் பெறாது வருந்தும் ஆற்றாமையும், எவ்வகைத் தாபத்தையுந் தணிக்கவல்ல நீர்கொண்ட மேகம் தனது நிலைமை மாறி இப்பொழுது தன்னை வருத்து கின்ற கொடுமையும், தலைவி இரங்குதற்குக் காரணமாயின வென்க. கார்காலத்து மேக முழக்கம் - காமோத்தீபகப் பொருள்களில் ஒன்று. இம்மென - ஒலிக் குறிப்பு. நெய்தல் - சாப்பறை. (உ)

[தலைமகள் செலவுடன்படாமையைத் தலைமகற்குத் தோழி சொல்லியது.]

கூகூஙூ. கம்மஞ்செய் மாக்கள் கருவி யொடுக்கிய
மம்மர்கொண் மாலை மலராய்ந்து பூத்தொடுப்பாள்
கைம்மாலை யிட்டுக் கலுழ்ந்தா டுணையில்லார்க்
கிம்மாலை யென்செய்வ தென்று.

(இ - ள்.) கம்மம் செய் மாக்கள் - கம்மியத்தொழிலைச் செய்கின்ற மனிதர் [கம்மாளர்], கருவி - (தமது) ஆயுதங்களை, ஒடுக்கிய - (வேலை யில்லாமல்) அடங்கச் செய்த, மம்மர் கொள் மாலை - மயக்கத்தைக் கொண்ட மாலைப் பொழுதில், மலர் ஆய்ந்து பூ தொடுப்பாள் - மலர்களை ஆராய்ந்தெடுத்து அவற்றைக்கொண்டு மாலைதொடுப்பவளாகிய தலை மகள்,—'துணை இல்லார்க்கு - தலைமகனைப் பிரிந்த மகளிர்க்கு, இ மாலை என் செய்வது - இந்த மலர்மாலை யாது பயனபடும்? என்று—, கை மாலை இட்டு -(தனது) கையிலுள்ள மலர்மாலையைப் போகட்டு, கலுழ்ந் தாள் - மனங்கலங்கி யழுதாள்; (எ - று.)

தலைமகள் மாலைப்பொழுதில் நல்ல மலர்களை மாலையாகத் தொடுக் கும்போது தலைமகன் பிரிந்து செல்வதைத் தோழியால் அறிந்து அவளை நோக்கி 'எனதுநாயகனுக்கு என்று அன்போடு கட்டும் இம்மலர்மாலை அவரில்லாதபோது எதற்கும் பயன்படாதே!' என்று மனங்கலங்கி யழுத னளாக, அதைத் தோழிதலைமகற்குக்கூறியது, இது. "காலையரும்பிப் பக லெல்லாம் போதாகி, மாலை மலரு மிந்நோய்" என்றபடி சேர்க்கைக்கு உரிய காலமாகிய இரவின் தொடக்கமான மாலைப்பொழுது, பிரிந் தார்க்கு அத்துயரை மிகுவிக்கு மென்க; இதுபற்றியே, 'மம்மர்கொள் மாலை' என்றார். மம்மர் - காமக் களிப்பு.

கம்மாளர் பகல்முழுதும் வேலைசெய்து மாலைப்பொழுது வந்தவுடன் வேலையொழிவ ராதலின், மாலைப்பொழுதுக்கு 'கம்மஞ்செய் மாக்கள் கருவியொடுக்கிய' என்னும் அடைமொழி கொடுக்கப்பட்டது ; "ஓலைக் கணக்கரொலியடங்கு புன்செக்கர் மாலைப்பொழுது" என்று பின்வருவ தும் இது போன்றதே. இது, பகலெல்லாம் வருந்தி வேலைசெய்யுங் கம்மியரும் வேலையை நிறுத்தித் தம்தம் நாயகியரிடம் செல்லுங் கால மென்பதைக் குறிக்கும். (ரூ)

[விளைமுற்றி மீண்ட தலைமகன் பாகன்கேட்பச் சொல்லியது.]

ரூ.கூசை. செல்சுடர் நோக்கிச் சிதரரிக்கண் கொண்டநீர்
மெல்விர லூழ்தெறியா விம்மித்தன்—மெல்விரலி
னுள்வைத்து நங்குற்ற மெண்ணுங்கொ லந்தோ தன்
றோள்வைத் தணைமேற் கிடந்து.

(இ - ள்.) (எனது தலைமகள்),—செல் சுடர் நோக்கி - (மேல்கடலை நோக்கிச) செல்லுகின்ற சூரியனைப் பார்த்து, சிதர் அரி கண் கொண்ட நீர்-சிதறிய செவ்வரிகளையுடைய (தனது) கண்களில் நிறைந்த நீரை, மெல்விரல் - (தனது) மெல்லிய கைவிரல்களால், ஊழ் தெறியா- முறை மையாக [அடிக்கடி] எடுத்து எறிந்து, விம்மி - அழுது, தன் மெல் விரலின் - தனது மெல்லிய விரல்களினுள், நாள் வைத்த - (நாம் பிரிந்து சென்ற) நாள்களைக் கணக்கிட்டுக்கொண்டு, அணைமேல் - படுக்கையில், தன் தோள் வைத்து கிடந்து - தனது தோளையே தலையணையாகக் கொண்டு படுத்து, நம் குற்றம் எண்ணும் கொல் - (கூறிய பருவத்து நாம் மீளாது தாழ்த்த)நமதுகுற்றங்களை நினைத்து வருந்துவளோ! அந்தோ !!

ஒரு தலைமகன் தனது தலைவியைப் பிரிந்துசென்று வினைமுற்றி மீண்டு வருகையில், 'எனது காதலி மாலைப்பொழுதில் நான் பிரிந்து சென்று இத்தனைநாளாயினவென்றும், விரைவில் வருவேனென்ற நான் தாழ்த்தலால் எனது குற்றங்களைச் சிந்தித்து வருந்துவளே!' என்று இரங் கிப் பாகனுக்கு கூறியது, இது.

பிரிந்த தலைவன் மீண்டுவருவது மாலைக்கால மாதலின் 'செல்சுடர் நோக்கி' என்றும், தலைமகன் தான் குறித்தபடி மீண்டுவராது நீட்டித்த லாற் பிரிந்துசென்ற நாள்களைத் தன்விரல்களால் தலைமகள் எண்ணுவ ளாதலின் 'மெல்விரலின் நாள்வைத்து.....எண்ணுங்கொல்' என்றுங் கருதிக் கூறினனென்க. விரையச்சென்று சேராவிடின் ஆற்றுமை கை விஞ்சுதலால் அவள் இறந்துபடுவளாதலால் நமக்குப் பழிநேர்ந்திடு மாத லின், அதற்குமுன்பே தேர்செலுத்தவேண்டு மென்ற குறிப்பு. சிதரரிக் கண்கொண்டநீர் - உரிய காலத்தில் தலைமகனைக் கூடப்பெறாது வருத்த மிகுதல்பற்றி உண்டாவது ; இனி, இரேகைகள் படர்ந்த கண்களின் அழகை மறைத்துக்கொண்டு ததும்புகின்ற நீர் என்றும் பொருள் கூற லாம் : இது, அவளது கண்ணழகை நினைந்து வருந்தியதைக் குறிக்கும். கண்களிற் செவ்வரிபரத்தல், உத்தமலக்கணம். "நாளொற்றித் தேய்ந்த விரல்" என்ற இடத்துப்போல, நாள் - நாளையுணர்த்தும் சுவரி லுள்ள கோடு என்று கொண்டு, நாள்வைத்து - நாளின் கோட்டையிட்டு என்றுமாம். அந்தோ - இரக்கக்குறிப்பிடைச்சொல். செல் சுடர் என் பதை, அஸ்தமிக்குந் தருணத்திலிருக்கிற சூரியனையுடைய மாலைப்

பொழுதென அன்மொழித்தொகையாகவும் கொள்ளலாம். தன்தோள் வைத்து அணைமேற்கிடத்தல் - வருத்தமிகுதியால் படுக்கைகொள்ளாமல் முடக்கிய தனது கையின்மேல் தலையைவைத்துக் கிடப்பது. 'மெல்விரல்' என்றது, பிரிந்துசென்ற நாள்கள். சுவரின்கண் இழைத்தவற்றைத் தொட்டு எண்ணுதலால் கைவிரல்கள் தேய்ந்தன வென்ற குறிப்பு என்ப.

[தலைமகன் தானுற்றதைப் பாங்கற்குச் சொல்லியது.]

நடகூடு. கண்கய லென்னுங் கருத்திலுற் காதலி
பின்சென்ற தம்ம சிறுசிரல்—பின்சென்று
மூக்கி யெழுந்து மெறிகல்லா வொண்புருவங்
கோட்டிய வில்வாக் கறிந்து.

(இ - ள.) சிறு சிரல் - சிறிய சிச்சிலிக் குருவியானது,—கண் - (எனது காதலியின்) கண்களை, கயல் என்னும் கருத்திலுல் - கயல்மீனென்கிற எண்ணத்திலுல், காதலி பின் சென்றது-(அவற்றைச் குத்திக் தின்னக் கருதி) அவள்பின்னே தொடர்ந்து போயிற்று ; பின்சென்றும் - (அவ்வாறு) பின்தொடர்ந்து போயும், ஊக்கி எழுந்தும் - முயற்சி கொண்டு குத்த எழுந்தும், ஒள் புருவம் கோட்டிய வில் வாக்கு அறிந்து - (அவளது) ஒள்ளியபுருவம் வளைக்கப்பட்ட வில்லின் வளைவுபோலிருந்ததை அறிந்து, எறிகல்லா (து) - (அஞ்சி அக்கண்களைக்) குத்தித் தின்ன மாட்டாதிருந்தது ; (எ - று.)

தனது காதலியின் கண்களைக் கயல்மீனென்று கருதிச் சிச்சிலிக் குருவி பின்சென்று குத்தமுயன்றும், அக்கண்களுக்கு மேலுள்ள புருவத்தை வளைந்த வில்லென்று நினைத்து அஞ்சிப் பிடியாமலே நின்றுவிட்ட தென்று அவளது கண்ணழகில் லீடுபட்ட தலைவன் அதனை வியந்து தோழனுக்கு சொல்லிய துறை இது. தான்கண்ட தலைவியின் இயல்பு இன்னவாறுகுமென்று தன்னுயிர்ப் பாங்கனுக்குச் சொல்லி 'அத்தலைமகளுடன் என்னைக் கூட்டக் கடவாய்' என்று தலைவன் பாங்கனைக் கூட்டம் வேண்டியதாகக் கருத்துக்காணலுமாம். சிறு புருவத்தினை வில்லென்று அஞ்சி எறியாது விலகியதுபோலத் தோழியையும் ஆயத்தையுங் கண்டு அஞ்சாநின்றேன் என்று இங்கு **உள்ளுறையுவமம்** காண்க.

சிச்சிலிக்குருவி தலைமகனது கண்களைக் கயலென்றும், புருவங்களை வளைத்த வில்லென்றும் மாறுபடக் கருதியதாகக் கூறியது, **மயக்கவணி.**

சிரல் - மீன்குத்திப்பறவை. அம்ம - வியப்பிடைச்சொல்; இனி, "அம்ம கேட்பிக்கும்" என்றதனுல், பாங்கனே! நீ கேள் என்றுமாம். வாக்கு - வாங்கு என்னும் முதனிலை திரிந்த தொழிற்பெயர். (கு)

[செவிலி மகள்சென்ற சுரத்தருமை கூறி இரங்கியது.]

நடகூசு. அரக்காம்ப ணுறும்வா யம்மருங்கிற் கன்னே
பரற்கான மாற்றின கொல்லோ—வரக்கார்ந்த
பஞ்சிகொண் டீட்டினும் பையெனப் பையெனவென்
றுஞ்சிப் பின்வாங்கு மடி.

(இ - ள்.) அரக்கு ஆம்பல் நாறும் வாய் அம் மருங்கிற்கு - சிவந்த ஆம்பல் மலரைப்போன்ற வாயையும் அழகிய இடையையுமுடைய(எனது) மகளுக்கு,—அரக்கு ஆர்ந்த பஞ்சி கொண்டு ஊட்டினும் - (முன்னே) செந்நிறம் பொருந்திய பஞ்சைக்கொண்டு [செம்பஞ்சுக் குழம்பைத்] தட

வினுலும், பையென பையென என்று - 'மெல்ல வூட்டுக, மெல்ல வூட்டுக' என்று, அஞ்சி - (அதனையும் ஆற்றமாட்டாமற்) கூசி, பின்வாங்கும் - பின் வாங்கிய, அடி - (அவளது) பாதங்கள், (இப்போது), அன்னே - ஐயோ! பரல் கானம் ஆற்றின கொல் ஓ - பருக்கைக்கற்களையுடைய காட்டைப் பொறுத்தனவோ! (எ - று.)

இயற்கைப் புணர்ச்சி, பாங்கற்கூட்டம், பாங்கியிற்கூட்டம் என்ப வற்றுல் களவுநெறியில் தலைமகளைக் கூடிய தலைமகன் பழிபரவுதலின் தோழியால் விலக்கப்பட்டு அதன்பின்பு உடனே அவளை வெளிப்படை யாக மணஞ்செய்து கொள்ளுதல் இயல்பு : அங்ஙனஞ் செய்யாமையின், அப்பழியடங்குமாறு சிலநாள் தலைமகளை ஒருவழிப்பிரிந்து உறைதலும், தலைமகளை உடன்கொண்டு தன் ஊர்க்குச் செல்லுதலும், தோழி யால் வரைவுமுடுக்கப்பட்டு அரிய அணிகலஞ் செலுத்தி வரைந்து கொள்ளுதலும் என்னும் இம்மூன்றனுள் ஒன்று நிகழும்; அவற்றுள், தலைவன் தலைவியை இடைச்சுர நெறியாக உடன் கொண்டு போன மையைத் தோழியாலறிந்த செவிலித்தாய் அப்பாலைநிலத்தின் கொடு மையையும் தனது மகளது மிக்கமென்மையையும் கருதிக் கவன்று இங் ஙனம் கூறின ளென்க.

செம்பஞ்சுக் குழம்பைக் கால்களிற் பஞ்சினுல் தடவினுலும் பொறுக்கமாட்டாது வருந்திய எனது மகள் இப்பொழுது தனது தலை வன் பின்னே காட்டிற்கு நடந்து செல்லுகையில் அவளது பாதங்கள் பருக்கைக்கற்களின்மீது எவ்வாறு நடந்து சென்றனவோ! என்று தாய் இரங்கிக் கூறியது இது. நற்றாய் கூற்றாகக் கொள்ளினுமாம். "பஞ்சனைச் சிவக்கும் மென்காற்றேவி", "ஆம்பலுறுந் தேம்போதி னிளவி" என்பன, இங்கு நினைவுக்கு வருகின்றன.

அரக்காம்பல் நாறும் வாய் - செவ்வாம்பல்மலர்போல மணம் வீசும் வாயெனினுமாம். மருங்குல்-அருகே யடையாட்டு ஆகுபெயர். அன்னே-இரக்கக் குறிப்பிடைச்சொல். பஞ்சி எனினும், பஞ்சு எனினும் ஒக் கும். செம்பஞ்சுக் குழம்பூட்டுதல், மகளிரது பாதங்கட்குச் செம்மையும் மென்மையும் உண்டாதற் பொருட்டு. பையென - பையவென என்பதன் தொகுத்தல். அடுக்கு - அச்சப் பொருளது. அடி-பால் பகாவஃறிணைப் பெயர்; இங்குப் பன்மை. (சு)

[* சிறைப்புறத்தானை தலைவன் கேட்பப் பிரிவையாற்றுத தலைவியின் நிலைமையைத் தோழி கூறியது.]

ருகூஎ. ஓலைக் கணக்க ரொலியடங்கு புன்செக்கர்
மாலைப் பொழுதின் மணந்தார் பிரிவஞ்சி
மாலை பரிந்திட் டழுதாள் வனமுலைமேற்
கோலஞ்செய் சாந்தந் திமிர்ந்து.

(இ - ள்.) • ஓலை கணக்கர் - ஓலையிலெழுதுங் கணக்கர்களுடைய, ஒலி - ஓசை, அடங்கு - ஒழிந்து போம்படியான, புல் செக்கர் - அற்ப மாகிய செவ்வானத்தையுடைய, மாலை பொழுதில் - மாலைக் காலத்தில்,-

---

* சிறைப்புறம் - தோழி தலைவியர்க்குள் நிகழுஞ் செய்திகளைத்தலைவன் மறைந்தறிதற்கு அனுகூலமாய்க் காவல்மனைக்குப் புறமாயுள்ள இடம்.

(தலைமகள்),—மணந்தார் பிரிவு உள்ளி - (தனது) தலைவர் பிரிந்து செல்வதை நினைத்து, மாலை பரிந்து இட்டு - (தான் சூடியிருந்த) மலர் மாலையைக் கழற்றி யெறிந்து, வனம் முலைமேல் கோலம் செய் சாந்தம் திமிர்ந்து - (தனது) அழகிய தனங்களின்மீது அலங்காரஞ் செய்திருந்த கலவைச் சந்தனத்தையும் உதிர்த்துஒழித்து, அழுதாள்—; (எ - று.)

ஊரில் அலராடங்குதற் பொருட்டுத் தலைமகன் சிலநாள் வேற்றிடத்துச் சென்று உறைவது—**ஒருவழித்தணத்த**லெனப்படும். அங்ஙனம் தணந்தவன் மீண்டு வந்து சிறைப்புறத்தானாக, அவன் செவியிற்படுமாறு தோழி கூறியது இது. தலைவி மாலைப்பொழுதில் (தனது) தலைவன் பிரிவைப் பொறாது தான் அணிந்திருந்த மலர்மாலையையும் சந்தனத்தையும் வெறுத்து ஒழித்து வருந்தினளென்று தலைவியின் நிலையைக் கூறினளென்க. இதனால் தலைமகனை விரைவில் வெளிப்பட வந்து மணந்து போமாறு குறிப்பா லுணர்த்தினளாம். இதனைத் தலைமகள் பிரிவுடன்படாமையைத் தோழி தலைமகற்குக் கூறிய துறையாகவுங் கொள்வர் சிலர்.

முதலடி - இவ்வதிகாரத்து நூ - ஆஞ்செய்யுளில் "கம்மஞ்செய்மாக்கள் கருவியொடுக்கிய" என்றது போன்ற மாலைப்பொழுதிற்கு உரிய குறிப்பு. "மணந்தார்" என்றது, தன்னைக் களவு வழியாற் கூடியவரை.

[உடன்போக்குக்கு ஒருப்பட்ட தலைமகள் தோழிக்குக் கூறியது.]

நூஅ. கடக்கருங் கானத்துக் காஎபின் ஞெள
நடக்கவும் வல்லியோ வென்றி—சுடர்த்தொடீஇ
பெற்ற லொருவன் பெருங்குதிரை யங்நிலையே
கற்ற னஃதாரு மாறு.

(இ - ள்.) சுடர் தொடீஇ - பிரகாசிக்கின்ற வளையல்களை யுடைய வளே!—'கடக்க அரும் கானத்து - கடந்துசெல்வதற்கு அருமையாகிய காட்டில், காஎபின் - இளவெருது போன்ற (உனது) தலைவன் பின்னே, நாஎ - நாளைத்தினம், நடக்கவும் வல்லியோ - நடந்து செல்லவும் மாட்டுவாயோ?' என்றி - என்று (என்னை நோக்கிக்) கூறினாய்; பெருங் குதிரை - பெரியதொரு குதிரையை, பெற்றன் ஒருவன் - கிடைக்கப் பெற்றவனாகிய ஒருத்தன், அ நிலையே - பெற்ற அப்பொழுதே, அஃது ஊரும் ஆறு - அதனை ஏறி நடத்தும் முறைமையையும், கற்றன் - கற்றறிந்தவனே யாவனன்றோ? (எ - று.)

'நீ உனது தலைவன் பின்னே உடன்செல்ல உடன்பட்டாயே; நாளைக்கு அவன்பின்னே நடந்துசெல்ல வல்லையோ?' என்று நீ என்னை வினவினாய்; அதற்குக் கூறுவேன் கேள்: ஒருவன் குதிரையொன்றை வாங்கினால் அதை யேறி நடத்துந் திறத்தையும் அவன் கற்றிருப்பானல்லனோ? அதுபோலவே, ஒரு கணவனுக்கு வாழ்க்கைப்பட்ட யான் அவன்பின் செல்லவும் வல்லே னென்னு தலைமகள் தனது தோழியை நோக்கிக் கூறிய துறை இது.

பின்னிரண்டடி - **பிறிதுமொழிதலணி**; உபமானத்தைக் கூறி அதன் உபமேயத்தைப் பெறவைத்தது காண்க. கணவன் பின்செல்வது அரிதன்று என்பது, குறிப்பு.

காலை - உவமையாகு பெயர். ஆண்மகனுக்கு இளவெருது - நடை வலிமை காம்பீரியங்களிலே உவமை. வல்லே, என்றி - முன்னிலை யொருமை முற்றுக்கள்; முறையே ஐ, இ - விகுதிகள். சுடர்த்தொடீஇ - அளபெடை, விளியுருபு. அஃது, இங்கு ஆய்தம் உயிர்போல் ஒலித்தது.

[மகளைப்போக்கிய நற்றாய் கவன்று கூறியது.]

ஈகூகூ. முலைக்கண்ணு முத்து முழுமெய்யும் புல்லு
மிலக்கணம் யாது மறியேன்—கலைக்கணம்
வேங்கை வெரூஉ நெறிசெலிய போலுமென்
பூம்பாவை செய்த குறி:

(இ - ள்.) (நேற்று எனதுமகள்), முலை கண்ணும் - (தனது) முலைக் கண்களையும், முத்தும்-முத்துமாலையையும், (நன்றாக அழுந்துமாறு), முழு மெய்யும் புல்லும் - (எனது) உடம்புமுழுவதையுந் தழுவிய, இலக்கணம் - அடையாளத்தை, யாதும் அறியேன் - (அப்பொழுது) சிறிதும் அறிந்தி லேன்; என் பூ பாவை செய்த குறி - எனது அழகிய சித்திரப்பதுமை போன்ற மகள் (அப்பொழுது) செய்த அந்த அடையாளம்,—கலை கணம்-மான்கூட்டம், வேங்கை வெரூஉம் -வேங்கைப்புலிக்கு அஞ்சித்திரிகின்ற, நெறி-காட்டு வழியில், செலியபோலும் - செல்லுதற்குப் போலும்: (எ-று.)

நேற்று என்மகள் தனது முலைக்கண்ணும் முத்துமாலையும் எனது உடம்பில் அழுந்தும்படி என்னைத்தழுவிக்கொண்ட காரணத்தை அப் பொழுது இன்னதென்று சிறிதும் அறிந்திலேன்; மான்கள் புலிக்கு அஞ்சி யோடும்படியான காட்டுவழியில் தனதுகணவன் பின்னே தான் செல்லு தற்கு அடையாளமாகச் செய்தாளென்று அதனை இப்பொழுது அறிந்தே னென்று தாய் தன்மகளைக்குறித்து இரங்கிக்கூறியது இது. 'என் பூம்பாவை' என்றது, நற்றாய்கூற்று என்பதைக் குறிக்கும். பூம்பாவை - திருமகள் போன்றவள் எனினுமாம்.

'கலைக்கணம் வேங்கைவெரூஉம் நெறி' என்றது, காட்டின் கொடு மையைக் காட்டும். வேங்கை வெரூஉம்-வேங்கையினின்று வெருவும் என ஐந்தனுருபுத்தொகையாகவாவது, வேங்கையைவெருவும் என இரண்ட னுருபுத் தொகையாகவாவது கொள்க; "அச்சக்கிளவிக்கு ஐந்துமிரண்டும், எச்சமிலவே பொருள் வயினான" என்பது **தொல்காப்பியம்**. வேங்கைக்கு வெருவும் என நான்கனுருபுத்தொகையாகக் கொள்வது உலகவழக்கு. வெரூஉம்=வெருவும்; சொல்லிசையளபெடை. செலிய - செய்யியவென் னும் வாய்பாட்டு எதிர்காலவினையெச்சம்; இதன்முன் வலி இயல்பாம். 'போலும்' என்பது - ஒப்பில்போலி; இங்குத் தற்குறிப்பேற்ற வுருபாய் நின்றது. பூம்பாவை என்பதற்கு - தாமரை மலரில் வாழ்கின்ற இலக்குமி போன்ற மகளெனினுமாம். (கூ)

[தலைமகள் பிரிவாற்றுமையைத் தோழிக்குச் சொல்லியது.]

சoo. கண்ணூன் றுடையானுங் காக்கையும் பையரவு
மென்னீன்ற யாயும் பிழைத்ததென்—பொன்னீன்ற
கோங்கரும் பன்ன முலையாய் பொருள்வயிற்
பாங்கனர் சென்ற நெறி.

(இ - ள்.) பொன் ஈன்ற - பொன்போன்ற தேமல்பொருந்திய கோங்கு அரும்பு அன்ன-கோங்கமலரை யொத்த, முலையாய்-தனங்களையுடைய தோழியே!—கண் மூன்று உடையானும்-மூன்றுகண்களையுடைய சிவபிரானும், காக்கையும்—, பை அரவும் - படத்தையுடைய (இராகுவென்னும்) சர்ப்பமும், என் ஈன்ற யாயும் - என்னைப்பெற்ற தாயும், பிழைத்தது - (எனக்குப்) பிழைசெய்தது, என் - யாது? [ஒன்றுமில்லை]; பொருள் வயின் - பொருளினிடத்து ஆசையால், பாங்கனூர் - (எனது) தலைவர், சென்ற - போன, நெறி - (நெடிய) மார்க்கமே, (எனக்குப் பிழைசெய்தது); (எ - று.)

பயனிலை, வருவித்து முடிக்கப்பட்டது. அந்நெறி இல்லையாயின் எனது தலைவர் பிரிந்து செல்லார்; அப்பொழுது யாவும் நமக்கு நல்லனவேயாம். எனது தலைவர் பொருள்விருப்பத்தாற் பிரிந்துசென்ற நெடுநெறியை நாம் வெறுத்துப் பழித்துப் பேசவேண்டுமேயன்றி வேறன்று. எனது தலைவர் பிரியாது உடனிருந்தால் மன்மதனும் குயிலும் சந்திரனும் என்னை வருத்தக் காரணமில்லையாதலின், சிவபிரான் முதலியோர் மீது பழிசூற வழியில்லை ஆதலால், அவர் சென்ற நெறியே நமக்குப் பிழைசெய்ததென்று கூற வேண்டியதாயிற்றெனத் தலைமகள் தோழிக்குத் தனது பிரிவாற்றுமையைக் கூறியது இது.

மன்மதனை உருவழித்துப் பின்னும் அவனை உளனாக்கிய சிவபிரானும், தன் கூட்டிற் பொரித்த குயிலின் குஞ்சைக் குத்திக்கொல்லாது விட்ட காக்கையும், சந்திரனை விழுங்கிப் பின்பு உமிழ்ந்திட்ட இராகுவும், என்னைப் பெற்றபோதே உயிர்போமாறு உபேட்சியாமல் போற்றி வளர்த்த தாயுமே பிழைசெய்தனரென்று கருதுதற்குக் காரணம், கணவனைப் பிரிந்தகாலத்து மன்மதனும் குயிலும் சந்திரனும் வருத்துவதலும், தாய் பிறந்த அப்பொழுதே தன்னைப் போற்றி வளர்க்காது உயிர்போமாறு உபேட்சித்திருந்தால் தான் இப்படிப்பட்ட துன்பங்களை அனுபவிக்கக் காரணமில்லையாதலாலும் என்க.

'முச்சுடர்' கண்மூன்றுக அமைந்திருத்தலால், சிவபிரானுக்கு 'கண் மூன்றுடையான்' என்று ஒருபெயர் கூறினர். குயில் முட்டை யிட்டவுடனே அதனைப் பொரித்துப் பாதுகாவாமல் காக்கையின் கூட்டில் அதற்குத் தெரியாமலே இட்டுச் செல்ல, அது அம்முட்டையைத் தனதென்றே கருதி அடைகாத்துக் குஞ்சுபொரித்துச் சிலநாள் சென்றவுடனே அது கூவென்று கத்தத்தொடங்குகையில் காக்கை சினங்கொண்டு அதனைக் குத்தித் துரத்திவிடுமென்க. குயில் காக்கையால் வளர்க்கப்படுவதனாலேயே, வடமொழியில் அப்பறவை, 'பரப்ருதம்' என்று பெயர்பெறும். 'பொன்' என்றது - அதுபோன்ற நிறமுடைய தேமலுக்கு ஆகுபெயர்; இனி, பொன் ஈன்ற - பொன்போலும் நிறத்தையுடைய, கோங்கு அரும்பு என்றுமாம்.

காமத்துப்பால் முற்றுபெற்றது.

நாலடியார் முற்றிற்று.

நாலடியார்

செய்யுள் முதற் குறிப்பு அகராதி

பாட்டு.	பக்கம்.
அகத்தாரே	ஙஙு
அக்கேபோ	க0க
அங்கண்-னக	கஙக
அங்கண்-னம	ங0கு
அங்கோட்	ங0ச
அச்சம்	எசு
அடுக்கன்மலை	கசுக
அடைந்தார்ப்	கசள
அத்திட்ட	உஙச
அம்பலயலெடு	அ0
அம்புமழலு	அஉ
அரக்காம்ப	ங்உஉ
அருகல	உகசு
அரும்பவிழ்	ஙகஅ
அரும்பெறல்	ஙள
அரும்பெறற்	ஙகக
அருளினற	உசுள
அலகுசால்	கஉங
அவமதிப்பு	கச0
அவ்வியமில்	உசுஅ
அழண்மண்டி	கசுஅ
அள்ளிக்கொ	உகஅ
அறம்புகழ்	எள
அறிவினற	கசசு
அறியாப்பரு	கசஞு
அறியாரு	கூள
அறிவதறிந்	எக
அறுசுவை	கக
ஆகாதெனி	உளஅ
ஆடுகோடாகி	கஞிக
ஆட்பார்த்	உஅ
ஆணமினெ	ங0கி
ஆமாபோ	ங0அ
ஆர்த்தபொறிய	உசக
ஆர்த்தவறிவின	உஅள
ஆவாநாமாக்க	ஙசு
ஆவேறுருவின	க0ஞ
ஆற்றுந்துணை	ககுஉ
ஆன்படுநெய்	ககஙு
இசைந்த	கஞிஞ
இசையாதெ	கசு0
இசையாவொரு	கூக
இசையுமெனி	கங்உ
இடம்பட	க0ங

பாட்டு.	பக்கம்.
இடும்பைகூர்	கூசு
இட்டாற்று	உச0
இமைக்குமள	உசுக
இம்மியரிசி	அசு
இம்மைபயக்	ககள
இம்மையு	உசச
இரவலர்கன்ரு	உங்ங
இருக்கையெ	கஉஞ
இரும்பார்க்குங்	க0க
இலங்குநீர்	கஎஅ
இல்லமிளமை	ஞ்உ
இல்லாமை	உஞ்க
இல்லாவிடத்	அச
இழித்தக்க	உஞ்0
இழைத்தநா	ககு
இளையானட	சுங
இறப்பச்சிறி	கூ0
இறப்பநினை	கசள
இறப்பவே	கஎஞ
இற்சார்வி	கஞ்உ
இற்பிறப்பில்	உசுசு
இற்பிறப்பெ	கஎசு
இனநன்மை	கஉஅ
இனியார்தந்	ங்0க
இன்பம்	எச
இன்ரு துமிந்	உகச
இன்றுகொ	ங்க
இன்னாஅனைய	கள்க
இன்னுசெயினும்	எஉ
இன்னு-விட	கஅசு
இன்னு-விடு	கஅள
இன்னுவியைக்	உஞ்ங
ஈட்டலுந்	உங்ங
ஈண்டுநீர்	கூஅ
ஈதலிசையா	கஞ்உ
ஈனமாயில்	ககுங
உடாஅது	உ0
உடுக்கை	கஉச
உடைப்பெருஞ்	ங்00
உடையாரிவ	கங்அ
உணரவுணரு	உ0உ
உண்டாய	உங்ள
உண்ணெனெளி	ககக
உபகாரஞ்	சுசு

பாட்டு.	பக்கம்.
உயிர்போயார்	சக
உருவிற்கமை	ககசு
உருவுமிளமை	கூங
உலகறியத்	கள0
உளநாள்சில	உசுக
உள்கூர்பசி	உங்அ
உள்ளத்தா	ககங
உள்ளத்துணர்	ங்கஞ்
உள்ளமொரு	ங்க0
உறக்குங்	ச0
உறற்பால	கூச
உறுபுலி	ககு0
உறுபுனறங்	கஞ்ச
உறைப்பருங்	கஞ்ங
ஊக்கித்தாங்	ஞ்சு
ஊரகணீ	கசஅ
ஊருளெழுந்	அஉ
ஊறியுவர்த்	சள
ஊறுசெய்	ங்0க
எஞ்ஞான்று	ங்கச
எத்துணையா	உஉசு
எந்நிலத்து	ககஅ
எம்மையறி	கசக
எய்தியிரு	உள0
எறிநீர்ப்	உஉகூ
எறியென்	உகள
எற்றென்று	கங்0
எனக்குத்தா	உஞ்
எனதென	உங்0
என்பாயுகிணு	உசஉ
என்றும்புதி	உஞ்ச
என்னுனு	கஞ்
என்னேமற்	உளங
எட்டைப்பரு	உகூங
எதிலார்செய்	கஅக
எமாந்தபோழ்	ங்0க
ஏற்றகை	அக
ஒண்கதிர்	கசஅ
ஒருநன்றி	உகஉ
ஒருநீர்ப்	ககச
ஒருபுடை	கஉசு
ஒருவனொருவ	உஞ்சு
ஒக்கியலெவாள்	ககங
ஒதியுமோதா	உஉச

பாட்டு.	பக்கம்.	பாட்டு.	பக்கம்.	பாட்டு.	பக்கம்.
ஓலைக்கணக்க	...	காதலாற்சொல்	...	தங்கண்மர	...
கடகஞ்செறி	...	காலாடுபோ	...	தண்டாச்	...
கடக்கருங	...	காவாதெதாரு	...	தமரென்று	...
கடமாதெதா	...	காழாயகொ	...	தம்மமர்காத	...
கடல்சார்ந்து	...	குஞ்சியழகுங்	...	தம்மையிகழ்ந்	...
கடிதத்துக்	...	குடநீரட்டுண்	...	தம்மையிகழ்வா	...
கடிப்பிடி	...	குடருவகொ	...	தலையேதவ	...
கடியெனக்	...	குலந்தவங்	...	தவலருந்	...
கடுக்கியொரு	...	குற்றமுமே	...	தளிர்மேமலே	...
கடுக்கெனச்	...	கூர்த்துநாய்	...	தனதாகத்	...
கடையாயார்	...	கேளாதேதவந்	...	தாஞ்செய்	...
கடையெலாங்	...	கொடியவை	...	தாமெயுமின்	...
கட்கினியாள்	...	கொடுத்தலுங்	...	தாழாத்துளரா	...
கணங்கொண்டு	...	கொய்புற்	...	தான்கெடு	...
கணமேல	...	கொலைகருலே	...	திருத்தன்மன	...
கண்கயலென்	...	கொல்லையிரு	...	திருமதுகை	...
கண்முன்	...	கொன்மின	...	தினைத்துணை	...
கப்பிகடவுதா	...	கோபேடந்த	...	தினையனைத்	...
கம்மஞ்செய்	...	கோட்டுப்பூ	...	தீங்கரும்	...
காவாதிரிண்	...	கோணதையருவி	...	துகடீர்	...
கருங்கொள்	...	கோளாற்றக்	...	துக்கத்துட்	...
கருத்துணர்ந்து	...	சக்கரச்செல்	...	துய்த்தக்	...
கருமமு	...	சாய்ப்பறிக்க	...	துன்பமே	...
கருமவினை	...	சான்றண்ணம	...	துன்பம்பல	...
கரும்பாட்டிக்	...	சான்றோரனை	...	தெண்ணீர்க்	...
கல்லாகழிப்	...	தித்தலைதினைப்	...	தெரியத்தெரி	...
கல்லாதுண்ட	...	நிறுகாபெருகா	...	தெளிவிலார்	...
கல்லாதுபோ	...	நிறுகாலெய்ய	...	தேரணியகத்	...
கல்லாமை	...	நியார்	...	தேரற்போர்	...
கல்லாரோ	...	செச்நெல்லா	...	தேரற்றஞ்சான்	...
கல்லெறிந்	...	செம்மை	...	நச்சியார்க்	...
கல்லென்று	...	செய்கையழி	...	நடுக்குற்றுத்	...
கல்லோங்கு	...	செய்யாத	...	நடுவூருள்	...
கல்வினையில	...	செல்சுடர்	...	நட்டார்க்கு	...
கழிந்தாரிடு	...	செல்லாவிட	...	நட்புநார	...
கழுநீருட்	...	செல்வர்யா	...	நம்மாலெல	...
களர்நிலத்து	...	செல்வுழிக்	...	நயவாக	...
கள்ளார்கள்	...	செழும்பெறும்	...	நரம்பெழுந்து	...
கற்றதூஉ	...	செறிப்பில்	...	நரைவருமெ	...
கற்றறிந்த	...	செறுத்தேதா	...	நல்லகுல	...
கற்றனவுங்	...	சென்றேறிய	...	நல்லர்பெரி	...
கற்றருமை	...	சொற்றளர்ந்து	...	நல்லவைசெய்	...
கனைகடற்றண்	...	சொற்றற்றுக்	...	நல்லவைநா	...
கன்னனிலல்ல	...	தக்காருந்	...	நல்லாரெனத்	...
காணிற்	...	தக்கோலந்	...	நல்லார்நய	...

பாட்டு.	பக்கம்.
நல்லாவின்	கஅஉ
நளிகடற்றண்-நல்	ககஉஅ
நளிகடற்றண்-நா	ககஅஉ
நறுமலர்த்	கஎஅ
நன்னிலைக்	உஅஉ
நாப்பாடஞ்	உஇசு
நாய்க்காற்	கஅ0
நார்த்தொடு	ஙடஉ
நாலாறுமா	ஈடகஈ
நாள்வாய்ப்	கஎஉ
நாறுத்தகடே	உஉ0
நிலநலத்தா	கஙி0
நிலையாமை	இக
நின்றனநின்	கஙி
நீரினுநுண்	உஙிஙி
நீருட்பிறந்து	உஃசா
நீர்மையே	உஙடக
நுண்ணுணர்விஞ	ககஉ
நுண்ணுணர்வின்	உ0ஙி
நெடுங்கால	சுஙி
நெருப்பழற்	ககo
நேரல்லார்	சுக
நேர்த்து	சுஉ
பகைவர்புனல்	ககஎ
படுமழை	ஙடஈ
பண்டமறி	சுஅ
பரவாவெளிப்	அக
பராஅரைப்	உ0க
பருவமெனை	உஎ
பலநாளும்	கஎஅ
பல்லாரறியப்	அ0
பல்லாவு	கூஉ
பல்லான்ற-பா	உ0எ
பல்லான்ற-வீ	கூஇ
பழமைகந்தாகப்	உஙிஎ
பழையரிவ	உஅசு
பனிபடு	உசு
பன்றிக்கூழ்	உகஙி
பன்னுனுஞ்	கஙிஎ
பாடமே	உசுஉ
பாம்பிற்கொரு	ஙி0சு
பாலாற்கழீஇ	உகச
பாலோடளாய	கசக
பாவமுமே	உசஇ
பிறந்தகுல	உஙிஎ

பாட்டு.	பக்கம்.
பிறர்மறை	கஙிசு
புக்கவிடத்	எஎ
புணர்கடல்	உசக
புதுப்புன	ஈ0க
புத்தகமே	உசுச
புல்லாப்புன்	உசக
புல்லாவெழு	கஙி.ச
புறத்துத்	கஙிஙி
புன்னுனி	ஈ.ச
பெயற்பான்	அஅஅ
பெரியவர்	ககக
பெரியார்பெருங	எஈ
பெரியார்பெரு	கசஙி
பெருகுவது	கிசுஉ
பெருங்கட	உஎஙி
பெருநடை	உ-அஉ
பெருமுத்தரைய	கசுஙி
பெருவரைநாட	கஙிஙி
பெறுவது	உசுஈ
பெறுவதொன்	உஎஎ
பொத்தூற்	ஈ0எ
பொழிந்திணிது	உகஙி
பொழிப்பகல	உசுஙி
பொறுப்பரென்	கஙிக
பொற்கலத்துப்	களக
பொற்கலத்தூ	உ அஙி
பொன்னிறக்	உஉஙி
பொன்னே	கஙிக
மக்களாலாய	ஙிக
மடிதிரை	கஅசு
மதித்திறப்	இக
மரீஇப்பல	கஅக
மலைநலமுள்	உகக
மலையிசைத்	உக
மல்குதிரைய	உகஅ
மல்லன்மா	உசஇ
மழைதிளைக்கு	உகஇ
மறுமைக்கு	கஙிஙி
மறுமையு	அசு
மற்றறிவா	உஎ
மனத்தான்	கஇக
மனைப்பாசங்	ககச
மன்றங்கறங்க	ஙி0
மன்னர்திருவு	கசஙி
மாக்கேழ்மட	சுஉ

பாட்டு.	பக்கம்.
மாண்டகுண	இஙி
மாற்றராய்	சுச
மானவருங்கல	சக
முட்டிசை	கஎஙி
முட்டுற்ற	ககஇ
முயங்காக்காற்	ஙிகக
மூலைக்கண்ணு	ஙி.உஇ
மூல்லைமுகை	சசு
முற்றற்சிறு	ககச
முற்றுத்துச்	கஙிஎ
மூன்னீர	அச
மூப்புமேல்	உஎக
மெய்ந்நானக்	உஙிஅ
மெய்வாய்கண்	இஎ
மெல்லியநல்	கஙிசு
மைதீர்பசும்	உ.அஙி
யாஅருளகத்	கo.இ
யாஅரொருவ	ககஉ
யாக்கையை	ஙிஙி
யாமாயினெம்	உசஙி
யாஅனையனைய	கஎஎ
யாஅனையரு	கஙி
வடுவிலா	கo.க
வயாவும்	கசுஎ
வலவைக	உஉஉ
வழங்காத	உ.ங
வழுக்கெனை	உகஈ
வளம்பட	ஈஙி
வற்றிமற்	எச
வாழ்நாட்	ஈo
வாணிடுவில்	சு
விரிநிற	கசo
விருப்பிலா	கஎச
விழைந்தொரு	உஎக
விளக்குப்	இo
விளக்கொளி	ஙி.o.ஙி
வினைப்பயன்	ஙிஎ
வெறியயர்	உஇ
வெற்றுமையிட	உஎஙி
வென்றிப்	உசுஉ
வேம்பினிலை	ககஈக
வேற்றுமை	எக
வைகலும்	சக
வைப்புழிக்	ககக

நாலடியாரின் அரும்பதவகராதி முதலியன

எண்—பாட்டெண்

அஃகுதல், 12
அக்காரம், 112, 206, 374
அக்கு, 123
அகலம், 389, 392
அங்கணம், 175
அசாஅ, 201: அசைதல், 187
அட்டில், 363
அடக்குதல், 26, 105
அடகு, 207, 217 அடம்பு, 187
அடைக்குமாமாண்டைக்கதவு, 271
அண்ணல், 31
அணங்கு, 14. அணங்குதல், 241
அத்து, 281 அதர், 192
அபராணம், 207 அம்பல், 87
அம்ம, 395 அம்மனே, 14
அமர்வு, 336 அயர்தல், 16
அயிர், 116 அயில், 386
அயிராணி, 381 (தொல். பொ. 192, நச்)
அரக்கு, 396. அரவு, 241
அரி, 395 அரிமா 141
அருத்தம், 295 அருளும்மகும், 273
அல்குநிழல், 166
அல்குல், 354, 372 அல்லல், 170
அலகு, 22, 40 அலரி, 199
அலவன், 123
அவ, 171 அவ்வியம், 322
அவத்தம், 327
அழித்துப் பிறக்கும் பிறப்பு, 302
அழுங்குதல், 111, 300, 353
அற்றம், 78
அறைப்பெருங்கல்லன்னர், 360
அன்றில், 376
ஆடிவிட்டற்று, 240
ஆணம், 374 ஆமா, 319
ஆமை, 331 ஆலம், 38, 197
ஆவின்கன்று தாய்நாடிக்கோட [வல்லது, 115
ஆழ்கலத்தன்னகலி, 12
ஆற்றுதல், 75, 184, 284, 396
இட்டாறு, 288
இடம், 91, 116, 300,
இடுக்கு, 274
இடுகாட்டுளேற்றைப்பனை, 96
இடைக்கண், 390
இந்திரன், 346, 373
இம்மி, 94 இம்மென, 392
இயனெறி, 294
இரப்பாரையெள்ளாமகன், 307
இருசிகை, 18 இருந்தை, 258
இருந்தைக்க, 79
இல்வாழும்பேய், 363
இலக்கணம், 399
இறுகாலத்தென்னே பரிவு, 110
இன்னுங்கு, 11, 335
ஈ, 41
ஈன்றாட்குப் பரிதல், 316
உளற்றுதல், 32
உட்கு, 29, 102, 384
உடங்கு, 173
உணக்குதல், 258
உப்பிலி, 206, 289
உம்மை, 58, 85, 94
உயங்குதல், 391
உரம், 153 உரவுநீர், 175
உரு, 90, 102, 274 உருத்த, 304
உரும், 164
உலத்தல், 3, 22 உலறி, 141
உவரி, 146, 245 உளிஞர், 355
உளையலரி, 199
உறக்குந்துணையது, 38
உறழதல், 311 உறுவர், 104
உறை, 184 ஊக்கல், 57
ஊதியம், 12
ஊராண்மை, 240
ஊறு, 379 ஊற்று, 110, 150
எஃகுடையார், 137
எச்சம், 134, 319
எடுப்ப, 87 எருவை, 351
எழில், 53, 167 எழிலி, 392
எட்டைப்பருவம், 358
ஏமம், 13, 327 ஏமாந்து, 377, 378
ஏற்றைப்பனை, 96
ஐந்தை, 329 ஒண்மை, 196, 292
ஒருவர்பொறை யிருவர் கட்பு 223
ஒல்லார், 188 ஒளி, 9

சசடு, 260, 342 கட்டி, 35
கடமா, 300 கடாஅய், 258
கடி, 56, 86 கடிஞை, 99
கடிப்பு, 100
கடுக்கெனல், 189, 348
கடை, 107, 297, 368
கண், 13, 44, 56, 100, 353
கண்குத்திற்றென்று தங்கை
கூஎயார், 226
கண்டல், 194 கணக்காயர், 314
கதுப்பு-மயிர், 294 கப்பி 341
கழுகு, 219 கயப்பூ, 215 கயல், 44
கருனை, 200, 268
கல்லெறிந்தன்னசொல், 66
கலவை, 268 கலை, 399
கவான், 201 கழுகு, 48
கள்ளி, 262, களிறு, 192
கற்கிள்ளிக்கையிழந்தற்று, 336
கறங்குதல், 23
காக்கை, 41 காஞ்சிரை, 157, 217
காணம், 372, 374
காந்தள், 283
கால், 113, 368, 372
காழ், 14, 192, 243, 342
கிடை, 360 கிளி, 283
குடைகலன், 289
குண்டை, 398 குணுங்கர் 322
கும்பி, 81 குய், 217
குரம்பு, 153
குருத்திற்கரும்பு, 211
குளகு, 16
குறடு, 208 ; குறும்பூழ், 122
கூத்தன்-உயிர், 26
கெழீஇயினர், 385
கேழ், 41 ; கை, 193, 311, 371
கொண்மூ, 8 ; கொன்னூளர், 243
கோங்கு, 243 ; கோட்டுப்பூ, 215
கோடு, 192, 268, 354, 358
கோடுபாய்தல், 372
கோத்திரம், 243
கோழி, 341
சக்கரச்செல்வம், 346
சத்தம், 52, சமழ்மை, 72
சாய், 389 ; சாயல், 142
சிகை, 1 ; சிதர், 394
சிதலை, 394 ; சிரல், 395
சில்லை, 377 ; சிவல், 122
சிறுகாலை, 85, 328
சிறுநோக்கு, 298
சுட்டுக்கோல், 208 ; சுரை, 315
சூன்றல், 44
செக்கர், 397 ; செதும்பு, 128
செம்மாப்பு, செயிர், 50
செல்லாமை, 148
செற்றூர், 178 ; செறிப்பு, 231
செறு, 222 ; சேக்குதல், 319
சேக்கை, 30 ; சேமா, 377
ஞெமிர்த்திடுதல், 237
தககோலம், 43 ; தகடு, 266
தகர், 376, 156 தடி, 46
தண்ணம்பலம், 6 ; தவல், 137
திமிர்தல், 397 ; திளைத்தல், 161
தீவளி, 19 ; துச்சாரி, 84
துற்று, 190 ; தேம், 199
தெங்கு, 216
தேரை, 193 ; தேனீ, 10
தொலைச்சுதல், 300
தொழுத்தை, 326
தொழுநோய், 123
தோட்கோப்பு, 20
நக்குதல், 179
நம்புதல், 81 ; நடை, 343
நாகம், 240 ; நாணிழல், 116
நாய், 70 ; நானம், 294
நிரப்பு, 282, 287
நீருமமிழ்து, 200
நீலம், 374 நெய்தற்பறை, 392
பசலை, 391 பசைதல், 60, 187
படுசொந்து, 48 பத்தர், 257
பயின், 267 பரிமா, 149
பருமம், 149 பறம்பு, 267
பன்றி, 257 பாங்கனர், 400
பிலம், 160
பீள், 20 புடைப்பெண்டிர், 368
புதவு, 99 புல்வாய், 149, புலி, 193
புலியுகிர் வெண்சோறு, 206

புழுக்கல், 206 புற்கை, 206
பூங்குன்றநாட, 128, 212
பெண், 87
பெண்ணை, 216
பெருங்குதிரைபெற்றூனஃதூரு
மாறுகற்றூன், 398
பெருமிதம், 291
பெருமுத்தரையர், 200
பைம்மறியாப்பார்க்கப்படும், 42
பொச்சாத்தல், 182
பொத்துதல், 310
பொன்னும் புளிவிளாங்காய், 328
போத்தரூர், 351
மதலை, 397 மதுகை, 65
மம்மர், 14
மந்தி, 237 மரத்தார், 145
மல்லல், 296 மலங்கு, 375
மறங்கும், 342 மறி, 16 மன்று, 23
மிடி, 56 மீக்கூற்றம், 53
மூட்டிகை, 208
முழுமக்கள், 358, மூழை, 321
மேலோத்தவம், 36 மேன்முறை 56
மைந்து, 87 மொக்குள, 27
யாப்பு, 277
வட்டு, 264 வம்பலன், 87
வயங்குதல், 22 வயா, 201
வரன்றி, 369 வரி, 85, 198
வரைபாய்தல், 369 வல்சி, 328
வலவைகள், 268 வலிக்கும், 23
வழுதுணை 264 வழும்பு, 46, 352
வளி, 108, வாக்கு, 395,
வாவல், 260 வாரி, 370
விடர், 165விடுபாக்கு, 255
விதுப்பு, 370 விரிபெடை, 240
விரியன், 330
வீதல், 106 வெடிபட, 364
வெண்டலை, 50 வெந்தை, 289
வெருகு, 210, வெள்ளறிவு, 375
வேங்கை, 180, 300
வேதிகை, 96 வேன்மகன், 16